**Copies can be had from the Assistant Director, Government Publication Depot, 110, Anna Salai, Chennai-600 002.**

©

**Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.**

வெளியீடு: 2-6-2015 Issued: 2-6-2015

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

**வெள்ளிக்கிழமை, டிசம்பர் 5, 2014—தொகுதி 74—எண் 2**

**Friday, the 5th December, 2014—Volume 74—No. 2**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009.*

**Legislative Assembly Secretariat, Chennai-600 009.**

**5–12–2014**

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| **1. இரங்கற்குறிப்பு—** | |
| திரு. வி.ஆர். கிருஷ்ண ஐயர், உச்ச நீதிமன்ற முன்னாள் நீதியரசர் மறைவு | *197-198* |
| **2. வினாக்கள்–விடைகள்—** | |
| *(அ)* உடுக்குறியிட்ட வினாக்கள் | *198-254* |
| *(ஆ)* உடுக்குறியிடாத வினாக்கள் | *255-543* |
| **3. தகவல் கோரல்—** | |
| உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள் | *543-545* |
| திரு. மு.க. ஸ்டாலின் | *543* |
| திரு. எம். ஆறுமுகம் | *543* |
| *திரு. அ. சவுந்தரராசன் | *544* |
| திரு. கே. கோபிநாத் | *544* |
| டாக்டர் க. கிருஷ்ணசாமி | *545* |
| திரு. என்.ஆர். ரெங்கராஜன் | *545* |
| திரு. எல். வெங்கடேசன் | *545* |
| **4. சிறப்புக் கவன ஈர்ப்பு—** | |
| *(அ)* தனியாரிடமிருந்து மின்சாரம் கொள்முதல் செய்தல் | *545-604* |
| திரு. எஸ்.ஆர். பார்த்திபன் | *546-548* |
| திரு. நா. இராமகிருஷ்ணன் | *549* |
| திரு. இரா. அண்ணாதுரை | *549-550* |
| திரு. வெ. பொன்னுப்பாண்டி | *550-551* |
| திருமதி எஸ். விஜயதரணி | *551* |
| திரு. அ. கணேஷ்குமார் | *551-552* |

பக்கங்கள்

**4. சிறப்புக் கவன ஈர்ப்பு**—தொடர்ச்சி


(அ) தனியாரிடமிருந்து மின்சாரம் கொள்முதல் செய்தல்—தொடர்ச்சி

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா 552
டாக்டர் க. கிருஷ்ணசாமி 553
*மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன் 553-590, 596-601, 603-604
திரு. கே. கோபிநாத் 556-558
*திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ் 561
திரு. மு.க. ஸ்டாலின் 586-587
மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் 588, 592-595
மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம் 589
*மாண்புமிகு திருமதி பா. வளர்மதி 589-591

(ஆ) தமிழ்நாட்டில் தொழில் தொடங்க உகந்த சூழ்நிலையை உருவாக்குதல் 604-634

திரு. ர.ம. பாபு முருகவேல் 605-607
*திரு. அ. சவுந்தரராசன் 607-608
திரு. டி. இராமச்சந்திரன் 608-609
திரு. அ. கணேஷ்குமார் 609-610
டாக்டர் க. கிருஷ்ணசாமி 610-611
மாண்புமிகு திரு. பி. தங்கமணி 611-632
திரு. வி.சி. சந்திரகுமார் 616
மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா 633-634

(இ) சென்னை, கனமழையால் சேதமடைந்த சாலைகளைச் சீரமைத்தல் 635-647

திரு. சி.எச். சேகர் 636-637
*திரு. அ. சவுந்தரராசன் 637-638
திரு. எம். ஆறுமுகம் 638
திரு. அ. கணேஷ்குமார் 639-640
முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா 640




பக்கங்கள்

**4. சிறப்புக் கவன ஈர்ப்பு**—தொடர்ச்சி


டாக்டர் க. கிருஷ்ணசாமி 641
*மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி 641-647


**5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—**


(அ) தமிழ்நாடு உள்ளாட்சி நிதித் தணிக்கைச் சட்டமுன்வடிவு, 2014 648

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் 648

(ஆ) அண்ணாமலைப் பல்கலைக்கழகத் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2014 648-649

*மாண்புமிகு திரு. பி. பழனியப்பன் 649

(இ) தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2014 650

*மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத் 650

(ஈ) தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டமுன்வடிவு, 2014 651

*மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி 649


**6. அறிவிப்பு—**


தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2014 (ஆ.இ.) 649


**7. அரசினர் தனித் தீர்மானங்கள்—**


(அ) இலங்கையில் தூக்கு தண்டனை விதிக்கப்பட்ட ஐந்து மீனவர்களை விடுவிக்க உதவிய மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுக்கும், தமிழக அரசுக்கும், பாரதப் பிரதமருக்கும் பாராட்டு தெரிவித்தல் மற்றும் சிறையிலுள்ள மீனவர்களை விடுவிக்கவும், கச்சத் தீவைத் திரும்பப் பெறவும் நடவடிக்கை எடுக்க மத்திய அரசைக் கோருதல் 652-716

பக்கங்கள்

**7. அரசினர் தனித் தீர்மானங்கள்**—தொடர்ச்சி

(ஆ) காவேரி மேலாண்மை வாரியம், காவேரி நீர் முறைப்படுத்தும் குழு அமைப்பதோடு, மேகதாதுவில் கர்நாடக அரசும், பாம்பாற்றில் கேரள அரசும் அணை கட்ட அனுமதி வழங்கக்கூடாதென மத்திய அரசை வலியுறுத்துதல் — *668-716*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் — *652-662*, *668-683*

முனைவர் செ.கு. தமிழரசன் — *662-664*, *685-687*

திரு. உ. தனியரசு — *664-666*, *687-688*

*திரு. பி.வி. கதிரவன் — *666-667*, *688-689*

திரு. ஆ. நாராயணன் — *683-685*

டாக்டர் க. கிருஷ்ணசாமி — *689-690*

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா — *690-694*

திரு. அ. கணேஷ்குமார் — *694-695*

திரு. ம. கலையரசு — *696-697*

திருமதி எஸ். விஜயதரணி — *697-700*

திரு. சு. குணசேகரன் — *700-706*

*திரு. க. பாலகிருஷ்ணன் — *707-712*

திரு. வி.சி. சந்திரகுமார் — *712-715*

**8. அரசினர் தீர்மானம்**—

விதி 32—ஐத் தளர்த்துதல் — *716-717*

**9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** — *717-718*

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## ஜய, கார்த்திகை 19, திருவள்ளுவர் ஆண்டு–2045

## 2014 டிசம்பர் 5, வெள்ளிக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

“குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான்முந் துறும்.”

என் குடிமக்களை உயர்த்துவேன் என்று மிகுந்த மன உறுதியுடன் முயற்சி செய்யும் ஒருவருக்கு தெய்வமே வரிந்து கட்டிக் கொண்டு உதவி செய்வதற்காக அவர்முன் வந்து நிற்கும்.

## 1. இரங்கற்குறிப்பு

### திரு. வி.ஆர். கிருஷ்ண ஐயர், உச்ச நீதிமன்ற முன்னாள் நீதியரசர் மறைவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உச்ச நீதிமன்றத்தின் முன்னாள் நீதியரசரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான திரு. வி.ஆர். கிருஷ்ண ஐயர் அவர்கள் உடல் நலக் குறைவு காரணமாக தனது 100–வது வயதில், நேற்று, 4–12–2014 வியாழக்கிழமையன்று மறைவுற்ற செய்தியினை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வி.ஆர். கிருஷ்ண ஐயர் அவர்கள் 1952–1957 ஆம் ஆண்டுகளில் ஒருங்கிணைந்த சென்னை மாகாணத்தின் கூத்துப்பரம்பா தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு, சட்டமன்ற உறுப்பினராகத் திறம்படப் பணியாற்றினார்.

அன்னாரது மறைவால் அவரைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவை தெரிவித்துக்கொள்கிறது.

*மறைந்த இப்பெருந்தகைக்கு மரியாதை செலுத்தும் முகத்தான் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித் துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.*

*(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித் துளிகள் அமைதி காத்தனர்.)*

## 2. வினாக்கள்—விடைகள்

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினாக்கள்—விடைகள். வினா வரிசை எண் 16, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**16—**

### துணை மின் நிலையம்

*__*10725—திரு. சி. சண்முகவேலு:__*

*மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், தேவனூர்புதூர் செல்லப்பம்பாளையம் பகுதியில் ஒரு துணை மின் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

*(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், தேவனூர்புதூர், செல்லப்பம்பாளையம் பகுதிக்கு தற்போது பொள்ளாச்சி–110/22 கிலோ வோல்ட், அங்கலக்குறிச்சி–110/22 கிலோ வோல்ட் மற்றும் பூலாங்கிணறு–110/22 கிலோ வோல்ட் துணை மின் நிலையங்களிலிருந்து மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. பெருகி வரும் மின் தேவையைக் கருத்தில் கொண்டு, திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், தேவனூர்புதூர், செல்லப்பம்பாளையம் பகுதியில் ஒரு 110/22 கிலோ வோல்ட் துணை மின் நிலையம், 16 எம்.வி.ஏ. திறன் கொண்ட இரண்டு மின் மாற்றிகளுடன் 12–வது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் அமைக்கத் திட்டமிடப்பட்டு, அதற்குத் தேவையான 1.5 ஏக்கர் நிலம் தனியாரிடமிருந்து கையகப்படுத்தப்பட்டுள்ளது. ரூபாய் 6 கோடியே 93 இலட்சம் செலவில் துணை மின் நிலையம் அமைப்பதற்கு நிருவாக அனுமதி பெறப்பட்டுள்ளது. ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட உள்ளன. ஒப்பந்ததாரர் முடிவு செய்யப்பட்டவுடன், துணை மின் நிலையக் கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட்டு, வருகின்ற ஜூலை மாதத்திற்குள் துணை மின் நிலையம் அமைக்கும் பணிகள் முடிவடையும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு அவர்கள்.*

**திரு. சி. சண்முகவேலு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழகத்தினுடைய நிரந்தரப் பொதுச் செயலாளர், மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி, மக்களின் முதல்வர் அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன். உடுமலைப்பேட்டை வட்டம், மடத்துக்குளம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட தேவனூர்புதூர், செல்லப்பம்பாளையம் பகுதியிலே துணை மின் நிலையம் நடப்பு நிதியாண்டிலே அமைக்கப்படும் என்று கூறிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அம்மா அவர்களுக்கும் அந்தப் பகுதி மக்களின் சார்பிலே என்னுடைய நன்றியை அன்போடு கூறிக்கொள்கிறேன். தற்போது அங்கலக்குறிச்சி, பூலாங்கிணறு மின் நிலையத்திலிருந்து பிரிந்து மடத்துக்குளம் சட்டமன்றத் தொகுதியிலே புதிதாக தேவனூர்புதூர், செல்லப்பம்பாளையம் பகுதியில் அமைக்கப்படவுள்ள துணை மின் நிலையமானது 24 மணி நேர மும்முனை மின்சாரம் உள்ள இடத்திலே அமைந்துள்ளது. டவர் லைன் போட வேண்டிய அவசியம் இல்லை. கடந்த 20 ஆண்டு காலமாக கோரிக்கை வைக்கப்பட்டு, இடம் தேர்வு செய்ய முடியாத சூழ்நிலையிலே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசின் மூலமாக, அந்த இடத்திலே துணை மின் நிலையம் அமைப்பதற்கு உரிய*

ஏற்பாடுகளைச் செய்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் திரும்பவும் என்னுடைய நன்றியைக் கூறிக்கொள்கிறேன். எரிசனம்பட்டி, உடுக்கம்பாளையம், இராமநாதபுரம் கிராமப் பகுதிகளிலே low voltage ஆக இருந்த நிலை மாற்றப்பட்டதற்கும், அப்பகுதி விவசாயப் பெருங்குடி மக்களின் சார்பிலே நன்றியைக் கூறிக்கொள்கிறேன். இதனால் அங்கு தொழிற்சாலைகள் அமைப்பதற்கு ஏதுவாக இருக்கும் என்பதைத் தெரிவித்து, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அம்மா அவர்களுக்கும் எனது நன்றியை அந்தப் பகுதி மக்கள் சார்பிலே கூறி அமர்கிறேன்.

*முற்பகல் 10–05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன். (குறுக்கீடு) கேள்வி கேட்கிறீர்களா? கேள்வி கேட்கவில்லையே. நீங்கள் நன்றி சொல்லி முடித்துவிட்டீர்களே. (குறுக்கீடு) சரி, கேளுங்கள்.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசின் சார்பிலே பல்வேறு பகுதிகளிலே துணை மின் நிலையங்கள் அமைக்கப்பட்டிருக்கின்ற சூழ்நிலையிலே, திருப்பூர் மாவட்டத்திலே இதுவரை கடந்த மூன்றரை ஆண்டுக் காலத்தில் எத்தனை துணை மின் நிலையங்கள் அமைக்கப்பட்டன? இந்த ஆண்டு எத்தனை துணை மின் நிலையங்கள் அமைக்கப்படும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 12–வது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலே திருப்பூர் மாவட்டத்தில் உத்தேசமாக 22 துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆணையின் பேரில் முடிவு செய்யப்பட்டது. அந்த வகையிலே 22 துணை மின் நிலையங்கள் புதியதாக திருப்பூர் மாவட்டத்திலே அமைப்பதற்கு முடிவு செய்யப்பட்டதில், 5 துணை மின் நிலையங்களுக்கான பணிகள் முடிவடைந்து, இப்போது பயன்பாட்டில் இருந்து வருகின்றன. மற்ற சில துணை மின்





நிலையங்களுக்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. மற்ற துணை மின் நிலையங்களுக்கு நிலம் கண்டறிவதில் பிரச்சினை இருக்கிறது. நிலம் கையகப்படுத்தப்பட்டதும் உடன் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதனுடைய விவரங்கள். 22 துணை மின் நிலையங்களில், உடுமலைப்பேட்டை வட்டம், ஆனைக்கடவில் ஏற்படுத்தப்பட இருக்கின்ற 400/230 கிலோ வோல்ட் துணை மின் நிலையம், உள்ளபடியே தமிழகத்திலே குறிப்பிடத்தகுந்த முக்கிய துணை மின் நிலையமாக அமையும் என்ற மகிழ்ச்சியான செய்தியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அதனுடைய மின் திறன் 315 எம்.வி.ஏ. திறன் கொண்ட 2 மின் மாற்றிகள், ஆக மொத்தம் 630 எம்.வி.ஏ. திறன்கொண்ட மின் மாற்றியுடன் ஏறத்தாழ 506,40,00,000/- ரூபாய் மதிப்பீட்டில் அந்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன. அந்தப் பணிகள் விரைவில் முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதன்மூலமாக அந்தப் பகுதியிலே அதிகமாக உற்பத்தி செய்யப்படுகின்ற காற்றாலை மின்சாரத்தை முழுமையாக நாம் பயன்படுத்துவதற்கு ஏதுவாகவும், காற்றாலை மின்சாரத்திற்காக புதியதாக அமைக்கப்பட்டு வரும் அந்த வழித்தடத்திலே இது பெரிதும் பயனுள்ள வகையிலேயும் அமையும் என்பதால், இந்தப் பணியும் விரைவில் முடிக்கப்பட இருக்கிறது.

முக்கியமானதை மட்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அவினாசி தாலுகாவிலே இருக்கின்ற கருவலூரில் 100 எம்.வி.ஏ. திறன்கொண்ட 2 மின் மாற்றிகளுடன் ஏறத்தாழ 53,42,00,000/- ரூபாய் செலவிலே ஒரு துணை மின் நிலையம் அமைக்கின்ற பணி நடைபெற்று வருகிறது.

அதேபோல, திருப்பூர் மாவட்டத்திலே, திருப்பூரிலே 100 எம்.வி.ஏ. திறன்கொண்ட 2 மின் மாற்றிகளுடன் ஏறத்தாழ 75,84,28,000/- ரூபாய் செலவிலே ஒரு துணை மின் நிலையம் அமைப்பதற்கான பணிகளுக்கான ஒப்பந்தப் புள்ளிகள் முடிவு செய்யப்படவுள்ளன.

ஆக, இதுபோல கேத்தனூர், குருக்கத்தி, குண்டடம், காடையூர், பெரியார் நகர், நாராயணபுரம், எளையமுத்தூர், தேவனூர்புதூர், செல்லப்பம்பாளையம், திருமூர்த்தி நகர், முத்தூர், பூமலூர், அலகுமலை, ஒலப்பாளையம், வஞ்சிப்பாளையம், வலம், திருநகர், அய்யம்பாளையம், நொச்சிபாளையம் போன்ற 22 துணை மின் நிலையங்களின் பணிகள் முடிக்கப்பட்டன. பெரியார் நகர், காங்கேயத்திலும், அதேபோல, திருப்பூர் மாவட்டத்தில், பல்லடம்

வட்டம், நாராயணபுரம், உடுமலைப்பேட்டை வட்டம், எளையமுத்தூர் ஆகிய இடங்களிலும் பணிகள் முடிவுற்று செயல்படுத்தப்பட்டிருக்கின்றன.

அதேபோல முடிந்த பணிகள். அலகுமலையிலும், வஞ்சிப்பாளையத்திலும் துணை மின் நிலையங்கள் அமைக்கும் பணிகள் முடிக்கப்பட்டிருக்கின்றன. மற்ற பணிகள் நடைபெற்று வருகின்றன். மீதியிருக்கின்ற சில பணிகளுக்கு நிலம் கையகப்படுத்துகின்ற பணிகள் நடைபெற்று வருகின்றன.

ஆகவே, அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்ட அத்தனை திட்டங்களும் 2014–2015–க்குள் முடிக்கப்பட இருக்கின்றன என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். திருப்பூர் வளர்ந்து வரும் தொழில் நகரமாக பகுதியாக இருப்பதாலும், அந்தப் பகுதிக்கும், சுற்றுவட்டாரப் பகுதிகளுக்கும் பெரிதும் பயனுள்ள வகையிலேயும் அங்கே மின்சார பற்றாக்குறை, குறைந்த அழுத்தப் பிரச்சினை வராத அளவிற்கு நிரந்தரத் தீர்வு கண்டிருக்கிறார் மாண்புமிகு அம்மா அவர்கள் என்பதை இந்த நேரத்திலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு பணிவோடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 10–10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள்.

**திரு. க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவின் சிறப்புப் பெற்ற விழாவாக வட இந்தியாவில் கொண்டாடப்படும் கும்பமேளாவிற்கு இணையாகக் கருதப்படும் 2016 மகாமகப் பெருவிழாவைக் கருத்தில்கொண்டு, கும்பகோணம் பகுதியில் மின்னழுத்தக் குறைவு மற்றும் ஏற்றத் தாழ்வை சரிசெய்யும்விதத்திலும் குடந்தை கொட்டையூரில் 110/11 கே.வி. துணை மின் நிலையம் அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்





கும்பகோணம் பகுதியிலே புதிய துணை மின் நிலையம் அமைக்கப்பட வேண்டுமென்று வேண்டுகோள் வைத்திருக்கிறார். அந்தப் பகுதியினுடைய மின் தேவையைக் கருத்தில்கொண்டு, அதை ஆய்வுசெய்து தேவை ஏற்படின், அந்தப் பகுதியிலே நிச்சயமாக நிதிநிலைக்கேற்ப புதிய துணை மின் நிலையம் அமைப்பது குறித்து மக்களின் முதல்வராக விளங்கிக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு அம்மா அவர்களின் வழிகாட்டுதலோடு நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற இந்த அரசு உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 17, மாண்புமிகு உறுப்பினர் திரு. கா. தமிழரசன், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**17—**

**பாலம்**

***20980—திரு. கா. தமிழரசன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை கிழக்கு தொகுதி, சக்கிமங்கலத்திலிருந்து சிலைமானுக்கு வைகை ஆற்றின் குறுக்கே பாலம் கட்ட அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.

மதுரை கிழக்கு தொகுதி, சக்கிமங்கலத்திலிருந்து சிலைமானுக்கு வைகை ஆற்றின் குறுக்கே உயர் மட்டப் பாலம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கா. தமிழரசன் அவர்கள்.

[2014 டிசம்பர் 5

**திரு. கா. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழகத்தின் நிரந்தரப் பொதுச் செயலாளர் தமிழ்நாட்டு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.

மதுரை கிழக்கு தொகுதிக்குட்பட்ட சக்கிமங்கலத்திலிருந்து சிலைமானுக்கு வைகையாற்றின் குறுக்கே பாலம் கட்ட வேண்டுமென்று கிட்டத்தட்ட 40 ஆண்டு காலமாக இங்குள்ள மக்கள் இந்தக் கோரிக்கையை வைத்துக்கொண்டிருந்தார்கள். சட்டமன்ற உறுப்பினர் ஆனவுடன் இந்தக் கோரிக்கையை நீங்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்களிடம் கொண்டு செல்லுங்கள், நிச்சயமாக நிறைவேற்றித் தருவார்கள் என்று அனைத்து மக்களும் ஒட்டுமொத்தமாகக் குரல் கொடுத்தார்கள். 18 கி.மீ. சுற்றி வரக்கூடிய சூழ்நிலை இருந்தது. இப்போது மக்கள் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி இந்தப் பாலத்தை உடனடியாக அமைத்துத் தருவோம் என்று சொன்னதற்கு, மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் மீண்டும் நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன் அவர்கள்.

**திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டம், தளி தொகுதியில் அஞ்சட்டி வழியாக ஒகேனக்கல் செல்கின்ற சாலையில் காட்டாற்றின் குறுக்கே தரை மட்டப் பாலம் அமைந்துள்ளது. கடந்த 5 ஆண்டுகளுக்கு முன்பு பெய்த கன மழையின் காரணமாக, அந்த ஆறு 25 கால்நடைகளையும், 2 நபர்களையும் அடித்துச் சென்றிருக்கிறது. இது ஒகேனக்கல் செல்கின்ற பிரதான சாலை என்பதால், ஈபுதூர் மற்றும் அஞ்சட்டிக்கு இடையே உள்ள அந்தத் தரை மட்டப் பாலத்தை உயர் மட்டப் பாலமாகக் கட்டித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், வெள்ளக் காலங்களிலே மழை நீர் அதிகமாக இருக்கின்ற காரணத்தினாலே,



2014 டிசம்பர் 5]

அந்தப் பாலத்தை உயர் மட்டப் பாலமாகக் கட்ட வேண்டுமென்ற கோரிக்கை வைத்தார்கள். அது பரிசீலிக்கப்பட்டு ஆவன செய்யப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.

**திரு. பி.வி. கதிரவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாநகரின் நடுப் பகுதியில் வைகை நதி சென்றுகொண்டிருக்கிறது. அண்ணா நகரையும், தியாகராஜர் கல்லூரியையும் இணைக்கின்ற பி.டி.ஆர். பாலம் அங்கு அமைந்திருக்கிறது. அதன் அருகில் மாரியம்மன் தெப்பக்குளம் உள்ளது. அந்த மாரியம்மன் கோயிலில் ஒவ்வொரு ஆண்டும் ஒருவார காலம் விழாக்கள் நடைபெறுகின்றன. அந்த விழாக்கள் நடைபெறும்போது, தெப்பக்குளத்தில் பல நேரங்களில் தண்ணீர் இல்லாமல் இருந்து வருகிறது. அதனால் அந்த மாரியம்மன் தெப்பகுளம் இருக்கின்ற பகுதியில், வைகை அணையில் ஒரு தடுப்பணை கட்டினால், தெப்பக்குளத்திற்கு நீர் ஏற்றுவதற்கும் அந்தப் பகுதியில் நிலத்தடி நீர் உயர்வதற்கும் வசதியாக இருக்கும். அதனால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கு தடுப்பணை கட்ட முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மாரியம்மன் கோயில் தெப்பக்குளம் பகுதியில் தடுப்பணை கட்ட வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார். அது என்னுடைய துறை சம்பந்தப்பட்டது அல்ல. இன்று வைகை ஆற்றிலிருந்துதான் தெப்பக்குளத்திற்குத் தண்ணீர் சென்றுகொண்டிருக்கிறது. ஆகவே, தடுப்பணை கட்ட வேண்டுமா என்பதை பொதுப் பணித் துறை ஆய்வு செய்து, அந்த ஆய்வின் அடிப்படையில், உங்களுடைய கோரிக்கைபடி தடுப்பணை கட்ட வேண்டிய தேவை ஏற்பட்டால், அதைக் கட்டுவதற்கான நடவடிக்கையை மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் மேற்கொள்வார்கள் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2014 டிசம்பர் 5

முற்பகல் 10–15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ர. சுபா அவர்கள்.

**திருமதி ர. சுபா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கெங்கவல்லி தொகுதி, தம்மபட்டி பேரூராட்சிக்குட்பட்ட, கோனேறுபட்டி, பெல்ஜியம் காலனியில் கிறிஸ்துவ மக்கள் வசிக்கின்றனர். அங்கு பலதரப்பட்ட சாதி மக்களும் வசிக்கின்றனர். சுமார் 4,000 குடும்பங்கள் வசிக்கின்றன. ஆகவே, சுவேதா ஆற்றின் குறுக்கே உயர்மட்ட மேம்பாலம் அமைத்துத் தர வேண்டுமென்று 2012–2013 ஆம் ஆண்டில் மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்களிடம் சட்டமன்றத்தில் கேள்வி கேட்ட பிறகு, அதன்பேரில் அதிகாரிகள் ஆய்வு செய்தனர். அவ்வாறு ஆய்வு செய்து, 3.5 கோடி ரூபாய் செலவாகும் என்று அதிகாரிகளால் அரசுக்கு கருத்துரு அனுப்பப்பட்டது. ஆனால், இதுநாள் வரையும் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அந்த ஆற்றின் குறுக்கே பள்ளி மாணவர்களும், பொது மக்களும் செல்வதற்கு மிகவும் சிரமப்படுகின்றனர். அந்த ஆற்றில் தண்ணீர் வருவதனால், மலையைச் சுற்றி சுமார் 10 கிலோ மீட்டர் தூரம் செல்ல வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. எனவே, பொது மக்களின் நலனைக் கருத்திற்கொண்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உயர்மட்ட மேம்பாலம் அமைத்துத் தர முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கெங்கவல்லி சட்டமன்றத் தொகுதியிலே மட்டும் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய மூன்றரை ஆண்டு பொற்கால ஆட்சியிலே 9 பாலங்கள் கட்டுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) 2013–2014 ஆம் ஆண்டு இந்தப் பாலம் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றது. அந்தப் பணி விரைவில் தொடங்கப்படும் என்பதை இந்த நேரத்தில்



2014 டிசம்பர் 5]

தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலேதான், இந்தத் தொகுதி, அந்தத் தொகுதி என்று பாரபட்சம் பாராமல், எல்லா தொகுதிகளையும்விட எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர்களின் தொகுதிகளுக்குத்தான் அதிக அளவிலே (மேசையைத் தட்டும் ஒலி) பாலம் கட்டுவதற்கு அம்மா அவர்களால் ஆணையிடப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். சேலம் மாவட்டத்தில் அதிகமாக பாலப் பணிகள் நடைபெறுகின்ற தொகுதி கெங்கவல்லி சட்டமன்றத் தொகுதி என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுள்ள அந்தப் பகுதியில் விரைவில் பாலப் பணிகள் தொடங்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.த. செல்லப்பாண்டியன் அவர்கள்.

**திரு. சி.த. செல்லப்பாண்டியன்:** உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவி மாண்புமிகு மக்களின் முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி சட்டமன்றத் தொகுதி, பாளையங்கோட்டை மெயின் ரோடு மூன்றாவது மைல் பகுதியில் உள்ள மேம்பாலம் குறுகிய இருவழிப் பாதையாக இருப்பதால், போக்குவரத்திற்கு இடைஞ்சலாக உள்ளது. அப்பாலத்தை நான்கு வழிப் பாலமாக மாற்ற மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மூன்றரையாண்டு பொற்கால ஆட்சியில் நபார்டு திட்டத்தின் உதவியில் மட்டும் 2011–2012 ஆம் ஆண்டு 151 கோடி ரூபாய் செலவிலே 65 பாலப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. அதுபோல, 2012–2013 ஆம் ஆண்டிலே

*235 கோடி ரூபாய் செலவில் 121 பாலப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. 2013–2014 ஆம் ஆண்டு 256 கோடி ரூபாய் செலவில் 125 பாலப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த ஆண்டு 300 கோடி ரூபாய் செலவில் 100 பாலங்கள் கட்டுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கின்றார்கள். ஆக மொத்தம், 942 கோடி ரூபாய் செலவில் நபார்டு திட்டத்தின்மூலம் பாலங்கள் கட்டுவதற்காக மாண்புமிகு அம்மா அவர்களால் நிதியொதுக்கீடு செய்யப்பட்டு, 411 பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. இதுவரை 181 பணிகள் முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு வந்துள்ளன என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். அதோடு 104 பணிகள் தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன என்பதையும் இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன். அதுமட்டுமல்லாமல், பல்வேறு அலகுகளின்கீழ் இதுவரை சிறு, பெரிய பாலங்கள் மற்றும் இரயில்வே பாலங்கள் உட்பட, 1,176 பாலங்கள் 2,301 கோடி ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்டு திறக்கப்பட்டுள்ளன என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுள்ள அந்தப் பகுதியில் ஆய்வு செய்து வருகின்ற காலங்களில், நிதிநிலைக்கேற்ப பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. திராவிடமணி அவர்கள்.*

**திரு. மு. திராவிடமணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதிக்குட்பட்ட ஓவேலி பேரூராட்சியில் ஆறோட்டு பாறைக்குச் செல்கின்ற சுண்ணாம்புப் பாலம் கிட்டத்தட்ட 75 ஆண்டுகளுக்குமேல் பழமை வாய்ந்தது. தற்போது இந்தப் பாலம் பழுதடைந்து போக்குவரத்துக்கு உபயோகமில்லாத வகையிலும், ஆபத்து விளைவிக்கின்ற நிலையிலும் இருக்கிறது. மேலும், முதுமலை தெப்பக்காட்டிலுள்ள மாநில நெடுஞ்சாலையில் உள்ள பாலமும் பழுதாகியுள்ளது. இந்த இரண்டு பாலங்களையும் பழுது நீக்கி, சீர் செய்து கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*



*முற்பகல் 10–20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுள்ள அந்த இரண்டு பாலங்களையும் ஆய்வு செய்து, நிதிநிலைக்கேற்ப அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அண்ணாதுரை அவர்கள்.*

**திரு. இரா. அண்ணாதுரை:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை வைகை ஆற்றின் குறுக்கே மதிச்சியத்தையும், முனிச்சாலையையும் இணைக்கக்கூடிய ஒரு புதிய பாலம் கட்ட வேண்டுமென்று நீண்ட காலமாக கோரிக்கை முன் வைக்கப்பட்டிருக்கிறது. நானும் பல முறை வெட்டுத் தீர்மானம் கொடுத்தேன், பேரவையின் அனுமதியுடன் அந்த வெட்டுத் தீர்மானத்தைத் திரும்பப் பெற்றுக்கொண்டேன். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தப் பாலம் கட்டுவதற்கு முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு ஆண்டும் நிதிநிலைக்கு ஏற்ப மாண்புமிகு உறுப்பினர்கள் வைக்கின்ற கோரிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நிறைவேற்றிக்கொண்டிருக்கின்றது. ஆகவே, எவ்வளவு நிதி இந்தத் துறைக்கு ஒதுக்கப்படுகின்றதோ, அதைப் பொறுத்துத்தான் இந்தப் பாலப் பணிகளை எடுத்துக்கொள்ள வேண்டிய சூழ்நிலை இருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைகை ஆற்றின் குறுக்கே புதிய பாலம் கட்ட வேண்டும் என்று கேட்டிருக்கின்றார்கள். அங்கே ஆய்வு செய்து நிதிநிலைக்கு ஏற்ப அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

[2014 டிசம்பர் 5

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 18, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நாராயணன், மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

**18—**

## அங்கன்வாடி மையம்

***43872—திரு. ஆ. நாராயணன்:**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாங்குநேரி தொகுதி, மூலக்கரைப்பட்டி பேரூராட்சி, உள்வாய் ஆதி திராவிடர் காலனியில் புதிய அங்கன்வாடி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தியாகத்தில் விளைந்த தெய்வத் திருவுருவம், சுட்டாலும் நிறம் மாறாத பத்தரைமாற்றுத் தங்கம், மாண்புமிகு மக்களின் முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்கி, மாண்புமிகு உறுப்பினரின் கேள்விக்குப் பதிலளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்குநேரி தொகுதி, நாங்குநேரி ஒன்றியம், மூலக்கரைப்பட்டி பேரூராட்சி, உள்வாய் ஆதி திராவிடர் காலனி அங்கன்வாடி மையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட இடம் தேர்வு செய்யப்பட்டு, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் ரூ.6 இலட்சத்து 30 ஆயிரம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின்மூலம் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நாராயணன் அவர்கள்.



2014 டிசம்பர் 5]

**திரு. ஆ. நாராயணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி அந்தமும் நம் அம்மாதான், நம்மை ஆளும் நீதியும் அம்மாதான், (மேசையைத் தட்டும் ஒலி) அகந்தையை அழித்து, ஆக்கத்தைக் கொடுக்கும் நம் மக்களின் முதல்வர் அவர்களை வணங்குகிறேன்.

நாங்குநேரி தொகுதி, மூலக்கரைப்பட்டி பேரூராட்சி, உள்வாய் ஆதி திராவிடர் காலனியில் 50 குடும்பங்கள் வசித்து வருகின்றன. ½ கிலோ மீட்டர் தூரம் சென்று நாகல்குளம் கிராமத்தில் உள்ள அங்கன்வாடி மையத்தில்தான் அவர்கள் கல்வி பயிலுகிறார்கள். எனவே, மேற்படி அங்கன்வாடிக்கு நிதி ஒதுக்கப்பட்டு, சொந்தக் கட்டடம் கட்டித் தரப்படும் என்று அறிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு எங்களுடைய சமத்துவ மக்கள் கட்சியின் சார்பிலும் என் சார்பிலும் நன்றியைக் கூறிக்கொள்கிறேன்.

மேலும், நாங்குநேரி தொகுதியில் எத்தனை அங்கன்வாடி மையங்கள் உள்ளன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தொகுதியிலே அங்கன்வாடி மையங்கள் கட்டுவதற்கு உத்தரவு அளித்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள். ஆக, மாண்புமிகு அம்மா அவர்களுக்குத்தான் நன்றி தெரிவிக்க வேண்டும்.

மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி திருநெல்வேலி மாவட்டத்தில் புதியதாக கட்டப்படவிருக்கும் மொத்த மையங்களின் எண்ணிக்கை 150. நாங்குநேரி தொகுதியில் புதியதாக கட்டப்படவிருக்கும் மையங்களின் எண்ணிக்கை 35. நாங்குநேரி வட்டாரத்தில் 13, பாளையங்கோட்டை வட்டாரத்தில் 17, களக்காடு வட்டாரத்தில் 5 மையங்களும் அடங்கும். இதில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுள்ள உள்வாய் ஆதி திராவிடர் காலனி அங்கன்வாடி மையமும் அடங்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2014 டிசம்பர் 5

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நாராயணன் அவர்கள்.*

**திரு. ஆ. நாராயணன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி கூறி அமர்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 19, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. வைரமுத்து, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

**19—**

### சொந்தக் கட்டடம்

***48105—திரு. பி.கே. வைரமுத்து:**

*மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*திருமயம் தொகுதி, கீழாநிலை மற்றும் நெடுங்குடியிலுள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?*

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவேரியைக் கரம் பிடித்து அழைத்து வந்தது, கரிகால் பெருவளத்தானின் மறு வடிவம் எங்கள் மாண்புமிகு அம்மா அவர்கள்தான். முல்லைப் பெரியாற்றின் உரிமையைக் காத்திட்டவரும் எங்கள் மாண்புமிகு அம்மா அவர்கள்தான். அழுகின்ற குழந்தையின் பசியும், துடிக்கின்ற குழந்தையின் வேதனையும் ஒரு தாய்க்குத்தான் தெரியும். ஆம்! அந்தத் தாய்தான் எங்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)*

*முல்லைப் பெரியாற்றின் கொள்ளளவை முதற்கட்டமாக 142 அடியாக உயர்த்தி, ஐந்து மாவட்ட விவசாயிகளின் பசி போக்கிய பூமாதேவியே எங்கள் அம்மாதான். ஏர் இருக்கும் காலம் எல்லாம் எங்கள் அம்மாவின் பெயர் இருக்கும். உழவு நடக்கும் காலம் எல்லாம், ஏன் இந்த உலகம் இருக்கும் காலம் எல்லாம் எங்கள் அம்மாவின் புகழ் பாடும். (மேசையைத் தட்டும் ஒலி)*



2014 டிசம்பர் 5]

*முற்பகல் 10–25*

*துள்ளி ஓடிவரும் நீரில், அசைகின்ற நாற்றில், களத்தில் குவியும் நெல்லில், அரைபடும் அரிசியில், உதிரும் உமியில், கொதிக்கும் உலையில், தட்டில் நிறையும் சோற்றில், ஆண்டவன் பெயர் எழுதப்பட்டிருக்கிறதோ இல்லையோ, எங்கள் அம்மாவின் பெயர் எழுதப்பட்டிருக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) அன்னையைப் பிள்ளை அம்மா என்றே அழைப்பது உண்டு. அன்பின் விளக்கம், பண்பின் முழக்கம் அம்மா என்ற சொல்லில் உண்டு. இது நம் அம்மா அவர்கள் பாடிய பாடல். இப்பாடல்தான் இன்று எங்கள் ஐந்து மாவட்ட மக்களின் தேசிய கீதம் என்று சொல்லி என் பதிலுரையைத் தொடங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

*புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் தொகுதியிலுள்ள கீழாநிலை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் 1975 ஆம் ஆண்டு முதல் சொந்தக் கட்டடத்தில் செயல்பட்டு வந்தது. இது பழுதடைந்த நிலையில் உள்ளதால், தற்போது வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. நெடுங்குடி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம், 1982 ஆம் ஆண்டுமுதல் சொந்தக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இருப்பினும், இக்கட்டடமும் தற்போது பழுதடைந்த நிலையில் உள்ளது. மேற்படி இவ்விரு சங்கங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு சங்கங்களிடம் போதிய நிதி வசதி இல்லாத சூழ்நிலை உள்ளதால், கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதியிலிருந்து நிதி உதவி பெற்று இச்சங்கங்களுக்குச் சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்கு மாண்புமிகு மக்களின் முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி இவ்வரசு நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. வைரமுத்து அவர்கள்.*

**திரு. பி.கே. வைரமுத்து:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழையருக்குச் சீதனமாய்! என் போன்ற எளியோருக்கும் ஏற்றம் தந்த மூலதனமாய்! இல்லார்க்கு இரங்குகிற துடிப்பாக! எப்போதும் எல்லோருக்கும் வியப்பாக! வால் பிடித்து வாழாது, வாள் சுழற்றி வாகை சூடும் வல்லமையின் வடிவமே!*

[2014 டிசம்பர் 5

வாழும் மனித தெய்வமே எங்கள் அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) திராவிட அரசியலுக்குக் கழகத்தின் வழியாக காலம் வழங்கிய அருட்கொடையே! தரணிவாழ் உழவருக்குக் கை கொடுக்கும் வான்மழையே! இரும்பும் தோற்கும் இதயத்து உறுதியாக! கரும்பும் தோற்கும் கனிவின் உருவாக! எறும்பும் தோற்கும் இடையறா உழைப்பாக! எது செய்தால் தமிழகம் ஏற்றங்கள் பெறும் என்று கடமையை மட்டுமே தன் உடைமையாய்க் கொண்டு, கண் விழித்து கணக்குப் போட்டு பொன் விளையும் பூமியாய் அன்னைத் தமிழ் மண்ணை ஆக்குவதற்கு முக்காலம் உழைக்கின்ற தாயே! (மேசையைத் தட்டும் ஒலி) தாங்கள் இருக்கும் திசைநோக்கி என் தலை வணக்கம் செய்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமயம் தொகுதி, கீழாநிலை மற்றும் நெடுங்குடி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களுக்குக் கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதியிலிருந்து நிதியுதவி பெற்று கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற நல்ல அறிவிப்பினைத் தந்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு மக்களின் முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும் என் சார்பிலும் என் தொகுதி மக்களின் சார்பிலும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடப்பு நிதியாண்டில் கட்டடம் கட்டித் தருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை இந்த ஆண்டே பரிசீலித்து, உரிய வரைபடம் வந்தவுடன் அதற்கான திட்ட மதிப்பீடுகள் கிடைத்தவுடன், நிதி பெற்று கட்டிக் கொடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.



2014 டிசம்பர் 5]

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது அரூர் தொகுதி, வாதாபட்டி கிராமத்தில் புதிய பகுதி நேர ரேஷன் கடை திறப்பதற்கு அரசு உத்தரவிட்டிருக்கிறது. ஆனால், அந்தக் கிராமத்தில் அரசுக் கட்டடம் எதுவுமே கிடையாது. அரசுக் கட்டடம் இருந்தால் மட்டும்தான் பகுதிநேரக் கடை திறக்க முடியும். ஆகவே, அரசுக் கட்டடம் இல்லாததால் கட்டடம் திறப்பது நிலுவையில் இருக்கிறது. இதனால் ஆறு கடைகள் திறக்கப்படாமல் இருக்கின்றன. அப்பேர்ப்பட்ட பகுதிகளில் தற்காலிகமாக பகுதிநேரக் கடைகளை தனியார் கட்டடங்களில் திறந்துகொள்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகின்றேன். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதனைச் சிறப்பு நிகழ்வாகக் கருதி தனியார்க் கட்டடங்களில் இத்தகைய கடைகளைத் திறப்பதற்கு முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

*முற்பகல் 10–30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தொடர்பற்ற முறையில் கேள்வி கேட்கின்றார். இருந்தாலும்கூட, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை முக்கியமானது என்பதைக் கருத்திற்கொண்டு, அதாவது பகுதிநேர ரேஷன் கடைகள் அரசுக் கட்டடங்களில் மட்டும்தான் இருக்க வேண்டும் என்பது அல்ல; அரசுக் கட்டடங்களில் மட்டும்தான் இருக்க வேண்டும் என்பது கொள்கை முடிவு என்றாலும் அதில் சில தவறுகள் நடக்கின்றன. தனியார் கட்டடங்களில் இருக்கின்றபோது பொருள்களை அந்தப் பகுதிநேரக் கடைகளுக்குத்தான் கொண்டு செல்கின்றார்களா அல்லது movements–ல் ஏதாவது தவறுகள் நடக்கின்றனவா என்பதை அறிந்துகொள்வதற்குத்தான் அரசுக் கட்டடங்களில் வைக்கப்படுகின்றன. உரிய பொருள்கள் மக்களுக்குக் கிடைக்க வேண்டும் என்பதுதான் மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய உண்மையான நடவடிக்கை. அந்த நடவடிக்கை சிறப்பாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தான், ஒரே ஆண்டில் 5,300 கோடி ரூபாய் செலவில், விலையில்லாத அரிசி ஒரு குடும்பத்திற்கு 20 கிலோ அரிசி என்ற

அளவிலே மாண்புமிகு அம்மா அவர்கள் வழங்கிக்கொண்டிருக்கின்றார்கள். இந்தப் பொருள் அவர்களுக்குத் தங்குதடையின்றி கிடைக்க வேண்டும். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை நிச்சயமாக துறை ரீதியாகப் பரிசீலித்து, அந்தப் பகுதிநேரக் கடைகளை அமைப்பதற்கான இடம் கட்டடமாக இருக்க வேண்டும்; அங்கே வைக்கப்படுகின்ற பொருட்களுக்கு மழைக் காலங்களில் பாதிப்பு ஏதும் ஏற்பட்டுவிடக்கூடாது என்பதுதான் இந்த அரசினுடைய நோக்கம். எனவே, அதன் அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய நிதியிலிருந்து அல்லது யாராவது ஒரு நண்பர் இடம் கொடுக்கின்றபட்சத்தில், நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும். அதுமட்டுமல்லாமல், அங்கே இருக்கின்ற ஊராட்சிப் பிரதிநிதிகள் கட்டடங்கள் கொடுக்கும்பட்சத்தில், அங்கு கடைகளை வைத்துக்கொள்ளலாம் என்றும், இடம் கிடைக்கும்பட்சத்தில் அங்கே கட்டடங்கள் கட்டுவதற்காக துறை ரீதியாக விரைவான முடிவு எடுக்கப்பட்டு, கட்டடங்கள் கட்டி முடிக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 20, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.எஸ். இராஜி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**20—**

## போக்குவரத்துப் பணிமனை

***35718—திரு. வி.எஸ். இராஜி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செய்யூர் தொகுதி, செய்யூரில் போக்குவரத்துப் பணிமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகின்றேன்.



(அ) மற்றும் (ஆ) செய்யூர் தொகுதி, செய்யூரிலிருந்து 30 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள கல்பாக்கத்தில் செயல்பட்டுவரும் பணிமனையிலிருந்து இயக்கப்படும் 53 பேருந்துகளில், செய்யூரை மையமாகக் கொண்டு 4 பேருந்துகள் மட்டுமே இயங்கி வருகின்றன. மேலும், செய்யூரிலிருந்து 30 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள மதுராந்தகத்தில் செயல்பட்டுவரும் மற்றொரு பணிமனையிலிருந்து இயக்கப்படும் 58 பேருந்துகளில் 17 பேருந்துகள் மட்டுமே செய்யூரை மையமாகக் கொண்டு இயங்கி வருகின்றன. எனவே, தற்போது செய்யூரில் பணிமனை அமைக்கும் நிலை எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.எஸ். இராஜி அவர்கள்.

**திரு. வி.எஸ். இராஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களின் முதல்வர் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகின்றேன். செய்யூர் தலைமையிடத்திலிருந்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியவாறு மதுராந்தகம், கல்பாக்கம், செங்கல்பட்டு, சென்னை போன்ற பணிமனைகளுக்குப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. செய்யூருக்கும், கிழக்குக் கடற்கரைச் சாலைக்கும் இடையே 3 கிலோ மீட்டர் தூரம்தான் உள்ளது. கிழக்குக் கடற்கரைச் சாலையில் பேருந்துகள் சில நேரங்களில் பழுது ஏற்படுகின்றபோது, கல்பாக்கம் மற்றும் மதுராந்தகத்திற்கு வெகு தூரம் செல்ல வேண்டியிருக்கின்றது. அதேபோன்று, செய்யூரிலேயே அந்தப் பணிமனையை அமைத்தால், பேருந்துகளுக்கு எரிபொருள் சிக்கனம் ஏற்படுவது மட்டுமல்லாமல், அந்தப் பகுதிகளுக்கு நல்ல சிறப்பான பேருந்து வசதியைச் செய்து தர முடியும். அதனால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்யூரில் ஒரு பணிமனை அமைக்க முன்வருவார்களா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளினுடைய இயக்கம், எரிபொருள் சிக்கனம், பராமரிப்பு

[2014 டிசம்பர் 5

ஆகியவற்றைக் கருத்தில்கொண்டு இந்த மூன்றரை ஆண்டுகளில் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 75 புதிய பணிமனைகளை அமைப்பதற்கு உத்தரவிட்டு, 47 கோடி ரூபாய் அளவிற்கான நிதியில் அரசுப் போக்குவரத்துக் கழகம் செயல்படுவதற்கான உத்தரவுகளை வழங்கியிருக்கின்றார்கள். எந்தெந்தப் பகுதிகளுக்கு பணிமனை அமைக்க வேண்டும் என்று கண்டறியப்பட்டு, அந்த இடங்களில் எல்லாம் உடனடியாகப் பணிமனை அமைத்து பேருந்துகளைச் சரியாகப் பராமரித்து இயக்க வேண்டும் என்ற மாண்புமிகு அம்மா அவர்களுடைய உத்தரவையடுத்து, இந்தப் பணிகள் சிறப்பாக நடைபெற்றுக்கொண்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டுகின்ற பணிமனை அமைப்பதற்குண்டான பேருந்துகளினுடைய எண்ணிக்கை குறைவாக இருக்கின்றன. இருந்தபோதிலும் அங்கே இயக்கப்படுகின்ற பேருந்துகளின் எண்ணிக்கை, மக்களுடைய நலனைக் கருத்தில்கொண்டு மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலின்படி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 3 ஏக்கர் நிலம் அங்கே அரசின் சார்பாக பெற்றுத் தருவாரேயானால், அந்த இடத்திலே பணிமனை அமைப்பதற்கு துறை சார்பாக ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.எஸ். இராஜி அவர்கள்.

**திரு. வி.எஸ். இராஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செய்யூரில் அரசு இடம் தயாராக இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எப்போது கேட்டாலும் எங்கள் செய்யூர் தொகுதியிலே கொடுப்பதற்குத் தயாராக இருக்கின்றோம். அதைப் பயன்படுத்தி, எங்கள் பகுதிக்குப் பணிமனை அமைத்துத் தர வேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொண்டு, அமைத்துத் தருவதற்கு ஆய்வு செய்யப்படும் என்று சொன்ன மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மக்களின் முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்களுக்கும் நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

*முற்பகல் 10–35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.



2014 டிசம்பர் 5]

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதிகமான பேருந்துகள் இயங்கிக் கொண்டிருக்கக்கூடிய கன்னியாகுமரி மாவட்டத்தில், நெடுஞ்சாலைப் பகுதியிலே, அதாவது அழகிய மண்டபம் பகுதியிலே ஒரு போக்குவரத்துப் பணிமனை மிகவும் அவசியமாகிறது. வாகனங்கள் பழுதாகின்றபோது, இன்னும் அந்தப் பகுதியிலிருந்து வாகனங்களை இயக்குவதற்கு வசதியாக அழகிய மண்டபம் பகுதியிலே ஒரு போக்குவரத்துப் பணிமனை அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரை அங்கே இயக்கப்படுகின்ற பேருந்துகளுடைய எண்ணிக்கைகளுக்கேற்ப தேவையான பணிமனைகள் அங்கே இயக்கப்பட்டு வருகின்றன. அதேபோல, தொடர்ந்து கன்னியாகுமரி மாவட்டத்தில் புதிய பேருந்துகள் இயக்கப்பட வேண்டுமென்று பல்வேறு முறைகளில் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் கோரிக்கைகள் வைத்து வருகின்றனர். இந்தக் கோரிக்கைகளை ஏற்று, மக்களுக்குச் சிறப்பான சேவைகளை ஆற்ற வேண்டுமென்பதற்காக மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், கன்னியாகுமரி மாவட்டத்திற்கு மட்டும் திருநெல்வேலி அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் சார்பாக 208 புதிய பேருந்துகளை இந்த மூன்றரை ஆண்டுகளில் வழங்கி, மக்களுக்கு மகத்தான சேவைகளை அங்கே வழங்கிக் கொண்டிருக்கின்றார். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டுகின்ற அந்த இடத்தில் பணிமனை அமைக்கக்கூடிய அவசியம் எழவில்லை. அந்த அளவுக்குப் பேருந்துகள் அங்கு இயக்கத்தில் இல்லை. இருந்தபோதும், மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையின்படி துறையின் சார்பாக ஆய்வு செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 21, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாஸ்கர், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

**21—**

**தார்ச் சாலை**

***6095—திரு. அ. பாஸ்கர்:**

*மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தருமபுரி மாவட்டம், தொப்பூர் முதல் கோமகாடு வரை தார்ச் சாலை அமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஐவகை நிலமும் சூழ, அழகோடு பூத்திட்ட அன்னைத் தமிழ் மண்ணை அறிவால், ஆற்றலால் அரசாட்சி செய்து, அண்டை மாநிலம் முதல் அயல் நாடுகள் வரை புகழாரம் சூட்ட வைத்த புத்தொளியே! காவேரி, முல்லைப் பெரியாறை மீட்டுத் தந்து, உழவன் வீட்டுப் பிள்ளைகளும் உலகத்தர கல்வி பெற, பாமர ஏழைக்கும் பசுமை வீடு கட்டித் தரும் பாசப் பெட்டகமே; முப்பொழுதும் மக்களுக்கு தம் வாழ்வை ஒப்படைத்து வாழுகின்ற மூலவரே; மக்கள் முதல்வர், கழக நிரந்தரப் பொதுச் செயலாளர், இதய தெய்வம் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா, தாங்கள் வீற்றிருக்கும் திசை நோக்கி வணங்கி என்னுடைய வினாவுக்கான விடையை அளிக்க விழைகிறேன்.*

*(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியம், தொப்பூர் ஊராட்சியில், தொப்பூர்–கோமகாடு வரை உள்ள 1,400 மீட்டர் சாலைப் பணி ஊராட்சி ஒன்றியப் பொது நிதி மற்றும் மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உன்னதத் திட்டமான தமிழ்நாடு*





*குக்கிராமங்கள் மேம்பாட்டுத் திட்டமான 'தாய்' திட்டம்மூலம் 23.5 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசால் செய்து முடிக்கப்பட்டு, மக்கள் பயன்பாட்டில் உள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாஸ்கர் அவர்கள்.*

**திரு. அ. பாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியம், கம்பம்பட்டி ஊராட்சியில் பாப்பிரெட்டியூர், காட்டுவளவு, P.W.D. கால்வாய் வழியாக கோமகாடு வரை மண் சாலையாக இருப்பதை தார்ச் சாலையாக அமைக்க வேண்டுமென்ற மக்களின் நீண்டநாள் கனவை நிறைவேற்ற, மண் சாலையை தார்ச் சாலையாக அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

*முற்பகல் 10–40*

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியம், தொப்பூர் ஊராட்சியில் (குறுக்கீடு) உறுப்பினர், நீங்கள் வேறு ரோட்டை கேட்கிறீர்களா? முதலில் நீங்கள் கேட்ட சாலையை ஒரு அற்புதமான திட்டத்தில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், "தாய்" திட்டம் மூலமாக செய்து கொடுத்திருக்கிறார்கள். அதற்கு நன்றி சொல்லாமல் அடுத்த சாலைக்கு வந்துவிட்டீர்கள். நான் அந்தச் சாலையைத் தான் கேட்கிறீர்கள் என்று நினைத்தேன். மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை, அவசியம் இருப்பின், தேவையான கருத்துரு பெறப்பட்டு பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத ஒரு அருமையான, அற்புதமான 'தாய்' திட்டத்தைத் தமிழ்நாட்டு மக்களுக்கு வழங்கியுள்ளார்கள். தமிழகத்தில் 12,524 ஊராட்சிகள் இருக்கின்றன;*

79,394 குக்கிராமங்கள் இருக்கின்றன. குக்கிராமங்களில் இருக்கக்கூடிய சாலை வசதி, சுடுகாடு மேம்பாடு, குடிநீர் வசதி, குடிநீர் மேல்நிலைத் தொட்டி போன்ற பல வசதிகள் செய்து கொடுக்கும் 'தாய்' திட்டம் என்ற அற்புதமான திட்டத்தை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தொகுதிக்கும் தந்துள்ளார்கள்.

அதுமட்டுமல்ல, இன்றைக்கு இதே பதிலிலே–பாரதிய ஜனதா கட்சியைச் சார்ந்த திருமதி. தமிழிசை சௌந்தரராசன் அவர்கள்கூட, நாடாளுமன்ற உறுப்பினர் ஒவ்வொருவரும், ஒரு மாதிரி கிராமம் எடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். அதிலேகூட, நாடாளுமன்ற உறுப்பினர் மாதிரி கிராமத் திட்டம், Sansad Adarsh Gram Yojana என்ற திட்டத்தின்கீழ் கிராம ஊராட்சிகள்தான் எடுத்துள்ளார்கள். ஆனால் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மட்டுமே–குக்கிராமங்கள் வாரியாக–12,524 ஊராட்சிகளில் 79,394 குக்கிராமங்களை எடுத்து, 'தாய்' திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மத்திய அரசுத் திட்டத்தில் இதற்காக தனியாக நிதி ஒதுக்கப்படவில்லை. நாடாளுமன்ற உறுப்பினர்கள்தான் எடுத்துச் செய்ய வேண்டும். அதிலேகூட கிட்டத்தட்ட 57 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள். மத்திய அரசின் திட்டத்தின்கீழ் 2024 ஆம் ஆண்டு வரையிலும் கிட்டத்தட்ட 456 கிராமங்கள்தான் எடுத்துக்கொள்ள முடியும். ஆனால் குக்கிராமங்கள் வாரியாக எடுத்துக்கொள்ளக்கூடிய திட்டத்திலே புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வருடத்திற்கு ரூ.750 கோடி நிதியை ஒதுக்கி ஒவ்வொரு கிராமத்தையும் மேம்பாடு செய்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே கண்டிப்பாக புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய 'தாய்' திட்டத்தின்கீழ், எந்தச் சட்டமன்ற உறுப்பினர் என்ற பாகுபாடில்லாமல் அனைத்துக் கிராமங்களும் எடுத்துக்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாஸ்கர் அவர்கள்.

**திரு. அ. பாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொப்பூர் ஊராட்சியிலே 'தாய்' திட்டத்தின்மூலம் தார்ச் சாலை அமைத்துக் கொடுப்பதை வரவேற்கிறேன். மேலும், கம்பம்பட்டி ஊராட்சியில் சோழியானூர்காட்டுவளவு, கருமன்காடு, சாவூர் காட்டுவளவு, கணபதியூர் போன்ற பகுதிகளில் உள்ள சாலைகள் மண் சாலைகளாக இருக்கின்றன. இந்த மண் சாலைகள் தார்ச் சாலைகளாக அமைக்கப்பட வேண்டும் என்ற அந்தப் பகுதி மக்களின் நீண்டநாள் கனவினை நிறைவேற்ற மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த மைனாரிட்டி தி.மு.க ஆட்சியிலே தமிழகத்தில் ஊராட்சிப் பகுதிகளில் 28,628 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகள் ரூ.3,863 கோடி மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டன. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய இந்த மூன்றரை ஆண்டுகால பொற்கால ஆட்சியில் தமிழக ஊராட்சிப் பகுதிகளில் இதுவரை 35,602 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகள் (மேசையைத் தட்டும் ஒலி) ரூ.6,288 கோடி மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. அதாவது மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியைக் காட்டிலும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய இந்த மூன்றரை ஆண்டுகால ஆட்சியிலே ரூ.2,425 கோடி அளவிற்கு அதிகமான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு சாலைப் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையினை, அப்பகுதியில் அவசியம் இருப்பின், கண்டிப்பாக பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் வைகைச்செல்வன் அவர்கள்.

**முனைவர் வைகைச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாழ்த்துதலுக்கும், வணக்கத்திற்கும், வழிபாட்டுதலுக்கும் உரிய, போற்றுதலுக்கும், பாராட்டுதலுக்கும் உரிய மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி பணிந்து வணங்குகிறேன்.

விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை சட்டமன்றத் தொகுதியில் அருப்புக்கோட்டை ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில், அதாவது, பாளையம்பட்டி மற்றும் பாளையம்பட்டி விரிவாக்கப் பகுதிகள் மற்றும் உடையனாதபுரம், வேலாயுதபுரம், கோடம்பட்டி, குருந்தமடம் போன்ற பகுதிகளிலெல்லாம் தார்ச் சாலைகள் அமைக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கைகள் வந்தவண்ணம் இருக்கின்றன. மேலும், பழுதடைந்திருக்கிற சாலைகளைச் செப்பனிடுவதற்கும் கோரிக்கைகள் வந்தவண்ணம் இருக்கின்றன. ஆகவே, இப்பணிகளையெல்லாம் செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழிகாட்டுதலோடு நடந்துகொண்டிருக்கக்கூடிய இந்த அரசு மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையைக் கனிவுடன் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 22, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.வீ. கருப்பையா, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

**22—**

### கால்நடை மருத்துவமனை

***36216—திரு. மு.வீ. கருப்பையா:**

*மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சோழவந்தான் தொகுதி, தெத்தூர் ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*





**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்களின் முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.

(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம், சோழவந்தான் தொகுதி, தெத்தூர் ஊராட்சியில் ஏற்கெனவே ஒரு கால்நடைக் கிளை நிலையம் இயங்கி வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கே கால்நடை மருத்துவமனை கேட்டிருக்கிறார்கள். ஆனால், அங்கே கால்நடை மருந்தகம் வர வேண்டுமென்று சொன்னால், கால்நடைத் துறை விதியின்படி, 5,000 கால்நடைகளுக்குமேல் இருக்க வேண்டும். அங்கு ஆய்வு செய்து பார்த்ததில் 5,500–க்கு மேலாக கால்நடைகள் இருக்கின்ற காரணத்தினால், மாண்புமிகு மக்களின் முதல்வர் அம்மா அவர்களுடைய அரசு வருகின்ற நிதியாண்டில் தகுந்த நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10–45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.வீ. கருப்பையா அவர்கள்.

**திரு. மு.வீ. கருப்பையா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழக நிரந்தரப் பொதுச் செயலாளர், மக்களின் முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன்.

தமிழக விவசாயிகளின் துயர் துடைத்திட முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 142 அடியாக உயர்த்திடச் செய்தும், 4–12–2014 அன்று முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 152 அடியாக உயர்த்த தீர்மானம் நிறைவேற்றி, காவேரி நதிநீர்ப் பிரச்சினையை நடுவர் நீதிமன்றத்தில் வாதிட்டு, அரசு கெசட்டில் இடம்பெறச் செய்தும், டெல்டா மாவட்ட விவசாய மக்கள் மனங்களில் நிரந்தர இடம் பெற்றவரும், இலங்கைத் தமிழர் பிரச்சினையில் அவர்கள்தம் மறுவாழ்விற்காக சட்டமன்றத்தில் தனித் தீர்மானம் நிறைவேற்றியும், மீனவர்களின் பிரச்சினைக்கு நிலையான தீர்வினை ஏற்படுத்த உரு கொண்டிருப்பவரும், தமிழகச் சொத்தான கச்சத் தீவை மீட்பதற்கு இரவு, பகலாக அயராது பாடுபட்டுக் கொண்டிருக்கும் தமிழர்களின் காவல் தெய்வமாக விளங்கும் மாண்புமிகு மக்களின் முதல்வர் இதய தெய்வம் டாக்டர்

புரட்சித் தலைவி அம்மா அவர்களின் (மேசையைத் தட்டும் ஒலி) வழிகாட்டுதலின்படி நடைபெறுகின்ற நல்லாட்சியில், மதுரை மாவட்டம், சோழவந்தான் தொகுதிக்குட்பட்ட தெத்தூர் ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்கப்படும் என்று கூறிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு மக்களின் முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும் தொகுதி மக்களின் சார்பாக கோடானுகோடி நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர் அவர்கள்.*

**திரு. ஏ. லாசர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 2013–ல் பெரியகுளம் தொகுதி, எருமலைநாயக்கன்பட்டியில் ஒரு கால்நடைக் கிளை நிலையம் துவக்க வேண்டுமென்று கேட்டபோது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதை ஏற்றுக்கொண்டு, அந்தப் பணிகளுக்கு உத்தரவிட்டதாகக் குறிப்பிட்டார்கள். கடந்த ஆண்டும் நினைவுபடுத்தினேன். ஆனால், அந்தப் பணிகள் இன்னும் அங்கே துவக்கப்படாமல் இருக்கின்றன. அதுகுறித்து துரித நடவடிக்கைகளை மேற்கொள்ள மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா:** *மாண்புமிகு மக்களின் முதல்வர் அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலோடு, 50 கால்நடைக் கிளை நிலையங்கள் புதிதாக அமைக்க இடங்கள் தேர்வு செய்யப்பட்டு, அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதிலே தங்களுடைய தொகுதியிலுள்ள எருமலைநாயக்கன்பட்டி சேர்க்கப்பட்டுள்ளது. மிக விரைவிலே அரசாணை வெளியிடப்பட்டு, தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 23, மாண்புமிகு உறுப்பினர் திருமதி எல். ஜெயசுதா, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*





**23—**

## ஜவுளிப் பூங்கா

***53532—திருமதி எல். ஜெயசுதா:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) போளூர் தொகுதியில் ஜவுளிப் பூங்கா அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களின் முதல்வர் எங்கள் அம்மா, உங்கள் ஒரு புன்னகையே பூமியைப் புரட்டிவிடும். புதிய வரலாறு படைத்திட்ட மக்களின் முதல்வர் அம்மா நேற்று மட்டுமல்ல, இன்று மட்டுமல்ல, நாளை மட்டுமல்ல என்றுமே மக்களின் மனங்களில் மகாராணியாய் வீற்றிருக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) ஒரே தலைவி புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களுடைய பொற்பாதங்களைப் பணிந்து வணங்குகிறேன்.*

*(அ) மற்றும் (ஆ) போளூர் தொகுதியில் ஜவுளிப் பூங்கா அமைக்கும் செயற்குறிப்பு தற்போது ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. இருப்பினும் அப்பகுதியிலுள்ள தொழில்முனைவோர்கள் ஜவுளிப் பூங்கா அமைக்க முன்வருவார்களேயானால், அரசு அங்கே ஜவுளிப் பூங்கா அமைக்க முன்வரும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*முற்பகல் 10–50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திருமதி எல். ஜெயசுதா அவர்கள்.*

**திருமதி எல். ஜெயசுதா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூக்களுக்கும் புன்னகையைக் கற்றுத் தந்த போயஸ் தோட்டத்து பொன்மனத் தலைவியே, மூவேந்தர் தேசத்து உயிர் மூச்சே, சதிகளை மதியால் சாய்க்கின்ற தெளிவே, சத்தியத்தை நிலைநாட்டி சாதிக்கும் துணிவே, தமக்கென வாழாத தாயுள்ள*

[2014 டிசம்பர் 5

தியாகமே, தடை தகர்த்து பகை வெல்லும் தன்மானச் சிங்கமே, காவேரியை மீட்டு வந்தாய், முல்லைப் பெரியாற்று உரிமையை முழுதாகக் காத்துத் தந்தாய், என்.எல்.சி. பங்குகளை ஏழைக்கே சொந்தம் செய்தாய், வீடுதோறும் விலையில்லா அரசி தந்தாய், கறவை மாடு, ஆடுகள் தந்தாய், கலங்கி நிற்கும் பெண்ணினத்தைக் கரைசேர்த்து, தாலிக்குத் தங்கம் தந்தாய்; Mixie, Grinder, Fan தந்தாய்; ஏழை வீட்டுப் பிள்ளைக்கும் இலவசமாய்க் கல்வி தந்தாய்; உடுப்பு தந்தாய்; தூரத்தைக் கடப்பதற்கு மிதிவண்டி என்னும் துடுப்பு தந்தாய்; உலகத்தை உள்ளங்கைக்குள் அடக்கிடவே மடிக்கணினி தந்தாய்; (மேசையைத் தட்டும் ஒலி) ஈரிலையில் வாழ்கின்ற இன்னொரு கலைமகளோ என இவ்வுலகுக்கே வியப்பும் தந்தாய்; தூரப் போ பகையே, எமக்குத் துச்சம் நீ என்று வெற்றி மேல் வெற்றிகளை விவேகத்தால் குவித்திட்டாய்; (மேசையைத் தட்டும் ஒலி) தெய்வத் திருமகளே! திருவரங்கத்துக் கீதையே! தாயே! தமிழே! எங்களின் குலதெய்வமே! அம்மா தங்களை வணங்குகிறேன். திருவண்ணாமலை மாவட்டம், போளூர் சட்டமன்றத் தொகுதி நெசவாளர்கள் நிறைந்த பகுதி. இப்பகுதி மக்களின் வாழ்வில் வசந்தத்தையும், வெளிச்ச ரேகைகளையும் உருவாக்கிட, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு போளூர் தொகுதியில் ஜவுளிப் பூங்கா அமைக்க வேண்டுமென மீண்டும் வலியுறுத்திக் கேட்டு அமர்கிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டத்தில், பட்டுத் தறிகள் 3,372–ம், கைத்தறிகள் 6,053–ம் ஆக மொத்தம் 9,425 தறிகள் உள்ளன. போளூர் தொகுதியில் ஒரு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கமும், சுமார் 1,500 கைத்தறிகளும் உள்ளன. கடந்த 11–1–2012 அன்று திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அவர்களால் ஜவுளிப் பூங்கா அமைக்க ஏதாவது தொழில் முனைவோர்கள் வருவார்களா என்பதற்காகக் கூட்டம் நடத்தப்பட்டது. தொழில் முனைவோர்கள் எவரும் அந்தக் கூட்டத்தில் முன்வரவில்லை. ஜவுளிப் பூங்காவை அரசு நேரடியாக அமைப்பதில்லை. தனியார் முன்வருவார்களேயானால், அதிலே மத்திய அரசு நிதியுதவியோடு, மாநில அரசின் நிதியுதவி 9 சதவிகிதமும், ஒட்டுமொத்தமாக உள்ள நிதியிலே, ரூபாய் 65



2014 டிசம்பர் 5]

கோடிக்கு மேல் மிகாமல் உள்ள நிதியிலே, 9 சதவிகிதம் மானியமாகவும், மீண்டும் வங்கியிலே கடன் பெற்று அமைப்பதற்கு ஆவன செய்யக்கூடிய வகையிலே தமிழக அரசு உதவியாக இருக்கும். அப்படி யாரேனும் தொழில் முனைவோர்கள் அந்தப் பகுதியிலே முன்வருவார்களேயானால், நிச்சயமாக மக்களின் முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு முன்வரும். உதாரணமாக, தற்பொழுது காஞ்சிபுரம் மாவட்டத்திலே, பட்டு நெசவாளர்களுக்கான ஒரு ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா அமைப்பதற்காக அந்தத் தொழில் முனைவோர்கள் கூட்டாக வந்த நேரத்திலே, மக்களின் முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, 75 ஏக்கர் அந்தத் தொழில் முனைவோர்களுக்கு விலையில்லாமல் மானியமாக வழங்கி, அந்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன. அதுபோல, ஒட்டுமொத்தத் தமிழகம் முழுவதுமாக 10 இடங்களில் இதுபோன்ற தொழில் முனைவோர்கள் வரக்கூடிய அந்த இடங்களிலே, அரசு உதவியுடன் அந்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன. அதைப்போல, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இதுபோன்று ஏதாவது முயற்சி எடுத்து, தொழில் முனைவோர்கள் முன்வருவார்களேயானால், மக்களின் முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு முதல் ஆளாக இருந்து நெசவாளர்களுடைய வாழ்வாதாரத்திற்காக நிச்சயமாக உதவியாக இருக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எல். ஜெயசுதா அவர்கள்.

**திருமதி எல். ஜெயசுதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் முனைவோர்கள் முன்வந்தால் அமைத்துக்கொடுக்கப்படும் என்று கூறிய தமிழக அரசிற்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றி கூறி அமர்கிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 24, மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன், மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

[2014 டிசம்பர் 5

**24—**

### சமுதாய நலக் கூடம்

***35143—திரு. என். முருகுமாறன்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காட்டுமன்னார்கோவில் தொகுதி, குமராட்சி ஊராட்சி ஒன்றியம், சி. அரசூர் ஊராட்சியில் ஆதி திராவிடர் நலத் துறையின் மூலமாக சமுதாய நலக் கூடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன். மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாதம் பணிந்து வணங்கி கேள்விக்கான பதிலை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் சட்டமன்றத் தொகுதி, குமராட்சி ஒன்றியம், சி.அரசூர் ஊராட்சியில் விதிகளுக்குட்பட்டு, நிதிநிலைக்கேற்ப மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்பேரில் நடக்கின்ற அரசு, சமுதாய நலக் கூடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன் அவர்கள்.

*முற்பகல் 10–55*

**திரு. என். முருகுமாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒடுக்கப்பட்ட மக்களின் ஒரே போர்வாள், தமிழக மக்களின் சீர்மிகு கூர்வேல், முல்லைப் பெரியாறை மீட்டுத்தந்த வெற்றித் திருமகள், காவேரியைக் காத்து காவியம் படைத்த



2014 டிசம்பர் 5]

கலைமகள், பொன்னியின் செல்வி, பொன்மனத் தலைவி, வாழும் வீரமங்கை வேலுநாச்சியார், மாண்புகள் நிறைந்த மக்கள் முதல்வர், வாஞ்சைமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொன்மலர்ப் பாதங்களைப் பணிவோடும், நன்றியோடும் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் தொகுதி, குமராட்சி ஒன்றியத்தில் அமைந்துள்ள சி.அரசூர் ஊராட்சி கொள்ளிடக் கரையின் கடைக்கோடியில் அமைந்திருக்கக்கூடிய ஊராட்சி. ஒடுக்கப்பட்ட மக்கள் அதிகமாக வசிக்கின்ற ஊராட்சியாக, கொள்ளிடக் கரையில் அமைந்திருக்கின்ற ஊராட்சியாக இருக்கின்ற காரணத்தாலும், அவ்வூராட்சியைச் சுற்றி ஆதி திராவிட மக்கள் அதிகமாக இருக்கின்ற காரணத்தினாலும், ஆதி திராவிட மக்களுடைய பேராலயமாக விளங்குகின்ற மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில் (மேசையைத் தட்டும் ஒலி) சி.அரசூர் ஊராட்சியில் இவ்வாண்டு சமுதாய நலக் கூடம் அமைத்துத் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களிடமிருந்து அவரவர் தொகுதிக்குட்பட்ட இடங்களில் சமுதாய நலக் கூடங்கள் கட்டிக் கொடுக்க வேண்டுமென அதிகப்படியான கோரிக்கைகள் வந்தவண்ணம் உள்ளன. இருப்பினும், மாமன்ற உறுப்பினர் அவர்கள் குறிப்பிடும் கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட குமராட்சி ஒன்றியத்திலுள்ள சி.அரசூர் ஊராட்சியின் மொத்த மக்கள்தொகையான 1,046–ல் 757 பேர் ஆதி திராவிடர் ஆவர். எனவே, அவ்விடத்தின் முக்கியத்துவம் மற்றும் நிதிநிலைமைக்கேற்ப சமுதாய நலக்கூடம் கட்டித் தர மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி நடைபெற்றுவரும் அரசினால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2014 டிசம்பர் 5

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன் அவர்கள்.

**திரு. என். முருகுமாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களின் முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரிய ஆலோசனையைப் பெற்று, அங்கே சமுதாய நலக் கூடம் அமைத்துத் தரப்படும் என்று நல் ஆலோசனை வழங்கி, சிறப்பு சேர்த்திருக்கிற, மாண்புமிகு அம்மா அவர்களுடைய பெருமையைக் காக்கின்ற மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அம்மா அவர்களுக்கும் நெஞ்சம் நிறைந்த நன்றியினைத் தெரிவித்து, அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 25, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு, மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

**25—**

## மீனவர்களுக்கு வீடுகள்

***36234—திரு. ப. டில்லி பாபு:**

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம், ஊட்டமலை, ஒகேனக்கல் பகுதிகளிலுள்ள உள்நாட்டு மீனவர்களுக்கு வீடுகள் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால், மீன் வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன். எல்லாரும் எல்லாமும் பெற வேண்டும், தமிழ்நாட்டில் இல்லாமை இல்லாத நிலை வேண்டும் என்று தமிழக மக்களுடைய வாழ்வுக்காக உழைத்துக் கொண்டிருக்கின்ற மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம், ஊட்டமலை மற்றும் ஒகேனக்கல் பகுதிகளிலுள்ள மீனவர்களில்



2014 டிசம்பர் 5]

842 பேர் பெண்ணாகரம் மீனவர் கூட்டுறவுச் சங்கத்திலும், 516 பேர் மேட்டூர் அணை மீனவர் கூட்டுறவுச் சங்கத்திலும் உறுப்பினர்களாக உள்ளனர். 2011 ஆம் ஆண்டில், பெண்ணாகரம், ஊட்டமலை மற்றும் ஒகேனக்கல் பகுதிகளிலுள்ள மீனவர்களுக்கு மா. சிங்காரவேலன் நினைவு வீட்டு வசதித் திட்டத்தின்கீழ், பெண்ணாகரம் மீனவர் கூட்டுறவுச் சங்கத்தின்மூலம் 151 வீடுகளும், மேட்டூர் அணை மீனவர் கூட்டுறவு மீன் விற்பனைச் சங்கத்தின் மூலம் 31 வீடுகளும் வழங்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பசுமை வீடுகள் கட்டும் திட்டத்தின்கீழ் மீனவர்களுக்கு வீடுகள் கட்டுவதற்கு மீன் வளத் துறையால் விண்ணப்பங்கள் பெறப்பட்டு வருகின்றன. அவற்றில், தருமபுரி மாவட்டத்திலுள்ள உள்நாட்டு மீனவர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களிடமிருந்து பெறப்பட்ட 21 விண்ணப்பங்கள் தகுதியின் அடிப்படையில் பரிசீலிக்கப்பட்டு, 17 விண்ணப்பங்கள் தெரிவு செய்யப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பசுமை வீடு கட்டும் திட்டத்தின்கீழ், ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறையின்மூலம் ஒதுக்கீடு செய்ய பரிந்துரைக்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம், ஊட்டமலை, ஒகேனக்கல், நாட்டார்கொட்டாய், பஞ்சப்பள்ளி, கேசர்குழி டேம், நாகாவதி அணை, தொப்பையாறு, இப்படி 16–க்கும் மேற்பட்ட கிராமங்களில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மீனவக் குடும்பத்தினர் வாழ்ந்து வருகிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 2011 ஆம் ஆண்டு 151 வீடுகள் வழங்கப்பட்டதாகச் சொன்னார்கள். அந்த வீடுகள் நகர்ப்புறத்தில் இருக்கக்கூடிய பெண்ணாகரம் மீனவர் கூட்டுறவுச் சங்கத்திற்கு உட்பட்ட பகுதியில் அமைந்துள்ளன. ஆனால், பிலிகுண்டுலு, ஊட்டமலை போன்ற பகுதிகளிலிருந்து மேட்டூர் பகுதியில் வந்து குடியேறிய மீனவர்கள், ஏறக்குறைய 147 குடும்பத்தினர் பல ஆண்டுக்காலமாக மீன்பிடித் தொழிலிலே ஈடுபட்டு வருகிறார்கள். அவர்களுக்கு 2011 ஆம் ஆண்டு 12 வீடுகள் மட்டும்தான் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள

ஏறக்குறைய 120–க்கும் மேற்பட்ட மீனவர் குடும்பத்தினர் வீடுகள் வேண்டி விண்ணப்பித்து பல ஆண்டுகளாகக் காத்துக்கொண்டிருக்கிறார்கள்.

முற்பகல் 11–00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் அனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிலிகுண்டுலு, ஊட்டமலை-மற்றும் ஒகேனக்கல் ஆகிய இடங்களை ஒட்டியுள்ள பகுதிகளில் வசிக்கும் மீனவர்களுக்கான அடையாள அட்டை பெற்ற, இப்போது மீன் பிடிக்கக்கூடிய 72 மீனவக் குடும்பங்களையும் சேர்த்து, 142 மீனவ குடும்பங்களுக்கு, இந்த ஆண்டிலாவது வீடுகள் கட்டித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீனவர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பசுமை வீடுகள் திட்டத்தின்கீழ் வீடுகள் கட்டித் தர கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறையின் 8–8–2014 ஆம் தேதியிட்ட அரசாணையின்படி, மீன் வளத் துறை ஆணையர் அவர்கள் தமிழ்நாட்டில் பட்டா உள்ள 641 மீனவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டு, அந்த விண்ணப்பங்களை இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறைக்கு அனுப்பி வைத்துள்ளார்கள்.

ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறை மேற்கூறிய 641 பசுமை வீடுகள் கட்டித் தர ஒப்புதல் வழங்கியுள்ளது. தருமபுரி மாவட்டத்திற்கு 49 வீடுகளும், மேட்டூருக்கு 50 வீடுகளும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இவற்றில் பெண்ணாகரம், ஊட்டமலை மற்றும் ஒகேனக்கல் பகுதிகளைச் சேர்ந்த மீனவர்களிடமிருந்து 17 விண்ணப்பங்கள் பெறப்பட்டு, வீடுகள் கட்டித் தர மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இந்த விண்ணப்பங்கள்மீது மீன் வளத் துறையால் தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்ணாகரம் மற்றும் ஊட்டமலைப் பகுதிகளில் உள்ள மீனவர்களுக்கு 15 வீடுகள் கட்டித் தரப்படும் என்று அறிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஏறத்தாழ 142 மீனவக் குடும்பங்கள் உள்ள ஊட்டமலைப் பகுதியிலுள்ள மீனவர்கள் மீன் பிடிப்பதற்கு வனத் துறையினர் கடந்த எட்டு மாத காலமாக தடை விதித்திருந்தார்கள். மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்களும் மற்றும் மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களும் இந்தப் பிரச்சினையில் வலுவாகத் தலையிட்டதன் விளைவாக ஒரு பகுதியினர் மட்டும் மீன் பிடிக்க அனுமதி அளித்துள்ளார்கள். அந்தப் பகுதியில் அவர்கள் 40 ஆண்டு காலமாக மீன் பிடித்துக் கொண்டிருந்தார்கள். வருடா வருடம் அவர்கள் லைசென்சை புதுப்பிக்க வேண்டும், இல்லையென்றால் அந்தப் பகுதியில் மீன் பிடிக்க வனத் துறையைச் சேர்ந்தவர்களால் அனுமதி மறுக்கப்படுகிறது. அந்த லைசென்சைப் புதுப்பிக்க விண்ணப்பித்தும், அவை ஆறு மாத காலமாக அங்கிருக்கும் உதவி இயக்குநர் மற்றும் துணை இயக்குநர், மேட்டூர் அவர்களிடம் நிலுவையில் உள்ளன. அதனால் அவர்கள் மீன் பிடிக்க இயலாத சூழ்நிலை உள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள், சுருக்கமாகக் கேள்வியைக் கேளுங்கள்.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனவே அந்த மீனவர்களுக்கு, மீன் பிடிக்காத காலங்களில் அரசால் வழங்கப்படும் நிவாரணத் தொகையை வழங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

[2014 டிசம்பர் 5

**மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடும் பகுதி கர்நாடக மாநில வனப் பகுதிக்குச் சொந்தமான இடம். பெண்ணாகரம், ஊட்டமலை ஒகேனக்கல் பகுதிகளில் உள்ள மீனவர்கள் அங்கே மீன் பிடிக்கச் செல்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் இந்தக் கோரிக்கை எங்களிடம் தெரிவிக்கப்பட்ட உடனே மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களும், நானும், எங்களுடைய துறையின் அரசுச் செயலாளர்களும் அதிலே நடவடிக்கை எடுத்து, அவர்கள் மீன் பிடிப்பதற்கான வழிவகைகள் செய்யப்பட்டிருக்கின்றன.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தற்போதுதான் இந்தச் செய்தியை அவையிலே சொல்கிறார். இதை ஆய்வு செய்து, அதற்கு வேண்டிய நடவடிக்கையை, நம்முடைய மீன் வளத் துறையும், வனத் துறையும் சேர்ந்து எடுத்து, அந்தப் பகுதிகளில் மீனவர்கள் மீன் பிடிப்பதற்கான வழிவகைகள் குறித்து ஆராயப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. பவுன்ராஜ் அவர்கள்.

**திரு. சு. பவுன்ராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீனவ மக்களின் விடிவெள்ளி, மக்களின் முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன். கடலில் மீன் பிடிக்கச் செல்லும் மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் துன்புறுத்தப்பட்டு, உயிரிழந்தால் அவர்களின் குடும்பத்தினருக்கு நிவாரணத் தொகையை தமிழக அரசு வழங்கி வருகிறது. இந்த நிவாரணத் தொகையை உயர்த்தித் தர மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு முன்வருமா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலில் மீன் பிடிக்கப் போகும் மீனவர்கள் கடலில் தவறி இயற்கை மரணம் ஏற்படுகிறபோது அவர்களுக்கு ரூபாய் ஒரு இலட்சமும், இலங்கை இராணுவத்தின் கடற்படையினரால் சுடப்பட்டு மரணம் அடைகிறபோது, அந்த மீனவ குடும்பத்தினருக்கு நிவாரணத் தொகையாக ரூபாய் மூன்று இலட்சமும், அதே குடும்பத்தில் வாரிசுகள் இல்லாமல் இருந்தால் அந்த மீனவர் குடும்பத்தினருக்கு ரூபாய் ஐந்து இலட்சமும் வழங்குகிற மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சிறப்பாக மீனவர்களுக்கான நலத் திட்டங்களை வழங்கி வருகிறார்கள்.



2014 டிசம்பர் 5]

*முற்பகல் 11–05*

மீனவர்களைப் பொறுத்தவரையில், இதுவரை எந்த அரசும் செய்யாத சாதனையாக மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு செய்து கொண்டிருக்கிறது என்பது நாடறிந்த ஒன்று. (மேசையைத் தட்டும் ஒலி) உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், இராமேஸ்வரம் பகுதியைச் சேர்ந்த ஐந்து மீனவர்களுக்கு இலங்கை நீதிமன்றத்தால் தூக்கு தண்டனை அளித்த விவரம் இன்று உலகளவில் பேசப்படுகிற ஒரு நிகழ்ச்சியாகும். 29–11–2011 அன்று, "தமிழக மீனவர்கள் சிறையில் அடைக்கப்பட்டார்கள்" என்ற செய்தியை கேள்விப்பட்டவுடனேயே, வழக்கு செலவிற்காக ரூ.2 இலட்சம் வழங்கினார்கள். வழக்கை விரைவுபடுத்தும்பொருட்டு, மீண்டும் ரூ.3 இலட்சம் என மொத்தம் 5 இலட்சம் ரூபாய் கொடுத்தவர் ஒப்பற்ற மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) கைது செய்யப்பட்ட ஒவ்வொரு மீனவ குடும்பத்திற்கும், குடும்ப நல நிதியாக ரூ.2 இலட்சம் வழங்கினார்கள்.

மேலும், தமிழக மீனவர்கள் சிறையில் அடைக்கப்பட்ட நாள் முதல், அவர்கள் விடுதலை செய்யப்பட்டு வீடு திரும்பும் நாள் வரை ஒவ்வொரு குடும்பத்திற்கும், மாதமொன்றிற்கு ரூ.7,500/– என, 13 இலட்சத்து 85 ஆயிரம் ரூபாய் வழங்கியவர் ஒப்பற்ற மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மீனவக் குடும்பங்கள், "எங்களுக்குக் குடும்ப நல நிதி தாருங்கள்" என்று கேட்கவில்லை. மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களே, அவர்களை அழைத்து குடும்ப நல நிதிகளை வழங்கினார்கள்.

மேலும், விடுதலை செய்யப்பட்ட மீனவர்கள் சென்னை விமான நிலையத்தை வந்தடைந்தவுடன், அவர்களை வரவேற்பதற்காக 3

அமைச்சர்களை அனுப்பியவர் மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அப்போது, ஒவ்வொரு மீனவருக்கும் தலா 3 இலட்சம் ரூபாய் வழங்கினார்கள். வரலாற்றிலே, இதுபோன்ற ஒரு நிகழ்வு நடந்தது இல்லை. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான், மீனவர்களை வரவேற்கும்போதே, அவர்கள் கையில் 3 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை வழங்கினார்கள். ஆக, மீனவர்களின் குடும்ப நல நிதியாக ரூ.5 இலட்சம் வழங்கியவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி).

மீண்டும், "இலங்கை சிறையிலிருந்த மீனவர்களுக்குத் தூக்கு தண்டனை" என்ற செய்தியை கேட்டவுடனேயே, மேல்முறையீடு செய்வதற்காக ரூ.20 இலட்சம் கொடுத்தவர் மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அரசியல் வரலாற்றிலேயே மீனவர்கள் நலனுக்காக, 5 குடும்பத்திற்காக மட்டும் ரூ.63 இலட்சத்து 85 ஆயிரம் கொடுத்தவர் ஒப்பற்ற மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை இம்மாமன்றத்திலே தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையினையும் மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலோடு நடக்கும் அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 26, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**26—**

### புதிய வட்டம்

***2772—திரு. சு. குணசேகரன்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் வட்டத்தைப் பிரித்து சிங்கம்புணரியைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய வருவாய் வட்டம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?





**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழர் குலம் காத்திட இப்பூவுலகில் அவதரித்திருக்கின்ற, தமிழர் குல சாமி, உலகத்தை ஆளுகின்ற ஆற்றல் பெற்றிருக்கின்ற மக்களின் முதல்வர், வாழும் இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்கள் பணிந்து வணங்குகிறேன்.

(அ) மற்றும் (ஆ) உத்தேசிக்கப்படுகின்ற சிங்கம்புணரி வட்டம், அரசாணை (நிலை) எண் 279, வருவாய்த் துறை, நாள் 9–6–2003–ல் நிர்ணயிக்கப்பட்டிருக்கிற அளவுகோல்களைப் பூர்த்தி செய்வதால், அரசு அலுவலர்களிடமிருந்து முன்மொழிவுகள் பெறப்பட்டு, அரசின் பரிசீலனையில் உள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்,

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை மாவட்டத்தில் வாழும் மக்களின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்கு ஏதுவாக, திருப்புவனம் பகுதியை 2012 ஆம் ஆண்டு தனி வட்டமாகவும், காளையார்கோவில் பகுதியை 2013 ஆம் ஆண்டு தனி வட்டமாகவும் பிரித்து, சிறப்பான நடவடிக்கைகளை எடுத்ததற்காக தமிழக அரசுக்கு மீண்டும் எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று, திருப்பத்தூர் பகுதியிலுள்ள சிங்கம்புணரி நகரம் என்பது–திருப்பத்தூர் பகுதி, திருப்பத்தூர் ஒன்றியம், திருப்பத்தூர் பேரூராட்சி, சிங்கம்புணரி ஒன்றியம், சிங்கம்புணரி பேரூராட்சி, புதூர் ஒன்றியம் என்ற அடிப்படையில் ஒரு மிகப் பரந்த பரப்பளவினைக் கொண்டிருக்கிறது. குறிப்பாக, அம்மாவட்டத்திலேயே, சிங்கம்புணரியில் இருக்கக்கூடிய புதூர் பகுதிதான் சிறு, சிறு மலைப் பகுதிகளை உள்ளடக்கிய பகுதியாக விளங்குகிறது. எனவே, ஒவ்வொரு கிராமத்திற்கும், கிட்டத்தட்ட 8 கி.மீ., 10 கி.மீ., என்ற அடிப்படையில் தனித் தனியாக வழித்தடங்கள் அமைக்கப்பட்டு, மக்கள் பயணம் செய்யக்கூடிய நிலை இருக்கின்றது. எனவே, மக்கள் சாதாரண பிரச்சினைக்குக்கூட திருப்பத்தூர் வட்டம் செல்வதற்கு மிகப்

[2014 டிசம்பர் 5

பெரிய சிரமத்திற்கு ஆளாகிறார்கள். பொன்னமராவதி, புதுக்கோட்டை போன்ற பகுதிகளின் எல்லையில் இருக்கக்கூடிய மக்கள் சாதாரண விஷயத்திற்காக வர வேண்டுமென்றால், 60 கி.மீ. முதல் 80 கி.மீ. தூரம் வரை பயணிக்க வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். எனவே, மக்களுடைய அடிப்படை நலன்களைக் கருத்திற்கொண்டு, விதிகளைச் சற்று தளர்த்தியாவது உடனடியாக சிங்கம்புணரி வட்டத்தைத் தனி வட்டமாகப் பிரிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 11–10

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, தற்போதுள்ள திருப்பத்தூர் வட்டம், பரப்பளவில் 756.9 சதுர கிலோ மீட்டரையும், மக்கள் தொகையில் 2,75,876 நபர்களையும், வருவாய்க் கிராமங்கள் எண்ணிக்கையில் 100–ஐயும் கொண்டுள்ளது. கோரிக்கையின்படி, பரிசீலிக்கப்படும் சிங்கம்புணரி வட்டம் பிரிக்கப்படுமாயின், அது பரப்பளவில் 394.6 சதுர கிலோ மீட்டரையும், மக்கள்தொகையில் 1,28,760 நபர்களையும், வருவாய்க் கிராமங்களின் எண்ணிக்கையில் 40–ஐயும் கொண்டதாக அமையும். எஞ்சிய திருப்பத்தூர் வட்டம், பரப்பளவில் 362.3 சதுர கிலோ மீட்டரையும், மக்கள் தொகையில் 1,47,123 நபர்களையும், வருவாய்க் கிராமங்களின் எண்ணிக்கையில் 60–ஐயும் கொண்டதாக இருக்கும். அரசாணை எண் 279, வருவாய்த் துறை நாள் 9–6–2003–ன்படி புதிய வட்டம் ஏற்படுத்தப்பட வேண்டுமாயின், அப்புதிய வட்டம், பரப்பளவில் குறைந்தபட்சம் 250 சதுர கிலோ மீட்டரையும், மக்கள் தொகையில் குறைந்தபட்சம் ஒரு இலட்சம் நபர்களையும், வருவாய்க் கிராமங்களின் எண்ணிக்கையில் குறைந்தபட்சம் 30–ஐயும் கொண்டதாக இருக்க வேண்டும். இந்நேர்வில், உத்தேசிக்கப்படும் சிங்கம்புணரி வட்டம், அரசாணை எண் 279 வருவாய்த் துறை நாள் 9–6–2003–ன்படி நிர்ணயிக்கப்பட்டிருக்கிற அளவுகோல்கள், பரப்பளவு, மக்கள் தொகை, கிராமங்களின் எண்ணிக்கை ஆகியவற்றை நிறைவு செய்வதால், வருவாய் நிருவாக ஆணையர் அவர்களின் முன்வடிவு பெறப்பட்டு, அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2014 டிசம்பர் 5]

நாடு சுதந்திரம் அடைந்த காலம்தொட்டு, இந்தியத் திருநாட்டில் எந்த மாநிலத்திலும் இதுவரை இல்லாத வகையில், வருவாய்த் துறையின் சேவையை மேம்படுத்தவும், விரைவான சேவையை அளிக்கவும், வருவாய்த் துறையை மக்கள் எளிதில் அணுகவும், மூன்றே ஆண்டுகளில் 49 வட்டங்களைப் பிரித்து, அதற்கான நிதியையும் ஒதுக்கீடு செய்து, (மேசையைத் தட்டும் ஒலி) ரூ.2.25 கோடி நிதியை வாரி வழங்கி, புதிய நிருவாகப் புரட்சியை நிகழ்த்திக் காட்டி, வருவாய்த் துறைக்கு புத்துயிர் கொடுத்தவர், கருணையின் பிறப்பிடம், மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா என்பதை இந்த மாமன்றமும் மாண்புமிகு உறுப்பினர்களும் நன்கு அறிவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், கடந்த கால ஆட்சியில் 14 வட்டங்களை அறிவித்ததோடு, 12 வட்டங்களுக்கு மட்டுமே நிதியை அளித்து அதுவும் கிடப்பிலே கிடந்தது. ஆனால் இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா ஒருவர் மட்டும்தான், மூன்றே ஆண்டுகளில் நிருவாக வசதிக்காக 49 வட்டங்களை உருவாக்கி, புதிய வட்டங்களை உருவாக்குவதிலே புதிய வரலாறு படைத்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா (மேசையைத் தட்டும் ஒலி) என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கை வைத்துப் பேசுகிறபோதே, மாண்புமிகு புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்களுக்கு நன்றி தெரிவித்தார்கள். சென்ற கூட்டத் தொடரிலேதான், இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விதி 110–ன்கீழ் 15 வட்டங்களிலே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை நிறைவேற்றித் தந்துள்ளார்கள். இந்தக் கோரிக்கையையும் இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலோடு நடக்கிற அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிங்கம்புணரி வட்டத்தைத் தனியாகப் பிரிப்பதற்கு சட்ட விதிகள் இடம் தருவதாகக் கூறி, பரிசீலிக்கப்படும் என்று கூறிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றி

[2014 டிசம்பர் 5

தெரிவித்துக்கொள்கிறேன். தமிழக அரசு இதுவரை 49 தனி வட்டங்களைப் பிரித்து சாதனை புரிந்ததாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதேபோல், half century அடித்து, 50–வது வட்டமாக சிங்கம்புணரியைத் தனி வட்டமாக அறிவிக்க வேண்டும் என்று கேட்டு அமைகிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 27, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன், மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**27—**

## அரசு விழா

***49609—திரு. க. அன்பழகன்:**

மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கணித மேதை இராமானுஜம் அவர்களின் பிறந்த நாளை அரசு விழாவாக அறிவிக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலைவிட்டு அலை பிரியலாம்; ஆனால் கண்ணின் மணியாகி தொண்டர்களின் கருத்தைவிட்டுக் கண நேரமும் பிரியாதவர். மலரைவிட்டு மணம் பிரியலாம்; ஆனால் கனிவுக்குள் கனியாகி, மக்கள் மனதைவிட்டு ஒரு கணமும் அகலாதவர். (மேசையைத் தட்டும் ஒலி) நிலவைவிட்டு குளிர் பிரியலாம்; ஆனால் ஒளியின் ஒளியாகி, தமிழர்தம் உள்ளம்விட்டு ஒரு கணமும் பிரியாதவர் மக்களின் முதல்வர் இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்கி இந்த வினாவிற்கான விடையை அளிக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கணித மேதை இராமானுஜம் அவர்களின் பிறந்த நாளை அரசு விழாவாக அறிவிக்கும் செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில்



2014 டிசம்பர் 5]

இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள்.

**திரு. க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கணித மேதை இராமானுஜம் அவர்கள், பகுத்தறிவுப் பகலவன், வெண்தாடி வேந்தர், தந்தை பெரியார் அவர்கள் பிறந்த ஈரோட்டில் 22–12–1887–ல் பிறந்தவர் என்றாலும், கும்பகோணம் சாரங்கபாணி சன்னதித் தெருவில்தான் வாழ்ந்தார்கள் என்பது வரலாற்றுச் செய்தி. அவர்கள் பள்ளிப் படிப்பை குடந்தை நகர மேல்நிலைப் பள்ளியில் பயின்றபோதும், புகுமுக வகுப்பை குடந்தை அரசுக் கல்லூரியில் பயின்றபோதும், கணிதத்தின்மீது மிகுந்த ஆர்வம் கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. தனது 17–வது வயதில், சென்னைப் பல்கலைக்கழகத்தின் பரிந்துரையின்பேரில் லண்டன் Cambridge பல்கலைக்கழகத்தில் சேர்ந்து, G.H. Hardy என்ற பேராசிரியர் அவர்களால் பெரிதும் பாராட்டப் பெற்று, உலகத்தாரால் பார்க்கப்பட்டவர். இவர் ‘எண் கொள்கை’ என்று அழைக்கப்படும் ‘Number Theory’ கண்டுபிடித்ததன் அடிப்படையில்தான் 120 ஆண்டுகளுக்குப் பிறகு Internet என்று சொல்லப்படும் வலைதளத்தின் பாதுகாப்பு சங்கேத மொழியாக இது பயன்படுகிறது என்பதை நான் குறிப்பிட்டுச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். இன்றைக்கும் இவரது கணிதக் கோட்பாடுகள் பல்லாயிரக்கணக்கான கணிதப் பேராசிரியர்களுக்கு கணிதத்தில் இலக்கணமாக, கலங்கரை விளக்கமாகத் திகழ்கின்றன. கணித மேதை திரு. இராமானுஜம் அவர்களுடைய பிறந்த நாளை உலகில் உள்ளவர்கள் அனைவரும் அறியும் வகையில், அவரது புகழைப் போற்றும்வகையில், மிகவும் குறைவாக 33 ஆண்டுகளே வாழ்ந்து மறைந்தவரின் பிறந்த நாளை அரசு விழாவாகக் கொண்டாட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11–15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக்கு வரும் காலங்களில் எல்லாம் தமிழ் மண்ணிற்குப் பெருமை சேர்த்த பெரியோர்களையும், தமிழ் மாநிலம் மேன்மையுற பாடுபட்ட தலைவர்களையும் நினைவுகூர்ந்து, அவர்களது புகழ் என்றென்றும் நிலைக்கும் வகையில், அவர்களைப் பெருமைப்படுத்துவதைத் தனது தலையாயக் கடமையாகக் கொண்டுள்ளார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி செயல்பட்டுவரும் இந்த அரசின் சார்பில் சென்னையில் 27 தலைவர்களுக்கும், மாவட்டங்களில் 22 தலைவர்களுக்கும் விழாக்கள் எடுத்து பெருமைப்படுத்தப்பட்டு வருகிறது. மக்களின் முதல்வர் இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், தாழ்த்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்காக தனது வாழ்வையே அர்ப்பணித்த தலைவர் இரட்டை மலை சீனிவாசன் அவர்களின் பிறந்த நாளை அரசு விழாவாகக் கொண்டாட ஆணையிட்டதன்பேரில், ஆண்டுதோறும் ஜூலை மாதம் 7 ஆம் நாள் அன்று அவரது பிறந்த நாள் அரசின் சார்பில் சிறப்புடன் கொண்டாடப்பட்டு வருகிறது.

அதேபோல், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அறிவிப்பின்படி, சிவகங்கையில் வீரமங்கை வேலுநாச்சியார் அவர்களின் பிறந்த நாள் எதிர்வரும் ஜனவரி திங்கள் 3 ஆம் நாள் அன்று அரசு விழாவாகக் கொண்டாடப்படவுள்ளது என்பதனைத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

கன்னியாகுமரி மாவட்டம், தமிழகத்துடன் இணைய அரும்பாடுபட்ட மாவீரர் நேசமணி அவர்களின் பெருமையைப் போற்றும் வகையில், தமிழ்நாட்டுடன் கன்னியாகுமரி மாவட்டம் இணைந்த நாளான நவம்பர் மாதம் 1 ஆம் தேதி அன்று மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, அரசு விழாவாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. ஆகவே, கணித மேதை இராமானுஜம் அவர்களின் பிறந்த நாளை அரசு விழாவாகக் கொண்டாடுவது தொடர்பான மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை அளப்பரிய மக்கள் பணியாற்றி வரும் மக்களின் முதல்வர் இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி நடக்கின்ற அரசு கனிவோடு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு





உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள்.

**திரு. க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. இராமானுஜம் அவர்கள் வாழ்ந்த இல்லம் கும்பகோணம் சாஸ்த்ரா பல்கலைக்கழகத்தினுடைய இணை வேந்தர் உயர்திரு. சேதுராமன் அவர்களின் பெருமுயற்சியால் நினைவு இல்லமாகப் பராமரிக்கப்பட்டு வருகிறது. இது குடந்தை மக்களுடைய பாராட்டுக்குரியது. மேலும், இவரது பிறந்த நாளை மத்திய அரசு 2012 ஆம் ஆண்டு முதல் தேசிய கணித தினமாக–National Mathematical Day என்று அறிவித்துள்ளது. இவரது நூற்றாண்டு விழாவில் 1987–ல் Bruce Bernot போன்ற உலகளாவிய அறிவியல் விஞ்ஞானிகள் கும்பகோணத்திற்கு வருகை தந்து, இவரது கணிதக் கண்டுபிடிப்புகளை வியந்து பாராட்டினார்கள். எனவே, உலகம் போற்றும் கணித அறிவியலின் சிற்பியாக விளங்கும் திரு. இராமானுஜம் அவர்களுடைய பிறந்த நாளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அரசு விழாவாக அறிவித்து கொண்டாடும் நிலையை உருவாக்கிட வேண்டுமென்று குடந்தைத் தொகுதியின் மண்ணின் மைந்தர் என்ற முறையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்து தருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கணித மேதை திரு. இராமானுஜம் அவர்களின் பிறந்த நாளை அரசு விழாவாகக் கொண்டாட வேண்டுமென்றும், அவரது பெருமைகளைப் பற்றியும், சிறப்புகளைப் பற்றியும், அவரது உயர்வுகளைப் பற்றியும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். நான் ஏற்கெனவே சொன்னதுபோல், தமிழகத்தில் அளப்பரிய மக்கள் பணியாற்றிவரும், மக்களின் முதல்வராக விளங்குகின்ற இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை எடுத்துச் சென்று, அம்மா அவர்களின்

[2014 டிசம்பர் 5

வழிகாட்டுதலின்படி நடக்கின்ற இந்த அரசு கனிவோடு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 28, மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

**28—**

**வனச் சாலை**

***37735—திரு. தங்க. தமிழ்ச்செல்வன்:**

*மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஆண்டிப்பட்டி தொகுதி, சுருளியாறு மின் நிலையத்திலிருந்து மகராஜமெட்டுக்குப் புதிய தார்ச் சாலை அமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், வனத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மக்களால் நான், மக்களுக்காக நான்' என்ற சிந்தனையோடு தமிழகத்திற்கே வழிகாட்டியாகத் திகழ்ந்து கொண்டிருக்கும் இதய தெய்வம் மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களைப் பணிந்து வணங்குகிறேன்.

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டிப்பட்டி தொகுதி, சுருளியாறு மின் நிலையத்திலிருந்து மகராஜமெட்டுக்குப் புதிய தார்ச் சாலை அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன் அவர்கள்.



2014 டிசம்பர் 5]

*முற்பகல் 11–20*

**திரு. தங்க. தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முல்லைப் பெரியாறு அணையை மீட்டெடுத்த மகாசக்தி; பென்னி குயிக்கின் மறுபிறப்பு; அன்பு, அறிவு, துணிவு இம்மூன்றையும் ஒருங்கே பெற்ற தன்னிகரில்லாத் தலைவி; (மேசையைத் தட்டும் ஒலி) ஏழைகளின் இதயங்களில் குடியிருக்கும் காவல் தெய்வம்; கனிவும், கம்பீரமும் இரண்டறக் கலந்த காவியத் தாய்; உலகமே வியக்கும் மக்களின் முதல்வர்; நம் இயக்கத்தின் உயிர் மூச்சு; மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசைநோக்கி வணங்குகிறேன்.

இன்று கார்த்திகை தீபத் திருவிழா. ஆனால், தென் மாவட்ட விவசாயப் பெருங்குடி மக்களுக்கோ நவம்பர் 21 ஆம் தேதியே தீபப் பெருவிழா; ஆம்! மாண்புமிகு அம்மா அவர்களின் இலட்சியங்களில் ஒன்றான, 36 ஆண்டுகளுக்குப் பிறகு முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டம் 142 அடியை எட்டிய நாள். இந்தப் பெருமை உத்தமத் தாய் எங்கள் அம்மா அவர்களை மட்டுமே சாரும். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டிப்பட்டி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட Highwavys Estate பகுதி, சுவிட்சர்லாந்து நாட்டிற்கு இணையான ஒரு சுற்றுலாத் தலம். தமிழ்நாட்டில் தென் மாவட்டங்களில் மிகப் பிரசித்தி பெற்ற இடம் அந்த Highwavys Estate பகுதி. அங்கே ஏழு எஸ்டேட்டுகள் இருக்கின்றன. அங்கே செல்வதற்கு உள்ள சாலையில், 52 கிலோ மீட்டர் தூரமுள்ள தார் சாலை மிகவும் மோசமான நிலையில் இருக்கிறது. நமது மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களிடம் அந்தச் சாலையை சீர்செய்து தர வேண்டுமென்று கோரிக்கை வைத்தபோது, 'செய்து தருகிறேன்' என்றும் சொல்லியிருக்கிறார்கள்.

அதே சமயம் சுருளியாறு மின் நிலையத்திலிருந்து மகராஜமெட்டு என்ற அந்த ஹைவேவிஸ் பகுதிக்கு 12 கிலோ மீட்டர் தொலைவிற்குத் தார் சாலை அமைக்க வாய்ப்புகள் இருக்கின்றன. அது வனப் பகுதிதான், நான் ஒத்துக்கொள்கிறேன். கேரளா முழுவதும் வனப் பகுதியிலேதான் இருக்கிறது. கேரளாவில் சுற்றுலாத் துறையின்மூலம் ஆண்டு வருமானமாக 380 கோடி ரூபாய் அளவிற்குச் சம்பாதிக்கிறார்கள். ஆனால், தமிழ்நாட்டில் மட்டும் வனப் பகுதிகளுக்குள் சாலைகள்

[2014 டிசம்பர் 5

அமைப்பதில், மற்ற அமைப்புகளை ஏற்படுத்துவதில் சிக்கல் இருப்பதாக மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் சொல்கிறார். மத்திய அரசிடம் முறையாக அணுகி, நமது தமிழ்நாட்டில் இருக்கிற வனப் பகுதிகளில் சுற்றுலாத் தலங்களை அமைத்தால், அரசுக்கு இன்னும் வருவாய் கூடும்; அந்த ஏழு எஸ்டேட் பகுதி மக்களும் பயன்பெறுவார்கள்; விவசாயமும் செழிக்கும் என்பதைக் கருத்தில்கொண்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு, ஆய்வுக்கு எடுத்து, அந்தச் சாலையைச் சீரமைக்க வேண்டுமெனப் பணிவன்போடு தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேனி மாவட்டம், மேகமலை வன உயிரினக் கோட்டம், கூடலூர் வனச் சரகத்திலுள்ள வண்ணாத்திப் பாறை காப்புக் காட்டில், சுருளியாறு மின் நிலையத்திலிருந்து மகராஜமெட்டுக்கு 15 கிலோ மீட்டர் தூர சாலை, 1975–ல் மின்சார வாரியத்தின் மூலமாகப் போடப்பட்டுள்ளது. இத்தார்ச் சாலையில் முதல் 7.5 கிலோ மீட்டருக்குப் பிறகு பெரும் செங்குத்தான பாறை குறுக்கே வருவதால், சுமார் 600 மீட்டர் தூரம் வின்ச் இயக்கப்படுகிறது. அதன் பின்னர், 6.8 கிலோ மீட்டர் தார்ச் சாலையாகவும் உள்ளது. இதில் சுமார் 40 மீட்டர் தூரம், மகராஜமெட்டு பகுதியிலுள்ள Highwavys காப்பு நிலத்தில் வருகிறது. இந்த வனப் பகுதிக்குள் சாலை அமைக்க, பராமரிக்கக் கோரி பயனீட்டார் துறையிடமிருந்து இதுவரை எந்தவிதமான பிரேரணையும் பெறப்படவில்லை. எனவே, உரிய பயனீட்டார் துறையிடமிருந்து பிரேரணை பெறப்படும்பட்சத்தில், வனப் பாதுகாப்புச் சட்டம், 1980–ன்கீழ் ஆய்வு செய்து, தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன் அவர்கள்.

**திரு. தங்க. தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்கு இதை எடுத்துச் சென்றால்,



2014 டிசம்பர் 5]

நிச்சயமாக இந்தச் சாலையைப் போடுவதற்கு அனுமதி கிடைக்கும். நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொன்ன மாண்புமிகு அமைச்சருக்கு நன்றியைக் கூறி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 29, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

**29—**

## சுற்றுச்சூழல் பாதிப்பு

***44344—முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:**

மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம், திருப்புல்லாணி ஒன்றியம், கோரைக்கூட்டம், மேலப்புதுக்குடி, கீழ்புதுக்குடி, பிச்சாவலசை ஆகிய பகுதிகளில் நிலத்தடி நீரைப் பாதிக்கும் தனியார் இறால் பண்ணைகளைத் தடை செய்ய அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களின் முதல்வர் இதய தெய்வம், முல்லைப் பெரியாறை வென்று தமிழக விவசாயிகளின் காவல் தெய்வமாக வாழ்ந்து வருகிற கழகத்தின் நிரந்தரப் பொதுச் செயலாளர், இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய புனித பாதங்களை வணங்குகிறேன்.

இராமநாதபுரம் மாவட்டம், திருப்புல்லாணி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கோரைக்கூட்டம், சின்னக்கோவில், மேலப்புதுக்குடி, கீழ்புதுக்குடி, பிச்சாவலசை மற்றும் சேதுக்கரை கிராமங்களிலே செயல்படுகிற சிறிய அளவிலான இறால் பண்ணைகள் அரசுத் துறை அனுமதியில்லாமல் அவ்வப்போது இயங்கி வருகின்றன. எனவே, மாவட்ட ஆட்சித் தலைவரின் தலைமையிலே, உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் வருவாய்த் துறையின் மூலமாக, இப்படிப்பட்ட இறால் பண்ணைகளை ஒழுங்குபடுத்த, மக்களின் முதல்வர் இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலோடு செயல்படுகிற மாசுக் கட்டுப்பாடு வாரியம் அறிவுறுத்தியுள்ளது

[2014 டிசம்பர் 5

என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

*முற்பகல் 11–25*

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்தை பொதுவாக வானம் பார்த்த பூமி என்று சொன்னாலும்கூட, திருப்புல்லாணி ஒன்றியம் நல்ல பசுமையான பகுதி. அங்கே நெல் மட்டுமல்லாமல், மா, தென்னை, மல்லிகை, மிளகாய் செடிகளையெல்லாம் விவசாயம் செய்யக்கூடிய ஒரு சிறந்த பூமி. அதில் நான் கேள்வியில் குறிப்பிட்டிருக்கக்கூடிய பகுதிகளில், சேதுக்கரை ஊராட்சிக்குட்பட்ட அந்தப் பகுதியில் ஏராளமான இறால் பண்ணைகள் உருவாக்கப்பட்டு, அதன் காரணமாக மொத்தமாகவே குடிநீர் குடிப்பதற்குத் தகுதியில்லாத ஒரு சூழல் ஏற்பட்டுள்ளதோடு மட்டுமல்லாமல், விவசாயமும் மிகப் பெரிய அளவிலே பாதிக்கப்பட்டிருக்கிறது.

உத்திரகோசமங்கை ஆறு நல்ல சுவையான குடிநீரை அளித்துக் கொண்டிருந்தது. அந்த ஆறும் பாழ்பட்டிருக்கக்கூடிய ஒரு சூழலைப் பார்க்கிறோம். இந்த இறால் பண்ணைகளிலிருந்து வெளிவரக்கூடிய கழிவுநீரில் ஒரு குறிப்பிட்ட திரவம் கலந்திருப்பதன் காரணமாக மொத்தமாக சுற்றுச்சூழலுக்கு மிகப் பெரிய பாதிப்பு அங்கு ஏற்பட்டிருக்கிறது. இராமநாதபுரம் மாவட்டத்தில் மொத்தமாக 74 இறால் பண்ணைகள்தான் அனுமதிக்கப்பட்டவையாகும். ஆனால், 300 இறால் பண்ணைகள் சட்ட விரோதமாக இயங்கிக் கொண்டிருக்கக்கூடிய ஒரு சூழலைப் பார்க்கிறோம். எனவே, இதைத் தடுத்து நிறுத்துவதற்கு அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இதுகுறித்து நான் ஏற்கெனவே மாவட்ட ஆட்சித் தலைவரின் கவனத்திற்கு எடுத்துச் சென்றும்கூட இதுவரை அந்த இறால் பண்ணைகள் அங்கே இயங்கிக் கொண்டிருக்கக்கூடிய சூழல்தான் இருந்துகொண்டிருக்கிறது. அவற்றை உடனடியாக இழுத்து மூடுவதற்கும், பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்குவதற்கும் இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.



2014 டிசம்பர் 5]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு என்.டி. வெங்கடாச்சலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட பகுதியில் ஏறத்தாழ 50 முதல் 60 இறால் பண்ணைகள் அமைந்திருக்கின்றன. இவை பெரும்பாலும் உப்பளம் குழிகளுக்கு அருகில் அமைந்திருக்கின்றன. இவை குடியிருப்புப் பகுதிகளிலிருந்து ½ கி.மீ. முதல் 1½ கி.மீ. தொலைவில் அமைந்திருக்கின்றன. இறால் பண்ணைகள் வளர்ப்பிற்கு உப்பளங்குழிகளிலிருந்து கடல் நீரை எடுத்துக்கொண்டு, கழிவு நீரை அதே உப்பளங்குழிகளிலேயே அவர்கள் வெளியேற்றி வருகின்றனர். இதனை ஒழுங்குபடுத்துகின்றவகையில், கடந்த ஜனவரி 2014–ல் மீன் வளத் துறை, விவசாயத் துறை, வருவாய் துறை மற்றும் மாசு கட்டுப்பாடு வாரியம்மூலம் மேற்படி கிராமங்களிலுள்ள இறால் பண்ணைகள் ஆய்வு செய்யப்பட்டன.

அதன் அடிப்படையிலே இறால் பண்ணைகள் கடல்சார் உயிரின வளர்ப்பு ஆணையத்தின் அனுமதி பெற விண்ணப்பிக்க வேண்டும் என மீன் வளத் துறையின் மூலமாக அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. இறால் பண்ணைகளிலிருந்து வெளியேற்றப்படுகின்ற கழிவுநீர் Chlorination மூலமாகவே வெளியேற்றப்பட வேண்டுமென்ற நிபந்தனை விதிக்கப்பட்டு, மத்திய அரசின்கீழ் உள்ள கடல்சார் உயிரின வளர்ப்பு ஆணையம்மூலம் இறால் பண்ணைகளுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. இவ்வாறு இறால் பண்ணைகள் ஒழுங்குபடுத்தப்பட்டு, கண்காணிக்கப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1996 ஆம் ஆண்டில் உச்ச நீதிமன்றம் இறால் பண்ணைகள் எப்படி இயங்க வேண்டும் என்பதற்கான விதிமுறைகளை மிகத் தெளிவாக வகுத்திருக்கின்றது. ஆனாலும்கூட, அந்த விதிமுறைகளை மீறக்கூடிய வகையிலே இராமநாதபுரம் மாவட்டத்தில் மட்டுமல்லாமல், தமிழ்நாட்டில் கடற்கரையோரமாக

[2014 டிசம்பர் 5

புறம்போக்கு நிலங்களில், கடலோர நிலங்களில், நீர் வள ஆதாரங்களில், கடலின் முன் பகுதிகளில் இதேபோன்று ஏராளமான இறால் பண்ணைகள் இயங்கி வருகின்றன. அரசாங்கத்தின் புறம்போக்கு நிலங்களிலும்கூட இறால் பண்ணைகள் செயல்படக்கூடிய ஒரு சூழலைப் பார்க்கின்றோம். எனவே, மொத்தமாக தமிழகத்தின் கடற்கரையோரங்களில், அரசு நிலங்களில் மற்றும் உப்பளங்களில்கூட அனுமதி இல்லாமல் இயங்கக்கூடிய இறால் பண்ணைகள் குறித்து ஒரு முழுமையான ஆய்வு செய்து, இந்த இறால் பண்ணைகளிலிருந்து சுற்றுச்சூழலை முற்றிலுமாகப் பாதுகாப்பதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்று வினவ விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு என்.டி. வெங்கடாச்சலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இறால் பண்ணைகளைப் பொறுத்தவரையில், இறால் பண்ணைகளை ஒழுங்குபடுத்தக்கூடிய அதிகாரம் மத்திய அரசாங்கத்தின் Coastal Aquaculture Authority என்று சொல்லக்கூடிய மத்திய கடல்சார் உயிரின ஆணையத்திற்கு மட்டுமே இருக்கிறது. அந்த ஆணையத்தின் விதிகளின் அடிப்படையில், 5 எக்டேருக்கு மேல் இருக்கக்கூடிய இறால் பண்ணைகளுக்கு மட்டும் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க வேண்டுமென்று மத்திய அரசின் கடல்சார் உயிரின ஆணையம் அறிவுறுத்தியிருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லக்கூடிய, 5 எக்டேருக்குக் குறைவான நிலப்பரப்பில் இருக்கக்கூடிய, அனுமதி பெறாமல் இயங்கக்கூடிய இறால் பண்ணைகள் மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக அறிவுறுத்தப்பட்டு, வருவாய்த் துறை மூலமாகவும், அந்தப் பகுதிகளில் இருக்கக்கூடிய உள்ளாட்சி அமைப்புகள் மூலமாகவும் ஒழுங்குபடுத்தக்கூடிய நடவடிக்கைகளை இன்றைக்கு மாசு கட்டுப்பாடு வாரியம் எடுத்து வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டு எந்தப் பகுதியில் மாசுபடுத்தக்கூடிய அப்படிப்பட்ட அமைப்புகள் இருக்கின்றன என்று தெரிவிப்பாரேயானால், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2014 டிசம்பர் 5]

முற்பகல் 11–30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 30, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சுந்தர்ராஜன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**30—**

### ஸ்கேன் வசதி

***3476—திரு. ஆர். சுந்தர்ராஜன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டிலுள்ள அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் ஸ்கேன் வசதி ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்களின் முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பணிவோடு வணங்குகிறேன்.

தமிழ்நாட்டில் உள்ள 1,751 ஆரம்ப சுகாதார நிலையங்களில் 1,290 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு ஸ்கேன் பிரிவுகள் அமைக்கப்பட்டு, அவை நல்ல முறையில் செயல்பட்டு வருகின்றன. அதுபோக மீதமுள்ள 328 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குப் போதிய நிதி ஒதுக்கப்பட்டு, ஸ்கேன் பிரிவுகளை அமைப்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், இந்த ஆண்டு புதிதாகத் துவங்கப்பட்ட புதிய ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் ஸ்கேன் பிரிவுகள் அமைப்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சுந்தர்ராஜன் அவர்கள்.

**திரு. ஆர். சுந்தர்ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூன்றாண்டு அரசாட்சி, முத்தான நல்லாட்சி, மக்கள் முதல்வரின் ஆலோசனையின்படி நல்லாட்சி நடத்தி வரும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு வணக்கம்.

[2014 டிசம்பர் 5

முல்லைப்பெரியாறு பிரச்சினை, காவேரி பிரச்சினை, தமிழக மீனவர்கள் பிரச்சினை என எல்லாத் துறைகளிலும் துரித நடவடிக்கை எடுத்துவரும், தமிழக மக்களின் ஏகோபித்த பாராட்டுகளையும், அபிமானத்தையும் பெற்று நல்லாட்சி நடத்துகின்ற தமிழக அரசைப் பாராட்டுகின்றேன்.

அனைத்து அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் ஸ்கேன் வசதி ஏற்படுத்தி தர அரசு ஆவன செய்ய வேண்டும். செவிலியர்கள், மருந்தாளுநர்கள் போன்ற பணியாட்கள் பற்றாக்குறை உள்ளது. துரிதமாக அந்தப் பணியாட்களை நியமிக்க அரசு ஏற்பாடு செய்ய வேண்டும்.

அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணியாற்றும் மருத்துவர்கள் deputation முறையில் இரண்டு, மூன்று இடங்களில் மருத்துவர்களாகப் பணிபுரிகின்றார்கள். எனவே, போதிய மருத்துவர்களை நியமிக்க அரசு முன்வரவேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

மதுரை காவலர் மருத்துவமனையில் மருத்துவர்கள் பற்றாக்குறை உள்ளது. இவற்றில் எக்ஸ்-ரே, இ.சி.ஜி. வசதிகளை உடனடியாக மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்து தர வேண்டும்.

மதுரை மத்திய தொகுதியிலுள்ள சுந்தரராஜபுரம், ஞாயிற்றுக்கிழமை சந்தை பகுதிகளிலுள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களின் கட்டடங்கள் மிகவும் பழுதடைந்து இருப்பதால், அதனை ஆய்வு செய்து, புதிதாக நவீன வசதிகளுடன்கூடிய கட்டடங்களைக் கட்டித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். இன்றும், எப்போதும், என்றென்றும் தமிழக அரசின் ஆட்சியில் மக்கள் மிகுந்த பயன்களையும், மன நிறைவையும் பெற்று வாழும் நிலை உள்ளதால், தமிழக அரசையும் மக்களின் முதல்வர் வழிகாட்டும் ஆலோசனையின்படி நல்லாட்சி நடத்தி வரும் தமிழக முதல்வர் அவர்களையும் பாராட்டி, எனது வணக்கத்தைத் தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.



2014 டிசம்பர் 5]

# வினாக்கள்—விடைகள்

## (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்

## (பட்டியல்கள் 10 முதல் 13 வரை) @

## பட்டியல்—10

**1—**

### துணை மின் நிலையம் அமைத்தல்

**வினா எண் 16061—திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காற்றாலை மின் வெளியேற்று கட்டமைப்பு திட்டத்தின்கீழ் சமூகரங்காபுரம், ஆணைக்கடவு, பெரியப்பட்டி, தப்பகுண்டு, ராசிபாளையம், கயத்தார், காணார்பட்டி, துலுக்கப்பட்டி ஆகிய இடங்களில் துணை மின் நிலையங்கள் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆம். கயத்தார், காணார்பட்டி, தப்பகுண்டு, ஆணைக்கடவு, ராசிப்பாளையம் ஆகிய இடங்களில் உற்பத்தியாகும் காற்றாலை மின்சாரத்தை வெளியேற்ற மேற்கண்ட இடங்களில் 400 கி.வோ. துணை மின் நிலையம் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**2—**

### மின் விளக்குகள் அமைத்தல்

**வினா எண் 30609—திரு. ர.ம. பாபு முருகவேல்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

@ இப்பட்டியல்களில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.

[2014 டிசம்பர் 5

*(அ) ஆரணி தொகுதி, மேற்கு ஆரணி ஒன்றியம், அய்யம்பாளையம் ஆதி திராவிடர் புதிய காலனி 1, 2-வது தெரு, அருந்ததியர் 2-வது தெரு மற்றும் மண்டபம் 3-வது தெருவில் புதிய மின் கம்பத்துடன்கூடிய மின் விளக்குகள் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஆரணி தொகுதி, மேற்கு ஆரணி ஒன்றியம், அய்யம்பாளையம் ஆதி திராவிடர் புதிய காலனி 1, 2-ல் 3 குழல் விளக்குகள் மற்றும் 3 கையடக்க குழல் விளக்குகளும், அருந்ததியர் 2வது தெருவில் 2 கையடக்க குழல் விளக்குகளும் பயன்பாட்டில் உள்ளன. மேலும், மண்டபம் 3-வது தெருவில் மூன்று தெரு விளக்குகள் கோரி விண்ணப்பம் பெறப்பட்டு, மதிப்பீட்டுத் தொகை ரூ.35,635 பெறப்பட்டு, பணிகள் முடிக்கப்பட்டு, 29-6-2013 அன்று மின் விளக்குகள் அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.*

**3—**

## மின் விளக்குகள் அமைத்தல்

**வினா எண் 31245—திரு. ர.ம. பாபு முருகவேல்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஆரணி தொகுதி, மேற்கு ஆரணி ஒன்றியம், ஆகாரம் பஜனை கோயில் தெரு, மாதாகோயில் தெரு, மாடதெரு, களத்துமேட்டுத் தெரு, அன்னை சத்தியா நகர் 3-வது தெரு ஆகிய தெருக்களில் புதிய மின்கம்பங்களுடன் கூடிய மின் விளக்குகள் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஆரணி தொகுதி, மேற்கு ஆரணி ஒன்றியம், ஆகாரம் பஜனை கோயில் தெரு, மாதாகோயில் தெரு, மாடதெரு, களத்துமேட்டுத் தெரு, அன்னை சத்தியா நகர் 3-வது தெரு ஆகிய தெருக்களில் 13 கையடக்க குழல் விளக்குகள் பயன்பாட்டில் இருந்து வருகின்றன. மாட தெருவில் கூடுதலாக இரண்டு தெரு விளக்கு கோரி பெறப்பட்ட விண்ணப்பத்திற்கு, பணிகள் முடிக்கப்பட்டு, 4-5-2013 அன்று மின் விளக்குகள் அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.*



2014 டிசம்பர் 5]

**4—**

## தெரு விளக்குகள் அமைத்தல்

**வினா எண் 32092—திரு. ர.ம. பாபு முருகவேல்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஆரணி தொகுதி, ஆரணி ஒன்றியம், அரியப்பாடி ஊராட்சி, பெரியார் நகர், வேலூர் ரோட்டில் சோமந்தாங்கல் கிழக்கு தெரு, தாங்கல் குறுக்குத் தெருவில் மின் கம்பத்துடன் கூடிய தெரு விளக்குகள் அமைத்துத் தர அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஆரணி தொகுதி, ஆரணி ஒன்றியம், அரியப்பாடி ஊராட்சி, பெரியார் நகர், வேலூர் ரோட்டில் சோமந்தாங்கல் கிழக்கு தெரு, தாங்கல் குறுக்குத் தெரு பகுதிகளில் 22 குழல் விளக்குகள் அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.*

*மேற்படி பகுதிகளில் கூடுதல் தெருவிளக்குகள் அமைக்க விண்ணப்பம் மற்றும் மதிப்பீட்டுத் தொகை செலுத்தப்பட்டால் தெரு விளக்குகள் அமைக்க உடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

**5—**

## மின் கம்பத்தை மாற்றியமைத்தல்

**வினா எண் 32693—திரு. கார்த்திக் தொண்டைமான்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[2014 டிசம்பர் 5

*புதுக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட அசோக் நகர் வார்டு எண் 41 விரிவாக்கம், பொன் நகர் மின்மாற்றி எதிரில் மைய சாலையிலுள்ள மின் கம்பத்தை மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*புதுக்கோட்டை நகராட்சிக்கு உட்பட்ட அசோக் நகர் வார்டு எண் 41 விரிவாக்கம், பொன் நகர் மின்மாற்றி எதிரில் உள்ள சாலை நகராட்சிக்குச் சொந்தமானது. பொன் நகர் விரிவாக்கத்தினால் மின் கம்பம் ஒன்று சாலையின் மையமாக அமைந்திருந்தது. மேற்படி மின் கம்பம் பொதுமக்களுக்கு இடையூறாக இருந்தது கண்டறியப்பட்டு 26-7-2013 அன்று இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.*

**6—**

**மின் கம்பங்களை மாற்றியமைத்தல்**

**வினா எண் 33938—திரு. சோழன் சித. பழனிச்சாமி:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டை ஒன்றியம், சக்கந்தி ஊராட்சி, வடக்கு சக்கந்தி காலனி, இரண்டு ஊரணிகளுக்கிடையிலும் மற்றும் மனுவேல் நன்செய்வரப்பிலும் பழுதடைந்த மின் கம்பங்களை மாற்றியமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டை ஒன்றியம், சக்கந்தி ஊராட்சி, வடக்கு சக்கந்தி காலனி, இரண்டு ஊரணிகளுக்கிடையிலும் மற்றும் மனுவேல் நன்செய்வரப்பிலும் 4 பழுதடைந்த மின் கம்பங்கள் 8-1-2014 அன்று புதிய மின் கம்பங்களாக மாற்றியமைக்கப்பட்டுவிட்டன.*



2014 டிசம்பர் 5]

**7—**

**மின் விளக்குகள் அமைத்தல்**

**வினா எண் 33973—திரு. ர.ம. பாபு முருகவேல்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஆரணி தொகுதி, ஆரணி ஒன்றியம், ராட்டிணமங்கலம் ஜோயிகுடிசை சாலை தெரு, இ.பி. நகர், பி.என்.எம்.என். எதிர் தெரு, குறுக்குத் தெரு, ராட்டிணமங்கலம் காலனி இரண்டாவது மற்றும் மூன்றாவது தெருக்களில் கம்பத்துடன் கூடிய மின் விளக்குகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஆரணி தொகுதி, ஆரணி ஒன்றியம், ராட்டிணமங்கலம் ஜோயிகுடிசை சாலை தெருவில், ஏற்கெனவே 5 கையடக்க குழல் விளக்கு, இ.பி. நகர், பி.என்.எம்.என். எதிர் தெருவில் 5 குழல் விளக்குகளும், குறுக்குத் தெருவில் ஒரு சோடியம் விளக்கும், 5 குழல் விளக்குகளும், ராட்டிணமங்கலம் காலனி இரண்டாவது தெருவில் 16 குழல் விளக்குகளும் மற்றும் மூன்றாவது தெருவில் 23 குழல் விளக்குகளும் அமைக்கப்பட்டு பயன்பாட்டில் இருந்து வருகிறது. மேற்படி பகுதிகளில் கூடுதல் தெரு விளக்குகள் அமைக்க விண்ணப்பம் மற்றும் மதிப்பீட்டுத் தொகை செலுத்தப்பட்டால் தெரு விளக்குகள் அமைக்க உடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

[2014 டிசம்பர் 5

**8—**

## கூடுதல் மின்மாற்றி அமைத்தல்

**வினா எண் 34454—முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் ஒன்றியம், வாலாந்தரவை ஊராட்சி முஸ்லிம் தெருவில் கூடுதல் மின்மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் ஒன்றியம், வாலாந்தரவை ஊராட்சி முஸ்லிம் தெருவில் சற்று தொலைவில் உள்ள வாலாந்தரவை SSI மின்மாற்றியிலிருந்து மின் விநியோகம் செய்யப்பட்டு வந்ததை மாற்றி தற்போது மேற்படி பகுதியின் அருகில் அமைந்துள்ள வாலாந்தரவை SS II 100 KVA/22 KV மின்மாற்றியிலிருந்து மின் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும் முஸ்லிம் தெரு பகுதியின் வடக்குத் தெருவில் உள்ள ஒருமுனை மின்பாதை மும்முனை மின்பாதையாக 5-10-2013 அன்று மாற்றப்பட்டது. எனவே மேற்கூறிய இடத்திற்கு தற்போது கூடுதல் மின்மாற்றி அமைக்க தேவை எழவில்லை.

**9—**

## மின் மாற்றியை மாற்றியமைத்தல்

**வினா எண் 34458—முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் ஒன்றியம், மரைக்காயர்பட்டிணம் ஊராட்சியிலுள்ள கேந்திரிய வித்யாலயா பள்ளிக்கு அருகில் உள்ள மின்மாற்றியை வேறு இடத்திற்கு மாற்றியமைக்க அரசு ஆவன செய்யுமா?*



2014 டிசம்பர் 5]

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

மண்டபம் ஒன்றியம், மரைக்காயர்பட்டிணம் கேந்திரிய வித்யாலயா பள்ளி அருகில் மின்மாற்றி (Distribution Transformer) எதுவும் இல்லை. பள்ளி அருகில் 15 மீ. தூரத்தில் நான்கு முனை காற்று திறப்பான் (4 Pole Structure) உள்ளது. காற்று திறப்பானால் இப்பள்ளிக்கு பாதிப்பில்லை. எனினும், மேற்படி நான்கு முனை காற்று திறப்பானை மாற்றி அமைக்கக் கோரி விண்ணப்பத்துடன் மதிப்பீட்டுத் தொகையை கட்டுவதாக ஒப்புதல் கடிதமும் பெறப்பட்டு அதன் பேரில் மதிப்பீட்டுத் தொகையை செலுத்தும் பட்சத்தில் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

**10—**

## மின் கம்பத்தை மாற்றியமைத்தல்

**வினா எண் 34799—திரு. சோழன் சித. பழனிச்சாமி:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டை ஒன்றியம், திருமணவயல் ஊராட்சி, திருமணவயல் பூமயில் வீடு அருகில், மாரியம்மன் கோயில் எதிரில், கீழவயல் மாரியம்மன் கோயில் எதிரில் மற்றும் உடையார் குடியிருப்பு சின்டெக்ஸ் அருகிலும் பழுதடைந்த மின் கம்பத்தை மாற்றியமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டை ஒன்றியம், திருமணவயல் ஊராட்சி, திருமணவயல் பூமயில் வீடு அருகில், மாரியம்மன் கோயில் எதிரில் மற்றும் உடையார் குடியிருப்பு சின்டெக்ஸ் அருகிலும் பழுதடைந்த 3 எண்ணம் மின் கம்பங்கள் 21-7-2013 அன்று மாற்றப்பட்டுவிட்டன. மேலும் கீழவயல், மாரியம்மன் கோயில் எதிரில் பழுதான மின் கம்பம் 19-3-2014 அன்று புதிய மின் கம்பம் கொண்டு மாற்றியமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

[2014 டிசம்பர் 5

**11—**

## தெரு விளக்குகள் அமைத்தல்

**வினா எண் 34811—திரு. சோழன் சித. பழனிச்சாமி:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டை ஒன்றியம், தானாவயல் ஊராட்சி, தானாவயல் ஜேம்ஸ் வீடு அருகில், சொக்கலிங்கம் வீடு பின்புறம், சுப்பையா வீடு அருகில் மற்றும் வேட்டைக்காரன்பட்டி ரவி மாரிமுத்து வீடு அருகிலும் புதிய மின்கம்பத்துடன் கூடிய தெரு விளக்குகள் அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டை ஒன்றியம், தானாவயல் ஊராட்சி, தானாவயல் ஜேம்ஸ் வீடு அருகில், சொக்கலிங்கம் வீடு பின்புறம், சுப்பையா வீடு அருகில் மற்றும் வேட்டைக்காரன்பட்டி ரவி மாரிமுத்து வீடு அருகிலும் புதிய மின் கம்பத்துடன் கூடிய தெரு விளக்குகள் அமைக்க கோரி ஊராட்சியிலிருந்து விண்ணப்பம் எதுவும் பெறப்படவில்லை.

விண்ணப்பம் பெறப்பட்டால் தெரு விளக்குகள் அமைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

**12—**

## தெரு விளக்குகள் அமைத்தல்

**வினா எண் 34815—திரு. சோழன் சித. பழனிச்சாமி:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டை ஒன்றியம், செலுகை ஊராட்சி, தருதனூர் அங்கன்வாடி முதல் சிவனூர் கோயில் வரையிலும், செலுகை என்.எச். 210 முதல் முனீஸ்வரன் கோயில் வரையிலும், சிவனூர் வேளார் வீடு அருகிலும், மருதனேந்தல் ஆதி திராவிடர் காலனி குடியிருப்பிலும், செலுகை பள்ளி பின்புறம் ஆகிய பகுதிகளில் புதிய மின் கம்பத்துடன் கூடிய தெரு விளக்குகள் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டை ஒன்றியம், செலுகை ஊராட்சி, தருதனூர் அங்கன்வாடி முதல் சிவனூர் கோயில் வரையிலும், செலுகை என்.எச். 210 முதல் முனீஸ்வரன் கோயில் வரையிலும், சிவனூர் வேளார் வீடு அருகிலும், மருதனேந்தல் ஆதி திராவிடர் குடியிருப்பிலும், செலுகை பள்ளி பின்புறம் ஆகிய பகுதிகளுக்கு 2013-2014 தாய் திட்டத்தில் 20 எண்ணிக்கை புதிய தெரு விளக்குகள் அமைப்பதற்கு விண்ணப்பம் பெறப்பட்டு, மதிப்பீட்டுத் தொகை செலுத்தப்பட்டு, அதற்கான பணிகள் 10-1-2014 அன்று முடிக்கப்பட்டு, புதிய தெரு விளக்குகள் அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

**13—**

## தெரு விளக்குகள் அமைத்தல்

**வினா எண் 35049—திரு. சோழன் சித. பழனிச்சாமி:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டை ஒன்றியம், பனங்குளம் ஊராட்சி, வாரியன்வயல் வேதம் வீடு அருகில் கார்மாங்குடி ஜெகன்னாதன் வீடு அருகில் மற்றும் மேலமொன்னி தென்னரசு வீடு அருகிலும் புதிய மின் கம்பத்துடன்கூடிய தெரு விளக்குகள் அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டை ஒன்றியம், பனங்குளம் ஊராட்சி, வாரியன்வயல் வேதம் வீடு அருகில் கார்மாங்குடி ஜெகன்னாதன் வீடு அருகில் மற்றும் மேலமொன்னி தென்னராசு வீடு அருகிலும் புதிய மின்கம்பத்துடன்கூடிய தெரு விளக்குகள் அமைக்க கோரி ஊராட்சியிலிருந்து விண்ணப்பம் எதுவும் பெறப்படவில்லை.*

*விண்ணப்பம் பெறப்பட்டால் தெரு விளக்குகள் அமைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.*

**14—**

### மின்மாற்றியை மாற்றியமைத்தல்

**வினா எண் 36115—திருமதி ர. சுபா:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கெங்கவல்லி தொகுதி, சார்வாய் ஊராட்சியில், அரசு நடுநிலைப் பள்ளி அருகில் உள்ள மின்மாற்றியை மாற்றி அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) கெங்கவல்லி தொகுதி, சார்வாய் ஊராட்சியில் அரசு நடுநிலைப் பள்ளியில் இருந்து சுமார் 30 மீட்டர் தள்ளி நெடுஞ்சாலை ஓரமாக சார்வாய் மின்மாற்றி எண் 18 அமைந்துள்ளது. இதனால் பள்ளியைச் சார்ந்தவர்களுக்கோ அல்லது பொது மக்களுக்கோ எந்தவித இடையூறும் ஏற்பட வாய்ப்பு இல்லை. எனவே மேற்படி மின்மாற்றியை மாற்றியமைக்க தேவையில்லை என்றாலும், தலைவர் சார்வாய் ஊராட்சி அவர்களிடமிருந்து மேற்படி மின்மாற்றியை மாற்றி அமைக்க கோரி*





*விண்ணப்பத்துடன் மதிப்பீட்டுத் தொகையைக் கட்டுவதாக ஒப்புதல் கடிதமும் பெறப்பட்டு அதன் பேரில் மதிப்பீட்டுத் தொகையைச் செலுத்தும்பட்சத்தில் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.*

**15—**

### சோடியம் விளக்குகள் அமைத்தல்

**வினா எண் 36116—திரு. சோழன் சித. பழனிச்சாமி:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) காரைக்குடி தொகுதி, கல்லல் ஒன்றியம், கல்லுப்பட்டி ஊராட்சியில் புதிய கம்பத்துடன் 10 சோடியம் விளக்குகள் அமைத்துத் தர அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) காரைக்குடி தொகுதி, கல்லல் ஒன்றியம் கல்லுப்பட்டி ஊராட்சியில் புதிய கம்பத்துடன் 10 சோடியம் விளக்குகள் அமைக்க கோரி ஊராட்சியிலிருந்து விண்ணப்பம் எதுவும் பெறப்படவில்லை. விண்ணப்பம் பெறப்பட்டால் தெரு விளக்குகள் அமைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.*

**16—**

### தெரு விளக்குகள் அமைத்தல்

**வினா எண் 36117—திரு. சோழன் சித. பழனிச்சாமி:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) காரைக்குடி தொகுதி, கல்லல் ஒன்றியம், கல்லுப்பட்டி ஊராட்சியில் பேருந்து நிலையத்தின் அருகே புதியதாக மின் விளக்குகள் கம்பத்துடன் அமைத்துத் தர அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) காரைக்குடி தொகுதி, கல்லல் ஒன்றியம் கல்லுப்பட்டி ஊராட்சியில் பேருந்து நிலையத்தின் அருகே புதியதாக மின் விளக்குகள் அமைக்க கோரி ஊராட்சியிலிருந்து விண்ணப்பம் எதுவும் பெறப்படவில்லை. விண்ணப்பம் பெறப்பட்டால் தெரு விளக்குகள் அமைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.*

**17—**

## மின் வாரிய அலுவலகக் கட்டடம்

**வினா எண் 36122—திரு. பொன். ராஜா:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பொன்னேரி தொகுதி, சோழவரம் ஒன்றியம், ஆரணி பேரூராட்சி பகுதியில் புதிய மின் வாரிய அலுவலகக் கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) பொன்னேரி தொகுதி, சோழவரம் ஒன்றியம், ஆரணி பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்குச் சொந்தமான இடம்/கட்டடம் எதுவும் இல்லை. ஆதலால் புதிய மின் வாரிய அலுவலகம் கட்டும் திட்டம் எதுவும் தற்பொழுது இல்லை.*

**18—**

## ஆழ்துளைக் கிணறுகளுக்கு மின் இணைப்பு

**வினா எண் 36123—திரு. பொன். ராஜா:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*





*பொன்னேரி தொகுதி, அத்தமணஞ்சேரி ரெட்டிப்பாளையம் ஊராட்சி, ஆலாடு அணைக்கட்டு பகுதியிலுள்ள ஆழ்துளைக் கிணறுகளுக்கு பாலாஜி நகரிலுள்ள மின் இணைப்பினை நீட்டித்து மின் இணைப்பு ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*பொன்னேரி தொகுதி, அத்தமணஞ்சேரி, ரெட்டிப்பாளையம் ஊராட்சி, ஆலாடு அணைக்கட்டு பகுதியிலுள்ள ஆழ்துளைக் கிணறுகளுக்கு தற்பொழுது பொன்னேரி 33/11 கே.வி. துணை மின் நிலையத்திலிருந்து 11 கே.வி. ஆலாடு 11 கே.வி.* A.R. *பாளையம் மற்றும் 11 கே.வி. அரசூர் உயர் அழுத்த மின்பாதை வழியாக மின்னோட்டம் செய்யப்படுகிறது. இந்த மின்பாதைகள்* (R&C) *மின் கட்டுப்பாடு விதிகளுக்குட்பட்டது. பொன்னேரி பாலாஜி நகர் பகுதியானது பொன்னேரி 33/11 கே.வி. துணை மின் நிலையத்திலிருந்து 11 கே.வி.* Town feder *மூலமாக மின்னோட்டம் செய்யப்படுகிறது. மேற்கண்ட இடங்களில் உள்ள ஆழ்துளைக் கிணறுகளுக்கு 24 மணி நேர மின் இணைப்பு வழங்கும் பணிக்காக பங்கு வைப்புத்தொகை திட்டத்தின்மூலம்* (DCW) *புதிதாக உயர் மின் அழுத்த பாதை பாலாஜி நகர் வழியாக அமைக்கப்பட வேண்டும். மதிப்பீட்டு தொகையை செலுத்த உள்ளாட்சி அமைப்புகள் முன்வரும்பட்சத்தில் 11 கே.வி.* (Town) *பீடரை* (Feeder) *பாலாஜி நகர் வழியாக மேற்கூறிய ஆழ்துளைக் கிணறுகளுக்கு நீட்டித்துத்தர உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.*

**19—**

## மின் கம்பிகளை மாற்றியமைத்தல்

**வினா எண் 36206—திரு. மு. முருகன்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*முதுகுளத்தூர் தொகுதி, வாலிநோக்கம், கீழமுந்தல், மேலமுந்தல், மாரியூர், மூக்கையூர் ஆகிய பகுதிகளில் உள்ள மின் கம்பிகளை மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

[2014 டிசம்பர் 5

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*முதுகுளத்தூர் தொகுதி, வாலிநோக்கம், கீழமுந்தல், மேலமுந்தல், மாரியூர், மூக்கையூர் ஆகிய பகுதிகளில் உள்ள 13.817 கிலோ மீட்டர் நீளமுள்ள பழைய மின் கம்பிகள் புதிய அலுமினிய கம்பிகளாக மாற்றி அமைக்கப்பட்டு, மின்சாரம் சீராக வழங்கப்பட்டு வருகிறது.*

**20—**

**கிராமியப் பிரிவில் சேர்த்தல்**

**வினா எண் 36836—திரு. கார்த்திக் தொண்டைமான்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) புதுக்கோட்டை நகர் பிரிவிலுள்ள அண்டக்குளம் பிரிவு மின்சார வாரிய அலுவலகத்தை புதுக்கோட்டை கிராமிய பிரிவில் சேர்க்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை நகர் பிரிவிலுள்ள அண்டக்குளம் பிரிவு மின்சார வாரிய அலுவலகத்தை புதுக்கோட்டை கிராமிய பிரிவில் சேர்க்க தற்போது அனுமதி வழங்கப்பட்டுள்ளது.*

**21—**

**மின் கம்பங்களை மாற்றியமைத்தல்**

**வினா எண் 37077—திரு. சோழன் சி.த. பழனிச்சாமி:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*



2014 டிசம்பர் 5]

*(அ) காரைக்குடி தொகுதி, சாக்கோட்டை ஒன்றியம், செங்கத்தான் ஊராட்சியில் இடையூறாக உள்ள மின் கம்பங்களை மாற்றியமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) காரைக்குடி தொகுதி, சாக்கோட்டை ஒன்றியம், செங்கத்தான் ஊராட்சியில் இடையூறாக உள்ள மின் கம்பங்களை மாற்றியமைக்க, செங்கத்தான் ஊராட்சி மன்றத் தலைவரிடமிருந்து விண்ணப்பம் எதுவும் பெறப்படவில்லை. எனவே, விண்ணப்பம் பெறப்பட்டால், இடையூறாக உள்ள மின் கம்பங்களை மாற்றியமைக்க மதிப்பீடு தயார் செய்து விரைவில் மாற்றியமைக்கப்படும்.*

**22—**

**மின்மாற்றியை மாற்றியமைத்தல்**

**வினா எண் 37096—திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*கடலூர் மாவட்டம், பண்ருட்டி ஒன்றியம், ஏ.மேல்மாம்பட்டு மற்றும் மேலிருப்பு கிராமத்திலுள்ள மின்மாற்றியை வேறு இடத்திற்கு மாற்றியமைக்க அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*கடலூர் மாவட்டம், பண்ருட்டி ஒன்றியம், ஏ.மேல்மாம்பட்டு கிராமத்தில் உள்ள ஏ.மேல்மாம்பட்டு மின்மாற்றி 5, 100/22 கே.வி. மற்றும் மேலிருப்பு கிராமத்தில் உள்ள மேலிருப்பு மின் மாற்றி 5, 200/22 கே.வி. ஆகிய இரண்டு மின்மாற்றிகளும் சுமார் 20 வருட காலத்திற்கு முன்பாக நிர்மானிக்கப்பட்டபோது வயல் வெளியில்*

[2014 டிசம்பர் 5

அமைக்கப்பட்டது. சமீபகாலத்தில்தான் இந்த மின்மாற்றிகள் அமையப் பெற்றுள்ள இடம் பொது வழியாக மாற்றப்பட்டுள்ளது. தமிழ்நாடு மின்சார வழங்கல் விதித்தொகுப்பு 5(6)-ன்படி மின் இணைப்பு/தொடர், கட்டமைப்பு மற்றும் சாதனங்கள் இடமாற்றுவதற்கான மதிப்பீடு செய்யப்பட்ட இடமாற்றத் தொகையை நுகர்வோர் முன்கூட்டியே முழுமையாகக் கட்டி விட வேண்டும். அத்தொகை கட்டப்பட்ட பிறகே இடமாற்றப் பணி தொடங்கப்படும். எனவே, இந்த மின்மாற்றிகளை இடம் மாற்றம் செய்ய உள்ளாட்சி அமைப்புகள் விண்ணப்பம் அளித்து, பங்களிப்பு வைப்புத் தொகைத் (DCW) திட்டத்தின்கீழ் மதிப்பீட்டுத் தொகையை செலுத்தும்பட்சத்தில், தொழில்நுட்ப சாத்தியக் கூறுகளுக்குட்பட்டு மின்மாற்றிகள் இடம் மாற்றம் செய்து தரப்படும்.

**23—**

## மின்கம்பி வடம்மூலம் மின்சாரம் வழங்குதல்

**வினா எண் 37519—திரு. என்.வி. காமராஜ்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேதாரண்யம் உப்பள பகுதிக்கு மின் கம்பிவடம்மூலம் மின்சாரம் வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆம். வேதாரண்யம் உப்பள பகுதியில் உள்ள உப்பு உற்பத்தி தொழிற்சாலைகளுக்கு 33/11 கி.வோ. வேதாரண்யம் துணை மின் நிலையத்திலிருந்து 11 கி.வோ. மின்பாதை (Overhead) வழியாக மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. மேற்படி உயர் மற்றும் தாழ்வழுத்த மின்பாதைகளில் உப்புக் காற்றினால் ஏற்படும் குறைபாடுகள் உடனுக்குடன் நிவர்த்தி செய்யப்பட்டு சீரான மின்னோட்டம் வழங்கப்பட்டு வருகிறது. மேற்படி உப்பள பகுதியில் புதைவடம்மூலம் மின்சாரம் வழங்கும் திட்டம் ஏதும் தற்பொழுது நடைமுறையில் இல்லை.



2014 டிசம்பர் 5]

**24—**

## தெரு விளக்குகள் அமைத்தல்

**வினா எண் 38140—திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தொகுதியில் பட்டாகுறிச்சி ஊராட்சி, கீழபட்டாகுறிச்சி தெற்கு காலனியில் கம்பத்துடன்கூடிய தெரு விளக்குகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தென்காசி தொகுதியில் பட்டாகுறிச்சி ஊராட்சி, கீழபட்டாகுறிச்சி தெற்கு காலனியில் கம்பத்துடன் கூடிய தெரு விளக்குகள் அமைக்க விண்ணப்பம் மற்றும் மதிப்பீட்டுத் தொகை செலுத்தப்பட்டால் தெரு விளக்குகள் அமைக்க உடன் நடவடிக்கை எடுக்கப்படும்.

**25—**

## மின் கம்பத்தை மாற்றியமைத்தல்

**வினா எண் 38338—திரு. கே.பி. பரமசிவம்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ பல்லடம் தொகுதி, கரைப்புதூர் ஊராட்சி, சின்னக்கரை மின்வாரியம் லட்சுமி நகர் மற்றும் முல்லை நகரில் (பொன்னுசாமி வீடு அருகில்) பழுதடைந்துள்ள மின் கம்பத்தை மாற்றியமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) பல்லடம் தொகுதி, கரைப்புதூர் ஊராட்சி, சின்னக்கரை மின் வாரியம் லட்சுமி நகர் மற்றும் முல்லை நகரில் (பொன்னுசாமி வீடு அருகில்) தலா ஒரு 27 அடி மின் கம்பம் பழுதான நிலையிலுள்ளது கண்டறியப்பட்டு பழுதடைந்த மின் கம்பங்கள் அகற்றப்பட்டு இரண்டு புதிய மின் கம்பங்கள் நடப்பட்டுள்ளன.*

**26—**

**மின் கம்பங்களை மாற்றியமைத்தல்**

**வினா எண் 38343—திரு. கே.பி. பரமசிவம்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பல்லடம் தொகுதி, கரைப்புதூர் ஊராட்சி, செட்டிபாளையம் மின் வாரியம் அய்யம்பாளையம் ஆதிதிராவிடர் காலனியில் உள்ள இரண்டு மின் கம்பங்களை மாற்றியமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) பல்லடம் தொகுதி, கரைப்புதூர் ஊராட்சி, செட்டிபாளையம் மின் வாரிய அலுவலகத்திற்குட்பட்ட அய்யம்பாளையம் ஆதி திராவிடர் காலனியில் உள்ள இரண்டு 27 அடி மின் கம்பங்களில், ஒன்று அடிப்பாகத்தில் சிறிதளவு காரை பெயர்ந்துள்ளது. 28-9-2013 அன்று கான்கிரீட் போட்டு சரி செய்யப்பட்டுள்ளது. மற்றொரு பழுதடைந்த மின் கம்பம் 25-9-2013 அன்று மாற்றப்பட்டுவிட்டது.*





**27—**

**மின் கம்பங்களை மாற்றியமைத்தல்**

**வினா எண் 38353—திரு. கே.பி. பரமசிவம்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பல்லடம் தொகுதி, கரைப்புதூர் ஊராட்சி, பொல்லிக்காளிபாளையம் மி.வா. பகுதியிலுள்ள பழுதடைந்த மின் கம்பங்களை மாற்றியமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) பல்லடம் தொகுதி, கரைப்புதூர் ஊராட்சி, பொல்லிக்காளிபாளையம்/தெற்கு பிரிவிற்குட்பட்ட பகுதியில் பழுதடைந்த 13 மின் கம்பங்கள் கண்டறியப்பட்டு மதிப்பீட்டு அனுமதி பெறப்பட்டு பழுதடைந்த மின் கம்பங்கள் 21-11-2013 அன்று மாற்றப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.*

**28—**

**மின் கம்பங்களை மாற்றியமைத்தல்**

**வினா எண் 38356—திரு. கே.பி. பரமசிவம்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பல்லடம் தொகுதி, கரைப்புதூர் கிராம ஊராட்சி, பொல்லிக்காளிபாளையம் தமிழ்நாடு மின் வாரிய பகுதியிலுள்ள பழுதடைந்த மின் கம்பங்களை மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில் எப்போது?*

[2014 டிசம்பர் 5

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) பல்லடம் தொகுதி, கரைப்புதூர் கிராம ஊராட்சி, பொல்லிக்காளிபாளையம் / தெற்கு பிரிவிற்குட்பட்ட பகுதியில் பழுதடைந்த மின் கம்பங்கள் கண்டறியப்பட்டு 21-11-2013 அன்று மாற்றப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.*

**29—**

**மின் பாதையை மின் கம்பத்தில் மாற்றியமைத்தல்**

**வினா எண் 38363—திரு. கே.பி. பரமசிவம்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பல்லடம் தொகுதி, கரைப்புதூர் ஊராட்சி, அல்லாளபுரம் ஆதி திராவிடர் காலனி குடிசைப் பகுதி குடியிருப்புக்கு மேலே செல்லும் மின் பாதையை தார்ச் சாலையில் உள்ள மின் கம்பத்தில் மாற்றி அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஆம். பல்லடம் தொகுதி, கரைப்புதூர் ஊராட்சி, ஆதி திராவிடர் காலனி குடிசைப் பகுதி குடியிருப்புக்கு மேல் செல்லும் தாழ்வழுத்த மும்முனை மின் பாதையானது சுமார் இருபத்து ஏழு வருடங்களுக்கு முன் வீடுகள் கட்டப்பட்டதற்கு முன்னதாகவே அமைக்கப்பட்டதாகும். தாழ்வழுத்த மின் கம்பிகள் சுமார் 3 அடி உயரத்தில் மூன்று வீடுகளுக்கு மேல் (ஓர் ஓட்டு வீடு, இரு கான்கிரீட் வீடுகள்) செல்கின்றன. மேலும் சுமார் 8 அடி முதல் 10 அடி உயரத்தில் பன்னிரெண்டு குடிசை வீடுகளுக்கு மேல் செல்கிறது. மின் பாதையின் அடியில் குடியிருப்பவர்களுக்கு மேற்படி தாழ்வழுத்த மின் பாதையை மாற்றியமைக்க விண்ணப்பிக்குமாறு உதவி மின் பொறியாளர், தெற்கு பொல்லிக்காளிபாளையம் அவர்களால் அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது. எனவே, வீட்டு கூரைகளின்மீது செல்லும் மின் கம்பிகளை மாற்றியமைக்க குடியிருப்போர் உரிய விண்ணப்பம் அளித்து, மதிப்பீட்டுத் தொகையைச் செலுத்தும் பட்சத்தில், தொழில்நுட்ப சாத்தியக்கூறுகளுக்குட்பட்டு, வீடுகளின் மேல் செல்லும் தாழ்வழுத்த மின் பாதை மாற்றியமைக்கப்படும்.*



2014 டிசம்பர் 5]

**30—**

**மின் கம்பங்கள் மற்றும் கம்பிகளை மாற்றியமைத்தல்**

**வினா எண் 38364—திரு. கே.பி. பரமசிவம்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பல்லடம் தொகுதி, பொங்கலூர் ஊராட்சி ஒன்றியம், வாவிபாளையம் ஊராட்சி, மே.குள்ளம்பாளையம் ஆதி திராவிடர் காலனியில் பழுதடைந்துள்ள மின் கம்பங்கள் மற்றும் மின் கம்பிகளை மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) பல்லடம் தொகுதி, பொங்கலூர் ஊராட்சி ஒன்றியம், வாவிபாளையம் ஊராட்சி, மே.குள்ளம்பாளையம் ஆதி திராவிடர் காலனியில் பழுதடைந்துள்ள மூன்று 27 அடி மின் கம்பங்கள் 9-10-2013 அன்று மாற்றப்பட்டுள்ளன. மேலும் ஆய்வின்போது மின் கம்பங்கள் பழுதடையவில்லை என்றும் நல்ல நிலையிலுள்ளன என்றும் கண்டறியப்பட்டது.*

**31—**

## மின்மாற்றியை சீரமைத்தல்

**வினா எண் 39259—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சென்னை நங்கநல்லூர் லட்சுமி நகர் பேச்சியம்மன் கோயில் அருகில் உள்ளமின் மாற்றியை சீரமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சென்னை நங்கநல்லூர் லட்சுமி நகர் பேச்சியம்மன் கோயில் அருகில் உள்ள பேச்சியம்மன் கோயில்* 250 KVA *மின்மாற்றியில், 17-10-2013 அன்று பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு அன்றே நிறைவு செய்யப்பட்டு, சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.*

**32—**

## மின் கம்பி வடங்கள் அமைத்தல்

**வினா எண் 39931—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ராயப்பேட்டை நெடுஞ்சாலையில் மின் கம்பி வடங்கள் அமைக்கும் பணியை துரிதப்படுத்த அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*



**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சென்னை மாநகரத்தின் மையத்தில் உள்ள பல பகுதிகளுக்கு சீரான மின்சாரம் வழங்கும்பொருட்டு மணலி-மைலாப்பூர் 230 கி.வோ. மின் பாதை அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இதன் ஒரு பகுதியாக ராயப்பேட்டை நெடுஞ்சாலையில் 230 கி.வோ. புதைவடம் அமைக்கும் பணிகளை மேற்கொள்ள வேண்டியிருந்தது. இச்சாலையின் போக்குவரத்தினைக் கருத்தில்கொண்டு, பணிகள் துரிதப்படுத்தப்பட்டு அக்டோபர் முதல் வாரத்தில் புதைவடம் அமைக்கும் பணிகள் முடிக்கப்பட்டு விட்டன. மணலி-மைலாப்பூர் 230 கி.வோ. மின் பாதையும் 19-10-2013 அன்று இயக்கத்திற்குக் கொண்டு வரப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.*

**33—**

## மின் கம்பம் அமைத்தல்

**வினா எண் 40659—திரு. கார்த்திக் தொண்டைமான்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) புதுக்கோட்டை தொகுதி, புத்தாம்பூர் ஊராட்சி, தேனிப்பட்டியிலிருந்து தட்டாம்பட்டி வரை மின் கம்பம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை தொகுதி, புத்தாம்பூர் ஊராட்சி, தேனிப்பட்டியிலிருந்து தட்டாம்பட்டி வரை உள்ள பகுதிக்கு 100* KVA/22 KV *புத்தாம்பூர்* SS II *மற்றும்* RGGVY *திட்டத்தில் அமைக்கப்பட்ட* 16 KVA/22 KV *தேனிப்பட்டி மின்மாற்றிமூலம் மின் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி பகுதியில் சேதமடைந்த மின் கம்பம் மாற்ற வேண்டியது எதுவும் இல்லை. மேலும், மின் கம்பம் அமைத்து மின் விஸ்தரிப்புப் பணிகள் மற்றும் மேம்பாட்டுப் பணிகள் எதுவும் நிலுவையில் இல்லை.*

[2014 டிசம்பர் 5

**34—**

## மின் விளக்குகள் அமைத்தல்

**வினா எண் 41109—திரு. ர.ம. பாபு முருகவேல்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஆரணி தொகுதி, ஆரணி ஒன்றியம், பூசிமலைகுப்பம் மேற்குகொட்டா, மேற்கு கொட்டாமேடு, தெற்கு கொட்டாமேடு, அத்தியூர் பள்ளிக்கூட தெரு மற்றும் ராட்டிணமங்கலம் புதுமேட்டுத் தெரு ஆகிய பகுதிகளில் புதிய கம்பத்துடன்கூடிய மின் விளக்குகள் அமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஆரணி தொகுதி, ஆரணி ஒன்றியம், பூசிமலைகுப்பம் மேற்குகொட்டா, மேற்கு கொட்டாமேடு பகுதிகளில் ஏற்கெனவே 7 கையடக்க குழல் விளக்குகளும், அத்தியூர் பள்ளிக்கூட தெருவில் 3 குழல் விளக்குகளும், தெற்கு கொட்டாமேடு பகுதியில் 1 குழல் விளக்கும், ராட்டிணமங்கலம் புதுமேட்டுத் தெருவில் 4 கையடக்க குழல் விளக்குகளும், 2 குழல் விளக்குகள் மற்றும் 1 சோடியம் ஆவி விளக்கு பயன்பாட்டில் உள்ளன.*

*மேலும், தெற்கு கொட்டாமேடு பகுதியில் புதிய கம்பத்துடன் கூடிய மின் விளக்குகள் அமைக்க 4 விண்ணப்பம் பெறப்பட்டு, 29 இடங்களில் பணிகள் 30-11-2013 அன்று முடிக்கப்பட்டு மின் விளக்குகள் பயன்பாட்டில் உள்ளன.*

**35—**

## மின் கம்பங்களை மாற்றியமைத்தல்

**வினா எண் 41142—திரு. சு. ரவி:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*



2014 டிசம்பர் 5]

*(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் 8-வது வார்டு, காலிவாரி கண்டிகையில் அருந்ததிபாளையத்திலுள்ள இரும்பு மின் கம்பங்களை சிமெண்ட் மின் கம்பங்களாக மாற்றியமைக்க அரசு முன் வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் 8-வது வார்டு காலிவாரி கண்டிகையில் அருந்ததிபாளையத்திலுள்ள இரும்பு மின் கம்பங்கள் நல்ல நிலையில் உள்ளதால் சிமெண்ட் மின் கம்பங்களாக மாற்றியமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.*

**36—**

## மின் மாற்றியின் தரம் உயர்த்துதல்

**வினா எண் 41144—திரு. சு. ரவி:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஒன்றியம், பெருங்களத்தூர் கிராமத்திலுள்ள காலனியில் 16 KVA திறனுடைய மின்மாற்றியை 63 KVA திறனுடைய மின்மாற்றியாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஒன்றியம், பெருங்களத்தூர் கிராமத்திலுள்ள காலனிக்கு 16 KVA திறனுடைய மின்மாற்றியை 63 KVA திறனுடைய மின்மாற்றியாகத் தரம் உயர்த்தி, 6-11-2013 அன்று 63 KVA திறனுடைய மின்மாற்றி அமைக்கப்பட்டு மின்னூட்டம் செய்யப்பட்டது.*

[2014 டிசம்பர் 5

**37—**

### காப்பர் கம்பிகளைப் பாதுகாத்தல்

**வினா எண் 41161—திரு. ம. குணசேகரன்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை இளையான்குடி பகுதிகளில் மின் மாற்றிகளிலுள்ள காப்பர் கம்பிகளைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்க அரசு ஆவன செய்யுமா ?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை மற்றும் இளையான்குடி பகுதிகளில் மின் மாற்றிகளிலுள்ள காப்பர் கம்பி திருட்டு போவது தொடர்பாக சிவகங்கை மாவட்டம் காவல் துறை கண்காணிப்பாளர் அவர்களிடம் புகார் அளிக்கப்பட்டது. அதன் தொடர்ச்சியாக காவல் நிலையங்களில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு கடந்த 24-8-2013 அன்று காப்பர் கம்பிகள் திருடியவர்கள் கைது செய்யப்பட்டனர். மேலும் அதில் தொடர்புடையவர்களிடம் மின் வாரியத்திற்குச் சொந்தமான ரூ.10.50 இலட்சம் மதிப்புள்ள காப்பர் கம்பி கட்டிகள் மீட்கப்பட்டன. அதற்குப் பின்பு சிவகங்கை மின் பகிர்மான வட்டத்தில் மின் மாற்றிகளில் உள்ள காப்பர் கம்பிகள் திருட்டு எதுவும் நிகழவில்லை.*

**38—**

### மின் மாற்றிகளை சீரமைத்தல்

**வினா எண் 41312—திரு. அ. அஸ்லம் பாஷா:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஆம்பூர் தொகுதி, ஆம்பூர் நகரத்திலுள்ள பழுதடைந்த மின் கம்பங்கள் மின் மாற்றிகளைச் சீரமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*



2014 டிசம்பர் 5]

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர் விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஆம்பூர் தொகுதி, ஆம்பூர் நகரத்தில் கண்டறியப்பட்ட அனைத்து பழுதடைந்த மின் கம்பங்களும் 31-12-2013 தேதிக்கு முன்னர் மாற்றப்பட்டு விட்டன. ஆம்பூர் நகரத்தில் அனைத்து மின் மாற்றிகளும் நல்ல நிலையில் உள்ளன.*

**39—**

### மின் தடை ஏற்படுவதைத் தடுத்தல்

**வினா எண் 41396—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*மின் மாற்றிகளை போர்க்கால அடிப்படையில் பராமரித்து மின் தடை ஏற்படுவதை தடுக்கத் அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*மின்மாற்றிகளில் செய்யவேண்டிய பராமரிப்புப் பணிகளை அந்தந்த பிரிவு பொறியாளர்களின் கட்டுப்பாட்டில் இருக்கும் அனைத்து மின்மாற்றிகளையும் திட்டமிட்டு மின்மாற்றி பராமரிப்பு அட்டவணை தயார் செய்து, அதன்படி பராமரிப்பு செய்யப்படுகின்றன. மேலும் அதிக மின்பளுவினால் மின்மாற்றி பழுதாவதைத் தடுக்க, மின் மாற்றியின் திறனை உயர்த்தியும், கூடுதல் மின்மாற்றி மின் பளுவிற்கேற்ப பொருத்தியும் மின் தடை ஏற்படாமல் தடுக்கப்படுகின்றன.*

**40—**

### தற்காலிக மின் இணைப்பு முறை

**வினா எண் 41534—திரு. கார்த்திக் தொண்டைமான்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தமிழ்நாடு மின்சார வாரியத்தில் புதியதாக வீடு கட்டுவதற்கு தற்போது அமல்படுத்தப்பட்டுள்ள தற்காலிக மின் இணைப்பு முறையை அமல்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஆம். தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், அறிவிக்கை எண் த.மி.ஒ.ஆ/மி.ப.வி./8-17/ 6-9-2013 நாளிட்டது மூலமாக தற்காலிக மின் வழங்கல் தொடர்பான தமிழ்நாடு மின் பகிர்மான விதித்தொகுதியிலுள்ள 39 ஆம் ஒழுங்குமுறை விதியில் திருத்தங்கள் செய்துள்ளது. இந்தத் திருத்தங்கள் தமிழ்நாடு அரசிதழில் (எண் 268) செப்டம்பர் 19, 2013 அன்று வெளியிடப்பட்டது. அன்று முதல் புதிதாக வீடு கட்டுவதற்கான தற்காலிக மின் இணைப்பு தொடர்பான புதிய விதிமுறை நடைமுறையில் உள்ளது.*

**41—**

## புதிய வாகனம் வழங்குதல்

**வினா எண் 41718—திரு. கார்த்திக் தொண்டைமான்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) புதுக்கோட்டை மின் பகிர்மான வட்டத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் அனைத்து நான்கு சக்கர வாகனங்களும் பழுதடைந்து உள்ளதால், புதிய வாகனம் வழங்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மின் பகிர்மான வட்டத்தில் மொத்தம் 20 நான்கு சக்கர ஊர்திகள் இருக்கின்றன. அதில்*





*10 ஊர்திகள் சாலையில் இயங்கக்கூடிய நிலையிலும், 2 வேன்கள் பழுதடைந்து இயங்காத நிலையிலும் உள்ளன மற்றும் 6 ஜீப்புகளும், 2 லாரிகளும் அதற்குரிய ஆயுட்காலம்* (life period) *முடிவடைந்ததாலும், சிறிய பழுதுகள் சரிசெய்யப்பட்டு தற்பொழுது ஓடக்கூடிய நிலையில் இருக்கின்றன. மேற்கூறிய எட்டு ஊர்திகளையும் மாற்றுவதற்கு நிதியொதுக்கீடு* (Budget Provision) *2014-2015 ஆம் ஆண்டில் செய்யப்பட்டுள்ளது.*

*புதிய வாகனங்கள் வாங்குவது தொடர்பாக 2014-2015 ஆம் ஆண்டில் ஆவன செய்யப்படும்.*

**42—**

## கூடுதல் மின் மாற்றி அமைத்தல்

**வினா எண் 41993—திரு. ஆ. நாராயணன்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) நாங்குனேரி ஒன்றியம், இறைப்புவாரி ஊராட்சி, பட்டர்புரத்தில் கூடுதல் மின் மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், நாங்குனேரி தொகுதி, நாங்குனேரி ஒன்றியம், இறைப்புவாரி ஊராட்சி, பட்டர்புரத்தில் தற்போது இயங்கிவரும் பட்டர்புரம்* SS I 100 KVA, *பட்டர்புரம்* SS II 100 KVA *மற்றும் பட்டர்புரம்* SS III 100 KVA *மின்மாற்றிகள் மூலம் மின் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இந்த மின் மாற்றிகளில் இணைக்கப்பட்டிருக்கும் மின் பளுக்களுக்கு மேற்படி மின்மாற்றிகளின் திறன் போதுமானது என்பதால் பட்டர்புரம் பகுதிக்கு கூடுதலாக ஒரு மின் மாற்றி அமைப்பதற்கு தற்போது தேவை எழவில்லை.*

[2014 டிசம்பர் 5

**43—**

## மின் மாற்றி அமைத்தல்

**வினா எண் 41994—திரு. ஆ. நாராயணன்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாங்குநேரி ஒன்றியம், அரியகுளம் ஊராட்சி, மேல அரியகுளத்தில் கூடுதல் மின்திறன் கொண்ட மின் மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி தொகுதி, நாங்குநேரி ஒன்றியம், அரியகுளம் ஊராட்சி, மேல அரியகுளத்தில் கூடுதலாக ஒரு 100 KVA மின்மாற்றி அமைக்கப்பட்டு 6-3-2014 அன்று மின்னூட்டம் செய்யப்பட்டுவிட்டது.

**44—**

## மீன் வளர்க்க இலவச மின்சாரம்

**வினா எண் 42322—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதியில் பண்ணைக்குட்டைகளில் மீன் வளர்ப்பதற்கு இலவச மின்சாரம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதியில் பண்ணைக்குட்டைகளில் மீன் வளர்ப்பதற்கு இலவச மின்சாரம் வழங்க அரசு ஆணை ஏதும் இல்லை.



2014 டிசம்பர் 5]

**45—**

## இலவச மின் இணைப்பு

**வினா எண் 42323—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, சாலைகிராமம் பகுதி விவசாயிகளுக்கு விவசாயத்திற்கு விரைவாக இலவச மின் இணைப்பு வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, சாலைகிராமம் பகுதி விவசாயிகளுக்கு இலவச விவசாய மின் இணைப்பு வழங்குவதற்கு செயற்பொறியாளர்/பகிர்மானம்/மானாமதுரை அலுவலகத்தில் விவசாய விண்ணப்பத்தைப் பதிவு செய்தவர்களுக்கு அறிவிப்புக் கடிதம் அனுப்பப்பட்டு, உதவி மின் பொறியாளர்/ பகிர்மானம்/ சாலைகிராமம் பிரிவு அலுவலகத்தில் தயார் நிலை பதிவு செய்தவர்களுக்கு ஆண்டு விவசாயக் குறியீட்டின் அடிப்படையில் வரிசை கிரமமாக இலவச மின் இணைப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**46—**

## புதிய மின்மாற்றி அமைத்தல்

**வினா எண் 42338—திரு. கார்த்திக் தொண்டைமான்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை தொகுதி, புதுப்பட்டி பிரிவு, கரு.வட தெருவிலுள்ள மின்மாற்றி எண் 1 மற்றும் 2 ஐ பிரித்து, புதியதாக அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2014 டிசம்பர் 5

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை தொகுதி, புதுப்பட்டி பிரிவில் கரு.வட தெரு* SS I 100 *கே.வி.ஏ. மற்றும் கரு.வட தெரு* SS II 100 *கே.வி.ஏ. என இரண்டு மின் மாற்றிகள் உள்ளன. இந்த மின் மாற்றிகளில் இணைக்கப்பட்டிருக்கும் மின்பளுக்களுக்கு மேற்படி மின் மாற்றிகளின் திறன் போதுமானது என்பதால் தனியாக மின் மாற்றி அமைப்பதற்கு தற்போது தேவை எழவில்லை.*

**47—**

**காற்றாலை மின் உற்பத்தியைத் துவக்குதல்**

**வினா எண் 42359—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தமிழகத்தில் மின்சார உற்பத்தியை அதிகரிக்க, காற்றாலை மின் உற்பத்தியை துவக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தமிழக அரசு ஏற்கெனவே திருநெல்வேலி மாவட்டம் முப்பந்தல் என்ற இடத்தில் 1984-1985 ஆம் ஆண்டு முதல் சுமார் 17.465 மெகா வாட் திறனுள்ள காற்றாலைகள் நிறுவி, காற்றாலைமூலம் மின்சாரம் உற்பத்தி செய்யும் மாதிரித் திட்டத்தை செயல்படுத்தி உள்ளது.*

*இந்த சாத்தியக் கூற்றை தொடர்ந்து தமிழ்நாட்டில் தனியார் மூலம் காற்றாலைகள் அமைக்கப்பட்டு 7,217 மெகா வாட் அளவு நிறுவப்பட்டுள்ளது. காற்றாலை நிறுவ அதிக மூலதனம் தேவைப்படுவதாலும், தனியார் நிறுவனங்கள் காற்றாலை நிறுவ முன்வந்ததாலும் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தியை ஊக்குவிக்கும்பொருட்டு தனியார் நிறுவனங்கள் காற்றாலை நிறுவ*



2014 டிசம்பர் 5]

*தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் ஊக்கமளித்து காற்றாலை மின்சாரத்தை வாங்கி வருகிறது. இதன்மூலம் தமிழகம் காற்றாலை மின் உற்பத்தியில் முதல் மாநிலமாக திகழ்ந்து இந்தியா உலகளவிலேயே 5-வது இடத்தைப் பெற்றுள்ளது.*

**48—**

**மின் விளக்குகள் அமைத்தல்**

**வினா எண் 42361—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கன்னியாகுமரி மாவட்டம், களியல் கிராமத்திற்குட்பட்ட பிலாமூடு-குருசுமலை செல்லும் சாலையில் சுமார் 2 கி.மீ. தூரத்திற்கு புதிய மின் கம்பத்துடன்கூடிய மின் விளக்குகள் அமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், களியல் கிராமத்திற்குட்பட்ட பிலாமூடு-குருசுமலை செல்லும் சாலையில் சுமார் 2 கி.மீ. தூரத்திற்கு புதிய மின் கம்பத்துடன்கூடிய மின் விளக்குகள் அமைக்கக்கோரி ஊராட்சியிடமிருந்து விண்ணப்பம் எதுவும் பெறப்படவில்லை. விண்ணப்பம் பெறப்பட்டு, மதிப்பீட்டுத் தொகை செலுத்தினால், தெரு விளக்குகள் அமைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.*

**49—**

**மின் கம்பத்தை மாற்றியமைத்தல்**

**வினா எண் 42388—திரு. கே.பி. பரமசிவம்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பல்லடம் தொகுதி, பல்லடம் ஊராட்சி ஒன்றியம், ஆறுமுத்தாம்பாளையம் கிராம ஊராட்சி, சேகாம்பாளையம் ஆதி திராவிடர் காலனியிலுள்ள பழுதடைந்த மின் கம்பத்தை மாற்றியமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) பல்லடம் தொகுதி, பல்லடம் ஊராட்சி ஒன்றியம், ஆறுமுத்தாம்பாளையம் கிராம ஊராட்சி, சேகாம்பாளையம் ஆதி திராவிடர் காலனியிலுள்ள பழுதடைந்த மின் கம்பம் 27-1-2014 அன்று மாற்றியமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.*

**50—**

## மின் கம்பத்தை மாற்றியமைத்தல்

**வினா எண் 42389—திரு. கே.பி. பரமசிவம்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பல்லடம் தொகுதி, பல்லடம் நகராட்சி, வார்டு எண் 4-ல் உள்ள காமராஜர் நகரில் பழுதடைந்த மின் கம்பத்தை மாற்றியமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) பல்லடம் தொகுதி, பல்லடம் நகராட்சி, வார்டு எண் 4-ல் உள்ள காமராஜர் நகரில் பழுதடைந்த மின் கம்பம் 27-1-2014 அன்று மாற்றியமைக்கப்பட்டு தற்போது பயன்பாட்டில் உள்ளது.*



**51—**

## மின் கம்பத்தை அகற்றுதல்

**வினா எண் 42390—திரு. கே.பி. பரமசிவம்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பல்லடம் தொகுதி, திருப்பூர் மாநகராட்சி, வார்டு எண் 53, கிருஷ்ணா நகர் பிரிவு 2-வது தெருவில் இடையூறாக உள்ள மின் கம்பத்தை அகற்ற அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஆம். பல்லடம் தொகுதி, திருப்பூர் மாநகராட்சி, வார்டு எண் 53, கிருஷ்ணா நகர் பிரிவு 2-வது தெருவில் இடையூறாக இருந்த மின் கம்பத்தின் இழுவைக் கம்பிகளுக்குப் பதிலாக எதிர் திசையில் இரண்டு முட்டுக் கம்பங்கள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 10-2-2014 அன்று நடப்பட்டது.*

**52—**

## மின் பாதையை மாற்றியமைத்தல்

**வினா எண் 42391—திரு. கே.பி. பரமசிவம்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பல்லடம் தொகுதி, பல்லடம் நகராட்சி, வார்டு எண் 4, காமராஜர் நகரில் தாழ்வான நிலையிலுள்ள மின் பாதையை மாற்றியமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

[2014 டிசம்பர் 5

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஆம். பல்லடம் தொகுதி, பல்லடம் நகராட்சி, வார்டு எண் 4, காமராஜர் நகரில் தாழ்வான நிலையிலுள்ள தாழ்வழுத்த மின் பாதையை சரி செய்ய, ஒரு மின் கம்பம் கூடுதலாக நிறுவுவதற்கான மதிப்பீடு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் அனுமதி பெறப்பட்டு, 14-2-2014 அன்று நிறுவப்பட்டது.*

**53—**

## மின் பாதையை மாற்றியமைத்தல்

**வினா எண் 42392—திரு. கே.பி. பரமசிவம்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பல்லடம் தொகுதி, பல்லடம் ஒன்றியம், அல்லாபுரத்தில் ஆதி திராவிடர் குடிசைப் பகுதிகளுக்கு மேலே செல்லும் மின் பாதையை மாற்றியமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஆம். பல்லடம் தொகுதி, பல்லடம் ஒன்றியம், அல்லாபுரம் ஆதி திராவிடர் குடிசைப் பகுதிகளுக்கு மேலே செல்லும் தாழ்வழுத்த மும்முனை மின் பாதையானது சுமார் இருபத்து ஏழு வருடங்களுக்கு முன் வீடுகள் கட்டப்பட்டதற்கு முன்னதாகவே அமைக்கப்பட்டதாகும். தாழ்வழுத்த மின்கம்பிகள் சுமார் 3 அடி உயரத்தில் மூன்று வீடுகளுக்கு மேல் (ஓர் ஓட்டு வீடு, இரு கான்கிரீட் வீடுகள்) செல்கின்றன. மேலும், சுமார் 8 அடி முதல் 10 அடி உயரத்தில் பன்னிரெண்டு குடிசை வீடுகளுக்கு மேல் செல்கிறது. மின் பாதையின் அடியில் குடியிருப்பவர்களுக்கு மேற்படி தாழ்வழுத்த மின் பாதையை மாற்றியமைக்க விண்ணப்பிக்குமாறு 06-11-2013 நாளிட்ட கடிதம் வாயிலாக உதவி மின் பொறியாளர்/தெற்கு/பொல்லிக்காளிபாளையம் அவர்களால் அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது. எனவே, வீட்டு கூரைகளின் மீதுக் செல்லும் மின் கம்பிகளை மாற்றியமைக்க குடியிருப்போர் உரிய விண்ணப்பம் அளித்து, மதிப்பீட்டுத் தொகையை செலுத்தும் பட்சத்தில் தொழில் நுட்ப சாத்தியக் கூறுகளுக்குட்பட்டு வீடுகளின் மேல் செல்லும் தாழ்வழுத்த மின் பாதை மாற்றியமைக்கப்படும்.*





**54—**

## தெரு விளக்குகள் அமைத்தல்

**வினா எண் 42394—திரு. கே.பி. பரமசிவம்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பல்லடம் தொகுதி, திருப்பூர் மாநகராட்சி, 52-வது வார்டு, வேலவன் நகரில் கூடுதலாக கம்பத்துடன்கூடிய தெரு விளக்குகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) பல்லடம் தொகுதி, திருப்பூர் மாநகராட்சி, 52-வது வார்டு, வேலவன் நகரில் கூடுதலாக கம்பத்துடன்கூடிய தெரு விளக்குகள் அமைக்கக்கோரி மாநகராட்சி அல்லது ஊராட்சியிலிருந்து விண்ணப்பம் எதுவும் பெறப்படவில்லை.*

*விண்ணப்பம் பெறப்பட்டு, மதிப்பீட்டுத் தொகை செலுத்தினால், தெரு விளக்குகள் அமைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.*

**55—**

## தெரு விளக்குகள் அமைத்தல்

**வினா எண் 42395—திரு. கே.பி. பரமசிவம்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பல்லடம் தொகுதி, திருப்பூர் மாநகராட்சி, 53, கிருஷ்ணா நகர் பிரிவு, அமராவதி நகர் மேற்கு, கார்த்திக் நகர், சசிகலா நகர், முத்து நகர் ஆகிய பகுதிகளில் புதியதாக கம்பத்துடன்கூடிய தெரு விளக்குகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) பல்லடம் தொகுதி, திருப்பூர் மாநகராட்சி, வார்டு எண் 53, கிருஷ்ணா நகர் பிரிவு, அமராவதி நகர் மேற்கு, கார்த்திக் நகர், சசிகலா நகர், முத்து நகர் ஆகிய பகுதிகளில் புதியதாக மின் கம்பத்துடன்கூடிய தெரு விளக்குகள் அமைக்கக் கோரி மாநகராட்சி அல்லது ஊராட்சியிலிருந்து விண்ணப்பம் எதுவும் பெறப்படவில்லை.*

*விண்ணப்பம் பெறப்பட்டு, மதிப்பீட்டுத் தொகை செலுத்தினால், தெரு விளக்குகள் அமைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.*

**56—**

## மின் இணைப்பு வழங்குதல்

**வினா எண் 42950—திருமதி எஸ். விஜயதரணி:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) விளவங்கோடு தொகுதி, கடையாலுமூடு பேரூராட்சி, வலியஏலா பகுதியிலுள்ள 171 வீடுகளுக்கு மின் இணைப்பு வழங்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*





**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்ட விளவங்கோடு தொகுதி, வலியஏலா பகுதி அடர்ந்த வனப் பகுதியில் அமைந்து உள்ளதால், அப்பகுதிகளிலுள்ள வீடுகளுக்கு சூரிய ஒளி சக்தி மூலம் மின் வசதி செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன..*

**57—**

## மின் கம்பங்களை மாற்றியமைத்தல்

**வினா எண் 42998—திரு. கே.பி. பரமசிவம்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பல்லடம் தொகுதி, திருப்பூர் ஊராட்சி ஒன்றியம், மங்களம் கிராம ஊராட்சி, சின்னப்புத்தூர், வேட்டுவபாளையம் ஆதி திராவிடர் காலனி, வேட்டுவபாளையம் பிள்ளையார் கோயில் அருகிலுள்ள பகுதிகளில் பழுதடைந்த மின் கம்பங்களை மாற்றியமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) பல்லடம் தொகுதி, திருப்பூர் ஊராட்சி ஒன்றியம், மங்களம் கிராம ஊராட்சி, சின்னப்புத்தூர், வேட்டுவபாளையம் ஆதி திராவிடர் காலனியில் உள்ள ஒரு பழுதடைந்த மின் கம்பம் மற்றும் வேட்டுவபாளையம் பிள்ளையார் கோயில் அருகிலுள்ள ஒரு மின் கம்பம் ஆக இரண்டு மின் கம்பங்களும் 27-1-2014 அன்று மாற்றப்பட்டுவிட்டன.*

[2014 டிசம்பர் 5

**58—**

**மின் கம்பத்தை மாற்றியமைத்தல்**

**வினா எண் 43001—திரு. கே.பி. பரமசிவம்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடம் தொகுதி, பொங்கலூர் ஒன்றியம், காட்டூர் ஊராட்சி, வெள்ளனத்தம் அரிசி ஆலை அருகே பழுதடைந்துள்ள மின் கம்பத்தை மாற்றியமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

(அ) ஆம். (ஆ) பல்லடம் தொகுதி, பொங்கலூர் ஒன்றியம், காட்டூர் ஊராட்சி, வெள்ளனத்தம் அரிசி ஆலை அருகே உள்ள மின் கம்பத்தின் உட்புறத்தில் உள்ள கம்பி வெளியே தெரிந்ததால் அப்பகுதி 8-1-2014 அன்று சிமெண்ட் கலவை கொண்டு பூசி சரி செய்யப்பட்டு, மின் கம்பம் நல்ல நிலையில் உள்ளது.

**59—**

**மின் மாற்றியை மாற்றிமைத்தல்**

**வினா எண் 43003—திரு. கே.பி. பரமசிவம்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடம் தொகுதி, திருப்பூர் ஒன்றியம், இருவாய் ஊராட்சி, இருவாய் உயர்நிலைப் பள்ளியிலுள்ள மின்மாற்றியை வேறு இடத்திற்கு மாற்றியமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2014 டிசம்பர் 5]

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பல்லடம் தொகுதி, திருப்பூர் ஒன்றியம், இருவாய் ஊராட்சி, இருவாய் உயர்நிலைப் பள்ளியிலுள்ள மின் மாற்றியை வேறு இடத்திற்கு மாற்றியமைப்பதற்கான மதிப்பீட்டுத் தொகை 7-3-2014 அன்று செலுத்தப்பட்டு மின் மாற்றி இடமாற்றியமைக்கும் பணி முடிக்கப்பட்டு 2-4-2014 முதல் செயல்பட்டு வருகிறது.

**60—**

**மின் மாற்றியை மாற்றிமைத்தல்**

**வினா எண் 43004—திரு. கே.பி. பரமசிவம்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடம் தொகுதி, திருப்பூர் ஊராட்சி ஒன்றியம், மங்கலம் கிராம ஊராட்சி, புக்கிலிபாளையம் ஆதி திராவிடர் காலனியின் நடுவே அமைந்துள்ள மின் மாற்றியை வேறு இடத்திற்கு மாற்றியமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பல்லடம் தொகுதி, திருப்பூர் ஊராட்சி ஒன்றியம், மங்கலம் கிராம ஊராட்சி புக்கிலிபாளையம் ஆதி திராவிடர் காலனியில் அமைந்திருக்கும் புக்கிலிபாளையம் மின் மாற்றியானது (எண் SS I/100 KVA) சுமார் 35 வருடங்களுக்கு முன்னால் அமைக்கப்பட்டது. மேற்கண்ட மின்மாற்றி அமைக்கப்பட்ட பின்னர், அதனைச் சுற்றியுள்ள காலனி குடியிருப்புகள் அமைக்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு மின்சார வழங்கல் விதித்தொகுப்பு 5(6)-ன் படி மின் இணைப்பு/தொடர் கட்டமைப்பு மற்றும் சாதனங்கள் இடமாற்றுவதற்கான மதிப்பீடு செய்யப்பட்ட இடமாற்றத் தொகையை நுகர்வோர் முன்கூட்டியே

[2014 டிசம்பர் 5

முழுமையாக கட்டிவிட வேண்டும். அத்தொகை கட்டப்பட்ட பிறகே இடமாற்றப் பணி தொடங்கப்படும். எனவே, இந்த மின்மாற்றியை மாற்றியமைக்க உரிய விண்ணப்பம் மற்றும் மதிப்பீட்டுத் தொகை செலுத்தும்பட்சத்தில் அதனை மாற்றியமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**61—**

**மின் பாதையை மாற்றியமைத்தல்**

**வினா எண் 43005—திரு. கே.பி. பரமசிவம்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) பல்லடம் தொகுதி, திருப்பூர் ஊராட்சி ஒன்றியம், மங்கலம் கிராம ஊராட்சி, கணபதிபாளையம் ஆதி திராவிடர் காலனியில் வீட்டின் மேலே செல்லும் உயர் அழுத்த மின் பாதையை மாற்றியமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) பல்லடம் தொகுதி, திருப்பூர் ஊராட்சி ஒன்றியம், மங்கலம் கிராம ஊராட்சி, கணபதிபாளையம் ஆதி திராவிடர் காலனியில் செல்லும் 11 கே.வி. மங்கலம் உயர் அழுத்த மின்பாதை 1992-ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. அதற்குப் பின்னர் தான் ஆதி திராவிடர் காலனி உருவாகியுள்ளது. தமிழ்நாடு மின்சார வழங்கல் விதித்தொகுப்பு 5(6)-ன்படி மின் இணைப்பு/ தொடர், கட்டமைப்பு மற்றும் சாதனங்கள் இடமாற்றுவதற்கான மதிப்பீடு செய்யப்பட்ட இடமாற்றத் தொகையை நுகர்வோர் முன்கூட்டியே முழுமையாகக் கட்டிவிட வேண்டும். அத்தொகை கட்டப்பட்ட பிறகே இடமாற்றப் பணி தொடங்கப்படும். எனவே, மேற்கண்ட மின் பாதையை மாற்று வழியில் கொண்டு செல்ல உரிய விண்ணப்பம் மற்றும் மதிப்பீட்டுத் தொகை செலுத்தும் பட்சத்தில் அதனை மாற்றியமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*



2014 டிசம்பர் 5]

**62—**

**மின் பாதையை மாற்றியமைத்தல்**

**வினா எண் 43006—திரு. கே.பி. பரமசிவம்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) பல்லடம் தொகுதி, திருப்பூர் ஒன்றியம், இருவாய் ஊராட்சி, இருவாய் ஆதி திராவிடர் காலனியின் மேல் செல்லும் உயர் அழுத்த மின் பாதையை மாற்றியமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) பல்லடம் தொகுதி, திருப்பூர் ஒன்றியம், இருவாய் ஊராட்சி, இருவாய் ஆதி திராவிடர் காலனியின் மேல் செல்லும் 160 மீட்டர் இடைநீளமுள்ள* (span length) *11 கி.வோ. வஞ்சிபாளையம் உயரழுத்த மின் பாதை ஆண்டிபாளையம் 33/11 கி.வோ. துணை மின் நிலையத்திலிருந்து சுமார் 20 வருடத்திற்கு முன்பாக அமைக்கப்பட்டது. அதற்குப் பின்னர் தான் ஆதி திராவிடர் காலனியும் உருவாகியுள்ளது. இந்த மின் கம்பிகள் வாரிய விதிகளின்படி போதிய இடைவெளியில் செல்கிறது. தமிழ்நாடு மின்சார வழங்கல் விதித்தொகுப்பு 5(6)-ன்படி மின் இணைப்பு/தொடர், கட்டமைப்பு மற்றும் சாதனங்கள் இடமாற்றுவதற்கான மதிப்பீடு செய்யப்பட்ட இடமாற்றத் தொகையை, நுகர்வோர் முன்கூட்டியே முழுமையாக கட்டிவிட வேண்டும். அத்தொகை கட்டப்பட்ட பிறகே இடமாற்றப் பணி தொடங்கப்படும். எனவே, மேற்கண்ட மின் பாதையை மாற்று வழியில் கொண்டு செல்ல உரிய விண்ணப்பம் மற்றும் மதிப்பீட்டுத் தொகை செலுத்தும்பட்சத்தில் அதனை மாற்றியமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

[2014 டிசம்பர் 5

**63—**

## மின் இணைப்பு வழங்குதல்

**வினா எண் 43677—திரு. ப. டில்லி பாபு:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) அரூர் தொகுதி, காரப்பாடி மலைக் கிராமத்திலுள்ள மின் கம்பத்தில் தெரு விளக்கு அமைத்து மின் இணைப்பு வழங்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) அரூர் தொகுதி, காரப்பாடி மலைக் கிராமத்திலுள்ள மின் கம்பத்தில் ஐந்து இடங்களில் தெரு மின் விளக்குகள் அமைத்துத் தர தலைவர்/சிட்லிங் ஊராட்சி அவர்கள் விண்ணப்பம் அளித்ததன் பேரில், சாத்தியக்கூறுகள் ஆய்வு செய்யப்பட்டு மதிப்பீட்டுத் தொகை ரூ.38 இலட்சங்களுக்கு அதிகமாக வருவதாலும், சுமார் 6 கி.மீ. தூரத்திற்கு அதாவது கம்பாலை முதல் காரப்பாடி வரை அடர்ந்த வனப் பகுதியில் உயர் அழுத்த மின் பாதை அமைக்க வனத் துறை அனுமதி பெற வேண்டியிருந்ததாலும், மாற்று திட்டமாக காரப்படி கிராமத்திற்கு சூரிய ஒளி மூலமாக, தெரு விளக்கிற்கு மின் வசதி செய்ய 10 விண்ணப்பங்கள் பெறப்பட்டு தமிழ்நாடு மின்சார வாரியத்தால் அனைத்துப் பணிகளும் 11-9-2012 அன்று முடிக்கப்பட்டு, தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை அவர்களால் சூரிய ஒளிசக்தி இயக்கப்பெட்டி பொருத்தப்பட்டு 26-6-2013 அன்று முதல் இயக்கத்திற்கு கொண்டுவரப்பட்டு, தெரு விளக்குகளுக்கு மின் விநியோகம் வழங்கப்பட்டு வருகிறது.*

**64—**

## மின் கம்பத்தை அகற்றுதல்

**வினா எண் 43694—திரு. கார்த்திக் தொண்டைமான்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*



2014 டிசம்பர் 5]

*(அ) புதுக்கோட்டை தொகுதி, புதுக்கோட்டை நகராட்சியிலுள்ள வயிரணாச்சி ஊரணி தெருவின் நடுப்பகுதியிலுள்ள மின் கம்பத்தை அகற்ற அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை தொகுதி, புதுக்கோட்டை நகராட்சியிலுள்ள வயிரணாச்சி ஊரணி தெருவின் நடுப்பகுதியில் இருந்த மின் கம்பம் 21-2-2014 அன்று அகற்றப்பட்டு தெருவின் ஓரமாக நடப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.*

**65—**

## தெரு விளக்கு அமைத்தல்

**வினா எண் 43873—திரு. ஆ. நாராயணன்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) நாங்குநேரி ஒன்றியம், அ.சாத்தான்குளம் ஊராட்சி, உள்வாய் ஆதி திராவிடர் காலனியில் தெரு விளக்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) நாங்குநேரி ஒன்றியம், அ.சாத்தான்குளம் ஊராட்சி, உள்வாய் ஆதி திராவிடர் காலனியில் தெரு விளக்கு அமைக்கக் கோரி ஊராட்சியிடமிருந்து விண்ணப்பம் ஏதும் பெறப்படவில்லை. விண்ணப்பம் பெறப்பட்டு, மதிப்பீட்டுத் தொகை செலுத்தினால், தெரு விளக்குகள் அமைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.*

[2014 டிசம்பர் 5

**66—**

## தெரு விளக்கு அமைத்தல்

**வினா எண் 43874—திரு. ஆ. நாராயணன்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) நாங்குநேரி ஒன்றியம், தோப்பூர் மற்றும் உலகம்பாள்புரத்தில் சூரிய மின் சக்தி தெரு விளக்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) இல்லை. கிராமப்புற மேம்பாட்டு இயக்குநகரத்தால் வழங்கப்பட்ட சூரிய மின் சக்தியால் இயங்கக்கூடிய தெரு விளக்கு அமைக்கும் இடப்பட்டியலில் நாங்குநேரி ஒன்றியம், தோப்பூர், உலகம்பாள்புரம் இடம் பெறவில்லை.*

**67—**

## தெரு விளக்கு அமைத்தல்

**வினா எண் 43876—திரு. ஆ. நாராயணன்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) நாங்குநேரி ஒன்றியம், மூலக்கரைப்பட்டி பேரூராட்சி, 10-வது வார்டு கல்லத்தியில் சூரிய மின் சக்தி தெரு விளக்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) நாங்குநேரி ஒன்றியம் மூலக்கரைப்பட்டி பேரூராட்சி, 10-வது வார்டு, கல்லத்தியில் சூரிய மின் சக்தி தெரு விளக்கு அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.*



2014 டிசம்பர் 5]

**68—**

## தெரு விளக்குகள் அமைத்தல்

**வினா எண் 44325—திரு. ம. குணசேகரன்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மானாமதுரை தொகுதி, இளையான்குடி வட்டம், சாலைக் கிராமத்தில் கூடுதலாக தெரு விளக்கு வசதிகள் செய்ய அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, இளையான்குடி வட்டம், சாலைக் கிராமத்தில் கூடுதலாக தெரு விளக்கு வேண்டி ஊராட்சியிடமிருந்து விண்ணப்பம் ஏதும் பெறப்படவில்லை. விண்ணப்பம் பெறப்பட்டு, மதிப்பீட்டுத் தொகை செலுத்தினால் கூடுதல் தெரு விளக்குகள் அமைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.*

**69—**

## மின்மாற்றிகள் கொள்முதல்

**வினா எண் 44350—திரு. என்.ஆர். ரெங்கராஜன்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தமிழகத்தில் பழுதாகும் மின்மாற்றிகளை மாற்றியமைக்க காலதாமதம் ஆவதால், அதிக அளவில் மின்மாற்றிகளை கொள்முதல் செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*அனைத்து மின் பகிர்மான வட்டங்களிலும் பழுதடைந்த மின்மாற்றிகள் பழுதுநீக்கும் நிறுவனங்கள்மூலம் சரி செய்யப்படுகின்றன. 2013-2014-ல் 9,000 எண்ணிக்கைகள் பழுதடைந்த*

பகிர்மான மின்மாற்றிகளை பழுதுநீக்கம் செய்ய அனுமதி பெறப்பட்டதில் பழுதடைந்திருந்த 7,498 மின்மாற்றிகள் அனைத்தும் பழுதுநீக்கம் செய்யப்பட்டன. 2014-2015-ல் 9,000 எண்ணிக்கைகள் பழுதடைந்த பகிர்மான மின்மாற்றிகள் பழுது நீக்கம் செய்ய அனுமதி பெறப்பட்டு, 66 நிறுவனங்களுக்கு விலை ஒப்பந்த ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. அவசர காலங்களில் பழுதடைந்த மின்மாற்றிகளை மாற்ற புதிய மின்மாற்றிகளும் வழங்கப்படுகின்றன. மேலும் நிலையான மற்றும் சீரான மின் விநியோகம் செய்ய மாண்புமிகு தமிழக முதல்வரின் உத்தரவின் பேரில் பல்வேறு திறன்களில் 20,000 மின்மாற்றிகள் கொள்முதல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு மின்மாற்றிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

**70—**

## சூரிய சக்திமூலம் மின்உற்பத்தி

**வினா எண் 44379—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தமிழகத்தில் வீடுகளில் 1 கிலோ வாட் அளவிற்கு சூரிய சக்திமூலம் மின் உற்பத்தி செய்யும் திட்டத்தினைச் செயல்படுத்த அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் வீடுகளில் 1 கிலோ வாட் அளவிற்கு சூரிய சக்திமூலம் மின் உற்பத்தி செய்யும் திட்டம் அனுமதிக்கப்பட்டு அமலில் உள்ளது. நுகர்வோர் சம்பந்தப்பட்ட செயற் பொறியாளரை அணுகி இது தொடர்பான தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.*

**71—**

## தடையில்லா மின்சாரம் வழங்குதல்

**வினா எண் 44766—திரு. ம. குணசேகரன்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*





*(அ) மானாமதுரை தொகுதி, இளையான்குடி ஒன்றியம், விஜயன்குடி ஊராட்சியில் கூடுதலாக மின்மாற்றி அமைத்து, தடையில்லா மின்சாரம் வழங்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, இளையான்குடி ஒன்றியம், விஜயன்குடி கிராமத்திற்கு மருதங்கநல்லூர் SS-III 100 KVA மின் மாற்றிமூலம் மின் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்கண்ட மின் மாற்றி வரையறுக்கப்பட்ட மின் பளுவிற்குள் இருப்பதாலும், மேற்படி பகுதியில் குறைந்த மின்னழுத்தக் குறைபாடு எதுவும் இல்லாததாலும் தற்பொழுது புதிய மின் மாற்றி அமைக்க வேண்டிய அவசியம் இல்லை.*

**72—**

## கூடுதல் மின்மாற்றி அமைத்தல்

**வினா எண் 44767—திரு. ம. குணசேகரன்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மானாமதுரை தொகுதி, இளையான்குடி ஒன்றியம், சூராணம் ஊராட்சியில் கூடுதலாக மின்மாற்றி அமைத்து, அதிக மின்னழுத்தமுள்ள மின்சாரம் வழங்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, இளையான்குடி ஒன்றியம், சூராணம் கிராமத்திற்கு இரண்டு மின் மாற்றிகள் முறையே சூராணம் SS-I 100 KVA மற்றும் சூராணம் SS-II 100 KVA மூலம் மின் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்கண்ட மின் மாற்றிகளில் இணைக்கப்பட்டிருக்கும் மின் பளுவிற்கு மேற்படி மின் மாற்றிகளின் திறனே போதுமானது என்பதாலும், மேற்படி பகுதியில் குறைந்த மின்னழுத்தக் குறைபாடு எதுவும் இல்லாததாலும் தற்பொழுது புதிய மின்மாற்றி அமைக்க வேண்டிய அவசியம் இல்லை.*

[2014 டிசம்பர் 5

**73—**

## மின் சிக்கனம் குறித்த விழிப்புணர்வு

**வினா எண் 44772—திரு. ம. குணசேகரன்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மின் சிக்கனம் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஆம். மின் சிக்கனம் பற்றிய விழிப்புணர்வு ஒவ்வொரு வருடமும் தேசிய மின் சேமிப்பு நாள் டிசம்பர் 14 ஆம் தேதியும், தேசிய மின் சேமிப்பு வாரம் டிசம்பர் 14 ஆம் தேதி முதல் டிசம்பர் 20 ஆம் தேதி வரையிலும் தமிழ்நாடு முழுவதும் கொண்டாடப்படுகிறது. அச்சமயத்தில் பொது மக்களுக்கு நாளிதழ்கள் வாயிலாகவும், தொலைபேசி தகவலாகவும், திரையரங்குகளில் விளம்பரங்கள் வாயிலாகவும், தொலைகாட்சிகள் வாயிலாகவும், பேரணி, மனிதச் சங்கிலி, வீதி நாடகங்கள், கருத்தரங்கு, பயிற்சி பட்டறை, கலந்துரையாடல் ஆகிய நிகழ்ச்சிகள் மூலமும் மின் சேமிப்பு வாசகங்கள் சிறு குறிப்பேடுகளாகவும், சிறு புத்தகங்களாகவும் அச்சிடப்பட்டு பொது மக்களுக்கு விநியோகிக்கப்படுகின்றன. வணிக கட்டடங்கள், கல்யாண மண்டபங்களில், பெயர் பலகைகள், குறியீட்டு பலகைகள், அலங்கார விளக்குகளின் பயன்பாட்டினைக் குறைப்பது பற்றி பொதுமக்களுக்குத் தெளிவுபடுத்தப்படுகிறது. மின் சேமிப்பு வாசகங்களும், குறிப்புகளும் நிரந்தரமாக மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழக வலைதளத்தில் வெளியிடப்படுகிறது. மேலும், மின் சிக்கன நடவடிக்கையாக, தமிழக அரசின் அறிவிப்பின்படி மாநிலம் முழுவதும் உள்ள குடிசை மின் நுகர்வோர்களுக்கு, விலையில்லா சிறு குழல் விளக்குகளை குமிழ் விளக்குகளுக்குப் பதிலாக விநியோகிப்பதற்கான செயல்பாட்டில் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் ஈடுபட்டுள்ளது.*



2014 டிசம்பர் 5]

**74—**

## புதிய கட்டடம் கட்டுதல்

**வினா எண் 16048—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பழுதடைந்த வீட்டு வசதி வாரிய வணிக அலுவலகம் மற்றும் சமூக நலக்கூட கட்டடங்களை இடித்துவிட்டு புதிய கட்டடங்களைக் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வீட்டு வசதி மற்றும் நகர்ப் புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சென்னை நகரில் உள்ள பழுதடைந்த வீட்டு வசதி வாரிய வணிக அலுவலகம் மற்றும் சமூக நலக்கூட கட்டடங்களை இடித்து விட்டு, புதிய கட்டடங்களை கட்டுவது குறித்த விவர அறிக்கையின்படி, வீட்டு வசதி வாரியத்தின் சென்னை நகரில் உள்ள கோட்டங்கள் வாரியாக மேற்கொள்ள இருக்கும் புதிய திட்டப் பணிகள் பின்வருமாறு:*

**1. நந்தனம் கோட்டம்/சென்னை நகரம்**

**(அ) சீத்தம்மா காலனி திட்டப் பகுதியில் கடைகள் மற்றும் அலுவலக வளாகம் கட்டும் பணி**

*சீத்தம்மா காலனி திட்டப் பகுதியில் சிதலமடைந்த நிலையில் இருந்த கடைகள் மற்றும் தனிநபர் குடியிருப்புகள் முழுவதுமாக இடிக்கப்பட்டு, கடைகள் மற்றும் அலுவலக வளாகம் கட்டுவதற்காக ரூ.99.72 இலட்சங்களுக்கு ஒப்பந்தம் அளிக்கப்பட்டு அனைத்துப் பணிகளும் முடிவுறும் தருவாயில் உள்ளன.*

**(ஆ) சென்னை, (சி.ஐ.டி. காலனி) ஆலிவர் ரோடு திட்டத்தில் அலுவலகம் மற்றும் வணிக வளாகம் கட்டும் பணி.**

*தரைதளம் + மூன்று தளங்கள் கொண்ட கடை மற்றும் அலுவலகக் கட்டடம் கட்டுவதற்கு சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தில் வழங்கப்பட்ட வரைபட அனுமதியின்*

காலக்கெடு 22-12-2015 வரை புதுப்பிக்கப்பட்டுள்ளது. இத்திட்டப்பகுதியிலுள்ள குடியிருப்புதாரர்களை காலி செய்ய உரிய தாக்கீது அனுப்பப்பட்டு மேல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**(இ) சென்னை மேற்கு சி.ஐ.டி. நகரில் அலுவலகம் மற்றும் வணிக வளாகக் கட்டடம் கட்டும் பணி**

சென்னை மேற்கு சி.ஐ.டி. நகர் பகுதியில் சிதலமடைந்த நிலையிலுள்ள சமூக நலக்கூடத்தை இடித்துவிட்டு, சிறிய சமுதாய நலக்கூடத்துடன் கூடிய வணிக வளாகம் கட்டுவதற்காக திட்ட மேலாண்மைப் பணிகள் குழு மூலமாக வரைபடம் தயாரிக்கும் பணி மேற்கொள்ளும்போது 2-வது முழுமைத் திட்டத்தின்படி (Master Plan-II) இந்நிலம் கல்வித் துறை மண்டலத்தில் வருவதால், மேற்கண்ட திட்டம் செயல்படுத்த இயலாத நிலையில் உள்ளதால், இவ்விடத்தை தற்பொழுது உள்ள அதே நிலையிலேயே திறந்தவெளி ஏலம்மூலம் விற்பனை செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**(ஈ) நந்தனம் விரிவாக்கத் திட்டப் பகுதியில் கடைகள் மற்றும் அலுவலகம் கட்டும் பணி**

மாதிரி வரைபடங்கள் தயாரித்து தலைமைப் பொறியாளரின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. ஏற்கெனவே, உள்ள கட்டடங்களை இடிப்பதற்காக வாரிய ஒப்புதல் வேண்டி சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேலும், சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் வரைபட ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. ரூ.306.50 இலட்சத்தில் திட்ட மதிப்பீடு தயாரித்து, வாரிய ஒப்புதலுக்கு அனுப்பியதில் வாரிய தீர்மான எண் 4.05, நாள் 7-11-2013-ன்படி ஏற்கெனவே உள்ள 9 கடைகளிலிருந்து பெறப்பட்டு வரும் வாடகை மற்றும் புதியதாக கட்டப்படவுள்ள வணிக வளாகக் கட்டடத்திற்குரிய உத்தேச வருமானத்துடன் வரும் 20 ஆண்டுகளுக்கான வருமானத்தை ஒப்பிட்டு வாரியத்தின் ஒப்புதல் பெற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**(உ) நந்தனம் விரிவாக்கத் திட்டப் பகுதியில் உள்ள சமூக நலக் கூடம்**

நந்தனம் விரிவாக்கத் திட்டப் பகுதியில் உள்ள சமூக நலக் கூடத்திற்கான நிலம் திறந்தவெளி ஏலம் மூலமாக விற்பனை செய்ய மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையில் எவ்வித வரவேற்பும்





இல்லாததால், இத்திட்டப் பகுதியில் 12 உயர் வருவாய்ப் பிரிவு குடியிருப்புக்கான திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வாரிய அனுமதி பெறப்பட்டு, வாரியக் கூட்டக் குழுவின் அறிவுறுத்தலின்படி நந்தனம் விரிவாக்கத் திட்டப் பகுதியில் 12 உயர் வருவாய்ப் பிரிவு குடியிருப்புகள் கட்டப்படவுள்ளவற்றிற்கு Re-classification ஒப்புதல் பெற வேண்டி சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் தள ஆய்வு எதிர்நோக்கப்பட்டுள்ளது. Re-Classification ஒப்புதல் பெற்றவுடன் பொது மக்களிடமிருந்து உரிய கேட்பு பெறுவதற்காக (Demand Assessment) விண்ணப்பங்கள் விளம்பரம் செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**2. க.க. நகர் கோட்டம்/சென்னை நகரம்**

**(அ) க.க. நகர், பி.டி. ராஜன் சாலையிலுள்ள 44 கடைகள்**

க.க. நகர், பி.டி. ராஜன் சாலையிலுள்ள 44 கடைகள், வாரிய தீர்மான எண் 4.07, நாள் 30-1-2013-ன்படி இந்திய எரிவாயு நிறுவனத்தின் (Gail India Limited) கோரிக்கையை ஏற்று, க.க. நகர் பி.டி. ராஜன் சாலையிலுள்ள வணிக வளாக மனையில் செயல்படுத்தப்படும் அனைத்துக் கட்டுமானப் பணிகளையும் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின்மூலம் செயல்படுத்தும் நிபந்தனையுடன் இடத்தை சந்தை விலையில் இந்திய எரிவாயு நிறுவனத்திற்கு ஒதுக்கீடு செய்ய வாரியம் தீர்மானித்து ஒப்புதல் அளித்துள்ளது.

இந்நிலையில், ஏற்கெனவே அந்த இடத்தில் வாடகைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட கடை ஒதுக்கீடுதாரர்கள், அதே இடத்தில் புதிய கடைகளை ஒதுக்கீடு செய்யும்படி கேட்டுள்ளபடியால், மேற்படி இடத்தை 49 A1 மற்றும் 49 A2 என்று பிரித்து வரைபடம் தயார் செய்யப்பட்டு தலைமைப் பொறியாளர், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் ஒப்புதல் பெறப்பட்டவுடன் மேல் நடவடிக்கைகள் எடுக்கப்பட உள்ளன.

**(ஆ) க.க. நகர், முனுசாமி சாலையிலுள்ள 10 பழுதடைந்த கடைகள்**

க.க. நகர் முனுசாமி சாலையிலுள்ள 10 பழுதடைந்த கடைகள் காலி செய்யப்பட்டு வாரியம் வசம் உள்ளது. மீதமுள்ள 6 கடைகளில் அமுதம் சிறப்பங்காடி இயங்கி வருகிறது. மேலும், மேலாண்மை இயக்குநர்/தமிழ்நாடு மின்சார வாரியம் (TANGEDCO) துணை மின் நிலையம் அமைப்பதற்காக இந்த இடத்தை

உடனடியாக பணம் செலுத்தும் விதத்தில் ஒதுக்கீடு செய்யுமாறு கோரியுள்ளார்கள். இதற்கு வாரியத்தின் ஒப்புதல் பெறப்பட்டு, மின்சார வாரியத்திற்கு விற்பணைப் பத்திரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**(இ) அசோக் நகர், 10–வது நிழல் சாலை 22 சிறுகடைகள் மற்றும் 10 பழுதடைந்த கடைகள்**

*அசோக் நகர் 10-வது நிழல் சாலை 22 சிறுகடைகள் மற்றும் 10 பழுதடைந்த கடைகள் இடிக்கப்பட்டுள்ளன. மேற்படி இடத்தில் கீழ்தளத்தில் கார்கள் நிறுத்துமிடமும், தரைதளத்தில் கடைகளும், முதல், இரண்டு, மூன்றாம் தளங்களில் அலுவலகம் அமையும் விதத்தில் கட்டட வரைபடம் தயார் செய்யப்பட்டு, தலைமைப் பொறியாளர் அவர்களின் ஒப்புதல் பெறப்பட்டவுடன் மேல் நடவடிக்கைகள் எடுக்கப்பட உள்ளன.*

**(ஈ) டிரஸ்ட்புரத்தில் உள்ள 9 கடைகள் மற்றும் 5 தனிநபர் குடியிருப்புகள்**

*டிரஸ்ட்புரத்தில் உள்ள 9 கடைகள் மற்றும் 5 தனிநபர் குடியிருப்புகள் இடிக்கப்பட்டுள்ளன. மேற்படி இடத்தில் கீழ்தளத்தில் கார்கள் நிறுத்துமிடமும், தரைதளத்தில் கடைகளும், முதல், இரண்டு, மூன்றாம் தளங்களில் அலுவலகம் அமையும் விதத்தில் கட்டட வரைபடமும் தயாரிக்கப்பட்டு வருகின்றன.*

**75—**

**கயிறு தயாரிக்கும் தொழிற்சாலை**

**வினா எண் 25794—திரு. ம. குணசேகரன்:** *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் பகுதியில் பின்னலாடை தொழில் மற்றும் கயிறு தயாரிக்கும் தொழிற்சாலைகள் தொடங்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் பின்னலாடை தயார் செய்ய,*



*அனுபவமிக்க தொழிலாளர்கள் இல்லை. பின்னலாடை தயார் செய்ய தேவையான துணிகள் மற்றும் இயந்திரங்கள் திருப்பூர் மாவட்டத்திலிருந்துதான் கொள்முதல் செய்யப்பட வேண்டும். மேலும், பெரிய தொழிலக தயாரிப்புகளுடன் சந்தை வாய்ப்பில் போட்டியிட்டு, இத்தொழிலில் இலாபம் பெற இயலாது. எனவே, பின்னலாடைத் தொழிலை மானாமதுரை தொகுதியில் பொருளாதார ரீதியில் இலாபகரமாக துவங்க சாத்தியக் கூறுகள் இல்லை.*

*2. மானாமதுரை தொகுதியில் தென்னை சார்ந்த தொழில்களுக்கான கயிறு தொழில்கள் அமைக்க போதிய அனுபவமிக்க தொழிலாளர்கள் இல்லாத காரணத்தினால் கயிறு திரிக்கும் தொழிற்சாலைகள் துவங்க சாத்தியக்கூறுகள் இல்லை.*

*3. எனினும், ஆர்வமுள்ள தொழில்முனைவோர்கள் மானாமதுரை தொகுதி, திருப்புவனம் பகுதியில் பின்னலாடை தொழில் மற்றும் கயிறு தயாரிக்கும் தொழில் நிறுவனம் தொடங்க முன்வந்தால், அவர்கள் முதலீட்டு மானியம், வேலைவாய்ப்பு பெருக்க மானியம், கூடுதல் முதலீட்டு மானியம், குறைந்த அழுத்த மின் மானியம், மின்னாக்கி மானியம் மதிப்புக் கூட்டு வரிக்கு ஈடான மானியம் போன்ற மானியங்கள் பெற்று பயன் பெறலாம்.*

*4. மாவட்டத்தின் எப்பகுதியிலும் அமைந்துள்ள குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் நிறுவியுள்ள 320 கே.வி.ஏ. திறன் வரையுள்ள மின்னாக்கியின் மதிப்பில் அதிகபட்சமாக ரூ.5 இலட்சம் வரை மின்னாக்கி மானியம் வழங்கப்பட்டு வருகின்றது.*

*5. மேலும், தமிழக அரசின் சிறப்புத் திட்டமான "புதிய தொழில்முனைவோர் மற்றும் தொழில் நிறுவனங்கள் மேம்பாட்டுத் திட்டத்தின்" (Needs) கீழ் பட்டம், பட்டயம் மற்றும் தொழில்நுட்பக் கல்வி பயின்ற 21 முதல் 45 வயதுக்குட்பட்ட புதிய முதல் தலைமுறை தொழில்முனைவோர்கள் தனித்தோ கூட்டாகவோ, உற்பத்தி அல்லது சேவை சார்ந்த இனங்களில் தொழில் துவங்க ரூ.5.00 இலட்சத்திற்கு மேல் ரூ.1.00 கோடி வரையிலான திட்டங்களுக்கு 25 விழுக்காடு மானியத்துடன்கூடிய வங்கிக் கடன் உதவி (அதிகபட்ச மானியம் ரூ.25 இலட்சம் வரை) பெறலாம்.*

*6. மேற்காணும் திட்டங்கள் ஏதேனும் ஒன்றின்கீழ் தொழில் தொடங்க விரும்பும் ஆர்வமுள்ள தொழில்முனைவோர், சிவகங்கை மாவட்டத் தொழில் மையத்தில் விண்ணப்பித்து, மானியங்களுடன் வழிகாட்டுதல்களையும் பெறலாம்.*

**76—**

## கூட்டுறவு வங்கிக் கடன்

**வினா எண் 1968—திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் வடக்கு தொகுதியில் உள்ள கூட்டுறவு வங்கிகள் மூலம் பொதுமக்களுக்கு விரைவில் கடன் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் வடக்கு தொகுதியில் பின்வரும் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன:

1. சின்ன திருப்பதி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம்

2. அய்யம்பெருமாம்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம்

3. கே.கொண்டப்ப நாயக்கன்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம்

4. சேலம் கூட்டுறவு தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி

5. அம்மாப்பேட்டை நகரக் கூட்டுறவு வங்கி

6. சேலம் நகரக் கூட்டுறவு வங்கி

7. செவ்வாய்பேட்டை நகரக் கூட்டுறவு வங்கி

8. அம்மாப்பேட்டை நகரக் கூட்டுறவுக் கடன் சங்கம்

9. சேலம் மத்திய கூட்டுறவு வங்கி

10. சேலம் மத்திய கூட்டுறவு வங்கி-பொன்னம்மாபேட்டை கிளை

இவை அனைத்தும் சேலம் வடக்கு தொகுதி மக்களுக்குத் தேவையான கடன் வசதிகளை அளித்து வருகின்றன. கடந்த 2011-2012, 2012-2013 மற்றும் 2013-2014 (செப்டம்பர் 2013 வரை) மேற்கண்ட கூட்டுறவுக் கடன் சங்கங்கள் வழங்கிய கடன் விவரங்கள் பின்வருமாறு:



| வ. எண் | கூட்டுறவு நிறுவனத்தின் பெயர் | சங்கங்களின் எண்ணிக்கை | (2011-2012 முதல் 2012-2013 வரை) | | (2013-2014 செப்டம்பர் வரை) | |
|---|---|---|---|---|---|---|
| | | | பயனாளி-களின் எண்ணி-க்கை | வழங்கப்-பட்ட கடன்கள் (ரூ. கோடியில்) | பயனாளி-களின் எண்ணி-க்கை | வழங்கப்-பட்ட கடன்கள் (ரூ. கோடியில்) |
| 1 | தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் | 3 | 43,016 | 176.65 | 9,331 | 41.54 |
| 2 | சேலம் கூட்டுறவுத் தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி | 1 | 2,592 | 11.06 | 1,093 | 4.86 |
| 3 | நகரக் கூட்டுறவு வங்கிகள் | 3 | 2,47,280 | 1,084.97 | 52,748 | 244 |
| 4 | அம்மாப்-பேட்டை நகரக் கூட்டுறவுக் கடன் சங்கம் | 1 | 7,113 | 198.16 | 13,339 | 39.04 |
| 5 | மாவட்ட மத்தியக் கூட்டுறவுக் வங்கிக் கிளைகள் | 2 | 10,650 | 50.14 | 2,586 | 12.74 |
| | கூடுதல் | 10 | 3,74,651 | 1,520.98 | 79,097 | 342.18 |

[2014 டிசம்பர் 5

**77—**

## தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம்

**வினா எண் 37185—திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) தென்காசி தொகுதி, காசிமேஜர்புரம் ஊராட்சியில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) காசிமேஜர்புரம் ஊராட்சி, 0.324 மேலகரம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் விவகார எல்லைக்குட்பட்ட ஒரு வருவாய்க் கிராமம் ஆகும். மேலகரம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தில் 31-7-2013-ல் 9,562 பேர் உறுப்பினர்களாக உள்ளனர். இவர்களில் 1,456 உறுப்பினர்கள் கடன் பெற்று பயனடைந்து வருகின்றனர். தற்போது புதிதாக தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் அமைக்க கோரும் காசிமேஜர்புரம் கிராம மக்களில் 105 பேர் மட்டுமே மேலகரம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் உறுப்பினர்களாக உள்ளனர். காசிமேஜர்புரம் கிராமத்திற்கும், மேலகரம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்திற்கும் இடையே உள்ள தூரம் 3 கிலோ மீட்டர் மட்டுமே. காசிமேஜர்புரம் கிராமத்தின் மொத்த நிலப்பரப்பு 140 ஏக்கர் ஆகும். இதில் பயிரிடக்கூடிய நிலப்பரப்பு 140 ஏக்கர் ஆகும். மேலகரம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்க எல்லையில் மொத்தம் 1,196 ஏக்கர் மட்டுமே உள்ளன. அதில் பயிரிடக்கூடிய நிலப்பரப்பு 880 ஏக்கர் மட்டுமே ஆகும்.*



2014 டிசம்பர் 5]

*மேலும், மேலகரம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் 2011-2012 ஆம் ஆண்டு தணிக்கை அறிக்கையின்படி ரூ.48.78 இலட்சம் குவிந்த நட்டத்தில் இயங்குகிறது. ஏற்கெனவே நட்டத்தில் இயங்கிக் கொண்டு இருக்கும் மேலகரம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தினைப் பிரித்து காசிமேஜர்புரம் கிராமத்தில் சங்கம் அமைத்தால் மேலும் நட்டமடைந்து நலிவடைய வாய்ப்புள்ளது.*

*புதிதாக தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் அமைப்பதற்கு அரசாணை (டி) எண் 376, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள் 3-10-2006-ல் உள்ள நிபந்தனைகளின்படி பரிசீலிக்கையில் காசிமேஜர்புரம் கிராமத்தில் பயிரிடக்கூடிய நிலப்பரப்பு 140 ஏக்கர் மட்டும் உள்ளன. மேலும் ஓராண்டிற்கு குறைந்தபட்சம் ரூ.2 கோடி அளவிற்கு அனைத்து வகை கடன்களும் வழங்க வழிவகை இல்லாத நிலையில் காசிமேஜர்புரம் கிராமத்தில் புதிய தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் அமைக்க வாய்ப்பு இல்லை.*

**78—**

## கூட்டுறவு விவசாயக் கிடங்கு

**வினா எண் 37776—திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) தென்காசி தொகுதி, கடையநல்லூர் ஒன்றியம், குலையநேரியில் கூட்டுறவு விவசாயக் கிடங்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) குலையநேரி ஊராட்சி, இரட்டைக்குளம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் விவகார எல்லைக்கு உட்பட்ட ஒரு பகுதி ஆகும். இச்சங்கத்தில், குலையநேரி*

[2014 டிசம்பர் 5

ஊராட்சியைச் சேர்ந்த 1,418 நபர்கள் உறுப்பினர்களாக உள்ளனர். அதில், 155 உறுப்பினர்கள் கடன் பெற்றுள்ளனர். இரட்டைக்குளம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்திற்கு 100 மெ.டன் கொள்ளளவு கொண்ட இரண்டு சேமிப்புக் கிடங்குகள் உள்ளன. மேலும், தற்போது 2012-2013 ஆம் ஆண்டில், NABARD RIDF XVIII திட்டத்தின்கீழ், 100 மெ.டன் கொள்ளளவில் புதியதாக சேமிப்புக் கிடங்கு கட்டப்பட்டுள்ளது. குலையநேரி ஊராட்சியில், சேமிப்புக் கிடங்கு கட்டுவதற்கு, இரட்டைக்குளம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்திற்கு சொந்தமான இடம் இல்லாததால், குலையநேரி ஊராட்சியில் புதியதாக சேமிப்புக் கிடங்கு கட்ட சாத்தியக்கூறுகள் இல்லை. எனவே, குலையநேரி ஊராட்சியில் உள்ள உறுப்பினர்கள், இரட்டைக்குளம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தில் உள்ள சேமிப்புக் கிடங்குகளைப் பயன்படுத்திக்கொள்ளலாம்.

**79—**

## மலிவு விலை உணவகம்

**வினா எண் 37787—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கூட்டுறவுத் துறைமூலம் மலிவு விலை உணவகங்கள் நடத்த அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

அரசு பொதுத் துறை மற்றும் இதர நிறுவனங்களில் கூட்டுறவு உணவகம் தேவைப்படுவதால் அந்த நிறுவனத்தை சார்ந்த பணியாளர்கள் / அலுவலர்கள் ஆகியோர் குறைந்தது 25 நபர்கள் சேர்ந்து கூட்டுறவுக் சங்கங்களின் விதிகளில் அட்டவணை 1-ல் வரையறுக்கப்பட்ட படிவம் ஒன்றை பூர்த்தி செய்து, உத்தேசிக்கப்பட்ட கூட்டுறவு உணவகத்தின் துணை விதிகளின் நகல்களுடன் நிறுவனம் அமைந்துள்ள பகுதியின் கூட்டுறவுச் சங்கங்களின் சரகத் துணைப் பதிவாளருக்கு விண்ணப்பித்தால், தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் மற்றும் விதிகளுக்குட்பட்டு வாழ்திறன் அடிப்படையில் கூட்டுறவு உணவகம் அமைக்க தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.



2014 டிசம்பர் 5]

**80—**

## புதிய கட்டடம்

**வினா எண் 37789—திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேதாரண்யம் வட்டம், மருதூர் வடக்கு Z 262 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேதாரண்யம் வட்டம், மருதூர் வடக்கு Z 262 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்திற்கு ரூ.15.67 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் சொந்தக் கட்டடம் கட்ட திட்டமிட்டு அதில் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சி திட்டத்தின்கீழ் ரூ.9 இலட்சம் நிதி உதவி பெற்றும் எஞ்சிய தொகை ரூ.6.67 இலட்சம் சங்கத்தின் சொந்த நிதியைக் கொண்டும் 800 சதுர அடி பரப்பில் புதிய கட்டடம் கட்டப்பட்டு, அனைத்துப் பணிகளும் நிறைவு பெற்றுள்ளன.

மேலும், ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதித் திட்டத்தின் 100 மெட்ரிக் டன் கிடங்கு ரூ. 8 இலட்சம் திட்டமதிப்பீட்டில் கட்டடப் பணி நிறைவடைந்து தற்போது செயல்பாட்டில் உள்ளது. இச்சங்கத்தின் கட்டுப்பாட்டில் 2 நியாய விலைக் கடைகள் உள்ளன. அவை இரண்டும் சொந்தக் கட்டடத்தில் செயல்படுகின்றன.

**81—**

## கூட்டுறவு விவசாயக் கிடங்கு

**வினா எண் 38063—திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2014 டிசம்பர் 5

(அ) தென்காசி தொகுதி, அரியப்பபுரம் ஊராட்சியில் கூட்டுறவு விவசாயக் கிடங்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செல்லூர், கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரியப்பபுரம் ஊராட்சி, நாகல்குளம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் விவகார எல்லைக்கு உட்பட்ட ஒரு பகுதி ஆகும். இச்சங்கத்தில், அரியப்பபுரம் ஊராட்சியைச் சேர்ந்த 100 நபர்கள் உறுப்பினர்களாக உள்ளனர். நாகல்குளம் தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கத்திற்கு 150 மெ.டன் கொள்ளளவு கொண்ட சேமிப்புக் கிடங்கு உள்ளது. மேலும், தற்போது 2012-2013 ஆம் ஆண்டில், NABARD RIDF XVIII திட்டத்தின்கீழ், 100 மெ.டன் கொள்ளளவில் புதியதாக சேமிப்புக் கிடங்கு கட்டப்பட்டுள்ளது. அரியப்பபுரம் ஊராட்சியில், சேமிப்புக் கிடங்கு கட்டுவதற்கு, நாகல்குளம் தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கத்திற்கு சொந்தமான இடம் இல்லாததால், அரியப்பபுரம் ஊராட்சியில் புதியதாக சேமிப்புக் கிடங்கு கட்ட சாத்தியக்கூறுகள் இல்லை. எனவே, அரியப்பபுரம் ஊராட்சியில் உள்ள உறுப்பினர்கள், நாகல்குளம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தில் உள்ள சேமிப்புக் கிடங்குகளை பயன்படுத்திக்கொள்ளலாம்.

**82—**

## தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம்

**வினா எண் 38404—திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தொகுதி, திருச்சிற்றம்பலம் ஊராட்சியில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2014 டிசம்பர் 5]

**விடை—**

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) எண் 0322 மேலகரம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் விவகார எல்லையில் மேலகரம், குற்றாலம், காசிமேஜர்புரம், இலஞ்சி, தென்காசி, ஆயிரப்பேரி, பாட்டப்பத்து, கீழப்புலியூர், சுந்தரபாண்டியபுரம், பாட்டாக்குறிச்சி திருச்சிற்றம்பலம் மற்றும் தட்டான்குளம் ஆகிய கிராமங்கள் உள்ளன. மேலகரம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத்தில் 31-7-2013-ல் 9,562 பேர் உறுப்பினர்களாக உள்ளனர். இவர்களில் 1,456 உறுப்பினர்கள் கடன் பெற்று பயனடைந்து வருகின்றனர். தற்போது புதியதாக தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் அமைக்க கோரும் திருச்சிற்றம்பலம் கிராம மக்களில் 20 பேர் மட்டுமே மேலகரம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தில் உறுப்பினர்களாக உள்ளனர். திருச்சிற்றம்பலம் கிராமத்திற்கும், மேலகரம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்திற்கும் இடையே உள்ள தூரம் 9 கிலோ மீட்டர் மட்டுமே. திருச்சிற்றம்பலம் கிராமத்தின் மொத்த நிலப்பரப்பு 437 ஏக்கர் ஆகும். இதில் பயிரிடக்கூடிய நிலப்பரப்பு 311 ஏக்கர் ஆகும்.

மேலும், மேலகரம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் 2011-2012 ஆம் ஆண்டு தணிக்கை அறிக்கையின்படி ரூ.48.79 இலட்சம் குவிந்த நட்டத்தில் இயங்குகிறது. இந்நிலையில் இச்சங்கத்தினைப் பிரித்து திருச்சிற்றம்பலம் கிராமத்தில் புதிய சங்கம் அமைத்தால் மேலும் நட்டமடைந்து நலிவடைய வாய்ப்புள்ளது.

புதியதாக தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் அமைப்பதற்கு அரசாணை (டி) எண் 376, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள் 3-10-2006-ல் உள்ள நிபந்தனைகளின்படி பரிசீலிக்கையில் திருச்சிற்றம்பலம் கிராமத்தில் புதிய தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் அமைக்க வாய்ப்பு இல்லை.

[2014 டிசம்பர் 5

**83—**

## கூட்டுறவு விவசாயக் கிடங்கு

**வினா எண் 38409—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தென்காசி தொகுதி, சிவநாடானூர் ஊராட்சியில் கூட்டுறவு விவசாயக் கிடங்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சிவநாடானூர் ஊராட்சி, திப்பணம்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் விவகார எல்லைக்கு உட்பட்ட ஒரு பகுதி ஆகும். திப்பணம்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத்தில், சிவநாடானூர் ஊராட்சியைச் சேர்ந்த 362 நபர்கள் உறுப்பினர்களாக உள்ளார்கள். அதில், 28 உறுப்பினர்கள் கடன் பெற்றுள்ளார்கள். திப்பணம்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்திற்கு 150 மெ.டன் கொள்ளளவு கொண்ட சேமிப்புக் கிடங்கு உள்ளது. மேலும், தற்போது 2012-2013 ஆம் ஆண்டில்* NABARD RIDF XVIII *திட்டத்தின்கீழ், 100 மெ.டன் கொள்ளளவில் புதியதாக சேமிப்புக் கிடங்கு கட்டப்பட்டுள்ளது.*

*சிவநாடானூர் ஊராட்சியில், சேமிப்புக் கிடங்கு கட்டுவதற்கு திப்பணம்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்திற்குச் சொந்தமான இடம் இல்லாததால் சிவநாடானூர் ஊராட்சியில் புதியதாக சேமிப்புக் கிடங்கு கட்ட சாத்தியக்கூறுகள் இல்லை. எனவே, சிவநாடானூர் ஊராட்சியில் உள்ள உறுப்பினர்கள், திப்பணம்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தில் உள்ள சேமிப்புக் கிடங்குகளைப் பயன்படுத்திக்கொள்ளலாம்.*



2014 டிசம்பர் 5]

**84—**

## கூட்டுறவு விவசாயக் கிடங்கு

**வினா எண் 39665—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தென்காசி தொகுதி, இனாம் வெள்ள கால் ஊராட்சியில் கூட்டுறவு விவசாயக் கிடங்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செல்லூர். கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) இனாம்வெள்ளக்கால் ஊராட்சி, கீழப்பாவூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் விவகார எல்லைக்கு உட்பட்ட ஒரு பகுதி ஆகும். இச்சங்கத்தில், இனாம்வெள்ளக்கால் ஊராட்சியைச் சேர்ந்த 90 நபர்கள் உறுப்பினர்களாக உள்ளனர். அதில் 40 உறுப்பினர்கள் கடன் பெற்றுள்ளனர். கீழப்பாவூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்திற்கு கீழப்பாவூரில் 150 மெ.டன் கொள்ளளவு கொண்ட சேமிப்புக் கிடங்கும், மேலப்பாவூரில் 150 மெ.டன் கொள்ளளவு கொண்ட சேமிப்புக் கிடங்கும் உள்ளது. இனாம்வெள்ளக்கால் ஊராட்சியில், சேமிப்புக் கிடங்கு கட்டுவதற்கு கீழப்பாவூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்திற்கு சொந்தமான இடம் இல்லாததால், இனாம்வெள்ளக்கால் ஊராட்சியில் புதியதாக சேமிப்புக் கிடங்கு கட்ட சாத்தியக்கூறுகள் இல்லை. எனவே, இனாம்வெள்ளக்கால் ஊராட்சியில் உள்ள உறுப்பினர்கள், கீழப்பாவூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தில் உள்ள சேமிப்புக் கிடங்குகளைப் பயன்படுத்திக்கொள்ளலாம்.*

**85—**

**கூட்டுறவு விவசாயக் கிடங்கு**

**வினா எண் 39666—திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* தென்காசி தொகுதி, கல்லூரணி ஊராட்சியில் கூட்டுறவு விவசாயக் கிடங்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* கல்லூரணி ஊராட்சி, திப்பணம்பட்டி வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் விவகார எல்லைக்கு உட்பட்ட ஒரு பகுதி ஆகும். இச்சங்கத்தில் கல்லூரணி ஊராட்சியைச் சேர்ந்த 560 நபர்கள் உறுப்பினர்களாக உள்ளனர். அதில், 15 உறுப்பினர்கள் கடன் பெற்றுள்ளனர். திப்பணம்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்திற்கு 150 மெ.டன் கொள்ளளவு கொண்ட சேமிப்புக் கிடங்கு உள்ளது. மேலும், தற்போது 2012-2013 ஆம் ஆண்டில், NABARD RIDF XVIII திட்டத்தின்கீழ், புதியதாக 100 மெ.டன் கொள்ளளவில் புதியதாக சேமிப்புக் கிடங்கு கட்டப்பட்டுள்ளது. கல்லூரணி ஊராட்சியில் சேமிப்புக் கிடங்கு கட்டுவதற்கு திப்பணம்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்திற்கு சொந்தமான இடம் இல்லாததால் கல்லூரணி ஊராட்சியில் புதியதாக சேமிப்புக் கிடங்கு கட்ட சாத்தியக்கூறுகள் இல்லை. எனவே, கல்லூரணி ஊராட்சியில் உள்ள உறுப்பினர்கள் திப்பணம்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தில் உள்ள சேமிப்புக் கிடங்குகளைப் பயன்படுத்திக்கொள்ளலாம்.

**86—**

**கூட்டுறவு விவசாயக் கிடங்கு**

**வினா எண் 40264—திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—





*(அ)* தென்காசி தொகுதி, ராஜபாண்டி ஊராட்சியில் கூட்டுறவு விவசாயக் கிடங்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* ராஜபாண்டி ஊராட்சி, வீரக்கேளம்புதூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் விவகார எல்லைக்கு உட்பட்ட ஒரு பகுதி ஆகும். இச்சங்கத்தில், ராஜபாண்டி ஊராட்சியைச் சேர்ந்த 688 நபர்கள் உறுப்பினர்களாக உள்ளனர். அதில், 588 உறுப்பினர்கள் கடன் பெற்றுள்ளனர். வீரக்கேளம்புதூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்திற்கு 150 மெ.டன் கொள்ளளவு கொண்ட சேமிப்புக் கிடங்கு உள்ளது. மேலும், தற்போது 2012-2013 ஆம் ஆண்டில், NABARD RIDF XVIII திட்டத்தின்கீழ், புதியதாக 100 மெ.டன் கொள்ளளவில் சேமிப்புக் கிடங்கு கட்டப்பட்டுள்ளது. மேலும், ராஜபாண்டி ஊராட்சியில், சேமிப்புக் கிடங்கு கட்டுவதற்கு, வீரக்கேளம்புதூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்திற்குச் சொந்தமான இடம் இல்லாததால், ராஜபாண்டி ஊராட்சியில் புதியதாக சேமிப்புக் கிடங்கு கட்ட சாத்தியக்கூறுகள் இல்லை. எனவே, ராஜபாண்டி ஊராட்சியில் உள்ள உறுப்பினர்கள், வீரக்கேளம்புதூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தில் உள்ள சேமிப்புக் கிடங்குகளைப் பயன்படுத்திக்கொள்ளலாம்.

**87—**

**கூட்டுறவு விவசாயக் கிடங்கு அமைத்தல்**

**வினா எண் 40266—திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* தென்காசி தொகுதி, இடையர்தவணை ஊராட்சியில் கூட்டுறவு விவசாயக் கிடங்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்:—**

*(அ) மற்றும் (ஆ) இடையர்தவணை ஊராட்சி, சுரண்டை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் விவகார எல்லைக்கு உட்பட்ட ஒரு பகுதி ஆகும். இச்சங்கத்தில் இடையர்தவணை ஊராட்சியைச் சேர்ந்த 394 நபர்கள் உறுப்பினர்களாக உள்ளனர். அதில், 120 உறுப்பினர்கள் கடன் பெற்றுள்ளனர். சுரண்டை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்திற்கு 150 மெ.டன் கொள்ளளவு கொண்ட கிடங்கு உள்ளது. மேலும், தற்போது 2012-2013 ஆம் ஆண்டில்* NABARD RIDF XVIII *திட்டத்தின்கீழ், 100 மெ.டன் கொள்ளளவில் புதியதாக சேமிப்புக் கிடங்கு கட்டப்பட்டுள்ளது. இடையர்தவணை ஊராட்சியில், சேமிப்புக் கிடங்கு கட்டுவதற்கு, சுரண்டை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்திற்கு சொந்தமான இடம் இல்லாததால், இடையர்தவணை ஊராட்சியில் புதியதாக சேமிப்புக் கிடங்கு கட்ட சாத்தியக்கூறுகள் இல்லை. எனவே, இடையர்தவணை ஊராட்சியில் உள்ள உறுப்பினர்கள், சுரண்டை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தில் உள்ள சேமிப்புக் கிடங்குகளைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.*

**88—**

## கூட்டுறவு விவசாயக் கிடங்கு அமைத்தல்

**வினா எண் 40267—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தென்காசி தொகுதி, வீ.கே. புதூர் ஊராட்சியில் கூட்டுறவு விவசாயக் கிடங்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*





**விடை–**

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்:–**

*(அ) மற்றும் (ஆ) வீ.கே. புதூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத்திற்கு ஏற்கெனவே 150 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கிடங்கு உள்ளது. 2012-2013 ஆம் ஆண்டில் ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதித்* (RIDF XVIII) *திட்டத்தின்கீழ், நபார்டு வங்கியின் நிதி உதவி பெற்று, இதே ஊராட்சியில், மேலும் ஒரு 100 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கிடங்கு கட்டப்பட்டுள்ளது.*

**89—**

## குளங்களைத் தூர் வாருதல்

**வினா எண் 41613—திரு. டி.ஆர்.பி. ராஜா:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி நகரத்திலுள்ள அனைத்து குளங்களையும் தூர் வாரி பயன்பாட்டிற்குக் கொண்டு வர அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) மன்னார்குடி நகரில் உள்ள அனைத்து குளங்களையும் நிதி நிலைமைக்கு ஏற்ப தூர்வார நடவடிக்கை எடுக்கப்படும்.*

**90—**

### வான்கோழி வளர்ப்பு

**வினா எண் 11965—திரு. ம. குணசேகரன்:** *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) வான்கோழிப் பண்ணை அமைத்து வான்கோழி வளர்க்க அரசு உதவி செய்ய முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*(அ) வான்கோழி பண்ணை அமைத்து வான்கோழி வளர்க்க மத்திய அரசு* Central Sector Plans Scheme *மூலம்* 'Poultry Venture Capital Fund' *கீழ் அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகளின்மூலம் ரூ.30.00 இலட்சம் வரை கடன் பெற்ற பயனாளிகளுக்கு, 25 சதவீதம் இறுதி கட்ட மானியமாக ரூ.7.50 இலட்சம் வரை (ரூ.10.00 இலட்சம்* SC/ST *பயனாளிகள்) வழங்கப்பட்டு வருகிறது.*

*(ஆ) கேள்வி எழாது.*

**91—**

### குளிர்பதன முறையில் மீன் விற்பனை

**வினா எண் 19146—திரு. கே. உலகநாதன்:** *மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*திருத்துறைப்பூண்டி தொகுதி, முத்துப்பேட்டையில் மீன்களை குளிர்பதன முறையில் விற்பனை செய்ய அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால், மீன் வளத் துறை அமைச்சர்:**

*திருத்துறைப்பூண்டி தொகுதி, முத்துப்பேட்டையில் மீன்களை குளிர்பதன முறையில் விற்பனை செய்யும் திட்டம் தற்போது அரசிடம் ஏதும் இல்லை.*





**92—**

### வீட்டுமனைப் பட்டா

**வினா எண் 32313—திரு. ஏ. லாசர்:** *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பெரியகுளம் தொகுதி, சருத்துப்பட்டி ஊராட்சியில், சர்வே எண் 2640/2, மந்தை புறம்போக்கு நிலத்தில், வீடு கட்டி குடியிருப்பவர்களுக்கு, வகை மாற்றம் செய்து பட்டா வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தாமரைக்குளம் பிட்-2 கிராமம், உட்கடை சருத்துப்பட்டி கிராமம், புல எண் 2640/2-ல் உள்ள, விஸ்தீர்ணம் 0.14.5 ஏர்ஸ் நிலம், மந்தை புறம்போக்கு என வகைபாடு செய்யப்பட்டுள்ளது. எனவே இந்நிலங்களில் வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது.*

**93—**

### வீட்டுமனைப் பட்டா

**வினா எண் 32320—திரு. ஏ. லாசர்:** *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பெரியகுளம் நகராட்சி, வாகம்புளி, வாகம்புளி புறவழிச்சாலை, அண்ணா நகர் ஆகிய இடங்களில் உள்ள மக்களுக்கு வகை மாற்றம் செய்து பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

[2014 டிசம்பர் 5

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) பெரியகுளம் நகரளவை எண் 3522/1 விஸ்தீரணம் 0.4524.0 ச.மீ. நிலம் முனிசிபல் சேர்மன், ரோடு என நகரளவை கணக்கில் தாக்கலாகியுள்ளது. மேற்படி புலத்தில் வீடு கட்டி வசித்து வரும் நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்குவது தொடர்பாக பெரியகுளம் நகர்மன்ற தீர்மான எண் 636, நாள் 27-9-2000ன்படி நகராட்சி ஆக்கிரமிப்புப் பகுதியில் 60 முதல் 70 வருடங்கள் குடியிருந்து வருவதாலும், குடியிருக்க வேறு மாற்று இடங்கள் இல்லாத ஏழ்மை நிலையில் உள்ளதாலும், நகராட்சி, நிருவாக ஆணையர் சென்னை அவர்களின் அனுமதி பெற்று ஆட்சேபணை இல்லை சான்று வழங்க ஏகமனதாகத் தீர்மானிக்கிறது எனத் தீர்மானம் இயற்றப்பட்டுள்ளது. எனவே வீட்டுமனைப் பட்டா வழங்க ஆட்சேபணை இல்லாத் தீர்மானம் இயற்றிய பின்புதான் வீட்டுமனைப் பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.*

**94—**

## வீட்டுமனையிடமாக வழங்குதல்

**வினா எண் 32321—திரு. ஏ. லாசர்:** *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பெரியகுளம் நகராட்சி, பழைய 1-வது வார்டில், சர்வே எண் 2032/1, 2032/2, 2033, 2034-ல் உள்ள 5.55 ஏக்கர் நிலத்தை வீடு இல்லாத ஏழை, எளிய மக்களுக்கு வீட்டுமனையிடமாக வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) பெரியகுளம் நகராட்சி புல எண்கள். 2032/1, 2032/2, 2033 மற்றும் 2034 விஸ்தீரணம் 5.36 ஏக்கர் நிலம் நகராட்சியின் வருவாய்ப் பெருக்கத்திற்காக தமிழ்நாடு வீட்டு வசதி*



2014 டிசம்பர் 5]

*வாரியம் மூலம் வீடுகள் கட்டுவதற்கு நகராட்சி மன்ற தீர்மானம் எண் 735இன்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டு நிலத்தை ஒப்படைப்பது தொடர்பான பிரேரணை நடவடிக்கையில் உள்ளது.*

**95—**

## வீட்டுமனைப் பட்டா

**வினா எண் 32322—திரு. ஏ. லாசர்:** *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பெரியகுளம் தொகுதி, குள்ளப்புரம் ஊராட்சியில் சர்வே எண் 139-ல் உள்ள 15 ஏக்கர் காட்டுப் புறம்போக்கு நிலத்தை வீடு இல்லாதவர்களுக்கு வீட்டுமனையாக கொடுக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) பெரியகுளம் தொகுதி, குள்ளப்புரம் கிராமம், புல எண் 139/1 விஸ்தீரணம் 5.16.5 எக்டேர் மற்றும் 139/3 விஸ்தீரணம் 2.85.5 எக்டேர் நிலங்கள் கரடு என கிராம கணக்குகளில் தாக்கலாகியுள்ளது. இந்நிலமானது அரசின் எதிர்காலத் தேவைக்குத் தேவைப்படுவதால், வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது.*

**96—**

## வீட்டுமனைப் பட்டா

**வினா எண் 32323—திரு. ஏ. லாசர்:** *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பெரியகுளம் தொகுதி, ஜி.கல்லுப்பட்டி ஊராட்சியில் சர்வே எண் 1533-ல் உள்ள, 64 சென்ட் அரசு புறம்போக்கு நிலத்தை வீடு இல்லாதவர்களுக்கு வீட்டுமனையாக கொடுக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) பெரியகுளம் தொகுதி, கெங்குவார்பட்டி பிட்-1 கிராமம், உட்கடை ஜி. கல்லுப்பட்டி ஊராட்சியில், புல எண் 1533/1 விஸ்தீரணம் 0.26.0 ஏர்ஸ் (64 சென்ட்) தீர்வை ஏற்பட்ட சர்க்கார் தரிசாக உள்ள நிலத்தை நத்தமாக பாகுபாடு மாற்றம் செய்து வீட்டுமனைப் பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.*

**97—**

## வீட்டுமனைப் பட்டா

**வினா எண் 41229—திரு. அ. அஸ்லம் பாஷா:** *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஆம்பூர் தொகுதி, மாதனூர் ஒன்றியம், 6-வது வார்டு மக்களுக்கு, இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க, அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஆம்பூர் வட்டம், சோலூர் கிராமம், புல எண் 65 மற்றும் 66 ஆகிய புலன்களின் மொத்த பரப்பு 0.71.0 எக்டேர் கொண்டது. இது ஓடை என வகைப்பாட்டில் உள்ளது. இப்புலம் 4-வது வார்டு, 6-வது வார்டு என்று பிரிக்கப்பட்டுள்ளது. இதில் சுமார் 36 நபர்கள் வீடு கட்டி வசித்து வருகின்றனர். மேற்படி நீர்நிலைப் புறம்போக்கு புலம், பட்டா வழங்கத் தடை செய்யப்பட்ட இடமாக உள்ளது. நீர்நிலைப் புறம்போக்கு புலங்களில் மனைப்பட்டா வழங்க இயலாது.*





**98—**

## வீட்டுமனைப் பட்டா

**வினா எண் 43245—திருமதி எஸ். விஜயதரணி:** *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) விளவங்கோடு தொகுதி, களியல்-நெட்டா சாலையோரம் குடியிருந்த மக்களுக்கு, செண்பகதரிசு பகுதியில் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், களியல் கிராமம், களியல்—நெட்டா சாலையோரத்தில், ஆக்கிரமித்து வீடு கட்டி குடியிருந்த, 30 குடும்பத்தினருக்கு, செண்பகதரிசு பகுதியில், களியல் கிராமம், புல எண் 50/1-ல் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது. எஞ்சியவர்களுக்குப் பட்டா வழங்க ஏதுவாக, நில வகைப்பாடு மாற்றம் செய்து பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.*

**99—**

## வீட்டுமனைப் பட்டா

**வினா எண் 44114—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*கன்னியாகுமரி மாவட்டத்தில் பூர்வீக சொத்துக்களுக்குரிய ஆவணங்கள் இல்லாதவர்களுக்கு அனுபவ உரிமையின் அடிப்படையில் பட்டா வழங்க அரசு முன்வருமா?*

[2014 டிசம்பர் 5

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:**

பூர்வீக சொத்துக்களுக்கு உரிய ஆவணங்கள் இல்லாதவர்களுக்கு அனுபவ உரிமையின் அடிப்படையில் பட்டா வழங்க தலப்பார்வை செய்தும், விசாரணை செய்தும், சொத்தின் வில்லங்கத் தன்மை அறிந்தும், கிராம கணக்கின் அடிப்படையில் ஆட்சேபணை இல்லாதபட்சத்தில் வாரிசு உரிமைப்படி பட்டா வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**100—**

## இறப்பு பதிவிற்கான மருத்துவச் சான்றிதழ்

**வினா எண் 32492—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இயற்கை மரணம் அடைந்தவர்களின் இறப்பைப் பதிவு செய்ய மருத்துவர்களிடமிருந்து சான்றிதழ் பெற வேண்டும் என்ற ஆணையைத் தடை செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இறப்பு அறிக்கையுடன், இறப்பின் காரணத்திற்கான மருத்துவச் சான்றிதழ் பெறுவது, மத்திய அரசின் பிறப்பு, இறப்பு சட்டத்தின் அடிப்படையில் செயல்பட்டு வரும் நடைமுறையாகும். உலக சுகாதார நிறுவனத்தின் அறிவுரையின்படி, இப்படிவம் வடிவமைக்கப்பட்டு இறப்பிற்கான காரணங்கள் இம்மருத்துவச் சான்றிதழ்கள் மூலமாகப் பெறப்பட்டு, தொகுக்கப்பட்டு மத்திய அரசுக்கு அனுப்பப்படுகின்றன. மேலும் மரணம் இயற்கையானதா என்பதை நிர்ணயிக்க மருத்துவச் சான்றிதழை மருத்துவரிடமிருந்து பெறுவது பிறப்பு, இறப்பு பதிவாளரின் கடமையாகும். இச்சான்றிதழ்



2014 டிசம்பர் 5]

பெறும் நடைமுறையை இரத்து செய்வது மத்திய அரசின் அதிகாரத்திலுள்ளது. எனவே, இயற்கை மரணம் அடைந்தவர்களின் இறப்பைப் பதிவு செய்ய மருத்துவர்களிடமிருந்து சான்றிதழ் பெற வேண்டும் என்ற ஆணையைத் தடை செய்வது தொடர்பாக மாநில அரசால் ஆணை வெளியிட சாத்தியமில்லை.

# பட்டியல்—11

**1—**

## ஆற்றில் மணல் எடுப்பதைத் தடுத்தல்

**வினா எண் 35269—திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விழுப்புரம் மாவட்டம், கரடிப்பாக்கம் அருகில் தென்பெண்ணை ஆற்றில் மணல் எடுப்பதைத் தடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர்பேட்டை வட்டம், கரடிப்பாக்கம் கிராமத்தில் தென்பெண்ணையாற்றில் இயங்கி வந்த மணல் குவாரி, தேசிய பசுமை தீர்ப்பாயத்தின் உத்தரவினைத் தொடர்ந்து நிறுத்தப்பட்டுவிட்டது. எனவே, தற்போது அங்கு மணல் குவாரி ஏதும் செயல்படவில்லை.

**2—**

## வெள்ளத் தடுப்புச் சுவர் அமைத்தல்

**வினா எண் 36573—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி:** மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2014 டிசம்பர் 5

சங்கரி தொகுதி, புள்ளாக்கவுண்டம்பட்டி ஊராட்சி, புதூர் காவேரி ஆற்றில் படித்துறை மற்றும் வெள்ளத் தடுப்புச் சுவர் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், சங்கரி வட்டம், சங்கரி ஒன்றியம், புள்ளாக்கவுண்டன்பட்டி ஊராட்சி, புதூரில் காவேரி ஆற்றின் இடது கரையில் ஏற்கெனவே இரண்டு படித்துறை அமைக்கப்பட்டுள்ளது. அருகில் இடுகாடு அமைந்துள்ளது. புதூர் மற்றும் சுற்றியுள்ள பொதுமக்களின் தேவைக்கு இந்தப் படித்துறை போதுமானது. அப்பகுதியில் ஆற்றின் கரை உயரமாக அமைந்துள்ளதால் வெள்ளத் தடுப்புச் சுவர் அமைக்க வேண்டிய அவசியம் இல்லை.

**3—**

## புதிய நீர்த்தேக்கம் அமைத்தல்

**வினா எண் 38134—திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர், கொட்டரை கிராமம் அருகில் மருதையாற்றில் புதிய நீர்த்தேக்கம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 4-4-2013 அன்று சட்டமன்றப் பேரவை விதி எண் 110-ன்கீழ் வெளியிடப்பட்ட அறிவிப்பின் அடிப்படையில் பெரம்பலூர்



2014 டிசம்பர் 5]

மாவட்டம், ஆலத்தூர் வட்டம், கொட்டரை கிராமம் அருகில் மருதையாற்றின் குறுக்கே மருதையாறு நீர்த்தேக்கத் திட்டம் அமைக்க கொள்கையளவில் நிருவாக ஒப்புதல் வழங்கி ஆணையிடப்பட்டது. இத்திட்டத்தினைச் செயல்படுத்துவதற்கு மட்ட அளவை மற்றும் புலதணிக்கை செய்வதற்கும், இத்திட்டத்திற்கு தேவையான நிலங்களை கையகப்படுத்துவதற்கும் ரூ.23.27 கோடிக்கு நிருவாக ஒப்பளிப்பு வழங்கி அரசாணை (நிலை) எண் 238, பொதுப் பணித் துறை, நாள் 25-9-2013-ல் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. இத்திட்டம்மூலம் சுமார் 4,194 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும்.

**4—**

## தாங்குசுவர் அமைத்தல்

**வினா எண் 41065—திரு. சு. மாதேஸ்வரன்:** மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆத்தூர் தொகுதியில் பொதுப் பணித் துறை நீர்வள ஆதார அமைப்பின் கட்டுப்பாட்டிலுள்ள ஏரிகளின் கரைகளை சாலையாகவும் பயன்படுத்த தாங்குசுவர் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆத்தூர் தொகுதியில் பொதுப் பணித் துறை நீர்வள ஆதார அமைப்பின் கட்டுப்பாட்டிலுள்ள ஏரிகளின் கரைகள் தரப்படுத்தப்பட்டு விவசாயிகள் போக்குவரத்துக்காக பயன்படுத்தப்பட்டு வருகிறது. எனவே, தாங்குசுவர்களை எல்லா ஏரிகளுக்கும் கட்ட அவசியம் எழவில்லை.

[2014 டிசம்பர் 5

**5—**

### கிணறுகள் அமைத்தல்

**வினா எண் 41071—திரு. சு. மாதேஸ்வரன்:** *மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஆத்தூர் தொகுதியிலுள்ள பொதுப் பணித் துறை ஏரிகளில் நிலத்தடி நீர் உயருவதற்கு கிணறுகள் அமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) மேல்வெள்ளாறு உப வடிநிலப் பகுதியில் உள்ள மொத்தம் 11 ஏரிகளில் நிலத்தடி நீர் செறிவூட்டுவதற்கான கிணறுகள் அமைக்க தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டத்தின்கீழ்* (TN-IAMWARM) *அரசாணை (நிலை) எண் 257, பொதுப் பணித் துறை, நாள் 7-10-2013-ன் மூலமாக நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இதில், ஆத்தூர் தொகுதியில் உள்ள புத்திரகவுண்டம்பாளைய மூன்று பொதுப் பணித் துறை ஏரிகளும் உள்ளடங்கும்.*

**6—**

### தாங்குசுவர் அமைத்தல்

**வினா எண் 41073—திரு. சு. மாதேஸ்வரன்:** *மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சொக்கநாதபுரம் கல்லேரியின் உட்பகுதியில் தாங்கு சுவர் மற்றும் தரை தளம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*



2014 டிசம்பர் 5]

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஆத்தூர் தொகுதி கல்லேரி கரையின் நீளம் 1,120 மீ. உள்ளது. 4 மீ. அதன் அகலம் ஆக பராமரிக்கப்பட்டு வருகிறது. போக்குவரத்து பயன்பாட்டிற்கு 4 மீ. அகலம் போதுமானது. மேலும் ஏரியிலிருந்து கிராமத்திற்கு செல்ல தனியாக போக்குவரத்து சாலை வசதியும் உள்ளது. எனவே ஏரியின் உட்பகுதியில் தாங்கு சுவர் கட்ட அவசியம் எழவில்லை.*

**7—**

### மடையைப் புதுப்பித்தல்

**வினா எண் 41791—திரு. ஆ. நாராயணன்:** *மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) நாங்குநேரி ஒன்றியம், ஆழ்வானேரி ஊராட்சி, ஆழ்வானேரி பெரியகுளத்தின் மடையைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) நாங்குநேரி ஒன்றியம், ஆழ்வானேரி ஊராட்சி, ஆழ்வானேரி பெரியகுளத்தின் மடையை வரும் (2014-2015) நிதியாண்டில் புனரமைத்து சீரமைக்க முன்னுரிமை அடிப்படையில் பரிசீலிக்கப்படும்.*

**8—**

### மின் உற்பத்தியை உயர்த்துதல்

**வினா எண் 16130—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2014 டிசம்பர் 5

*(அ) தமிழ்நாட்டில் சர்க்கரை ஆலைகளில் இணை மின் திட்டம் மூலம் செய்யப்படும் மின் உற்பத்தியை 610 மெகா வாட்டிலிருந்து 1,000 மெகா வாட்டாக உயர்த்த அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) சர்க்கரை ஆலைகளில் இணை மின் உற்பத்தி நிலையத்திலிருந்து அதிக அளவு 800 மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்வதற்குத் தேவையான கரும்பு தமிழ்நாட்டில் பயிரிடப்பட்டு வருகிறது. ஏற்கெனவே மொத்தம் 659.4 மெகா வாட் நிறுவுதிறன் கொண்ட இணை மின் உற்பத்தி நிலையங்கள் 29 சர்க்கரை ஆலைகளில் நிறுவப்பட்டு செயல்பாட்டில் இருந்து வருகிறது. மேலும், மொத்தம் 183 மெகா வாட் நிறுவுதிறன் கொண்ட இணை மின் உற்பத்தி நிலையங்கள் கூட்டுறவு நிறுவனத்திற்குச் சொந்தமான 10 சர்க்கரை ஆலைகள் மற்றும் பொதுத் துறை நிறுவனத்திற்குச் சொந்தமான இரண்டு சர்க்கரை ஆலைகளிலும் நிறுவும் பணிகள் தமிழ்நாடு அரசு மற்றும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இப்பணிகள் முடிக்கப்பெற்று 2014 ஆம் ஆண்டு உற்பத்தி துவக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.*

*(ஆ) 183 மெகா வாட் நிறுவுதிறன் கொண்ட 12 சர்க்கரை ஆலை இணை மின் உற்பத்தி நிலையங்கள் 2014 ஆம் ஆண்டு உற்பத்தி துவக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.*

**9—**

**மின் கம்பிகளைச் சீரமைத்தல்**

**வினா எண் 44773—திரு. ம. குணசேகரன்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மானாமதுரை தொகுதி, இளையான்குடி வட்டம், சொக்கப்படப்பு பகுதியில் தாழ்வாக தொங்கும் மின் கம்பிகளை சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*



2014 டிசம்பர் 5]

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, இளையான்குடி வட்டம், சொக்கப்படப்பு பகுதியில் தாழ்வாக தொங்கும் மின் கம்பிகள் கடந்த 1-4-2014 அன்று இழுத்துக் கட்டப்பட்டு சீரமைக்கப்பட்டுவிட்டது.*

**10—**

**மின் கம்பிகளைச் சீரமைத்தல்**

**வினா எண் 44774—திரு. ம. குணசேகரன்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மானாமதுரை தொகுதி, இளையான்குடி ஒன்றியம், அளவிடங்கான் ஊராட்சிப் பகுதியில் தாழ்வாக தொங்கும் மின் கம்பிகளைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, இளையான்குடி ஒன்றியம், அளவிடங்கான் ஊராட்சிப் பகுதியில் தாழ்வாக தொங்கும் மின் கம்பிகள் கடந்த 2-4-2014 மற்றும் 7-4-2014 அன்று இழுத்துக் கட்டப்பட்டு சீரமைக்கப்பட்டுவிட்டது.*

**11—**

**மின் கம்பங்களைச் சீரமைத்தல்**

**வினா எண் 45556—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சென்னை கொரட்டூர், அன்னை இந்திரா நகர் விரிவாக்கம், ஜெயா ஆசிரியர் பயிற்சி மையம் அருகில் உள்ள மின் கம்பங்களைச் சீரமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

[2014 டிசம்பர் 5

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சென்னை கொரட்டூர், அன்னை இந்திரா நகர் விரிவாக்கம், ஜெயா ஆசிரியர் பயிற்சி மையம் அருகில் உள்ள மின் கம்பங்கள் 15-4-2014 அன்று மாற்றப்பட்டுவிட்டன.*

**12—**

## துணை மின் நிலையத்தைத் தரம் உயர்த்துதல்

**வினா எண் 46223—திரு. கே.பி. பரமசிவம்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பல்லடம் தொகுதி, பூமலூரிலுள்ள 33 கே.வி. திறனுடைய துணை மின் நிலையத்தை 110 கே.வி. துணை திறனுடைய துணை மின் நிலையமாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) பூமலூரிலுள்ள 33 கே.வி. திறனுடைய துணை மின் நிலையத்தை 110 கே.வி. திறனுடைய துணை மின் நிலையமாகத் தரம் உயர்த்த அவசியம் தற்பொழுது எழவில்லை.*

**13—**

## நிலம் கையகப்படுத்துதல்

**வினா எண் 26740—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருமழிசையில் ஒருங்கிணைந்த நகரம் ஏற்படுத்த அணுகு சாலைக்காக நிலம் கையகப்படுத்தப்பட்டுவிட்டதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*



2014 டிசம்பர் 5]

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) திருமழிசையில் ஒருங்கிணைந்த திருமழிசை துணைக்கோள் நகரம் ஏற்படுத்த அணுகு சாலைக்காக அரசாணை (நிலை) எண் 7, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 3-1-2007-ன்படி 12.65 ஏக்கர் அரசு நிலங்களும் மற்றும் 12.87 ஏக்கர் பட்டா நிலங்களும் கையகப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.*

*இதில் 12.65 ஏக்கர் அரசு நிலங்களை நில உரிமைமாற்றம் செய்யவும் மற்றும் முன்நுழைவு அனுமதி வேண்டியும் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் பிரேரணை அரசால் ஒப்பளிக்கப்பட்டு வருவாய்த் துறையின்மூலம் அரசாணை (நிலை) எண் 173, வருவாய்* (LD5-2) *துறை, நாள் 13-6-2013 வெளியிடப்பட்டு அதன் அடிப்படையில் உரிய தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.*

*மேலும், அணுகுபாதைக்காக தேவைப்படும் 12.87 ஏக்கர் பட்டா நிலங்களை நிலமெடுப்பு நடவடிக்கையின்மூலம் கையகப்படுத்தப்பட உரிய பிரேரணைகள் நிலமெடுப்பு சட்டப் பிரிவு 4(1)-ன்கீழான அறிவிக்கை வெளியிட ஏதுவான நிருவாக ஒப்புதல் அளித்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. [அரசாணை (நிலை) எண் 46, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி (நிஎ1-2)த் துறை, நாள் 5-3-2013]. இது தொடர்பான மேல் நடவடிக்கை, திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அவர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதனிடையில் நிலமெடுப்பில் ஒரு சுமூகத் தீர்வு காண நில உரிமையாளர்களிடமிருந்து, நிலப் பரிமாற்றம்மூலம் பெறவும், அது தொடர்பான பத்திர செலவினங்களை வாரியமே ஏற்கவும், இது தொடர்பாக நில உரிமையாளர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தி நில உரிமையாளர்களின் இசைவினைப் பெற்று வாரியத்தின் ஒப்புதலுக்கு அனுப்ப தொடர்புடைய செயற்பொறியாளர் அவர்களுக்கு அதிகாரம் வழங்கவும், வாரியம் தனது தீர்மானம் எண் 8.04, நாள் 27-12-2012-ல் ஒப்புதல் அளிக்கப்பட்டு, வாரிய தீர்மானத்தின்படி செயற்பொறியாளர் அவர்களால் உரிய தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.*

மேலும், திருமழிசை துணைக்கோள் நகர திட்டத்தை சுமூகமாகவும், விரைவாகவும் முடிக்க நில உரிமையாளர்களிடமிருந்து எவ்வித எதிர்ப்பும் இன்றி வாரியம் வசம் சுவாதீனம் பெறுவதற்காக கூடுதல் சலுகைகள் வழங்க தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் பரிந்துரைகளை ஏற்று அரசாணை (நிலை) எண் 160, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி (நிஎ1-2)த் துறை, நாள் 26-6-2013 வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி நில உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ள கூடுதல் சலுகைகளை திருமழிசை துணைக்கோள் நகர திட்ட நில உரிமையாளர்களுக்குத் தெரிவித்து எவ்வித சுணக்கமும் இன்றி திட்டத்தை செயல்படுத்த செயற்பொறியாளர் மற்றும் நிருவாக அலுவலர், திருமழிசை துணைக்கோள் நகர கோட்டம் மூலமாகவும், சிறப்பு வட்டாட்சியர் மூலமாகவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இப்பணிகளை விரைவாக மேற்கொள்ள பிரத்யேகமான குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது.

**14—**

## அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல்

**வினா எண் 44376—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை மாநகரிலுள்ள குடிசை மாற்று வாரிய குடியிருப்புகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்த அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

ஆம். சென்னை மாநகரில் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் கட்டப்பட்டுள்ள குடியிருப்புகளுள் 29028 குடியிருப்புகளுக்கு பழுதுப்பார்ப்புப் பணிகள் ரூ. 25.77 கோடி செலவில் மேற்கொள்ள அரசாணை (நிலை) எண் 6, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி (குமா1(2)த் துறை, நாள் 9-1-2014-ல் ஒப்புதல் வழங்கப்பட்டு, பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. இத்திட்டப் பணிகள் டிசம்பர் 2014-க்குள் முடிவுறும்.





**15—**

## அணுகுசாலையை மேம்படுத்துதல்

**வினா எண் 35570—திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை—கிண்டி இரயில்வே மேம்பாலம் அருகிலுள்ள அணுகுசாலையை மேம்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சென்னை-கிண்டி இரயில்வே மேம்பாலம் அருகிலுள்ள சென்னை மெட்ரோ ரெயில் (CMRL) பணிகளின்போது பழுதடைந்ததையடுத்து சீரமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் விரைவில் முடிக்கப்படும்.

**16—**

## மேம்பாலப் பணிகள்

**வினா எண் 35758—திரு. வி.எஸ். இராஜி:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செய்யூர் தொகுதி, செய்யூர்-எல்லை அம்மன் கோவில் சாலையில் உப்பளம் மேம்பால பணிகளை விரைந்து ஆரம்பிக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:**

செய்யூர் தொகுதி, செய்யூர்-எல்லை அம்மன் கோவில் சாலையின் பெயர் செய்யூர்-பனையூர் சாலை ஆகும். இச்சாலை கி.மீ.0/0-3/6 வரையிலான இதர மாவட்ட சாலை ஆகும். இச்சாலையின் கி.மீ. 2/8 மற்றும் கி.மீ. 3/2 ஆகிய இரு இடங்களிலும்

[2014 டிசம்பர் 5

அணுகுசாலைகளுடன்கூடிய உயர் மட்டப் பாலங்கள் கட்டுவதற்கு ஒருங்கிணைந்த சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் 2011-2012-ன்கீழ் முறையே ரூ.170.00 இலட்சம் மற்றும் 130.00 இலட்சத்திற்கு நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டு பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

**17—**

## இடைவழித்தடமாக மாற்றியமைத்தல்

**வினா எண் 36714—திரு. பொன். ராஜா:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பொன்னேரி தொகுதி, மீஞ்சூர் ஒன்றியம், பொன்னேரி இரயில்வே நுழைவுவாயில் ஆலாடு பகுதியிலிருந்து அத்தமணஞ்சேரி, ரெட்டிப்பாளையம் வரையுள்ள ஒருவழிச் சாலையை இருவழிச் சாலையாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர்:**

சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள சாலை ஆலாடு-மனோபுரம்-சோமஞ்சேரி-தத்தமஞ்சி சாலை கி.மீ. 0/0-13/4 வரையுள்ள மாவட்ட இதரச் சாலை வகையைச் சார்ந்ததாகும். இந்தச் சாலையின் போக்குவரத்து முக்கியத்துவம் கருதி வரும் நிதியாண்டுகளில் திட்டப் பணிகளின்கீழ் முன்னுரிமை அடிப்படையில் ஒருவழித் தடத்திலிருந்து இடைவழித் தடமாக மாற்றியமைக்க ஆவன செய்யப்படும்.

**18—**

## மலைப்பாதை அமைத்தல்

**வினா எண் 45324—திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊட்டியிலிருந்து மஞ்சூர், கெத்தை, வெள்ளியங்காடு காரமடை வழியாக கோயம்புத்தூருக்கு 3-வது மலைப்பாதை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2014 டிசம்பர் 5]

**விடை—**

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஊட்டியிலிருந்து மஞ்சூர், கெத்தை, வெள்ளியங்காடு காரமடை வழியாக கோயம்புத்தூருக்கு 3-வது மலைப்பாதை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளது. இப்பணிக்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க அரசாணை (நிலை) எண் 42, நெடுஞ்சாலை (ம) சிறு துறைமுகங்கள் (எச்.க்யூ2) துறை, நாள் 21-3-2012-ல் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டு ரூ.45.00 இலட்சத்தில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு ஆலோசகர்களிடம் பணி ஒப்படைக்கப்பட்டது. மேற்படி பணிக்கான நேர்பாடு 10-4-2013-ல் போக்குவரத்து குழுமத்தால் வழங்கப்பட்டுள்ளது. இப்பாதை சில இடங்களில் வனப் பகுதிக்குள் செல்வதால், வனத் துறையின் 19.35 கி.மீ. நீளமுள்ள சாலையையும் மின் வாரியத்தின் 3.40 கி.மீ. நீளமுள்ள சாலையையும் நெடுஞ்சாலைத் துறைக்கு மாற்றம் செய்ய தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**19—**

## பண்டிகைக் கால முன்பணம்

**வினா எண் 43291—திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகர்கோவில் அரசு ரப்பர் கழக தற்காலிக தொழிலாளர்களுக்கு ஒப்பந்தப்படி பண்டிகைக் கால முன்பணம் உயர்த்தி வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) நாகர்கோவில் அரசு ரப்பர் கழகத்தில் வேலை செய்து வரும் தற்காலிகத் தொழிலாளர்கள் அனைவருக்கும் பண்டிகைக்

கால முன்பணத் தொகை ரூ.1,000/- வழங்கப்பட்டு வந்தது. பண்டிகைக் கால முன்பணத் தொகையினை உயர்த்தி வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை ஏற்று, தற்போது தற்காலிக தொழிலாளர்கள் அனைவருக்கும் 2013 ஓணம் பண்டிகை (16-9-2013) முதல் ரூ.2,000/- பண்டிகைக் கால முன்பணமாக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

(ஆ) எழாது.

**20—**

### பட்டமளிப்பு சான்றிதழுக்கான கட்டணங்கள் குறைப்பு

**வினா எண் 14709—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக பல்கலைக்கழகங்களில் மொத்த மதிப்பெண் பட்டியல், தற்காலிக முன் சான்றிதழ் மற்றும் பட்டமளிப்பு சான்றிதழ்களைப் பெறுவதற்கான கட்டணங்களைக் குறைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) தமிழக பல்கலைக்கழகங்களில் மொத்த மதிப்பெண் பட்டியல், தற்காலிக முன் சான்றிதழ் மற்றும் பட்டமளிப்பு சான்றிதழ்களைப் பெறுவதற்கான கட்டணங்களைக் குறைப்பது தொடர்பாக கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

**21—**

### கல்வி உதவித் தொகை வழங்குதல்

**வினா எண் 17412—திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—





தமிழகத்திலுள்ள அரசு கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் பயிலும் மாணவர்களுக்கு உரிய நேரத்தில் கல்வி உதவித் தொகை வழங்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:**

தமிழகத்திலுள்ள அரசு கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் பயிலும் மாணவர்களுக்கு உரிய நேரத்தில் கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

**22—**

### பிரதிநிதித்துவம் வழங்குதல்

**வினா எண் 17415—திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழக பல்கலைக்கழகங்களில் ஆட்சிக் குழுவிலும், ஆட்சிமன்றப் பேரவையிலும் மற்றும் தகுதி நிலைக் கண்டறியும் குழுவிலும் பட்டியல் இனத்தோருக்கு பிரதிநிதித்துவம் வழங்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:**

உயர் கல்வித் துறையின் கட்டுப்பாட்டின்கீழ்வரும் பல்கலைக்கழக ஆட்சிக் குழு, ஆட்சி மன்றப் பேரவை மற்றும் தகுதி நிலைக் கண்டறியும் குழுவிலும் அந்தந்தப் பல்கலைக்கழக சட்டவிதிகளுக்கு உட்பட்டு உறுப்பினர்கள் நியமனம் செய்யப்படுகிறார்கள்.

**23—**

### பணிநிலைகளை உத்தரவாதப்படுத்துதல்

**வினா எண் 41320—முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2014 டிசம்பர் 5

சுயநிதி கல்லூரி வகுப்பில் பணியாற்றும் ஆசிரியர்கள் மற்றும் அலுவலர்களுக்குப் பணிப் பாதுகாப்பு, விடுப்பு சலுகைகள் மற்றும் பல்வேறு பணிநிலைகளை உத்தரவாதப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:**

அரசு உதவி பெறும் கல்லூரிகளில் உதவி பெறும் வகுப்புகள் (பாடப் பிரிவுகள்) தவிர சுயநிதி அடிப்படையில் வகுப்புகள் (பாடப் பிரிவுகள்) நடைபெறுகின்றன. இவை தவிர சுயநிதி கல்லூரிகள் தனியே தொடங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. இவ்வாறு அரசு உதவி பெறும் கல்லூரிகளில் உள்ள சுயநிதி வகுப்புகள் (பாடப் பிரிவுகள்) மற்றும் சுயநிதி கல்லூரிகளில் பணியாற்றும் ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லா பணியாளர்களுக்கு அரசு மானியத்திலிருந்து ஊதியமோ அல்லது பிற பயன்களோ வழங்கப்படுவது இல்லை. இவ்வாறு பணியாற்றும் ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லா பணியாளர்களின் நியமனம் அரசால் மேற்கொள்ளப்படுவதில்லை.

2. மேலும், தமிழ்நாடு தனியார் கல்லூரி ஒழுங்காற்று சட்டம் மற்றும் விதிகள் 1976, அனைத்து தனியார் கல்லூரிகளுக்கும் பொதுவானவை. இச்சட்டத்தில், தனியார் கல்லூரிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்களின் கல்வித் தகுதி, பணிநியமனம், சம்பளம், பணி நிபந்தனைகள், நடத்தை விதிகள், ஒழுங்கு நடவடிக்கை மற்றும் மேல் முறையீடு ஆகியவற்றிற்கு வழிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. இதுதொடர்பாக, புகார்கள் பெறப்படின் சார்ந்த மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநரால் நடவடிக்கை எடுக்கப்படும்.

**24—**

## ஒழுங்காற்றுச் சட்டத்தை அமல்படுத்துதல்

**வினா எண் 41321—முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சுயநிதி கல்லூரி வகுப்பில் பணியாற்றும் ஆசிரியர்கள் மற்றும் அலுவலர்களுக்கு தமிழ்நாடு தனியார் கல்லூரி ஒழுங்காற்றுச் சட்டம் 1976-ஐ உறுதியாக அமல்படுத்திட அரசு முன்வருமா?



2014 டிசம்பர் 5]

**விடை—**

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:**

அரசு உதவி பெறும் கல்லூரிகளில் உள்ள சுயநிதி வகுப்புகள் (பாடப் பிரிவுகள்) மற்றும் சுயநிதி கல்லூரிகளில் பணியாற்றும் ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லா பணியாளர்களுக்கு அரசு மானியத்திலிருந்து ஊதியமோ அல்லது பிற பயன்களோ வழங்கப்படுவது இல்லை. இவ்வாறு பணியாற்றும் ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லா பணியாளர்களின் நியமனம் அரசால் மேற்கொள்ளப்படுவதில்லை. தமிழ்நாடு தனியார் கல்லூரி ஒழுங்காற்றுச் சட்டம் மற்றும் விதிகள் 1976, அனைத்து தனியார் கல்லூரிகளுக்கும் பொதுவானவை. இச்சட்டத்தில், தனியார் கல்லூரிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்களின் கல்வித் தகுதி, பணி நியமனம், சம்பளம், பணி நிபந்தனைகள், நடத்தை விதிகள், ஒழுங்கு நடவடிக்கை மற்றும் மேல் முறையீடு ஆகியவற்றிற்கு வழிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. எனவே, அரசு உதவி பெறும் கல்லூரிகளில் உள்ள சுயநிதி வகுப்புகள் மற்றும் சுயநிதி கல்லூரிகள் (பாடப் பிரிவுகள்) மேற்குறிப்பிட்ட சட்டத்திற்கு மாறாக செயல்பட்டு, அவை குறித்து புகார்கள் பெறப்படின், சார்ந்த மண்டல கல்லூரிக் கல்வி இயக்குநரால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

**25—**

## காலிப் பணியிடம் நிரப்புதல்

**வினா எண் 41383—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகத்திலுள்ள பணியாளர் காலியிடங்களை நிரப்ப அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) ஆசிரியர் பல்கலைக்கழகத்திலுள்ள பணியாளர் காலியிடங்களை நிரப்ப தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

(ஆ) எழவில்லை.

[2014 டிசம்பர் 5

**26—**

## உரங்கள், விதை விற்பனை

**வினா எண் 18312—திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*2011-2012 ஆம் ஆண்டு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள்மூலம் எவ்வளவு தொகைக்கு உரங்கள், விதைகள் விற்பனை செய்யப்பட்டன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*2011-2012 ஆம் ஆண்டில் கூட்டுறவுச் சங்கங்கள்மூலம் கீழ்வருமாறு உரங்கள் மற்றும் விதைகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன:*

| | மதிப்பு (ரூ. இலட்சத்தில்) | விற்பனை அளவு (மெ.டன்னில்) |
|---|---|---|
| உரங்கள் | 72123.65 | 706152.000 |
| விதைகள் | 2472.03 | 8938.221 |

**27—**

## தொகையை திரும்ப வழங்குதல்

**வினா எண் 30295—திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) தென்காசி தொகுதி, சுந்தரபாண்டியபுரம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கத்தில் முதலீடு செய்தவர்களுக்கு மீதமுள்ள 70% தொகையை திரும்ப வழங்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*



2014 டிசம்பர் 5]

**விடை—**

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) கலைக்கப்பட்ட சுந்தரபாண்டியபுரம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியில் நிரந்தர வைப்புத் தொகை இட்டு வைத்திருந்த வைப்புதாரர்களுக்கு அரசாணை எண் 258 கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை நாள் 14-7-2004-ன் வாயிலாக தொடர்புறுத்தப்பட்ட வைப்புத் தொகை உத்தரவாத திட்ட ஒழுங்குமுறை விதிகளில் விதி எண் IV(1)-ன்படி ஒரு வைப்புதாரருக்கு அவர் இட்டு வைத்த வைப்புத் தொகையோ அல்லது அதிகபட்சம் ரூ.30,000/- இவற்றில் எது குறைவோ அத்தொகையானது ஏற்கெனவே 2005 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டுவிட்டது. எனவே, மேற்படி சங்கத்தில் முதலீடு செய்தவர்களுக்கு மீதம் உள்ள 70% தொகையை வழங்க வழிவகை இல்லை.*

**28—**

## தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம்

**வினா எண் 37177—திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) தென்காசி தொகுதி, பாட்டப்பத்து ஊராட்சியில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள மேலகரம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் விவகார எல்லையில் பாட்டப்பத்து, மேலகரம், குற்றாலம், காசிமேஜர்புரம், இலஞ்சி, தென்காசி, ஆயிரப்பேரி, கீழப்புலியூர், சுந்தரபாண்டியபுரம், பாட்டாக்குறிச்சி, திருச்சிற்றம்பலம் மற்றும் தட்டான்குளம் ஆகிய வருவாய் கிராமங்கள் உள்ளன. மேலகரம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தில் 31-7-2013-ல் 9,562 பேர்*

[2014 டிசம்பர் 5

*உறுப்பினர்களாக உள்ளனர். இவர்களில் 1,456 பேர் கடன் பெற்று பயனடைந்து வருகின்றனர். தற்போது புதியதாக தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் அமைக்க கோரும் பாட்டப்பத்து கிராம மக்களில் 1,200 பேர் மட்டுமே மேலகரம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தில் உறுப்பினர்களாக உள்ளனர். பாட்டப்பத்து கிராமத்திற்கும் மேலகரம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்திற்கும் இடையே உள்ள தூரம் 5 கிலோ மீட்டர் மட்டுமே. பாட்டப்பத்து கிராமத்தின் மொத்த நிலப்பரப்பு 280 ஏக்கரில் பயிரிடக்கூடிய நிலப்பரப்பு 260 ஏக்கர் ஆகும்.*

*மேலும் மேலகரம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் 2011-12-ம் ஆண்டு தணிக்கை அறிக்கையின்படி ரூ.48.78 இலட்சம் குவிந்த நட்டத்தில் இயங்குகிறது. பாட்டப்பத்து கிராமத்தில் புதியதாக தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் அமைக்க வேண்டுமானால், மேலகரம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்க விவகார எல்லையிலிருந்து பாட்டப்பத்து கிராமத்தை பிரிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும். ஏற்கெனவே நட்டத்தில் இயங்கி கொண்டு இருக்கும் மேலகரம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தினை பிரித்து பாட்டப்பத்து கிராமத்தில் புதிய சங்கம் அமைத்தால் மேலும் நட்டமடைந்து நலிவடைய வாய்ப்புள்ளது.*

*புதியதாக தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் அமைப்பதற்கு அரசாணை (டி) எண் 376 கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள் 3-10-2006-ல் உள்ள நிபந்தனைகளின்படி பரிசீலிக்கையில் பாட்டப்பத்து கிராமத்தில் பயிரிடக்கூடிய நிலப்பரப்பு 260 ஏக்கர் மட்டுமே உள்ள நிலையிலும், ஓராண்டிற்கு குறைந்தபட்சம் ரூ.2 கோடி அளவிற்கு அனைத்து வகை கடன்களும் வழங்க வழிவகை இல்லாத நிலையிலும் பாட்டப்பத்து கிராமத்தில் புதிய தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் அமைக்க வாய்ப்பு இல்லை.*

**29—**

### சங்கக் கட்டடம்

**வினா எண் 37186—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*



2014 டிசம்பர் 5]

*(அ தென்காசி தொகுதி, தென்காசி ஒன்றியம், இலஞ்சி பேரூராட்சியில் மண்பாண்டம் மற்றும் விவசாயக் கூட்டுறவுக் கடன் சங்கங்களுக்கு கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தென்காசி தொகுதி, தென்காசி ஒன்றியம், இலஞ்சி பேரூராட்சியில், இலஞ்சி, மண்பாண்டக் கூட்டுறவுச் சங்கம் மட்டுமே செயல்படுகிறது. இச்சங்கம் சொந்தக் கட்டடத்தில் நல்லமுறையில் செயல்பட்டு வருகிறது. மேலும், இலஞ்சி பேரூராட்சியில் விவசாய கூட்டுறவுச் சங்கம் எதுவும் இல்லை.*

*இலஞ்சி பேரூராட்சி, மேலகரம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் செயல் எல்லையில் அமைந்துள்ளது. இச்சங்கமும் சொந்தக் கட்டடத்தில் இயங்கி வருகிறது.*

**30—**

### தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம்

**வினா எண் 37297—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ தென்காசி தொகுதி, கடையநல்லூர் ஒன்றியம், ஆணை குளம் ஊராட்சியில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் அமைக்க அவர்கள் அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) எண் 0.1697 இரட்டைக்குளம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் விவகார எல்லையில் ஆணைகுளம் மற்றும் குலையநேரி ஆகிய வருவாய் கிராமங்கள் உள்ளன. இரட்டைகுளம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தில 31-7-2013-ல் 2010 பேர் உறுப்பினர்களாக உள்ளனர். இவர்களில் 1,229 உறுப்பினர்கள் கடன் பெற்று பயனடைந்து வருகின்றனர். தற்போது புதியதாக தொடக்க வேளாண்மைக்*

[2014 டிசம்பர் 5

கூட்டுறவுக் கடன் சங்கம் அமைக்க கோரும் ஆணைகுளம் கிராம மக்களில் 587 பேர் மட்டுமே இரட்டைகுளம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தில் உறுப்பினர்களாக உள்ளனர். ஆணைகுளம் கிராமத்திற்கும், இரட்டைகுளம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்திற்கும் இடையே உள்ள தூரம் 4 கிலோ மீட்டர் மட்டுமே. ஆணைகுளம் கிராமத்தின் மொத்த நிலப்பரப்பு 867.74 ஹெக்டேர் ஆகும். இதில் பயிரிடக்கூடிய நிலப்பரப்பு 280.90 ஹெக்டேர் ஆகும்.

இரட்டைகுளம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத்தினைப் பிரித்து ஆணைகுளம் கிராமத்தில் சங்கம் அமைத்தால் சங்கம் நலிவடைய வாய்ப்புள்ளது. புதியதாக தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் அமைப்பதற்கு அரசாணை (டி) எண் 376 கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை நாள் 3-10-2006-ல் உள்ள நிபந்தனைகளின்படி பரிசீலிக்கையில் ஆணைகுளம் கிராமத்தில் புதிய தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் அமைக்க வாய்ப்பு இல்லை.

**31—**

## தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம்

**வினா எண் 40268—திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தொகுதி, இடையர் தவணை ஊராட்சி, சுரண்டையில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தென்காசி சரகம், இடையர் தவணை ஊராட்சிக்குட்பட்ட சுரண்டையில் ஏற்கெனவே தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் சொந்தக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இச்சங்கத்தில் 30-9-2013—ல் 3716 பேர் உறுப்பினர்களாக உள்ளனர். இவர்களில் 985 உறுப்பினர்கள் கடன் பெற்று பயனடைந்து வருகின்றனர். மேலும், அச்சங்கத்தின் விவகார எல்லையின் மொத்த நிலப்பரப்பு 6,807.20 ஹெக்டேர். அதில் பயிர் செய்யக் கூடிய நிலப்பரப்பு 4,084.2 ஹெக்டேர் ஆகும். கிராமத்தின் மக்கள் தொகை 7,370 ஆகும். சங்கத்தின் 2011-2012 ஆம் ஆண்டின் இறுதி தணிக்கையின்படி ரூ.19.16 இலட்சம் இலாபம் அடைந்துள்ளது. ஏற்கெனவே சுரண்டையில் ஒரு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் இருப்பதால் புதியதாக தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.



2014 டிசம்பர் 5]

**32—**

## தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம்

**வினா எண் 40269—திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தொகுதியில், இராஜபாண்டி ஊராட்சியில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) எண் 0.1725 வீரகேரளம்புதூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் விவகார எல்லையில் ராஜகோபாலபேரி, வீரகேரளம்புதூர், கழநீர்குளம், இராஜபாண்டி ஆகிய ஊராட்சிகள் உள்ளன. வீரகேரளம்புதூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தில் 30-9-2013 இல் 2,504 பேர் உறுப்பினர்களாக உள்ளனர். இவர்களில் 1,719 உறுப்பினர்கள் கடன் பெற்று பயனடைந்து வருகின்றனர். தற்போது புதியதாக தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் அமைக்க கோரும் இராஜபாண்டி கிராம மக்களில் 400 பேர் மட்டுமே வீரகேரளம்புதூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தில் உறுப்பினர்களாக உள்ளனர். இராஜபாண்டி கிராமத்திற்கும் வீரகேரளம்புதூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்திற்கும் இடையே உள்ள தூரம் 2 கிலோ

*மீட்டர் மட்டுமே. இராஜபாண்டி கிராமத்தின் மொத்த நிலப்பரப்பு 285 ஹெக்டேர் ஆகும். இதில் பயிரிடக்கூடிய நிலப்பரப்பு 225 ஹெக்டேர் ஆகும்.*

*வீரகேரளம்புதூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தினைப் பிரித்து இராஜபாண்டி கிராமத்தில் சங்கம் அமைத்தால் இச்சங்கம் நலிவடைய வாய்ப்புள்ளது.*

*புதியதாக தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் அமைப்பதற்கு அரசாணை (டி) எண் 376, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள் 3-10-2006-ல் உள்ள நிபந்தனைகளின்படி பரிசீலிக்கையில் இராஜபாண்டி கிராமத்தில் புதிய தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் அமைக்க வாய்ப்பு இல்லை.*

**33—**

## தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கம்

**வினா எண் 40270—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தென்காசி தொகுதி, ராஜகோபாலபேரி ஊராட்சியில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) எண் 0.1725 வீரகேரளம்புதூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் விவகார எல்லையில் ராஜபாண்டி, வீரகேரளம்புதூர், கழநீர்குளம், இராஜபாண்டி ஆகிய ஊராட்சிகள் உள்ளன. வீரகேரளம்புதூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தில் 31-7-2013-ல் 2,504 பேர் உறுப்பினர்களாக உள்ளனர். இவர்களில் 1,719 உறுப்பினர்கள் கடன் பெற்று பயனடைந்து வருகின்றனர். தற்போது புதியதாக தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் அமைக்க கோரும் ராஜகோபாலபேரி கிராம மக்களில் 357 பேர் மட்டுமே*





*வீரகேரளம்புதூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தில் உறுப்பினர்களாக உள்ளனர். இராஜகோபாலபேரி கிராமத்திற்கும் வீரகேரளம்புதூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்திற்கும் இடையே உள்ள தூரம் சுமார் 1.5 கிலோ மீட்டர் மட்டுமே. இராஜகோபாலபேரி கிராமத்தின் மொத்த நிலப்பரப்பு 770.62 ஹெக்டேர் ஆகும். இதில் பயிரிடக்கூடிய நிலப்பரப்பு 350 ஹெக்டேர் ஆகும்.*

*வீரகேரளம்புதூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக்கடன் சங்கத்தினைப் பிரித்து இராஜகோபாலபேரி கிராமத்தில் சங்கம் அமைத்தால் இச்சங்கம் நலிவடைய வாய்ப்புள்ளது.*

*புதியதாக தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் அமைப்பதற்கு அரசாணை (டி) எண் 376, கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை நாள் 3-10-2006-ல் உள்ள நிபந்தனைகளின்படி பரிசீலிக்கையில் இராஜகோபாலபேரி கிராமத்தில் புதிய தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் அமைக்க வாய்ப்பு இல்லை.*

**34—**

## பெட்டக வசதி அமைத்தல்

**வினா எண் 41441—திரு. சி. சண்முகவேலு:** *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், அந்தியூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தில் பாதுகாப்பு அறையுடன் கூடிய பெட்டக வசதி அமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், அந்தியூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்திற்கு பாதுகாப்புக் கதவுடன் கூடிய பாதுகாப்பு அறை கட்டுவதற்கான முன்மொழிவுகள் பெறப்பட்டு தமிழ்நாடு கூட்டுறவு*

[2014 டிசம்பர் 5

ஒன்றியத்தால் பராமரிக்கப்படும் கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதியிலிருந்து ஐந்தாண்டுகளில் திருப்பிச் செலுத்தக்கூடிய வகையில் வட்டியில்லாக் கடனாக ரூ.4,64,635/- அனுமதிக்கப்பட்டுள்ளது. மேலும் கட்டுமானப் பணி 9-12-2013 அன்று துவக்கப்பட்டு மேற்கூரை அமைக்கப்பட்டு, கதவு நிறுவும் பணி நடைபெற்று வருகிறது.

**35—**

## நியாய விலைக் கடைகளுக்கு அளவு குறையாமல் பொருட்கள்

**வினா எண் 4461—திரு. எல். வெங்கடேசன்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நுகர்பொருள் வாணிபக் கழகத்திலிருந்து நியாய விலைக் கடைகளுக்கு அளவு குறையாமல் பொருட்களை அனுப்ப அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக கிடங்குகளிலிருந்து நியாய விலைக் கடைகளுக்கு அத்தியாவசியப் பொருட்களை லாரியில் ஏற்றி அனுப்புவதற்கு முன்பு சம்பந்தப்பட்ட கூட்டுறவுத் துறை சங்கங்களின் பிரதிநிதிகளின் முன்னிலையிலேயே சரியாக எடையிட்டு, சரிபார்க்கப்பட்டு வழங்கப்பட்டு வரப்படுகிறது. மேலும், இதனை மண்டல உயர் அதிகாரிகளாலும், மாவட்ட வழங்கல் அலுவலர்களாலும் அடிக்கடி ஆய்வு செய்யப்பட்டு உறுதி செய்யப்படுகிறது.

**36—**

## பேருந்து நிலையத்திற்குப் பெயர் சூட்டுதல்

**வினா எண் 5162—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2014 டிசம்பர் 5]

விளவங்கோடு வட்டம், குழித்துறை நகராட்சி, மார்த்தாண்டம் பேருந்து நிலையத்திற்கு மார்ஷல் நேசமணியின் பெயர் சூட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச் சாலைகள் துறை அமைச்சர்:**

சுதந்திரப் போராட்டத்தில் பங்கெடுத்தவரும், கன்னியாகுமரி மாவட்டம் தமிழகத்தோடு இணைய வேண்டி போராட்டங்கள் நடத்திய முன்னணி தலைவர்களில் ஒருவரும், மூன்று முறை தமிழக சட்டமன்ற உறுப்பினராகவும், குழித்துறை, நகர்மன்றத் தலைவராகவும், இறுதிவரை மக்களுக்காக உழைத்து மறைந்த தியாகச் செம்மல் D மணி அவர்களின் பெயரை மார்த்தாண்டம் பேருந்து நிலையத்திற்குச் சூட்டி "குழித்துறை நகராட்சி D மணி பேருந்து நிலையம்" என பெயர் வைக்க நகர்மன்றத் தீர்மானம் எண் 1351, நாள் 21-1-2014-ல் குழித்துறை நகர்மன்றத்தால் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனவே, தற்போது கன்னியாகுமரி மாவட்டம், குழித்துறை நகராட்சி, மார்த்தாண்டம் பேருந்து நிலையத்திற்கு குமரி தந்தை மார்ஷல் நேசமணி பெயர் சூட்டுவது குறித்து செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

**37—**

## கழிவுநீர்க் கால்வாய் அமைத்தல்

**வினா எண் 13533—திரு. சு. ரவி:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் வார்டு 1 கவுன்சிலர் ஜானகிராமன் தெரு, மேற்கு பகுதியில் பாதி தெருவிற்கு புதிய கழிவுநீர்க் கால்வாய் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச் சாலைகள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் நகராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டம் செயல்பட உள்ளதால் தற்சமயம் கழிவுநீர்க் கால்வாய் அமைக்க இயலாது.*

**38—**

### மழைநீர்க் கால்வாய் மறு சீரமைப்பு

**வினா எண் 13534—திரு. சு. ரவி:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் வார்டு 1 ரத்தினம் தெருவிலுள்ள மழைநீர்க் கால்வாயை மறு சீரமைப்பு செய்ய அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச் சாலைகள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் நகராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டம் செயல்பட உள்ளதால், அரக்கோணம் வார்டு 1 ரத்தினம் தெருவிலுள்ள மழைநீர் கால்வாயை தற்போது தனியே மறு சீரமைப்பு செய்ய இயலாது.*

**39—**

### கழிவுநீர்க் கால்வாயைச் சீரமைத்தல்

**வினா எண் 13545—திரு. சு. ரவி:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*





*(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் 2-வது வார்டு, குமரன் தெரு, தெற்கு பகுதியில் உள்ள பழுதடைந்த கழிவுநீர்க் கால்வாயைச் சீரமைத்து தர அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச் சாலைகள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் நகராட்சியில் 2-வது வார்டு, குமரன் தெரு, தெற்கு பகுதியில் ஏற்கெனவே உள்ள கழிவுநீர்க் கால்வாய் நல்ல நிலையில் பொது மக்களின் பயன்பாட்டில் உள்ளது. எனவே தற்சமயம் கழிவுநீர்க் கால்வாய் அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.*

**40—**

### கழிவுநீர்க் கால்வாய் அமைத்தல்

**வினா எண் 13546—திரு. சு. ரவி:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் 2-வது வார்டு, ஜோதி நகர், மாதவ நகர், கணேஷ் நகர் ஆகிய பகுதிகளில் புதியதாக கழிவுநீர்க் கால்வாய் அமைத்துத் தர அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச் சாலைகள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் நகராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டம் செயல்பட உள்ளதால் கழிவுநீர் கால்வாய் பாதாளச் சாக்கடைத் திட்டத்திற்கு முன்பு அமைக்க இயலாது.*

[2014 டிசம்பர் 5

**41—**

## உறை குழாய் அமைத்தல்

**வினா எண் 13570—திரு. சு. ரவி:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் 3-வது வார்டு, கல்யாண மண்டப தெரு மற்றும் லால்பகதூர் சாஸ்திரி தெருவின் பின்புறம் உள்ள இரயில்வே பகுதியில் உறை குழாய் அமைத்துத் தர அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச் சாலைகள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, மேற்படி இடம் இரயில்வே துறைக்குச் சொந்தமானதால் அப்பகுதியில் குழாய் அமைக்க இயலாது.*

**42—**

## குடிநீர்க் குழாய்கள் அமைத்தல்

**வினா எண் 13571—திரு. சு. ரவி:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் 3-வது வார்டு, ராஜீவ்காந்தி நகரில் சர்ச் குறுக்கு தெருவிற்கு சிமென்ட் சாலை, கழிவுநீர்க் கால்வாய் மற்றும் குடிநீர்க் குழாய்கள் அமைத்துத் தர அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*



2014 டிசம்பர் 5]

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச் சாலைகள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் 3-வது வார்டு, ராஜீவ்காந்தி நகரில் சர்ச் குறுக்குத் தெரு பகுதியில் உள்ள தார்ச்சாலை, கழிவுநீர் கால்வாய் மற்றும் குடிநீர்க் குழாய் நல்ல நிலையில் மக்களின் பயன்பாட்டில் உள்ளது. எனவே, சிமென்ட் சாலை, கழிவுநீர்க் கால்வாய் மற்றும் குடிநீர்க் குழாய் அமைக்க இயலாது.*

**43—**

## ஆழ்துளைக் கிணறு அமைத்தல்

**வினா எண் 14789—திரு. ர.ம. பாபு முருகவேல்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஆரணி தொகுதி, ஆரணி நகராட்சி, 15-வது வார்டிலுள்ள களத்து மேட்டு 4-வது தெருவில் ஆழ்துளைக் கிணறு அமைத்து சிறிய தொட்டி கட்ட அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச் சாலைகள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஆரணி நகராட்சி, 15-வது வார்டு களத்து மேட்டு 4-வது தெருவில் ஏற்கெனவே இருந்த ஆழ்துளைக் கிணற்றிலிருந்து கைம்பம்பினை அகற்றிவிட்டு சிறு மின்விசை பம்புடன்கூடிய சின்டெக்ஸ் டேங்க் அமைக்கப்பட்டு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, ஆழ்துளைக் கிணறு அமைத்து சிறிய தொட்டி கட்டும் அவசியம் எழவில்லை.*

**44—**

## கழிவுநீர்க் கால்வாய் அமைத்தல்

**வினா எண் 14816—திரு. சு. ரவி:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் நகரம், 11-வது வார்டு, ராஜாபாதர் தெருவின் முன்புறம் மற்றும் பின்புறம் கழிவுநீர்க் கால்வாய் அமைத்துத் தர அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் நகரம், 11-வது வார்டு, ராஜாபாதர் தெருவின் முன்புறம் மற்றும் பின்புறம் உள்ள கழிவுநீர்க் கால்வாய் நல்ல நிலையில் பொது மக்களின் பயன்பாட்டில் உள்ளது. எனவே, தற்சமயம் கழிவுநீர்க் கால்வாய் அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.*

**45—**

## கழிவுநீர்க் கால்வாய் அமைத்தல்

**வினா எண் 14818—திரு. சு. ரவி:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் நகரம், 11-வது வார்டு, பழைய பஜார் தெரு கடைசியில் பெரிய பாளையத்தம்மன் கோயில் பின்புறம் உள்ள 2 தெருக்களின் இரண்டு பக்கமும் கழிவுநீர்க் கால்வாய் அமைத்து தர அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*





**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் நகரம், 11-வது வார்டு, பழைய பஜார் தெரு கடைசியில் பெரிய பாளையத்தம்மன் கோவில் பின்புறம் உள்ள 2 தெருக்களின் இரண்டு பக்கமும் ஏற்கெனவே உள்ள கழிவுநீர்க் கால்வாய் நல்ல நிலையில் பொது மக்களின் பயன்பாட்டில் உள்ளது. எனவே தற்சமயம் கழிவுநீர்க் கால்வாய் அமைக்க இயலாது.*

**46—**

## நுழைவு வாயிலை உயர்த்தி அமைத்தல்

**வினா எண் 14894—திரு. சு. ரவி**: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம், 24-வது வார்டு, ஏ.பி.எம். சர்ச் பகுதியில் அமைந்துள்ள நகராட்சி பள்ளிக்குக் கூடுதல் கழிப்பறை வசதி மற்றும் பள்ளியின் நுழைவு வாயிலை உயர்த்தி அமைக்கவும் அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*(அ) இல்லை.*

*(ஆ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் 24-வது வார்டு, ஏ.பி.எம். சர்ச் பகுதியில் அமைந்துள்ள நகராட்சி பள்ளியில் ஏற்கெனவே உள்ள மதில் சுவர் மற்றும் வாயில் உயரமாகவும் நல்ல நிலையிலும் உள்ளது. மேலும், அப்பள்ளியில் உள்ள கழிப்பறைகள் நல்ல நிலையிலும் மாணவர்களுக்கு போதுமானதாகவும், பயன்பாட்டிலும் உள்ளது.*

[2014 டிசம்பர் 5

47—

## கழிவுநீர்க் கால்வாய் அமைத்தல்

**வினா எண் 14902—திரு. சு. ரவி:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் 25-வது வார்டு, என்.வி.என். 2-வது தெருவிற்கு சிமெண்ட் சாலை மற்றும் கழிவுநீர்க் கால்வாய் அமைத்துத் தர அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச் சாலைகள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் நகராட்சியில், 25-வது வார்டு, என்.வி.என்.2-வது தெருவிற்கு சிமெண்ட் சாலை மற்றும் கழிவுநீர்க் கால்வாய் அமைக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டில் உள்ளது.*

48—

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 14917—திரு. சு. ரவி:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம், 28-வது வார்டில் புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தர அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச் சாலைகள் துறை அமைச்சர்:**



2014 டிசம்பர் 5]

*(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் நகராட்சி வார்டு எண் 26-ல் ஏற்கெனவே 2.27 இலட்சம் மற்றும் 2.00 இலட்சம் கொள்ளளவு கொண்ட இரண்டு உயர்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் பயன்பாட்டில் உள்ளன. இதுவே போதுமானதாக உள்ளதால், கூடுதலாக நீர்த்தேக்க தொட்டி அமைக்கும் அவசியம் எழவில்லை.*

49—

## சாலையைச் செப்பனிடுதல்

**வினா எண் 14934—திரு. சு. ரவி:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம், 31-வது வார்டு டி.என். நகர் 2 மற்றும் 3-வது தெருவிலுள்ள குறுகிய கழிவுநீர்க் கால்வாயை அகலப்படுத்தி அமைக்கவும், ஏ.என். கண்டிகை 4-வது தெருவில் சாலையைச் செப்பனிட்டுத் தரவும் அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச் சாலைகள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) இல்லை. அரக்கோணம் நகராட்சியில் தற்சமயம் பாதாள சாக்கடைத் திட்டம் செயல்பட உள்ளது. ஏற்கெனவே இருக்கும் கழிவுநீர்க் கால்வாய் நல்ல நிலையில் பொது மக்கள் பயன்பாட்டில் உள்ளது. எனவே, கழிவுநீர் கால்வாய் மற்றும் சாலை தற்போது அமைக்க இயலாது.*

50—

## சிறுபாலம் அமைத்தல்

**வினா எண் 14944—திரு. சு. ரவி:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம், 33-வது வார்டு சோமசுந்தரம் நகர் 3 மற்றும் 4-வது தெருக்களுக்கு கழிவுநீர்க் கால்வாய் அமைக்கவும், 3-வது தெருவில் சிறுபாலம் அமைக்கவும் அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம், 33-வது வார்டு, சோமசுந்தரம் நகர் 3 மற்றும் 4-வது தெரு பகுதியில் கழிவுநீர்க் கால்வாய் மற்றும் கல்வர்ட் அமைக்கப்பட்டு நல்ல நிலையில் பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது.*

**51—**

## தனி அங்காடி அமைத்தல்

**வினா எண் 15415—முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*மத்திய சிறைகளில் கைதிகள் தயாரிக்கும் பொருட்களை விற்பனை செய்வதற்கு தனி அங்காடி அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*மத்திய சிறைகளில் கைதிகளால் தயாரிக்கப்படும் பொருட்களை விற்பனை செய்ய ஒவ்வொரு மத்திய சிறை வளாகத்திலும் ஒரு சிறை அங்காடி* (Prison Bazaar) *நிறுவப்பட்டுள்ளது. சிறைவாசிகளால் தயாரிக்கப்படும் பொருட்கள் அனைத்தும்* "Freedom" *என்ற வர்த்தகப் பெயரில் இந்த சிறை அங்காடிகளில் விற்பனை செய்யப்படுகின்றன.*





**52—**

## மரங்கள் நடுதல்

**வினா எண் 18941—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஆலங்குளம், குத்துக்கல்வலசை ஊராட்சி, சுந்திர நாடார் திருத்துகுளம் துஷ்டகண்ட ராயப்பேரி குளக்கரையில் உள்ளாட்சி மன்றத்திற்கு வருவாய் அளிக்கும் மரங்கள் நட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*(அ) திருநெல்வேலி மாவட்டம், குத்துக்கல்வலசை ஊராட்சி சுந்திர நாடார் திருத்துகுளத்தின் கரையில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்மூலம் சிமென்ட் சாலை அமைக்கப்பட்டுள்ளது. குளத்தின் பாதி பகுதி பாறையாக உள்ளது, மீதி பகுதியில் அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் ஊரணி படித்துறை அமைக்கப்பட்டு உள்ளது. எனவே, மரக்கன்றுகள் நட இயலாது. துஷ்டராய கண்டியப்பேரி நெடுங்குளத்தில் தண்ணீர் நிரம்பி உள்ளது. நீர்ப்பிடிப்புப் பகுதி போக மீதமுள்ள பகுதியில் வேப்ப மரங்கள் உள்ளன. எனவே, இக்குளத்திலும் மரக்கன்றுகள் நடவுசெய்ய இயலாது.*

*(ஆ) கேள்வி எழவில்லை.*

**53—**

## கழிவுநீர்க் கால்வாய் அமைத்தல்

**வினா எண் 21436—திரு. சு. ரவி:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2014 டிசம்பர் 5

*(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் நகரம், 22-வது வார்டு, அன்னை இந்திரா தெரு, லட்ச ஐய்யனார் தெரு பேஸ் 1,2,3 ஆகிய பகுதிகளில் 28-வது வார்டு கிருஷ்ணாம்பேட்டை 6-வது தெருவிலும் புதியதாக கழிவுநீர்க் கால்வாய் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டம் செயல்பட உள்ளதால், அரக்கோணம் நகரம், 22-வது வார்டு, அன்னை இந்திரா தெரு, லட்ச ஐய்யனார் தெரு பேஸ் 1,2,3, 28-வது வார்டு கிருஷ்ணாம்பேட்டை 6-வது தெரு ஆகிய பகுதிகளில் கழிவுநீர்க் கால்வாய் தனியே அமைக்க இயலாது.*

**54—**

### காவல் நிலைய வழக்குகளை நீதிமன்றத்தில் விசாரித்தல்

**வினா எண் 21792—திரு. கோவி. சம்பத்குமார்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*வாணியம்பாடி தொகுதி, ஆலங்காயம் காவல் நிலைய வழக்குகளை வாணியம்பாடி நீதிமன்றத்திலேயே விசாரிக்க வேண்டிய மாற்றத்தைச் செய்திட அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*வாணியம்பாடி தொகுதி, ஆலங்காயம் காவல் நிலைய வழக்குகளை வாணியம்பாடி நீதிமன்றத்திலேயே விசாரிக்க வகை செய்யும் செயற்குறிப்பு எதுவும் அரசிடம் இல்லை.*



2014 டிசம்பர் 5]

**55—**

### சிமென்ட் சாலை அமைத்தல்

**வினா எண் 25256—திரு. சு. ரவி:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் நகரம், 14-வது வார்டு அதாவுல்லா சாயபு தெரு மற்றும் 22-வது வார்டு அன்னை கஸ்தூரிபாய் தெருவில் பழுதடைந்துள்ள சாலையை சிமென்ட் சாலையாக அமைத்துத் தர அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் நகரம், 14-வது வார்டு அதாவுல்லா சாயபு தெரு மற்றும் 22-வது வார்டு அன்னை கஸ்தூரிபாய் தெருக்களில் சிமென்ட் சாலைகள் அமைக்கப்பட்டு நல்ல நிலையில் பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளன.*

**56—**

### பூங்காக்களைப் பராமரித்தல்

**வினா எண் 28149—திரு. கு. நல்லதம்பி:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) எழும்பூர் தொகுதி, 58-வது வட்டம், மைலேடி பூங்கா மற்றும் தொகுதியில் உள்ள சாலையோர பூங்காக்களைப் பராமரித்திட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஆம். சாலையோர பூங்காக்கள் மற்றும் மைலேடி பூங்கா ஒப்பந்ததாரர்கள்மூலம் பராமரிக்கப்பட்டு வருகின்றன.*

**57—**

## ஆக்கிரமிப்புகளை அகற்றுதல்

**வினா எண் 30167—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தென்காசி தொகுதி, தென்காசி பழைய பேருந்து நிலையத்திலுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தென்காசி பழைய பேருந்து நிலையத்தில் இருந்த தற்காலிக ஆக்கிரமிப்புகள் 14-11-2013 அன்று அகற்றப்பட்டு விட்டன. தற்போது தென்காசி பழைய பேருந்து நிலையம் ஆக்கிரமிப்புகள் ஏதுமின்றி பராமரிக்கப்பட்டு வருகிறது.*

**58—**

## பொதுக் கழிப்பறைகளைச் சீரமைத்தல்

**வினா எண் 31133—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*





*(அ) சென்னை திரு.வி.க. நகர் மண்டலத்தில் உள்ள பொதுக் கழிப்பறைகளைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சென்னை திரு.வி.க. நகர் மண்டலத்தில் உள்ள பொதுக் கழிப்பறைகள் சீரமைக்கப்பட்டு வருகின்றன. மேலும், இவை பழுதடைந்த கழிப்பிடம் என்பதால் இடித்து அகற்றி விட்டு புதியதாக கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.*

**59—**

## கால்வாய் கட்டும் பணி

**வினா எண் 31140—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சென்னை சூளை நெடுஞ்சாலையில் கால்வாய் பணிகளை விரைந்து முடிக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சூளை நெடுஞ்சாலையில் மழைநீர் கால்வாய் பணிகள் யாவும் முடிக்கப்பட்டுவிட்டன. இக்கால்வாய் கட்டும் பணி கடந்த நவம்பர், 2013-ல் முடிக்கப்பட்டு நல்ல நிலையில் இயங்கி வருகிறது.*

[2014 டிசம்பர் 5

**60—**

**நடைபாதைகள் அமைத்தல்**

**வினா எண் 37033—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சென்னை மாநகராட்சியில் உள்ள பாதசாரி நடைபாதைகளை மேம்படுத்த அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் 2012-13-ன்கீழ் சென்னை மாநகராட்சியில் உள்ள 71 பேருந்து சாலைகளில் பாதசாரிகளுக்கான நவீன கிரானைட் கற்கள் மற்றும் கான்கிரீட் கொண்ட நடைபாதைகள் அமைக்கும் பணி உத்தேசிக்கப்பட்டு தற்போது 25 பணிகள் நடைபெற்று வருகின்றன. மீதமுள்ள சாலைகளிலும் இதுபோன்ற நடைபாதைகள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.*

**61—**

**சாலையைச் சீரமைத்தல்**

**வினா எண் 37853—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சென்னை கொரட்டூர் பகுதி, ராஜீவ் நகர் விரிவு மற்றும் சுபலட்சுமி நகர் தெருக்களில் உள்ள சாலைகளைச் சீரமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*



2014 டிசம்பர் 5]

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சென்னை கொரட்டூர் பகுதி, ராஜீவ் நகர் விரிவு பிரதான சாலை மற்றும் குறுக்குத் தெருக்களுக்கு ஒருங்கிணைந்த சாலை வளர்ச்சித் திட்டம் 3-ன்கீழ் மதிப்பீடுகள் ரூ. 158 இலட்சத்திற்கும் மற்றும் சுபலட்சுமி நகர் பிரதான சாலை மற்றும் 1 முதல் 4 குறுக்குத் தெருக்களுக்கு ரூ.244 இலட்சத்திற்கும் மதிப்பீடுகள் அங்கீகாரம் பெற்று பணிகள் முடிக்கப்பட்டன.*

**62—**

**பூங்காவை மேம்படுத்துதல்**

**வினா எண் 37869—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சென்னை, பெரம்பூர் தொகுதி, கொடுங்கையூர் ஆசிரியர் காலனியில் உள்ள பூங்காவை மேம்படுத்த அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சென்னை, பெரம்பூர் தொகுதி, கொடுங்கையூர் ஆசிரியர் காலனியில் உள்ள பூங்கா ரூ.3,06,000/- செலவில் புதுப்பிக்கப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டில் உள்ளது.*

**63—**

**அடிப்படை வசதிகள் செய்தல்**

**வினா எண் 39316—திரு. ம. முத்துராமலிங்கம்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2014 டிசம்பர் 5

*(அ) மதுரை மாவட்டம், திருமங்கலம் நகராட்சியில் உள்ள பூங்காக்களில் பொதுமக்களுக்கு அடிப்படை வசதிகள் செய்து மேம்படுத்திட அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) திருமங்கலம் நகராட்சிப் பகுதியில் முதற்கட்டமாக வார்டு எண் 9, கிருஸ்டியன் காலனி பூங்காவினை அபிவிருத்தி செய்ய ரூ.10.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்து நகர்மன்றத் தீர்மான எண் 511, நாள் 24-7-2013-ல் ஒப்புதல் பெற்று நகர் ஊரமைப்புத் துறை, போக்குவரத்து மேலாண்மைத் திட்ட நிதியில் மானியம் பெற்று பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.*

**64—**

## குடிநீர் வசதி செய்தல்

**வினா எண் 39796—திரு. ரா. சரத்குமார்:** *நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சென்னை சைதாப்பேட்டை அரசு மகப்பேறு மருத்துவமனைக்கு போதிய தண்ணீர் வசதி செய்திட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சென்னை சைதாப்பேட்டை அரசு மகப்பேறு மருத்துவமனைக்கு ஏற்கெனவே உள்ள குடிநீர் இணைப்புமூலம் 5000 லிட்டர் குடிநீர் வழங்கப்படுகிறது. மேலும், கூடுதல் குடிநீர் தேவைக்காக இரண்டு நாட்களுக்கு ஒருமுறை 6000 லிட்டர் குடிநீர், லாரிகள் மூலமாகவும் வழங்கப்படுகிறது.*



2014 டிசம்பர் 5]

**65—**

## குளியலறை மற்றும் கழிப்பிடம் கட்டுதல்

**வினா எண் 40806—திரு. சு. ரவி:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் நகரம், 8-வது வார்டு, காலிவாரி கண்டிகை அருந்ததிபாளையத்தில் குளியலறை மற்றும் கழிப்பறை கட்ட அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் நகரம் 8-வது வார்டு காலிவாரி கண்டிகை அருந்ததிபாளையத்தில் குளியலறை மற்றும் கழிப்பறை கட்ட போதுமான இடம் இல்லையென்பதால் குளியலறை மற்றும் கழிப்பிடம் கட்ட இயலாது.*

**66—**

## பன்றிகளை அப்புறப்படுத்துதல்

**வினா எண் 43293—திருமதி எஸ். விஜயதரணி:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) நாகர்கோவில் நகராட்சி, வடசேரி கிறிஸ்டோபர் பேருந்து நிலையத்திற்கு இடையூறாக சுற்றித்திரியும் பன்றிகளை அப்புறப்படுத்த அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) நாகர்கோவில் நகராட்சி, வடசேரி கிறிஸ்டோபர் பேருந்து நிலையம் அருகில் சுற்றித்திரியும் பன்றிகளை அப்புறப்படுத்த, சம்பந்தப்பட்ட பன்றி வளர்ப்போருக்கு உரிய அறிவுரை வழங்கி, அறிவிப்பு அனுப்பப்பட்டு, பன்றிகள் சுற்றுவது கட்டுப்படுத்தப்பட்டு வருகிறது.*

**67—**

## ஆட்டிறைச்சிக் கூடம் கட்டுதல்

**வினா எண் 44739—திரு. ரா. சரத்குமார்:** *நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சென்னை மறைமலை நகரில் ஆட்டிறைச்சிக் கூடம் கட்டுவதற்கு அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) மறைமலைநகர் நகராட்சியில் அடிப்படை உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்புதல் திட்டத்தின்கீழ் 2007-2008 ஆம் ஆண்டு ரூ.20.00 இலட்சம் மதிப்பீட்டில் நவீன*





*ஆட்டிறைச்சிக் கூடம் கட்டி முடிக்கப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டில் இருந்து வருகின்றது. எனவே, புதிதாக ஆட்டிறைச்சிக் கூடம் கட்டும் திட்டம் ஏதும் இல்லை.*

**68—**

## மின்னாக்கி வசதி

**வினா எண் 45609—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சென்னை மாதவரம் மாநகராட்சி மருத்துவமனையில் மின்னாக்கி வசதி ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சென்னை மாநகராட்சி, மண்டலம்-3 (மாதவரம்)-க்குட்பட்ட மருத்துவமனையில் மின்னாக்கி ஏற்கெனவே அமைக்கப்பட்டு இயங்கிக் கொண்டு வருகின்றது.*

**69—**

## வாகன நிறுத்துமிடம் அமைத்தல்

**வினா எண் 45971—திரு. சு. ரவி:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் நகராட்சிக்குச் சொந்தமான தினசரி நாளங்காடிக்கு மிதிவண்டி மற்றும் இரு சக்கர வாகன நிறுத்தம் அமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

[2014 டிசம்பர் 5

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தினசரி நாளங்காடியில் மிதிவண்டி மற்றும் இரு சக்கர வாகன நிறுத்தம் அமைக்க போதுமான இடம் இல்லாததால், தற்சமயம் வாகன நிறுத்துமிடம் அமைக்க வழிவகை ஏதும் இல்லை.*

**70—**

**சாலையை மேம்படுத்துதல்**

**வினா எண் 47131—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சென்னை, மாதவரம் தபால் நிலையத்திலிருந்து மணலி செல்லும் சாலையை மேம்படுத்த அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) வட்டார இணை ஆணையர் (வடக்கு) அலுவலகத்தில் உள்ள பேருந்து சாலைகள் துறை மூலமாக மாதவரம் தபால் நிலையத்திலிருந்து பால் பண்ணை மாத்தூர் வரை புதியதாக சாலைகள் போடும் பணிகள் முடிக்கப்பட்டு உபயோகத்தில் உள்ளன.*

**71—**

**திறந்தவெளி கழிப்பிடமாக மாறுவதைத் தடுத்தல்**

**வினா எண் 47363—திரு. ர.ம. பாபு முருகவேல்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*



2014 டிசம்பர் 5]

*(அ) திருவண்ணாமலை கோயில், வட ஒத்தவாடை தெரு, தென் ஒத்தவாடை தெரு மதில் சுவர்கள் ஓரம் திறந்தவெளி கழிப்பிடமாக மாறுவதைத் தடுக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை திருக்கோயிலுக்கு வருகை தரும் பக்தர்களின் பயன்பாட்டிற்காக கோவில் நிருவாகத்தால் 2 கட்டணக் கழிவறைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. மேலும், 7 தனியார் கழிப்பிடங்கள் வட ஒத்தவாடைத் தெருவில் உள்ளன. மேலும், வட ஒத்தவாடைத் தெரு மற்றும் தென் ஒத்தவாடைத் தெருக்கள் இந்நகராட்சி பணியாளர்களைக் கொண்டு சுத்தமாக பராமரிக்கப்பட்டு வருகின்றன.*

**72—**

**கால்நடை மருத்துவர் நியமனம்**

**வினா எண் 7304—திரு. க. பாண்டியராஜன்:** *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) விருதுநகர் தொகுதி, மங்கலம் ஊராட்சியில் துணை கால்நடை மருத்துவமனையில் கால்நடை மருத்துவரை நியமிக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் கோட்டம், மங்கலம் ஊரக கால்நடை மருந்தகத்திற்கு ஒரு கால்நடை உதவி மருத்துவர் பணி நியமனம் வழங்கப்பட்டு, 25-5-2012 முதல் அவ்விடத்தில் பணிபுரிந்து வருகிறார்.*

[2014 டிசம்பர் 5

**73—**

## மருத்துவர் நியமனம்

**வினா எண் 11946—திரு. சு. ரவி:** *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஒன்றியம், அனந்தாபுரம் கிராமத்தில் உள்ள கால்நடை கிளை மருந்தகத்திற்கு மருத்துவரை நியமனம் செய்ய அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஒன்றியம், அனந்தாபுரம் கிராமத்தில் உள்ள கால்நடை கிளை மருந்தகத்தில் ஒரு கால்நடை உதவி மருத்துவர் 14-7-2012 முதல் தொடர்ந்து பணிபுரிந்து வருகிறார்.*

**74—**

## மருத்துவர் நியமனம்

**வினா எண் 20512—திரு. கே. உலகநாதன்:** *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*திருத்துறைப்பூண்டி தொகுதி, கோட்டூர் ஒன்றியம், பெருகவாழ்ந்தான் கால்நடை மருந்தகத்திற்கு நிரந்தர மருத்துவரை நியமிக்கவும், கட்டடம் கட்டவும் அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*திருவாரூர் மண்டலம், மன்னார்குடி கோட்டம், பெருகவாழ்ந்தான் கால்நடை மருந்தகத்திற்கு ஒரு கால்நடை உதவி*



2014 டிசம்பர் 5]

*மருத்துவர் பணி நியமனம் வழங்கப்பட்டு அவர் 29-5-2012 முதல் அங்கு பணிபுரிந்து வருகிறார்.*

*நபார்டு - RDF XVII திட்டத்தின்கீழ் திருவாரூர் மண்டலம், பெருகவாழ்ந்தான் கால்நடை மருந்தகக் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.*

**75—**

## தடுப்பூசி போடும் பணியாளர் நியமனம்

**வினா எண் 21578—திருமதி எஸ். விஜயதரணி:** *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தமிழகத்தில் கோமாரி நோயைக் கட்டுப்படுத்த தடுப்பூசி (Vaccination) போடும் பணியாளர்களைத் தேவையான எண்ணிக்கையில் நியமிக்க அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*தமிழகத்தில் கோமாரி நோயைக் கட்டுப்படுத்த கால்நடை பராமரிப்புத் துறையில் பணிபுரியும் கால்நடை உதவி மருத்துவர்கள் மற்றும் கால்நடை ஆய்வாளர்களால் தடுப்பூசிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதால் தனியே தடுப்பூசி போடும் பணியாளர்களை நியமனம் செய்வது குறித்து அவசியம் எழாது.*

**76—**

## மருத்துவர் பணியிடங்கள் நிரப்புதல்

**வினா எண் 21595—திரு. கே. உலகநாதன்:** *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*திருத்துறைப்பூண்டி தொகுதி, திருத்துறைப்பூண்டி, பெருகவாழ்ந்தான், வேப்பஞ்சேரி, கடியாச்சேரி, ஓதியத்தூர், திருநெல்லிக்காவல் ஆகிய பகுதிகளிலுள்ள கால்நடை மருத்துவமனைகளில் மருத்துவர் பணியிடங்களை நிரப்ப அரசு ஆவன செய்யுமா?*

[2014 டிசம்பர் 5

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

திருத்துறைப்பூண்டி தொகுதியில் உள்ள திருத்துறைப்பூண்டி, பெருகவாழ்ந்தான், வேப்பஞ்சேரி, கடியாச்சேரி, ஓதியத்தூர், திருநெல்லிக்காவல் ஆகிய பகுதிகளிலுள்ள கால்நடை மருத்துவமனைகளில் கீழ்க்காணும் கால்நடை உதவி மருத்துவர்கள் தற்போது பணிபுரிந்து வருகிறார்கள்:

| நிலையத்தின் பெயர் | பணிபுரியும் கால்நடை உதவி மருத்துவரின் விவரம் | நாள் |
|---|---|---|
| கால்நடை மருத்துவமனை, திருத்துறைப்பூண்டி | கால்நடை மருத்துவர் | 20-6-2012 |
| கால்நடை மருந்தகம், பெருகவாழ்ந்தான் | கால்நடை உதவி மருத்துவர் | 29-5-2012 |
| கால்நடை மருந்தகம், வேப்பஞ்சேரி | கால்நடை உதவி மருத்துவர் | 28-5-2012 |
| கால்நடை மருந்தகம், கடியாச்சேரி | கால்நடை உதவி மருத்துவர் | 29-6-2012 |
| ஊரகக் கால்நடை மருந்தகம், ஓதியத்தூர் | கால்நடை உதவி மருத்துவர் | கூடுதல் பொறுப்பில் கவனிக்கப் படுகிறது |
| ஊரகக் கால்நடை மருந்தகம், திருநெல்லிக்காவல் | கால்நடை உதவி மருத்துவர் | கூடுதல் பொறுப்பில் கவனிக்கப் படுகிறது |

**77—**

## மருத்துவர் பணியிடம் நிரப்புதல்

**வினா எண் 21601—திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2014 டிசம்பர் 5]

திருத்துறைப்பூண்டி தொகுதி, மணலி கிளை கால்நடை மருத்துவமனையிலும், கச்சனம் கால்நடை மருந்தகத்திலும் மருத்துவர் பணியிடத்தை நிரப்ப அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

திருவாரூர் மண்டலம், திருத்துறைப்பூண்டி தொகுதியில் மணலி ஊரகக் கால்நடை மருந்தகத்தில் ஒரு கால்நடை உதவி மருத்துவரும், கச்சனம் கால்நடை மருந்தகத்தில் ஒரு கால்நடை உதவி மருத்துவரும் நியமிக்கப்பட்டு, அவர்கள் 30-5-2012 மற்றும் 23-5-2012 முதல் முறையே பணிபுரிந்து வருகின்றனர்.

**78—**

## மருத்துவர் நியமனம்

**வினா எண் 29571—திரு. அ. பாஸ்கர்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியம், தொப்பூர் ஊராட்சி, அ. செக்காரப்பட்டி கால்நடை மருத்துவமனைக்கு மருத்துவர் நியமனம் செய்ய அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

தருமபுரி மண்டலம், தருமபுரி கோட்டம், அ.செக்காரப்பட்டி, கால்நடை மருந்தகத்திற்கு ஒரு கால்நடை உதவி மருத்துவர் மாறுதலில் நியமனம் செய்யப்பட்டு, அவர் 12-2-2014 முதல் பணிபுரிந்து வருகிறார்.

**79—**

## காலிப் பணியிடங்களை நிரப்புதல்

**வினா எண் 44346—திரு. என்.ஆர். ரெங்கராஜன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை தொகுதி, அதிராம்பட்டிணம் பேரூராட்சி, கால்நடை மருத்துவமனையிலுள்ள காலிப்பணியிடங்களை நிரப்ப அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*தஞ்சாவூர் மண்டலம், பட்டுக்கோட்டை கோட்டம், அதிராம்பட்டிணம் கால்நடை மருந்தகத்தில் 1-4-2012 முதல் கால்நடை உதவி மருத்துவர் பதவியும் மற்றும் 13-9-2013 முதல் கால்நடை ஆய்வாளர் நிலை-2 பதவியும் நிரப்பப்பட்டுள்ளன. கால்நடை பராமரிப்பு உதவியாளர் பதவியில் இரண்டு பதவிகள் ஒப்பளிக்கப்பட்டு ஒரு பதவி 3-6-1999 முதல் நிரப்பப்பட்டு மீதமுள்ள ஒரு பதவி நிரப்பிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.*

**80—**

## மானிய விலையில் கறவை மாடுகள்

**வினா எண் 45923—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) மானாமதுரை தொகுதியில் படித்த வேலையற்ற இளைஞர்களுக்கு கறவை மாடுகள் மானிய விலையில் வழங்கிட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) படித்த வேலையற்ற இளைஞர்களுக்கு கறவை மாடுகள் மானிய விலையில் இத்துறையின்மூலம் வழங்கிடும் திட்டம் எதுவும் தற்பொழுது நடைமுறையில் இல்லை. இருப்பினும் மானாமதுரை தொகுதி அமைந்துள்ள சிவகங்கை மாவட்டத்தில் செட்டிநாடு மாவட்ட கால்நடைப் பண்ணையில் இனவிருத்திக்கென தரமிக்க கறவை மாடுகள் அரசு நிர்ணயித்த விலையில் முன்னுரிமை அடிப்படையில் அனைத்துத் தரப்பினருக்கும் வழங்கப்பட்டு வருகிறது.*



**81—**

## கைத்தறி விற்பனை கண்காட்சி முகாம்

**வினா எண் 45917—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரையில் கைத்தறி விற்பனை கண்காட்சி முகாம் நடத்த அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) கைத்தறி கண்காட்சி பொதுவாக மாவட்டத் தலைநகரிலும் மற்றும் மக்கள் அதிகம் கூடும் இடங்களிலும் கைத்தறி வளர்ச்சி ஆணையரின் வழிகாட்டுதல்படி 15 நாட்கள் நடத்தப்பட்டு வருகிறது. அதன்படி, பரமக்குடி மற்றும் இராமநாதபுரம் ஆகிய நகரங்களில் மாவட்ட அளவிலான கைத்தறி கண்காட்சி மக்கள் அதிகம் கூடும் இடத்தில், இத்துறையால் நடத்தப்பட்டு, கைத்தறி இரகத் துணிகள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. அவற்றால் மானாமதுரை பகுதியில் உள்ள மக்களும் பயனடைந்து வருகின்றார்கள். எனவே மானாமதுரை தொகுதியில், தனியாக கைத்தறி கண்காட்சி நடத்த கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.*

**82—**

## குளத்தைத் தூர் வாருதல்

**வினா எண் 36782—திரு. கார்த்திக் தொண்டைமான்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை தொகுதி, திருமணஞ்சேரி, சுகந்த பரிமளேஸ்வரர் சன்னதி எதிரில் உள்ள குளத்தைத் தூர்வாரி ஆழப்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பூ. செந்தூர் பாண்டியன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், கறம்பக்குடி வட்டம், திருமணஞ்சேரி, அருள்மிகு சுகந்த பரிமளேஸ்வரர் திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறைக் கட்டுபாட்டில் உள்ள திருக்கோயிலாகும். இத்திருக்கோயில் நிருவாகம் நிலை 1 செயல் அலுவலரால் கவனிக்கப்பட்டு வருகிறது. இத்திருக்கோயில் ஆண்டு வருமானம் ரூ.6,54,718/- ஆகும். இத்திருக்கோயிலுக்கு நிலங்கள் ஏதும் இல்லை. இத்திருக்கோயிலில் ஆறு கால பூஜை நடைபெறுகிறது. இத்திருக்கோயிலில் திருக்குளத் தீர்த்தம் மற்றும் மஞ்சள் குளம் ஆகிய இரண்டு குளங்கள் உள்ளன. சுற்றுலாத் துறைமூலம் திருக்கோயில் எதிரே உள்ள திருக்குளத்தைத் தூர்வாரி ஆழப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, தற்போது பணி துவங்கும் நிலையில் உள்ளது.*

**83—**

## அடிப்படை வசதிகள் செய்தல்

**வினா எண் 33246—திரு. சோழன் சித. •பழனிச்சாமி:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டை ஒன்றியம், கண்டதேவி ஊராட்சி, கண்டதேவி கிராமத்திற்கு சுற்றுலாத் துறையின்மூலம் அடிப்படை வசதிகள் செய்வதற்கு அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?





**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) 2011-2012 ஆம் நிதியாண்டில் மாநில அரசு நிதியுதவி திட்டத்தின்கீழ் சிவகங்கை மாவட்டம், சாலை மேம்பாட்டிற்காக ரூ.218.00 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டு, காரைக்குடி தொகுதி, தேவகோட்டை ஒன்றியம், கண்டதேவி கோவில் சாலை முதல் தேவக்கோட்டை புதூர் வரை ரூ.60.00 இலட்சம் செலவில் சாலைப் பணிகள் முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.*

**84—**

## புதிய கட்டடம் கட்டுதல்

**வினா எண் 30941—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளச்சல் தொகுதி, சைமன் காலனி, மீனவர் பயிற்சி நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால், மீன் வளத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் வட்டம், சைமன் காலனி பஞ்சாயத்தில், அரசு ஆணை (நிலை) எண் 3115, உணவு மற்றும் வேளாண்மைத் துறை, நாள் 11-11-1964-ன்படி மீனவர் பயிற்சி நிலையம் 1964-ஆம் ஆண்டு ரூ.77,665/- நிதியில் கட்டப்பட்டு 16-12-1964 முதல் மீனவர் பயிற்சி நிலையம் செயல்பட்டு வருகிறது. 2002 ஆம் வருடம் மேற்படி கட்டட பழுதுப் பணிகள் மேற்கொள்ள ரூ.10,00,000/- நிதி ஒதுக்கீடு செய்து பழுதுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. மேலும், இப்பயிற்சி நிலையத்திற்குப் புதிய கட்டடம் 163.5 சதுர மீட்டர் பரப்பளவில் கட்டுவதற்கு ரூ.50.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து, பணி நிறைவுற்று மீனவர் பயிற்சி நிலையம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. எனவே தற்போது இப்பயிற்சி நிலையத்திற்கு போதுமான கட்டட வசதி உள்ள நிலையில் புதிய கட்டடம் கட்ட தற்போது செயற்குறிப்பு ஏதும் இல்லை.*

[2014 டிசம்பர் 5

**85—**

## மீன் விதைப் பண்ணை அமைத்தல்

**வினா எண் 31529—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தமிழகத்தில் நவீன வசதிகளுடன் மீன் விதைப் பண்ணை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால், மீன் வளத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் நவீன வசதியுடன் மீன் விதைப் பண்ணை அமைக்கும் திட்டத்தின்கீழ் திருநெல்வேலி மாவட்டம் மணிமுத்தாறில் நபார்டு வங்கி நிதியுதவியுடன் ரூ.12.70 கோடி செலவில் புதிதாக 60 நர்சரி தொட்டிகளும், சினைமீன் மண்குளங்களை கான்கிரீட் குளங்களாக மாற்றி அமைத்திட மற்றும் பண்ணையில் உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு பணிகள் முடிவுற்றன. மேலும் தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் பவானிசாகர் மற்றும் கிருஷ்ணகிரி ஆகியவற்றில் நவீன வசதியுடன் கூடிய அரசு மீன் விதைப் பண்ணைகள் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன..*

**86—**

## மின் விளக்கு அமைத்தல்

**வினா எண் 43516—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** *மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*கன்னியாகுமரி மாவட்டம், தேங்காப்பட்டிணம் மீன்பிடி துறைமுக வளாகத்தில் சூரிய மின்சக்திமூலம் இயங்கும் மின் விளக்கு அமைக்க அரசு முன்வருமா?*



2014 டிசம்பர் 5]

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால், மீன் வளத் துறை அமைச்சர்:**

*கன்னியாகுமரி மாவட்டம், மேற்கு கடற்கரையில் மத்திய மாநில அரசுகளின் சமபங்கீட்டில் ரூ.97.40 கோடி திருத்திய திட்ட மதிப்பீட்டில் தேங்காப்பட்டிணத்தில் மீன்பிடித் துறைமுகம் அமைத்திட தமிழக அரசால் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. தேங்காப்பட்டிணத்தில் மீன்பிடித் துறைமுகம் அமைக்கும் திட்டத்தின் அனைத்துப் பணிகளும் 30-6-2015-க்குள் செய்து முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது. பணி முடியும் தருவாயில் சூரிய மின்சக்தி மூலம் இயங்கும் மின் விளக்கு அமைக்கப்படும்.*

**87—**

## வருவாய் கிராமங்களை உருவாக்குதல்

**வினா எண் 25447—திரு. ம. குணசேகரன்:** *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மானாமதுரை தொகுதியில் உள்ள பெரிய வருவாய் கிராமங்களைப் பிரித்து புதிய வருவாய் கிராமங்களை உருவாக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) மானாமதுரை வட்டத்தில் பெரிய வருவாய் கிராமங்களைப் பிரித்து, புதிய வருவாய் கிராமங்கள் உருவாக்க வேண்டிய அவசியம் எழாது. ஏனெனில் பெரிய வருவாய் கிராமமான திருப்புவனம் தற்போது மானாமதுரை வட்டத்திலிருந்து பிரிக்கப்பட்டு தனி வட்டமாக இயங்கி வருகின்றது.*

**88—**

## வட்டத்தைப் பிரித்தல்

**வினா எண் 28209—திரு. மு.வீ. கருப்பையா:** *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மதுரை வடக்கு வட்டத்தினைப் பிரித்து, சோழவந்தான் தொகுதியிலுள்ள பொதும்பு ஊராட்சியில் சேர்க்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) மதுரை வடக்கு வட்டம் பிரிக்கப்படும்போது, பொதும்பு (கி) குலமங்கலம் உள்வட்டம், வடக்கு வட்டத்திற்கு உட்பட்டு உள்ளது. தொகுதி சீரமைப்பின்படி பொதும்பு ஊராட்சி சோழவந்தான் தொகுதிக்குட்பட்டு பிரிக்கப்பட்டு உள்ளது. மேலும், ஊராட்சியினைத் தொகுதி சீரமைப்புப்படி சேர்ப்பது தேர்தல் ஆணையத்திற்குட்பட்டதாகும்.*

**89—**

## யானைகள் புகா அகழிகள் அமைத்தல்

**வினா எண் 39074—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஈரோடு மாவட்டத்தில் யானைகள் தடுப்பு அகழிகள் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், வனத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி ஈரோடு மண்டலத்திற்கு "யானை புகா அகழிகள் அமைக்கும் திட்டத்தின்'' கீழ் 80 கி. மீட்டரும் ''ஆசிய யானைகளால் ஏற்படும் இடர்பாடுகளும் மற்றும் அதனைத் தடுக்கும் முறைகளும்" என்ற திட்டத்தின்கீழ் 40 கி.மீட்டரும், "யானைபுகா அகழிகள் மற்றும் சூரிய மின்வேலியை பராமரித்தல்" என்ற திட்டத்தின்கீழ் 5 கி.மீட்டரும், ஆக மொத்தம் 125 கி.மீ. தூரத்திற்கு யானைகள் புகா அகழிகள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.*





**90—**

## குடிநீர் வழங்குதல்

**வினா எண் 45909—திரு. ம. குணசேகரன்:** *மாண்புமிகு வனத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சிவகங்கை மாவட்ட காடுகளில் வசிக்கும் மான்கள், கரடிகள், குரங்குகள், மலை அணில்கள் போன்ற வன விலங்குகளுக்கு சூரிய ஒளி மின் மோட்டார்மூலம் குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், வனத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) 2010 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் சிவகங்கை மாவட்டம், மண்மலை காப்புக்காடு மற்றும் பனங்குடி காப்புக்காடு ஆகிய இடங்களில் ரூ.7,94,600/- செலவில் சூரிய ஒளியால் இயங்கும் மின் மோட்டார்கள்மூலம் ஆழ்துளைக் கிணற்றிலிருந்து தண்ணீர் எடுத்து, தண்ணீர் தொட்டிகளில் தேக்கி வைத்து மான்கள், கரடிகள், குரங்குகள், மலை அணில்கள் போன்ற வன விலங்குகளுக்குக் குடிநீர் வசதி செய்து தரப்பட்டுள்ளது.*

**91—**

## சொந்தக் கட்டடம் கட்டுதல்

**வினா எண் 39078—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) விருதுநகர் மாவட்ட மாசுக் கட்டுப்பாடு அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

[2014 டிசம்பர் 5

**விடை—**

**மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) விருதுநகர் மாவட்டத்திலுள்ள பெருந்திட்ட வளாகத்தில், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்திற்குச் சொந்த அலுவலகம் கட்டுவதற்கான இடம், விருதுநகர் மாவட்ட ஆட்சியரால் வழங்கப்பட்டுள்ளது. மேலும், பொதுப் பணித் துறையால் தயாரிக்கப்பட்ட கட்டட வரைபடம் மற்றும் மதிப்பீட்டிற்கு தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டு, முன்பணமாக ரூ.35 இலட்சம் பொதுப் பணித் துறைக்கு வழங்கப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக, பொதுப் பணித் துறையினரால் ஆரம்பப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.*

**92—**

## சொந்தக் கட்டடம் கட்டுதல்

**வினா எண் 39079—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) நாமக்கல் மாவட்ட மாசுக் கட்டுப்பாடு வாரிய அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டித்தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) நாமக்கல் மாவட்டத்திலுள்ள பெருந்திட்ட வளாகத்தில், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்திற்குச் சொந்தக் அலுவலகம் கட்டுவதற்கான இடம், நாமக்கல் மாவட்ட ஆட்சியரால் வழங்கப்பட்டுள்ளது. மேலும், பொதுப் பணித் துறையால் தயாரிக்கப்பட்ட கட்டட வரைபடம் மற்றும் மதிப்பீட்டிற்குத் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தால்*



2014 டிசம்பர் 5]

*நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டு, முன்பணமாக ரூ.33 இலட்சம் பொதுப் பணித் துறைக்கு வழங்கப்பட்டுள்ளது. தற்போது பொதுப் பணித் துறையினரால் பூர்வாங்கப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.*

**93—**

## சொந்தக் கட்டடம் கட்டுதல்

**வினா எண் 39080—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சிவகங்கை மாவட்டத்தில் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரிய மாவட்ட அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டித்தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டத்தில் உள்ள பெருந்திட்ட வளாகத்தில், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்திற்கு புதிய மாவட்ட அலுவலகம் கட்டுவதற்கான இடம், மாவட்ட ஆட்சியரால் வழங்கப்பட்டுள்ளது. மேலும், பொதுப் பணித் துறையால் தயாரிக்கப்பட்ட கட்டட வரைபடம் மற்றும் மதிப்பீட்டிற்குத் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டு, முன்பணமாக ரூ.24 இலட்சம் பொதுப் பணித் துறைக்கு வழங்கப்பட்டுள்ளது. தற்போது பொதுப் பணித் துறையினரால் பூர்வாங்க பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.*

**94—**

## சொந்தக் கட்டடம் கட்டுதல்

**வினா எண் 39081—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2014 டிசம்பர் 5

*(அ) திண்டுக்கல் மாவட்ட மாசுக் கட்டுப்பாடு வாரிய அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டித்தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) திண்டுக்கல் மாவட்டத்திலுள்ள பெருந்திட்ட வளாகத்தில், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்திற்குச் சொந்த அலுவலகம் கட்டுவதற்கான இடம், திண்டுக்கல் மாவட்ட ஆட்சியரால் வழங்கப்பட்டுள்ளது. மேலும், பொதுப் பணித் துறையால் தயாரிக்கப்பட்ட கட்டட வரைபடம் மற்றும் மதிப்பீட்டிற்கு தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டு, முன் பணமாக ரூ.25 இலட்சம் பொதுப் பணித் துறைக்கு வழங்கப்பட்டுள்ளது. தற்போது பொதுப் பணித் துறையினரால் பூர்வாங்க பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.*

**95—**

## அதிக ஒலி எழுப்பும் மின் ஆக்கி தடை செய்தல்

**வினா எண் 44352—திரு. என்.ஆர். ரெங்கராஜன்:** *மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*பட்டுக்கோட்டை நகரில் உள்ள வியாபார நிறுவனங்களில் அதிக ஒலி எழுப்பும் மின் ஆக்கிகளை* (Generator) *தடை செய்ய அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

*தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை நகரில் உள்ள வியாபார நிறுவனங்கள் பயன்படுத்தும் மின் ஆக்கிகள்மீது பொது*



2014 டிசம்பர் 5]

*மக்களிடமிருந்து அதிக ஒலி மாசுக் குறித்து எவ்வித புகாரும், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தால் இதுவரை பெறப்படவில்லை. 2002 ஆம் ஆண்டுக்கு பிறகு தயாரிக்கப்பட்டு வரும் மின் ஆக்கிகள் அனைத்திலும் ஒலி மாசுத் தடுப்பு சாதனங்கள் பொருத்தியே விற்பனைக்கு வருகின்றன. மேலும், 2002 ஆம் ஆண்டிற்கு முன் தயாரிக்கப்பட்ட மின் ஆக்கிகளைப் பயன்படுத்தும் வியாபார நிறுவனங்கள் 2000 ஆம் ஆண்டு ஒலி மாசு (ஒழுங்கு முறைகள் மற்றும் கட்டுப்பாடு) விதிகளில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளின்படி, வணிக மண்டலங்களில், காலை 6.00 மணி முதல் இரவு 10-00 மணி வரை 65 டெசிபல் அளவுக்குள்ளும், இரவு 10-00 மணி முதல் காலை 6-00 மணி வரை 55 டெசிபல் அளவுக்குள்ளும், இருக்குமாறு இயக்க வேண்டுமென தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இருப்பினும், ஒலி மாசுத் தொடர்பாக புகார்கள் பெறப்பட்டால் தமிழநாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தால் ஒலி அளவு தொடர்பான ஆய்வு* (Noise Level Survey) *செய்யப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.*

**96—**

## கழிவுநீரை அகற்றுதல்

**வினா எண் 37201—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருநெல்வேலி மாவட்டம், கடையம் ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவமனை வளாகத்திலுள்ள கழிவுநீரை அகற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*(அ) திருநெல்வேலி மாவட்டம், கடையம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு முன்பு உள்ள இடம், கீழ்கடையம் ஊராட்சிக்கு உட்பட்ட இடமாகும் என்றும், அவ்விடத்தில் கடையம் ஊராட்சிக்கு, உரிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியும், நீரேற்றும்*

[2014 டிசம்பர் 5

அறையும் உள்ளது. மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில் நீரேற்றும் போது நிரம்பி வழியும் உபரி நீர் வெளியேறுமே தவிர கழிவு நீரேதும் அங்கு கிடையாது. மேலும், அவ்வாறு வெளியேறும் நீரை அகற்றிடவும், சுற்றுப்புறத்தைத் தூய்மையாக வைத்துக் கொள்ளவும், அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

**97—**

## ஸ்கேன் கருவி அமைத்தல்

**வினா எண் 40576—திருமதி ச. முத்துசெல்வி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சங்கரன்கோவில் தொகுதி, குருவிகுளம் ஒன்றியம், இளையரசனேந்தலிலுள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் கழிப்பறையுடன், பிரசவத்திற்குப் பின் கவனிப்பு வார்டு மற்றும் கர்ப்பிணி பெண்களுக்கென ஸ்கேன் கருவி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

சங்கரன்கோவில் சுகாதாரப் பகுதி மாவட்டம், குருவிகுளம் ஊராட்சி ஒன்றியத்தில், இளையரசனேந்தல் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. இளையரசனேந்தல் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு 2013-2014 நிதியாண்டில் மகப்பேறு பிரிவு கட்ட ரூ.18.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பொதுப் பணித் துறைமூலம் ஒப்பந்த அறிக்கை கோரப்பட்டுள்ளது. படிப்படியாக அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் ஸ்கேன் கருவி வழங்கும்போது இளையரசனேந்தல் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் வழங்கப்படும்.

**98—**

## மருத்துவக் காப்பீட்டு அட்டைக்கான சிறப்பு முகாம்

**வினா எண் 43051—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2014 டிசம்பர் 5]

(அ) மானாமதுரை தொகுதியில் மருத்துவக் காப்பீட்டு அட்டை வழங்கப்படாதவர்களுக்கு சிறப்பு முகாம் நடத்தி அட்டை வழங்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதியில் மருத்துவக் காப்பீட்டு அட்டை வழங்கப்படாதவர்களுக்கு நேரடியாக சென்று பயனாளிகளைக் கண்டறிந்து புகைப்படம் முதலிய விவரங்களை சேகரித்து (Field Enrolment) அடையாள அட்டை வழங்குவதற்கு ஏதுவாக குழுக்கள் அமைக்கப்பட்டு செயல்பட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மேற்படி பணியை 9-2-2014 முதல் 13-2-2014 வரை செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

**99—**

## மருத்துவக் காப்பீட்டு திட்ட அட்டை வழங்குதல்

**வினா எண் 43524—திரு. கே.பி. பரமசிவம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடம் தொகுதியில், ஊராட்சி, நகராட்சி, பேரூராட்சி, மாநகராட்சி பகுதிகளில் சிறப்பு முகாம் அமைத்து முதலமைச்சரின் விரிவான காப்பீடு திட்ட அட்டையை விரைவாக வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பல்லடம் தொகுதியில் மருத்துவக் காப்பீட்டு அட்டை வழங்கப்படாதவர்களுக்கு நேரடியாகச் சென்று

[2014 டிசம்பர் 5

பயனாளிகளைக் கண்டறிந்து புகைப்படம் முதலிய விவரங்களை சேகரித்து (Field Enrolment) அடையாள அட்டை வழங்குவதற்கு ஏதுவாக குழுக்கள் அமைக்கப்பட்டு செயல்பட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மேற்படி பணியை வரும் ஏப்ரல் 2014 மாதத்திற்குள் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

**100—**

**பார்சல் உணவு வழங்குதல்**

**வினா எண் 43584—திருமதி எஸ். விஜயதரணி:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*கன்னியாகுமரி அரசு மருத்துவமனையில் நோயாளிகளுக்கு வழங்கப்படும் உணவை பார்சல் செய்து வழங்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*கன்னியாகுமரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சுமார் 600 நோயாளிகளுக்கு தினமும் மூன்று வேளை உணவு சுகாதார முறைப்படி சூடாக வழங்கப்படுகிறது. இதை சிப்பம் (Parcel) செய்து கொடுக்கப்படும்போது ஆறிய உணவாக வழங்க வாய்ப்புள்ளது. மேலும், உணவை சிப்பம் செய்யும்போது தொற்று நோய் கிருமி ஏற்படுவதற்கான வாய்ப்புள்ளது. தினமும் 600 பேருக்கு மூன்று வேளை சிப்பம் (Parcel) செய்து கொடுக்கும்போது ஒருவகை மருத்துவக் கழிவு உருவாவதற்கு வாய்ப்புள்ளது. எனவே, கன்னியாகுமரி அரசு மருத்துவமனையில் நோயாளிகளுக்கு வழங்கப்படும் உணவை சிப்பம் (Parcel) செய்து வழங்கும் திட்டம் எழவில்லை.*



2014 டிசம்பர் 5]

**பட்டியல்–12**

**1—**

**மணல் பற்றாக்குறையை நீக்குதல்**

**வினா எண் 27454—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** *மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*கன்னியாகுமரி மாவட்டத்தில் நிலவும் மணல் பற்றாக்குறையினை நீக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர்:**

*கன்னியாகுமரி மாவட்டத்தில் நிலவும் மணல் பற்றாக்குறையினைக் கருத்திற்கொண்டு, கன்னியாகுமரி மாவட்டத்திற்கு அண்மையில், திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், லெவஞ்சிபுரத்தில் மணல் கிடங்கு (Sand Stockyard) அமைக்க திருநெல்வேலி மாவட்ட ஆட்சியரால் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.*

**2—**

**பாலாற்றில் மணல் எடுப்பதைத் தடை செய்தல்**

**வினா எண் 28934—திரு. து. முருகேசன்:** *மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*செங்கல்பட்டு நகரத்திற்கு நிலத்தடி நீர் வற்றாத வகையில் திம்மாவரம் மேல் பகுதியில் இருந்து மாமண்டூர் பாலம் வரை பாலாற்றில் மணல் எடுப்பதைத் தடை செய்ய அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர்:**

*காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு வட்டத்திற்கு உட்பட்ட திம்மாவரம் பாலாறு மேல் பகுதியில் இருந்து மாமண்டூர் பாலம் வரை உள்ள பாலாற்றில் மணல் குவாரிகள் எதுவும் செயல்படவில்லை. புதிதாக மணல் குவாரி துவங்க அனுமதி அளிக்கப்படவில்லை. மேலும், காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் வெளியிட்டுள்ள அரசிதழின்படி 13-11-2013 முதல் காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள அனைத்து ஆற்றுப்படுகைகளிலும் ஓராண்டு காலத்துக்கு மணல் அள்ள தடை விதிக்கப்பட்டுள்ளது.*

**3—**

### ஏரியைத் தூர் வாருதல்

**வினா எண் 29352—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி:** *மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சங்கரி தொகுதி, அரசிராமணி கிராம பேரூராட்சி, குள்ளம்பட்டி ஏரியைத் தூர் வாரி ஆழப்படுத்திட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சங்கரி தொகுதி, அரசிராமணி கிராமம், குள்ளம்பட்டி ஏரியில் 2011-2012 ஆம் ஆண்டு ரூ.22.00 இலட்சத்தில் புனரமைப்பு பணி மேற்கொள்ளப்பட்டு செய்து முடிக்கப்பட்டது. தற்போது ஏரியின் மதகு அடிமட்டத்திற்குமேல் வண்டல் மண்* (slit) *ஏதுமில்லாததால் ஏரியைத் தூர் வாரி ஆழப்படுத்த வேண்டிய அவசியம் எழவில்லை.*





**4—**

### லைனிங் அமைக்கும் பணி

**வினா எண் 30411—திரு. சி. சண்முகவேலு:** *மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை, தளி பிரதான வாய்க்கால் 3.5 கி.மீ.-ல் கால்வாயின் குறுக்கே பாலமும், லைனிங் அமைக்கும் பணியையும் செய்ய அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், தளி பிரதான வாய்க்காலின் 3.50 கி.மீட்டரில் கால்வாயின் குறுக்கே உள்ள பாலத்தினை நடப்பு நிதி ஆண்டில் (2013-2014) பராமரிப்பு நிதியிலிருந்து ரூ.4.85 இலட்சம் மதிப்பீட்டில் புதுப்பித்துக் கட்டும் பணி 21-8-2013 அன்று தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது. மேலும், லைனிங் அமைக்கும் பணியானது அடுத்த நிதியாண்டில் பராமரிப்புக்கு ஒதுக்கீடு செய்யப்படும் நிதியிலிருந்து செயல்படுத்தப்படும்.*

**5—**

### ஆகாயத் தாமரை பரவுவதைத் தடுத்தல்

**வினா எண் 31784—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தமிழகத்திலுள்ள நீர்நிலைகளில் ஆகாயத் தாமரை பரவுவதைத் தடுக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

[2014 டிசம்பர் 5

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) பரீட்சார்த்த முறையில் இயந்திரம்மூலம், வேளச்சேரி ஏரியில் ஆகாயத் தாமரை செடிகள் முழுமையாக அகற்றப்பட்டன. இவற்றை அகற்றுவதற்கு சாத்தியக்கூறுகள் இருப்பதால், விரைவில் அனைத்து நீர்நிலைகளிலும் இயந்திரம்மூலம் ஆகாயத் தாமரை செடிகளை அகற்றிட நடவடிக்கை எடுக்கப்படும்.*

**6—**

## குட்டை அமைத்தல்

**வினா எண் 33031—திரு. சி. சண்முகவேலு:** *மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருப்பூர் மாவட்டம், கண்ணமநாயக்கனூர் கிராமம், கருப்பட்டிபாளையம், புல எண் 518 இல் 2 ஏக்கர் புறம்போக்கு நிலத்தில் குட்டை அமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், உடுமலை வட்டம், கண்ணம்புநாயக்கனூர் கிராமம், கருப்பட்டிபாளையத்தில புல எண் 518 இல் நீர்வரத்து ஓடையே இல்லாமல் முன்னரே சாலையாக மாற்றப்பட்டுள்ளது. மேலும், 2 ஏக்கர் புறம்போக்கு நிலப்பகுதியும் சமதளமாகவும், நீர்பிடிப்புப் பரப்பும் மிகமிகக் குறைவாகவே உள்ளதாலும், கருப்பட்டிபாளையம் புல எண் 518-ல் குட்டை அமைக்க தொழில்நுட்ப ரீதியாக சாத்தியக்கூறுகள் ஏதுமில்லை.*



2014 டிசம்பர் 5]

**7—**

## மணல் எடுப்பதைத் தடுத்தல்

**வினா எண் 35277—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருநெல்வேலி மாவட்டம், ராம நதி அணையில் மணல் எடுப்பதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், ராம நதி அணையில் மணல் எடுப்பது நிறுத்தப்பட்டுவிட்டது.*

**8—**

## மணல் அள்ளுவதைத் தடை செய்தல்

**வினா எண் 35278—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தாமிரபரணி ஆற்றில் மணல் அள்ளுவதைத் தடை செய்ய அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) 2-10-2010 முதல் 5 ஆண்டுகளுக்கு தாமிரபரணி ஆற்றில் மணல் அள்ளுவதற்கு சென்னை உயர் நீதிமன்ற மதுரை*

கிளையினால் தடை விதிக்கப்பட்டுள்ளதால், தாமிரபரணி ஆற்றில் மணல் குவாரிகள் நடத்த அனுமதி ஏதும் வழங்கப்படவில்லை. மேலும், தாமிரபரணி ஆற்றில் முறைகேடாக மணல் அள்ளுவதைத் தடுக்கும்பொருட்டு வருவாய்த் துறை மற்றும் காவல்துறைமூலம் குழுக்கள் அமைக்கப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகிறது.

**9—**

## குளத்தினைத் தூர் வாருதல்

**வினா எண் 35286—திரு. எஸ்.பி. வேலுமணி:** *மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தொண்டாமுத்தூர் தொகுதி, செங்குளம், குறிச்சி குளத்தினைத் தூர் வார அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தொண்டாமுத்தூர் தொகுதி, செங்குளம், குறிச்சி குளத்தினைத் தூர் வாரும் திட்டம் தொடர்பான கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.*

**10—**

## மணல் எடுப்பதைத் தடுத்தல்

**வினா எண் 35581—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*





*(அ) தூத்துக்குடி மாவட்டம், சாத்தான்குளம் அருகில் மணிமுத்தாறு ஓடையில் கனரக இயந்திரங்கள்மூலம் மணல் எடுப்பதைத் தடுத்திட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர்:**

*(அ) தூத்துக்குடி மாவட்டம், சாத்தான்குளம் அருகில் மணிமுத்தாறு ஓடையில் கனரக இயந்திரங்கள்மூலம் மணல் எடுக்க அனுமதிக்கப்படவில்லை.*

*(ஆ) இவ்வினா எழவில்லை.*

**11—**

## குளத்தைத் தூர் வாருதல்

**வினா எண் 38082—திரு. எஸ்.பி. வேலுமணி:** *மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தொண்டாமுத்தூர் தொகுதி, வேடப்பட்டி குளத்தைத் தூர் வார அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தொண்டாமுத்தூர் தொகுதி, வேடப்பட்டி குளத்தினைத் தூர் வாருவது தொடர்பான கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.*

[2014 டிசம்பர் 5

**12—**

### செங்குளத்தைத் தூர் வாருதல்

**வினா எண் 38086—திரு. எஸ்.பி. வேலுமணி:** *மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தொண்டாமுத்தூர் தொகுதி, செங்குளத்தைத் தூர் வார அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தொண்டாமுத்தூர் தொகுதியிலுள்ள செங்குளத்தைத் தூர் வாருவது தொடர்பான கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.*

**13—**

### தடுப்பணையைப் பராமரித்தல்

**வினா எண் 38087—திரு. எஸ்.பி. வேலுமணி:** *மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தொண்டாமுத்தூர் தொகுதி, சின்னாறு தடுப்பணையைப் பராமரிக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தொண்டாமுத்தூர் தொகுதிக்குட்பட்ட சின்னாறு தடுப்பணையைப் பராமரிக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.*



2014 டிசம்பர் 5]

**14—**

### ராஜவாய்க்காலைத் தூர் வாருதல்

**வினா எண் 38088—திரு. எஸ்.பி. வேலுமணி:** *மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தொண்டாமுத்தூர் தொகுதி, ராஜவாய்க்காலைத் தூர் வார அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தொண்டாமுத்தூர் தொகுதியில் உள்ள ராஜவாய்க்காலினைத் தூர் வாரும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.*

**15—**

### பாலாற்றில் மணல் எடுப்பதை முறைப்படுத்துதல்

**வினா எண் 40227—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) காஞ்சிபுரம் மாவட்டம், வாலாஜாபாத் அருகில் பாலாற்றில் மணல் எடுப்பதை முறைப்படுத்த அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர்:**

*(அ) காஞ்சிபுரம் மாவட்டத்தில் 2 அரசு மணல் குவாரிகள் மாவட்ட ஆட்சித் தலைவர், காஞ்சிபுரம் அவர்கள் அனுமதியுடன் பினாயூர் மற்றும் மணப்பாக்கம் ஆகிய கிராமங்களில் உள்ள பாலாற்றுப் படுகையில் இயங்கி வந்தன. காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் காஞ்சிபுரம் மாவட்ட அரசிதழ்*

*சிறப்பு வெளியீடு எண் 10, நாள் 13-11-2013-ல் வெளியிட்டுள்ள அறிக்கையில், காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள அனைத்து ஆற்றுப்படுகைகளிலும் ஓராண்டு காலத்திற்கு மணல் அள்ளக்கூடாது என தமிழ்நாடு அரசு முடிவெடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டு, 13-11-2013 முதல் நடைமுறைப்படுத்தப்படுவதாக அறிவிப்பு வெளியாகியுள்ளது. எனவே, இயங்கி வந்த 2 அரசு மணல் குவாரிகளும் நிறுத்தப்பட்டன. தற்போது, காஞ்சிபுரம் மாவட்டத்தில் அரசு மணல் குவாரிகள் ஏதும் இயங்கவில்லை.*

*(ஆ) இவ்வினா எழவில்லை.*

**16—**

## தெருவின் ஓரமாக மின் கம்பங்கள் அமைத்தல்

**வினா எண் 37723—திரு. ஏ.கே. போஸ்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மதுரை வடக்கு தொகுதி, ஜீவா ரோடு, செல்லூர், அண்ணா நகர் மற்றும் முந்திரித்தோப்பு பகுதிகளில் நுழைவுப் பாதையிலும், நடைபாதையிலும் உள்ள மின் கம்பங்களை அகற்றி தெருவின் ஓரமாக அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஆம். மதுரை வடக்கு தொகுதி, ஜீவா நகர் நுழைவுப்பகுதியிலுள்ள மின் கம்பம் / மதுரை மாநகராட்சியிலிருந்து மதிப்பீட்டுத் தொகை செலுத்தப்பட்டு 3-5-2013-ம் தேதியன்று மின்கம்பம் மாற்றி அமைக்கப்பட்டுவிட்டது. அண்ணா நகர் முந்திரித்தோப்பு பகுதியில் நடைபாதையில் ஒரு மின்கம்பமானது வீட்டின் அருகில் உள்ளது. மின் கம்பத்தை மாற்றி அமைப்பதற்கான மதிப்பீட்டுத் தொகையைச் செலுத்தியவுடன் மின் கம்பங்கள் மாற்றியமைக்கப்படும்.*





**17—**

## தெரு விளக்குகள் அமைத்தல்

**வினா எண் 38328—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தென்காசி தொகுதி, கீழவெள்ளகால் ஊராட்சி, நியூகாலனிக்கு கம்பத்துடன்கூடிய வெண்குழல் தெரு விளக்குகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தென்காசி தொகுதி, கீழவெள்ளகால் ஊராட்சி, நியூகாலனிக்கு கம்பத்துடன்கூடிய வெண்குழல் தெரு விளக்குகள் அமைக்கக் கோரி ஊராட்சியிடமிருந்து விண்ணப்பம் எதுவும் பெறப்படவில்லை. விண்ணப்பம் பெறப்பட்டு, மதிப்பீட்டுத் தொகையைச் செலுத்தினால், தெரு விளக்குகள் அமைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.*

**18—**

## மின் கம்பங்களை மாற்றியமைத்தல்

**வினா எண் 38347—திரு. கே.பி. பரமசிவம்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பல்லடம் தொகுதி, கரைப்புதூர் ஊராட்சி, கரைப்புதூரிலுள்ள மின் வாரியத்தால் கரைப்புதூர் மருதாசலம் வீடு அருகிலும், ஜோதி மணி வீடு அருகிலும் உள்ள பழுதடைந்த மின் கம்பங்களை மாற்றியமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

[2014 டிசம்பர் 5

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) பல்லடம் தொகுதி, கரைப்புதூர் ஊராட்சி, கரைப்புதூரிலுள்ள மின் வாரியத்தால் கரைப்புதூர் மருதாசலம் வீடு அருகிலும், ஜோதி மணி வீடு அருகிலும் இருந்த பழுதடைந்த மின் கம்பங்கள் கடந்த 19-7-2013 அன்று மாற்றப்பட்டுவிட்டன.*

**19—**

## காற்றாலை மின்சாரத்தை சேமித்தல்

**வினா எண் 39942—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) காற்றாலை மின்சாரத்தை சேமிக்கும் மின்னாக்கிகளை பயன்படுத்த அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், கடலோர மாவட்டங்களில் காற்றாலை மின் உற்பத்தியை அதிகரிக்க அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) காற்றாலைமூலம் கிடைக்கும் மின்சாரத்தை குறைந்த செலவில் சேமித்து வைக்க வர்த்தகரீதியாகவும், தொழில்நுட்பரீதியாகவும் சாத்தியக்கூறுகள் தற்போது இல்லை. அத்தகைய தொழில்நுட்பம் கிடைக்கும்பட்சத்தில் அதற்கான திட்டத்தை அரசு மேற்கொள்ளும்.*

**20—**

## நிருவாக அலுவலகம் அமைத்தல்

**வினா எண் 41346—திரு. சு. மாதேஸ்வரன்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*



2014 டிசம்பர் 5]

*(அ) ஆத்தூர் தொகுதியில் மேற்பார்வை பொறியாளர் மற்றும் நிருவாக அலுவலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஏற்கெனவே சேலம் மற்றும் மேட்டூர் மின் பகிர்மான வட்டங்களைப் பிரித்து புதிதாக நாமக்கல் மின் பகிர்மான வட்டம் உருவாக்கப்பட்டு செயல்படுவதால், சேலம் ஆத்தூரில் மேலும் ஒரு மின் பகிர்மான வட்டம் மற்றும் நிருவாக அலுவலகம் உருவாக்க தற்போது அவசியம் எழவில்லை.*

**21—**

## தெரு விளக்குகள் அமைத்தல்

**வினா எண் 41347—திரு. சு. மாதேஸ்வரன்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஆத்தூர் தொகுதி, பெத்தநாயக்கன்பாளையம் ஒன்றியம், மேற்கு ராஜாபாளையம் ஊராட்சியிலுள்ள குட்டக்கரை பேருந்து நிறுத்தத்திலிருந்து தமையனூர் பெரியநாயகி அம்மன் கோயில் வரை கம்பத்துடன்கூடிய தெரு விளக்குகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஆத்தூர் தொகுதி, பெத்தநாயக்கன்பாளையம் ஒன்றியம், மேற்கு ராஜாபாளையம் ஊராட்சியிலுள்ள குட்டக்கரை பேருந்து நிறுத்தத்திலிருந்து தமையனூர் பெரியநாயகி அம்மன் கோயில் வரை கம்பத்துடன்கூடிய தெரு விளக்குகள் அமைக்கக்கோரி ஊராட்சியிடமிருந்து விண்ணப்பம் எதுவும்*

பெறப்படவில்லை. விண்ணப்பம் பெறப்பட்டு, மதிப்பீட்டுத் தொகையைச் செலுத்தினால், தெரு விளக்குகள் அமைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

**22—**

**மின் கம்பங்களை மாற்றியமைத்தல்**

**வினா எண் 41371—திரு. வீ.பி. நாகைமாலி:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கீழ்வேளூர் தொகுதி, கீழையூர் ஒன்றியம், ஈசனூர் கட்டளை கிராமத்திலுள்ள பழுதடைந்த மின் கம்பங்களை மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

கீழ்வேளூர் தொகுதி, கீழையூர் ஒன்றியம், ஈசனூர் கட்டளை கிராமத்தில் நான்கு பழுதடைந்த மின் கம்பங்கள் கண்டறியப்பட்டு, அவை அகற்றப்பட்டு நான்கு புதிய மின் கம்பங்கள் நடப்பட்டுள்ளன.

**23—**

**கூடுதல் மின்மாற்றி அமைத்தல்**

**வினா எண் 41991—திரு. ஆ. நாராயணன்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாளையங்கோட்டை ஒன்றியம், பொன்னாக்குடி ஊராட்சி, தெற்கு பொன்னாக்குடியில் கூடுதல் மின்மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி தொகுதி, பாளையங்கோட்டை ஒன்றியம், பொன்னாக்குடி ஊராட்சி, தெற்கு பொன்னாக்குடி பகுதிக்கு தோட்டாகுடி SS IV 100 KVA மின்மாற்றிமூலம் மின் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இந்த மின்மாற்றியில் இணைக்கப்பட்டிருக்கும் மின் பளுக்களுக்கு மேற்படி மின்மாற்றியின் திறன் போதுமானது என்பதால் பொன்னாக்குடி பகுதியில் தனியாக மின்மாற்றி அமைப்பதற்கு தற்போது தேவை எழவில்லை.

**24—**

**மின்வசதி செய்தல்**

**வினா எண் 42949—திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளவங்கோடு தொகுதி, செண்பகதரிசில் மின் வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு தொகுதி, செண்பகதரிசில் உள்ள வீடுகளுக்கு மின் இணைப்பு வேண்டி வந்த எவ்வித விண்ணப்பமும் நிலுவையில் இல்லை. விண்ணப்பம் பெறும்பட்சத்தில் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

[2014 டிசம்பர் 5

**25—**

## குடிநீர் மற்றும் கழிவுநீர்க் கால்வாய் வசதி

**வினா எண் 4966—திரு. ப. பார்த்தசாரதி:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*விருகம்பாக்கம் தொகுதி, 65-வது வட்டம், மேட்டுக்குளம், நியூகாலனி பகுதிகளில் குடிநீர் வசதி, கழிவுநீர்க் கால்வாய் வசதி செய்து தர அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம், மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*விருகம்பாக்கம் தொகுதி, 65-வது வட்டத்திலுள்ள மேட்டுக்குளம் மற்றும் நியூகாலனி பகுதிகளில், 5 பொதுக் குழாய்களின் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும், தினந்தோறும் 18,000 லிட்டர் குடிநீர், வாரிய லாரிகள் மூலமும் விநியோகம் செய்யப்படுகிறது. அப்பகுதியில் வாழும் மக்களின் தேவைக்கு இது போதுமானதாக உள்ளது.*

*இந்தப் பகுதி மிகவும் தாழ்வான பகுதியாக உள்ளதால், தற்போது அருகில் உள்ள கழிவுநீர்க் கட்டமைப்புடன் இப்பகுதியினை இணைக்க இயலாது.*

**26—**

## தார்ச் சாலையைப் பராமரித்தல்

**வினா எண் 12193—திரு. சு. ரவி:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*



2014 டிசம்பர் 5]

*(அ) அரக்கோணம் தொகுதி, இரட்டைக்கண் வாராவதியில் இருந்து புதிய பேருந்து நிலையத்திற்குச் செல்லும் இரயில்வேக்குச் சொந்தமான தார்ச் சாலையை அரக்கோணம் நகராட்சிமூலம் பராமரிப்பு செய்ய அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதியில் நகராட்சிக்குச் சொந்தமான சாலைகள் மட்டும் நகராட்சியால் பராமரிப்பு செய்யப்பட்டு வருகின்றன. இரயில்வேக்குச் சொந்தமான தார்ச் சாலைகளில் நகராட்சிக்கு அதிகாரம் இல்லாததால், இரயில்வே துறையே பராமரித்து வருகிறது எனத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.*

**27—**

## புதிய குடிநீர்த் தொட்டி கட்டுதல்

**வினா எண் 14308—திரு. ர.ம. பாபு முருகவேல்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஆரணி, 15-வது வார்டு, களத்து மேட்டுத் தெரு 1-ல் புதிய குடிநீர்த் தொட்டி கட்ட அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஆரணி தொகுதி, ஆரணி நகராட்சி, 15-வது வார்டு, களத்து மேட்டுத் தெரு 1-ல் பின் தங்கிய மண்டல மானிய நிதி 2011-2012-ன்கீழ் ரூ.1.50 இலட்சத்தில் நீர்தேக்கத் தொட்டி அமைக்கப்பட்டு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.*

**28—**

## புதிய குடிநீர்க் குழாய் இணைப்பு அமைத்தல்

**வினா எண் 14312—திரு. ர.ம. பாபு முருகவேல்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஆரணி நகராட்சி, 14-வது வார்டில் பழுதடைந்த குடிநீர்க் குழாய் இணைப்புகளை புதியதாக அமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஆரணி நகராட்சி, 14-வது வார்டில் உள்ள திருவள்ளுவர் தெருவில் பழுதடைந்த குடிநீர்க் குழாய் இணைப்புகள் சரி செய்யப்பட்டுள்ளன. எனவே, புதியதாக குழாய் அமைக்கும் அவசியம் ஏதும் இல்லை.*

**29—**

## கால்வாய் அடைப்புகளை அகற்றுதல்

**வினா எண் 15168—திரு. ர.ம. பாபு முருகவேல்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஆரணி தொகுதி, சூரியகுளத்திலிருந்து உபரி நீர் வெளியேறும் கால்வாய் அடைப்புகளை அகற்றிட அரசு முன் வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*





**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஆரணி நகராட்சி எல்லைக்குள் அமைந்துள்ள சூரியகுளத்தின் உபரிநீர் வெளியேறும் இடத்தில் முன்பு அடைப்பு இருந்து வந்தது. நகராட்சிமூலம், அவ்விடத்தில் சிறு பாலம் அமைக்கப்பட்டு தச்சூர் ரோட்டில் அமைந்துள்ள பிரதான கால்வாயுடன் இணைக்கப்பட்டுள்ளது. எனவே, சூரியகுளம் மழைநீர் நிரம்பினால், உபரிநீர் எவ்வித இடையூறுமின்றி வெளியேறும்படி தற்பொழுது வழிவகை செய்யப்பட்டுள்ளது எனத் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.*

**30—**

## குடும்ப நல நீதிமன்றங்கள் அமைத்தல்

**வினா எண் 19662—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*குடும்ப நல நீதிமன்றங்களை அனைத்து மாவட்டங்களிலும் ஏற்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*தமிழ்நாட்டில் ஏற்கெனவே சென்னையில் நான்கும், மதுரை, கோயம்புத்தூர் மற்றும் சேலம் ஆகிய மாவட்டங்களில் தலா ஒன்றும் ஆக மொத்தம் ஏழு குடும்ப நல நீதிமன்றங்கள் மாவட்ட நீதிபதி பதவி தரத்தில் இயங்கி வருகின்றன. மேலும், கோயம்புத்தூரில் ஒரு கூடுதல் குடும்ப நல நீதிமன்றம் மற்றும் அரசாணை நிலை எண் 516, உள் (நீ.ம.2) துறை, நாள் 16-7-2013-ன்படி திண்டுக்கல், ஈரோடு, திருநெல்வேலி, சிவகங்கை, திருவள்ளூர், செங்கல்பட்டு, விழுப்புரம், வேலூர், திருச்சிராப்பள்ளி, தருமபுரி, திருவாரூர், விருதுநகர் மற்றும் நீலகிரி ஆகிய இடங்களில் தலா*

[2014 டிசம்பர் 5

ஒரு குடும்ப நல நீதிமன்றம் அமைப்பதற்கு ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டு, தமிழ்நாடு அரசிதழிலும் அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது. மேற்காணும் நீதிமன்றங்களை அமைப்பதற்கு உயர் நீதிமன்றம் நடவடிக்கை எடுத்து வருகிறது. குடும்ப நல நீதிமன்றம் இல்லாத பிற மாவட்டங்களில் சார்பு நீதிமன்றங்களில் குடும்ப நல வழக்குகள் விசாரணை செய்யப்படுகின்றன. இதைத் தவிர சென்னையில் நான்கு விடுமுறை கால குடும்ப நல நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. குடும்ப நல நீதிமன்றங்கள் இல்லாத பிற மாவட்டங்களுக்கு குடும்ப நல நீதிமன்றம் ஏற்படுத்தக் கோரும் கருத்துரு உயர் நீதிமன்றத்திடமிருந்து பெறப்பட்டு அவற்றை ஏற்படுத்தக்கூடிய சாத்தியக்கூறுகளையும், அங்கு நிலுவையிலுள்ள குடும்ப நல வழக்குகளின் அடிப்படையிலும், அதற்கான செலவினம் குறித்தும் அரசு பரிசீலனை செய்து முடிவு எடுக்கும்.

**31—**

## விளம்பர வரி வசூலித்தல்

**வினா எண் 19833—திருமதி எஸ். விஜயதரணி:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*(அ) அரசு, பொது, தனியார் சுவர்களில் விளம்பரம் செய்பவர்களிடம் முறையாக உள்ளாட்சி அமைப்பு விளம்பர வரி வசூலிக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:—**

*(அ) ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு விளம்பர வரி வசூலிப்பது தொடர்பாக தமிழ்நாடு ஊராட்சி சட்டம் 1994, பிரிவு 172A மற்றும் அரசாணை (நிலை) எண் 218, ஊரக வளர்ச்சித் (சி4) துறை, நாள் 14-10-1999-ல் உள்ள நிபந்தனைகளின்படி, ஊராட்சிக்கு உட்பட்ட அரசு, பொது, தனியார் இடங்களில் விளம்பரம் செய்பவர்களிடம் முறையாக ஊராட்சியின் நிருவாக அலுவலரால் விளம்பர வரி வசூலிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.*

*(ஆ) வினா எழாது.*



2014 டிசம்பர் 5]

**32—**

## இலவச சட்ட ஆலோசனை

**வினா எண் 23332—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*குளச்சல் தொகுதி, நீதிமன்றங்களில் ஓய்வு பெற்ற நீதிபதிகள் மூலமாக தினசரி ஒரு மணி நேரம் இலவச சட்ட ஆலோசனை வழங்கிட அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*குளச்சல் தொகுதி, கன்னியாகுமரி மாவட்டம், இரணியல் வட்ட சட்டப் பணிகள் குழுவின் வரம்புக்குள் வருகின்றது. இலவச சட்ட ஆலோசனை பெற விரும்புகிறவர்கள் இரணியல் வட்ட சட்டப் பணிகள் குழுவினை அணுகி பட்டியல் வழக்கறிஞர் மூலம் இலவச சட்ட ஆலோசனைகளைப் பெறலாம்.*

**33—**

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

**வினா எண் 27014—திரு. ஆ. நாராயணன்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) நாங்குநேரி தொகுதி, பாளையங்கோட்டை ஒன்றியம், பாளையஞ்செட்டிகுளம் வரையில் பானு காலனியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

[2014 டிசம்பர் 5

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி சட்டமன்றத் தொகுதி, பாளையங்கோட்டை ஊராட்சி ஒன்றியம், பாளையஞ்செட்டிகுளம் ஊராட்சியைச் சார்ந்த பானு காலனி (பானுநகர்) புதிதாக உருவாகிவரும் குடியிருப்பாகும். தற்போது இக்குடியிருப்பிற்கு பர்கிமோ நகர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் பாளையஞ்செட்டிகுளம் குடியிருப்பில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில் இருந்து குழாய் நீட்டிப்பு செய்து பொதுக் குழாய்மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. புதிய குடியிருப்பாக வகைப்படுத்தப்பட்டுள்ள பானு காலனிக்கு 2014-2015 ஆம் நிதியாண்டில் புதிய குடிநீர்த் திட்டம் செயல்படுத்துவது குறித்து தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.*

**34—**

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

**வினா எண் 27103—திரு. ஆ. நாராயணன்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) நாங்குநேரி தொகுதி, களக்காடு ஒன்றியம், சூரன்குடி ஊராட்சி, சூரன்குடி மூப்பனார் தெருவில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி தொகுதி, களக்காடு ஒன்றியம், சூரன்குடி ஊராட்சி, சூரன்குடி குடியிருப்பின் மக்கள்தொகை 575 ஆகும். இக்குடியிருப்பில் ஆழ்துளைக் கிணற்றை*



2014 டிசம்பர் 5]

*நீராதாரமாகக் கொண்டு 60,000 லிட்டர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன்கூடிய குடிநீர்த் திட்டம் பொது மக்கள் பயனில் உள்ளது. இக்குடியிருப்பில் மக்கள் தொகைக்கு ஏற்ப மேல் நிலைத் தொட்டி பயனில் உள்ளதால் சூரன்குடி மூப்பனார் தெருவிற்கு என்று தனியாக குடிநீர்த் தொட்டி அமைக்க சாத்தியக் கூறு இல்லை. மேலும், இக்குடியிருப்பிற்கு பணகுடி-வடக்கு வள்ளியூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம்மூலம் தாமிரபரணி ஆற்று நீரும் வழங்கப்பட்டு வருகிறது.*

**35—**

## காவேரி கூட்டுக் குடிநீர் வழங்குதல்

**வினா எண் 29395—திரு. கார்த்திக் தொண்டைமான்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) புதுக்கோட்டை நகராட்சி பகுதியில் தினந்தோறும் காவேரிக் குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை நகராட்சிக்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்மூலம் காவேரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் குடிநீர் பெறப்பட்டு இரண்டு நாட்களுக்கு ஒரு முறை குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. தினந்தோறும் குடிநீர் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.*

**36—**

## சாலையைச் சீரமைத்தல்

**வினா எண் 30190—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தென்காசி தொகுதி, தென்காசி மலையான் தெருவிலுள்ள குழியை மூடி சாலையைச் சீரமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) 2013 ஆகஸ்ட் திங்கள் முதல் வாரத்தில், தென்காசி மலையான் தெருவில் உள்ள குழியை மூடி, சாலையைச் சீரமைக்கும் பணிகள் முடிக்கப்பட்டு, தற்போது பொது மக்கள் பயன்பாட்டில் உள்ளது.*

**37—**

## மகளிர் சுய உதவிக் குழுக்களுக்குப் பயிற்சி

**வினா எண் 30995—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சென்னை மாநகராட்சியில் தொடங்கியுள்ள மலிவு விலை சிற்றுண்டி உணவகங்களின் உணவுப் பொருட்களை சுகாதாரமான முறையில் தயாரிக்க மகளிர் சுய உதவிக் குழுக்களுக்குப் பயிற்சி அளிக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சென்னை மாநகராட்சியில் தொடங்கியுள்ள மலிவு விலை சிற்றுண்டி உணவகங்களில் விற்பனை செய்யப்படும் உணவுப் பொருட்களை சுகாதாரமான முறையில் தயாரிக்கவும்,*





*அவர்களுக்கு உணவு தயாரிப்பதற்குரிய முறைகளையும், உணவு கையாளும் முறைகளையும் மற்றும் அவர்களுடைய தனி நபர் உடல் தூய்மையையும் பற்றி விளக்கும் வகுப்புகள் நடத்தப்பட்டு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. சென்னை மாநகராட்சி மலிவு விலை சிற்றுண்டி உணவகங்கள் மேற்பார்வையிடும் குழு மூலமும் மற்றும் கண்காணிப்புக் குழு மூலமும் கண்காணிக்கப்பட்டு வருகின்றன. மேலும், தொடர் பயிற்சிகளும் அவ்வப்பொழுது அளிக்கப்பட்டு வருகின்றன.*

**38—**

## நகராட்சியை விரிவுபடுத்துதல்

**வினா எண் 31550—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) குளச்சல் நகராட்சியை விரிவுபடுத்த அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) குளச்சல் நகராட்சியினை விரிவுபடுத்துவதற்கான செயற்குறிப்பு எதுவும் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.*

**39—**

## வார்டு எண்ணிக்கையை அதிகப்படுத்துதல்

**வினா எண் 31607—திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சேலத்திலுள்ள 60 வார்டுகளையும் பிரித்து எண்ணிக்கையை அதிகப்படுத்துவதற்கு அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சேலம் மாநகராட்சியில் வார்டுகளைப் பிரித்து அவற்றின் எண்ணிக்கைகளை அதிகப்படுத்துவதற்கான செயற்குறிப்பு எதுவும் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.*

**40—**

## நீர் உறிஞ்சு கிணறுகளைப் புனரமைத்தல்

**வினா எண் 31785—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருநெல்வேலி மாவட்டம், தாமிரபரணி ஆற்றில் கூட்டுக் குடிநீர்த் திட்ட பழுதடைந்த நீர் உறிஞ்சு கிணறுகளைப் புனரமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், தாமிரபரணி ஆற்றில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய பராமரிப்பின்கீழ் உள்ள குடிநீர்த் திட்டங்களில் பழுதடைந்த நீர் உறிஞ்சு கிணறுகளுக்குப் பதிலாக புதிய கிணறுகள் தோற்றுவிக்கப்பட்டு முறையாக பராமரிக்கப்பட்டு வருகின்றன.*





**41—**

## அமர்வு நீதிமன்றம் அமைத்தல்

**வினா எண் 32889—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*குளச்சல் தொகுதி, இரணியலில் அமர்வு நீதிமன்றம், நுகர்வோர் நீதிமன்றம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*குளச்சல் தொகுதி, இரணியலில் அமர்வு நீதிமன்றம் அமைப்பது தொடர்பான செயற்குறிப்பு ஏதும் உயர் நீதிமன்றத்திடமிருந்து பெறப்படவில்லை.*

**42—**

## நிலுவையிலுள்ள வழக்குகளை விரைவில் முடித்தல்

**வினா எண் 32901—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*குடும்பநல நீதிமன்றங்களில் தேங்கியிருக்கும் வழக்குகளை துரிதமாக முடிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*தமிழ்நாட்டில் ஏற்கெனவே சென்னையில் நான்கும், மதுரை, கோயம்புத்தூர் மற்றும் சேலம் ஆகிய மாவட்டங்களில் தலா ஒன்றும் ஆக மொத்தம் ஏழு குடும்ப நல நீதிமன்றங்கள் மாவட்ட நீதிபதி பதவி தரத்தில் இயங்கி வருகின்றன. மேலும், குடும்ப*

நல வழக்குகளை விரைந்து விசாரணை செய்து முடிப்பதற்கு ஏற்ப கோயம்புத்தூரில் ஒரு கூடுதல் குடும்ப நல நீதிமன்றம் மற்றும் அரசாணை நிலை எண் 516, உள் (நீ.ம.2) துறை, நாள் 16-7-2013-ன்படி திண்டுக்கல், ஈரோடு, திருநெல்வேலி, சிவகங்கை, திருவள்ளூர், செங்கல்பட்டு, விழுப்புரம், வேலூர், திருச்சிராப்பள்ளி, தருமபுரி, திருவாரூர், விருதுநகர் மற்றும் நீலகிரி ஆகிய இடங்களில் தலா ஒரு குடும்ப நல நீதிமன்றம் அமைப்பதற்கு ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டு, **தமிழ்நாடு அரசிதழிலும்** அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது. மேற்காணும் நீதிமன்றங்களை அமைப்பதற்கு உயர் நீதிமன்றம் நடவடிக்கை எடுத்து வருகிறது. குடும்ப நல நீதிமன்றம் இல்லாத பிற மாவட்டங்களில் சார்பு நீதிமன்றங்களில் குடும்ப நல வழக்குகள் விசாரணை செய்யப்படுகின்றன. இதைத் தவிர சென்னையில் நான்கு விடுமுறைக் கால குடும்ப நல நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன.

**43—**

### சிமெண்ட் சாலை அமைத்தல்

**வினா எண் 34006—திரு. சோழன் சித. பழனிச்சாமி:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டை நகராட்சி, 5-வது வார்டில் உள்ள நேரு தெரு, குறுக்குத் தெரு, அம்பேத்கர் தெரு, நடராஜபுரம் குறுக்குத் தெரு, திருவள்ளுவர் தெரு மற்றும் செப்பவயலார் குறுக்குத் தெருவில் சிமெண்ட் சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டை நகராட்சி, 5-வது வார்டில் உள்ள நேரு தெரு, குறுக்குத் தெரு, அம்பேத்கர் தெரு, நடராஜபுரம் குறுக்குத் தெரு, திருவள்ளுவர் தெரு மற்றும் செப்பவயலார் குறுக்குத் தெருக்களில் சிமெண்ட் தளம் அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை.*





**44—**

### சிமெண்ட் சாலை அமைத்தல்

**வினா எண் 34014—திரு. சோழன் சித. பழனிச்சாமி:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாகளுக்கு விடையளிப்பாரா—

*(அ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டை நகராட்சி, 9-வது வார்டு, பொதி நாகப்பன் மற்றும் பால்காவடியார் தெருக்களில் சிமெண்ட் சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டை நகராட்சி, 9-வது வார்டு, பொதி நாகப்பன், பால்காவடியார் தெருக்களில் உள்ள தார்ச் சாலைகள் நல்ல நிலையில் உள்ளன. எனவே, இத்தெருக்களில் சிமெண்ட் சாலை அமைக்கத் தேவையில்லை.*

**45—**

### சிமெண்ட் சாலை அமைத்தல்

**வினா எண் 34020—திரு. சோழன் சித. பழனிச்சாமி:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாகளுக்கு விடையளிப்பாரா—

*(அ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டை நகராட்சி, 15-வது வார்டு, பழனியப்பன் தெரு மற்றும் மேலபஜார் பகுதியில் சிமெண்ட் சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டை நகராட்சி,*

*15-வது வார்டு, பழனியப்பன் தெரு மற்றும் மேலபஜார் சாலை ஆகிய தெருக்கள் நல்ல நிலையில் உள்ளன. எனவே, சிமெண்ட் சாலை அமைக்கத் தேவையில்லை.*

**46—**

**மயானத்தை மின் தகன மேடையுடன் மேம்படுத்துதல்**

**வினா எண் 34219—முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரம் நகராட்சி, மறவர் தெரு, கால்வாய் தெரு, வீரபத்திரசுவாமி கோயில் தெரு, காமராஜர் நகர், பத்திரகாளியம்மன் கோயில் தெரு பகுதி மக்களுக்காக சம்பை சாலையில் உள்ள மயானத்தை மின் தகன மேடையுடன் மேம்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*இராமேஸ்வரம் நகராட்சி, மறவர் தெரு, கால்வாய் தெரு, வீரபத்திரசுவாமி கோயில் தெரு, காமராஜர் நகர், பத்திரகாளியம்மன் கோயில் தெரு பகுதி மக்களுக்காக சம்பை சாலை பகுதிகளில் இறந்தவர்களின் சடலங்களை அடக்கம் செய்ய தனித்தனியே இடங்கள் உள்ளதாலும், மேற்படி பகுதியில் வாழும் மக்கள் தொகைக்கு ஏற்ப இறப்பவர்களின் எண்ணிக்கையின் புள்ளி விவரங்களைக் கருத்தில் கொண்டும் அவ்விடத்தில் மின் தகன மேடை அமைக்க போதிய சாத்தியக்கூறுகள் இல்லாததால் மேற்கண்ட திட்டம் செயல்படுத்தும் நிலை எழாது.*

**47—**

**பூங்காவைச் சீரமைத்தல்**

**வினா எண் 35410—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*





*(அ) சென்னை கொடுங்கையூர் மற்றும் விவேகானந்தர் நகரில் உள்ள மாநகராட்சி பூங்காவினை மேம்பாடு செய்து சீரமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சென்னை கொடுங்கையூர், கோட்டம்-34-ல் வெங்கடேஸ்வரா காலனி, 5-வது தெருவில் உள்ள 815 சதுர மீட்டர் அளவுள்ள பூங்கா ரூ.1.08 இலட்சம் மதிப்பீட்டிலும், யூனியன் கார்பைடு காலனி, 14-வது தெருவில் உள்ள 937 சதுர மீட்டர் அளவுள்ள பூங்கா ரூ.2.44 இலட்சம் மதிப்பீட்டிலும், பின்னி நகர் பிரதான சாலையில் 828 சதுர மீட்டர் அளவுள்ள பூங்கா ரூ.1.15 இலட்சம் மதிப்பீட்டிலும் புதுப்பிக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன. காவேரி நகரில் 1,250 சதுர மீட்டர் அளவு உள்ள பூங்கா வருடாந்திர பராமரிப்பின்கீழ் ஒப்பந்ததாரர் மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது. விவேகானந்தா நகர் கோட்டம் 36-ல் உள்ள மாநகராட்சி பூங்காவினை ரூ.80,000/- மதிப்பீட்டில் சீர்செய்யும் பணி நடைபெற்று வருகிறது.*

**48—**

**பாதாளச் சாக்கடையை மேம்படுத்துதல்**

**வினா எண் 35484—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சென்னை 106-வது வட்டம், வடஅகரம் சாலையில் உள்ள பாதாளச் சாக்கடையை மேம்படுத்த அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சென்னை மாநகரம், 106-வது வட்டம், வடஅகரம் சாலையில் கழிவுநீர் அகற்றுதல் அமைப்பை மேம்படுத்தி அது சீரான முறையில் செயல்படுவதற்கு 2001 ஆம் ஆண்டு 600 மி.மீ. விட்டமுள்ள கழிவு நீர் பிரதான குழாய்கள், சென்னை மாநகர நதி நீர் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்டு, நன்றாக இயங்கி வருகின்றன.*

**49—**

## பாதாளச் சாக்கடை சுத்திகரிப்பு நிலையம்

**வினா எண் 35485—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சென்னை ஆதம்பாக்கத்தில் கூடுதலாக பாதாளச் சாக்கடை சுத்திகரிப்பு நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சென்னை ஆதம்பாக்கம் பகுதி, முந்தைய ஆலந்தூர் நகராட்சியின் ஒரு பகுதியாகும். இப்பகுதியில் பாதாளச் சாக்கடைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு தற்போது நடைமுறையில் உள்ளது. இப்பகுதியிலிருந்து பெறப்படும் கழிவுநீர் பெருங்குடியில் இதற்கென்று பிரத்யேகமாக அமைக்கப்பட்டுள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் சுத்திகரிக்கப்படுகிறது. எனவே, மற்றுமொரு சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கான அவசியம் எழவில்லை.*





**50—**

## கழிவுநீர் தேங்குவதைத் தடுத்தல்

**வினா எண் 35495—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சென்னை ஏழுகிணறு சுற்று வட்டாரப் பகுதியில் உள்ள சாலைகளில் கழிவு நீர் தேங்குவதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சென்னை ஏழுகிணறு சுற்று வட்டார பகுதியில் உள்ள சாலைகளில் கழிவு நீர் தேங்குவதைத் தடுக்கும் பொருட்டு, சமீபத்தில், மலையப்பன் தெருவில் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியினைப் பயன்படுத்தி, ரூ. 151.13 இலட்சம் மதிப்பில் ஒரு கழிவு நீரிறைக்கும் நிலையம் கட்டடப்பட்டு நல்ல முறையில் இயங்கி வருகிறது.*

**51—**

## ஏரியிலிருந்து குடிநீர் வழங்குதல்

**வினா எண் 35878—திரு. பொன். ராஜா:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*பொன்னேரி தொகுதி, கடல் சார்ந்த பகுதிகளில் வாழும் மக்களுக்கு, தேர்வாய்கண்டிகையில் புதியதாக உருவாக்கப்படும் செயற்கை ஏரியில் தேக்கி வைக்கப்படும் நீரிலிருந்து குடிநீர் வழங்க அரசு முன்வருமா?*

[2014 டிசம்பர் 5

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*சென்னை மாநகர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள புறநகரங்களில் மக்களின் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்ய ஆந்திராவில் இருந்து கண்டலேறு-பூண்டி கால்வாய்மூலம் பெறப்படும் கிருஷ்ணா நீரை தேக்கி வைக்கும்பொருட்டு தேர்வாய்கண்டிகை நீர்த்தேக்கம் அமைக்கப்படவுள்ளது.*

*2. இத்திட்டத்தின்படி, தேர்வாய்கண்டிகை நீர்த்தேக்கத்தில் தேக்கி வைக்கப்பட்டுள்ள நீரை புழல் ஏரிக்கு அருகில் உள்ள குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு எடுத்துச் சென்று சுத்திகரிப்பு செய்துச் சென்னை மாநகர் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளுக்கு ஏற்கெனவே உள்ள குழாய்கள்மூலம் விநியோகிக்க திட்டமிடப்பட்டுள்ளது.*

*3. சென்னை மாநகரப் பகுதிகளில் இயங்கும் குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் தற்போதைய திறனானது, சென்னை மாநகர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள புறநகர்களின் தேவையைப் பூர்த்தி செய்யும்பொருட்டே திட்டமிடப்பட்டுள்ளது. பொன்னேரி பகுதியானது, சென்னை பெருநகர எல்லைக்கு வெளியில் அமைந்துள்ள பகுதியாகும். எனவே, தேர்வாய்கண்டிகை ஏரியிலிருந்து பொன்னேரி பகுதிகளில் வாழும் மக்களுக்கு குடிநீர் வழங்கும் திட்டம் எதுவும் சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தினால் மேற்கொள்ளப்படவில்லை.*

**52—**

## கூடுதல் மாவட்ட நீதிமன்றம்

**வினா எண் 35889—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் நீதிமன்ற வளாகத்தில் கூடுதல் மாவட்ட நீதிமன்றம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*



2014 டிசம்பர் 5]

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் நீதிமன்ற வளாகத்தில் கூடுதல் மாவட்ட நீதிமன்றம் ஏற்படுத்துவது குறித்த கருத்துரு தலைமைப் பதிவாளர், உயர் நீதிமன்றம் அவர்களிடமிருந்து பெறப்பட்டுள்ளது. கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் நீதிமன்ற வளாகத்தில் கூடுதல் மாவட்ட நீதிமன்றம் ஏற்படுத்தக்கூடிய சாத்தியக்கூறுகளையும், அங்கு நிலுவையிலுள்ள வழக்குகளின் அடிப்படையில் அதற்கான செலவினம் குறித்தும் அரசு பரிசீலனை செய்து முடிவு எடுக்கும்.*

**53—**

## சங்கினை பழுதுநீக்குதல்

**வினா எண் 36532—திரு. கார்த்திக் தொண்டைமான்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) புதுக்கோட்டை நகராட்சி, தட்சிணாமூர்த்தி சந்தையில் பழுதடைந்துள்ள சங்கினைப் பழுது நீக்கிட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு.கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட தட்சிணாமூர்த்தி சந்தையில் உள்ள சங்கு சரி செய்யப்பட்டு, தற்போது இயங்கி வருகிறது.*

[2014 டிசம்பர் 5

**54—**

## பாதாளச் சாக்கடையை சீரமைத்தல்

**வினா எண் 37841—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சென்னை கீழ்ப்பாக்கம், டி.பி.சத்திரம், 29-வது குறுக்குத் தெருவில் உள்ள பாதாளச் சாக்கடையை சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சென்னை கீழ்ப்பாக்கம், டி.பி.சத்திரம், 29-வது குறுக்குத் தெருவிலுள்ள கழிவு நீர் கட்டமைப்புகள் போதுமான அளவு உள்ளன. மேலும், சென்னை குடிநீர் வாரியத்தால் சீராக பராமரிக்கப்பட்டு வருகின்றன. தற்போது கழிவு நீர் தடையின்றி செல்கிறது. போதிய இடைவெளியில் கசடுகள் அகற்றப்பட்டு கழிவு நீர் தடையின்றி செல்வதால் 29-வது குறுக்குத் தெருவிலுள்ள பாதாளச் சாக்கடையை தற்போது மறுசீரமைப்பு செய்ய அரசின் பரிசீலனையில் இல்லை.*

**55—**

## கழிவுநீர்க் கால்வாய் சீரமைத்தல்

**வினா எண் 37857—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*



2014 டிசம்பர் 5]

*(அ) சென்னை புளியந்தோப்பு, 3-வது தெருவிலுள்ள கழிவு நீர்க் கால்வாயைச் சீரமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சென்னை புளியந்தோப்பு, 3-வது தெருவிலுள்ள கழிவு நீர் குழாய் அங்குள்ள மக்கள் தொகையின் பயன்பாட்டிற்கு போதுமானதாக உள்ளது. தற்போது அங்கு கழிவுநீர் வழிந்தோடவில்லை. மேலும், அத்தெருவிலுள்ள ஆள் நுழைவாயில்கள் அனைத்தும் அவ்வப்போது தூர்வாரப்பட்டு வருகின்றன.*

**56—**

## கழிவுநீர்க் குழாயினை சீரமைத்தல்

**வினா எண் 37859—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சென்னை, அசோக் நகர், 10-வது அவென்யூ சாலை, கலா குடியிருப்பு பகுதி, எல்.ஐ.சி. காலனி ஆகிய இடங்களில் கழிவு நீர் குழாயினை சீரமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சென்னை, அசோக் நகர், 10-வது அவென்யூ சாலை, கலா குடியிருப்பு பகுதி, எல்ஐசி. காலனி ஆகிய இடங்களில்*

*பழுதடைந்த கழிவு நீர் குழாய்கள் சீரமைக்கப்பட்டு, 1-5-2013 முதல் கழிவு நீர் தடையின்றி செல்கிறது.*

**57—**

## சுனாமி வீடுகள் அமைத்தல்

**வினா எண் 38545—திரு. பொன். ராஜா:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*பொன்னேரி தொகுதி, மீஞ்சூர் ஒன்றியம், கோட்டைக்குப்பம் பகுதியில் 33 குடும்பங்களுக்கு சுனாமி வீடுகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*திருவள்ளூர் மாவட்டத்தில் அவசரகால சுனாமி மறுகட்டமைப்புத் திட்டத்தின்கீழ் 86 வீடுகள் கட்டப்பட்டு பயனாளிக்களிடம் ஒப்படைக்கப்பட்டு திட்ட செயல்பாடுகள் முடிவடைந்த நிலையில், தற்போது புதிதாக வீடுகள் கட்டித் தர சாத்தியக் கூறுகள் இல்லை.*

**58—**

## வடிகால் அமைத்தல் பணியை துரிதப்படுத்துதல்

**வினா எண் 38937—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சென்னை ஸ்டெர்லிங் சாலை மற்றும் மண்ணடி தாதா முத்தியப்பன் தெருவில் வடிகால் அமைக்கும் பணியை துரிதப்படுத்த அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*





**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சென்னை ஸ்டெர்லிங் சாலையின் அருகில் இரயில்வே பகுதியில் புதியதாக மழைநீர் வடிகால்வாய் அமைக்கப்பட்டுள்ளது. இதன் வழியாக ஸ்டெர்லிங் சாலையிலிருந்து மழைநீர் வெளியே சென்று விடுகிறது. எனவே, ஸ்டெர்லிங் சாலையில் மழைநீர் வடிகால் துறையால் மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி கைவிடப்பட்டது. மேலும் தாதா முத்தியப்பன் தெருவில் மழைநீர் வடிகால் துறையால் மழைநீர் வடிகால்வாய் கட்டும் பணி முடிக்கப்பட்டுவிட்டது.*

**59—**

## தெரு விளக்குகளைச் சீரமைத்தல்

**வினா எண் 39521—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சென்னை கன்னிகாபுரம், ஜீவா மேம்பாலம் அருகில் சாலைகளிலுள்ள தெரு விளக்குகளைச் சீரமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சென்னை மாநகராட்சி, மண்டலம் 6 திரு.வி.க. நகர், வார்டு-76, கன்னிகாபுரம் ஜீவா இரயில் நிலையம் அருகில் இரண்டு பக்கமும் (கிழக்கு மற்றும் மேற்கு புறம்) உள்ள அனைத்து தெரு விளக்குகளும் சீரமைக்கப்பட்டு தற்போது அனைத்து விளக்குகளும் நல்ல நிலையில் எரிந்து கொண்டிருக்கின்றன.*

[2014 டிசம்பர் 5

**60—**

## உயர் கோபுர மின் விளக்குகளைச் சீரமைத்தல்

**வினா எண் 39529—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சென்னை மெரினா கடற்கரையிலுள்ள உயர் கோபுர மின் விளக்குகளைச் சீரமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சென்னை மாநகராட்சி, மண்டலம்-9, சென்னை மெரினா கடற்கடையில் 14 எண்ணிக்கையில் உள்ள அனைத்து மின் விளக்குகளும் தற்போது நன்றாக எரிந்து கொண்டிருக்கின்றன. மேலும் கூடுதலாக ஒரு எண்ணிக்கையில் அண்ணா சமாதி பின்புறம் மின் விளக்கு அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**61—**

## மின் விளக்குகளைச் சீரமைத்தல்

**வினா எண் 39762—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும்ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சென்னை மெரினா கடற்கரைக்குச் செல்ல உழைப்பாளர் சிலை அருகில் உள்ள சுரங்கப் பாதையில் உள்ள மின் விளக்குகளைச் சீரமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*



2014 டிசம்பர் 5]

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி மற்றும் நிருவாகம், ஊரக வளாச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சென்னை மாநகராட்சி, மண்டலம் 9-ல் வார்டு-116 சென்னை மெரினா கடற்கரைக்குச் செல்லும் உழைப்பாளர் சிலை அருகில் உள்ள சுரங்கப் பாதையில் உள்ள அனைத்து மின் விளக்குகளும் தற்போது சீரமைக்கப்பட்டு நல்ல முறையில் எரிந்து கொண்டு இருக்கின்றன.

**62—**

## சாலையை அகலப்படுத்துதல்

**வினா எண் 41520—திரு. கார்த்திக் தொண்டைமான்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) புதுக்கோட்டை நகராட்சி, அண்ணா சிலை முதல் அரசு மகளிர் கல்லூரி வரையுள்ள சாலையை அகலப்படுத்த அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளாச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை நகராட்சி, அண்ணா சிலை முதல் எம்.ஜி.ஆர். சிலை வரையுள்ள சாலை தேசிய நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமானது. எம்.ஜி.ஆர் சிலை முதல் அரசு மகளிர் கல்லூரி வரையுள்ள சாலை நகராட்சிச்க்கு சொந்தமான சத்தியமூர்த்தி சாலையாகும். இச்சாலை அகலமானது. எனவே, அகலப்படுத்த தேவையில்லை. நடுவில் சென்டர் மீடியன் அமைக்கப்பட்டு இரண்டு பக்கமும் போக்குவரத்து செல்கிறது.

[2014 டிசம்பர் 5

**63—**

## மினி டேங்க் அமைத்தல்

**வினா எண் 41875—திரு. கார்த்திக் தொண்டைமான்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) புதுக்கோட்டை நகராட்சி, 15-வது வார்டு, 19 ஆம் வீதி ஒட்டக்கரையில் மினி டேங்க் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளாச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச் சாலைகள் துறை அமைச்சா்:**

*(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை நகராட்சி 15-வது வார்டு 19 ஆம் வீதியில் உள்ள ஒட்டக்குளம் கரையில் மினி டேங்க் வைக்கப்பட்டுள்ளது.*

**64—**

## சிமென்ட் சாலை அமைத்தல்

**வினா எண் 41879—திரு. கார்த்திக் தொண்டைமான்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) புதுக்கோட்டை நகராட்சி, 21-வது வார்டு, வைரநாச்சி ஊரணியில் குழாய் பதித்து குடிநீர் வழங்கவும், சிமென்ட் சாலை அமைத்துக் கொடுக்கவும் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*



2014 டிசம்பர் 5]

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளாச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச் சாலைகள் துறை அமைச்சா்:**

*(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை நகராட்சி, 21-வது வார்டில், வைரநாச்சி ஊரணி சந்தில் பகிர்மானக் குழாய் பதிக்கவும், சிமென்ட் தளம் சாலை அமைக்கவும் ரூ.8.00 இலட்சம் நகர்மன்றத்தால் அனுமதிக்கப்பட்டுள்ளது. ஒப்பந்தப்புள்ளி இறுதி செய்யப்பட்டவுடன் பணிகள் முடிக்கப்படும்.*

**65—**

## குழாய் ஒலிபெருக்கிகள் உபயோகிப்பதைத் தடுத்தல்

**வினா எண் 47557—திரு. என்.ஆர். ரெங்கராஜன்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பட்டுக்கோட்டை நகராட்சியில் தடை செய்யப்பட்டுள்ள குழாய் வடிவ (Cone Speaker) ஒலி பெருக்கிகள் உபயோகிப்பதை நகராட்சி மூலம் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளாச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச் சாலைகள் துறை அமைச்சா்:**

பட்டுக்கோட்டை நகராட்சியில் தடை செய்யப்பட்டுள்ள குழாய் வடிவ ஒலி (Cone Speaker) பெருக்கிகள் பயன்படுத்தப்படுவது நகராட்சி ஒத்துழைப்புடன் காவல் துறைமூலம் தடுக்கப்பட்டு வருகிறது.

[2014 டிசம்பர் 5

**66—**

## விதை மற்றும் உரங்கள் தட்டுப்பாடின்றி வழங்குதல்

**வினா எண் 44529—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) மானாமதுரை தொகுதி, விவசாயிகளுக்கு விதை மற்றும் உரங்களை தடையின்றி வழங்கிட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதியை உள்ளடக்கிய சிவகங்கை மாவட்டத்திற்கு, ஒவ்வோர் ஆண்டும் கிராமம், வட்டாரம் மற்றும் பயிர் வாரியாக விதைத் தேவை கணக்கிடப்பட்டு, அதற்கேற்ப விதைப் பண்ணைகள் நிறுவி விதைப் பெருக்குத் திட்டம்மூலம் விதைப் பெருக்கம் செய்யப்பட்டு, தேவையான விதைகள் கொள்முதல் செய்யப்பட்டு, விவசாயிகளுக்கு பருவத்திற்கு தடையின்றி கிடைக்கும் வகையில் உணவு பாதுகாப்புத் திட்டம் மற்றும் விதைக் கிராமத் திட்டம்மூலம் மானியத்தில் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும், விவசாயிகளுக்கு தேவையான உரங்களை தமிழக அரசு, மத்திய அரசால் நடத்தப்படும் மண்டல மாநாட்டில் பெற்று, தமிழ்நாட்டில் 4,431 அங்கீகரிக்கப்பட்ட தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மற்றும் 7,367 தனியார் உர விற்பனை நிலையங்கள் மூலமாக மாதந்தோறும் மாவட்டங்களுக்குத் தேவையான உரங்கள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. பயிர் பருவ காலங்களில் விவசாயிகளுக்கு உரங்களை கொள்முதல் செய்து தடையின்றி தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்தின் மூலமாக வழங்கிட தமிழக அரசு ஒவ்வோர் ஆண்டும் வட்டியில்லா வழிவகைக் கடனை வழங்கி வருகிறது. மேலும், இரசாயன உரங்களின் விலை உயர்வால் விவசாயிகள் பாதிக்கப்படுவதைத் தடுக்கும்பொருட்டு உரங்கள் மீதான 4 விழுக்காடு மதிப்புக் கூட்டு வரிக்கு தமிழக அரசு வரிவிலக்கு அளித்து வருகிறது. தமிழக அரசால் எடுக்கப்பட்டுள்ள மேற்குறிப்பிட்டுள்ள நடவடிக்கைகளால் மானாமதுரை தொகுதி விவசாயிகளுக்கும் காலத்தே உரங்கள் தட்டுப்பாடின்றி கிடைப்பது உறுதி செய்யப்படுகிறது.*



2014 டிசம்பர் 5]

**67—**

## மண்பாண்டத் தொழிலாளர் நல வாரியம்

**வினா எண் 29599—திரு. சி.எச். சேகர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) மண்பாண்டங்கள் செய்யும் தொழிலை மேம்படுத்த மண்பாண்டத் தொழிலாளர் நல வாரியம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) அரசு ஆணை (நிலை) எண் 74, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (ஐ1) துறை, நாள் 1-9-2006-ன்மூலம் ஏற்கெனவே தமிழ்நாடு மண்பாண்டத் தொழிலாளர் நல வாரியம் அமைக்கப்பட்டுள்ளது.*

**68—**

## நியாயமான கூலி வழங்குதல்

**வினா எண் 44088—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்திலுள்ள வடமாநில கட்டுமானத் தொழிலாளர்களுக்கு நியாயமான கூலி வழங்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

கட்டுமானத் தொழிலில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கு அரசாணை ஆணை (2டி) எண்19, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 20-5-2004-ன்படி குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டது. 1-4-2013 முதல் அகவிலைப்படி

நாள் ஒன்றிற்கு ரூ.118.00 ஆகும். மேற்படி அரசாணையின்படி, கட்டுமானத் தொழிலாளர்களுக்கு கீழ்க்கண்டவாறு தின ஊதியம் நிர்ணயம் செய்யப்படுகிறது:

| | | | | |
|---|---|---|---|---|
| 1. மேஸ்திரி | = | ரூ.154.00+118.80 | = | ரூ.272.80 |
| 2. மேஸ்திரி கிரேடு I | = | ரூ.148.50+118.80 | = | ரூ.267.30 |
| 3. மேஸ்திரி கிரேடு II | = | ரூ.143.50+118.80 | = | ரூ.262.30 |
| 4. வெல்டர் | = | ரூ.148.50+118.80 | = | ரூ.267.30 |
| 5. பார் பெண்டர் | = | ரூ.140.50+118.80 | = | ரூ.259.30 |
| 6. மஸ்தூர் கிரேடு I | = | ரூ.126.00+118.80 | = | ரூ.244.80 |
| 7. மஸ்தூர் கிரேடு II | = | ரூ.122.00+118.80 | = | ரூ.240.80 |
| 8. காவலர் | = | ரூ.125.00+118.80 | = | ரூ.243.80 |

இதன்படி, வடமாநில கட்டுமானத் தொழிலாளர்களுக்கு மட்டுமல்லாது மாநிலம் விட்டு மாநிலம் குடிபெயரும் சட்டம், 1979-ன்கீழ் அனைத்து வெளிமாநில தொழிலாளர்களுக்கும் மேற்படி குறைந்தபட்ச ஊதியம் பொருந்தும். இதனை தொழிலாளர் துறையில் ஆய்வாளர்களாக நியமிக்கப்பட்டுள்ள அதிகாரிகள், இச்சட்டத்தின்கீழ் தொழிலாளர்களுக்கு அனைத்து பயன்களும் கிடைக்கப்பெறுவதை ஆய்வின்மூலம் உறுதி செய்கிறார்கள்.

மேலும், உள்ளூர் தொழிலாளர்களுக்கும், வெளிமாநில தொழிலாளர்களுக்கும் ஒரே மாதிரியான குறைந்தபட்ச ஊதியம் வழங்கப்படுகிறது.

மேலும், கட்டுமானத் தொழிலாளர்களுக்கு தற்போது குறைந்தபட்ச ஊதியம் மறுநிர்ணயம் செய்ய அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதுதொடர்பாக, முதனிலை அறிவிக்கை ஏற்கெனவே அரசாணை (2டி) எண்64, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (ஜெ1) துறை, நாள் 24-10-2013-ல் வெளியிடப்பட்டுள்ளது.

மாநிலம் விட்டு மாநிலம் குடிபெயரும் தொழிலாளர்களது பணிகளை முறைப்படுத்துவதற்காகவும், வேலைக்குரிய நிபந்தனைகளுக்காகவும் மாநிலம் விட்டு மாநிலம் குடிபெயரும் தொழிலாளர்கள் (பணி முறைப்படுத்துதல் மற்றும் வேலை





நிபந்தனைகள்) சட்டம், 1979 அமலில் இருந்து வருகிறது. இச்சட்டம், 5 அல்லது அதற்கு மேல் மாநிலம் விட்டு மாநிலம் குடிபெயரும் தொழிலாளர்களை பணியமர்த்தும் நிறுவனம் மற்றும் ஒப்பந்ததாரருக்குப் பொருந்தும். தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் இச்சட்டம் தொழிலாளர் துறையால் சீரிய அமலாக்கம் செய்யப்பட்டு வருகிறது. கடந்த 2013-ம் ஆண்டில் இச்சட்டத்தின் கீழ் 156 நிறுவனங்களுக்கு முதன்மை வேலையளிப்பவர் பதிவு சான்று அளிக்கப்பட்டுள்ளது. மேலும் 230 ஒப்பந்ததாரர்களுக்கு உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளன. தொழிலாளர் துறையில் ஆய்வாளர்களாக நியமிக்கப்பட்டுள்ள அதிகாரிகள், இச்சட்டத்தின் கீழ் தொழிலாளர்களுக்கு அனைத்து பயன்களும் கிடைக்கப் பெறுவதை ஆய்வின்மூலம் உறுதி செய்கிறார்கள்.

**69—**

## நியாய விலைக் கடை அமைத்தல்

**வினா எண் 4395—திரு. கு. நல்லதம்பி:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எழும்பூர் தொகுதி, 104 வட்டம், சேத்துப்பட்டு பள்ளி சாலையிலுள்ள பொது மக்கள் கழிப்பிடத்தை அகற்றி நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சென்னை, எழும்பூர் தொகுதி, 104 வட்டம், சேத்துப்பட்டு பள்ளி சாலையிலுள்ள கழிப்பிடத்தினை அகற்றி நியாய விலைக் கடை அமைக்கும் பணியின் முதற்கட்டமாக கழிப்பிடம் இடிக்கப்பட்டு தற்போது இப்பகுதி காலியிடமாக உள்ளது. சென்னை மாநகராட்சிமூலம் புதிய கட்டடம் கட்டி முடிக்கப்பட்டவுடன் இப்பகுதிக்கு மிக அருகே செயல்பட்டு வரும் கடை குறியீடு எண்கள் MA037, MA036, MA028 மற்றும் MA011 இவற்றில் ஏதேனும் ஒரு பொது விநியோகத் திட்ட நியாய விலைக் கடையினை புதிய கட்டடத்திற்கு மாற்ற இயலும்.

[2014 டிசம்பர் 5

**70—**

## புகைப்படத்தைப் பதிவு செய்யும் முறை

**வினா எண் 27498—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** *மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ குடும்ப அட்டையில் குடும்ப உறுப்பினர் அனைவரின் புகைப்படத்தையும் பதிவு செய்யும் முறையினை செயற்படுத்திட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தேசிய மக்கள்தொகைப் பதிவேட்டில் தொகுக்கப்படும் கணினி பதிவு தொகுப்பினை உபயோகப்படுத்தி புதிய குடும்ப அட்டைகளை மின்னணு குடும்ப அட்டைகளாக வழங்க அரசு முடிவு செய்துள்ளது. இதற்கென தேசிய மக்கள் தொகை பதிவேடு அமைப்பிடமிருந்து உரிய வழிமுறையின்படி கணினி தொகுப்பு பெற வேண்டியுள்ளது. அத்தொகுப்பினைப் பெற்று அதன் அடிப்படையில் மின்னணு குடும்ப அட்டைகளை வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்போது அக்குடும்ப அட்டையில் எந்தெந்த விவரங்களை அச்சிட்டு வழங்கலாம் என்ற கொள்கை முடிவு மேற்கொள்ள இயலும். எனவே, குடும்ப அட்டையில் குடும்ப உறுப்பினர் அனைவரின் புகைப்படத்தையும் பதிவு செய்யும் முறையினை செயல்படுத்திட தற்போது வழிவகையில்லை.*

**71—**

## கணினிமூலம் கண்காணித்தல்

**வினா எண் 43579—திருமதி எஸ். விஜயதரணி:** *மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பொது விநியோகத் திட்ட பொருட்களை கிடங்குகள் முதல் நியாய விலைக் கடை வரை பொருட்களின் ஒதுக்கீடு மற்றும் நகர்வு குறித்து கணினிமூலம் கண்காணிக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*



2014 டிசம்பர் 5]

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) பொது விநியோகத் திட்டத்தில் இன்றியமையாப் பண்டங்கள் இந்திய உணவுக் கழக கிடங்குகளிலிருந்து பெறப்படுவது முதல் அட்டைதாரர்களுக்கு விநியோகம் செய்யப்படுவது முடிய அனைத்து நடவடிக்கைகளையும் இணைய வழிமூலம் கண்காணிப்பது தொடர்பாக உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மத்திய அரசு பொது விநியோகத் திட்டத்தினை முழு கணினிமயமாக்க வழங்கியுள்ள செயற்குறிப்பின்படி கணினிமயமாக்குதல் திட்டம் இரு கட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இப்பணியின் முதற்கட்டத்தில் பொருள்கள் நகர்வு கண்காணிப்பு செய்தல், அட்டைதாரர்கள் புகார்கள் மற்றும் ஆலோசனைகளைப் பெற்று நடவடிக்கை மேற்கொள்ளும் வண்ணம் உரிய குறைதீர் நிவாரண வசதிகள் செய்தல் மற்றும் பொது விநியோகத் திட்டம் போன்ற அனைத்து விவரங்களும் ஒரு பொது இணைய தளத்தில் மக்கள் அறியும்வண்ணம் வெளியிடுதல் குறித்த நடவடிக்கைகள் குறிக்கப்பட்டுள்ளன. இரண்டாம் கட்ட நடவடிக்கைகளில், தேசிய மக்கள்தொகை பதிவேடு ஒருங்கிணைத்து பொது விநியோகத் திட்ட பயனாளிகள் பட்டியல் தயாரிக்கப்பட்டு கணினிமயமாக்குதல் நியாய விலைக் கடை வரை கொண்டு செல்லப்பட வேண்டும் எனவும் வகுக்கப்பட்டுள்ளன.*

*தமிழ்நாட்டைப் பொறுத்தவரை, தற்போது நடைமுறையிலுள்ள குடும்ப அட்டைகளை மாற்றி வழங்க வேண்டியதன் அவசியத்தைக் கருத்தில் கொண்டு மத்திய அரசு நிர்ணயித்துள்ள முதற்கட்ட நடவடிக்கையுடன் ஒருங்கிணைத்து மின்னணு குடும்ப அட்டைகளை வழங்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கான தகவல்கள் அடங்கிய கணினி தொகுப்பு, தேசிய மக்கள் தொகை பதிவேடு/இந்திய அரசு மக்கள்தொகை கணக்கெடுப்பு துறையிடமிருந்து எதிர்நோக்கப்படுகிறது.இத்திட்ட செயலாக்கத்தின்போது கிடங்கு முதல் நியாய விலைக் கடை வரை பொருட்களின் ஒதுக்கீடு, நகர்வு மற்றும் நுகர்வு குறித்து இணைய வழி கண்காணிக்க உரிய வழிவகை செய்யப்படும்.*

[2014 டிசம்பர் 5

**72—**

## கருவேல் முட்செடிகளை அகற்றுதல்

**வினா எண் 35542—திரு. வெ. பொன்னுப்பாண்டி:** *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, ஸ்ரீவில்லிபுத்தூர் கூட்டுறவு நூற்பாலையைச் சுற்றி உள்ள வேலி கருவேல் முட்செடிகளை அகற்ற அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஸ்ரீவில்லிபுத்தூர் கூட்டுறவு நூற்பாலை 1-7-2003 முதல் செயலிழந்த நிலையில் இருந்தது. மூடப்பட்ட / இயங்காத 13 கூட்டுறவு நூற்பாலைகளை ஆய்வு செய்ய அரசினால் உயர்மட்டக் குழு ஒன்று அமைக்கப்பட்டது. உயர்மட்டக் குழுவின் முடிவின்படி, 12 கூட்டுறவு நூற்பாலைகள் கலைக்கப்பட்டன. அதன்படி ஸ்ரீவில்லிபுத்தூர் கூட்டுறவு நூற்பாலை 18-12-2012 முதல் கலைக்கப்பட்டுள்ளது. மேற்படி கூட்டுறவு நூற்பாலை தமிழ்நாடு கூட்டுறவுச் சங்க சட்டம் மற்றும் விதிகளின்கீழ் கலைக்கப்பட்டு கலைத்தல் அலுவலர் நியமனம் செய்யப்பட்டுள்ளார். ஸ்ரீவில்லிபுத்தூர் கூட்டுறவு நூற்பாலையினைச் சுற்றியுள்ள கருவேல் முட்செடிகளை அகற்றுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. விரைவில் வேலி கருவேல் முட்செடிகள் அகற்றப்படும்.*

**73—**

## அடிப்படை வசதிகள் செய்தல்

**வினா எண் 19168—திரு. வெ. பொன்னுப்பாண்டி:** *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*



2014 டிசம்பர் 5]

*(அ) ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, தானிப்பாறையில் சுற்றுலாத் துறை மூலம் அடிப்படை வசதிகள் செய்து கொடுக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) 2012-2013 ஆம் நிதியாண்டில் மாநில அரசு நிதியுதவியுடன் சுற்றுலா சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ.80.00 இலட்சம் செலவில் விருதுநகர் மாவட்டம், வத்திராயிருப்பு-மகாராஜபுரம்-அழகாபுரி சாலை முதல் தானிப்பாறை வரை (0/0 முதல் 5/8 கிலோ மீட்டர்) சாலை மேம்பாட்டுப் பணிகள் முடிவுற்றுள்ளன.*

**74—**

## சுற்றுச் சுவர் கட்டுதல்

**வினா எண் 18597—திரு. க. பாண்டியராஜன்:** *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) விருதுநகர் தொகுதி, வி.முத்துலிங்கபுரம் ஊராட்சி, சோரம்பட்டி கிராமத்திலுள்ள அரசு ஆதி திராவிடர் தொடக்கப் பள்ளிக்கு சுற்றுச் சுவர் கட்ட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) விருதுநகர் தொகுதி, வி.முத்துலிங்கபுரம் ஊராட்சி, சோரம்பட்டி அரசு ஆதி திராவிடர் நல தொடக்கப் பள்ளிக்கு 2013-2014 ஆம் நிதியாண்டில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின்கீழ் சுற்றுச் சுவர் கட்டப்பட்டுள்ளது.*

**75—**

**கட்டடம் மற்றும் அடிப்படை வசதிகளைப் புனரமைத்தல்**

**வினா எண் 33145—திரு. சி. சண்முகவேலு:** *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், திருமூர்த்தி மலை ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல உண்டி உறைவிடப் பள்ளிக் கட்டடம், சமையல் அறை மற்றும் குளியலறையைப் பராமரித்து புனரமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், திருமூர்த்தி மலை ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல உண்டி உறைவிடப் பள்ளிக் கட்டடம், சமையல் அறை ஆகியவை மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டம் 2011-2012-ம் வருட நிதி ஒதுக்கீட்டின்கீழ் ரூ.4.00 இலட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ளும்பொருட்டு, ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, பணி தொடர வேலை நியமன உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. மேலும், கட்டட பராமரிப்பு, குளியலறை மற்றும் கழிப்பறையைப் புனரமைக்க மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டம் 2010-2011-ன்கீழ் ரூ.2.50 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் முடிக்கப்பட்டு உபயோகத்தில் உள்ளன.*

**76—**

**விளையாட்டு உபகரணங்கள் வழங்குதல்**

**வினா எண் 36745—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*





*(அ) தென்காசி தொகுதி, தென்காசி ஒன்றியம், குத்துக்கல் வலசை ஊராட்சியில், வேதம்புதூர், சிவந்தி நகர் பகுதி விளையாட்டு மைதானத்திற்கு உபகரணங்கள் வழங்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) ஒவ்வொரு தொகுதிக்கும், கிராமத்துக்கும் விளையாட்டு உபகரணங்களை வழங்குவது தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.*

*(ஆ) நிலை எழவில்லை.*

**77—**

**விளையாட்டு உபகரணங்கள் வழங்குதல்**

**வினா எண் 37078—திரு. சோழன் சித. பழனிச்சாமி:** *மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டை நகரம், ஜீவா நகரில் உள்ள உள்விளையாட்டு மைதானத்திற்குத் தேவையான உபகரணங்கள் வழங்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்ட தலைநகரங்களில் அமைக்கப்பட்ட மாவட்ட விளையாட்டு அரங்குகளுக்குத் தேவையான விளையாட்டு உபகரணங்கள் மட்டுமே தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின்மூலம் வழங்கப்பட்டு வருகிறது.*

*(ஆ) ஒவ்வொரு தொகுதிக்கும், கிராமத்துக்கும் விளையாட்டு உபகரணங்களை வழங்குவது தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.*

**78—**

**விளையாட்டு மைதானத்தினை பயன்பாட்டிற்குக் கொண்டுவருதல்**

**வினா எண் 38168—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தென்காசி தொகுதி, பாட்டாகுறிச்சி ஊராட்சி விளையாட்டு மைதானத்தினைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவர அரசு ஆவன செய்ய முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) தென்காசி தொகுதி, பாட்டாகுறிச்சி ஊராட்சி விளையாட்டு மைதானத்தினைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவரும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.*

*(ஆ) நிலை எழவில்லை.*

**79—**

**விளையாட்டு மைதானத்தைச் சீரமைத்தல்**

**வினா எண் 38169—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தென்காசி தொகுதி, ஆயிரப்பேரி ஊராட்சி, ஆயிரப்பேரி விளையாட்டு மைதானத்தைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*





**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) தென்காசி தொகுதி, ஆயிரப்பேரி ஊராட்சி, ஆயிரப்பேரி விளையாட்டு மைதானத்தைச் சீரமைக்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.*

*(ஆ) நிலை எழவில்லை.*

**80—**

**விளையாட்டு மைதானம் அமைத்தல்**

**வினா எண் 38331—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தென்காசி தொகுதி, குலசேகரப்பட்டி ஊராட்சி, குறும்பலாப்பேரி மற்றும் குலசேகரப்பட்டியில் உபகரணங்களுடன்கூடிய விளையாட்டு மைதானம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) தென்காசி தொகுதி, குலசேகரப்பட்டி ஊராட்சி, குறும்பலாப்பேரி மற்றும் குலசேகரப்பட்டியில் உபகரணங்களுடன் கூடிய விளையாட்டு மைதானம் அமைக்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.*

*(ஆ) நிலை எழவில்லை.*

**81—**

**விளையாட்டு மைதானம் அமைத்தல்**

**வினா எண் 38332—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2014 டிசம்பர் 5

*(அ) தென்காசி தொகுதி, திப்பணம்பட்டி ஊராட்சியில், உபகரணங்களுடன்கூடிய விளையாட்டு மைதானம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) தென்காசி தொகுதி, திப்பணம்பட்டி ஊராட்சியில் உபகரணங்களுடன்கூடிய விளையாட்டு மைதானம் அமைக்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.*

*(ஆ) நிலை எழவில்லை.*

**82—**

## விளையாட்டு மைதானம் அமைத்தல்

**வினா எண் 38334—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தென்காசி தொகுதி, கல்லூரணி ஊராட்சி, பனையடிபட்டி மற்றும் பாவூர்சத்திரத்தில் விளையாட்டு மைதானம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) தென்காசி தொகுதி, கல்லூரணி ஊராட்சி, பனையடிபட்டி மற்றும் பாவூர்சத்திரத்தில் விளையாட்டு மைதானம் அமைக்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.*

*(ஆ) நிலை எழவில்லை.*



2014 டிசம்பர் 5]

**83—**

## விளையாட்டு மைதானத்தைச் சீரமைத்தல்

**வினா எண் 39048—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சென்னை புளியந்தோப்பு 72-வது வார்டில் உள்ள விளையாட்டு மைதானத்தை மேம்படுத்த அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின்மூலம் சென்னை புளியந்தோப்பு 72-வது வார்டில் உள்ள விளையாட்டு மைதானத்தை மேம்படுத்தும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.*

*(ஆ) நிலை எழவில்லை.*

**84—**

## ஆக்கிரமிப்புகளை அகற்றுதல்

**வினா எண் 29514—திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) வன உயிரினங்களைப் பாதுகாக்கவும், ஆக்கிரமிப்புகளை அகற்றவும் அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், வனத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) வன உயிரினங்கள் பாதுகாப்பிற்காக, வேட்டையாடுதல் நடவடிக்கைகளைக் கண்டுபிடிக்கவும், முழுமையாக*

வேட்டையாடுதலைத் தடை செய்திடவும் களப்பணியாளர்களைக் கொண்டு கண்காணிப்புப் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வன உயிரினங்களின் தேவைக்காக காப்புக் காட்டின் உள்ளே தண்ணீர் கிடைக்கும் வகையில் கட்டுமான அமைப்புகள் ஏற்படுத்துதல் மற்றும் தீவனத்திற்காக பல்வகை தீவனங்கள் உற்பத்தி செய்திடுதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. காட்டில் வாழும் வன உயிரினங்களுக்கு மனிதர்களால் வளர்க்கப்படும் கால்நடைகள்மூலம் தொற்று நோய் பரவாதவண்ணம் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக காப்புக் காடுகளின் அருகில் வசிக்கும் கால்நடைகளுக்கு உள்ளூர் கால்நடைத் துறை மருத்துவ அலுவலர்களின் ஒத்துழைப்பு மற்றும் ஆலோசனையுடன் கால்நடை தடுப்பூசி முகாம்கள் மற்றும் விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன. மனித வன உயிரினங்கள் மோதல்களைத் தவிர்க்கும்விதமாக தீவிர பாதுகாப்பு நடவடிக்கைகளின் ஒரு அங்கமாக யானை புகா அகழிகள் வெட்டப்பட்டுள்ளதுடன், உள்ளூர் கிராம மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் அரசு சாரா தொண்டு நிறுவனங்கள், கிராம வனக் குழுக்களின் பிரதிநிதிகள் மற்றும் உள்ளூர் மாவட்ட நிருவாக அமைப்பு ஆகியவற்றை ஈடுபடுத்தி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

காப்புக் காடுகளில் புதியதாக ஆக்கிரமிப்புகள் ஏதும் ஏற்படுவதில்லை. இந்த ஆக்கிரமிப்புகளை அகற்ற மாவட்ட ஆட்சியர் தலைமையிலான மாவட்டக் குழு தக்க நடவடிக்கை எடுத்து வருகிறது. உச்ச நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட வழிகாட்டு நெறிமுறைகளுக்கேற்பவும், தமிழ்நாடு வனச் சட்டம் 1882-ன்படியும் மாவட்ட நிர்வாகம் மற்றும் காவல் துறை உதவியுடன் ஆக்கிரமிப்புகளை அகற்ற சிறப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. புதியதாக ஆக்கிரமிப்புகள் ஏற்படாவண்ணம் வன எல்லைகள் வரையறை செய்யப்பட்டு காப்புக் காடுகளின் எல்லைகளில் கற்குட்டுகள் (RF cairns) கட்டப்பட்டுள்ளன. மேலும், வனப் பணியாளர்களால் வனப்பகுதிகளில் அடிக்கடி தணிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.





**85—**

## வேலைவாய்ப்பு இழப்பைத் தடுத்தல்

**வினா எண் 42369—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு அரசு இரப்பர் தோட்டக் கழகத்தில் சுமார் 500 ஹெக்டேர் நிலப்பரப்பில் இரப்பர் நடவு செய்யாமல் வனத் துறைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதால், தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு இழப்பு ஏற்படுவதைத் தடுக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், வனத் துறை அமைச்சர்:**

அரசு இரப்பர் கழகத்தில், இரப்பர் மரங்கள் இல்லா பாறைகள் நிறைந்த, எவ்வித பயனுமளிக்காத மற்றும் இரப்பர் மரம் நடவு செய்ய இயலாததுமான நிலப்பரப்பான 505.92 ஹெக்டேர் நிலப்பரப்பு வனத் துறையிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. இப்பகுதியால் கழகத்திற்கு எவ்வித வருவாயும் இல்லாமல் வருடா வருடம் குத்தகைத் தொகையாக ரூ.2,02,120/- வழங்க வேண்டி வந்ததால், அரசு இரப்பர் கழகத்தின் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டும், கழகத்தின் நிதிச் சுமையைக் கட்டுப்படுத்துவதற்காகவும் அரசு இரப்பர் கழகத்திற்கு எவ்வித பயனும் / பலனும் கிடைக்காத நிலப்பகுதியான 505.92 ஹெக்டேர் நிலப்பகுதி அரசாணையின்படி திருப்பி வனத் துறைக்கு வழங்கப்பட்டது. இந்நிகழ்வால் அரசு இரப்பர் கழகத்திற்கு, வருடத்திற்கு ரூ.2,02,120/- குத்தகைத் தொகை வழங்குவதிலிருந்து விலக்களிக்கப்பட்டது.

அரசு இரப்பர் கழகத்திற்கு எவ்வித பயனும் / பலனும் கிடைக்காத பகுதியை வனத் துறைக்கு ஒப்படைத்த பகுதியில் தொழிலாளர் எவரும் வேலை செய்யவில்லை. ஆகையினால் தொழிலாளர் வேலையிழப்பு மற்றும் எந்தவிதமான பாதிப்பும் நிகழவில்லை.

[2014 டிசம்பர் 5

**86—**

**பணி நிரந்தரம்**

**வினா எண் 42421—திருமதி எஸ். விஜயதரணி:** *மாண்புமிகு வனத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தமிழக வனப் பகுதிகளில் மரக்கன்றுகள் வளர்க்க நியமனம் செய்யப்பட்ட தற்காலிகப் பணியாளர்களைப் பணி நிரந்தரம் செய்ய அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், வனத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) வனப் பகுதியில் மரக்கன்றுகளை வளர்க்க பயன்படுத்தப்படும் பணியாளர்கள், அந்தந்தத் திட்டத்தின்கீழ் கிடைக்கப்பெறும் திட்டச் செலவு ஒதுக்கீட்டின் அடிப்படையிலும், தினக்கூலி அடிப்படையிலும், குறுகிய காலத்திற்கு மட்டுமே பயன்படுத்தப்பட்டு, அக்காலம் முடிவு பெற்றதும் தொடர்ந்து பணிக்கு அமர்த்தப்படுவதில்லை. எனவே, அவர்கள் பணியை நிரந்தரம் செய்யும் அவசியம் எழவில்லை.*

**87—**

**சாலையோரங்களில் பனை மரம் வளர்த்தல்**

**வினா எண் 44371—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தமிழகத்தில் சாலையோரங்களில் பனை மரம் வளர்க்க அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், வனத் துறை அமைச்சர்:**

*2011-2012 மற்றும் 2012-2013 ஆம் ஆண்டில் மாபெரும் மரம் நடவு திட்டம் செயலாக்கப்பட்டு மாநிலம் முழுவதும் உள்ள 32 மாவட்டங்களில் 1 கோடியே 29 இலட்சம் மரக்கன்றுகள் நடவு செய்து முடிக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்கீழ் மகிழம், ஈட்டி வேங்கை, வேம்பு, இலுப்பை, புன்னை, புங்கன், கடம்பம், மலைவேம்பு குமிழ், தான்றி, ஆலம், அரசு, பாதாம், பூவரசு போன்ற இருபதுக்கும் மேற்பட்ட மரக்கன்றுகள் நடவு செய்யப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் ஒரு அங்கமாக சாலையோரங்களிலும் நிழல் தரும் மர வகைகள் நடவு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனவே, தமிழகத்தில் சாலையோரங்களில் பனை மரம் என்று குறிப்பிட்ட வகையான மரம் வளர்க்கும் திட்டம் ஏதும் அரசின் செயற்குறிப்பில் இல்லை.*



2014 டிசம்பர் 5]

**88—**

**மரங்கள் வளர்த்தல்**

**வினா எண் 45907—திரு. ம. குணசேகரன்:** *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மானாமதுரை தொகுதியில் தனியாருக்குச் சொந்தமான நிலங்களில் மரங்கள் வளர்க்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், வனத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு உயிர்ப்பன்மை பாதுகாப்பு மற்றும் பசுமையாக்குதல் திட்டத்தின்கீழ் 2012-2013 முதல் 2018-2019 வரை 7 ஆண்டுகளில் 5,000 முதல் 8,000 கிராமங்களில் உள்ள விவசாயிகளின் தரிசு நிலங்களில் சுமார் 10 கோடி மரங்கள் நடப்பட உள்ளன. இத்திட்டத்தின்கீழ் 2012-2013 ஆம் ஆண்டில் 1,000 வருவாய் கிராமங்களிலும், 2013-2014 ஆம் ஆண்டில் 1,018 கிராமங்களிலும் மரக்கன்றுகள் நட்டுத் தரப்பட்டுள்ளன. மானாமதுரை சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட கிராமங்களில் உள்ள விவசாயிகள் இதுவரையில் தங்களுக்குச் சொந்தமான தரிசு நிலங்களில் மரச் செடிகள் எதுவும் நடவு செய்ய விருப்பம் தெரிவிக்கவில்லை. எனவே, மானாமதுரை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கிராமங்களில் மேற்சொன்ன திட்டம் செயல்படுத்தப்படவில்லை. இருப்பினும், இனிவரும் ஆண்டுகளில் இப்பகுதி விவசாயிகள் விருப்பம் தெரிவித்தால், இத்தொகுதிக்கு*

[2014 டிசம்பர் 5

உட்பட்ட கிராமங்களில் உள்ள விவசாயிகளின் தரிசு நிலங்களில் மரக்கன்றினை நடவு செய்வதற்கு வனத் துறையால் ஆவன செய்யப்படும்.

**89—**

## அடிப்படை வசதிகள் செய்தல்

**வினா எண் 15689—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை அகதிகள் முகாமில் அடிப்படை வசதிகள் செய்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண் 277, பொது (மறுவாழ்வு-2) துறை, நாள் 19-3-2012-ன்படி சிவகங்கை மாவட்டம், மானாமதுரை வட்டம், மூங்கில் ஊருணி அகதிகள் முகாமில் உள்ள 38 வீடுகளில் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்வதற்கு ரூ.2,45,000/- நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, மானாமதுரை ஒன்றியத்தால் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**90—**

## ஆக்கிரமிப்புகளை மீட்டல்

**வினா எண் 41433—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் வக்ஃபு வாரியத்திற்குச் சொந்தமான இடங்கள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதை மீட்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2014 டிசம்பர் 5]

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள வக்ஃபு வாரியத்திற்குச் வக்ஃப் சொந்தமான இடங்களை வக்ஃபு சட்டம், 1995-ன்படி மீட்க தமிழ்நாடு வக்ஃபு வாரியத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மொத்த ஆக்கிரமிப்பாளர்களின் எண்ணிக்கை 1,335 ஆகும். ஆக்கிரமிப்புக்குள்ளான வக்ஃபு சொத்துக்களின் பரப்பளவு 59,41,048 சதுர அடி. வக்ஃபு சட்டம், 1995 பிரிவு 54(1)-ன்படி 1,335 ஆக்கிரமிப்பாளர்களுக்கும் அறிவிப்பு அனுப்பப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதன் பயனாக வாரியம் 14,93,647 சதுர அடி வக்ஃபு சொத்தை ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்டு இருக்கிறது. இதன் மதிப்பு ரூ.21,196.80 இலட்சம் ஆகும். இதில் கடந்த 2½ ஆண்டுகளில் ரூ.132 கோடி மதிப்பிலான 5,82,274 சதுரஅடி பரப்புள்ள வக்ஃபு சொத்துகள் மீட்கப்பட்டுள்ளன. மேலும் வக்ஃபு சட்டம் 1995 பிரிவு 55-ன்படி, ஆக்கிரமிப்புகளை அகற்ற வருவாய் கோட்ட அலுவலருக்கு அனுப்பப்பட்ட 590 மனுக்களில் 228 ஆக்கிரமிப்பாளர்கள் வக்ஃபு சட்டம், பிரிவு 54(3) மற்றும் 55-ன்படி பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகளை எதிர்த்து வழக்கு தொடுத்துள்ளனர். இதர ஆக்கிரமிப்புகளை அகற்றும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியுள்ளது. வழக்குகளின் நிலையில் உள்ள முன்னேற்றம் வழக்குரைஞர்கள் மூலம் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

**91—**

## உதவித் தொகையை உயர்த்தி வழங்குதல்

**வினா எண் 43938—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வெளிநாட்டில் இறந்துபோன, காணாமல்போன, ஊனமுற்ற மற்றும் சிறையில் உள்ள தமிழர்களின் குடும்பத்தினருக்கு மாதாந்திர உதவித்தொகை ரூபாய் மூவாயிரம் வழங்கிட அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:**

வெளிநாட்டிற்கு வேலை காரணமாகச் சென்று அங்கு பல்வேறு இன்னல்களுக்கு உட்படும் தமிழர்கள் மற்றும் அங்கு இறந்தவர்களின் குடும்பங்களுக்கு உதவிகள் வழங்குவது குறித்தான விதிகள் மற்றும் திட்டங்கள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

**92—**

## மருந்துக் கிடங்கு அமைத்தல்

**வினா எண் 11040—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம்மூலம் திருப்பூர், நாகப்பட்டினம், கிருஷ்ணகிரி, பெரம்பலூர் ஆகிய பகுதிகளில் மருந்துக் கிடங்கு அமைக்கும் செயற்குறிப்பின் தற்போதைய நிலையினைத் தெரிவிக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ)

**கிருஷ்ணகிரி**

மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநரிடமிருந்து பெறப்பட்ட நிலத்தில் தற்காலிக சாலை அமைக்கப்பட்டுள்ளது. தகுதி வாய்ந்த அலுவலரின் ஒப்புதலுக்காக மருந்துக் கிடங்கின் வரைபடம் மற்றும் மதிப்பீடு அனுப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.





**பெரம்பலூர்**

திருச்சி—சென்னை தேசிய நெடுஞ்சாலை, இணை இயக்குநர், சுகாதாரத் துறைக்கு ஒதுக்கப்பட்ட நிலத்தினை தெரிவு செய்து, அதற்கான ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. கட்டுமான வேலைக்கான ஆணை பிறப்பிக்கப்பட்டு, தகுந்த ஒப்பந்ததாரரிடம் ஒப்படைக்கப்பட்டு, வேலையும் தொடங்கப்பட்டுவிட்டது.

**நாமக்கல்**

ஆலங்காநத்தம், ஆரம்ப சுகாதார நிலைய வளாகத்தில் இடத்திற்கான அனுமதி பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை இயக்குநர் அவர்களிடமிருந்து பெறப்பட்டு, மருந்து கிடங்கின் வரைபடம் மற்றும் மதிப்பீடு ஆகியவற்றை தகுதி வாய்ந்த அலுவலரின் ஒப்புதலுக்காக அனுப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**திருப்பூர்**

23-5-2013 அன்று மாவட்ட தலைமை மருத்துவமனை வளாகத்தில் இடம் தேர்வு செய்யப்பட்டு, மருந்துக் கிடங்கின் வரைபடம் மற்றும் மதிப்பீடு ஆகியவற்றை தகுதி வாய்ந்த அலுவலரின் ஒப்புதலுக்காக அனுப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**நாகப்பட்டினம்**

இடம் தேர்வு செய்யப்பட்டு, அனுமதியும் பெறப்பட்டு, மருந்து கிடங்கின் வரைபடம் மற்றும் மதிப்பீடு ஆகியவற்றை தகுதி வாய்ந்த அலுவலரின் ஒப்புதலுக்காக அனுப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**93—**

## ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

**வினா எண் 27139—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2014 டிசம்பர் 5

*(அ) விழுப்புரம் மாவட்டம், கள்ளக்குறிச்சி வட்டம், தியாகதுருகம் ஒன்றியம், முடியனூரில் ஆரம்ப சுகாதார நிலையம் தொடங்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*(அ) சமவெளி பகுதியில் 30,000 மக்கள் தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், மலைப் பகுதியில் 20,000 மக்கள் தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்பட வேண்டும் என்று மத்திய அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது. மேலும், இரு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியும் உள்ளது. அதன்படி, அரசாணை (நிலை) எண் 46, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (அஉதி-II) துறை, நாள் 17-2-2014-ன்படி விழுப்புரம் மாவட்டம், தியாகதுருகம் ஊராட்சி ஒன்றியம், முடியனூர் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தோற்றுவிக்க அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.*

*(ஆ) இவ்வினா எழ இடமில்லை.*

**94—**

## தனி நெட்வொர்க் ஏற்படுத்துதல்

**வினா எண் 27914—திரு. கே. தங்கவேல்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*திருப்பூர் மாவட்ட அரசு மருத்துவமனையில் உள்ள கணினிகள் விரைவாகச் செயல்படும் வகையில் தனி நெட்வொர்க் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?*



2014 டிசம்பர் 5]

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

திருப்பூர் மாவட்ட தலைமை மருத்துவமனையில் உள்ள புறநோயாளி மற்றும் உள்நோயாளி பிரிவில் மருத்துவ தகவல் மேலாண்மைத் திட்டம் (HMIS-TNHSP) தமிழ்நாடு சுகாதாரத் திட்டத்தின் கீழ்நிலை-2-ன்மூலம் நிறுவப்பட்டுள்ளது. மருத்துவமனையின் தகவல் தொழில்நுட்ப உள்கட்டமைப்பிற்கு தேவையான கணினி, மின் அச்சு, தடையில்லா மின் வழங்கி, கணினி அச்சு காகிதம் முதலியவை தமிழ்நாடு சுகாதாரத் திட்டத்தின் வழியாக வழங்கப்பட்டுள்ளன. கடந்த 21-5-2012 முதல் கணினி வழியாக நோயாளிகளுக்கு மருத்துவ சேவை வழங்கப்படுகிறது. தமிழ்நாடு மாநில பெரும்பரப்பு வலையமைப்பு (TNSWAN) இச்சேவைக்கான நெட்வொர்க்கை வழங்குகிறது. தற்சமயம் கோவை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலிருந்து POP (இருப்புமுனை) வழியாக திருப்பூர் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு நெட்வொர்க் வந்தடைந்து பின்னர் திருப்பூர் மாவட்ட மருத்துவமனைக்கு இணைக்கப்படுகிறது. விரைவில் திருப்பூர் மாவட்ட மருத்துவமனைக்கு தனியாக தமிழ்நாடு மாநில பெரும்பரப்பு வலையமைப்பு தொடர்பு தமிழ்நாடு மின்னனு நிறுவனம் (எல்காட்) மூலம் நிறுவப்படும். இதன்மூலம் ஏழை எளிய மக்களுக்கான மருத்துவ கணினி சேவை மேலும் விரைவுப்படுத்தப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

**95—**

## நோயாளிகளைப் பாதுகாத்தல்

**வினா எண் 36307—திரு. இரா. அண்ணாதுரை:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையில் எலி, பெருச்சாளி மற்றும் குரங்குகளின் தொந்தரவுகளிலிருந்து நோயாளிகளை விடுவிக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

[2014 டிசம்பர் 5

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) மதுரை, அரசு இராஜாஜி மருத்துவமனை வளாகத்தில் குரங்குகளின் தொந்தரவு முன்பு இருந்தது. இதனைக் கட்டுப்படுத்தும் வகையில் மாவட்ட வனத் துறை அதிகாரிகளின் முழு உதவியுடன் 10-க்கும் மேற்பட்ட குரங்குகள் கூண்டு மூலம் பிடிக்கப்பட்டு அழகர் கோயில் மலையில் விடப்பட்டுள்ளன. மேலும் இப்பணி வனத் துறை அதிகாரிகள் உதவியுடன் நடைபெற்று வருகிறது. நோயாளிகள் தங்கி இருக்கும் வார்டுகளில் எலி மற்றும் பெருச்சாளி தொல்லை பெரிய அளவில் எதுவும் இல்லை. இதுதொடர்பாக வார்டுகளிலிருந்து எவ்வித புகார்களும் வரவில்லை. இருப்பினும், எலி மற்றும் பெருச்சாளி வர வாய்ப்புள்ள இடங்களில் எலிக் கூண்டு வைத்து கண்காணிக்கப்படுகிறது. எலி மற்றும் பெருச்சாளிகள் தங்காத வகையில் பொதுப் பணித் துறை அதிகாரிகள்மூலம் சிறு பொந்துகள்சரி செய்யப்பட்டுள்ளன. மேலும், தொடர்ந்து இப்பணி நடைபெற்று வருகிறது. நோயாளிகள் மற்றும் அவர்களது உறவினர்கள் சாப்பிடுவதற்கென தனியாக இடம் புதிதாகக் கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. இங்கு சேரும் கழிவு உடனுக்குடன் அகற்றப்பட்டு வருகிறது. வார்டுகளில் குப்பைகள் தேங்காத வகையில் ஒரு நாளைக்கு ஐந்து முறை குப்பைகள் அகற்றப்படுகின்றன. இதனால் எலி மற்றும் பெருச்சாளிகள் வருவது முற்றிலுமாகத் தவிர்க்கப்பட்டுள்ளது. மதுரை, அரசு இராஜாஜி மருத்துவமனை வளாகத்தில் உள்ள சிற்றுண்டி மையங்கள் வாரத்திற்கு ஒரு முறை ஆய்வு செய்யப்படுன்றன. சிற்றுண்டி பார்சல்களுக்கும் பாலிதீன் பைகள் உபயோகிக்கக் கூடாது என உத்தரவு இடப்பட்டுள்ளது. அது போலவே, பொது மக்கள், மருத்துவமனைக்கு வெளியே இருந்து பாலிதீன் பைகளில் எவ்விதமான பொருள்களையும் கொண்டு வரக்கூடாது என உத்தரவிட்டு கண்காணிக்கப்படுகிறது. இதனால் ஒதுக்கப்பட்ட இடங்களைத்தவிர வேறு இடங்களில் பார்வையாளர்கள் உணவு உண்பதை கட்டுப்பாட்டில் வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எலி மற்றும் பெருச்சாளி ஒழிப்பு மற்றும் குரங்கு தடுப்பு நடவடிக்கைகள் தொடர்ந்து எடுக்கப்பட்டு வருவதுடன் இனிவரும் காலங்களிலும் இதுபோன்று பிரச்சினைகள் ஏற்படாதவாறு உரிய ஏற்பாடுகள் மதுரை, அரசு இராஜாஜி மருத்துவமனை முதல்வர் அவர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.*



2014 டிசம்பர் 5]

**96—**

## ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

**வினா எண் 37206—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தென்காசி தொகுதி, காசிமேஜர்புரம் ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*(அ) தமிழ்நாட்டில் தற்பொழுது 1,754 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. சமவெளிப்பகுதியில் 30,000 மக்கள் தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், மலைப்பகுதியில் 20,000 மக்கள் தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்பட வேண்டும் என்று மத்திய அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது. மேலும், இரு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியும் உள்ளது. காசிமேஜர்புரம் ஊராட்சி தென்காசி ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. காசிமேஜர்புரம் ஊராட்சி மக்கள் தொகை 2,852. இவ்வூராட்சி குடியிருப்பு துணை சுகாதார நிலையத்தினையும் சுந்தரபாண்டியபுரம் ஆரம்ப சுகாதார நிலையத்தினையும் சார்ந்தது. இவ்வூராட்சியிலிருந்து மூன்று கிலோ மீட்டர் தொலைவில் வல்லம் ஆரம்ப சுகாதார நிலையமும், நான்கு கிலோ மீட்டர் தொலைவில் தென்காசி அரசு மருத்துவமனையும் செயல்பட்டு வருவதால் காசிமேஜர்புரம் ஊராட்சியில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை.*

*(ஆ) இவ்வினா எழவில்லை.*

[2014 டிசம்பர் 5

**97—**

## ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

**வினா எண் 37208—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தென்காசி தொகுதி, மத்தளம்பாறை ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*(அ) சமவெளிப் பகுதியில் 30,000 மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், மலைப்பகுதியில் 20,000 மக்கள்தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்பட வேண்டும் என்று மத்திய அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது. மேலும், இரு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியும் உள்ளது. மத்தளம்பாறை ஊராட்சி, தென்காசி ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. மத்தளம்பாறை ஊராட்சியின் மக்கள் தொகை 2,457 ஆகும். இவ்வூராட்சியில் துணை சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. இத்துணை சுகாதார நிலையம் சுந்தரபாண்டியபுரம் ஆரம்ப சுகாதார நிலையத்தினைச் சார்ந்தது. இவ்வூராட்சியிலிருந்து சுமார் ஐந்து கிலோ மீட்டர் தொலைவில் அரியப்பபுரம் ஆரம்ப சுகாதார நிலையமும், தென்காசி அரசு மருத்துவமனையும் செயல்பட்டு வருவதால் மத்தளம்பாறை ஊராட்சியில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை.*

*(ஆ) இவ்வினா எழ இடமில்லை.*



2014 டிசம்பர் 5]

**98—**

## எக்ஸ்–ரே படச்சுருள் வழங்குதல்

**வினா எண் 39652—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சென்னை இராயப்பேட்டை அரசு மருத்துவமனைக்கு எக்ஸ்—ரே படச்சுருள் போதியளவு வழங்கிட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சென்னை அரசு இராயப்பேட்டை மருத்துவமனைக்கு போதுமான படச்சுருள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும், கடந்த ஆறு மாதங்களில் சென்னை அரசு இராயப்பேட்டை மருத்துவமனையில் போதுமான படச்சுருள் கையிருப்பில் உள்ளது.*

**99—**

## தொலைபேசி இணைப்புகளைச் சீரமைத்தல்

**வினா எண் 40609—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சென்னை, ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையிலுள்ள தொலைபேசி இணைப்புகளைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

[2014 டிசம்பர் 5

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சென்னை, ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் உள்ள தொலைபேசி உள்ளிருப்பு இணைப்பகத்தின் மென்பொருள் மற்றும் வன்பொருள் கிடைக்கப்பெறாததால் இதனைப் பராமரித்து வந்த* AGC Network *நிறுவனத்தார், இதனை மேம்படுத்தினால் மட்டுமே செயல்படமுடியும் என தெரிவித்துள்ளனர். மேலும் இதற்குண்டான செலவினம் குறித்து நிதி மற்றும் நிருவாக ஒப்புதலுக்காக அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்ட ஒப்புதல் அரசாணையும், சென்னை, ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை முதல்வர் அவர்களின் ஒப்புதல் ஆணையும் பெறப்பட்டு இதனை மேம்படுத்த தொலைபேசி இணைப்புகளைச் சீரமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.*

**100—**

## குழந்தைகள் திருட்டைத் தடுத்தல்

**வினா எண் 43935—திரு. கு. நல்லதம்பி:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) அரசு மருத்துவமனைகளில் குழந்தைகள் திருட்டு நடப்பதைத் தடுத்திட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) அரசு மருத்துவமனைகளில் குழந்தைகள் திருட்டு நடப்பதைத் தடுக்க கீழ்க்காணும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன:*



2014 டிசம்பர் 5]

*1. மகப்பேறு பிரிவில் உள்ள நுழைவாயில் மற்றும் வெளியே செல்லும் வழிகள் வரையறுக்கப்பட்டு, அங்கு பணிபுரியும் அனைத்து பணியாளர்களும் நிருவாகத்தின் மூலம் வழங்கப்பட்ட அடையாள அட்டை அணிந்து வருமாறு பணிக்கப்பட்டுள்ளனர்.*

*2. மகப்பேறு பிரிவில் உள்ள தாய்—சேய் மற்றும் அவர்களைப் பார்வையிட வரும் பார்வையாளர்களை முழுமையாகக் கண்காணிக்க சி.சி.டி.வி* (C.C.T.V.) *கேமிரா பொருத்தப்பட்டுள்ளது.*

*3. மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் தாய் மற்றும் சேய் ஆகியோரை கவனிக்கும் அனைத்து பணியாளர்களும் தங்களுக்கு வழங்கப்பட்ட சீருடைகளை மருத்துவமனையின் உள்ளே இருக்கும் வரை கண்டிப்பாக அணிந்திருக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.*

*4. குழந்தை திருட்டிற்கான எச்சரிக்கை அறிவிப்புப் பலகை அனைத்துப் பகுதிகளிலும் பொருத்தப்பட்டுள்ளது.*

*5. தாய் மற்றும் சேய் பிரிவுகள் பாதுகாவலர்கள் மூலமாக நாள் முழுவதும் கண்காணிக்கப்படுகின்றன.*

*6. குழந்தை திருட்டினைத் தடுத்திடும் பொருட்டு மருத்துவர்கள் மற்றும் பணியாளர்களைக் கொண்ட கண்காணிப்புக் குழு அமைக்கப்பட்டுள்ளது.*

*7. மருத்துவமனைகளில் காணப்படும் சந்தேகப்படும்படியான நபர்கள் குறித்து உடனடியாக புறக்காவல் நிலையத்திற்கு தெரிவிக்குமாறு அனைத்து அரசு மருத்துவமனை மருத்துவர் மற்றும் பணியாளர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.*

*8. குறிப்பாக பிரசவ பிரிவு, குழந்தைகள் பிரிவுகளுக்கு வருகை தரும் நோயாளர் மற்றும் உடனாளர் ஆகியோருக்கு வார்டு மருத்துவரின் கையொப்பமிட்ட ஆளறி அட்டையினை வழங்கிட அறிவுறுத்தப்பட்டுள்ளது.*

**பட்டியல்—13**

**1—**

**தடுப்பணை அமைத்தல்**

**வினா எண் 35253—திரு. டி. சுரேஷ்குமார்:** *மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) செங்கம் வட்டம், குப்பநத்தம் கிராமத்தில் தடுப்பணை அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) குப்பநத்தம் அணை, செங்கம் வட்டம், குப்பநத்தம் கிராமம் அருகே செய்யாற்றின் குறுக்கே கட்டடப்பட்டு ஏற்கெனவே அமைந்துள்ள ஆயக்கட்டுகளுக்கு பாசனம் உறுதி செய்வதற்காக அமைக்கப்பட்டுள்ளது. இவ்வணையிலிருந்து 3.5. கி.மீ. தூரம் வரை குப்பநத்தம் கிராம எல்லை உள்ளதால் நிலத்தடி நீர் நன்கு செறிவூட்டப்பட்டுள்ளது. குப்பநத்தம் கிராம எல்லை வரை மலைகளுக்கு இடையே செய்யாறு அமைந்திருப்பதாலும் போதுமான நீர்ப்பிடிப்புப் பகுதி இல்லாததாலும் இந்த இடத்தில் தடுப்பணை கட்டினால் தேவையான நீர் தேக்க இயலாது. மேலும், குப்பநத்தம் கிராம எல்லைக்குள் செய்யாற்றின் குறுக்கே தடுப்பணை அமைப்பது நீரியியல் ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் சாத்தியமற்ற திட்டமாகக் கருதப்படுகிறது.*

**2—**

**ஏரியைத் தூர் வாருதல்**

**வினா எண் 39748—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சென்னை பூண்டி ஏரியை ஆழப்படுத்த அரசு முன் வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*





**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) 1996-ல் பூண்டி ஏரியின் முழு நீர் மட்ட அளவு உயர்த்தப்பட்டு, அதன் கொள்ளளவு சுமார் 700 மில்லியன் கன அடி அதிகரிக்கப்பட்டது. எனவே, ஏரி நீரின்றி இருக்கும் காலம் மற்றும் பயனில்லாக் கொள்ளளவு போன்றவை இன்மையால் பூண்டி ஏரியை மேலும் தூர் வாரி அதன் கொள்ளளவை அதிகரிக்க சாத்தியக் கூறுகள் இல்லை.*

**3—**

**உதவித் தொகை வழங்குதல்**

**வினா எண் 44087—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** *மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*கட்டுமானத் தொழிலில் ஈடுபடும் வெளிமாநில தொழிலாளர்கள் விபத்தில் இறக்க நேரிடும்போது, முதலமைச்சரின் நிவாரண நிதியிலிருந்து உதவித் தொகை வழங்க அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர்:**

*தமிழ்நாட்டில் கட்டுமானத் தொழிலில் ஈடுபடும் வெளிமாநில தொழிலாளர்கள் விபத்தில் இறந்தால் அவர்களின் குடும்பங்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின் அடிப்படையில் முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து நிவாரணம் வழங்கப்பட்டு வருகிறது.*

**4—**

**மகிளா வங்கி துவக்குதல்**

**வினா எண் 44368—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** *மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[2014 டிசம்பர் 5

*தலைமைச் செயலகத்தில் மகிளா வங்கி துவக்க மத்திய அரசை வலியுறுத்த அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஒ. பன்னீர்செல்வம், நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர்:**

*தலைமைச் செயலகத்தில் மகிளா வங்கி துவங்குமாறு மத்திய அரசினை தமிழ்நாடு அரசு வலியுறுத்தும். இது தொடர்பாக மத்திய அரசு மற்றும் வங்கிகளின் கூட்டமைப்பிற்கு விரைவில் கடிதம் எழுதப்படும்.*

**5—**

**மணல் விற்பனை**

**வினா எண் 46796—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** *மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*மணல் கடத்தலையும் விலையேற்றத்தையும் தடுக்க அந்தந்த மாவட்டங்களில் கோட்டாட்சியர் அலுவலகங்கள்மூலம் மணலை விற்க அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஒ. பன்னீர்செல்வம், நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர்:**

*மாவட்டங்களில் கோட்டாட்சியர் அலுவலகங்கள்மூலம் ஆற்று மணல் விற்பனை செய்வது குறித்த கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.*

**6—**

**அவினாசி–அத்திக்கடவு திட்டம்**

**வினா எண் 46981—திரு. எம். ஆறுமுகம்:** *மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கோயம்புத்தூர் மாவட்டம், அவினாசி-அத்திக்கடவு திட்டத்தை விரைந்து செயல்படுத்த அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*



2014 டிசம்பர் 5]

**விடை—**

**மாண்புமிகு திரு. ஒ. பன்னீர்செல்வம், நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) அத்திக்கடவு-அவினாசி திட்டம் குறித்து தள ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டபோது, இத்திட்டத்தின் நேர்ப்பாட்டில் (Alignment) பல தொழில்நுட்ப நடைமுறைச் சிக்கல்கள் உள்ளன என்பது கண்டறியப்பட்டது. எனவே, மாற்றுப் பாதை வழியாகக் கால்வாய் அமைக்க ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆய்வுக்குப் பின்னர், இத்திட்டத்தைப் பாசனத் திட்டமாகக் கருதி, மத்திய அரசின் 'விரைவுப்படுத்தப்பட்ட பாசனப் பயன்' திட்டத்திற்கான வழிகாட்டுதல்களின்படி திட்ட அறிக்கை தயாரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

**7—**

**தெரு விளக்குகள் அமைத்தல்**

**வினா எண் 32068—திரு. ர.ம. பாபு முருகவேல்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஆரணி தொகுதி, ஆரணி ஒன்றியம், அரியப்பாடி ஊராட்சி, டேனேரி கூட்ரோட்டில் கம்பத்துடன் கூடிய குழல் விளக்குகள் அமைத்துத் தர அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஆரணி தொகுதி, ஆரணி ஒன்றியம், அரியப்பாடி ஊராட்சி, டேனேரி கூட்ரோடு பகுதியில் ஏற்கெனவே 6 குழல் விளக்குகள் அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. மேற்படி பகுதிகளில் கூடுதல் தெரு விளக்குகள் அமைக்க விண்ணப்பம் மற்றும் மதிப்பீட்டுத் தொகை செலுத்தப்பட்டால் தெரு விளக்குகள் அமைக்க உடன் நடவடிக்கை எடுக்கப்படும்.*

**8—**

## தெரு விளக்குகள் அமைத்தல்

**வினா எண் 32071—திரு. ர.ம. பாபு முருகவேல்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஆரணி தொகுதி, ஆரணி ஒன்றியம், அரியப்பாடி ஊராட்சிக்கு உட்பட்ட கோகுல் நகர் சாலைத் தெரு, குறும்பந்தாங்கல், மேற்குத் தெரு மற்றும் டேனரி கூட்ரோடு 2-வது வடக்குத் தெரு, தெற்குத் தெரு, வடக்கு 2-வது தெரு மற்றும் கூட்ரோட்டில் வேலூர் ரோடு ஆகிய பகுதிகளில் கம்பத்துடன் கூடிய தெரு விளக்குகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஆரணி தொகுதி, ஆரணி ஒன்றியம், அரியப்பாடி ஊராட்சிக்கு உட்பட்ட கோகுல் நகர் சாலைத் தெரு, குறும்பந்தாங்கல், மேற்குத் தெரு மற்றும் டேனரி கூட்ரோடு 2-வது வடக்குத் தெரு, தெற்குத் தெரு, வடக்கு 2-வது தெரு மற்றும் கூட்ரோட்டில் வேலூர் ரோடு ஆகிய பகுதிகளில் ஏற்கெனவே 15 குழல் விளக்குகள் அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. மேற்படி பகுதிகளில் கூடுதல் தெரு விளக்குகள் அமைக்க விண்ணப்பம் மற்றும் மதிப்பீட்டுத் தொகை செலுத்தப்பட்டால் தெரு விளக்குகள் அமைக்க உடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

**9—**

## மின் விளக்குகள் அமைத்தல்

**வினா எண் 32379—திரு. அ. பாஸ்கர்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*





*(அ) தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியம், சாமிசெட்டிப்பட்டி ஊராட்சி, பங்குநத்தம் கொட்டாயில் மின் கம்பங்களுடன் கூடிய மின் விளக்குகள் அமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியம், சாமிசெட்டிப்பட்டி ஊராட்சி, பங்குநத்தம்கொட்டாயில் மின்கம்பத்துடன் மின் விளக்குகள் அமைக்க கோரி ஊராட்சியிடமிருந்து விண்ணப்பம் எதுவும் பெறப்படவில்லை. விண்ணப்பம் பெறப்பட்டால் தெரு விளக்குகள் அமைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.*

**10—**

## சீரான மின்சாரம் வழங்குதல்

**வினா எண் 32450—திரு. ம. குணசேகரன்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை ஒன்றியம், எ. விளாக்குளம் கிராமத்தில் புதிய மின்மாற்றி அமைத்து சீரான மின்சாரம் வழங்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை ஒன்றியம், எ. விளாக்குளம் கிராமத்தில்* 63 KVA *மின்மாற்றிமூலம் மின் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்கண்ட மின்மாற்றியில் இணைக்கப்பட்டிருக்கும் மின்பளு*

*வரையறுக்கப்பட்ட மின்பளுவிற்குள் இருப்பதாலும், குறைந்த மின்னழுத்த குறைபாடு இல்லாததாலும், தற்பொழுது மின்மாற்றி அமைக்க வேண்டிய அவசியம் இல்லை.*

**11—**

**மின் கம்பிகளைச் சீரமைத்தல்**

**வினா எண் 35054—திரு. சோழன் சித. பழனிச்சாமி:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டை ஒன்றியம், மாவிடுதிக்கோட்டை ஊராட்சி, கோவிக்கோட்டை பெ. வசந்தாள் வீடு அருகில் தாழ்வான நிலையிலுள்ள மின் கம்பிகளைச் சீரமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டை ஒன்றியம், மாவிடுதிக்கோட்டை ஊராட்சி, கோவிக்கோட்டை பெ. வசந்தாள் வீடு அருகில் தாழ்வாக தொங்கிய மின்கம்பிகள் சீரமைக்கப்பட்டுவிட்டன.*

**12—**

**மின் கம்பங்களைச் சாலையோரத்தில் அமைத்தல்**

**வினா எண் 37508—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*கன்னியாகுமரி மாவட்டத்தில் சாலைகளிலுள்ள மின் கம்பங்களைச் சாலை ஓரத்தில் மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?*





**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*கன்னியாகுமரி மாவட்டத்தில் பொதுமக்களுக்கும், போக்குவரத்துக்கும் இடையூறாக சாலைகளில் மின் கம்பங்கள் எதுவும் நிறுவப்படவில்லை. எனினும் மின் கம்பங்களை இடம் மாற்றம் செய்யக் கோரி விண்ணப்பம் பிரிவு அலுவலகங்களில் பெறப்படும்பட்சத்தில் விதிமுறைகளின்படி நடவடிக்கை எடுக்கப்படும்.*

**13—**

**தவிட்டு உமியிலிருந்து மின்சாரம்**

**வினா எண் 37717—திரு. சோழன் சித. பழனிச்சாமி:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) காரைக்குடி தொகுதி, சாக்கோட்டை ஒன்றியம், புதுவயல் பேரூராட்சி அரிசி ஆலைகளில் கிடைக்கும் தவிட்டு உமியிலிருந்து மின்சாரம் உற்பத்தி செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) காரைக்குடி தொகுதி, சாக்கோட்டை ஒன்றியம், புதுவயல் பேரூராட்சி அரிசி ஆலைகளில் கிடைக்கும் தவிட்டு உமியிலிருந்து மின்சாரம் உற்பத்தி செய்யும் திட்டம் ஏதும் தற்போது இல்லை. அரிசி ஆலைகளில் இருந்து கிடைக்கும் தவிட்டு உமியிலிருந்து மின்சாரம் உற்பத்தி செய்யும் திட்டத்துடன் தனியார் மின் உற்பத்தியாளர்கள் அணுகினால், விதிமுறைகளின்படி ஆவன செய்யப்படும்.*

[2014 டிசம்பர் 5

**14—**

**மின்மாற்றியை உயர்த்தி அமைத்தல்**

**வினா எண் 37721—திரு. ஏ.கே. போஸ்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மதுரை வடக்கு தொகுதிக்குட்பட்ட மீனாம்பாள்புரம், புலித்தேவன் தெருவிலுள்ள மின்மாற்றியை உயர்த்தி அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) மதுரை வடக்கு தொகுதிக்குட்பட்ட, மீனாம்பாள்புரம், புலித்தேவன் தெருவிலுள்ள மின்மாற்றியின் கட்டமைப்பு 7-12-2013 அன்று உயர்த்தி அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.*

**15—**

**புதிய கட்டடம்**

**வினா எண் 38366—திரு. கே.பி. பரமசிவம்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பல்லடம் தொகுதி, பொல்லிக்காளிபாளையம் தெற்கு மற்றும் வடக்கு மின் அலுவலகங்களுக்குப் புதிய கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) பல்லடம் தொகுதிக்குட்பட்ட பொல்லிக்காளிபாளையம் தெற்கு மற்றும் வடக்கு பிரிவு*



2014 டிசம்பர் 5]

*அலுவலகங்கள் திருப்பூர் தாராபுரம் சாலையில் இதுநாள் வரை இயங்கி வந்தன. அந்தக் கட்டடம் மிகவும் பழுதடைந்ததால் பொல்லிக்காளிபாளையத்தில் அமைந்துள்ள கரைப்புதூர் பஞ்சாயத்துக்கு சொந்தமான கட்டடத்தில் கடந்த 5-9-2013 அன்று இரு பிரிவு அலுவலகங்களும் மாற்றப்பட்டு இயங்கி வருகின்றன. தற்போது இயங்கிவரும் கட்டடம் இரு பிரிவு அலுவலக மின் நுகர்வோர்களுக்கும் சௌகரியமாக உள்ளது. மேலும், நிதிநிலை காரணமாகவும், அலுவலகம் கட்ட ஏற்ற இடம் எதுவும் இல்லாததாலும் புதிய கட்டடம் கட்ட தற்சமயம் உத்தேசம் இல்லை.*

**16—**

**உயர் மின் அழுத்த மின்கம்பியை இடம் மாற்றுதல்**

**வினா எண் 40661—டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பத்மநாபபுரம் தொகுதி, குலசேகரம் புனித ஊர்சுலாஸ் மகளிர் உயர்நிலைப் பள்ளி மற்றும் அண்ணா நகர் குடியிருப்புகளுக்கு மேலாக செல்லும் உயர் மின் அழுத்த மின் கம்பியை இடம் மாற்றி அரசு மருத்துவமனை சாலை அரசு மூடு வழியாக கொண்டு செல்ல அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஆம். கன்னியாகுமரி மாவட்ட பத்மநாபபுரம் தொகுதி, குலசேகரம், ஊர்சுலாஸ் மகளிர் உயர்நிலைப் பள்ளி மற்றும் அண்ணா நகர் குடியிருப்புகளுக்கு மேல் செல்லும் உயர் அழுத்த மின் கம்பியானது 1965 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டதாகும். அதன் பின்னர் தான், அப்பகுதிகளில் உயர்நிலைப் பள்ளி மற்றும் குடியிருப்புகள் கட்டப்பட்டன. தமிழ்நாடு மின்சார வழங்கல் விதித்தொகுப்பு 5(6)-ன்படி மின் இணைப்பு/தொடர் கட்டமைப்பு மற்றும் சாதனங்கள்*

இடமாற்றுவதற்கான மதிப்பீடு செய்யப்பட்ட இடமாற்றத் தொகையை நுகர்வோர் முன்கூட்டியே முழுமையாக கட்டி விட வேண்டும். அத்தொகை கட்டப்பட்ட பிறகே இடமாற்றப் பணி தொடங்கப்படும். எனவே, பள்ளி மற்றும் வீட்டு கூரைகளின் மீது செல்லும் மின் கம்பிகளை மாற்றியமைக்க குடியிருப்போர் உரிய விண்ணப்பம் அளித்து, மதிப்பீட்டுத் தொகையை செலுத்தும் பட்சத்தில் தொழில்நுட்ப சாத்திய கூறுகளுக்குட்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**17—**

## மின்சாரம் வழங்குதல்

**வினா எண் 40662—திரு. ம. குணசேகரன்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மானாமதுரை தொகுதி, சன்னதி புதுக்குளம், மேலப்பிடாவூர் ஊராட்சிகளுக்கு காளையார்கோவிலிலிருந்து மின்சாரம் வழங்குவதை நிறுத்தி, மானாமதுரை மின் நிலையத்திலிருந்து மின்சாரம் வழங்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) மானாமதுரை தொகுதி, சன்னதி புதுக்குளம், மேலப்பிடாவூர் ஊராட்சிகளுக்கு காளையார்கோவில் 110/22 கி.வோ. துணை மின் நிலையத்திலிருந்து கொல்லாவயல் கிராம மின்னூட்டி வழியாக தற்போது மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. கொல்லாவயல் மின்னூட்டியில் தற்போதுள்ள தாழ்வழுத்த இணைப்புகளின் மொத்த மின் பளு 6,808.18 கி.வாட்ஸ் ஆகும். கொல்லாவயல் மின்னூட்டியில் தாழ்வழுத்த தொழிற்சாலை மின் இணைப்புகளின் மின்பளுவானது குடிநீர், தொழிற்சாலை மற்றும் விவசாய மின் இணைப்புகளின் மின் பளுவில் 50 விழுக்காடுக்கு குறைவாக இருப்பதால் கிராமப்புற மின்னூட்டியாகவே துணை மின் நிலையம் செயல்படுகிறது. எனவே, சன்னதி புதுக்குளம், மேலப்பிடாவூர் ஊராட்சிகளுக்கு மின்சார விநியோகத்தை மானாமதுரை துணை மின் நிலையத்தின் நகர்ப்புற மின்னூட்டியில் இருந்து மாற்றி வழங்குவதற்கான சாத்தியக்கூறு ஏதும் தற்போது இல்லை. எனினும், கிராமிய மின் பாதைகளை நகர மின் பாதைகளாக மாற்றுவதற்கான விதிமுறைகள் பொருந்தும்பட்சத்தில் கொல்லாவயல் மின்னூட்டி நகர்ப்புற மின்னூட்டியாக மாற்றப்பட்டு 24 மணி நேரம் மும்முனை மின்சாரம் வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்படும்.*





**18—**

## புதிய குடியிருப்புகள்

**வினா எண் 16030—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பதின்மூன்றாவது நிதிக் குழு மாநில சிறப்பு மானியம்மூலம் புதிய குடியிருப்புகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) பதின்மூன்றாவது நிதிக் குழு மாநில சிறப்பு மானியம்மூலம் புதிய குடியிருப்புகள் கட்ட தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்கு நிதி ஒதுக்கீடு எதுவும் செய்யப்படவில்லை.*

**19—**

## சிறப்பு பழுதுபார்க்கும் பணிகள்

**வினா எண் 16047—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சேலம் அண்ணா நகரில் உள்ள குடிசைமாற்று வாரிய குடியிருப்புகளின் சிறப்பு பழுதுபார்க்கும் பணிகள் முடிவுற்றனவா?*

*(ஆ) ஆம் எனில், குடியிருப்போருக்கு மீண்டும் வழங்கப்பட்டு விட்டதா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், சேலம் வீட்டுவசதிப் பிரிவுமூலம், சேலம் அண்ணா நகரில் உள்ள 400 குடிசை மாற்று வாரிய குடியிருப்புகள் அரசாணை (நிலை) எண் 301, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் (வீ.வ.5(2)) துறை, நாள் 28-12-2010-ன்படி, ரூ.144.86 இலட்சம் மதிப்பீட்டில், சிறப்பு பழுது பார்க்கும் பணிகள் 14-11-2012-ல் முடிவுற்று பயனாளிகளின் பயன்பாட்டில் உள்ளது.*

**20—**

## விவசாயத் துறை ஊழியர்களுக்கு வீடு வழங்குதல்

**வினா எண் 25032—திரு. சோழன் சித. பழனிச்சாமி:** *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) காரைக்குடி தொகுதி, காரைக்குடி காலனி பகுதியிலுள்ள வீடுகளை விவசாயத் துறை ஊழியர்களுக்கு வழங்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) காரைக்குடி கழனிவாசல் பகுதியில் 237/1-ல் கட்டடப்பட்டுள்ள அரசு ஊழியர் வாடகை குடியிருப்புகள் அரசு ஊழியர்களுக்கு வாடகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகின்றன. மேலும் காரைக்குடி கழனிவாசல் பகுதியில் புல எண் 238/2-ல்* SMT *திட்டத்தில் 179 வீடுகள் கட்டப்பட்டு, பொது மக்களுக்கு விற்பனைப் பத்திரம் வழங்கப்பட்டு, ஒதுக்கீட்டாளரின் பெயரில் சொந்த அனுபவத்தில் இருந்து வருகின்றன. எனவே, மேற்கண்ட வீடுகளை விவசாயத் துறை ஊழியர்களுக்கு வழங்க இயலாது.*





**21—**

## வாடகை குடியிருப்புகள் கட்டுதல்

**வினா எண் 26738—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பட்டினப்பாக்கத்தில் அரசு வாடகை குடியிருப்புகள் கட்ட கடலோர ஒழுங்குமுறை மண்டலத்தின் அனுமதி பெறப்பட்டுவிட்டதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) பட்டினப்பாக்கத்தில் அரசு வாடகை குடியிருப்புகள் கட்ட, மாவட்ட அளவிலான கடலோர ஒழுங்குமுறை ஆணையத்தின் அனுமதி கடித எண்* DEE/TNPCB/CHN/DCZMA/2011, *நாள் 5-11-2012 அன்று பெறப்பட்டு உள்ளது. மேலும், மாநில அளவிலான கடலோர ஒழுங்குமுறை ஆணையத்தின் அனுமதி செயல்முறை ஆணை எண்* 2713/2012/P1, *நாள் 27-12-2012 அன்று பெறப்பட்டு உள்ளது.*

**22—**

## அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டுதல்

**வினா எண் 29784—திரு. சோழன் சித. பழனிச்சாமி:** *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) காரைக்குடி தொகுதி, சாக்கோட்டை ஒன்றியம், சாக்கோட்டையில் அரசு ஊழியர்களுக்கு வீட்டு வசதி வாரியத்தின்மூலம் அடுக்குமாடிக் குடியிருப்புகளைக் கட்ட அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) அரசு ஆணை (நிலை) எண் 373, வீட்டு வசதி (ம) நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 24-2-79-ன்படி கோட்டாட்சியர் தலைமையிடமாக உள்ள நகரங்களில் மட்டுமே தமிழ்நாடு அரசு அலுவலர்களுக்கான வாடகைக் குடியிருப்புகள் கட்டும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. காரைக்குடி தொகுதியில் உள்ள சாக்கோட்டை ஒன்றியம், சாக்கோட்டை, கோட்டாட்சியர் தலைமையிடமாக இல்லாததாலும் மற்றும் சாக்கோட்டையிலிருந்து 16 கி.மீ. தூரத்திலுள்ள காரைக்குடியில் ஏற்கெனவே அரசு அலுவலர்களுக்காக 36 குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன. அதில் 21 குடியிருப்புகள் காலியாகவே உள்ளன. எனவே, தற்போது தமிழ்நாடு அரசு ஊழியர்களுக்கு வீட்டு வசதி வாரியத்தின்மூலம் அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டும் திட்டம் ஏதும் இல்லை.*

**23—**

## மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்

**வினா எண் 35195—திருமதி எஸ். விஜயதரணி:** *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கூட்டுறவு வீட்டு வசதி சங்கப் பணியாளர்களுக்கு அரசின், மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தைச் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) கூட்டுறவு வீட்டு வசதி சங்கப் பணியாளர்களுக்கு அரசின் மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் செயல்படுத்துவது குறித்து கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.*



**24—**

## சம்பளம் வழங்குதல்

**வினா எண் 35201—திருமதி எஸ். விஜயதரணி:** *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கூட்டுறவு வீட்டு வசதி சங்கப் பணியாளர்களுக்கு நிலுவையிலுள்ள சம்பளத்தினை வழங்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்களில் கடன் பெற்ற பல்வேறு பிரிவினர்களுக்கு வழங்கப்பட்ட வீட்டு வசதி கடன்களுக்கு வட்டி தள்ளுபடி சலுகைகள் வழங்கப்பட்டு, சங்கத்தின் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட கடன் வசூலில் முன்னேற்றம் அடைந்து வருகிறது. மேலும், இணையத்தின்மூலம் பிரதம கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்களின் உறுப்பினர்களுக்கு புதிய கடன்கள் வழங்குவதற்கான அரசாணை (நிலை) எண் 48, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் (வீகூச2) துறை, நாள் 4-3-2014-ன் வழி ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட நடவடிக்கைகள்மூலம் பிரதம கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்களின் உறுப்பினர்களுக்கு வழங்கியுள்ள கடன் வசூலில் முன்னேற்றம் ஏற்பட்டு, புதிய கடன்கள் வழங்கி, அதனடிப்படையில் சங்கத்தின் நிதி ஆதாரம் உயர வழிவகை ஏற்பட்டுள்ளது. மேற்கண்ட சூழ்நிலையில், சங்கங்களின் லேவாதேவி உயர்ந்து சங்கங்களின் பொருளாதார நிலை சீர் அடையும் நிலையில் கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்களின் பணியாளர்களுக்கு நிலுவையிலுள்ள சம்பளங்களை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

**25—**

## ஓய்வூதிய நிதிப் பயன்கள் வழங்குதல்

**வினா எண் 35202—திருமதி எஸ். விஜயதரணி:** *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2014 டிசம்பர் 5

*(அ) கூட்டுறவு வீட்டு வசதி சங்கப் பணியாளர்களின் ஓய்வூதிய நிதிப்பயன்கள் வழங்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம், விதிகள் மற்றும் சங்கத் துணை விதிகளின் அடிப்படையில் கூட்டுறவு வீட்டு வசதி சங்கப் பணியாளர்களுக்கு ஓய்வூதிய நிதிப்பயன்களான பணிக்கொடை, விடுப்பூதியம், வருங்கால வைப்புநிதித் தொகை ஆகியவை வழங்கப்பட்டு வருகின்றன. இவர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவது குறித்து கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.*

**26—**

## குடியிருப்புகளைப் புதுப்பித்தல்

**வினா எண் 38329—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சென்னை பழைய வண்ணாரப்பேட்டை, மேற்குக் கல்லறை சாலையில் உள்ள குடிசை மாற்று வாரிய குடியிருப்புகளைப் புதுப்பிக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

*(அ) சென்னை பழைய வண்ணாரப்பேட்டை, மேற்குக் கல்லறை சாலையில் உள்ள குடிசை மாற்று வாரிய குடியிருப்புகளை 13-வது நிதிக் குழுவின் நிதியிலிருந்து புனரமைப்பு மற்றும் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ள வாரிய ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.*

*(ஆ) விரைவில் பணிகள் துவங்கப்படும்.*



2014 டிசம்பர் 5]

**27—**

## திருமண மண்டபத்தைப் புனரமைத்தல்

**வினா எண் 39043—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சென்னை, வேளச்சேரி தமிழ்நாடு வீட்டு வசதி வாரியக் குடியிருப்புப் பகுதியில் உள்ள திருமண மண்டபத்தைப் புனரமைத்து பயன்பாட்டிற்குக் கொண்டு வர அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது புனரமைக்கப்படும்?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வீட்டு வசதி மற்றம் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) வேளச்சேரி வீட்டு வசதி வாரிய குடியிருப்பில் உள்ள திருமண மண்டபத்தை மாநகராட்சியிடம் நிலத்தின் விலையை பெற்றுக் கொண்டு ஒப்படைக்க வேண்டி இருப்பதால் புனரமைக்க வாய்ப்பில்லை. மேலும் இதில் உள்ள கட்டடங்கள் மிகவும் சிதலமடைந்து புனரமைக்க முடியாத நிலையில் உள்ளதால் இடிப்பதற்கு பிரேரணை தயாரிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.*

**28—**

## குடியிருப்புகளைப் புதுப்பித்தல்

**வினா எண் 41359—திரு. க. அன்பழகன்:** *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் டாக்டர் மூர்த்தி சாலையிலுள்ள தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய அரசு ஊழியர்கள் குடியிருப்புகளைப் புதுப்பித்துத்தர அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

*வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் [வீ.வ.5(2)] துறையின் அரசு ஆணை (நிலை) எண் 22, நாள் 29-1-2013-ல் உள்ள ஆணையின்படி, ரூ.49.95 இலட்சங்களுக்கு கும்பகோணம் டாக்டர் மூர்த்தி சாலையில் உள்ள தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய அரசு ஊழியர்கள் குடியிருப்புகளுக்கு சிறப்புப் பழுதுபார்க்கும் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. மேலும், இக்குடியிருப்புகளில் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் [வீ.வ.5(2)] துறை, அரசு ஆணை (நிலை) எண் 238, நாள் 20-9-2013-ல் நடப்பு வருடத்தில் ரூ.35.00 இலட்சம் சிறப்புப் பழுதுபார்க்கும் பணிக்காக அனுமதிக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரும் நடவடிக்கை பரிசீலனையில் உள்ளது.*

**29—**

## புதிய பாலம் அமைத்தல்

**வினா எண் 37751—திரு. ஏ.ஏ. கருப்பசாமி:** *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*திண்டுக்கல்-பெங்களூரு தேசிய நெடுஞ்சாலை 209-ல் கி.மீ.203/10-ல் உள்ள குறுகிய பாலத்திற்கு மாற்றாக புதிய பாலம் அமைக்க அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:**

*திண்டுக்கல்-பெங்களூரு தே.நெ.209-ல் கி.மீ.203/10-ல் உள்ள குறுகிய பாலத்திற்கு மாற்றாக புதிய பாலம் அமைக்கும் பணிக்கு ரூ.168.33 இலட்சத்திற்கு மைய அரசு நிருவாக ஒப்புதல் வழங்கியுள்ளது. தற்போது இப்பணி நடைபெற்று வருகிறது.*



**30—**

## இளநிலைப் பொறியாளர்கள் பணியிட மாறுதல்

**வினா எண் 41427—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தமிழக நெடுஞ்சாலை துறையில் இளநிலைப் பொறியாளர்கள் பணியிட மாற்றத்திற்கு கலந்தாய்வு முறையினை நடைமுறைப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:**

*தமிழ்நாடு அரசு பணியாளர்கள், அலுவலர்கள் பணியிட மாறுதல் குறித்து பணியாளர் (ம) நிர்வாக சீர்திருத்தத் துறையால் வெளியிடப்பட்ட அரசாணையில் உள்ள வழிகாட்டுதல்களின் அடிப்படையிலும் மற்றும் நெடுஞ்சாலைத் துறையில் பணிசுழற்சி முறையில்/தொகுப்பு அ மற்றும் ஆ பிரிவுகளில் பணிபுரிய வேண்டும் என வரையறுக்கப்பட்டுள்ளதன் அரசாணைகளின் அடிப்படையில் இளநிலைப் பொறியாளர்கள் பணியிட மாறுதல் செய்யப்படுகின்றனர்.*

*எனவே, நெடுஞ்சாலைத் துறையில் இளநிலைப் பொறியாளர்கள் பணியிட மாற்றத்திற்கு கலந்தாய்வு முறையினை நடைமுறைப்படுத்துவதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை.*

**31—**

## சாலையைத் தரம் உயர்த்துதல்

**வினா எண் 42935—திரு. சு. ரவி**: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம்-காவனூர்-கீழ்குப்பம்-மூதூர் வரை செல்லும் மாவட்ட இதர சாலை* ODR-*ஐ மாவட்ட முக்கிய சாலை* MDR-*ஆகத் தரம் உயர்த்திட அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

[2014 டிசம்பர் 5

**விடை—**

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம்-காவனூர்-கீழ்குப்பம்-மூதூர் வரை செல்லும் மாவட்ட இதர சாலையை மாவட்ட முக்கிய சாலையாகத் தரம் உயர்த்த கோரப்படும் சாலையானது நெடுஞ்சாலைத் துறை வேலூர் கோட்டப் (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) பராமரிப்பில் உள்ள அரக்கோணம்-மூதூர் கோணலம் சாலை கி.மீ.1/4-10/0 வரை மாவட்ட இதர சாலையாகும். இச்சாலையில் போக்குவரத்துச் செறிவு அதிகரிக்கும்பட்சத்தில் மாவட்ட முக்கிய சாலையாகத் தரம் உயர்த்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

**32—**

## சாலையை அகலப்படுத்தி சீரமைத்தல்

**வினா எண் 44520—திரு. ம. குணசேகரன்:** *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், கே.எல்.என். பொறியியல் கல்லூரியிலிருந்து காஞ்சிரங்குளம் வரையுள்ள சாலையை அகலப்படுத்தி சீரமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், கே.எல்.என். பொறியியல் கல்லூரியிலிருந்து காஞ்சிரங்குளம் வரையுள்ள சாலை ஒருவழித்தடமாக உள்ளது. இச்சாலையில் தற்போது போக்குவரத்துச் செறிவு குறைவாக உள்ளது. போக்குவரத்துச் செறிவு அதிகரிக்கும்போது ஒருவழித்தடத்திலிருந்து இடைவழித்தடமாக அகலப்படுத்தப்படும். எனினும் போக்குவரத்திற்கு உகந்த நிலையில் சாலை பராமரிக்கப்பட்டு வருகிறது.*



2014 டிசம்பர் 5]

**33—**

## மையத் தடுப்பான் அமைத்தல்

**வினா எண் 45323—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சென்னை கிழக்குக் கடற்கரை சாலையில் அக்கரை முதல் முட்டுக்காடு வரையுள்ள சாலையின் நடுவே மையத் தடுப்பான்* (Centre Median) *அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) கிழக்குக் கடற்கரை சாலை அக்கரை முதல் மாமல்லபுரம் வரை நான்கு வழிச்சாலையாக, விரிவுபடுத்தும் பணி துவக்க நிலையில் உள்ளது. பணி நிறைவுறும் தருவாயில் மையத் தடுப்பான்* (Centre Median) *அமைக்கப்படும்.*

**34—**

## நடைபாதைகள் அமைத்தல்

**வினா எண் 45332—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மதுரை-திருமங்கலம்-கொல்லம் தேசிய நெடுஞ்சாலையில் செங்கோட்டை நகரில் சாலையின் இருபுறமும் நடைபாதைகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) மதுரை-திருமங்கலம்-கொல்லம் தேசிய நெடுஞ்சாலை, தே.நெ.208-ல் கி.மீ.93/8-95/0 வரை உள்ள சாலைப்*

*பகுதி நெருக்கடி மிகுந்த நகர் பகுதியாகும். நகரின் மையப் பகுதியில் இருபுறமும் நடைபாதைகள் அமைக்க போதிய அகலம் மற்றும் இடவசதி இல்லாத காரணத்தினால் நடைபாதைகள் அமைப்பது சாத்தியமில்லை.*

**35—**

## மைய தடுப்புச் சுவர் அமைத்தல்

**வினா எண் 47820—திரு. க. கோபால்சாமி:** *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*ராஜபாளையம் நகருக்குள் அமைந்துள்ள தேசிய நெடுஞ்சாலை எண் 208-ல் மைய தடுப்புச் சுவர் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:**

*ராஜபாளையம் நகருக்குள் அமைந்துள்ள சாலைப் பகுதியானது ராஜபாளையம் நகராட்சிப் பகுதியில் தேசிய நெடுஞ்சாலை எண் 208-ல் (கொல்லம்-தென்காசி-திருமங்கலம் சாலை) கி.மீ.166/0-170/0 வரை உள்ளதாகும். இதில் தடுப்புச் சுவர் அமைத்து இருவழிப் போக்குவரத்து சாலை அமைக்க போதுமான சாலை அகலம் மற்றும் இடவசதி இல்லை. எனவே, இப்பகுதியில் மைய தடுப்புச் சுவர் அமைக்க சாத்தியமில்லை.*

**36—**

## கதவு அமைத்தல்

**வினா எண் 33544—திரு. ஆ. நாராயணன்:** *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) நாங்குநேரி ஒன்றியம், சிந்தாமணி ஊராட்சி, சிந்தாமணியில் அங்கன்வாடி மையத்திற்கு கதவு அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*





**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி ஒன்றியம், சிந்தாமணி ஊராட்சி, சிந்தாமணி கிராமத்தில் செயல்பட்டு வரும் அங்கன்வாடி மையத்திற்கு கதவுகள் அமைக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது.*

**37—**

## இருக்கை அமைத்தல்

**வினா எண் 33891—திரு. ஆ. நாராயணன்:** *மாண்புமிகு சமூகநலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) நாங்குநேரி தொகுதி, நாங்குநேரி ஒன்றியம், சிந்தாமணி ஊராட்சி, சிந்தாமணியில் அங்கன்வாடி மையத்தில் குழந்தைகளுக்கான இருக்கை அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி தொகுதி, நாங்குநேரி வட்டாரம், சிந்தாமணி ஊராட்சி, சிந்தாமணி கிராமத்தில் செயல்பட்டு வரும் அங்கன்வாடி மையத்தில் குழந்தைகளுக்கான இருக்கைகள் அமைக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது.*

**38—**

## கலவை உணவு இயற்கை உணவாக வழங்குதல்

**வினா எண் 34414—திருமதி எஸ். விஜயதரணி:** *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) அங்கன்வாடி சத்துணவு மையங்களில் வழங்கப்படும் கலவை உணவு இயற்கை உணவாக* (Organic food) *வழங்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) அங்கன்வாடி மையங்களில் வழங்கப்படும் சத்துணவில் ஐந்து வகையான கலவை சாதங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இத்திட்டம் தற்போது ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு முன்னோடி வட்டாரத்தில் மட்டுமே செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அங்கன்வாடி மையங்களில் பயன்பெற்று வரும் குழந்தைகளின் வயதுக்கேற்ப ஜீரண சக்தி மற்றும் சிறப்பு செயல்பாடுகளை கருத்தில் கொண்டு அவர்களுக்கு ஏற்ற வகையான கலவை சாதங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. கலவை உணவை இயற்கை உணவாக வழங்குவதால் 2 வயது முதல் 5 வயதுடைய குழந்தைகளின் ஜீரண சக்தி பாதிக்கப்படலாம் என்பதால், கலவை உணவை இயற்கை உணவாக வழங்கும் தேவை எழவில்லை.*

**39—**

## சொந்தக் கட்டடம்

**வினா எண் 35060—திரு. சோழன் சித. பழனிச்சாமி:** *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டை வட்டத்திற்குட்பட்ட, பனிப்புலான்வயல், பாலாக்குடி, பிராந்தனி, பூக்குளம், பெரியபிரம்புவயல் ஆகிய கிராமங்களில் அங்கன்வாடி மையங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*





**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டை வட்டம், பனிப்புலான்வயல், பாலாக்குடி, பிராந்தனி, பூக்குளம், பெரியபிரம்புவயல் ஆகிய அங்கன்வாடி மையங்களுக்குச் சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.*

**40—**

## சொந்தக் கட்டடம்

**வினா எண் 35066—திரு. சோழன் சித. பழனிச்சாமி:** *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டை வட்டம், மஞ்சனி கிராமம், மனோரஞ்சித வீதி, மாலையாட்டான்வயல் மற்றும் மாரிசான்பட்டி ஆகிய பகுதிகளில் உள்ள அங்கன்வாடி மையங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்டித்தர அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டை வட்டம், மஞ்சனி கிராமம், மனோரஞ்சித வீதி, மாலையாட்டான்வயல் மற்றும் மாரிசான்பட்டி அங்கன்வாடி மையங்களுக்குச் சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.*

[2014 டிசம்பர் 5

41—

## சொந்தக் கட்டடம்

**வினா எண் 35071—திரு. சோழன் சித. பழனிச்சாமி:** *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டை வட்டத்திற்குட்பட்ட, முடுக்குவயல், முனியப்பன் கோவில் பொட்டல், முட்டக்குத்தி கிராமம், மேலமொன்னி, வலங்காவயல் காலனி ஆகிய பகுதிகளில் உள்ள அங்கன்வாடி மையங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டை வட்டம், முடுக்குவயல், முனியப்பன் கோவில் பொட்டல், முட்டக்குத்தி கிராமம், மேலமொன்னி, வலங்காவயல் காலனி ஆகிய அங்கன்வாடி மையங்களுக்குச் சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.*

42—

## சொந்தக் கட்டடம் கட்டுதல்

**வினா எண் 35096—திரு. சோழன் சித. பழனிச்சாமி:** *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டை வட்டத்திற்குட்பட்ட தாழையூர், திருவள்ளுவர் நகர், திருவப்பூரார் தெரு, தெற்குநெம்மேனி, தெள்ளியன்வயல் கிராமம், தெண்ணீர்வயல் கிராமம் ஆகிய பகுதிகளில் உள்ள அங்கன்வாடி மையங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*



2014 டிசம்பர் 5]

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டை வட்டத்திற்குட்பட்ட, தாழையூர், திருவள்ளுவர் நகர், திருவப்பூரார் தெரு, தெற்குநெம்மேனி, தெள்ளியன்வயல் கிராமம் மற்றும் தெண்ணீர்வயல் கிராமம் ஆகிய அங்கன்வாடி மையங்களுக்குச் சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.*

43—

## சொந்தக் கட்டடம்

**வினா எண் 35102—திரு. சோழன் சித. பழனிச்சாமி:** *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டை வட்டத்திற்குட்பட்ட, நடுவிக்கோட்டை, நடராஜபுரம், நாச்சியார்புரம், நித்தியகல்யாணிபுரம், நெடுங்குளம், நெடோடை கிராமம், பழைய சருகனிரோடு மற்றும் பள்ளிவாசல் ஆகிய பகுதிகளில் உள்ள அங்கன்வாடி மையங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டை வட்டம், நடுவிக்கோட்டை, நடராஜபுரம், நாச்சியார்புரம், நித்தியகல்யாணிபுரம், நெடுங்குளம், நெடோடை கிராமம், பழைய சருகனிரோடு மற்றும் பள்ளிவாசல் ஆகிய அங்கன்வாடி மையங்களுக்குச் சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.*

[2014 டிசம்பர் 5

**44—**

**கூரை அமைத்தல்**

**வினா எண் 38155—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தென்காசி தொகுதி, ஆயிரப்பேரி ஊராட்சி, ஆயிரப்பேரி கிராம அங்கன்வாடி மையத்திற்கு கல்நாரிலான கூரை அமைத்துச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி தொகுதி, ஆயிரப்பேரி ஊராட்சி, ஆயிரப்பேரி கிராமத்தில் செயல்பட்டு வரும் அங்கன்வாடி மையத்திற்கு கான்கிரீட் மேற்கூரை அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.*

**45—**

**சொந்தக் கட்டடம் கட்டுதல்**

**வினா எண் 38324—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தென்காசி தொகுதி, கல்லூரணி ஊராட்சி, செல்வவிநாயகபுரம் மற்றும் காமராஜ் நகரிலுள்ள அங்கன்வாடி மையத்திற்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி தொகுதி, கல்லூரணி ஊராட்சி, செல்வவிநாயகபுரம் மற்றும் காமராஜ் நகர் அங்கன்வாடி மையங்களுக்குச் சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு* **வருகிறது**.



2014 டிசம்பர் 5]

**46—**

**சொந்தக் கட்டடம் கட்டுதல்**

**வினா எண் 38326—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தென்காசி தொகுதி, குலசேகராப்பட்டி ஊராட்சி, குறும்பலாப்பேரி அங்கன்வாடி மையத்திற்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி தொகுதி, குலசேகராப்பட்டி ஊராட்சி, குறும்பலாப்பேரி அங்கன்வாடி மையத்திற்கு நிலம் தேர்வு செய்யப்பட்டு சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.*

**47—**

**மனநலம் பாதிக்கப்பட்டவருக்கு சிகிச்சை**

**வினா எண் 42318—திரு. ம. குணசேகரன்:** *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சுயநினைவின்றி சுற்றித் திரிவோரை காப்பகத்தில் ஒப்படைத்து மருத்துவ சிகிச்சையளிக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திருமதி. பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) குடும்பத்தினரால் கவனிக்கப்படாமல் மற்றும் சுயநினைவின்றி சாலைகள் மற்றும் இதர பொது இடங்களில் சுற்றித் திரியும் மனநலம் பாதிக்கப்பட்டவர்கள் மீட்கப்பட்டு*

*மருத்துவமனை (அல்லது) மனநலம் பாதிக்கப்பட்டவர்களுக்கான மறுவாழ்வு இல்லங்களில் சேர்ப்பதற்காக மீட்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள்மூலம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொரு வருடமும் 500 பயனாளிகள் பயன்பெறுகிறார்கள். இத்திட்டத்திற்காக ஒவ்வொரு வருடமும் ரூ.7.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. மேலும் மனநலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு உறைவிடம், உணவு, மருத்துவம் மற்றும் மறுவாழ்வுப் பணிகளை வழங்குவதற்காக தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின்மூலம் தூத்துக்குடி, இராமநாதபுரம், ஈரோடு, திருச்சிராப்பள்ளி, திருவள்ளூர், கடலூர், மதுரை, கோயம்புத்தூர், திருவாரூர், வேலூர் மற்றும் சேலம் ஆகிய இடங்களில் மனநலம் பாதிக்கப்பட்டவர்களுக்கான 11 இல்லங்கள் ஏற்படுத்தப்பட்டு ஒவ்வொரு இல்லத்திலும் அதிகபட்சமாக 50 மனநலம் பாதிக்கப்பட்டவர்கள் தங்குவதற்கென போதுமான இடவசதியுள்ளது. ஒவ்வொரு வருடமும் 530 மனநலம் பாதிக்கப்பட்ட நபர்கள் இத்திட்டத்தின்கீழ் அனுமதிக்கப்படுகின்றனர். இத்திட்டத்திற்காக ஒவ்வொரு வருடமும் ரூ.100.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.*

**48—**

## பணியாளர்கள் பணி நிரந்தரம் மற்றும் ஊதியம் வழங்குதல்

**வினா எண் 8562— திரு. எம். ஆறுமுகம்:** *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*கோயம்புத்தூர் பாரதியார் பல்கலைக்கழகம் உறுப்புக் கல்லூரியான வால்பாறை கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பணியாற்றும் உதவியாளர், அலுவலக உதவியாளர் மற்றும் துப்புரவாளர்களைப் பணி நிரந்தரம் செய்து அதற்கான ஊதியம் வழங்க அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:**

*வால்பாறை அரசு கலைக் கல்லூரிக்கு அரசு ஆணை (நிலை) எண் 258, உயர் கல்வித் (ஜி1) துறை, நாள் 17-8-2006-ன்படி 16 நிரந்தரப் பணியிடங்களை நியமிக்க அனுமதி வழங்கப்பட்டது. அரசு அனுமதிக்கப்பட்ட 16 பணியிடங்களில் 13 நிரந்தரப் பணியிடங்கள் ஊதியப்பட்டியலின்படி நிரப்பப்பட்டது. மேற்கூறப்பட்டுள்ள அரசாணையின்படி அரசு மானியம் மார்ச் மாதம் 2011 முதல் முடிவடைந்துவிட்டதால், ஊதியம் தருவதற்குப் பதிலாக முன்பணம் கொடுக்கப்பட்டது. நிரந்தரப் பணியில் அமர்த்தப்பட்ட 13 பணியாளர்களுக்கு அரசு ஊதிய விகிதப்படி ஊதியம் எந்த மீதியும் இன்றி ஏப்ரல் 2011 முதல் பல்கலைக்கழக நிதியிலிருந்து கொடுக்கப்பட்டு வருகின்றது. மேலும், இக்கல்லூரியில் மாணவர் சேர்க்கை அதிகமானதாலும், போதிய ஆசிரியர்கள் இல்லாததாலும், 36 ஆசிரியர்கள் தொகுப்பூதிய அடிப்படையில் நிரப்பப்பட்டுள்ளார்கள். அவர்களுக்கு ஊதியம் பல்கலைக்கழக நிதியிலிருந்து வழங்கப்பட்டு வருகின்றது. பல்கலைக்கழக நிதியில் கூடுதல் செலவு ஏற்பட்டதால், அவர்களுக்கு தொகுப்பூதியம் வழங்கப்பட்டு வருகின்றது. தொகுப்பூதிய ஆசிரியர்களை நிரந்தரமாக்க எதிர்வரும் காலங்களில் பல்கலைக்கழக நிதிநிலைமைப் பொறுத்து தேவையின் அடிப்படையில் பரிசீலிக்கப்படும்.*



**49—**

## கருத்தரங்குக் கூடம் மற்றும் மாணவர் வசதி மையம்

**வினா எண் 11710—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழக வளாகத்தில் கருத்தரங்குக் கூடம் மற்றும் மாணவர் வசதி மையம் அமைக்கும் செயற்குறிப்பின் தற்போதைய நிலையினைத் தெரிவிக்க அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:**

*திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழக வளாகத்தில் கருத்தரங்குக் கூடம் மற்றும் மாணவ வசதி மையக் கட்டடம்*

ஆகியவை கட்டி முடிக்கப்பட்டு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் காணொலிக் காட்சிமூலம் 12-2-2014 அன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

**50—**

## விரிவுரைக் கூடம் அமைத்தல்

**வினா எண் 11711—திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழக வளாகத்தில் விரிவுரைக் கூடம் அமைக்கும் செயற்குறிப்பின் தற்போதைய நிலையினைத் தெரிவிக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:**

திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழக வளாகத்தில் விரிவுரைக் கூடம் கட்டப்பட்டு 5-9-2012 அன்று காணொலிக் காட்சி மூலம் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

**51—**

## உடற்பயிற்சிக் கூடம் அமைத்தல்

**வினா எண் 11712— திரு. ரா. சரத்குமார் :** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழக வளாகத்தில் உடற்பயிற்சிக் கூடம் அமைக்கும் செயற்குறிப்பின் தற்போதைய நிலையினைத் தெரிவிக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:**

திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழக வளாகத்தில் உடற்பயிற்சிக் கூடம் மற்றும் குறும அளவிலான உடற்பயிற்சிக் கூடம் ஆகிய கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுவிட்டன.





**52—**

## காலிப் பணியிடங்களை நிரப்புதல்

**வினா எண் 34485—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக காலிப் பணியிடங்களை நிரப்ப அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:**

காலிப் பணியிடங்களை நிரப்புவது குறித்து பல்கலைக்கழக ஆட்சிக் குழுவில் முடிவு செய்யப்படும்.

**53—**

## புதிய குடும்ப அட்டை வழங்குதல்

**வினா எண் 43901—திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் உள்ள குடும்ப அட்டைதாரர்களுக்குப் புதிய குடும்ப அட்டை வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் தற்போது நடைமுறையில் உள்ள குடும்ப அட்டைகளின் செல்லத்தக்க காலம் 31-12-2014 உடன் முடிவடைய உள்ளது. இந்நிலையில் தமிழக அரசு தற்போது நடப்பில் உள்ள குடும்ப அட்டைகளுக்குப் பதிலாக உடற்கூறு முறையிலான பதிவுகளின் அடிப்படையிலான மின்னணு குடும்ப அட்டை (Smart Family Card) வழங்க உத்தேசித்துள்ளது. தேசிய மக்கள் தொகை பதிவு அமைப்பின் கீழ் கணக்கெடுப்பு செயல்பாட்டு இயக்குனரால், மக்களின் விரல் ரேகைகள் மற்றும் கண் கருவிழி பதிவு செய்யப்பட்டு

*பிரத்யேக அடையாள எண் வழங்கும் கணக்கெடுப்புப் பணி நடைபெற்று வருகிறது. இப்பணி முடிவடைந்தவுடன் புதிய குடும்ப அட்டைகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.*

**54—**

## தாது மணல் ஆலை அமைத்தல்

**வினா எண் 43219—திருமதி. எஸ். விஜயதரணி :** *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கடற்கரையோர தாது கனிம வளங்களைப் பிரித்தெடுக்க அரசு தாது மணல் ஆலை தமிழகத்தில் நிறுவ அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் துறை அமைச்சர்:**

*(அ) தமிழ்நாட்டின் தென் மாவட்டங்களான தூத்துக்குடி, கன்னியாகுமரி, திருநெல்வேலி கடற்கரை பகுதிகளில் கடற்கரை தாது மணல்களான கார்னட், இல்மனைட், ரூடைல், சிர்கான், லூக்காசின் மற்றும் மோனசைட் போன்ற கனிமங்கள் கிடைக்கின்றன. கன்னியாகுமரி மாவட்டத்தில் கடற்கரை தாது மணலை எடுத்து கனிமம் வாரியாக பிரித்தெடுக்க மத்திய அரசு நிறுவனமான திருவாளர்கள் இந்திய அருங்கனிம நிறுவனத்திற்கு* (Indian Rare Earths Limited) *விளவங்கோடு வட்டத்தில், மணவாளக்குறிச்சி கிராமத்தில் ஒரு தொழிற்சாலை நிறுவப்பட்டு செயல்பட்டு வருகிறது. மேலும், அகஸ்தீஸ்வரம் வட்டம் அழகப்பாபுரம் கிராமத்தில் தனியார் நிறுவனத்தினரால் கடற்கரை மணலை எடுத்து அருங்கனிமங்களைப் பிரித்தெடுக்கும் தொழிற்சாலை ஒன்றும் நிறுவப்பட்டுள்ளது. ஆகையினால் கடற்கரையோர தாது கனிம வளங்களைப் பிரித்தெடுக்க அரசு தனியாக தாது மணல் ஆலை தமிழகத்தில் நிறுவ தற்போது திட்டம் ஏதும் இல்லை.*

*(ஆ) பதில் எழாது.*



**55—**

## சார்பதிவாளர் அலுவலகத்தைப் புதுப்பித்தல்

**வினா எண் 21372—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி:** *மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சங்கரியில் பழமை வாய்ந்த சார்பதிவாளர் அலுவலகத்தை •பழமை மாறாமல் புதுப்பித்துக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சேலம் (மேற்கு) பதிவு மாவட்டத்தில் உள்ள சங்கரி சார்பதிவாளர் அலுவலகக் கட்டடம், அதன் பழமை மாறாமல் 2009 ஆம் ஆண்டு பராமரிப்புப் பணி மேற்கொள்ளப்பட்டு, அதன் அலுவலக அறையும் விஸ்தரிப்பு செய்து முடிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், அக்கட்டடத்தினை தற்போது மீண்டும் புதுப்பிக்கும் நிலை எழவில்லை.*

**56—**

## புதிய கட்டடம் கட்டுதல்

**வினா எண் 22010—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** *மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) குளச்சல் தொகுதிக்குட்பட்ட இரணியல் மற்றும் குளச்சலில் உள்ள பதிவாளர் அலுவலகங்களுக்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) குளச்சல் தொகுதிக்குட்பட்ட இரணியல் சார்பதிவாளர் அலுவலகத்திற்குப் புதிய அரசுக் கட்டடம் கட்டுவதற்கு நிருவாக அனுமதியும் ரூ.55 இலட்சம் நிதி ஒப்பளிப்பும் செய்து அரசாணை (நிலை) எண் 4, வணிக வரி மற்றும் பதிவுத் (யு2) துறை, நாள் 17-1-2014-ல் ஆணையிடப்பட்டுள்ளது.*

*குளச்சல் சார்பதிவாளர் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவது குறித்து நடப்பு 2014-2015 ஆம் நிதியாண்டில் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளலாம் என அரசு முடிவு செய்துள்ளது.*

**57—**

## கழிவுநீர்க் கால்வாய் அமைத்தல்

**வினா எண் 13576—திரு. சு. ரவி:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் 4-வது வார்டு, நேருஜி நகர், பாரதி தெருவின் ஒரு பகுதியில் மற்றும் 5-வது தெருவிற்கு கழிவுநீர்க் கால்வாய் அமைத்துத் தர அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*(அ) இல்லை.*

*(ஆ) அரக்கோணம் நகராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டம் செயல்பட உள்ளதால் தற்சமயம் கழிவுநீர்க் கால்வாய் அமைக்க இயலாது.*





**58—**

## கழிவுநீர்க் கால்வாயை சீரமைத்தல்

**வினா எண் 13588—திரு. சு. ரவி:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் வார்டு 6, டவுன்ஹால் 4-வது தெரு வடக்குப் பகுதியில் உள்ள கழிவுநீர்க் கால்வாயைச் சீரமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம், வார்டு 6 டவுன்ஹால் 4-வது தெரு வடக்குப் பகுதியில் உள்ள கழிவுநீர்க் கால்வாய் பழுது பார்க்கப்பட்டு நல்ல நிலையில் மக்களின் பயன்பாட்டில் உள்ளது.*

**59—**

## கழிவுநீர்க் கால்வாய் அமைத்தல்

**வினா எண் 14860—திரு. சு. ரவி:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் 21-வது வார்டு, சாமுண்டீஸ்வரி அம்மன் கோவில் பின்புறம், அன்னை சிவகாமி தெருவின் பின்புறம், கிரிசிங் நகர் 6-வது தெருவில் கழிவுநீர்க் கால்வாய் அமைத்துத் தர அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

[2014 டிசம்பர் 5

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) இல்லை. அரக்கோணம் நகராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டம் செயல்பட உள்ளதால் தற்சமயம் கழிவுநீர்க் கால்வாய் பாதாளச் சாக்கடைத் திட்டத்திற்கு முன்பு அமைக்க இயலாது.*

**60—**

### கழிவுநீர்க் கால்வாய் அமைத்தல்

**வினா எண் 16816—திரு. சு. ரவி:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் 8-வது வார்டு, ஜனதா ரைஸ்மில் அருகில், 9-வது வார்டு லட்சுமி நகர், ஜிஜின் நகர், ரங்கப்பன் நகர், கன்னியப்பன் நகர், 14-வது வார்டு, இரயில்வே போலீஸ் லைன் தெருவிற்கும், மாணிக்க முதலி தெருவிற்கும் இடையே கழிவுநீர்க் கால்வாய் அமைக்க அரசு முன் வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) இல்லை. அரக்கோணம் நகராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டம் செயல்பட உள்ளதால் தற்சமயம் கழிவுநீர்க் கால்வாய் பாதாளச் சாக்கடைத் திட்டத்திற்கு முன்பு அமைக்க இயலாது.*



2014 டிசம்பர் 5]

**61—**

### கழிவுநீர்க் கால்வாய் அமைத்தல்

**வினா எண் 21409—திரு. சு. ரவி:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் நகரம், 28-வது வார்டுக்குட்பட்ட புதுக்கோட்டை 2-வது குறுக்கு தெரு, 3-வது தெரு, 36-வது வார்டு, சாய் நகர் 2-வது தெரு, 6-வது வார்டு நேருஜி நகர், வேணுகோபால் நகர் பகுதி மத்தியில் புதியதாக கழிவுநீர்க் கால்வாய் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) இல்லை. அரக்கோணம் நகராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டம் செயல்பட உள்ளதால் தற்சமயம் கழிவுநீர்க் கால்வாய் பாதாளச் சாக்கடைத் திட்டத்திற்கு முன்பு அமைக்க இயலாது.*

**62—**

### வாய்க்கால் அமைத்தல்

**வினா எண் 28978—திரு. கார்த்திக் தொண்டைமான்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) புதுக்கோட்டை நகராட்சி, உசிலங்குளம்-கே.எல்.கே.எஸ். நகர் வரை பெரியார் சாலை வழியாக தண்ணீர் செல்வதற்கு அகலமான வாய்க்கால் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை நகராட்சி, உசிலங்குளம்-கே.எல்.கே.எஸ் நகர் வரை பெரியார் சாலை வழியாக தண்ணீர் செல்வதற்கு அகலமான வாய்க்கால் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் இல்லை.*

**63—**

**குடிநீர் வழங்குதல்**

**வினா எண் 39191—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தென்காசி தொகுதி, ராஜகோபாலபேரி ஊராட்சி, காந்தி நகரில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்மூலம் குடிநீர் வழங்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தென்காசி தொகுதி, ராஜகோபாலபேரி ஊராட்சியைச் சேர்ந்த காந்தி நகர் குடியிருப்பில் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து குழாய் நீட்டிப்பு செய்யப்பட்டு, 4 பொது நல்லிகள்மூலம், கடையநல்லூர்-புளியங்குடி கூட்டுக் குடிநீர்த் திட்டம் வாயிலாக, நாளொன்றுக்கு 6,000 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே 104 மக்கள்தொகை கொண்ட காந்திநகர் குடியிருப்புக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் குடிநீர் போதுமானதாக உள்ளது.*





**64—**

**கால்நடை மருத்துவமனையை நவீனப்படுத்துதல்**

**வினா எண் 18570—திரு. மு. ராஜநாயகம்:** *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) அறந்தாங்கி தொகுதி, ஆவுடையார்கோவில், மீமிசல், ஏம்பல், மணல்மேல்குடியிலுள்ள கால்நடை மருத்துவமனை கிளைகளை நவீனப்படுத்திட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) கால்நடை மருத்துவ சிகிச்சைக்கு போதுமான உபகரணங்கள் ஆவுடையார்கோவில், மீமிசல், ஏம்பல், மணமேல்குடி ஆகிய இடங்களில் உள்ள கால்நடை மருந்தகங்களில் உள்ளதால், இவற்றை நவீனப்படுத்த வேண்டிய வினா எழவில்லை.*

**65—**

**கால்நடை மருத்துவமனை அமைத்தல்**

**வினா எண் 20330—திரு. வீ.பி. நாகைமாலி:** *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*கீழ்வேளூர் தொகுதி, திருப்பூண்டி கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

நாகப்பட்டினம் மாவட்டம், கீழ்வேளூர் தொகுதி, கீழையூர் ஊராட்சி ஒன்றியம், திருப்பூண்டி கிராமத்திற்கு அருகில் கருங்கண்ணி மற்றும் விழுந்தமாவடி ஆகிய இரண்டு கால்நடை மருந்தகங்கள் செயல்படுவதாலும் திருப்பூண்டி மற்றும் அதனைச்

*சுற்றியுள்ள கிராமங்களின் கால்நடை அலகுகள் 5,000-க்கு குறைவாக உள்ளதாலும் (அதாவது 711 அலகுகள்) திருப்பூண்டி கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை. எனவே, விவசாயிகள் அருகில் செயல்படும் கால்நடை நிலையங்களின் சேவையைப் பயன்படுத்திக்கொள்ளலாம்.*

**66—**

## வீட்டிற்கு ஒரு கறவை பசு வளர்க்கும் முறை

**வினா எண் 21594—திரு. ஜேஜி. பிரின்ஸ்:** *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*வீட்டிற்கு ஒரு கறவை பசு வளர்க்கும் முறையைச் செயல்படுத்த அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*தமிழ்நாட்டில் மீண்டும் ஒரு வெண்மைப் புரட்சியை உருவாக்கும் வகையில் "கறவை பசுக்கள் இலவசமாக வழங்கும் திட்டத்தில்" ஊரகப் பகுதிகளில் வாழ்கின்ற 60,000 ஏழைக் குடும்பங்களுக்கு 5 ஆண்டு காலத்தில் ஒவ்வொரு ஆண்டும் 12,000 கலப்பின ஜெர்சி பசுக்கள் இலவசமாக வழங்கும் திட்டத்தில் பெண்களுக்கு அதிகாரமளிப்பதற்காக ஒரு குடும்பத்தில் பெண்தான் பயனாளியாக இருக்க வேண்டுமென்று அரசு முடிவு செய்துள்ளது.*

*எனவே, வீட்டிற்கு ஒரு கறவைப் பசு வளர்க்கும் முறையைச் செயல்படுத்துவது குறித்த திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை. எனினும் அரசு கொள்கை முடிவு எடுக்கும்பொழுது, இதுகுறித்து பரிசீலனை செய்யப்படும்.*

**67—**

## அறுவடை இயந்திரம் வழங்குதல்

**வினா எண் 21603—திரு. கே. உலகநாதன்:** *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*





*திருத்துறைப்பூண்டி தொகுதி, கொருக்கை கால்நடைப் பண்ணைக்கு தீவனப் புல்லை அறுவடை செய்ய அறுவடை இயந்திரம் வழங்க அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*கொருக்கை கால்நடைப் பண்ணையில் சாகுபடி செய்யப்படும் எருமைப் புல்லின் தண்டு மெல்லியதாகவும், உயரம் குறைவாகவும் இருக்கும். ஆகவே அதனை ஆட்கள் கொண்டுதான் எளிதாக அறுவடை செய்ய இயலும். எனவே, அறுவடை இயந்திரத்தின் அவசியம் தற்பொழுது எழவில்லை. இனி வரும் காலங்களில் அறுவடை இயந்திரம் தேவைப்படின் அரசு திட்டங்கள்மூலம் வழங்கிட ஆவன செய்யப்படும்.*

**68—**

## இளைஞர்கள் மாடு, ஆடு அல்லது கோழிப் பண்ணைகள் அமைத்தல்

**வினா எண் 25957—திரு. ம. குணசேகரன்:** *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) படித்த வேலையில்லாத இளைஞர்கள் மாடு, ஆடு அல்லது கோழிப் பண்ணைகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு கால்நடை பராமரிப்புத் துறை கட்டுப்பாட்டின்கீழ் வரும் கால்நடை பண்ணைகளில் இனவிருத்திக்கென தரமிக்க கால்நடைகள் அரசு நிர்ணயித்த விலையில் முன்னுரிமை அடிப்படையில் அனைத்து தரப்பினருக்கும் வழங்கப்பட்டு வருகிறது. இதனைப் பயன்படுத்தி வேலையில்லாத இளைஞர்கள் தாங்கள் பண்ணை அமைக்கத்*

தேவையான கால்நடைகளை விதிமுறைகளுக்கு உட்பட்டு பெற்றுக் கொள்ளலாம். கோழிப் பண்ணை அமைக்க அனைத்து தரப்பினருக்கும் சிறப்பு கோழி வளர்ப்புத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகிறது.

**69—**

## கால்நடை கிளை மருத்துவமனை

**வினா எண் 29585—திரு. கு. லிங்கமுத்து:** *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) குடியாத்தம் தொகுதி, பேராணாம்பட்டு ஒன்றியம் அரவட்லாமலை கிராமத்தில் கால்நடைக் கிளை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*(அ) வேலூர் மாவட்டம், பேராணாம்பட்டு ஒன்றியம், அரவட்லாமலைப் பகுதியில் ஒரு கால்நடை மருந்தகம் செயல்பட்டு வருகிறது*

*(ஆ) கேள்வி எழாது*

**70—**

## கால்நடைக் கிளை நிலையங்கள் அமைத்தல்

**வினா எண் 32464—திரு. சி. சண்முகவேலு:** *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மடத்துக்குளம் தொகுதி, உடுமலைப்பேட்டை வட்டம், உடுக்கம்பாளையம், கண்டக்காம்பாளையம், அம்மாபட்டி, ஜல்லிப்பட்டி ஆகிய இடங்களில் கால்நடைக் கிளை நிலையங்கள் அமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*



**விடை—**

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) மடத்துக்குளம் தொகுதி, உடுமலைப்பேட்டை வட்டம், உடுக்கம்பாளையத்தில் ஏற்கெனவே ஒரு கால்நடைக் கிளை நிலையம் செயல்பட்டு வருகிறது. ஜல்லிப்பட்டியில் ஏற்கெனவே ஒரு ஊரகக் கால்நடை மருந்தகம் செயல்பட்டு வருகிறது. எனவே, கண்டக்காம்பாளையம் மற்றும் அம்மாபட்டி ஆகிய இடங்களில் கிளை நிலையம் துவக்க சாத்தியக் கூறுகள் இல்லை.*

**71—**

## கால்நடைக் கிளை மருந்தகம் அமைத்தல்

**வினா எண் 35983—திரு. கு. லிங்கமுத்து:** *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) குடியாத்தம் தொகுதி, எர்தாங்கல் ஊராட்சியில் கால்நடைக் கிளை மருந்தகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*(அ) குடியாத்தம் தொகுதி, எர்தாங்கல் ஊராட்சிக்கு அருகில் அக்ரஹாரம் மற்றும் கல்லப்பாடியில் கால்நடை மருந்தகங்கள் செயல்பட்டு வருவதாலும், எர்தாங்கல் மற்றும் அதனைச் சுற்றியுள்ள கால்நடை அலகுகள் 3,000-க்கும் குறைவாக உள்ளதால், அங்கு கால்நடைக் கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை. விவசாயிகள் தங்கள் கால்நடைகளுக்கு அருகில் உள்ள கால்நடை நிலையங்களின் சேவையைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.*

*(ஆ) கேள்வி எழாது.*

**72—**

**கால்நடை மருத்துவமனையை விரிவுபடுத்துதல்**

**வினா எண் 36217—திரு. மு.வீ. கருப்பையா:** *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சோழவந்தான் தொகுதி, பாலமேட்டிலுள்ள கால்நடை மருத்துவமனையை விரிவுபடுத்த அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம், சோழவந்தான் தொகுதி, பாலமேட்டில் அரசாணை (நிலை) எண் 1815, விவசாயத் துறை, நாள் 7-12-1974-ன்படி ஏற்கெனவே கால்நடை மருந்தகம் 7-1-1975 முதல் செயல்பட்டு வருகிறது. எனவே, பாலமேட்டிலுள்ள கால்நடை மருந்தகத்தை விரிவுப்படுத்த தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை. இருப்பினும், வரும் ஆண்டுகளில் கால்நடை மருந்தகத்தை கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்தும் திட்டம் இடம் பெறும் பொழுது தகுதியின் அடிப்படையில், மேற்காணும் கால்நடை மருந்தகம் கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்படும்.*

**73—**

**ஊதிய முரண்பாட்டை நீக்குதல்**

**வினா எண் 37089—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*கால்நடை ஆய்வாளர் மற்றும் முதுநிலை கால்நடை மருத்துவ மேற்பார்வையாளர்கள் ஊதியத்திலுள்ள முரண்பாட்டை நீக்க அரசு முன்வருமா?*





**விடை—**

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*ஆறாவது ஊதியக் குழு அரசாணை எண் 234, நிதி (ஊ.கு.) துறை, நாள் 1-6-2009-ன்படி கால்நடை ஆய்வாளர் மற்றும் முதுநிலை கால்நடை மேற்பார்வையாளர் பதவிகளின் ஊதியம் / ஊதியக்கட்டு திருத்தியமைத்து அரசாணை வெளியிடப்பட்டது. அதன் பின்னர் மேற்படி ஊதியக் குழு மீதான ஒருநபர் குழு பரிந்துரையிலும் இரு பதவிகளின் ஊதிய விகிதம் / ஊதியத்தில் மாற்றம் ஏதும் வெளியிடப்படவில்லை. எனவே, தற்சமயம் கால்நடை ஆய்வாளர் மற்றும் முதுநிலை கால்நடை மேற்பார்வையாளர் ஊதியத்திலுள்ள முரண்பாட்டை நீக்க அரசிடம் செயற்குறிப்பு ஏதும் நிலுவையில் இல்லை.*

**74—**

**வெள்ளைக் கழிச்சல் நோயை தடுத்தல்**

**வினா எண் 41525—திரு. ம. குணசேகரன்:** *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கோழிகளைத் தாக்கும் வெள்ளைக் கழிச்சல் நோயைத் தடுக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்*

*(ஆ) கோழிகளை வெள்ளைக் கழிச்சல் நோயிலிருந்து பாதுகாக்க தமிழக அரசு கால்நடை பராமரிப்புத் துறையின்மூலம் கீழ்க்காணும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.*

*(1) அனைத்து கால்நடை மருந்தகங்களிலும் வாரந்தோறும் கோழிக் கழிச்சல் தடுப்பூசிப் போடப்பட்டு வருகிறது.*

*(2) ஒவ்வொரு ஆண்டும் கோழிகளை இக்கொடிய நோய்களிலிருந்து பாதுகாக்கும்பொருட்டு சிறப்பு கோழிக் கழிச்சல் இருவாரம் முகாம் அமைத்து, தடுப்பூசி போடப்பட்டு வருகிறது.*

*(3) கால்நடை பாதுகாப்புத் திட்ட முகாம்களிலும் இத்தடுப்பூசி போடப்பட்டு வருகின்றது.*

**75—**

## கால்நடைக் கிளை நிலையங்கள் அமைத்தல்

**வினா எண் 42420—திரு. சு. ரவி:** *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கிராமந்தோறும் கால்நடைக் கிளை நிலையங்கள் அமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*(அ) கிராமந்தோறும் கால்நடைக் கிளை நிலையங்கள் அமைக்க சாத்தியக் கூறுகள் இல்லை*

*(ஆ) கேள்வி எழாது.*

**76—**

## விலையில்லா மாடுகள் வழங்குதல்

**வினா எண் 44375—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தமிழகத்தில் கோமாரி நோயால் மாடுகளை இழந்தவர்களுக்கு விலையில்லா மாடுகள் வழங்க அரசு முன்வருமா?*



**விடை—**

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*கோமாரி நோயினால் மாடுகளை இழந்தவர்களுக்கு விலையில்லா மாடுகள் வழங்குதல் அரசின் கொள்கை முடிவுக்கு உட்பட்டதாகும்.*

**77—**

## நகர்ப்புறங்களில் விலையில்லா ஆடு, மாடு திட்டம்

**வினா எண் 46992—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா:—*

*விலையில்லா ஆடு, மாடு வழங்கும் திட்டத்தை நகர்ப்புறங்களிலும் செயல்படுத்த அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*ஊரகப் பகுதிகளில் வாழும் வறிய நிலையிலுள்ள ஏழைகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும்பொருட்டு இலவசமாக வெள்ளாடுகள்/செம்மறி ஆடுகள் வழங்கும் திட்டத்தின்மூலம் ஊரகப் பகுதிகளில் வசித்து வரும் நிலமற்ற 7 இலட்சம் ஏழை எளிய குடும்பங்களுக்கு இலவசமாக 4 வெள்ளாடுகள்/செம்மறி ஆடுகள் 5 ஆண்டுகளில் வழங்க அரசு முடிவு செய்துள்ளது.*

*இதனைத் தொடர்ந்து, 2011-2012, 2012-2013 மற்றும் 2013-2014 ஆண்டுகளில் இதுவரை 4,00,000 பயனாளிகளுக்கு இலவசமாக 16 இலட்சம் வெள்ளாடுகள் / செம்மறி ஆடுகள், இலவச வெள்ளாடுகள் / செம்மறி ஆடுகள் வழங்கும் திட்டத்தில் வழங்கப்பட்டுள்ளது.*

*இதே போன்று ஊரகப் பகுதிகளில் வாழ்கின்ற 60,000 ஏழைக் குடும்பங்களுக்கு 5 ஆண்டு காலத்தில் ஒவ்வொரு ஆண்டும் இலவசமாக 12,000 கலப்பின ஜெர்சி பசுக்கள், இலவச கறவைப்*

பசுக்கள் வழங்கும் திட்டத்தில் வழங்கவும் அரசு முடிவு செய்துள்ளது.

இதனைத் தொடர்ந்து 2011-2012, 2012-2013 மற்றும் 2013-2014 ஆண்டுகளில் இதுவரை 36,000 பயனாளிகளுக்கு இலவசமாக 36,000 கறவைப் பசுக்கள், இலவச கறவைப் பசுக்கள் வழங்கும் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்டுள்ளது.

கிராமப்புறத்தில் கறவைப் பசு மற்றும் வெள்ளாடுகள் / செம்மறி ஆடுகளுக்குத் தேவையான பசுந்தீவனம் கிடைக்கும். நகர்ப்புறங்களில் பசுந்தீவனம் கிடைக்கும் வாய்ப்பு மிகவும் குறைவு. விளை நிலங்களும் இல்லை.

எனவே இலவச வெள்ளாடுகள் / செம்மறி ஆடுகள் மற்றும் கறவைப் பசுக்கள் வழங்கும் திட்டங்கள் மூலமாக தமிழக அரசு மக்களுக்கு வழங்கும் ஆடு, மாடுகளை நகர்ப்புறங்களில் வழங்குவது குறித்து தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**78—**

## கழிப்பறை வசதி ஏற்படுத்துதல்

**வினா எண் 29271—திரு. சு. ரவி:** மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, காவேரிப்பாக்கம் ஒன்றியம், கைனூர் ஆதி திராவிடர் நலப் பள்ளியில் ஆசிரியர், ஆசிரியைகளுக்கும், மாணவ, மாணவியர்களுக்கும் தனித் தனியே கழிப்பறை வசதி ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, காவேரிப்பாக்கம் ஒன்றியம், கைனூர் ஆதி திராவிடர் நல தொடக்கப் பள்ளியில் ஆசிரியர், ஆசிரியை, மாணவர், மாணவியர்களுக்கென





தனித் தனி கழிப்பறை வசதி ஏற்படுத்த அரசாணை (நிலை) எண் 5, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதி ந.2) துறை, நாள் 9-1-2012-ன்படி தாட்கோமூலம் மதிப்பீட்டுத் தொகை ரூபாய் 5.00 இலட்சத்தில், உடன்படிக்கை தொகை ரூ.4.04 இலட்சம், மதிப்பீடு ஒப்புதல் 27-1-2012 அன்று பெறப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி 30-1-2012 அன்று பெற்று பணி ஆணை 3-5-2012 அன்று வழங்கப்பட்டு, இப்பணி 29-10-2012 தொடங்கப்பட்டு 28-2-2013 அன்று முடிவுற்றது.

**79—**

## நாட்டு மீன்களைப் பாதுகாத்தல்

**வினா எண் 17652—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அழிந்து வரும் நாட்டு மீன்களைப் பாதுகாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால், மீன் வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கெண்டை மீன் வகையான கட்லா, ரோகு, மிர்கால், சாதாக் கெண்டை, புல் கெண்டை, சேல் கெண்டை போன்ற மீன்களை இனப்பெருக்கத்தின்மூலம் மீன்குஞ்சு உற்பத்தியினைப் பெருக்கிட தமிழ்நாடு அரசு மீன்விதைப் பண்ணைகள் அமைக்கப்பட்டு மீன்குஞ்சு உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. அரசு மீன் விதைப் பண்ணைகள் பின்வரும் இடங்களில் அமைந்துள்ளன:

1. மணிமுத்தாறு-திருநெல்வேலி மாவட்டம்
2. கரந்தை-தஞ்சாவூர் மாவட்டம்
3. மேட்டூர்-சேலம் மாவட்டம்

[2014 டிசம்பர் 5

*4. பவானிசாகர்-ஈரோடு மாவட்டம்*

*5. சாத்தனூர்-திருவண்ணாமலை மாவட்டம்*

*மேலும், இப்பண்ணைகளில் உற்பத்தி செய்யப்படும் நுண்மீன்குஞ்சுகளைப் பெற்று தனியார் மற்றும் மீன் வளர்ப்போர் பயனடைந்துள்ளனர். மேலும், தமிழக அரசின் 28 மீன்குஞ்சு வளர்ப்புப் பண்ணைகள், பூண்டி மோர்தானா, மேட்டூர், பவானிசாகர், மஞ்சளார், வைகை அணை, சாத்தியார், தட்டாமனைப்பட்டி மற்றும் திருக்காம்புலியூர் போன்ற ஊர்களில் செயல்பட்டு வருகின்றன. அப்பண்ணைகளில் நுண்மீன்குஞ்சுகள், விரலிகளாக வளர்க்கப்பட்டு விநியோகிக்கப்படுவதால் மீன் வளர்ப்போர்/தனியார் மீன் பண்ணை உரிமையாளர்கள்/ கண்மாய்களை ஏலம் எடுத்து மீன் வளர்ப்போர் ஆகியோர் பயனடைந்து வருகிறார்கள். இவை மட்டுமல்லாது தமிழக அரசு மீன் வளத் துறையால், தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் தனியார், விவசாயிகள், படித்த இளைஞர்கள் பயன்பெறும் வகையில் 20 மீன்குஞ்சு உற்பத்தி நிலையங்களை விழுப்புரம், கடலூர், தஞ்சாவூர் மற்றும் மதுரை போன்ற மாவட்டங்களில் அமைத்திட தனியாருக்கு 50% மானியத்துடன் கூடிய 70 மீன்குஞ்சு பண்ணைகள் தனியாரால் தொடங்கப்பட்டு மீன்குஞ்சு வளர்ப்புப் பணி மேற்கொண்டதில் அனைத்துத் தரப்பு மீன் வளர்ப்போரும் பயனடைந்து வருகிறார்கள். பல்வகை மீன்களில் இனப்பெருக்கம் செய்து மீன்குஞ்சு உற்பத்தியினைப் பெருக்கிட மீன் உற்பத்தி பண்ணை ஒன்று தமிழ்நாடு நீர்வள, நிலவளத் திட்டத்தின்கீழ் கிருஷ்ணகிரியில் தற்போது அமைக்கப்பட்டு வருகிறது. மேலும், பூண்டியில் மேம்படுத்தப்பட்ட சாதாக் கெண்டை மீன்களை உற்பத்தி செய்திடும் வகையில் ஒரு மீன்குஞ்சு உற்பத்தி பண்ணையும் நீர்வள, நிலவளத் திட்டத்தின் மூலம் கட்டப்பட்டு வருகிறது. எனவே, தமிழக அரசு மீன்குஞ்சு உற்பத்தியில் தன்னிறைவினை எட்டிடும் வகையிலும், மீன் உற்பத்தியினை பன்மடங்கு பெருக்கிடும் வகையிலும் அனைத்து மீன் வளர்ப்போர் பயன்பெறகூடிய வகையிலும் தற்போது மீன்குஞ்சுகளின் உற்பத்தியினைப் பெருக்கி வருகிறது. இதனால் அழிந்துவரும் நாட்டு மீன் வகைகள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.*



2014 டிசம்பர் 5]

**80—**

## பண்ணைக் குட்டைகள் அமைத்தல்

**வினா எண் 30395—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தமிழ்நாட்டில் டெல்டா மாவட்டங்களில் பண்ணைக் குட்டைகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால், மீன் வளத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் டெல்டா மாவட்டங்களில் ஊரக வளர்ச்சித் துறையின்மூலம் மழைநீர் சேமிப்புக்காக வெட்டப்பட்டுள்ள பண்ணைக் குட்டைகளில் தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின்* (NADP) *கீழ் நிதி ஒதுக்கீடு ரூ.3.118 கோடி செய்யப்பட்டு பயனாளிகளுக்கு மீன்குஞ்சு, மீன் தீவனம் 50% மானிய அடிப்படையில் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், சம்பந்தப்பட்ட பயனாளிகளுக்கு மீன் வளர்ப்பதற்கு பயிற்சியும் அளிக்கப்படுகிறது. இதுவரை 2,490 பண்ணைக் குட்டைகளில் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. எனவே, தமிழக அரசு பண்ணைக் குட்டைகளில் மீன் வளர்ப்போர் பயன்படக்கூடிய வகையிலும், மீன் உற்பத்தியினை பன்மடங்கு பெருக்கிடும் வகையிலும் மானியம் வழங்கி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.*

**81—**

## பெரிய குட்டை பகுதியை சமன் செய்தல்

**வினா எண் 30837—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சென்னை கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கும், சேத்துப்பட்டு இரயில்*

*நிலையத்திற்கும் இடையே உள்ள பெரிய குட்டை பகுதியை சமன் செய்து மருத்துவமனைக்குப் பயன்படுத்திக்கொள்ள அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால், மீன் வளத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சென்னை கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கும், சேத்துப்பட்டு இரயில் நிலையத்திற்கும் இடையே உள்ள சேத்துப்பட்டு ஏரியினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டசபையில் அறிவித்தவாறு ரூ.42.00 கோடி செலவில் மேம்படுத்தி அங்கு பொழுதுபோக்கு அம்சங்களான தூண்டில் மீன்பிடிப்பு மற்றும் பசுமைப் பூங்கா* (Sports Fishing Cum Eco-park) *அமைத்திட மீன் வளத் துறையின் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எனவே, இக்குளத்தினை சமன் செய்து மருத்துவமனைப் பணிகளுக்குப் பயன்படுத்த இயலாது.*

**82—**

**கண்மாய் மீன்கள் வளர்ப்பு**

**வினா எண் 37497—திரு. ம. குணசேகரன்:** *மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கண்மாய் மீன்களான அயிரை, கெளுத்தி, கெண்டை போன்ற மீன்களை வளர்க்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால், மீன் வளத் துறை அமைச்சர்:**

*(அ) கெளுத்தி மீன்வகையில் ஒன்றான 'பங்காசியஸ்'* (Pangasius) *என்ற இனம் பூண்டி ஏரியிலும் மற்றும் மேட்டூர் அணையிலும் மீன் கூடுகள் அமைத்து வளர்க்கப்பட்டு வருகிறது. மேலும்,*





*கெளுத்தி மீன்வகையில் ஒன்றான* 'Magur' *என்ற வகையின் மீன்குஞ்சு பொறிப்பகம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. 'பங்காசியஸ்' வகை மீன்களை அதிக அளவில் மீன்கூடுகள் அமைத்தும், பண்ணைக் குட்டைகளிலும் வளர்த்திட மீன் வளத் துறையால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கெண்டை மீன் வகைகளான கட்லா, ரோகு, மிர்கால், சாதாக் கெண்டை, புல் கெண்டை, சேல் கெண்டை போன்ற மீன்களை இனப்பெருக்கத்தின்மூலம் மீன்குஞ்சு உற்பத்தியினை பெருக்கிட தமிழ்நாடு அரசால் மீன் விதைப் பண்ணைகள் அமைக்கப்பட்டு மீன்குஞ்சு உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. அரசு மீன் விதைப் பண்ணைகள் அமைந்துள்ள இடங்கள் பின்வருமாறு:*

1. *மணிமுத்தாறு-திருநெல்வேலி மாவட்டம்*
2. *கரந்தை-தஞ்சாவூர் மாவட்டம்*
3. *மேட்டூர்-சேலம் மாவட்டம்*
4. *பவானிசாகர்-ஈரோடு மாவட்டம்*
5. *சாத்தனூர்-திருவண்ணாமலை மாவட்டம்*

*இப்பண்ணைகளில் உற்பத்தி செய்யப்படும் நுண்மீன்குஞ்சுகளைப் பெற்று தனியார் மற்றும் மீன் வளர்ப்போர் பயனடைந்துள்ளர். மேலும், தமிழக அரசின் 28 மீன்குஞ்சு வளர்ப்புப் பண்ணைகள், பூண்டி மோர்தானா, மேட்டூர், பவானிசாகர், மஞ்சளார், வைகை அணை, சாத்தியார், தட்டாமனைப்பட்டி மற்றும் திருக்காம்புலியூர் போன்ற ஊர்களில் செயல்படுகையில் அப்பண்ணைகளில் நுண்மீன்குஞ்சுகள், விரலிகளாக வளர்க்கப்பட்டு விநியோகிக்கப்படுகையில் மீன் வளர்ப்போர்/தனியார் மீன் பண்ணை உரிமையாளர்கள்/ கண்மாய்களை ஏலம் எடுத்து மீன் வளர்ப்போர் போன்றவர்கள் பயனடைந்து வருகிறார்கள். இவை மட்டுமல்லாது தமிழக அரசு மீன் வளத் துறையால், தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் தனியார், விவசாயிகள், படித்த இளைஞர்கள் பயன் பெறும் வகையில் 20 மீன்குஞ்சு உற்பத்தி நிலையங்களை விழுப்புரம், கடலூர், தஞ்சாவூர் மற்றும் மதுரை போன்ற மாவட்டங்களில் அமைத்திட தனியாருக்கு 50 சதவீத மானியத் தொகையினை*

வழங்கியதில் அவ்வாறு அமைக்கப்பட்ட மீன் பண்ணைகளில் கெண்டை மீன்குஞ்சு உற்பத்தி மற்றும் மீன்விரலிகள் வளர்ப்பு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவைத்தவிர தமிழக அரசின் 50 சதவீத மானியத்துடன்கூடிய 70 மீன்குஞ்சு பண்ணைகள் தனியாரால் தொடங்கப்பட்டு மீன்குஞ்சு வளர்ப்பு பணி மேற்கொண்டதில் அனைத்து தரப்பு மீன் வளர்ப்போரும் பயனடைந்து வருகிறார்கள்.

தமிழகத்தில் 2013-2014 ஆம் ஆண்டில் தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட பல்நோக்கு பண்ணைக் குட்டைகளில் மீன் வளத் துறையின்மூலம் விவசாயிகளுக்கு மானிய விலையில் மீன்குஞ்சுகள் இருப்பு செய்தும், மீன் தீவனம் வழங்கியும் மீன் வளர்க்க பயிற்சியும் அளிக்கப்பட்டது. மேலும், அயிரை மீன்களை வணிக ரீதியில் பெருமளவில் வளர்க்க, தொழில் நுட்பம் ஏதும் இல்லாததால் தற்போது அயிரை மீன்களை வணிக ரீதியில் வளர்ப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) எழாது

**83—**

## மீனவர் பஞ்சப் படியை உயர்த்தி வழங்குதல்

**வினா எண் 39941—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மீன்பிடித் தடைக் காலங்களில் மீனவர்களுக்கு வழங்கப்படும் பஞ்சப் படித் தொகையை உயர்த்தி வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால், மீன் வளத் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு கடல் மீன்பிடிப்பு ஒழுங்குபடுத்தும் சட்டம் 1983-ன்கீழ் தமிழகத்தின் கிழக்கு மற்றும் மேற்கு கடல் பகுதிகளில் மீன் இனப்பெருக்கக் காலத்தை கருத்தில் கொண்டு, தமிழ்நாடு கடல் மீன்பிடிப்பு ஒழுங்குபடுத்தும் சட்டம், 1983-ன்கீழ்



அறிவிக்கை வெளியிடப்பட்டு விசைப்படகுகள் மற்றும் இழுவைப்படகுகள் கொண்டு 2001 ஆம் ஆண்டு முதல் பின்வரும் 45 நாட்களுக்கு கடலில் மீன்பிடிப்பதற்கு ஆண்டுதோறும் தடை விதிக்கப்பட்டு வருகிறது:

| | | | |
|---|---|---|---|
| 1. | கிழக்குக் கடற்கரை (திருவள்ளூர் மாவட்டம் முதல் கன்னியாகுமரி மாவட்டம், கன்னியாகுமரி நகரம் வரை) | : | மீன்பிடித் தடைக் காலம் ஏப்ரல் 15 முதல் மே 29 வரை (இரண்டு நாட்களும் உட்பட) |
| 2. | மேற்குக் கடற்கரை (கன்னியாகுமரி மாவட்டம். கன்னியாகுமரி நகரம் முதல் நீரோடி வரை) | : | மீன்பிடித் தடைக் காலம் ஜூன் 15 முதல் ஜூலை 29 வரை (இரண்டு நாட்களும் உட்பட) |

மேற்கூறிய 45 நாட்கள் மீன்பிடித் தடைக் காலத்தில் மீன்பிடி விசைப்படகுகள் / இழுவலைப்படகுகளில் மீன்பிடிப்பு செய்யும் பணியாளர்கள் மற்றும் மீன்பிடிப்பினை சார்ந்த மீனவக் குடும்பங்கள் மீன்பிடிப்பின்றி துயருக்குள்ளாவதை கருத்தில் கொண்டு, மீன்வர்களின் வாழ்வாதாரத்திற்கு உதவிடும்பொருட்டு குடும்ப உணவு பங்கீட்டு அட்டை வைத்துள்ள கடல் மீனவ குடும்பங்களுக்கு மீன்பிடித் தடைக் காலத்தில் நிவாரண உதவி வழங்கப்படுகிறது.

2008 ஆம் ஆண்டு மீன்பிடித் தடைக் காலத்தின் போது இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் ரூ.500/-ம் 2010 ஆம் ஆண்டு ரூ.800/-ம் நிவாரணத் தொகையாக வழங்கப்பட்டது. இந்நிவாரணத் தொகை கடந்த 2011 ஆம் ஆண்டு முதல் ரூ.2000/- ஆக உயர்த்தி தடைக் கால நிவாரணம் வழங்கப்பட்டு வருகிறது.

எனவே, மீன்பிடித் தடைக் காலத்தின்போது மீனவர்களுக்கு வழங்கப்படும் பஞ்சப்படித் தொகையை மேலும் உயர்த்தி வழங்குவது குறித்த கருத்துரு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**84—**

## நிவாரணத் தொகை உயர்த்துதல்

**வினா எண் 42964—திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் மீன்பிடித் தடைக் காலங்களில் மீனவர்களுக்கு வழங்கப்படும் நிவாரணத் தொகை ரூ.10,000/- ஆக உயர்த்தி வழங்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால், மீன் வளத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு கடல் மீன்பிடிப்பு ஒழுங்குபடுத்தும் சட்டம், 1983-ன்கீழ், தமிழகத்தின் கிழக்கு மற்றும் மேற்குக் கடல் பகுதிகளில் மீன் இனப்பெருக்க காலத்தை கருத்தில் கொண்டு, தமிழ்நாடு கடல் மீன்பிடிப்பு ஒழுங்குபடுத்தும் சட்டம் 1983-ன் கீழ் அறிவிக்கை வெளியிடப்பட்டு விசைப்படகுகள் மற்றும் இழுவைப்படகுகள் கொண்டு 2001 ஆம் ஆண்டு முதல் பின்வரும் 45 நாட்களுக்கு கடலில் மீன்பிடிப்பதற்கு ஆண்டுதோறும் தடை விதிக்கப்பட்டு வருகிறது:*

| | | | |
|---|---|---|---|
| 1. | கிழக்குக் கடற்கரை (திருவள்ளூர் மாவட்டம் முதல் கன்னியாகுமரி மாவட்டம், கன்னியாகுமரி நகரம் வரை) | : | மீன்பிடித் தடைக் காலம் ஏப்ரல் 15 முதல் மே 29 வரை (இரண்டு நாட்களும் உட்பட) |
| 2. | மேற்குக் கடற்கரை (கன்னியாகுமரி மாவட்டம், கன்னியாகுமரி நகரம் முதல் நீரோடி வரை) | : | மீன்பிடித் தடைக் காலம் ஜூன் 15 முதல் ஜூலை 29 வரை (இரண்டு நாட்களும் உட்பட) |

*மேற்கூறிய 45 நாட்கள் மீன்பிடித் தடைக் காலத்தில் மீன்பிடி விசைப்படகுகள் / இழுவலைப்படகுகளில் மீன்பிடிப்பு செய்யும் பணியாளர்கள் மற்றும் மீன்பிடிப்பினைச் சார்ந்த மீனவ*



*குடும்பங்கள் மீன்பிடிப்பின்றி துயருக்குள்ளாவதைக் கருத்தில் கொண்டு, மீனவர்களின் வாழ்வாதாரத்திற்கு உதவிடும் பொருட்டு குடும்ப உணவுப் பங்கீட்டு அட்டை வைத்துள்ள கடல் மீனவ குடும்பங்களுக்கு மீன்பிடித் தடைக் காலத்தில் நிவாரண உதவி வழங்கப்படுகிறது.*

*2008 ஆம் ஆண்டு மீன்பிடித் தடைக் காலத்தின் போது இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் ரூ. 500/-ம் 2010 ஆம் ஆண்டு ரூ. 800/-ம் நிவாரணத் தொகையாக வழங்கப்பட்டது. இந்நிவாரணத் தொகை கடந்த 2011 ஆம் ஆண்டு முதல் ரூ.2,000/-ஆக உயர்த்தி தடைக் கால நிவாரணம் வழங்கப்பட்டு வருகிறது.*

*எனவே, கன்னியாகுமரி மாவட்டத்தில் மீன்பிடித் தடைக் காலத்தின் போது மீனவர்களுக்கு வழங்கப்படும் பஞ்சப்படி தொகையை மேலும் உயர்த்தி வழங்குவது குறித்த கருத்துரு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.*

**85—**

## மத்தி மற்றும் நாவல் மரங்களை வளர்த்தல்

**வினா எண் 7852—திரு. ந. நஞ்சப்பன்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*தருமபுரி மாவட்டத்தில் காவிரியாறு மற்றும் சின்னாறு இரு கரைகளிலும் ஓங்கி உயர்ந்து வளரும் மத்தி மற்றும் நாவல் மரங்களை இரு ஆற்றங்கரைகளிலும் நட்டு வளர்க்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், வனத் துறை அமைச்சர்:**

*தருமபுரி மாவட்டத்தில் காவிரியாறு மற்றும் சின்னாறு இரு கரைகளிலும் உயர்ந்து வளரும் மத்தி மற்றும் நாவல் மரங்களை நட்டு வளர்க்கும் செயற்குறிப்பு அரசிடம் ஏதுமில்லை.*

[2014 டிசம்பர் 5

**86—**

## இலவச மரக்கன்றுகள் வழங்குதல்

**வினா எண் 16543—திரு. ம. குணசேகரன்:** *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மானாமதுரை தொகுதியில் விவசாயிகளுக்கு மா, பலா, கொய்யா, நார்த்தை, வேம்பு, தேக்கு, வேங்கை, நெல்லி, தென்னை போன்ற மரக்கன்றுகளை இலவசமாக வழங்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், வனத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) வனத் துறையின்மூலம் வேம்பு, தேக்கு, வேங்கை போன்ற மரக்கன்றுகள் உற்பத்தி செய்து, இலவச விநியோகத் திட்டத்தின்கீழ் வழங்கப்படுகின்றன. வனத் துறைமூலம் மரப்பயிர்கள் நடவு செய்யப்படுகின்றன. மா, பலா, கொய்யா, நார்த்தை போன்ற தோட்டக்கலைப் பயிர்கள்* (horticultural species), *தோட்டக்கலைத் துறைமூலம் நடவு செய்யப்படுகின்றன. தென்னை மரக்கன்றுகள் விவசாயத் துறைமூலம் வழங்கப்படுகின்றன.*

**87—**

## சந்தன மரங்கள் வளர்த்தல்

**வினா எண் 21540—திரு. சு. மாதேஸ்வரன்:** *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஆத்தூர் தொகுதி, கல்லூர் மலைப் பகுதிகளில் சந்தன மரங்கள் வளர்க்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*



2014 டிசம்பர் 5]

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், வனத் துறை அமைச்சர்:**

*(அ) தமிழ்நாட்டில் நல்ல தரம் வாய்ந்த சந்தன மரங்கள் இயற்கையாக கிழக்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகளில் வேலூர், திருவண்ணாமலை மாவட்ட ஜவ்வாது மலைப் பகுதிகளிலும், தருமபுரி மாவட்டத்தில் சித்தேரி மலைப் பகுதிகளிலும், சேலம் மாவட்டத்தில் சேர்வராயன், போத மலைப் பகுதிகளிலும், நாமக்கல் மாவட்டத்தில் கொல்லிமலைப் பகுதிகளிலும், திருச்சி மாவட்டத்தில் பச்சைமலைப் பகுதிகளிலும், ஈரோடு மாவட்டத்தின் வனப் பகுதிகளிலும் வளர்கின்றன.*

*சந்தன மரம் இயற்கையாக வளர வாய்ப்புள்ள வனப் பகுதிகளைக் கண்டறிந்து, அவ்வாறான இடங்களிலும் நாற்றங்காலில் வளர்க்கப்பட்ட சந்தன மரக்கன்றுகளை உரிய இடைவெளியில் நட்டு அதன்மூலம் செயற்கை முறையில் மறு உற்பத்தி மேற்கொள்ள வனத் துறையில் பல மாவட்டங்களில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அவ்வாறு நடும்போது, சந்தன மரக்கன்றுகள் சார்ந்து வளரக்கூடிய வகையில் பொன்னாவரை, துவரை, சவுக்கு போன்ற தாவரங்களும் பாலித்தீன் பைகளில் வளர்க்கப்பட்டு பின்னர் களத்தில் நடப்பட்டன. இம்முறையில், பல்வேறு வனப் பகுதிகளில், செயற்கையாக எழுப்பப்பட்ட சந்தன மரத் தோட்டங்கள், பொதுவாக பெருமளவில் வெற்றி அடையவில்லை.*

*எனவே, ஆத்தூர் தொகுதி, கல்லூர் மலைப் பகுதி, ஈரோடு வன மண்டலத்திலுள்ள ஈரோடு, சத்தியமங்கலம், நாமக்கல் ஆகிய வனக் கோட்டங்கள் மற்றும் கோபி மூங்கில் தோட்ட கோட்டத்திலும் சந்தன மரங்கள் வளர்த்தல் தொடர்பாக எவ்வித ஆய்வுப் பணிகளும் தற்போது மேற்கொள்ளப்படவில்லை. மேலும் சந்தன மரத் தோட்டங்கள் ஏதும் கடந்த 10 ஆண்டுகளில் வளர்க்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை.*

*எனினும், சத்தியமங்கலம் வனக் கோட்டத்தில் சந்தன மரத் தோட்ட திட்டத்தின்கீழ் 7 சந்தன மர டெண்டிங் காவலர்கள் நியமனம் செய்யப்பட்டு இக்காவலர்கள்மூலம் இயற்கையாக வளர்ந்துள்ள சந்தன மரக் கன்றுகளுக்கு டெண்டிங் செய்யும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.*

*(ஆ) வினா எழவில்லை.*

[2014 டிசம்பர் 5

**88—**

**மரங்களைப் பாதுகாத்தல்**

**வினா எண் 25686—திரு. ம. குணசேகரன்:** *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) வாடல் நோயிலிருந்து மரங்களைப் பாதுகாக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், வனத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) வாடல் நோயால் தாக்கப்பட்ட மரங்களை மருந்தினால் முற்றிலுமாக குணப்படுத்த வாய்ப்பில்லை. ஆனால், கீழ்க்காணும் தடுப்பு முறைகளைப் பின்பற்றி, பல்வேறு காரணங்களால் ஏற்படும் வாடல் நோயிலிருந்து மரங்களைப் பாதுகாக்கலாம்:*

*சரியான இடங்களைத் தேர்வு செய்து எதிர்ப்பு சக்தியுள்ள மரப் பயிர்களை இடத்திற்குத் தகுந்தவாறு முறையான பருவத்தில் பயிரிட வேண்டும்.*

*வறட்சி மற்றும் கோடை மாத காலங்களில் நாற்றங்கால் மற்றும் தோப்புக் காடுகளில் போதிய அளவு நீர்ப்பாசனம் செய்து செடிகளையும், மரங்களையும் முறையாக கண்காணிக்க வேண்டும்.*

*நாற்றங்கால் மற்றும் தோப்புக் காடுகளை முறையாக பராமரிப்பதுடன் செடிகளையும், மரங்களையும் முறையாக கண்காணிக்க வேண்டும்.*

*ஆரம்ப அறிகுறி நிலையிலேயே வாடல் நோயை அறிந்து பாதிக்கப்பட்ட செடிகள் மற்றும் மரங்களின் இலைகளை வெட்டி அப்புறப்படுத்த வேண்டும்.*

*நாற்றங்காலில் இடுபொருட்களுடன் உயிர் உரங்கள் (அக வேர்ப் பூஞ்சாணங்கள், அசோஸ்பைரில்லம், பாஸ்போ பாக்டீரியம்) உயிர்க் காரணிகள் (ட்ரைக்கோடெர்மா விரிடி, சூடோமோனஸ், புளூரசன்ஸ்) மற்றும் வேப்பம் புண்ணாக்கு கலந்து பின் செடிகளை உற்பத்தி செய்ய வேண்டும்.*



2014 டிசம்பர் 5]

*மேலும், விவசாயிகள் வாடல் நோய் குறித்து வனத் துறையிடம் விண்ணப்பிக்கும்போது, தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

**89—**

**பறவைகளைப் பாதுகாத்தல்**

**வினா எண் 36830—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*இராமநாதபுரம் மாவட்ட சரணாலயங்களில் வெளிநாட்டுப் பறவைகள் வேட்டையாடப்படுவதைத் தடுத்து, பறவைகளைப் பாதுகாக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், வனத் துறை அமைச்சர்:**

*இராமநாதபுரம் மாவட்ட சரணாலயங்களுக்கு வரக்கூடிய வெளிநாட்டுப் பறவைகள் வேட்டையாடப்படுவதைத் தடுக்கும் பொருட்டு வேட்டைத் தடுப்புப் பணியாளர்களை நியமனம் செய்து அவர்கள்மூலம் இரவும் பகலும் கண்காணிக்கப்பட்டு வரப்படுகிறது. இதனையும் மீறி வேட்டையாடுபவர்கள்மீது, வன உயிரினப் பாதுகாப்புச் சட்டம், 1972-ன்கீழ் கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.*

**90—**

**மரக்கன்றுகள் நடுதல்**

**வினா எண் 38192—திரு. ம. குணசேகரன்:** *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மானாமதுரை தொகுதியில் அரசு தரிசு நிலங்களில் மரக்கன்றுகள் நட்டு வளர்க்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், வனத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஆம்.*

*மாபெரும் மரம் வளர்ப்புத் திட்டத்தின்கீழ், 2012-2013 ஆம் ஆண்டில் பனிக்கனேந்தல் அரசு புறம்போக்குப் பகுதிகளில் 17,000 மரக்கன்றுகளும், 2013-2014 ஆம் ஆண்டில் வேளானி புறம்போக்குப் பகுதிகளில் 12,635 மரக்கன்றுகளும் நடவு செய்யப்பட்டுள்ளன.*

**91—**

## யானைத் தடுப்பு அகழி அமைத்தல்

**வினா எண் 39071—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) வால்பாறை பகுதியில் யானைத் தடுப்பு அகழிகள் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், வனத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) வால்பாறை பகுதியானது ஆண்டு முழுவதும் மழை பொழிவு பெறும் பகுதியானதால் ஈரப்பதம் உள்ள இந்த இடங்களில் யானைத் தடுப்பு அகழி அமைத்தால், மண் அரிப்பு ஏற்பட்டு யானைத் தடுப்பு அகழிகள் மூடிவிடும். மேலும் இப்பகுதியில் பெரும்பாலான பகுதிகள் யானைகள் வழித்தடமாக உள்ளதால், யானைத் தடுப்பு அகழி அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.*

**92—**

## யானைத் தடுப்பு அகழி அமைத்தல்

**வினா எண் 39072—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருநெல்வேலி மாவட்டத்தில் யானைத் தடுப்பு அகழிகள் அமைக்கும் செய்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*





**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், வனத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) அரசாணை எண் 324, சுற்றுச்சூழல் மற்றும் வனத் (வனம்.5) துறை, நாள் 26-9-2013-ல் திருநெல்வேலி மண்டலத்திற்காக 40 கி.மீ. தூரத்திற்கு அகழி அமைக்க ரூ.181.60 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு அதில் மேற்கு தொடர்ச்சி மலை அடிவாரத்தில் 30 கி.மீ. தூரத்திற்கு யானைபுகா அகழி அமைக்க அனைத்து முன்னேற்றப் பணிகளும் நடைபெற்று வருகின்றன.*

**93—**

## யானைத் தடுப்பு அகழி அமைத்தல்

**வினா எண் 39073—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திண்டுக்கல் மாவட்டத்தில் யானைத் தடுப்பு அகழிகள் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், வனத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஆம்.*

*திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானல் வனக் கோட்டத்தில் 2012-2013 ஆம் ஆண்டில் யானைகள் தடுப்பு அகழிகள் 5.00 கி.மீ. நீளத்தில் அமைக்கப்பட்டுள்ளது.*

*திண்டுக்கல் வனக் கோட்டத்தில் 2013-2014 ஆம் ஆண்டில் தமிழ்நாடு உயிர்ப்பன்மை மற்றும் பசுமையாக்கல் திட்டத்தின்கீழ் 6 கி.மீ. நீளத்திற்கு யானைகள் தடுப்பு அகழிகள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், 2013-2014 ஆம் ஆண்டில் திண்டுக்கல் மண்டலத்தில் மொத்தமாக ரூ.292.47 இலட்சம் மதிப்பீட்டில் 71 கி.மீ. நீளத்திற்கு யானைபுகா அகழிகள் அமைக்க பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.*

[2014 டிசம்பர் 5

**94—**

## யானை புகா அகழி அமைத்தல்

**வினா எண் 39075—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தருமபுரி மாவட்டத்தில் யானை தடுப்பு அகழிகள் அமைக்கும் செய்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், வனத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தருமபுரி மண்டலம், தருமபுரி வனக் கோட்டம், பாலக்காடு, ஜவளகிரி, அஞ்செட்டி, பெண்ணாகரம், தேன்கனிக்கோட்டை, ஊரிகம் மற்றும் இராயக்கோட்டை வனச் சரகங்களில் 2005-2006 ஆம் ஆண்டு முதல் 2012-2013 ஆம் ஆண்டு வரை ரூ.564.932 இலட்சம் செலவில் 249.900 கி.மீ. தூரத்திற்கு யானைபுகா அகழிகள் அமைக்கப்பட்டுள்ளன.*

*2013-2014 ஆம் ஆண்டில் தருமபுரி மண்டலத்தில் 100 கி.மீ. தூரத்திற்கு யானைபுகா அகழி அமைக்க, அரசாணை (டி) எண் 324, சுற்றுச்சூழல் மற்றும் வனத் (வனம்.-5) துறை, நாள் 26-9-2013-ல் ரூ.454.00 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.*

**95—**

## வன உயிரின சரணாலயம் அமைத்தல்

**வினா எண் 39083—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தஞ்சாவூர், நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் பகுதிகளை உள்ளடக்கி கோடியக்கரை வன உயிரின சரணாலயம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*



2014 டிசம்பர் 5]

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், வனத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண் 59, சுற்றுச்சூழல் மற்றும் வனத் (வனம்.—5) துறை, நாள் 26-4-2013-ல் தஞ்சாவூர் மற்றும் திருவாரூர் மாவட்டங்கள் உள்ளடங்கிய காப்புக் காடுகளை "கோடியக்கரை வன உயிரின சரணாலயம்" பிளாக் ''அ'' எனவும் நாகப்பட்டினம் மாவட்டத்திற்குட்பட்ட வனப்பகுதிகளை "கோடியக்கரை வன உயிரின சரணாலயம்" பிளாக் "ஆ" எனவும் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளன.*

**96—**

## குரங்குகளைப் பிடித்தல்

**வினா எண் 44673—திரு. ம. குணசேகரன்:** *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மானாமதுரை தொகுதியில் தோட்டப் பயிர்களை நாசப்படுத்தும் குரங்குகளைப் பிடிக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், வனத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஆம்.*

*மானாமதுரை தொகுதியில் தோட்டப் பயிர்களை நாசம் செய்யும் குரங்குகள் தொடர்பாக பொதுமக்களிடமிருந்து வனத் துறைக்கு தகவல் அவ்வப்போது கிடைக்கப் பெறப்படும்போது, அக்குரங்குகளைப் பிடித்து அடர்ந்த வனத்திற்குள் விடுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.*

**97—**

## கண்காட்சி நடத்துதல்

**வினா எண் 46755—திரு. ஆர். ராமமூர்த்தி:** *மாண்புமிகு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2014 டிசம்பர் 5

*(அ) விழுப்புரம் மாவட்டம், விழுப்புரத்தில் கதர் கிராம தொழில்கள் மற்றும் கைவினைப் பொருள் கண்காட்சி நடத்த அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. தோ.பே. பூனாட்சி, கதர் மற்றும் கிராமத் தொழில்கள் துறை அமைச்சர்:**

*(அ) விழுப்புரம் மாவட்டம், விழுப்புரத்தில் பிரதம மந்திரியின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின்கீழ் கதர் கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் கண்காட்சியினை கதர் கிராமத் தொழில்கள் ஆணையம் வழங்கும் நிதியிலிருந்து தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின்மூலம் நடத்திட ஆவன செய்யப்படும்.*

*(ஆ) இந்நிதியாண்டில் விழுப்புரம் மாவட்டத்தில் கைவினைப் பொருட்கள் கண்காட்சி நடத்திட ஆவன செய்யப்படும்.*

**98—**

## கதர் தொழிலை புத்துயிரூட்டுதல்

**வினா எண் 47253—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருநெல்வேலி மாவட்டம், திசையன்விளையில் கதர் தொழில் மீண்டும் புத்துயிர் பெறுவதற்கு அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. தோ.பெ. பூனாட்சி, கதர் மற்றும் கிராமத் தொழில்கள் துறை அமைச்சர்:**

*(அ) தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின்மூலம் 107 கிராமிய நூற்பு நிலையங்களும், 41 கதர் உற்பத்தி உபகிளைகளும், 9 நேபாளி தறி அலகுகளும், 18 கதர் பட்டு உற்பத்தி உபகிளைகளும் செயல்பட்டு வருகின்றன. திருநெல்வேலி மாவட்டத்தில் திசையன்விளைக்கு அருகில் உள்ள உடன்குடியில் கதர் வாரியத்தின் கதர் உற்பத்தி உபகிளை இயங்கி வருகிறது. அதனை திசையன்விளையில் உள்ள நெசவாளர்களும் பயன்படுத்திக் கொள்ளலாம்.*



2014 டிசம்பர் 5]

*(ஆ) வினா எழவில்லை.*

**99—**

## துணை சுகாதார நிலையத்தைப் பிரித்தல்

**வினா எண் 26529—திரு. கார்த்திக் தொண்டைமான்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) புதுக்கோட்டை தொகுதி, ஆதனக் கோட்டை துணை சுகாதார நிலையத்தை இரண்டாகப் பிரிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*(அ) தமிழ்நாட்டில் 8,706 துணை சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. மத்திய அரசின் வழிகாட்டுதலின்படி சமவெளிப்பகுதியில் 5,000 மக்கள்தொகைக்கு ஒரு துணை சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், மலைப்பகுதியில் 2,000 மக்கள்தொகைக்கு ஒரு துணை சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், துணை சுகாதார நிலையம் அமைக்கப்பட வேண்டும். புதுக்கோட்டை மாவட்டம், ஆதனக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், ஆதனக்கோட்டை கிராமத்தில் துணை சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. ஆதனக்கோட்டை கிராம மக்கள் தொகை 1,744. இக்கிராமத்திலிருந்து ஆறு கிலோ மீட்டர் தொலைவில் பெருங்களூர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் துணை சுகாதார நிலையமும், ஏழு கிலோ மீட்டர் தொலைவில் வாராப்பூர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் கணபதி துணை சுகாதார நிலையமும் இயங்கி வருவதாலும், மத்திய அரசின் இலக்கின்படி 5,000 மக்கள் தொகைக்கு குறைவாக இருப்பதாலும், ஆதனக்கோட்டை துணை சுகாதார நிலையத்தை இரண்டாகப் பிரிப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.*

*(ஆ) இவ்வினா எழ இடமில்லை.*

[2014 டிசம்பர் 5

**100—**

## ஆரம்ப சுகாதார நிலையத்தை முறையாகச் செயல்படுத்துதல்

**வினா எண் 40623—திரு. கே.பி. பரமசிவம்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பல்லடம் தொகுதி, முதலிபாளையம் ஊராட்சி, முதலிபாளையத்திலுள்ள ஆரம்ப சுகாதார நிலையம் முறையாக செயல்பட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*(அ) தமிழ்நாட்டில் 8,706 துணை சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. மத்திய அரசின் வழிகாட்டுதலின்படி சமவெளிப் பகுதியில் 5,000 மக்கள் தொகைக்கு ஒரு துணை சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், மலைப் பகுதியில் 2,000 மக்கள் தொகைக்கு துணை சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், ஒரு துணை சுகாதார நிலையம் அமைக்கப்பட வேண்டும். திருப்பூர் மாவட்டம், முதலிபாளையம் கிராமம், முதலிபாளையம் ஊராட்சியை சார்ந்தது. முதலிபாளையம் ஊராட்சியில் ஆரம்ப துணை சுகாதார நிலையம் எதுவும் செயல்படவில்லை. துணை சுகாதார நிலையம் மட்டுமே செயல்பட்டு வருகிறது. முதலிபாளையம் துணை சுகாதார நிலைய செவிலியர், துணை சுகாதார நிலையத்திற்குட்பட்ட அனைத்துக் கிராமங்களிலும் தடுப்பூசி பணிகள், தாய்-சேய் நலம், குடும்ப நலப் பணிகள் மற்றும் சிறு நோய்களுக்கான சிகிச்சை உள்ளிட்ட அனைத்து சுகாதார சேவைகளையும் மேற்கொண்டு வருகின்றார். மேலும் முதலிபாளையம் துணை சுகாதார நிலையம் நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது.*

*(ஆ) இவ்வினா எழ இடமில்லை.*



2014 டிசம்பர் 5]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

## 3. தகவல் கோரல்

### உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *தனியாரிடமிருந்து மின்சாரம் கொள்முதல் செய்வது குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. வி.சி. சந்திரகுமார், திரு. எஸ்.ஆர். பார்த்திபன், (குறுக்கீடு) என்ன சொல்லுங்கள்? (குறுக்கீடு)* Zero hour*–ல்தான் எடுத்துக்கொள்கிறேன். பிறகு என்ன? (குறுக்கீடு) இன்றைக்கு மூன்று கவன ஈர்ப்பை எடுத்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) என்ன? (குறுக்கீடு) இல்லை, அதையெல்லாம் நான் ஒவ்வொன்றாக எடுத்துக்கொண்டிருக்கிறேன். (குறுக்கீடு) பிறகு பார்க்கலாம், உட்காருங்கள். (குறுக்கீடு) பார்க்கலாம், உட்காருங்கள். (குறுக்கீடு) சரி, இன்று பார்க்கலாம் உட்காருங்கள். (குறுக்கீடு) இன்றைக்குக் கவன ஈர்ப்பு எடுத்ததுபோக நேரம் இருக்கும்போது எடுத்துக்கொள்கிறேன், உட்காருங்கள். (குறுக்கீடு)பார்க்கலாம், உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள்.*

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துத் தொழிலாளர்களுடைய பிரச்சினை குறித்து முன்னறிவிப்பு கொடுத்திருக்கிறோம். அதை அவசரமாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *என்ன? சொல்லுங்கள் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.*

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரும்பு விவசாயிகளுடைய பிரச்சினை, அரசு போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களுடைய வேலை நிறுத்தம் சம்பந்தமான பிரச்சினை ஆகியவற்றை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் உங்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

[2014 டிசம்பர் 5

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *என்ன? சொல்லுங்கள். ஒரே கட்சியைச் சேர்ந்த அனைத்து உறுப்பினர்களும் எழுந்து நின்றால் எப்படி? (குறுக்கீடு) ஒவ்வொரு உறுப்பினராக எழுந்து கேட்டால் ஏதாவது சொல்லலாம். (குறுக்கீடு) திரு. அ. சவுந்தரராசன், நீங்கள்தான் சொல்லிவிட்டீர்களே, பிறகு என்ன? (குறுக்கீடு) நீங்கள்தான் சொல்விட்டீர்களே? சரி, சொல்லுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன்.*

***திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களுடனான ஊதிய ஒப்பந்தம் 15 மாதங்களாக நிலுவையில் இருக்கின்ற காரணத்தினால், அவர்கள் கூட்டுப் போராட்டக் குழுமூலம் வேலைநிறுத்த அறிவிப்புச் செய்திருக்கின்றார்கள். தமிழகத்தில் அது கடுமையான பதற்ற நிலையை உண்டாக்கியிருக்கின்றது. கரும்பு விவசாயிகளுக்குத் தர வேண்டிய பணம் தரப்படாததால், அந்த விவசாயிகள் கடுமையாக. . .

*முற்பகல் 11–35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன், மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதில் வந்தால் எடுத்துக்கொள்கிறேன். நீங்கள் உட்காருங்கள். திரு. சு. குணசேகரன், உட்காருங்கள். (குறுக்கீடு) உங்கள் கட்சியில்தான் ஏற்கெனவே திரு. எம். ஆறுமுகம் அவர்களுக்கு வாய்ப்புக் கொடுத்துவிட்டேன். உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. கோபிநாத் அவர்கள்.*

**திரு. கே. கோபிநாத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தைச் சார்ந்த தொழிலாளர்களுக்கு. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அதே சப்ஜெக்ட்தான். உட்காருங்கள். ஏற்கெனவே அவர் கவனத்திற்குக் கொண்டு வந்துவிட்டார். நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.*

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .



2014 டிசம்பர் 5]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பிரச்சினை. இப்படிச் சொன்னால் ஒவ்வொரு கட்சியிலும் 10 பேர் இருக்கிறீர்கள். 10 பேருக்கும் நான் வாய்ப்புத் தர முடியுமா? 10 பேர் இருக்கிறீர்கள். 8 பேர் இருக்கிறீர்கள். 8 பேருக்கும் நான் வாய்ப்புத் தர முடியுமா? (குறுக்கீடு) வாய்ப்புத் தருகிறேன். நீங்கள் உட்காருங்கள். டாக்டர் க. கிருஷ்ணசாமி, நீங்கள் சொல்லுங்கள்.*

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென் மாவட்டங்களில் கடந்த 6 மாதங்களில் 71 படுகொலைகள் நடந்திருக்கின்றன. அதுகுறித்து தங்களுடைய கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *சரி, உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. என்.ஆர். ரெங்கராஜன், நீங்கள் சொல்லுங்கள்.*

**திரு. என்.ஆர். ரெங்கராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டெல்டா மாவட்டத்தில் பயிர்ப் பாதுகாப்பு இன்சூரன்ஸ் கொடுப்பதற்கான தேதியை நீட்டிக்க வேண்டுமென்று விவசாயிகள் கேட்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *சரி, உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். வெங்கடேசன், நீங்கள் சொல்லுங்கள்.*

**திரு. எல். வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரும்பு விவசாயிகளுக்குத் தனியார் சர்க்கரை ஆலைகள் கொடுக்க வேண்டிய டன்னுக்கு 300 ரூபாய் பணத்தைக் கொடுக்காமல் தொடர்ந்து புறக்கணித்து வருகிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு போகிறேன். நீங்கள் உட்காருங்கள்.*

## 4. சிறப்புக் கவன ஈர்ப்பு

### (அ) தனியாரிடமிருந்து மின்சாரம் கொள்முதல் செய்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அடுத்த அலுவலாக தனியாரிடமிருந்து மின்சாரம் கொள்முதல் செய்வது குறித்து தே.மு.தி.க. உறுப்பினர்கள் திருவாளர்கள் வி.சி. சந்திரகுமார், எஸ். ஆர். பார்த்திபன், தி.மு.க. உறுப்பினர்கள் திருவாளர்கள்*

மு.க. ஸ்டாலின், துரைமுருகன், எ.வ. வேலு, அர. சக்கரபாணி, நா. இராமகிருஷ்ணன் ஆகியோர் பேரவை விதி 56—ன்கீழும், இந்திய கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்) கட்சி உறுப்பினர்கள் திரு. அ. சவுந்தரராசன், திரு. க. பாலகிருஷ்ணன், திரு. கே. தங்கவேல், திரு. ஏ. லாசர், திரு. இரா. அண்ணாதுரை, திரு. க. பீம்ராவ், திரு. ஆர். ராமமூர்த்தி, திரு. வீ.பி. நாகைமாலி, இந்திய கம்யூனிஸ்டு கட்சி உறுப்பினர்கள் திரு. எம். ஆறுமுகம், திரு. சு. குணசேகரன், திரு. வெ. பொன்னுப்பாண்டி, இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் திரு. கே. கோபிநாத், திருமதி எஸ். விஜயதரணி, திரு. ஜே.ஜி. பிரின்ஸ், பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார், மனிதநேய மக்கள் கட்சி உறுப்பினர்கள் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, திரு. அ. அஸ்லம் பாஷா, புதிய தமிழகம் கட்சி உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி ஆகியோர் பேரவை விதி 55—ன்கீழும் அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். இதனைச் சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்கிறேன். அறிவிப்புக் கொடுத்தவர்களுள், கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் மிகச் சுருக்கமாக மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். முதலில், தே.மு.தி.க. உறுப்பினர் மாண்புமிகு திரு. எஸ்.ஆர். பார்த்திபன் அவர்கள்.

**திரு. எஸ்.ஆர். பார்த்திபன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சாரம் மானிய விலையிலே மக்களுக்கு வழங்கப்பட்டிருந்தாலுங்கூட, இந்த ஆட்சி 2011 ஆம் ஆண்டு பதவியேற்றபோது 40,000 கோடி ரூபாய் மின்சார இழப்பீடு இருப்பதாகவும், அது படிப்படியாக உயர்ந்து தற்போது 70,000 கோடி ரூபாய் இழப்பீடு இருப்பதாகவும் கூறப்படுகிறது. அதேபோல, கடந்த 2011 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வரும்போது மின்சாரப் பற்றாக்குறை 3,000 மெகா வாட் இருந்ததாகக் கூறப்பட்டது. தற்போது 6,000 மெகா வாட் மின்சாரப் பற்றாக்குறை இருப்பதாகக் கூறப்படுகிறது. கடந்த ஆட்சியிலே தொடங்கப்பட்ட புதிய மின் திட்டங்கள் மூலமாக 2,500 மெகா வாட் மின்சார உற்பத்தி கிடைப்பதாகத் தெரிவித்திருந்தாலுங்கூட, இந்த ஆட்சி பதவியேற்றபோது. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பார்த்திபன், சுருக்கமாகச் சொல்லுங்கள். நீங்கள் விவாதத்திற்குப் போகிறீர்கள்.





**திரு. எஸ்.ஆர். பார்த்திபன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆட்சி பதவியேற்றபோது புதிய மின் திட்டங்கள். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பார்த்திபன், சுருக்கமாகப் பேசி, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்தை ஈர்த்து, அமருங்கள்.

**திரு. எஸ்.ஆர். பார்த்திபன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆட்சி பதவிக்கு வந்த பிறகு தற்போது எவ்வளவு மின்சாரம் புதிய திட்டங்கள்மூலமாகக் கிடைக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரியப்படுத்த வேண்டும். அதேபோல, முக்கியமான தொழிற்சாலைகள், மின்சாரம் தொடர்ந்து 24 மணி நேரமும் கிடைக்க வேண்டும் என்கிறார்கள். **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பார்த்திபன், நீங்கள் பொத்தாம்பொதுவாக இதுமாதிரி சொல்லக்கூடாது. (குறுக்கீடு) இல்லை, இதுமாதிரி நீங்கள் சொல்லக்கூடாது. நீங்கள் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்தை ஈர்த்து, உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர் பார்த்திபன் கூறியவை எல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. (குறுக்கீடு) நீங்கள் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்தை மட்டும் ஈர்த்து உட்காருங்கள்.

**திரு. எஸ்.ஆர். பார்த்திபன்:** அதேபோல, இந்த அரசு பதவியேற்கின்றபோது இந்த அவையிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள், சோலார் மின்சக்தித் திட்டத்திற்கு இந்த அரசு முக்கியத்துவம் கொடுக்கும் என்று சொன்னார். அதன்படி,....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பார்த்திபன், நீங்கள் கொள்முதல் சம்பந்தமாகத்தான் கேட்டிருக்கிறீர்கள். கொள்முதல் சம்பந்தமாக நீங்கள் பேசிவிட்டு உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் வேறு விவாதத்திற்குப் போகிறீர்கள். நேரம் இல்லை. நீங்கள் உட்காருங்கள். இன்னும் நிறைய உறுப்பினர்கள் பேச வேண்டும். (குறுக்கீடு)

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2014 டிசம்பர் 5

*முற்பகல் 11–40*

**திரு. எஸ்.ஆர். பார்த்திபன்:** *ஆகவே, இந்த அரசு சோலார் மின் சக்தி திட்டத்தைத் தீவிரப்படுத்தியிருந்தால், இன்றைக்கு வெளி மாநிலங்களிலிருந்து மின்சாரம் வாங்குகிற நிலைக்குத் தள்ளப்பட்டிருக்காது. அதேபோல, இந்த ஆட்சியிலே புதிதாகத் தொடங்கப்பட்ட. . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. இராமகிருஷ்ணன் அவர்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், என்ன ஒரு நிமிடம்? அவர் என்ன விவாதம் பண்ணுகிறார்? விவாதம் பண்ணினால் எப்படி? இல்லை, சபை நடக்கிறது. (குறுக்கீடுகள்) நீங்கள் சண்டை போடுவதுபோல் பேசக்கூடாது. நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) முதலில் உட்காருங்கள். நீங்கள் கொடுத்திருக்கிற அறிவிப்பு தனியார் மின் உற்பத்தி நிலையங்களிலிருந்து அதிக விலை கொடுத்து மின்சாரம் கொள்முதல் செய்வதன் அவசியம் குறித்து விவாதிக்கதான் நீங்கள்* notice *கொடுத்திருக்கிறீர்கள். இதைத்தான் பேச வேண்டும். இதை விட்டு விட்டு நீங்கள் வேறு எதையோ பேசினால் எப்படி நான்* allow *பண்ண முடியும்? (குறுக்கீடு) எல்லா உறுப்பினர்களும் இதே மாதிரி பேசினால் நான் எப்படி அவையை நடத்துவது? (குறுக்கீடு) நான் எப்படி அவையை நடத்த முடியும்? சொல்லி முடியுங்கள் (குறுக்கீடு) திரு. வெங்கடேசன், எனக்குத் தெரியும், நீங்கள் உட்காருங்கள். அறிவிப்பில் கொடுத்திருப்பதை மட்டும் பேசுங்கள். (குறுக்கீடு) அறிவிப்பிலே கொடுத்திருப்பதைப் பேசுங்கள். மைக் கொடுங்கள்.*

**திரு. எஸ்.ஆர். பார்த்திபன்:** *மைக் கொடுத்தால்தானே பேச முடியும்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மைக் கொடுத்தாகிவிட்டது. பேசுங்கள்.*

**திரு. எஸ்.ஆர். பார்த்திபன்:** *மைக் கொடுக்கமாட்டேன் என்கிறீர்களே? தனியார் மின் உற்பத்தி நிலையங்களிலிருந்து அதிக விலை கொடுத்து மின்சாரம் கொள்முதல் செய்வதன் அவசியம் குறித்து விவாதிக்க அரசின் கவனத்தை ஈர்க்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. இராமகிருஷ்ணன் அவர்கள்.*



2014 டிசம்பர் 5]

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியாரிடமிருந்து மின்சாரம் கொள்முதல் செய்வதற்கு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் விலையை நிர்ணயித்திருக்கிறது. ஒழுங்குமுறை ஆணையம் நிர்ணயித்திருக்கின்ற அந்த விலையில்தான் தமிழ்நாடு மின்சார வாரியம் கொள்முதல் செய்ய வேண்டும். ஆனால் 2013–2014 ஆம் ஆண்டு 14 ஆயிரம் கோடி ரூபாய் கொள்முதல் செய்வதற்காக ஒதுக்கப்பட்டது. ஆனால் அந்த ஆண்டு 28 ஆயிரம் கோடி ரூபாய்க்கு மின்சாரம் கொள்முதல் செய்யப்பட்டிருக்கின்றது. குறிப்பாக, சாமல்பட்டி தனியார் நிறுவனம், பிள்ளைப்பெருமாள்நல்லூர் தனியார் நிறுவனம்,* G.M.R. *நிறுவனம். . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *திரு. இராமகிருஷ்ணன், ரொம்ப விரிவாக உள்ளே போகாதீர்கள். கவனத்தை மட்டும் ஈர்த்து உட்காருங்கள்.*

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** *மதுரை பவர் கார்ப்பரேஷன் ஆகிய தனியார் நிறுவனங்களிலிருந்து 15 ரூபாய் 14 பைசாவிற்கு மின் கொள்முதல் செய்யப்பட்டதனால் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்குப் பெருத்த நஷ்டம் ஏற்பட்டு, அதனால் ஒழுங்குமுறை ஆணையம் மின் வாரியத்துடன் கலந்து பேசாமலேயே இன்றைக்கு உத்தேச கட்டணமாக மின் கட்டணத்தை உயர்த்தியிருக்கின்றது. மின் கட்டணத்தை உயர்த்துவதன் காரணமாக தமிழ்நாட்டு மக்கள் பாதிக்கப்படுகின்றார்கள். ஒரே தீர்வு தலைவர் கலைஞர் கொண்டுவந்த திட்டம் வட சென்னை, மேட்டூர், தூத்துக்குடி, (குறுக்கீடுகள்) நல்லூர் ஆகிய திட்டங்களின் உற்பத்தியை உடனடியாக முடுக்கிவிட வேண்டும். உற்பத்தி அதிகரிக்கின்றபோது கொள்முதல் செய்ய வேண்டிய தேவை இல்லை. கொள்முதல் செய்ய வேண்டிய தேவை இல்லாததனால், மின் கட்டண உயர்வு தேவை இல்லை. மக்கள் பாதிக்கப்பட மாட்டார்கள். (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *நீங்கள்* notice *கொடுத்திருக்கிறீர்களா? உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அண்ணாதுரை அவர்கள். (குறுக்கீடு) அவரே பேசிவிட்டு உட்கார்ந்துவிட்டார். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு)*

**திரு. இரா. அண்ணாதுரை:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசு ஒரு குறிப்பிட்ட 4 தனியார் நிறுவனங்களிடமிருந்து ஓர் அலகு மின்சாரம் 15 ரூபாய் 14 பைசா*

[திரு. இரா. அண்ணாதுரை] [2014 டிசம்பர் 5

என்ற வகையில் 79 கோடி அலகு கொள்முதல் செய்யப்படும் என்று அறிவித்திருக்கிறது. ஏற்கெனவே நம்முடைய ஒழுங்குமுறை ஆணையம் ஓர் அலகு மின்சாரத்திற்கு 5 ரூபாய் 50 பைசாவிற்கு மேலே விலை தரக்கூடாது என்ற ஒரு விதி வைத்திருக்கிறது. அந்த விதிக்கு மாறாக, தமிழக அரசால் இப்பொழுது தனியார் நிறுவனங்களிடமிருந்து கூடுதல் விலை கொடுத்து கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது.

முற்பகல் 11–45

கடந்த 10 ஆண்டு காலமாக போதிய மின்சாரம் தயாரிப்பதற்கான திட்டத்தை அரசாங்கம் நிறைவேற்றாத சூழ்நிலையில் மின் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது. எனவே, இத்தகைய சூழ்நிலையில், கூடுதல் தொகை கொடுத்து மின்சாரம் வாங்குவதை நிறுத்தி, நம்முடைய மின்சார வாரியம் நஷ்டத்தில் இயங்குவதைத் தடுக்க முன்வர வேண்டும் என்று கேட்டு அரசினுடைய கவனத்தை ஈர்க்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி அவர்கள்.

**திரு. வெ. பொன்னுப்பாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் விவசாயிகளுக்கு இலவச மின்சாரம், நெசவாளர்களுக்கு சலுகை விலையில் மின்சாரம், சிறு, குறு தொழில்களுக்கான மின்சாரம், பெருகிவரும் மக்கள்தொகைக்கு ஏற்ப புதிய குடியிருப்புகளுக்கு மின்சாரம், குடிநீர்த் தேவைகளுக்கான மின்சாரம் போன்ற அதிகரித்து வருகின்ற மின்சாரத் தேவைகளைக் கருத்தில்கொண்டு, இப்போது அரசே கூடுதல் மின் உற்பத்தியைச் செய்திட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். குறிப்பாக காற்றாலைகள், அரசு மற்றும் தனியார் சர்க்கரை ஆலைகள், சோலார் மின் திட்டம் போன்றவற்றின் மூலமாக கூடுதல் மின் உற்பத்தியைத் துவக்குவதற்கான நடவடிக்கையை அரசு மேற்கொள்ள வேண்டும். தனியாரிடம் மின்சாரம் கொள்முதல் செய்கின்ற காரணத்தினால் அரசுக்கு அதிக நஷ்டம் ஏற்படுவதோடு, மாநிலத்தினுடைய மின் தேவையைப் பூர்த்தி செய்கின்ற நடவடிக்கையும் பாதிக்கப்படுகின்றது. எனவே, அரசே பல்வேறு முறைகளில் மின்சார உற்பத்தியைப் பெருக்குவதற்கான நடவடிக்கையை எடுக்க



2014 டிசம்பர் 5][திரு. வெ. பொன்னுப்பாண்டி]

வேண்டுமென்று இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே கேட்டு அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசு மற்றும் மத்திய அரசின்கீழ் இயங்கும் மின் உற்பத்தி நிலையங்களில் முறையான பராமரிப்பு இல்லாத காரணத்தினாலும், மின் உற்பத்திக் குறைபாடு ஏற்படுவதாலும், தனியாரிடமிருந்து மின்சாரம் அதிக விலைக்குக் கொள்முதல் செய்வதாலும், ஒரு மாதத்திற்கு 800 கோடி ரூபாய்க்கு மேல் தமிழக அரசுக்கு இழப்பு ஏற்படுவதாலும், அதிகபட்ச விலையாகிய 5 ரூபாய் 40 காசுகளுக்குமேல் வாங்கக்கூடாது என்ற விதிக்கு எதிராகக் கொள்முதல் செய்வது பொதுமக்களுக்கு மிகுந்த சுமையை. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் விவாதம் செய்ய வேண்டாம். கவனத்தை ஈர்த்து உட்காருங்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** பொதுமக்களுக்கு மிகுந்த சுமையை ஏற்படுத்துவதால் அதிக விலை கொடுத்து கொள்முதல் செய்வதைத் தவிர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டு அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார் அவர்கள்.

**திரு. அ. கணேஷ்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் ஏற்கெனவே மின் கட்டணம் உயர்த்தப்பட்டிருக்கும் சூழ்நிலையில், தற்போது மீண்டும் மின் கட்டணம் உயரும் என்ற செய்தி மக்களிடையே ஓர் அச்ச உணர்வை ஏற்படுத்தியிருக்கிறது. கடந்த ஆட்சியின் இறுதியில் மின்சார வாரியத்தின் இழப்பு 40 ஆயிரம் கோடி ரூபாயாக இருந்தது. ஆனால், அது படிப்படியாக உயர்ந்து தற்போது 70,000 கோடி ரூபாயாக இருப்பதாகக் கூறப்படுகிறது. அதிக விலை கொடுத்து தனியாரிடமிருந்து மின்சாரம் கொள்முதல் செய்வதே இதற்குக் காரணம் என்று கூறப்படுகிறது. மத்திய அரசு, மாநில அரசிடமிருந்து யூனிட் ஒன்றுக்கு 3 ரூபாய் என்ற அளவில் கொள்முதல் செய்யும் நேரத்தில், யூனிட் ஒன்றுக்கு 5 ரூபாய் 40

[திரு. அ. கணேஷ்குமார்] [2014 டிசம்பர் 5

பைசாவிற்கு மேல் கொள்முதல் செய்யக்கூடாது என்ற மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் வழிகாட்டுதல் இருக்கும் சூழ்நிலையில், குறிப்பாக, ஜி.எம்.ஆர். மின் திட்டம், சாமல்பட்டி மின் திட்டம், பிள்ளைப் பெருமாள்நல்லூர் மின் திட்டம், மதுரை பவர் கார்ப்பரேஷன் ஆகிய நிறுவனங்களிடமிருந்து யூனிட் ஒன்றுக்கு 15 ரூபாய் 14 பைசாவுக்குக் கொள்முதல் செய்யப்படுகிறது. மேலும், அந்த நிறுவனங்களிடமிருந்து மின்சாரம் கொள்முதல் செய்யக்கூடாது என்று மின்சார ஒழுங்குமுறை ஆணையம் தெரிவித்திருந்தபோதும், அந்நிறுவனங்களிடமிருந்து கொள்முதல் செய்யப்படுகிறது. எனவே, இத்தகைய காரணங்களால் மின் கட்டணம் மீண்டும் உயர்த்தப்படுவதைத் தடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும், அரசாங்கத்தால் புதியதாகத் தொடங்கப்பட்டு, இன்னும் நிறைவுபெறாத நிலையில் உள்ள மின் திட்டங்களை விரைவாக நிறைவேற்றி, வருவாயை ஈட்டி, மக்களிடையே இருக்கக்கூடிய மின் கட்டணச் சுமையைக் குறைக்க வேண்டுமென்று கேட்டு அவையின் கவனத்தை ஈர்த்து அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், தனியாரிடம் மின்சாரத்தை வாங்குவதற்கான கட்டணத்தை 5 ரூபாய் 50 பைசா என்று நிர்ணயித்திருக்கக்கூடிய சூழலில், வேறு தனியார் நிறுவனங்கள் 4 ரூபாய் 26 பைசாவிலிருந்து 5 ரூபாய் 14 பைசா வரைக்கும் ஒரு யூனிட் மின்சாரம் தரக்கூடிய நிலையில், இந்தக் குறிப்பிட்ட 4 நிறுவனங்கள்—சாமல்பட்டி பவர் கம்பெனி, மதுரை பவர் கம்பெனி, ஜி.எம்.ஆர். பவர் மற்றும் பி.பி.என். பவர் கம்பெனியிடம் இருந்து 15 ரூபாய்க்கு மின்சாரத்தை வாங்கக்கூடிய சூழல் ஏன் ஏற்பட்டது என்பதைக் கேட்க விரும்புகிறேன். அதேபோல, கூடங்குளத்திலிருந்து ஜூன் மாதத்திலிருந்தே மின்சாரம் வரும் என்று இந்த அவையிலேயே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். கூடங்குளம் அணு உலையிலிருந்து மின்சாரம் வந்தால் யூனிட்டுக்கு 2 ரூபாய்தான் என்று சொன்னார்கள். அந்த மின்சாரம் வருகிறதா? வருமா? எப்போது வரும்? என்பதையும் கேட்டு அரசாங்கத்தின் கவனத்தை ஈர்த்து அமர்கின்றேன்.



2014 டிசம்பர் 5]

முற்பகல் 11–50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2011 ஆம் ஆண்டு ஆட்சி மாற்றம் ஏற்பட்டவுடன் கடந்த ஆட்சியில் மின்சார வாரியத்தில் ஏறக்குறைய ரூ.40 ஆயிரம் கோடி நஷ்டம் ஏற்பட்டிருப்பதாகவும், அதை ஈடுகட்டவே மின் கட்டணம் உயரும் என்று அறிவித்து, மின் கட்டணம் உயர்வு செய்யப்பட்டது. இப்பொழுது கடந்த இரண்டு வருடங்களில் மின் பற்றாக்குறையைப் போக்கக்கூடிய வகையில், 3 ரூபாய் 50 காசுகளுக்கு மேல் வாங்கக்கூடாது என்று “மின் வாரிய ஒழுங்குமுறை ஆணையம்” விதிமுறைகளை வகுத்திருந்தாலும்கூட, அதைவிட மூன்று மடங்கு உயர்வாக ரூ.13.50 பைசா முதல் ரூ.15 வரையிலும் வாங்கியதன் விளைவாக, தமிழ்நாடு மின் வாரியத்திற்கு ஏறக்குறைய ரூ.20 கோடி இழப்பு ஏற்பட்டதாகக் கூறப்படுகின்ற இந்தக் கருத்தின் காரணமாக, மீண்டும் மின் கட்டணம் உயர்ந்து விடுமோ என்ற அச்சம் தமிழக மக்கள் மத்தியிலே நிலவுகிறது. எனவே, எந்தச் சூழ்நிலையில் இதுபோன்று பன்மடங்கு உயர்த்தி, ஜி.எம்.ஆர். மதுரை பவர் கார்ப்பரேஷன், சாமல்பட்டி பவர் கார்ப்பரேஷன் பிள்ளைப்பெருமாள்நல்லூர் பவர் கார்ப்பரேஷன் போன்ற தனியார் நிறுவனங்கள் பயன்பெறக்கூடிய வகையில் மின்சாரம் வாங்கப்பட்டது என்பதை இந்த அவைக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டுமென்று புதிய தமிழகம் கட்சியின் சார்பாகக் கேட்டு கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோடைக்கு மழையாகி! கோபுரத்திற்கு விளக்காகி! ஏடறியா விந்தைகளை எடுத்து இயம்பும் எங்கள் வீரத்தின் விளைநிலமே! (மேசையைத் தட்டும் ஒலி) குன்றாது உறுதிகொண்டு குறையா ஆற்றல் கொண்டு சூது வாது சூழ்ந்தாலும், சூழ்ச்சிகள் மொய்த்தாலும் நீதியின் துணைகொண்டு நியாயத்தை வென்றெடுத்து (மேசையைத் தட்டும் ஒலி) சத்தியத்தை நிலைநாட்டி சரித்திரம் படைப்பேன் எனும் காலத் தாய் பெற்றுத் தந்த கழகத்தின் காவல் தெய்வமே! கண் இமையாய் தமிழகத்தைக்

காத்து நிற்கும் ஆற்றல் அரணே! மக்களின் முதல்வர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, இந்தக் கவன ஈர்ப்புத் தீர்மானத்தின்மீதான என்னுடைய பதிலுரையைத் தொடங்குகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மின்சாரக் கொள்முதல் விலை குறித்து இங்கே பல்வேறு கருத்துகளை என்னிடம் சொல்லி கவனத்தை ஈர்த்தார்கள். அவர்களுடைய பேச்சுக்களை நான் மிகக் கவனமாகக் கவனித்தேன். உங்களுடைய கவன ஈர்ப்புத் தீர்மானத்தின்மீதான பேச்சை மிகக் கவனமாகக் கவனித்தேன். அதேபோல, நான் கேட்டுக்கொள்வதெல்லாம் என்னுடைய பதிலையும் நீங்கள் கவனமாகக் கேட்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றுசொன்னால், ஒரு இடத்தில் வகுப்பு எடுத்த மாதிரி இருக்கலாம். சட்ட நுணுக்கங்களும், அதேபோல சட்ட அம்சங்களும், தொழில்நுட்பமும் சார்ந்த பிரச்சினை. ஆகவேதான், அதிலே உங்களுடைய கவனத்தைத் திசை திருப்பாமல் உங்களுடைய கவனத்தை ஈர்த்து இந்தப் பதிலுரையைத் தொடங்குகிறேன்.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

அதேபோல, சில பேர் தங்களுடைய கருத்தைச் சொன்னார்கள். இல்லையென்று சொல்லவில்லை. நன்றாகத்தான் கருத்துகளைச் சொன்னார்கள். ஆனால், அதிலே உண்மைதான் இல்லை. டாக்டர் சொல்வதுபோல சொன்னால், ஆபரேஷன் சக்ஸஸ் ஆனால், நோயாளி அவுட். அதுபோல, அவர்கள் சொன்ன கருத்தில் உண்மை இல்லை. ஆகவே, அந்த உண்மையைத் தெளிவுபடுத்துவதற்கு—சிலர் என்ன சொன்னார்கள். சின்ன சின்ன விஷயத்தைப் பெரியதாக, பூதாகரமாகக் காட்டினார்கள். ஈரைப் பேனாக்கி, பேனைப் பெருமாளாக்கி, பெருமாளைப் பெத்த பெருமாளாக்கலாம் இல்லையா? அதேமாதிரி, சில பேர் மிகப் பெரிதாகக் காட்டினார்கள். இதிலே என்னவென்றால், ஈருகூட இல்லை. அதையே பெரிதாகக் காட்டக்கூடிய நிலைமை இருக்கிறது. இங்கே மட்டுமல்ல, சபைக்கு உள்ளே வர முடியாதவர்கள், எப்பொழுதுமே வர முடியாதவர்கள்கூட வெளியிலே இருந்து இன்று பல்வேறு குற்றச்சாட்டுகளைக் கற்பனையிலே சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)* அது இப்போது அல்ல. சபையிலே இருப்பவர்கள் அந்தந்தக் கட்சியைச்





சார்ந்தவர்களைப் பேசச் சொல்லியிருக்கிறார்கள். அதேபோல, *(குறுக்கீடு)* குறுக்கே பேச வேண்டாம். *(குறுக்கீடு)*

*முற்பகல் 11–55*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ், உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் ஏன் இப்போது எழுந்து பேசினீர்கள்? உங்களை யாரும் குறிப்பிட்டுப் பேசினார்களா? *(குறுக்கீடு)* என்னுடைய அனுமதியோடுதான் நீங்கள் பேச வேண்டும். *(குறுக்கீடு)* என்னுடைய அனுமதியோடுதான் நீங்கள் பேச வேண்டும். *(குறுக்கீடு)* உங்களைக் குறிப்பிட்டுப் பேசினார்களா? *(குறுக்கீடு)* உங்களைக் குறிப்பிட்டுப் பேசினார்களா? *(குறுக்கீடு)* மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ், அமருங்கள். *(குறுக்கீடு)* நீங்கள் உட்காருங்கள் *(குறுக்கீடு)* நீங்கள் உட்காருங்கள். *(குறுக்கீடு)* உங்களைக் குறிப்பிட்டுப் பேசவில்லை. நீங்கள் பேசக்கூடாது, உட்காருங்கள். மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ், அமைதியாக உட்காருங்கள். *(குறுக்கீடு)* நான் உங்களைக் குறிப்பிட்டுச் சொல்லவே இல்லையே? *(குறுக்கீடு)* சபைக்கு வெளியில் இருப்பவர்கள் *(குறுக்கீடு)* நான் இன்னமும் சொல்கிறேன், கேளுங்கள். *(குறுக்கீடுகள்)* அவசரப்படாதீர்கள், நான் ஒரு விளக்கம் சொல்கிறேன். *(குறுக்கீடு)* மாண்புமிகு எதிர்க்கட்சி துணைத் தலைவர் அவர்கள், நீங்கள் ஆத்திரப்படக்கூடாது.

நான் உங்களைச் சொல்லவில்லை. சபையிலே உறுப்பினர்களாக இல்லாதவர்கள், வெளியிலே பேட்டி கொடுக்கின்றனர். *(குறுக்கீடு)* ஆமாம், சபைக்கு வர முடியாதவர்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ், நீங்கள் உட்கார்ந்து கொண்டு பேசக்கூடாது. என்னுடைய அனுமதி இல்லாமல் நீங்கள் உட்கார்ந்து கொண்டு பேசக்கூடாது.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** சபைக்கு வர முடியாதவர்கள் என்றால், சபையில் உறுப்பினராக இல்லாதவர், வெளியிலே இருந்து சொல்கிறாரே அவரை நான் குறிப்பிடுகிறேன்.

*எங்கப்பன் குதிருக்குள் இல்லை என்கிற மாதிரி நீங்கள் ஏன் முன்னர் ஆஜர் ஆகிறீர்கள்? (மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ், உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** *சபைக்கு வர முடியாதவர்கள் என்று சொன்னால், நான் வெளிப்படையாகவே சொல்கிறேன். காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஒரு மாநில கட்சித் தலைவரும், அதேபோல, பாட்டாளி மக்கள் கட்சித் தலைவரெல்லாம் வெளியிலே இருந்து பல்வேறு அறிக்கைகளில் சொல்லியிருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) அதைத்தான், பெயரை குறிப்பிடக்கூடாது என்ற முறையில் சொன்னேன். (குறுக்கீடுகள்) அவர்களுக்கும் சேர்த்து பதில் தருகிறேன் என்று சொன்னேன். அவ்வளவுதான்.*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர்கள் உட்காருங்கள். அவை முன்னவர் பேசும்போது குறுக்கிடக்கூடாது, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அவர் பேசி முடிக்கட்டும், அப்புறம் உங்களுக்குப் பேச வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்) அவர் பேசி முடிக்கட்டும், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** *நான் நல்லதைதான் சொல்கிறேன். அவர்களுக்கும் சேர்த்து பதில் சொல்கிறேன் என்று சொல்கிறேன். அவ்வளவுதான்.*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. கோபிநாத், கொஞ்சம் அமைதியாக அமருங்கள். அவை முன்னவர் பேசி முடித்த பிறகு, உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன்.*

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** *மாண்புமிகு உறுப்பினர், குற்றச்சாட்டுக்குப் பதில் சொல்கிறேன் என்று சொல்கிறேன். இதில் ஏன் குறுக்கீடு செய்கிறீர்கள்?*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *திரு. கே. கோபிநாத், சொல்லுங்கள். நீங்கள் மட்டும் சொல்லுங்கள்.*

**திரு. கே. கோபிநாத்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லும்போது, நாங்கள் அமைதியாக உட்கார்ந்துகொண்டிருந்தோம். அவர், குறிப்பிட்டு காங்கிரஸ் கட்சியைத் சேர்ந்த தலைவர் என்று சொல்லிவிட்டார். அதனால், ஒரு நிமிடம் கொடுங்கள் நான் பேசி முடித்துவிடுகிறேன்,* please. *அதுமட்டுமல்லாமல், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லும்போது—அவர் நீண்ட நாள் உறுப்பினர், ஒரு சீனியர் அமைச்சர்.*





**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் சுருக்கமாகச் சொல்லுங்கள்.*

**திரு. கே. கோபிநாத்:** *நான் பேசி முடித்துவிடுகிறேன்,* please. *நான் விவாதத்திற்குள் போகவில்லை. அவர் ஒரு சீனியர் அமைச்சர்.*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் சுருக்கமாகப் பேசுங்கள்.*

**திரு. கே. கோபிநாத்:** *நான் பேசி முடித்துவிடுகிறேன்* Sir.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. கோபிநாத், பேசுங்கள்.*

**திரு. கே. கோபிநாத்:** *என்னைப் பேசவிடமாட்டேன் என்கிறீர்களே?*

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** *மாண்புமிகு உறுப்பினர், சபையின் நேரத்தை வீணாக்காதீர்கள்.*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. கோபிநாத், உங்களுக்குப் பேச வரவில்லை. மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** *மாண்புமிகு உறுப்பினர், உங்களைத் தவறாகச் சொல்லவில்லை. வெளியிலே பல பேர் குற்றச்சாட்டு சொன்னார்கள். சபையிலே இருக்கிறவர்களுக்கும் பதில் சொல்கிறேன், இல்லாதவர்கள் சொன்னதற்கும் சேர்த்து பதில் சொல்கிறேன். நான் சொல்கிற பதில் உங்களுக்கு மட்டும் பொருத்தமல்ல. சபைக்கு வராமல் வெளியிலே சொல்பவர்களுக்கும் சேர்த்து இந்தப் பதில் பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். அவ்வளவுதான்.*

[2014 டிசம்பர் 5

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. கோபிநாத், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அவை முன்னவர், பேசுங்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** இதில் controversy ஒன்றுமில்லையே?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. கோபிநாத், உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** நான் உங்கள்மீது குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை. நீங்கள் சொன்ன குற்றச்சாட்டுக்குப் பதில் சொல்கிறேன் என்று சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. கோபிநாத், உட்காருங்கள். (குறுக்கீடு) உங்களுக்கு அனுமதி கொடுத்தபோது நீங்கள் பேசவில்லை. (குறுக்கீடு) நீங்கள் சுருக்கமாகப் பேசுங்கள். சப்ஜெக்ட்டுக்கு வாருங்கள்.

**திரு. கே. கோபிநாத்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லும்போது, குறிப்பிட்டு காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த தலைவர் என்று சொன்னார்கள். (குறுக்கீடு) இல்லை, அதோடு மட்டும் நிறுத்திவிடாமல், இந்த அவைக்கே வர முடியாது என்று சொன்னார்கள். (குறுக்கீடு) ஒரு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இந்த அவைக்கு வர முடியாதவர்கள் என்று சொல்லவில்லை. இப்போது அவைக்கு வர முடியாதவர்கள் என்றுதான் சொன்னார்கள். திரு. கே. கோபிநாத், சப்ஜெக்ட்டுக்கு வாருங்கள்.

**திரு. கே. கோபிநாத்:** நான் முடித்துவிடுகிறேன். வர முடியாதவர்கள் என்றால், இந்தக் கூட்டத்திற்கு வர முடியாமல் இருக்கலாம், இப்போது Assembly Session-க்கு வர முடியாமல் இருக்கலாம். 2016 ஆம் ஆண்டிலே நிச்சயமாக காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் இந்த அவைக்கு வருவார்கள்.



2014 டிசம்பர் 5]

நண்பகல் 12–00

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) போதும் உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர், பேசுங்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** என்னைப் பேசவிடுங்கள். (குறுக்கீடு) நான் ஒன்றும் குறையாகச் சொல்லவில்லை. (குறுக்கீடு) உங்களைக் குறையாகச் சொல்லவில்லை. (குறுக்கீடு) சபைக்கு வர முடியாதவர்கள் வெளியே இருந்து சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கும் சேர்த்துத்தான் பதில் சொல்கிறேன் என்று சொல்கிறேன். (குறுக்கீடு) சபைக்கு வர முடியாதவர்கள் என்று சொல்லும்போது திரு. கே. கோபிநாத் அவர்கள் ஒரு பக்கம் எழுந்து நிற்கிறார். தே.மு.தி.க. உறுப்பினர்கள் ஒருபக்கம் எழுந்து நிற்கிறார்கள். (குறுக்கீடு) சபைக்கு வர முடியாதவர்களுக்கும் சேர்த்துச் சொல்கிறேன் என்று சொன்னால், இதில் என்ன குற்றம்? இது ஒரு குற்றமே இல்லை. இதில் என்ன சொல்கிறேன் என்றால், உங்களுக்கு ஒரு மரியாதை கொடுத்து. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் உட்கார்ந்து கொண்டு என்னுடைய அனுமதியில்லாமல் நீங்கள் பேசக்கூடாது. உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** கேளுங்கள், காங்கிரஸ் கட்சிக்காரர்களுக்கு மரியாதை கொடுத்து, அவர்கள் சொல்கிற குற்றச்சாட்டுக்கும் சேர்த்து பதில் சொல்கிறேன் என்றுதான் சொல்கிறேன். இதில் என்ன தவறு இருக்கிறது? உட்காருங்கள். அதேபோல தே.மு.தி.க. கட்சித் தலைவருக்கும் சேர்த்து பதில் சொல்கிறேன் என்று சொல்கிறேன் அவ்வளவுதான்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருகிறீர்களா, இல்லையா? (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருகிறீர்களா, இல்லையா? (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் தயவு செய்து உட்காருங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள், என்னைப் பார்த்துத்தான் பேச வேண்டும்.

[பேரவைத் துணைத் தலைவர்][2014 டிசம்பர் 5

*(குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லட்டும். உட்காருங்கள். தே.மு.தி.க. துணைத் தலைவர், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு)* Tension *ஆகாதீர்கள், அதிகமாகக் கோபப்படாதீர்கள். (குறுக்கீடு) தே.மு.தி.க. துணைத் தலைவர் உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லட்டும்.*

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தே.மு.தி.க. துணைத் தலைவர் தன்னுடைய நிலைதடுமாறி பேசிக் கொண்டிருக்கிறார். வரம்புமீறியும் பேசிக் கொண்டிருக்கிறார்.*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள்.*

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** *ஆமாம். ஏன் எதற்கும் சம்பந்தம் இல்லாமல் பேசிக் கொண்டிருக்கிறீர்கள்? (குறுக்கீடு) உட்காருங்கள்.*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *உங்களுக்கு அவை விதிமுறைகள் என்னவென்று தெரியுமா? (குறுக்கீடு) நீங்கள் அனைவரும் உட்காருங்கள்.*

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** *கோபத்தில் நிலை தடுமாறி பேசிக்கொண்டிருக்கிறார். (குறுக்கீடுகள்) இப்போதும் சொல்கிறேன். நான் சொல்வது கோபத்தில் நிலை தடுமாறுகிறீர்கள் என்றுதான். (குறுக்கீடுகள்) கோபத்தில் உணர்ச்சிவசப்பட்டு நிலை தடுமாறி உங்களுடைய நிலை இழந்துவிடுகிறீர்கள்.*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *உட்காருங்கள். (குறுக்கீடு) தே.மு.தி.க. உறுப்பினர்கள் அனைவரும் உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு)*

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** *அதாவது கோபப்படவேண்டாம். கோபத்தில் நிலை குலைந்துவிடும்.*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *உட்காருங்கள். (குறுக்கீடு) தே.மு.தி.க. துணைத் தலைவர், நீங்கள் உட்காருகிறீர்களா, இல்லையா?*



2014 டிசம்பர் 5]

***திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** *சபைக்கு யார் வரவில்லை? (குறுக்கீடுகள்)*

*(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு தே.மு.தி.க. உறுப்பினர்கள் அனைவரும் உட்காருங்கள். மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** *மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் அமைதியாக உட்காருங்கள். கோபப்படாதீர்கள். உணர்ச்சிவசப்பட்டாலே. . .*

**திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** *நான் கோபப்படவில்லை.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் அமைதியாக உட்காருங்கள். திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** *சரி. இந்தப் பிரச்சினையில் நான் யாரையும் குறை சொல்லவில்லை. (குறுக்கீடு) மீண்டும் சொல்கிறேன் நான் யாரையும் குறை சொல்லவில்லை. சபைக்கு வர முடியாதவர்களுக்கும் சேர்த்துத்தான் சொல்கிறேன். அதாவது ஒரு பழமொழி சொல்வார்கள் அல்லவா, 'கண்ணால் காண்பதும் பொய், காதால் கேட்பதும் பொய், தீர விசாரிப்பதே மெய்' என்கிறார்கள் அல்லவா! அதுபோல பல பேர் பலதும் சொல்வார்கள்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் அமைதியாக உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசிக் கொண்டிருப்பதைக் கேளுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசுவதைக் கேளுங்கள். அமைதியாக உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை, அமைச்சர் அவர்கள் கவனமாகக் கேளுங்கள் என்றுதானே கேட்டார். கவனமாகக் கேளுங்கள். (குறுக்கீடு) நீங்கள் இப்படிப் பேசிக்கொண்டிருந்தால் எப்படி? கவனமாகக் கேளுங்கள்.*

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** *இங்கே இருக்கிற சட்டமன்ற உறுப்பினர்களும் சரி, வெளியிலே சொல்கிறவர்களும் சரி, அவர்கள் ஏதாவது செவிவழிச் செய்திகளை வைத்து பல்வேறு*

[திரு. நத்தம் ஆர். விசுவநாதன்][2014 டிசம்பர் 5

குற்றச்சாட்டுகளைப் பெரிதாக்கி அதை மிகைப்படுத்திப் பேசுகிறார்கள்.

> "எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
> மெய்ப்பொருள் காண்பது அறிவு."

யார் என்ன சொன்னாலும், அதில் என்ன உண்மை இருக்கிறது என்று பாருங்கள். நான் சொல்கிறேன் என்று சொன்னால், நான் சொல்வதில்கூட என்ன உண்மை இருக்கிறது என்று ஆய்வு செய்து பாருங்கள். பார்த்துவிட்டுக் கேளுங்கள்.

*பிற்பகல் 12–05*

மின்சாரக் கொள்முதலுக்கு சில விஷயங்களை நான் விரிவாகச் சொல்வதற்கு முன்பாக ஒரு முன்னுரையாகச் சொல்கிறேன். சில பேர் நினைக்கலாம், நீங்கள் சொல்கிறீர்கள் மின்சாரம் 3 ரூபாய் 50 காசுக்குக் கிடைக்கிறது என்று. எதற்கு 14 ரூபாய், 10 ரூபாய் என்று விலை கொடுத்து வாங்குகிறீர்கள் என்று சொன்னீர்கள் அல்லவா. மின்சாரக் கொள்முதலைப் பொறுத்தவரையில் ஒரே விலைக்கு வாங்க மாட்டேன் என்கிறீர்கள், வெவ்வேறு விலைக்கு வாங்கப்படுகிறது என்று சொல்கிறீர்கள் அல்லவா! எந்த மூலப்பொருளைக் கொண்டு மின்சாரம் தயாரிக்கப்படுகிறதோ அந்த மூலப் பொருளுடைய விலைக்கு ஏற்ப மின்சாரத்தினுடைய விலையும் அமையும்.

உதாரணத்திற்கு, நீர் மின் நிலையம்மூலம் மின்சாரம் உற்பத்தி செய்தால் ஒரு ரூபாயில் இருந்து ஒன்றரை ரூபாய் செலவு ஆகும். அதேபோன்று காற்றாலையில், அதற்கு raw material அதிக செலவு கிடையாது, அதில் 3 ரூபாய் 15 காசுகள் செலவு ஆகும். இப்படி, இதையெல்லாம் பயன்படுத்திக்கொள்கிறோம். ஆனால், அதற்கடுத்தது நமக்கு மிகப் பெரிய மின் ஆதாரம் நிலக்கரிதான். நிலக்கரியில், இந்திய நிலக்கரியான உள்நாட்டு நிலக்கரியைப் பயன்படுத்தினால் கொஞ்சம் குறைவான விலையில் கிடைக்கும். அதைவிட வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் நிலக்கரியைப் பயன்படுத்தினால் விலை சற்று கூடுதலாகும். ஏனென்றால் வெளிநாட்டு நிலக்கரியின் விலை நம் நாட்டு நிலக்கரியைவிட இரண்டு மடங்கு அதிகம். ஆக, எந்த மூலப்பொருளைப் பயன்படுத்துகிறோமோ அதற்குத் தகுந்தாற்போல் அதன் விலை அமையும்.



2014 டிசம்பர் 5][திரு. நத்தம் ஆர். விசுவநாதன்]

ஹைட்ரோ மின்சாரத்தைவிட காற்றாலை மின்சாரம் சற்றுக் கூடுதல் விலை, காற்றாலையைவிட அனல் மின் நிலையத்தில் உற்பத்தி செய்யப்படும் மின்சாரம் கொஞ்சம் விலை கூடும். அனல் மின் நிலையத்திலேயே, இறக்குமதி செய்யப்பட்ட நிலக்கரியைப் பயன்படுத்துகிறார்கள் என்றால், விலை அதைவிட சற்றுக் கூடும். அதேபோல, பெட்ரோலியம் பொருட்கள் மூலமாக உற்பத்தி செய்யப்படுகின்ற மின்சாரத்திற்கு மிக அதிகமான விலை, அடக்க விலையைவிடக் கூடுதலாகக் கொடுக்க வேண்டியிருக்கிறது.

ஆக, இப்போது நம்முடைய மொத்தத் தேவையான, ஏறத்தாழ 70 சதவிகிதத்தை தமிழ்நாடு மின்சார வாரியத்தின் சொந்த உற்பத்தியிலும், மத்திய அரசு நிறுவனங்களிடமிருந்து உற்பத்தி செய்து தமிழ்நாடு மின்சார வாரியத்திற்குக் கிடைக்கின்ற பங்குகள் மூலமாகவும் நாம் பெறுகின்றோம். மத்திய அரசு உற்பத்தி செய்து கொடுக்கின்ற மின்சாரம்தான் விலை சற்று குறைவாகக் கிடைக்கும். ஆனால், மத்திய அரசே தமிழ்நாட்டுக்குத் தேவையான மின்சாரத்தைக் கொடுத்துவிட்டால் நாம் எங்கேயுமே கொள்முதல் செய்ய வேண்டிய அவசியம் இருக்காது. மத்திய அரசும் ஓரளவுக்குத்தான் கொடுக்கும்.

உதாரணத்திற்கு, என்.எல்.சி.–யில் உற்பத்தி செய்கிறார்கள் என்றால் அதை முழுவதுமே தமிழ்நாட்டுக்குக் கொடுப்பதில்லை. கூடங்குளத்தில் தயார் செய்கின்ற மின்சாரத்தையும் தமிழ்நாட்டுக்கே முழுவதும் கொடுப்பதில்லை. நமக்கு ஒரு பங்கும் மீதியை மற்ற மாநிலங்களுக்கும் கொடுக்கிறார்கள். மத்திய அரசே தமிழ்நாட்டுக்குத் தேவையான மின்சாரத்தை முழுமையாகக் கொடுத்துவிட்டால், நாம் அடுத்த இடத்தில் சென்று கொள்முதல் செய்ய வேண்டிய அவசியம் இருக்காது. ஆக, மத்திய அரசு 3 ரூபாய் 50 காசுக்குக் கொடுப்பது போன்றும், அதை வேண்டாமென்று சொல்லிவிட்டு கூடுதலாக நாம் வேறு இடத்தில் கொள்முதல் செய்வதுபோன்றும் ஒரு மாயத் தோற்றத்தை இங்கே ஏற்படுத்துகிறார்கள். ஆனால், 3 ரூபாய் 50 காசுக்குத்தான் வாங்குகிறோம், ஆனால், அது நமது தேவைக்கு ஏற்ற அளவு கிடைப்பதில்லை. இதனால்தான் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகின்ற மூலப்பொருட்களின் விலைக்கு ஏற்ப விலை மாறுபடுகிறது.

அடுத்து கொள்முதல். கொள்முதலுக்கென்று ஒரு வழிமுறை இருக்கிறது. யாராலும் எப்போதும் கொள்முதல் செய்ய முடியாது.

[திரு. நத்தம் ஆர். விசுவநாதன்][2014 டிசம்பர் 5

மத்திய அரசு மின் துறையில் ஒரு ஆணையை வெளியிட்டிருக்கிறது. மின்சாரம் கொள்முதல் செய்வது குறித்து அத்தனை வழிகாட்டி முறைகளையும் அதில் வெளியிட்டிருக்கிறது. அதில் உள்ளபடிதான் நாம் கொள்முதல் செய்ய முடியும். ஆகவே, அந்த ஆணையின் அடிப்படையில், பற்றாக்குறை மின்சாரத்திற்கு அனைத்து மாநிலங்களும் தனியாரிடம் கொள்முதல் செய்துகொள்ளலாம். அப்படித் தனியாரிடம் ஒப்பந்தப்புள்ளி கோரும்போது அதில் தகுதியுள்ளவர்கள் யார், யார் இதில் பங்கெடுத்துக்கொள்ள முடியும், அவர்களுக்கு என்னென்ன தகுதி வேண்டும் என்பதைக்கூட மத்திய அரசுதான் நிர்ணயிக்கிறது. மத்திய அரசு நிர்ணயிக்கும் தகுதியுள்ளவர்கள் யார் வேண்டுமானாலும் அந்த ஒப்பந்தப்புள்ளியில் பங்கேற்கலாம். அதிலே யாரும் தடை செய்ய முடியாது. அதில் குறைந்த விலைப் புள்ளிக்குக் கொடுப்பவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு கொள்முதல் செய்யப்படுகிறது. ஒப்பந்தப்புள்ளியில் கலந்துகொண்ட மற்ற தனியார் நிறுவனங்களும் குறைந்த ஒப்பந்தப் புள்ளியோடு match செய்து நாங்களும் அந்தக் குறைந்த விலைக்கே மின்சாரத்தைக் கொடுக்கிறோம் என்றால் அவர்களிடமும் கொள்முதல் செய்யலாம்.

பிற்பகல் 12–10

மொத்தத்தில் எப்படி உற்பத்தி செய்யப்படுகிறது என்கிற theory–யைச் சொல்லிவிடுகிறேன். குறைந்த விலை கோரிய ஒப்பந்தப்புள்ளி முடிவு செய்யப்பட்ட பின்பு அதை இறுதி செய்கிற அதிகாரம்கூட தமிழ்நாடு மின்சார வாரியத்திற்குக் கிடையாது. அதை இறுதி செய்வதற்கு மத்திய அரசு சட்டப்படி, தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு வெளியே பணிபுரிகின்ற மூன்று தொழில்நுட்ப வல்லுநர்களைக் கொண்ட குழுவை நியமனம் செய்து, அந்தக் குழு, அந்த ஒப்பந்தப்புள்ளியை ஆய்வு செய்து, விலைப் புள்ளி சரியான முறையில் நடந்திருக்கிறதா என்பதைத் தேர்வு செய்கிறது. எனவே, குறைந்த விலைப் புள்ளியைக்கூட அங்கீகரிக்கின்ற அதிகாரம் வல்லுநர் குழுவைச் சார்ந்ததுதான். அந்த வல்லுநர் குழு ஒப்புக்கொண்டதற்கு பின்பு அந்த நிறுவனத்தால் இறுதி செய்யப்படுகிறது. இதுதான் ஒப்பந்தப்புள்ளி வழிமுறை. இதில் எந்த நிறுவனம் உள்ளே வந்தாலும் அதனை யாரும் தடுக்க முடியாது. யார் என்ன விலைக்குச் சொல்கின்றார்கள் என்பதைக்கூட கட்டுப்படுத்த முடியாது. அவர்கள் சந்தையின் நிலவரத்திற்கு ஏற்ப ஒப்பந்தப்புள்ளியில்



2014 டிசம்பர் 5][திரு. நத்தம் ஆர். விசுவநாதன்]

விலையைக் குறிப்பிடுகின்றார்கள். இந்த ஒப்பந்தப்புள்ளி இறுதி செய்யப்பட்டதற்குப் பின்பு அதனை நம்முடைய தமிழ்நாடு மின்சார வாரியம் ஏற்றுக்கொள்கிறது. மத்திய அரசின் சட்ட விதிப்படி உருவாக்கப்பட்ட தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இருக்கின்றது. அந்த தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்திடம் விண்ணப்பித்து அவர்களும் இதை ஒப்புக்கொள்ள வேண்டும். அவர்களுடைய ஒப்புதலைப் பெற்ற பின்புதான் இந்த ஒப்பந்தப்புள்ளி இறுதி வடிவம் பெறுகின்றது. இதில் இத்தனை நடைமுறைகள் இருக்கின்றன. இதிலே தவறுகள் நடப்பதற்கு எந்த வழிமுறையும் இல்லை.

அடுத்து தமிழ்நாடு மின்சார வாரியம் குறைந்த விலையில் மின்சாரத்தை வாங்க வேண்டும். அதாவது ஒரு யூனிட் ரூ.3.50 அல்லது 5.00 ரூபாய்க்கு மேல் வாங்க கூடாது என்று தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை வாரியம் கூறியதாக இங்கே பேசிய பல உறுப்பினர்கள் ஒரு தவறான செய்தியைச் சொன்னார்கள். தமிழ்நாடு மின்சார வாரியம் என்ன கூறுகின்றதென்றால், இந்தக் கூடுதல் விலையை நிர்ணயிக்கின்றபோது, மின்சார உற்பத்திக்குப் பயன்படுத்துகின்ற மூலப் பொருளின் விலை எவ்வளவு இருக்க வேண்டும் என்று நிர்ணயிக்கின்றார்கள். அத்துடன் அந்த நிறுவனத்தினுடைய நிரந்தரக் கட்டணம் சேர்ந்துகொள்ளும். இப்படியாக அந்தப் மூலப்பொருளின் விலையுடன் நிரந்தரக் கட்டணத்தையும் சேர்த்தால், ஒரு யூனிட் ரூ.5.50 என்ற அளவிற்கு வரும். இதற்குப் பெயர் வரையறுக்கப்பட்ட மின் கொள்முதல். இதையும் கூறிவிட்டு, அதற்குப் பின்னால் என்னவென்றால், வரையறுக்கப்பட்ட மின் கொள்முதலுக்குமேல் நீங்கள் கொள்முதல் செய்ய வேண்டும் என்று சொன்னால், நீங்கள் கொள்முதல் செய்யக் கூடாது என்று தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் சொல்லவில்லை. இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இந்த மாதிரி கட்டுப்பாடு விதித்தால் இந்தியாவே இருண்டுவிடும். இந்த விலைக்குக் கிடைத்தால் வாங்கிக்கொள்ளுங்கள். இதற்குமேல் விலை கொடுத்து வாங்கும்போது எங்களிடம் அனுமதி பெற்று வாங்குங்கள் என்று கூறுகின்றார்கள். அந்த மாதிரியான அனுமதியை நாங்கள் கேட்கின்றோம். அவர்களும் கொடுக்கின்றார்கள். இதுவரை தமிழ்நாடு மின்சார வாரியம் 2012 மார்ச் மாதத்திலிருந்து 2013 ஏப்ரல் மாதம் வரை கொள்முதல் செய்யப்பட்டதற்கு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் அனுமதி அளித்துள்ளது. 2014–ல் வரையறைக்கு உட்பட்டு வாங்கிய

மின்சாரத்திற்கும் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் ஒப்புதல் வழங்கியுள்ளது. அப்படி ஏதாவது கூடுதல் விலை கொடுத்து மின்சாரம் வாங்கப்பட்டிருக்குமேயானால், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் எப்படி அதற்கு ஒப்புதல் அளித்திருக்கும்? இந்த வரையறைக்குள் மின்சாரத்தை வாங்குங்கள். அதற்குமேல் கூடுதல் விலை கொடுத்து வாங்க வேண்டும் என்று சொன்னால், எங்களிடம் அனுமதி பெறுங்கள் என்றுதான் கூறுகின்றார்கள். அவர்களுடைய ஆர்டரிலே என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்பதை இங்கே நான் சொல்ல விரும்புகின்றேன். 30–3–2012 அன்று தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் அந்தக் கட்டணத்தை நிர்ணயிக்கும்போது போட்ட அந்த ஆர்டர்தான் இது:

"Wherever the Power Stations are to be despatched outside Merit Order, TANGEDCO shall obtain approval of the Commission in advance by furnishing reasons for such action. In case of emergencies, TANGEDCO is permitted to resort to such a practice, but will approach the Commission within a week of such action, along with the reasons for such action."

பிற்பகல் 12–15

அவர்கள் எங்கே தடுத்திருக்கின்றார்கள்? உங்களுக்குத் தேவையான மின்சாரத்தை வாங்கிக் கொள்ளுங்கள், அதற்கு ஒரு வார காலத்திற்குள் விண்ணப்பிக்க வேண்டும் என்றுதான் சொல்கின்றார்கள். அடுத்து, அதே ஆர்டரை 2013–ல் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் திருத்துகிறது. 20–6–2013 அன்றைக்கு அந்த ஆர்டரில் என்ன சொல்கின்றார்கள் என்றால் "To take prior approval for power procurement with variable cost more than Rs.3.50 from unapproved sources and sources not getting despatched under MoD. M.O.D. **என்றால்** Merit Order Despatch before purchasing energy, இப்போது என்ன சொல்கின்றார்கள் என்றால் ரூ.3.50 எரிபொருள் செலவும் அதுவும் variable cost தான், அதை நிர்ணயம் செய்கின்றபோது 2003–ல் மத்திய அரசின் மின்சாரச் சட்டம் வந்ததற்குப் பின்பு எந்த மின்சாரக் கொள்முதலும் MoU மூலமாக வாங்க முடியாது. ஆக, புரிந்துணர்வு ஒப்பந்தம் மூலமாக வாங்க முடியாது. ஒப்பந்தங்களின் மூலமாக இறுதி செய்ய முடியாது. வெளிப்படையான ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, அந்த ஒப்பந்தப்புள்ளியில் எது குறைவாக உள்ளதோ அதைத்தான் வாங்க





வேண்டுமே தவிர, டெண்டர் இல்லாமல், ஒப்பந்தப்புள்ளி இல்லாமல் கொள்முதல் செய்ய முடியாது. ஆனால், இதற்கு முன்பு 2009 ஆம் ஆண்டுக்கு முன்பாக புரிந்துணர்வு ஒப்பந்தம் மூலமாக, நேரடியாக போடப்பட்டு, புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்குப் பின்பாக, அடுத்தகட்டமாக மின்சாரக் கொள்முதல் ஒப்பந்தம்–Power Purchase Agreement போட்டுக் கொள்வார்கள். அந்த system இப்போது இல்லை.

உறுப்பினர் திரு. இராமகிருஷ்ணன் சொன்னதற்கு நான் இறுதியாகப் பதில் சொல்கிறேன். இப்பொழுது சொன்னால் அது சரியாக வராது. கடைசியாக அந்தப் பிரச்சினைக்கு வந்துவிடுகிறேன். இதுதான் பழைய system. ஆக, இது வெளிப்படையான கொள்முதல்தான். இதிலே எங்கே தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் வாங்கக் கூடாது என்று சொல்கிறது? வாங்கலாம். அதுதான் வரையறுக்கப்பட்ட கொள்முதல். அதற்கு மேல் போனால் permission வாங்க வேண்டும். அப்படி வாங்கும்போது தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் கொள்முதல் செய்கின்றபோது ஒரு வழிமுறையை உருவாக்குகிறார்கள். அதற்குப் பெயர் Merit Order Despatch. Merit Order Despatch என்றால் நம்முடைய சொந்தத் தேவையை, நமக்கு தேவையான அளவிற்கு, நம்முடைய உற்பத்தியையெல்லாம் பயன்படுத்திவிட்டு, மத்திய அரசு நிறுவனங்களிலிருந்து கிடைக்கின்ற பங்கையும் பயன்படுத்திவிட்டு, பற்றாக்குறைக்கு நீங்கள் கொள்முதல் செய்கின்றபோது இந்த வரைமுறைக்குட்பட்ட அளவிற்கு நீங்கள் கொள்முதல் செய்ய வேண்டும். வரைமுறைக்குட்பட்டு உங்களுக்கு மின்சாரம் கிடைக்கவில்லையென்றால் கூடுதல் மின்சாரம் வாங்குகின்றபோது Merit Order Despatch என்ற முறையை அவர்கள் நிர்ணயித்துக் கொடுத்திருக்கிறார்கள். Merit Order Despatch என்றால் உங்களுடைய கூடுதல் தேவைக்கு எந்த அளவு குறைந்த விலை கிடைக்கிறதோ, குறைந்த விலையிலிருந்து படிப்படியாகச் சென்று ஏறுமுக வரிசையில் கொள்முதல் செய்ய வேண்டும். குறைந்த விலையில் எது கிடைக்கிறதோ அதைத் தொடங்க வேண்டும். அதிலும் பற்றவில்லையென்றால் அடுத்த விலைக்குச் செல்லுங்கள். அதிலும் பற்றவில்லையா அடுத்த விலைக்குச் செல்லுங்கள். ஏறுமுக வரிசையில் உங்கள் தேவை நிறைவடைகின்ற வரையில், குறைந்த விலையில் ஆரம்பித்து, ஏறுமுக வரிசையிலே கொள்முதல் செய்ய வேண்டும். இதை

[திரு. நத்தம் ஆர். விசுவநாதன்][2014 டிசம்பர் 5

நாங்கள் சொல்லவில்லை. தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் சொல்கிறது. அந்த அடிப்படையில்தான் மின்சாரம் கொள்முதல் செய்யப்படுகிறது.

உதாரணத்திற்கு, 70 சதவிகிதம் மின்சாரம் நம்முடைய தேவைக்கு, நம்முடைய உற்பத்தியிலும், மத்திய அரசின் உற்பத்தியிலும் கிடைக்கிறது. மீதி 30 சதவிகிதம் நாம் கொள்முதல் செய்கிறோம். அப்படிக் கொள்முதல் செய்யவில்லை என்று சொன்னால், ஏறத்தாழ தமிழ்நாட்டில் பாதி நேரம் இருண்டுவிடும். கிட்டத்தட்ட 6 மணி நேரம், 8 மணி நேரத்திற்குமேல் power cut – மின்சார வெட்டை அமல்படுத்த வேண்டிய கட்டாயம் வந்துவிடும். அப்படிப்பட்ட சூழ்நிலை வரக் கூடாது. தமிழ்நாட்டு மக்களுக்கு எந்தச் சூழ்நிலையிலும், அது நமது உற்பத்தி மூலமாகவோ அல்லது நம்முடைய தேவை அளவிற்கு உற்பத்தியை எட்டுகின்றவரை கொள்முதல் செய்தாவது மக்களுக்குத் தடையில்லாத மின்சாரத்தை வழங்க வேண்டும் என்பதுதான் நமது மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கொள்கை, சிந்தனை, கோட்பாடு. (மேசையைத் தட்டும் ஒலி) மக்களுடைய நலன்தான் பிரதானம். மக்களுடைய நலனுக்காக பற்றாக்குறை வரும்போது கொள்முதல் செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. அதை மத்திய அரசும் அனுமதிக்கிறது, தமிழ்நாடு மின்சார வாரியமும் அனுமதித்து அதற்கு ஒழுங்குமுறையும் வைத்திருக்கிறார்கள். அதற்குப் பின்பாக இந்த அளவுக்கு வரும்போது, முதல் முறையாக தமிழ்நாடு மின்சார வாரியம் வாங்கியிருப்பதைச் சொல்லிவிடுகிறேன். இப்பொழுது introduction. உங்களுக்கு எப்படிக் கொள்முதல் செய்யப்படுகிறது என்ற விவரத்தை நான் முதலிலேயே சொல்லியிருக்கிறேன்.

இப்பொழுது தமிழ்நாட்டிலே மின் சக்தி தேவை கூடிக் கொண்டே வருகிறது. 2012–2013 ஆம் ஆண்டிலே 67 ஆயிரத்து 208 மில்லியன் யூனிட்தான் நமக்குத் தேவையிருந்தது. 2013–2014 ஆம் ஆண்டிலே 76 ஆயிரத்து 445 மில்லியன் யூனிட் கூடியிருக்கிறது. இதே அடுத்த வருடம் என்னவாகும் என்றால், நிச்சயமாக 2013–2014 ஆம் ஆண்டில் 76 ஆயிரத்து 445 மில்லியன் யூனிட்டாக இருப்பது, இன்னமும் 2014–2015 ஆம் ஆண்டில் எவ்வளவு இருக்குமென்றால் 91 ஆயிரத்து 642 மில்லியன் யூனிட் வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அப்பொழுது பழைய தி.மு.க. ஆட்சிக் காலத்திலெல்லாம் ஏறத்தாழ 7 சதவிகிதம், 8 சதவிகிதம்தான்



2014 டிசம்பர் 5][திரு. நத்தம் ஆர். விசுவநாதன்]

ஆண்டுக்கு ஆண்டு வளர்ச்சித் தேவை கூடிக்கொண்டே வந்தது. ஆனால், இப்பொழுது தேவை அதிகரித்திருக்கிறது. இப்பொழுது ஆண்டுக்கு 14 சதவிகிதம் என்ற அளவிலே, அடுத்த ஆண்டு 20 சதவிகிதம்கூட கூடுதலாக வாய்ப்பிருக்கிறது. அந்த அளவுக்கு நாளுக்கு நாள் தேவை அதிகரித்துக் கொண்டேயிருக்கிறது. தேவை அதிகரிக்கின்றபோது, அந்தப் பற்றாக்குறையை ஈடு செய்வதற்குக் கொள்முதல் செய்கின்றபோது இந்த முறை தவிர்க்கப்பட முடியாதது.

பிற்பகல் 12–20

அதிலும் குறிப்பாக, இந்தியாவில் பல மாநிலங்கள் மின் பற்றாக்குறையால் தவிக்கின்றன. வட இந்தியாவில் உள்ள ஒரு சில மாநிலங்களைத் தவிர, அனைத்து மாநிலங்களும் மின் பற்றாக்குறை மாநிலங்களாகத்தான் இருக்கின்றன. குறிப்பாக, தென்னிந்தியாவில் உள்ள தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகா, கேரளா, பாண்டிச்சேரி போன்ற அனைத்து மாநிலங்களும் மிகவும் மின் பற்றாக்குறை மாநிலங்களாக இருக்கின்றன. இந்த மாநிலங்களோடு தமிழ்நாட்டை ஒப்பிடும்போது மற்ற மாநிலங்களைவிட சிறந்த முறையில் கூடுதலாக மின் உற்பத்தி செய்து, குறைந்த மின் வெட்டு என்ற அளவிலே இருப்பது மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மண்ணான இந்தத் தமிழகத்தில்தான் என்பதைப் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அது குறித்த விவரங்களையெல்லாம் அடுத்த வாய்ப்பு வரும்போது சொல்கிறேன்.

இப்பொழுது மின் கொள்முதல் குறித்து மட்டும் சொல்கிறேன். மின்சாரம் கொள்முதல் செய்யும்போது, முதலில் குறைந்த விலையில் மின்சாரத்தைக் கொள்முதல் செய்கிறோம். அந்த விலையிலேயே நமக்குத் தேவையான அனைத்து மின்சாரமும் கிடைத்துவிட்டால், அடுத்த விலைக்குப் போக வேண்டிய அவசியம் இல்லை. அடுத்த விலையில் மின்சாரம் கொள்முதல் செய்கிறோம். அந்த விலையில் மின்சாரம் கிடைத்துவிட்டால், அடுத்த விலைக்குப் போகத் தேவையில்லை. அதிலும் தேவையான அளவு மின்சாரம் கிடைக்கவில்லையென்று சொன்னால், அதற்குத்தான் Merit Order Despatch என்ற ஒரு முறையில் மின்சாரம் கொள்முதல் செய்யப்படுகிறது. அந்த வகையில் இன்றைய தமிழகத்தின் மொத்த மின்சாரத் தேவையில் 3,330 மெகா வாட் அளவிற்கு, 15 ஆண்டுகளுக்கு Long Term Agreement மூலம்

[திரு. நத்தம் ஆர். விசுவநாதன்][2014 டிசம்பர் 5

தனியாரிடமிருந்து கொள்முதல் செய்து நீண்ட கால ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டு, இறுதி செய்யப்பட்டு, அனைவருக்கும் Power Purchase Agreement எல்லாம் போட்டு கொடுத்துவிட்டோம். அதனைக் கொடுத்ததற்குப் பின்னாலும், 3,330 மெகா வாட் மின்சாரம் தமிழகத்திற்கு வழங்குவதற்காக டெண்டர் எடுத்தவர்கள் பெரும்பாலும் வட இந்திய ஆட்கள். அந்த மின்சாரத்தைத் தமிழகத்திற்குக் கொண்டு வருவதற்குப் போதிய வழித்தடம் இல்லை. ஆனால் இப்பொழுது வழித்தடம் வந்திருக்கிறது. நாம் 3,330 மெகா வாட் மின்சாரம் கொள்முதல் செய்ய ஒப்பந்தம் செய்திருந்தாலும், தற்போது நமக்கு 224 மெகா வாட்தான் கிடைத்துக்கொண்டிருக்கிறது. மின்சாரம் கொண்டுவருவதற்கு வழித்தடம் கிடைக்கப்பெற்றவுடன் மீதி மின்சாரமும் கொள்முதல் செய்யப்படும். இந்த 3,330 மெகா வாட் மின்சாரத்தின் விலை எவ்வளவு என்று சொன்னால் 4 ரூபாய் 91 பைசா ஆகும். இந்த 3,330 மெகா வாட் மின்சாரம் அனைத்தும் கிடைத்துவிட்டால், நாம் அடுத்த விலைக்கு மின்சாரம் வாங்கப் போயிருக்கத் தேவையில்லை. 3,330 மெகா வாட் மின்சாரம் கொள்முதல் செய்வதில், 224 மெகா வாட் மின்சாரம்தான் கிடைக்கிறது. நாம் ஒப்பந்தம் செய்த அதே காலக்கட்டத்தில் 25 ஆண்டு கால ஒப்பந்தத்தின் வாயிலாக உத்தரப் பிரதேசத்தில் மின்சாரம் வாங்கியிருக்கிறார்கள். நாம் 4 ரூபாய் 91 பைசாவிற்கு ஒப்பந்தம் செய்திருந்தோம் அல்லவா? நாம் ஒரு யூனிட் மின்சாரத்தை 4 ரூபாய் 91 பைசாவிற்கு ஒப்பந்தம் செய்திருந்த அதே காலகட்டத்தில், அவர்கள் ஒரு யூனிட் மின்சாரத்தை 5 ரூபாய் 73 பைசா வரைக்கும் நீண்ட கால ஒப்பந்தத்தின் வாயிலாக வாங்கியிருக்கிறார்கள்.

அதற்கடுத்தபடியாக இதிலும் போதுமான அளவில் மின்சாரம் கிடைக்கவில்லையென்றால், நடுத்தர கால ஒப்பந்தத்திற்குச் செல்கிறோம், Medium Term agreement. இந்த நடுத்தரக் காலக்கட்டத்தில் நமக்குக் கிடைத்தது வெறும் 500 மெகா வாட் மின்சாரம்தான். அதற்கு 4 ரூபாய் 88 பைசா முதல் 4 ரூபாய் 99 பைசா வரை வாங்கியிருக்கிறோம். அதிலேயே கிடைத்துவிட்டால் நாம் அடுத்த விலைக்குப் போக வேண்டியதில்லை. இதற்கு முன்னாலேயே 4 ரூபாய் 4 பைசாவிற்கு நாம் மின்சாரம் வாங்கியிருக்கிறோம். இதிலும் 500 மெகா வாட் மின்சாரம்தான் கிடைக்கிறது. இதுபோல இதே காலகட்டத்தில் மற்ற மாநிலங்களும் மின்சாரம் வாங்கியிருக்கிறார்கள். மகாராஷ்டிரா மாநிலத்தில் இதே



2014 டிசம்பர் 5][திரு. நத்தம் ஆர். விசுவநாதன்]

Medium term agreement மூலம் மின்சாரம் வாங்கியிருக்கிறார்கள். Medium term agreement மூலம் நாம் 4 ரூபாய் 88 பைசா முதல் 4 ரூபாய் 99 பைசா வரை என்ற அளவில் மின்சாரம் வாங்கியிருக்கும்போது, மகாராஷ்டிரா மாநிலம் இதே காலகட்டத்தில் Medium term agreement மூலம் 5 ரூபாய் 46 பைசாவிற்கு வாங்கியிருக்கிறார்கள்.

அதற்கடுத்தபடியாக, குறுகிய கால ஒப்பந்தம்–Short term agreement. இந்த முறையில் மின்சாரத்தின் விலை சிறிது கூடும். ஒரு வருடத்திற்குள் மின்சாரம் வாங்குவது Short term agreement ஆகும். ஒரு வருடத்திலிருந்து ஐந்து ஆண்டுகள் வரை மின்சாரம் வாங்குவது Medium term agreement. ஐந்து ஆண்டுகளுக்குமேல் மின்சாரம் வாங்குவது Long term agreement ஆகும். Long term agreement மூலம் மின்சாரம் வாங்கும்போது விலை சிறிது குறையும். Medium term agreement மூலம் மின்சாரம் வாங்கும்போது, விலை சிறிது கூடுதலாக இருக்கும். குறுகிய கால ஒப்பந்தத்தின்மூலம் வாங்கப்படும் மின்சாரத்தின் விலை இன்னும் சிறிது கூடுதலாக இருக்கும். குறுகிய கால ஒப்பந்தத்தின்மூலம் நமக்கு 1,393 மெகா வாட் மின்சாரம் 5 ரூபாய் 50 பைசா விலையில் கிடைக்கிறது. இதுபோக, இதே காலத்தில் இன்னொரு கொள்முதலில் என்ன செய்திருக்கிறோம் என்று சொன்னால், 4 ரூபாய் 93 பைசாவிற்கு வாங்கியிருக்கிறோம். இன்னொரு ஒப்பந்தமும் இறுதி செய்யப்பட்டிருக்கிறது. அதிலே 773 மெகா வாட்டுக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறது. அந்த 773 மெகா வாட் 4 ரூபாய் 93 காசுக்கு வாங்கப்பட்டிருக்கின்றது. ஆனால், அதிலே 150 மெகா வாட்தான் கிடைக்கிறது. இதில் கொள்முதல் செய்யப்பட்ட அளவு அத்தனையும் கிடைத்தால் நாம் அடுத்ததுக்குப் போக வேண்டியதில்லை. 773 மெகா வாட் கொள்முதல் செய்ய ஒப்பந்தம் போட்டால், அதில் 150 மெகா வாட் மின்சாரம்தான் கிடைக்கிறது. 3,330 மெகா வாட் கொள்முதல் செய்ய ஒப்பந்தம் போட்டால் 224 மெகா வாட் மின்சாரம்தான் கிடைக்கிறது. ஆக, அதனால் அடுத்தடுத்து கொள்முதலுக்குப் போக வேண்டிய நிலை ஏற்படுகிறது.

பிற்பகல் 12–25

நாம் 4 ரூபாய் 93 காசுக்கு வாங்கியிருக்கிற இதேநேரத்தில், கேரள அரசு 5 ரூபாய் 88 பைசாவுக்கு வாங்கியிருக்கிறது. இதே

காலக் கட்டத்தில் கேரளாவில் இருக்கிற கொள்முதல் விலையை ஒப்பிட்டுச் சொல்கிறேன்.

அதேபோல், ST–CMS, Penna அபா போன்ற தனியார் நிறுவனங்கள் இருக்கின்றன. அந்தத் தனியார் நிறுவனங்களிடமிருந்து–இதை Independent Power Project (I.P.P.) என்று சொல்வார்கள்–அதாவது தனிநபர் நிறுவனங்கள். இந்த மூன்று நிறுவனங்களிடமிருந்து நாம் ஏறத்தாழ 4 ரூபாய் 4 பைசாவுக்குக் கொள்முதல் செய்கிறோம். இந்த நிறுவனங்களிடமிருந்தும் தேவையான அளவிற்கு மின்சாரம் நமக்குக் கிடைக்கவில்லை. அந்த நிறுவனங்களிடமிருந்து வாங்குகின்ற மின்சாரத்தின் அளவில் நமக்கு அதிகபட்சமாக 2,823 மில்லியன் யூனிட் மின்சாரம்தான் கிடைக்கிறது. இதிலே மின்சாரத்தின் தேவை பூர்த்தியாகிவிட்டால், அடுத்தடுத்த கொள்முதலுக்கு நாம் போக வேண்டிய சூழ்நிலை ஏற்படாது. அதே நிறுவனங்களிடமிருந்தே 4 ரூபாய் 4 பைசாவுக்கு வாங்கிக்கொள்ளலாம்.

அதேபோல், ரூ.4, ரூ.4.88, ரூ.4.99, ரூ.5.50 இதற்குள் அனைத்துத் தேவைகளுக்கு ஏற்றாற்போல் இருக்கும். இதிலே அத்தனையும் நிறைவடைகின்றபோது, அதிகபட்ச விலைக்குக் கொடுக்கின்ற அந்த நான்கு தனியார் நிறுவனங்கள்–நீங்கள் சொல்கின்ற, GMR, Madurai Power Corporation, Samalpatti, Pillai Perumal Nallur (P.P.N.). இந்த நான்கு தனியார் நிறுவனங்கள் கொள்முதல் செய்கின்ற மின்சாரத்தைக் கூடுதல் விலை கொடுத்து வாங்குகிறோம் என்பதுதானே நமக்குள்ள பிரச்சினை. இதிலே கொள்முதல் என்னவென்று சொன்னால், இதற்கு ஒப்பந்தம் போட்டபோது, இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் டெண்டரில் வரவில்லை. இதற்கு முன்பே போட்டுவிட்டார்கள். அதற்குப் பின்னால் வருகிறேன். அதை இப்போது சொன்னால் அவர்கள் வருத்தப்படுவார்கள். திரு. இராமகிருஷ்ணன் அவர்கள் வருத்தப்படுவார்கள். அதற்காக நான் கடைசியில் சொல்கிறேன். இந்த நான்கு தனியார் நிறுவனங்களிடமிருந்தும் கொள்முதல் செய்த மின்சாரத்தை ரூ.13, ரூ.14–க்குக் கூடுதல் விலை கொடுத்து வாங்கியிருப்பதாக குற்றச்சாட்டு சொன்னார். அதிலே ஒப்பந்தம் எப்படிப் போட்டிருக்கிறார்கள் என்று சொன்னால், power purchase ஒப்பந்தத்தில் fixed cost + variable cost. அதாவது நிரந்தரக் கட்டணம், யூனிட் ஒன்றுக்கு கொள்முதல் செய்தாலும், கொள்முதல் செய்யவில்லை என்றாலும் அதற்குண்டான பணத்தைக் கொடுக்க





வேண்டும். அதுபோக அதற்குப் பயன்படுத்துகின்ற மூலப்பொருள், எரிபொருள் என்ன விலையோ அதைத் தமிழ்நாடு மின்சார வாரியம் அந்த நிறுவனத்திற்குக் கொடுக்க வேண்டும். இதில் பார்த்தீர்களானால், GMR போன்ற நிறுவனங்கள்–P.P.N. நிறுவனத்தைப்பற்றி உறுப்பினர்கள் சொன்னார்கள். திரு. இராமகிருஷ்ணன் கவனியுங்கள். P.P.N. நிறுவனத்துக்கு ஒரு யூனிட்டுக்குக் கிடைப்பது நிரந்தரக் கட்டணம் ரூ.1.37 பைசாவாகும். தனியாருக்கு யூனிட் ஒன்றுக்குக் கிடைப்பது ரூ.1.37 பைசாவாகும். மீதித் தொகை–எதனால் செய்யப்படுகிறது என்றால் Natural Gas–னாலும், நாப்தா மூலமாகவும் அதை உற்பத்தி செய்கின்றார்கள். அந்த Natural Gas மற்றும் நாப்தா மூலமாக உற்பத்தி செய்கின்றபோது அதனுடைய விலை ஏறத்தாழ ரூ.12, ரூ.13 என்ற அளவில் உயருகிறது. இப்போது பெட்ரோல் விலை குறைந்திருப்பதால் ரூ.14 என்றிருந்தது ரூ.12.55 பைசாவாகக் குறைந்துள்ளது. ரூ.13.92 பைசா என்ற நிலையில் இருந்தது இப்போது ரூ.12.55–க்கு வந்திருக்கிறது. பெட்ரோலின் விலை குறையக் குறைய அதனுடைய விலையும் குறைந்து கொண்டே வருகின்றது. அவர்களுக்கு ரூ.1.37 பைசாதான் கிடைக்கிறது. மீதித் தொகை எங்கே செல்கிறது என்று சொன்னால், மத்திய அரசு நிறுவனங்களான இந்தியன் ஆயில் கார்ப்பரேஷனுக்கும் மற்றும் பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷனுக்கும் போய்விடுகிறது. இவர்கள் யார்? இவர்களும் தனியார் அல்ல. கூடுதல் தொகை முழுவதும், Raw material முழுவதும் மத்திய அரசு நிறுவனத்திற்குச் செல்கிறது.

அதேபோல், சாமல்பட்டியில் நிரந்தரக் கட்டணம். இந்த நிறுவனத்திற்குக் கிடைக்கிற பங்கு ஒரு யூனிட்டுக்கு ரூ.1.80 பைசாவாகும். ஆனால், ரூ.12, ரூ.10.39 காசுகள் என்று இருந்தாலும்கூட, மீதித் தொகை மத்திய அரசு நிறுவனங்களான இந்தியன் ஆயில் கார்ப்பரேஷனுக்கும் மற்றும் பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷனுக்கும் போய்விடுகிறது.

பிற்பகல் 12–30

BPCL தனியார் நிறுவனம் அல்ல. Raw material-ஆல் ஏற்படுகின்ற கூடுதல் விலை மத்திய அரசு நிறுவனத்திற்குப் போகிறது. அதேபோல சாமல்பட்டியிலே fixed cost அந்த நிறுவனத்திற்குக் கிடைக்கின்ற பகுதி, ஒரு யூனிட்டிற்கு ரூ.1.80. ஆனால், ரூ.12, ரூ.10.39 காசுகள் என்றிருந்தாலும்கூட மீதியெல்லாம் இந்தியன்

[திரு. நத்தம் ஆர். விசுவநாதன்][2014 டிசம்பர் 5

ஆயில் கார்ப்பரேஷனுக்குத்தான், BPCL நிறுவனத்துக்குத்தான், மத்திய அரசு நிறுவனத்துக்குத்தான் செல்கின்றன.

அடுத்தபடியாக இந்த சாமல்பட்டியும் மதுரை Power Corporation மூலப்பொருள் LSHS அது liquid stage. அதற்குப் பெயர் Low Sulphur Heavy Stock என்று சொல்வார்கள். ஒரு Liquid Chemical product. அதாவது petroleum product part. Petroleum Product-ஐ மூலப் பொருளாகக் கொண்டு, எதுவாக இருந்தாலும் அதற்கு மத்திய அரசாங்கத்தின் Oil Corporation நிர்ணயிக்கிற விலை variable cost, மார்க்கெட்டில் வரும் விலையைக் கொடுக்க வேண்டும். ஆனால், என்ன விலையாக இருந்தாலும் நிறுவனத்திற்குப் போய்ச் சேருவது ரூ.1.80 தான்.

அதேபோல Madurai Power Corporation நிறுவனத்திற்குக் கொடுத்ததும் LSHS தான். மூலப் பொருள் liquid petroleum product தான். அவர்களுக்கு fixed cost ரூ.2.07 ஆகும். GMR Power Corporation பேசின் பிரிட்ஜில்தான் இருக்கிறது. அவர்களுக்கு fixed cost ரூ.1.05 ஆகும். இந்த நிரந்தரக் கட்டணத்தைப் பற்றி ஒப்பந்தத்தில் என்ன சொல்லியிருக்கின்றார்கள் என்றால், கொள்முதல் செய்தாலும் இந்தப் பணம் கொடுக்க வேண்டும், கொள்முதல் செய்யாவிட்டாலும் இந்தப் பணம் அவர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறது. மொத்த கொள்முதல் திறன் 333 மெகா வாட். GMR–க்கு 190, சாமல்பட்டிக்கு 106, Madurai Power Corporation-க்கு 198 ஆகும். அவர்களுடைய capacity–க்கு கொள்முதல் செய்யலாம். கொள்முதல் செய்தாலும், கொள்முதல் செய்யவில்லையென்றாலும் தனியார் நிறுவனத்திற்குக் கிடைப்பது ஒரே தொகைதான். எனவே, தனியார் நிறுவனத்திற்குக் கொடுத்துவிட்டார்கள் என்று சொல்வதில் அர்த்தமில்லை என்பதற்காகச் சொல்கிறேன். உங்கள் தலைவர் மீதியெல்லாம் எங்கே போகிறது என்று கேட்கிறார். மத்திய அரசு நிறுவனத்துக்குத்தான் போகிறது. காங்கிரஸ் ஆட்சியிலும், பி.ஜே.பி. ஆட்சியிலும் உங்களுடைய நிறுவனத்துக்குத்தான் போனது. உங்கள் தலைவர் மர்மம் என்று தேவையில்லாத பிரச்சினைகளைச் சொல்கிறார். அவருக்குத் தெளிவு, (குறுக்கீடு) நான் எதுவென்றே சொல்லவில்லை. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.



2014 டிசம்பர் 5]

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** நான் பேசி முடித்தவுடன் சந்தேகம் கேளுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: அவர் பேசி முடிக்கட்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** நான் பேசி முடித்தவுடன் கேளுங்கள். அதாவது மத்திய அரசு நிறுவனத்துக்குத்தான் செல்கிறது. தனியார் நிறுவனத்துக்கு கிடைப்பது ரூ.1.05, ரூ.2.07, ரூ.1.80, ரூ.3.37.

அடுத்த கட்டமாக, இந்தக் கொள்முதல் எப்பொழுது செய்யப்படுகிறது என்று சொன்னால், ஒரு முக்கியமான தொழில்நுட்பமான point. நமக்குத் தேவை ஏற்பட்டால் இந்தக் கொள்முதலைத் தொட மாட்டோம். நாம் நிறைவடைந்துவிட்டால், இதைத் தொடவே மாட்டோம். குறைந்த விலையிலே கொள்முதல் கிடைத்துவிட்டால், கூடுதல் விலையை நாம் நிறுத்திவிடுவோம். Suppose திடீரென்று பற்றாக்குறை ஏற்பட்டால், தேவை கூடும் அல்லது ஏதாவது கருவி பழுதடைந்துவிடும் அல்லது எதிர்பாராத சூழ்நிலையில் காற்றாலை உற்பத்தி திடீரென்று குறையும். காலையில் 500 மெகா வாட்டாக இருக்கும். மாலையில் 4,000 மெகா வாட்டாக இருக்கும். இந்த ஏற்ற, இறக்கம் இருக்கும்போது அதை நிறைவு செய்வதற்கு emergency purpose–க்கு இதைப் பயன்படுத்திக்கொள்ளலாம். Emergency, ஏதாவது பழுதடைந்தால், ஏதாவது தேவைப்பட்டால், திடீர் தேவை ஏற்பட்டால், அதுவும், குறிப்பாக பள்ளிக்கூட நேரங்கள், கல்லூரி மாணவர்கள் பரீட்சை எழுதுகின்ற நேரம், படிக்கின்ற நேரம், திருவிழா நேரம், முக்கியமான பண்டிகைகள், இப்படிப்பட்ட நேரங்களில் மின் வெட்டு வரக்கூடாது என்பதற்காக திடீரென்று தேவையேற்படும்போது ஈடுசெய்வதற்குக் குறிப்பிட்ட சமயங்களில் பயன்படுத்துவதற்கு, சில மணி நேரங்களுக்கு மட்டுமே கொள்முதல் செய்யப்படுகிறது. 24 மணி நேரமும் தொடர்ந்து கொள்முதல் செய்யப்படுவதில்லை. இதிலே, ஒரு தொழில்நுட்ப ரீதியாக, அனல் மின் நிலையங்களின் உற்பத்தியாக இருந்தாலும் நினைத்த நேரத்தில் நிறுத்த முடியாது. நினைத்த நேரத்தில் தொடங்க முடியாது. அதற்குப் பல மணி நேரம் ஆகும். பற்றாக்குறை ஏற்பட்டால் அவசரமாகப் போடவும் முடியாது. நிறுத்தவும் முடியாது. அது தொடர்ந்து இயங்கிக் கொண்டேயிருக்கும். ஆனால், இந்த petroleum product–மூலம் செய்யப்படுகின்ற உற்பத்தி மாத்திரம் நினைத்தபடி

15 நிமிடத்தில் நிறுத்தலாம். 15 நிமிடத்தில் start செய்யலாம். தேவை இல்லாதபோது அவர்களிடம் கொள்முதல் செய்யப்படுவதில்லை. எப்போதாவது Emergency–க்கு மட்டும் கொள்முதல் செய்யப்படுகிறது. அதிலும் கேட்டீர்களென்றால், உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், கார்களில் Stepney Tyre வைத்திருப்பதுபோலத்தான் இதுவும். அது எப்போதும் ஓடிக் கொண்டிருக்காது. திடீரென்று டயர் பஞ்சர் ஆகிவிட்டதென்றால், Stepney Tyre–ஐ மாற்றிக்கொள்கிறோம். அதுபோல, ஏதாவது ஒரு யூனிட் பழுதடைந்து விட்டால், இதை வாங்கிக்கொள்கிறோம். பிறகு அது சரியாகிவிட்டவுடன், வாங்குவதை நிறுத்திவிடுகிறோம். முழுக்க, முழுக்க அவ்வாறு வாங்கப்படுவதில்லை, தனியாருக்கு நாம் இலாபம் ஏற்படுத்திக் கொடுப்பதில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–35

இப்போது இன்னொரு முக்கியமான விஷயத்திற்கு வருகிறேன். இப்போதுதான் நான் திரு. இராமகிருஷ்ணன் அவர்களுடைய பேச்சுக்குப் பதிலளிக்க வருகிறேன். என்னவென்றால், நான் சொன்ன அந்த நான்கு நிறுவனங்களும். . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசி முடித்த பிறகு clarification வைத்துக்கொள்ளலாம், உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** ஏதாவது பிரச்சினை செய்து, இதிலிருந்து தப்பித்து ஓடக்கூடாது, உட்காருங்கள். (குறுக்கீடு) இப்போது பதில் சொல்கிறேன். அதனால் வெளியேறிவிடாதீர்கள், உட்காருங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெ. அன்பழகன், உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசி முடிக்கட்டும். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் பேசி முடிக்கட்டும், உட்காருங்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** அவரைக் கொஞ்சம் கட்டுப்படுத்துங்கள். அவரைக் கொஞ்சம் கட்டுப்படுத்த வேண்டுமென்று தி.மு.க. சட்டமன்றக் கட்சித் துணைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) நான் ஆரம்பிக்கும் முன்னரே இப்படி நடந்து கொண்டீர்களென்றால், ஆரம்பித்த





பிறகு என்ன செய்யப்போகிறீர்கள் என்று தெரியவில்லை, உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். நான் உங்களுக்குப் பதில் சொல்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெ. அன்பழகன், என்னைப் பார்த்துப் பேசுங்கள். (குறுக்கீடு) என்னைப் பார்த்துப் பேசுங்கள். (குறுக்கீடு) வாய்ப்பு இல்லை, உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர் பேசி முடிக்கட்டும். மாண்புமிகு அமைச்சர் பேசி முடித்த பிறகு வாய்ப்புத் தருகிறேன், உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** பேசி முடித்த பிறகு கேளுங்கள். ஏன் பொறுமையில்லாமல் இருக்கிறீர்கள்? நான் பேசிய பிறகு கேளுங்கள். நீங்கள் பேசுங்கள், கேளுங்கள், எவ்வளவு வேண்டுமானாலும் கேளுங்கள், எல்லாவற்றுக்கும் விளக்கம் சொல்லிவிடுகிறேன். நீங்கள் கேளுங்கள், கேளுங்கள், கேட்டுக்கொண்டே இருங்கள்; நான் சொல்கிறேன், சொல்கிறேன், சொல்லிக்கொண்டே இருக்கிறேன். முழுவதும் பேசி முடித்த பிறகு கேளுங்கள்.

அடுத்ததாக, திரு. இராமகிருஷ்ணன் P.P.N. Power Corporation–Pillai Perumal Nallur நிறுவனத்திடமிருந்து 12 ரூபாய், 13 ரூபாய் என்று கூடுதல் விலைக்கு வாங்கப்படுவதாகச் சொன்னார், ரொம்ப நியாயமாகத்தான் சொன்னார்; அதேபோல, சாமல்பட்டி நிறுவனத்திடமிருந்து கூடுதல் விலைக்கு வாங்கப்படுகிறது என்று சொன்னார்; Madurai Power Corporation–லிருந்து கூடுதல் விலைக்கு வாங்கப்படுகிறது என்று சொன்னார்; அதேபோல, G.M.R.–லிருந்து கூடுதல் விலைக்கு வாங்கப்படுகிறது என்று சொன்னார்; இதனால் அரசுக்கு அதிக இழப்பு ஏற்படுகிறது என்று அவருடைய ஆதங்கத்தைத் தெரிவித்தார். நான் அவருக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன், எல்லோரும் கவனமாகக் கேளுங்கள், இந்த பாயின்ட்தான் என்னுடைய பதிலுரையிலே highlight. இந்த ஒப்பந்தங்களெல்லாம் போட்டது சாட்சாத் நீங்கள்தான். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் போடப்பட்ட ஒப்பந்தங்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தக் கொள்முதல் ஒப்பந்தங்கள் அனைத்தும் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் போடப்பட்டவை. (குறுக்கீடுகள்) நான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) நான் சொல்வதற்குள் ஏன் இப்படிக் கொதிக்கிறீர்கள்? நான்

குறையாகச் சொல்லவில்லை. ஏதோ நாங்கள் ஒப்பந்தம் போட்டு, கொள்முதல் செய்தது மாதிரி திரு. இராமகிருஷ்ணன் சொன்னார், அதற்கு நான் பதில் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. இராமகிருஷ்ணன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர் பேசி முடிக்கட்டும், பிறகு பேசலாம். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் பேசி முடிக்கட்டும், பிறகு பேசலாம்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** பற்றாக்குறை ஏற்படும்போது மட்டும்தான் அப்படிக் கொள்முதல் செய்கிறோம், இல்லையென்று சொல்லவில்லை. ஆனால், ஏதோ நாங்கள் மட்டும்தான் இப்படிக் கொள்முதல் செய்தது போலவும், உங்கள் ஆட்சியில் இப்படியெல்லாம் கொள்முதல் செய்யாதது போலவும், நாங்கள் மட்டும்தான் ஏதோ கொள்முதல் செய்து அரசுக்கு இழப்பு ஏற்படுத்தியது போலவும் பேசினீர்கள். இது, பற்றாக்குறை நேரத்தில் பயன்படுத்தப்படுகிறது என்பது உண்மை. ஆனால், முதல் முதலில் மின்சாரக் கொள்முதல் ஒப்பந்தத்தைப் போட்டது 3–1–1997–ல். நான் பேசும்போது கொஞ்சம் குறுக்கிடாமல் இருங்கள்.

(உறுப்பினர் திரு. ஜெ. அன்பழகன் அவையின் முன் பகுதிக்கு வந்து திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்றக் கட்சித் துணைத் தலைவர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களிடம் ஏதோ பேசினார்.)

தி.மு.க. சட்டமன்றக் கட்சித் துணைத் தலைவரின் கவனத்தை அவர் திசை திருப்பாமல், நான் சொல்வதைக் கவனிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். 3–1–1997–ல் P.P.N. Power Corporation உடன் ஒப்பந்தம் போட்டார்கள். 3–1–1997–ல் யாருடைய ஆட்சி? திரு. துரைமுருகன் நீங்களே சொல்லுங்களேன்? யாருடைய ஆட்சி, உங்கள் ஆட்சிதான். அடுத்து, Samalpatti Power Company உடன் 22–5–1998–ல் ஒப்பந்தம் போட்டிருக்கிறீர்கள். 15 முதல் 30 வருடங்களுக்கு ஒப்பந்தம் போட்டுவிட்டு போய்விட்டீர்கள். அது எந்த ஆட்சியில் போட்டாலும், அது தமிழ்நாடு மின்சார வாரியம் போட்ட ஒப்பந்தம்தான். அடுத்து ஆட்சிக்கு வருகின்ற யாரையும் கட்டுப்படுத்தும். 22–5–1998–ல் Samalpatti Power Company உடன் power purchase agreement போட்டிருக்கிறீர்கள். 1998–ல் யாருடைய ஆட்சி? உங்கள் ஆட்சிதான்.





பிற்பகல் 12–40

அதேபோல, மதுரை பவர் கார்பரேஷன் என்ற நிறுவனத்திடம் 25–1–1998 அன்று ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது, அது யாருடைய ஆட்சி? திரு. அர. சக்கரபாணி, நீங்கள் பதில் சொல்லுங்கள். அது யாருடைய ஆட்சியில்? அதுவும் உங்கள் ஆட்சியில்தான்.

ஜி.எம்.ஆர். பவர் கார்பரேஷன் பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனத்திடம் 12–9–1996 அன்று ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது. அது யாருடைய ஆட்சி? அதுவும் உங்கள் ஆட்சியில்தான். இந்த நான்கு நிறுவனங்களிலும் கூடுதல் விலை கொடுத்து மின்சாரம் கொள்முதல் செய்வதாகக் குற்றச்சாட்டு வைத்த திரு. இராமகிருஷ்ணன் அவர்களுக்குச் சொல்கிறேன், இந்த நான்கு நிறுவனங்களிலும் மின்சாரம் வாங்க உங்கள் ஆட்சியில்தான் அதற்கான ஒப்பந்தங்கள் போடப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல (குறுக்கீடுகள்) நான் முதலில் முழு பதிலையும் சொல்லி முடித்துவிடுகிறேன். உங்களுக்கு எவ்வளவு சந்தேகங்கள் இருந்தாலும் பின்னர் கேளுங்கள். வாய்ப்புத் தருகிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முழுமையாக பதில் சொல்லிவிட்ட பின்னர் உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** நான் பதிலளித்த பின்னர், எவ்வளவு சந்தேகங்களைக் கேட்டாலும் அதற்குரிய பதில் சொல்கிறேன். தயவுசெய்து நான் சொல்வதைக் கேளுங்கள். நீங்கள் என்னுடைய பதிலைக் கேட்டுவிட்டு, அதில் எந்த சந்தேகம் இருந்தாலும் கேளுங்கள், அதற்கும் பதில் சொல்கிறேன்.

2006 முதல் 2011 வரை ஆட்சியில் இருந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில்தான் இந்த நான்கு நிறுவனங்களிடமிருந்தும் வாங்கப்பட்ட மின்சாரத்தின் அளவு 2,030.90 கோடி யூனிட்டுகள். இது நீங்கள் வாங்கியது. இந்த நான்கு நிறுவனங்களிலும் கூடுதல் விலை கொடுத்து மின்சாரம் வாங்குவதற்காக நீங்கள் செலவிட்ட தொகை ரூ.14,833 கோடி. நான் சொல்வது இந்த நான்கு நிறுவனங்களுக்கு மட்டும்.

தி.மு.க. ஆட்சிக் காலத்தில் நீங்கள் வாங்கியது, இப்போது நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்களின் அரசில் வாங்கிய

மின்சாரத்தைவிட அதிகம். நீங்கள் வாங்கியது கிட்டத்தட்ட ஆண்டுக்கு 4,200 மில்லியன் யூனிட்டுகள். நாங்கள் வாங்கியது 2,090 மில்லியன் யூனிட்டுகள். உங்களைவிட நாங்கள் குறைவாகத்தான் வாங்கியிருக்கிறோம். அதுவும் இந்த மின்சாரத்தை அவசரத் தேவைக்காக வாங்கிப் பயன்படுத்தியிருக்கிறோம். ஆகவே, உங்கள் ஆட்சியில் வாங்கப்பட்டதைவிடக் குறைவாக இந்தக் கூடுதல் விலை கொடுத்து மின்சாரத்தை வாங்கிப் பயன்படுத்தியிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

உங்கள் ஆட்சியில் வாங்கியதைவிட தவிர்க்க முடியாத காரணங்களால் எங்கள் ஆட்சியில் குறைவாகப் பயன்படுத்தியிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். தி.மு.க. ஆட்சியில் நீங்களே சிந்தித்து, நீங்களே கூடுதல் விலை கொடுத்து மின்சாரம் வாங்க ஒப்பந்தம் போட்டுவிட்டு, நீங்களே அந்த மின்சாரத்தைக் கொள்முதல் செய்துவிட்டு, நீங்களே பழியை அடுத்தவர் தலையில் கட்டுகிறீர்களே இது எப்படி? இது என்ன தருமம்? இதெல்லாம் நியாயமா? அந்த அளவிற்கு சாதுர்யமாக நீங்கள் குற்றம் சாட்டுகிறீர்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) தயவு செய்து நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் பேசி முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசி முடித்த பின்னர் வாய்ப்புத் தருகிறேன்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** நீங்கள் பேசுவதற்கு நாங்கள் வாய்ப்புத் தருகிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசி முடித்துவிடட்டும். அவரின் பதிலை முழுமையாகக் கேளுங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுரை முடியட்டும், வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்) அவர் பதில் சொல்லிக் கொண்டிருக்கிறார் அல்லவா? (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசி முடித்த பின்னர் வாய்ப்புத் தருகிறேன்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு உறுப்பினர்கள் என்னுடைய பதிலைக் கேளுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசி முடித்துவிடட்டும்.





**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** நான் சொல்வதை முதலில் கேளுங்கள். (குறுக்கீடுகள்) குற்றம் உள்ள நெஞ்சு குறுகுறுக்கும். அதற்கு நான் என்ன செய்வது? முதலில் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் அதிக விலை கொடுத்து மின்சாரம் வாங்க ஒப்பந்தத்தைப் போட்டுவிட்டு அடுத்தவர் தலையில் அந்தப் பழியைச் சுமத்துகிறீர்கள். அது என்ன நியாயம்? எவ்வளவு சாதுர்யம் உங்களுக்கு? (குறுக்கீடுகள்) ‘எத்தனை காலம்தான் ஏமாற்றுவார் இந்த நாட்டிலே’ என்று உங்கள் தலைவர்தான் வெளியில் பாடுகிறார். ‘எத்தனை காலம்தான் ஏமாற்றுவார்’ என்ற சொல் உங்களைத் தவிர யாருக்குமே பொருந்தாது. (குறுக்கீடுகள்) அதன் அர்த்தத்தை இப்பொழுது நீங்கள் தெரிந்துகொண்டீர்களா? நீங்கள் போட்ட ஒப்பந்தத்தை, அடுத்தவர்கள்மீது பழியைச் சுமத்துகின்ற இந்தச் செயலை எத்தனை காலம்தான் செய்வீர்கள்? மேலும், ‘எத்தனை காலம்தான் ஏமாற்றுவீர்கள்’ என்று ஒரு கட்டுரையைப் பத்திரிகையில் எழுதுகிறார். இன்னும் அடுத்த கட்டம் பற்றி சொல்கிறேன். (குறுக்கீடுகள்) நீங்கள் கடைசியாகப் பேசுங்கள், இன்னொரு விவரம் குறித்து சொல்லிவிடுகிறேன், பின்னர் பேசுங்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலில் நீங்கள் உட்காருங்கள். திரு. துரைமுருகன், நீங்கள் என்னைப் பார்த்துப் பேசுங்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** முதலில் நீங்கள் சொன்ன குற்றச்சாட்டிற்குப் பதில் சொல்லிவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலில் உட்காருங்கள், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிடட்டும். (குறுக்கீடுகள்) முதலில் அவர் பதில் சொல்லி முடிக்கட்டும். (குறுக்கீடுகள்) இல்லை. முதலில் அவர் பதில் சொல்லி முடிக்கட்டும். (குறுக்கீடுகள்) இதில் என்ன Point of order இருக்கிறது? அவர் பதில்தான் சொல்லிக் கொண்டிருக்கிறார். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) Point of order ஒன்றும் அதில் இல்லை, உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** உங்கள் தலைவர் சொன்னதைத்தான் நான் இங்கே கோடிட்டுக் காட்டுகிறேன், நீங்கள் உட்காருங்கள்.

[2014 டிசம்பர் 5

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலில் உட்காருங்கள், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிடட்டும்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** நான் முதலிலே சொல்லியிருக்கிறேன். வெளியில் இருக்கிறவர்களுக்கும் சேர்த்துதான் நான் பதில் சொல்கிறேன் என்று. உங்கள் தலைவர்தான் கூடுதல் விலை கொடுத்து மின்சாரம் வாங்கியது குறித்து சொல்லியிருக்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் பேசிய பிறகு உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்) அவர் பேசி முடித்த பின்னர் உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்) அவர் பேசிய பின்னர் வாய்ப்புத் தருகிறேன். முதலில் நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இதில் point of order ஒன்றும் இல்லை. அவர் பதில்தான் சொல்கிறார். (குறுக்கீடுகள்) பதில் சொல்லிக் கொண்டிருக்கும்போது point of order ஒன்றும் வராது.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** நான் பதில் சொல்லி முடித்த பின்னர் உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பதில்தான் சொல்கிறார். (குறுக்கீடுகள்) இதில் Point of order ஒன்றும் இல்லை. அவர் பேசிய பின்னர் வாய்ப்புத் தருகிறேன். முதலில் நீங்கள் உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** நான் பதில் சொல்லி முடித்த பின்னர் உங்களுக்கு வாய்ப்புத் தரப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசி முடித்த பின்னர் உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அவர் பேசி முடிக்கட்டும்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** உட்காருங்கள். நான் பதில் சொல்லி முடித்த பின்னர் எவ்வளவு வேண்டுமானலும் பேசுங்கள். (குறுக்கீடு) உங்களைப் பேச வேண்டாம் என்று சொல்லவில்லை. நீங்கள் அப்புறம் பேசுங்கள். (குறுக்கீடு) உங்களைப் பேச வேண்டாம் என்று நாங்கள் சொல்லவில்லை, உட்காருங்கள். (குறுக்கீடு) இறுதியாக, ஒன்றை மட்டும் சொல்லி நான் என் உரையை முடித்துவிடுகிறேன். (குறுக்கீடு)



2014 டிசம்பர் 5]

பிற்பகல் 12–45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு உங்களுக்குப் பேச வாய்ப்புத் தருகிறேன், உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. இராமகிருஷ்ணன் அவர்கள், "தற்போது கூடுதல் விலை கொடுத்து மின்சாரம் கொள்முதல் செய்யப்படுகிறது" என்று கூறினார். தி.மு.க. ஆட்சிக் காலத்தில் மின்சாரம் கொள்முதல் செய்யப்பட்ட விவரங்களைத் தற்போது கூறவிருக்கிறேன். தமிழகத்திலுள்ள தனியார் மின் உற்பத்தி நிலையங்களிலிருந்து முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சிக் காலத்தில், 2009 ஆம் ஆண்டு ஒரு யூனிட் மின்சாரம் 6 ரூபாய் 70 காசுக்கு வாங்கப்பட்டது. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தி.மு.க. உறுப்பினர்கள், உட்கார்ந்துகொண்டு பேசாதீர்கள். உட்கார்ந்து கொண்டு பேசுவது முறையல்ல. (குறுக்கீடு) உங்களை எச்சரிக்கிறேன். (குறுக்கீடு) இதுபோன்று நடந்துகொள்வது முறையல்ல, உங்களை எச்சரிக்கிறேன், உட்கார்ந்துகொண்டு பேசாதீர்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** நான் பேசி முடித்த பிறகு, நீங்கள் கேள்வி கேளுங்கள். (குறுக்கீடு) நான் பேசியதற்கு விளக்கம் இருப்பின் நீங்கள் சொல்லுங்கள். (குறுக்கீடு) நான் பேசி முடித்த பிறகு, விளக்கம் ஏதுமிருந்தால் நீங்கள் கேளுங்கள், நான் உங்களுக்குப் பதில் சொல்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பெரியகருப்பன், உட்காருங்கள். மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் பேசி முடித்த பிறகு, உங்களுக்குப் பேச நான் வாய்ப்புத் தருகிறேன், உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** தி.மு.க. ஆட்சிக் காலத்தில் 2009 ஆம் ஆண்டு, குறுகிய கால ஒப்பந்தத்தின் அடிப்படையில் யூனிட் ஒன்று 6 ரூபாய் 70 காசுக்கு மின்சாரம் கொள்முதல் செய்யப்பட்டது. ஆனால், மக்களின் மாண்புமிகு

முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் இந்த அரசு, குறுகிய கால ஒப்பந்தத்தின் அடிப்படையில் யூனிட் ஒன்றுக்கு 5 ரூபாய் 50 காசுக்குக் கொள்முதல் செய்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) தி.மு.க வாங்கியது 6 ரூபாய் 70 காசு; அ.தி.மு.க. வாங்கியது 5 ரூபாய் 50 காசு. கொள்முதல் விலை பற்றி தி.மு.க. உறுப்பினர்கள் பேசுகிறீர்கள்? (குறுக்கீடு) மேலும், 3 ஆண்டு காலமாக இதே விலையில் மின்சாரம் கொள்முதல் செய்யப்படுகிறது என்பதையும் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஒவ்வொரு வருடமும் கொள்முதல் விலையை அதிகரிக்கவில்லை. தொடர்ந்து அதே விலையில் மின்சாரத்தை நாங்கள் கொள்முதல் செய்கிறோம்.

மேலும், தி.மு.க. ஆட்சிக் காலத்தில், நிலக்கரி, பெட்ரோல், டீசல், மூலப் பொருட்கள் ஆகியவற்றின் விலைகள் குறைவாக இருந்தன. ஆனால், தற்போது நிலக்கரியின் விலை இரண்டு மடங்கு அதிகரித்திருக்கிறது; மூலப் பொருள், பெட்ரோல் போன்றவற்றின் விலையும் அதிகரித்துவிட்டது. தி.மு.க. ஆட்சிக் காலத்தில், பெட்ரோல், டீசல் உட்பட அனைத்து மூலப் பொருட்களின் விலைகளும் குறைவாக இருந்தபோது, குறுகிய கால ஒப்பந்தத்தின் அடிப்படையில் யூனிட் ஒன்று 6 ரூபாய் 70 பைசாவுக்கு மின்சாரம் கொள்முதல் செய்யப்பட்டது. ஆனால், அம்மா அவர்களுடைய அரசு, குறுகிய கால ஒப்பந்தத்தின் அடிப்படையில் யூனிட் ஒன்று 5 ரூபாய் 50 பைசாவிற்கு மின்சாரத்தைக் கொள்முதல் செய்கிறது. இதை நாம் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். தி.மு.க. ஆட்சிக் காலத்தில் மூலப் பொருட்களின் விலையும் குறைவாக இருந்தன. முந்தைய தி.மு.க. ஆட்சிக் காலத்தில் மின் traders மூலமாக 2009 ஆம் ஆண்டு முதல் 2010 ஆம் ஆண்டு வரை 6 ரூபாய் 70 பைசா வீதம் வாங்கப்பட்ட மின்சாரத்திற்கான செலவுத் தொகை 1,340 கோடி ரூபாய் ஆகும். அதன் பிறகு, 2011 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் தி.மு.க. ஆட்சிக் காலத்தில், குறைந்த நேர உபயோகத்திற்காக, அதாவது, emergency-க்காக யூனிட் ஒன்று 20 ரூபாய்க்குக் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. தி.மு.க. ஆட்சிக் காலத்தில், ஒரு யூனிட் 20 ரூபாய் வீதம், 300 மில்லியன் யூனிட் மின்சாரம் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. ஏனெனில், தேர்தல் வரப்போகிறது, மின் தடையை சரி செய்ய வேண்டும் என்பதற்காக அவ்வாறு கொள்முதல் செய்து, தமிழ்நாடு மின்சார வாரியத்தை நஷ்டமடையச் செய்துவிட்டார்கள். (குறுக்கீடுகள்) நான் பேசி முடித்த பிறகு, தி.மு.க. உறுப்பினர்கள் விளக்கம் ஏதுமிருப்பின் கேட்கலாம், நான் பதில் சொல்கிறேன். தேர்தல் வரப்போகிறது,





மக்களை தி.மு.க.–வுக்கு ஓட்டுப்போட வைக்க வேண்டும் என்பதற்காக ஒரு யூனிட் மின்சாரத்தை 20 ரூபாய்க்குக் கொள்முதல் செய்தார்கள். (குறுக்கீடு) நீங்கள், இல்லையென்று சொல்லுங்கள். (குறுக்கீடு) நாங்கள் வாங்கவில்லை என்று சொல்லுங்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். சிவசங்கர், என்னைப் பார்த்துப் பேசுங்கள். உட்கார்ந்து கொண்டு பேசாதீர்கள். உங்களை நான் எச்சரிக்கிறேன். இதற்கு முன்பே உங்களை நான் எச்சரித்திருக்கிறேன். (குறுக்கீடு) நீங்கள் முறையில்லாமல் இதுபோன்று நடந்து கொள்கிறீர்கள். இவ்வாறு நடந்துகொள்வது சரியல்ல, உட்காருங்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** நீங்கள் வாங்கிய விலையைப் பற்றி கூறினால் ஏன் வருத்தப்படுகிறீர்கள்? நான் கூறுவதில் என்ன தவறு இருக்கிறது? (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் பேசி முடிக்கட்டும். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசி முடித்த பிறகு, உங்களுக்குப் பேச வாய்ப்புத் தருகிறேன். உட்காருங்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** நீங்கள் வாங்கிய விலையைப் பற்றி சொன்னால், நீங்கள் ஏன் வருத்தப்படுகிறீர்கள்? நான் ஒன்றும் தவறாகக் கூறவில்லை. நீங்கள் வாங்கிய விலையைப் பற்றித்தான் கூறுகிறேன். அதற்கு ஏன் இவ்வளவு வருத்தப்படுகிறீர்கள்? (குறுக்கீடு) நான் பேசி முடித்த பிறகு, நீங்கள் கேள்வி கேளுங்கள்; நான் பதில் சொல்கிறேன். (குறுக்கீடு) நான் பேசி முடித்த பிறகு உங்கள் சந்தேகத்தைக் கேளுங்கள், நான் பதில் சொல்கிறேன் என்று கூறிவிட்டேன். எனவே, தயவு செய்து உட்காருங்கள். மின்சந்தையான IEX–ல், ஒரு யூனிட் 20 ரூபாய் வீதம், 300 மில்லியன் யூனிட் மின்சாரம் வாங்கப்பட்டுள்ளது. அதேபோன்று, இதே விலையில் மார்ச் மாதம் 500 மில்லியன் யூனிட் மின்சாரத்தைக் கொள்முதல் செய்திருக்கிறார்கள். ஏப்ரல் மாதத்தில் 300 மில்லியன் யூனிட் மின்சாரத்தைக் கொள்முதல் செய்திருக்கிறார்கள்.

பிற்பகல் 12—50

பிப்ரவரி மாதத்தில் 300 மில்லியன் யூனிட், மார்ச் மாதத்தில் இதே விலையில் 500 மில்லியன் யூனிட், ஏப்ரல் மாதத்தில் 300 மில்லியன் யூனிட், ஆக மொத்தம் 1,100 மில்லியன் யூனிட் ரூ.20/— வீதம் யூனிட் ஒன்றுக்கு வாங்கிய வகையில் நீங்கள் ரூ.2,200/— கோடிக்கானதை ரூ.20/—க்கு வாங்கியிருக்கிறீர்கள். சரி, வாங்கியதுதான் வாங்கினீர்கள், அதற்கான கொள்முதல் தொகையைக் கொடுத்துவிட்டாவது சென்றீர்களா? (குறுக்கீடுகள்) அதையும் அப்படியே பாக்கி வைத்துவிட்டு, மாண்புமிகு அம்மா அவர்களது அரசு வந்ததற்குப் பின்பு, நீங்கள் கூடுதல் விலைக்கு வாங்கி, பாக்கி வைத்த தொகையையும் மாண்புமிகு அம்மா அவர்களது அரசு, மின்சார வாரியம்தான் ஏற்றுக்கொண்டது. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்) மற்றவர்கள் வேண்டுமானால் ஆட்சியில் பங்கேற்கவில்லை. அதனால் விவரங்கள் தெரியாது என்று சொல்லிக்கொள்ளலாம். ஆனால், விவரங்கள் சொன்னால் புரிந்துகொள்வார்கள். அவர்களுக்கு விவரம் தெரிவதற்கான வாய்ப்பில்லை. ஆனால், நீங்கள் ஆட்சியில் இருந்து எல்லாவற்றையும் செய்துவிட்டு, நீங்கள் இவ்வாறு சொல்கிறீர்களே, இது எப்படி? (குறுக்கீடுகள்) இதுவும் உங்களுடைய சாதனையா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இருங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசி முடிக்கட்டும்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் சொல்லட்டும். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. ஸ்டாலின், சொல்லுங்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அவை முன்னவர் மற்றும் மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் அமைச்சர் அவர்கள் கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்கு ஒரு நீண்ட விளக்கத்தைத் தந்து கொண்டிருக்கிறார்கள். நான் அவரிடத்திலே அதிகம் கேட்க விரும்பவில்லை. ஒன்றே ஒன்றைதான் கேட்க விரும்புகிறேன். 5 ஆண்டுக் காலம், நீங்கள் சொல்கிற மைனாரிட்டி ஆட்சியான தி.மு.க. ஆட்சியிலே, மின் கட்டணத்தை ஒரு சல்லிக் காசு கூட





உயர்த்தியதில்லை. ஆனால், மெஜாரிட்டி ஆட்சியை நீங்கள் இப்பொழுது நடத்திக்கொண்டிருக்கிறீர்கள். ** நான் அந்தப் பிரச்சினைக்குள் செல்ல விரும்பவில்லை. . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் சொன்ன வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். அவர் சொன்ன வார்த்தையை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட்டேன், உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தைரியமிருந்தால் மின்சாரக் கொள்முதலைப் பற்றிச் சொல்லுங்கள். ஏன் திசை திருப்புகிறீர்கள்? ஏன் பிரச்சினையைத் திசை திருப்புகிறீர்கள்? அனுமதிக்கக் கூடாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் சொன்ன வார்த்தையை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட்டேன், உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிரச்சினையைத் திசை திருப்பி தப்பிக்கப் பார்க்காதீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள், நீங்கள் என்னைப் பார்த்துப் பேசுங்கள். நீங்கள் சொன்ன வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கியாகிவிட்டது.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சாரக் கொள்முதல் சம்பந்தமாக, நான் தி.மு.க.—வினரின்மீது சொன்ன குற்றச்சாட்டைப் பற்றிக் கூறியதற்குப் பதிலிருந்தால் சொல்லச் சொல்லுங்கள். ஆனால், பிரச்சினையைத் திசை திருப்புகின்ற வகையில், வேறு ஒரு பிரச்சினையை எழுப்புவதற்கு நீங்கள் தயவு செய்து அனுமதிக்க வேண்டாம்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீக்கியாகிவிட்டது. (குறுக்கீடுகள்) அனைவரும் உட்காருங்கள். திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் சொன்னவை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டுவிட்டன. அனைவரையும் அமைதி காக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். வேறு ஏதாவது பேசுங்கள். வேறு ஏதாவது பேசுகிறீர்களா? (குறுக்கீடுகள்) அவை எல்லாம் முறையல்ல. உட்காருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள், ஏதோ அவருடைய ஆட்சியில் மின்சாரக் கட்டணம் ஒரு நயா பைசாகூட உயர்த்தவில்லையென்று உண்மைக்குப் புறம்பான வார்த்தையை இங்கே பதிய வைத்திருக்கிறார். 2009–2010–ல் உங்கள் ஆட்சியில் மின்சாரக் கட்டணம் உயர்த்தப்பட்டிருக்கிறது என்பதனை இங்கே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். உங்களுக்குத் தெரியவில்லையென்றால் தூங்கிக்கொண்டிருக்கும் ஆற்காடு வீராசாமியிடம் கேட்டுவிட்டு இங்கே வந்து பேச வேண்டும். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவற்றையெல்லாம் நீக்கிவிட்டேன். அப்படியெல்லாம் பேசக் கூடாது. இப்படியெல்லாம் சொல்லக் கூடாது. அவற்றை அவைக் குறிப்பிலிருந்து நீக்கியாகிவிட்டது. உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை, நீங்கள் ஏதாவது சொல்ல வேண்டுமா? திரு. மு.க. ஸ்டாலின், நீங்கள் ஏதாவது சொல்ல விரும்புகிறீர்களா? சொல்லுங்கள், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலுரை சொல்ல வேண்டும். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேட்ட பாயின்ட் பற்றி ஏதாவது சொல்கிறார்களா, பாருங்கள். திரும்பத் திரும்ப அதையே. . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதற்கெல்லாம் ஏற்கெனவே நிறைய விளக்கங்கள் சொல்லியாகிவிட்டது. திரும்பத் திரும்ப அதையே பேசக் கூடாது. (குறுக்கீடு) இல்லை, உட்காருங்கள். மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.





பிற்பகல் 12–55

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** கொள்முதல் என்பது பெரிய பிரச்சினை, பெரிய குற்றச்சாட்டு. அதற்குப் பதில் சொல்ல வேண்டுமல்லவா? (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேசுவது எதுவும் அவைக் குறிப்பில் ஏறாது, உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) நேரமில்லை. (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதெல்லாம் அவைக் குறிப்பில் ஏறாது, உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியாளர்கள் 96 உறுப்பினர்களை வைத்து ஆட்சி செய்தார்கள். காங்கிரஸ் கட்சியை ஏமாற்றி—காங்கிரஸ் கட்சிக்காரர்கள் அவர்களுக்கு punishment கொடுத்துவிட்டார்கள். நான் சொல்கிறேன் பினாமி என்றால், அப்பா முதலமைச்சர், மகன் துணை முதலமைச்சராக இருப்பதுதான் பினாமி ஆட்சி. ** குடும்ப ஆட்சி, பினாமி ஆட்சி நடத்துவது திராவிட முன்னேற்றக் கழகம். ** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள் (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் அமைதியாக இருங்கள்.

***மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு நிமிடம். (குறுக்கீடுகள்) ஒரே ஒரு நிமிடம். (கூச்சல்—குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் அமைதியாக இருங்கள். (குறுக்கீடுகள்) அமைதியாக இருங்கள்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறார்கள் அல்லவா, உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள். *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** நான் பேசி முடித்துவிடுகிறேன். பிறகு நீங்கள் பேசுங்கள். *(குறுக்கீடுகள்)* ஒரே ஒரு நிமிடம்தான். பேசி முடித்துவிடுகிறேன். *(குறுக்கீடுகள்)* ஒரே ஒரு நிமிடம்தான். பேசி முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . *.(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசி முடிக்கப் போகிறார், உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* அவரது உரையை முடிக்கப் போகிறார், உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலுரையை முடிக்கப் போகிறார்கள். *(குறுக்கீடுகள்)* மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலில் உட்காருங்கள் *(குறுக்கீடுகள்)* முதலில் உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** திரு. மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலில் நீங்கள் உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* நீங்கள் உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் எதைப் பேச வேண்டுமென்று தெரியாமல் பேசிக்கொண்டிருக்கிறார். *(கூச்சல்—குழப்பம்)*





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். நீங்கள், உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* நீங்கள் உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* நான் உங்களுக்கு வாய்ப்புத் தந்தேன் அல்லவா? *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** அந்த இருக்கையைப் பற்றி அவர் கவலைப்பட வேண்டிய அவசியமில்லை. *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுக்கு வாய்ப்புக் கொடுத்தால், அதில் நீங்கள் பேச வேண்டும். மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** அவருடைய கட்சியைப் பற்றித்தான் அவர் கவலைப்பட வேண்டும். எங்களுடைய இயக்கத்திலே இராணுவத்தை கேப்டன் நடத்திச் செல்வதுபோல் எங்களுடைய அம்மா கட்சியில் ஆட்சி நடத்திக்கொண்டிருக்கிறார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)* அந்த ஒற்றுமை உங்களுடைய கட்சியிலே இல்லையென்று சொன்னால், வருத்தப்பட வேண்டியவர்கள் நீங்கள்தான். மகன் அந்தப் பக்கத்திலே புலம்பிக் கொண்டிருக்கிறார்; இன்னொரு மகன் இந்தப் பக்கத்திலே புலம்பிக் கொண்டிருக்கிறார்; ஆக புலம்பலிலே நடக்கக்கூடிய கட்சி கட்டுப்பாடில்லாத கட்சி என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டுமென்று நான் கூறிக்கொள்கிறேன். *(கூச்சல்—குழப்பம்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் இடத்திற்குப் போங்கள் *(குறுக்கீடுகள்)* திரு. எஸ்.எஸ். சிவசங்கர், உங்கள் இடத்திற்குப் போங்கள் *(குறுக்கீடுகள்)* இல்லை, நான் உங்களை எச்சரிக்கிறேன். *(குறுக்கீடுகள்)* நான் உங்களுக்கு வாய்ப்புக் கொடுத்தேன் அல்லவா? *(குறுக்கீடுகள்)* உங்களுக்கு நான் வாய்ப்புக் கொடுத்தேன். *((குறுக்கீடுகள்)* மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் பேசுவதற்கு நான் வாய்ப்புக் கொடுத்தேன். *(குறுக்கீடுகள்)* இல்லை, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு நான் வாய்ப்புக் கொடுத்தேன். *(குறுக்கீடுகள்)* கொடுத்த வாய்ப்பை அவர் தவறாகப் பயன்படுத்தியதால், அவையில் பிரச்சினைகள் ஏற்பட்டன. *(கூச்சல்—குழப்பம்)* நீங்கள் விளக்கமாகப் பேசுவதாக இருந்தால் இப்போதும் நான் வாய்ப்புத் தருகிறேன். *(குறுக்கீடுகள்)* உங்கள் இடத்திற்குப்போய் உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* முதலில் உங்கள் இடத்திற்குப் போங்கள். *(கூச்சல்—குழப்பம்)* நான் எச்சரிக்கை செய்கிறேன். *(குறுக்கீடுகள்)* முதலில்

[பேரவைத் தலைவர்] [2014 டிசம்பர் 5

உங்கள் இடத்திற்குப் போங்கள் (கூச்சல்—குழப்பம்) உங்கள் இடத்திற்குப் போங்கள். (கூச்சல்—குழப்பம்) உங்கள் இடத்திற்குப் போங்கள். (குறுக்கீடுகள்) உங்களுடைய seat—க்குப் போங்கள். (குறுக்கீடுகள்) இது முறையல்ல. (கூச்சல்—குழப்பம்) அவையை நடத்தவிடாமல் குந்தகம் விளைவிக்கிறீர்கள். (கூச்சல்—குழப்பம்) இல்லை, அவையை நடத்தவிடாமல் நீங்கள் குந்தகம் விளைவிக்கிறீர்கள். நான் நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** அவ்வளவுதான் பேசி முடித்துவிடுகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும். உங்கள் இடத்திற்குப் போங்கள். (குறுக்கீடுகள்) நான் ஏற்கெனவே சொல்லிவிட்டேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசிக் கொண்டிருக்கும்போது குறுக்கிட வேண்டாம் என்று சொன்னேன். (கூச்சல்—குழப்பம்) நீங்கள் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, நான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசி கொண்டிருக்கிறபோது, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. ஸ்டாலின் வாய்ப்புக் கேட்டார். வாய்ப்புக் கொடுத்தேன். கொடுத்த வாய்ப்பை அவர் முறையாகப் பயன்படுத்தவில்லை என்றால் அதற்கு அவை பொறுப்பல்ல. நீங்கள், உங்கள் இடத்திற்குப் போங்கள். கூச்சல்-குழப்பம் இது முறையல்ல (குறுக்கீடுகள்) நாகரிகமாகத்தான் சபை நடந்துகொண்டிருக்கிறது. முதலில் நீங்கள் நாகரிகமாகப் பேசுங்கள். (கூச்சல்—குழப்பம்) முதலில் நீங்கள் நாகரிகமாக நடந்துகொள்ளுங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)

பிற்பகல் 1—00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மின்சாரப் பிரச்சினையைப் பற்றி, மின்சாரக் கட்டண உயர்வைப் பற்றி ஒவ்வொரு கட்டமாக, மிக விளக்கமாக, தக்க பதிலை மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் சொல்லிக் கொண்டிருந்தார். கடந்த ஆட்சியில் மின்சாரம் என்ன பாடுபட்டது



2014 டிசம்பர் 5] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

என்பதனை, (குறுக்கீடு) அப்பொழுதிருந்த உங்களுடைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில்... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) சரி, உட்காருங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.எஸ். சிவசங்கர், (குறுக்கீடுகள்) திரு. எஸ்.எஸ். சிவசங்கர், உங்களை நான் கடுமையாக எச்சரிக்கிறேன். (குறுக்கீடுகள்) ஏற்கெனவே நீங்கள் அவைத் தலைவரைப் பார்த்து தேவையில்லாமல் பேசினீர்கள். (குறுக்கீடுகள்) இப்போது தேவையில்லாமல் பேசுகிறீர்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசுவதைத் தடுக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) இது முறையில்லாமல் இருக்கிறது. நான் நடவடிக்கை எடுப்பேன். (குறுக்கீடுகள்) நான் நடவடிக்கை எடுக்க வேண்டி வரும். (குறுக்கீடுகள்) உங்களுடைய இருக்கைக்குப் போய் உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** அமைதியாகப் போய் உட்காரச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) அமைதியாக உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசும்போது இடையிலே எழுந்து பேசாதீர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** Mike கொடுக்கச் சொல்கிறேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அனைவரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அவரவர் இருக்கைக்குச் செல்லுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசுகிறார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பேச விடாமல், இடையூறு செய்வது முறையல்ல. (குறுக்கீடுகள்) இது முறையல்ல. (குறுக்கீடுகள்)

(பேரவைத் தலைவர் இருக்கை அருகே திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் நின்று கொண்டு பேச முயன்றனர்.)

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** ஒரேயொரு கேள்வியை மாத்திரம் கேட்க விரும்புகிறேன்; உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசுவதற்கு, உங்களுடைய கட்சி உறுப்பினர்கள் இதுபோன்று இடையூறு செய்வது முறையல்ல. (குறுக்கீடுகள்) இது முறையல்ல. (குறுக்கீடுகள்) கட்சித் தலைவர்களாக இருந்துகொண்டு, நீங்கள் இரண்டு பேரும் எழுந்து நின்று கொண்டிருப்பது முறையல்ல. (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசும்போது, கட்சித் தலைவர்களாக இருக்கும் நீங்களே எழுந்து நின்று கொண்டிருந்தால், உங்களுடைய கட்சி உறுப்பினர்கள் என்ன செய்வார்கள்? (குறுக்கீடுகள்) அவர்கள் என்னுடைய இருக்கையை நோக்கித்தான் வருவார்கள். (குறுக்கீடுகள்) அவர்கள் என்னுடைய இருக்கைக்கு அருகில்தான் வருவார்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசுவதற்கு நீங்களே இடையூறு செய்கின்றபோது, உங்களுடைய கட்சி உறுப்பினர்கள் என்னுடைய இருக்கைக்கு அருகில்தான் வருவார்கள். (குறுக்கீடுகள்) அவர்கள் வேறு என்ன செய்வார்கள்? (குறுக்கீடுகள்) உங்களுடைய கட்சி உறுப்பினர்களுக்கு முன்மாதிரியாக இருக்க வேண்டிய நீங்களே, இப்படிச் செய்வது முறையா? (குறுக்கீடுகள்) உங்கள் கட்சி உறுப்பினர்களை அவரவர் இருக்கைக்குப் போய் உட்காரச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த அறுதிப் பெரும்பான்மை இல்லாத, 96 சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்ட தி.மு.க. ஆட்சி (குறுக்கீடுகள்)

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசும்போது, இப்படிக் குறுக்கிட்டால் என்ன அர்த்தம்? (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** அந்த ஆட்சியில் மின்சாரத் துறை அமைச்சராக இருந்த திரு. ஆற்காடு வீராசாமி அவர்களே ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார்கள். என்ன வாக்குமூலம் கொடுத்தார்கள்? 'எங்களுடைய ஆட்சி போகுமென்றால், அது மின்சாரப் பிரச்சினையால்தான் போகும்' என்று அவரே ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். (மேசையைத் தட்டும் ஒலி) இப்போது மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலின்படி இங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற ஆட்சியைப் பற்றி நீங்கள் சில விவரங்களை, சில தகவல்களை, உண்மைக்கு மாறான தகவல்களை இங்கே சொல்லிக் கொண்டிருக்கின்றீர்கள். இந்த ஆட்சி எப்படி நடந்து கொண்டிருக்கிறது என்பதனை தமிழக மக்கள் நன்றாகவே அறிவார்கள் என்பதனை நான் இங்கே தெரியப்படுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஒரேயொரு கேள்வியை மாத்திரம் நான் உங்களைக் கேட்க விரும்புகிறேன்.





உங்களுடைய ஆட்சிக் காலத்திலே, மத்தியிலே காங்கிரஸ்–தி.மு.க. கூட்டணி ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, திரு. முரசொலி மாறன் அவர்கள் அப்பல்லோ மருத்துவமனையில் ஒன்றேகால் வருடம் ventilator–உதவியுடன் இருந்து, அவர் எப்படி மத்திய அமைச்சராகப் பணியாற்றினார்? (குறுக்கீடு) Sorry. பாரதிய ஜனதா கட்சியினுடைய ஆட்சியில் அவர் ஒன்றேகால் வருடம் அப்பல்லோ மருத்துவமனையில் எப்படி ventilator உதவியுடன் இருந்துகொண்டு மத்திய அமைச்சராக இருந்தார்? (குறுக்கீடு) நீங்கள் அதைச் சொன்னதால், நான் இதைச் சொல்ல வேண்டிய கட்டாயத்திற்கு எங்களை உள்ளாக்கியிருக்கிறீர்கள் என்பதனை நான் இங்கே தெளிவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) திரு. டி. செங்குட்டுவன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசி முடிக்கட்டும். அதன்பிறகு நான் வாய்ப்புத் தருகிறேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் பேசி முடித்தவுடன், நான் வாய்ப்புத் தருகிறேன்; உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அவர் பேசி முடிக்கட்டும். நீங்கள் வேறு பிரச்சினைக்குள்ளே எல்லாம் போக வேண்டாம். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *நாம் மின்சாரக் கொள்முதலைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறோம். (குறுக்கீடுகள்) அதைப்பற்றிப் பேசாமல் வேறு எதைப்பற்றியோ பேசுகிறீர்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தி.மு.க. ஆட்சியில் என்ன செய்தார்கள் என்று நான் சொன்ன விளக்கங்களுக்கு அவர்கள் பிறகு பதில் சொல்லட்டும். கூடுதல் விலைக்கு மின்சாரம் வாங்கப்படுகிறது என்று அவர்கள் இங்கே சொன்னார்கள். திரு. நா. இராமகிருஷ்ணன் அவர்கள் சொன்னதற்கு நான் பதிலளித்திருக்கிறேன். அதற்கு ஏதாவது மறுப்பு இருந்தால், அவர்களைச் சொல்லச் சொல்லுங்கள். அதற்குரிய விளக்கத்தை அளிக்க நான் தயாராக இருக்கிறேன். ஆனால், அதற்குரிய விளக்கத்தை அளிக்காமல், பிரச்சினையைத் திசை திருப்பி, வேறு திசையிலே பிரச்சினையைக் கொண்டு போகச் செய்வதற்கு முயற்சிக்க வேண்டாம். (குறுக்கீடுகள்) இந்த மின்சாரக் கொள்முதல் சம்பந்தமாக உங்களுடைய கருத்து ஏதாவது இருந்தால் நீங்கள் தெரிவிக்கலாம். அதிலே எங்களுக்கு எந்தவித ஆட்சேபனையும் இல்லை. அதேபோன்று, எனக்கு இன்னொரு சந்தேகம் என்னவென்றால், (குறுக்கீடு) நான் பேசி முடித்துவிடுகிறேன். நாங்கள் பேசுங்கள் என்றுதான் சொல்கிறோம். (குறுக்கீடு) உங்களுக்கு வாய்ப்புத் தருகிறோம். . .

*பிற்பகல் 1–05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *திரு. ஜெ. அன்பழகன், உட்காருங்கள். (குறுக்கீடு) அமைச்சர் பேசி முடிக்கட்டும்.*

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** வாய்ப்புத் தருகிறோம். (குறுக்கீடு) ஒரே ஒரு நிமிடம்தான்.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *திரு. ஜெ. அன்பழகன், திரும்பத் திரும்ப நான் உங்களை எச்சரிக்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசிக் கொண்டிருக்கும்போது இதுபோன்று பேசுவது முறையல்ல. (குறுக்கீடு) நேற்று உங்கள்மீது நடவடிக்கை எடுத்திருந்தும் நீங்கள் திருந்தவில்லை. (குறுக்கீடு) நீங்கள் திருந்த மாட்டேன் என்கிறீர்கள். (குறுக்கீடு) அவையை நடத்தவிடாமல்*



*இதுபோன்று செய்தால் எப்படி? (குறுக்கீடு) திரு. ஜெ. அன்பழகன், இது முறையல்ல. உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) என்னைப் பார்த்துப் பேசுங்கள். அவையை நடத்துவது நான்தான். என்னைப் பார்த்துப் பேசுங்கள். நீங்கள் உங்கள் சௌகரியத்திற்கேற்ப பேசக் கூடாது, உட்காருங்கள். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சாரக் கொள்முதலில் ஏதோ தவறு நடந்துவிட்டதைப்போல, ஒரு மாயத் தோற்றத்தை அங்கிருந்து பல பேர் ஏற்படுத்த முயற்சி மேற்கொண்டனர். அவர்களுக்கு உண்மை நிலையை விளக்குவதற்காகத்தான் இவ்வளவு நேரம் எடுத்துக்கொண்டு, உண்மை நிலையைத் தெளிவுபடுத்தினேன். இதற்குப் பின்பும், யாருக்காவது இதுசம்பந்தமாக சந்தேகம் ஏதாவது இருந்தால் கேளுங்கள், விளக்கமளிக்கத் தயாராக இருக்கிறேன். இனிமேலாவது குற்றச்சாட்டுகள் சொல்லும்போது, இதுபோன்று தவறான குற்றச்சாட்டுகள் சொல்வதைத் திருத்திக் கொள்ள வேண்டும் என்றுதான் கேட்டுக்கொள்கின்றேன். புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியிலும் சரி, இப்பொழுது மக்களின் முதல்வராக என்றைக்கும் விளங்கிக் கொண்டிருக்கும் இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலோடு நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்த ஆட்சிலும் சரி, எள் அளவுகூட அல்ல, எள் நுனியளவுகூட இங்கே தவறு செய்வதற்கு அம்மா அவர்கள் இடம் கொடுக்க மாட்டார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை உங்களுக்கு முதலிலே தெளிவுபடுத்த விரும்புகிறேன். அதை ஒருபோதும் அம்மா அவர்கள் அனுமதிக்கவும் மாட்டார்கள். அப்படி நடக்கவும் விடமாட்டார்கள். அந்த அளவுக்கு இந்த வெளிப்படையான ஆட்சியில், திறந்த புத்தகம் போன்று வெளிப்படையாக நடந்த ஒரு நிகழ்வை, (மேசையைத் தட்டும் ஒலி) மத்திய அரசின் வழிகாட்டுதலுடனும், மத்திய மின்சார சட்டத்தின் வழிகாட்டுதலுடனும், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் வழிகாட்டுதலுடனும், விதிமுறைகளுக்குட்பட்டும், முறைப்படி மின் கொள்முதல் செய்து, மக்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு அரசு எடுத்த நடவடிக்கைகளை, மக்களிடம் நற்பெயர் வந்துவிடக் கூடாது என்ற குறுகிய எண்ணத்துடன் இப்படிப்பட்ட பிரச்சினைகளைச் சிலர் எழுப்பியிருக்கிறார்கள். ஏனென்றால், மின் பற்றாக்குறையாக இருக்கும்பொழுது மின்

கொள்முதல் செய்வதில் பிரச்சினை எழுப்புகிறார்கள். பற்றாக்குறை இருக்கின்ற நேரத்தில் கொள்முதல் செய்யாமல் இருந்துவிட்டால் தமிழ்நாடு இருளடைந்துவிடும், அதை வைத்து நாம் அரசியல் செய்யலாம் என நினைக்கிறார்கள். ஆனால், இதில் அரசியல் செய்வதை அம்மா அவர்கள் பார்க்க மாட்டார்கள். மக்களுடைய நலனைத்தான் பார்ப்பார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)* நீங்கள் அரசியல் செய்ய ஏதாவது வாய்ப்பு கிடைக்குமா என்பதற்காக, இட்டுக்கட்டி இல்லாததையும், பொல்லாததையும் சொல்கின்ற போக்கினைத் தயவுசெய்து நிறுத்திக்கொள்ள வேண்டும் என்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கின்றேன். இனிமேலாவது, திரு. அ. கணேஷ்குமார் அவர்களை, தங்கள் கட்சித் தலைவருக்கு எடுத்துச் சொல்லுமாறு கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று உங்கள் கட்சித் தலைவருக்கும் எடுத்துச் சொல்லுங்கள். அவர் வரம்பு மீறிப் பேசுகிறார். அநாகரிகமாகப் பேசுகிறார். அவருக்கும் சொல்லுங்கள். இப்படி வரம்பு மீறி, ஏதோ விளம்பரத்திற்காக அவர் பேசுகிறார். அதையும் சில பத்திரிகைகள் அதில் உண்மை இருக்கிறதா என்பதைக்கூட பார்க்காமல் வெளியிடுகின்றன. அது அவர்களுடைய உரிமை. ஆனால் பத்திரிகை தருமத்தின்படி, அதை verify செய்வதற்காக எங்களிடமும் கேட்டுக்கொண்டு வெளியிட்டால் இன்னும் நன்றாக இருக்கும். யார் குற்றச்சாட்டு சொன்னாலும், அதை வெளியிடக் கூடாது என்று சொல்லவில்லை, அதற்கான விளக்கம் கேட்டுக்கொண்டு வெளியிட்டால் இன்னும் நன்றாக இருக்கும். இது என்னுடைய வேண்டுகோள்தான். யாராவது விளம்பரத்திற்காக ஒன்றைச் சொல்லிவிட்டால் அதை அப்படியே வெளியிடுகிறார்கள். இதில் துளிகூட, எள் நுனியளவுகூட தவறு நடக்கவில்லை என்று சொல்கிறேன். அதைப்போய் ஊதி, ஊதிப் பெரிய பிரச்சினையாக்கியிருக்கிறீர்கள்.

*பிற்பகல் 1–10*

அதேபோன்று, கூடுதல் விலை கொடுத்து வாங்கப்பட்டிருக்கிறது என்று திரு. நா. இராமகிருஷ்ணன் அவர்கள் கூறிய குற்றச்சாட்டுக்கும் மூல காரணம், நீங்கள் உருவாக்கியதுதான். அதன் எல்லா விவரங்களையும் உங்களுக்குச் சொல்லியிருக்கின்றேன். இதில் என்னுடைய ஒரே ஒரு கேள்வி என்னவென்று சொன்னால், உங்களுடைய தலைவர் முதலமைச்சராக இருந்தவர், அவர் சட்டமன்ற உறுப்பினர், அவருக்குப் பதில் சொல்ல வாய்ப்பு இருக்கிறது. உங்களுடைய தலைவர் 5 முறை முதலமைச்சராக இருந்தவர். அவர் இந்த மின்சாரக் கொள்முதலில் கூடுதல் விலை கொடுத்து வாங்கப்பட்டிருக்கிறது என்று சொல்கிறார். நான்கு குறிப்பிட்ட தனியார் நிறுவனங்களிடமிருந்து மட்டும் வாங்கப்பட்டது குறித்து இவ்வாறு சொல்கிறார் என்று சொன்னால், 5 முறை ஆட்சிப் பொறுப்பில் இருந்து, தன்னுடைய ஆட்சிக் காலத்திலே போடப்பட்டு, தன்னுடைய ஆட்சிக் காலத்திலே செய்யப்பட்ட கொள்முதலை, அவரே இன்று விமர்சனம் செய்கிறார், குறை சொல்கிறார் என்று சொன்னால், அவருடைய ஆட்சிக் காலத்திலே நடந்தது எதுவுமே அவருக்குத் தெரியாமல் இருந்திருக்கிறார் என்று எடுத்துக்கொள்வதா? *(மேசையைத் தட்டும் ஒலி)* அப்படி எடுத்துக்கொள்ளலாமா? ஆனால், அவருக்கு எல்லாம் தெரிந்திருந்தும் வேண்டுமென்றே மக்களைத் திசை திருப்புவதற்காக இப்படித் தவறான தகவல்களைச் சொல்லி பரப்புகிறாரா? அதை வேண்டுமானால் மாண்புமிகு உறுப்பினர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தெளிவுபடுத்தலாம். ஐந்து முறை முதலமைச்சராக இருந்தவர், அவருடைய ஆட்சிக்காலத்தில் ஒப்பந்தங்கள் போடப்பட்டது தெரியாதா? தனியார் மின் உற்பத்தி நிலையங்களிலிருந்து கூடுதல் விலைக்கு மின்சாரம் வாங்கப்பட்டது என்பது அவருக்குத் தெரியாதா? வாங்கப்பட்ட விவரம் அவருக்குத் தெரியாதா? அதைப்பற்றி அவர் கேட்கிறார். அதைக் குறிப்பிட்டு அவர் கேட்கிறார். அதுதான் வேடிக்கையாக இருக்கிறது. விநோதமாக இருக்கிறது. இதுபோல் மேலும் அவர் கேட்கிறார். அவர் ஐந்தாண்டுக் காலம் எப்படி முதலமைச்சராக இருந்தார், எப்படிச் செய்தார் என்பது உள்ளபடியே எனக்குத் தெரியவில்லை. இதற்கு முன்பு இதுபோன்று மற்றொன்றையும் கேட்டார். அதற்கு அம்மா அவர்கள் சரியான பதிலடி கொடுத்தார்கள். மின்சாரத் துறையைப் பற்றிய நடைமுறைகளும், சட்டங்களும் எதுவுமே தெரியாமல் ஐந்து முறை முதலமைச்சராக இருந்திருக்கிறார் என்பதற்கு இது ஒரு உதாரணம். *(குறுக்கீடுகள்)* நான் சொல்வதில் தவறு எதுவும் இருக்கிறதா? பதில் சொல்லுங்கள். *(குறுக்கீடுகள்)* பதில் சொல்லுங்கள் பார்ப்போம். *(குறுக்கீடுகள்)*





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன், நீங்கள் என்னைப் பார்த்துப் பேசுங்கள். *(குறுக்கீடுகள்)* இல்லை, நீங்கள் என்னைப் பார்த்துப் பேசுங்கள். *(குறுக்கீடுகள்)* நீங்கள், என்னைப் பார்த்துப் பேச வேண்டும். *(குறுக்கீடுகள்)* நீங்கள் நேரடியாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பார்த்துப் பேசக்கூடாது. *(குறுக்கீடுகள்)* நீங்கள் ஒரு

மூத்த உறுப்பினர், நீங்கள் என்னைப் பார்த்து நேரடியாகப் பேசுங்கள். *(குறுக்கீடுகள்)* இல்லை. *(குறுக்கீடுகள்)* இல்லை, இது முறையல்ல. *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** நான் மின்சாரக் கொள்முதலைப் பற்றித்தான் பேசிக்கொண்டிருக்கிறேன். நான் வேறு எதைப் பற்றியும் பேசவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது முறையில்லை. *(குறுக்கீடுகள்)* நீங்கள் மாண்புமிகு அமைச்சரை நேரடியாகப் பார்த்துப் பேசுவது முறையில்லை. *(குறுக்கீடுகள்)* நீங்கள் என்னிடம்தான் பேச வேண்டும். *(குறுக்கீடுகள்)* மாண்புமிகு அமைச்சரை நேரடியாகப் பார்த்துப் பேசக்கூடாது. *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் உண்மையைத்தான் பேசுகிறேன். *(குறுக்கீடுகள்)* உண்மையைச் சொன்னால் அவர்களுக்கு ஏன் கோபம் வருகின்றது? *(குறுக்கீடுகள்)* உண்மையைச் சொன்னால் ஏன் கோபம் வருகின்றது?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன், நீங்கள் ஒரு மூத்த உறுப்பினர், அவையினுடைய விதிகள் எல்லாம் தெரிந்தவர். *(குறுக்கீடுகள்)* நீங்கள் நேரிடையாக மாண்புமிகு அமைச்சரைப் பார்த்துப் பேசக்கூடாது. *(குறுக்கீடுகள்)* நீங்கள் என்னைப் பார்த்துதான் பேச வேண்டும்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படியானால் என்ன காரணம் என்று சொல்லுங்கள்? மாண்புமிகு முதலமைச்சராம் *(குறுக்கீடுகள்)* நான் மீண்டும், மீண்டும் கேட்கிறேன். *(குறுக்கீடுகள்)* ஐந்து முறை முதலமைச்சராக இருந்தவர் தன்னுடைய ஆட்சிக்காலத்தில் என்ன நடந்தது என்று தெரியாமல் குற்றச்சாட்டு வைப்பதற்கு என்ன காரணம்? சொல்லுங்கள்? அவர் தெரிந்து செய்தாரா அல்லது தெரியாமல் செய்தாரா?*(கூச்சல்-குழப்பம்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, நீங்கள் நேரடியாக மாண்புமிகு அமைச்சரைப் பார்த்துப் பேசுவது முறையல்ல. *(குறுக்கீடுகள்)* இது முறையல்ல. *(குறுக்கீடுகள்)* இது முறையல்ல.

*(பேரவைத் தலைவர் இருக்கை அருகே திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் நின்று கொண்டு பேச முயன்றனர்.)*



**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** எங்களைக் குற்றம் சொன்னதற்காகப் பதில் சொல்கிறேன். *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, நீங்கள் நேரடியாக மாண்புமிகு அமைச்சரைப் பார்த்துப் பேசுவது முறையல்ல. *(குறுக்கீடுகள்)* இது முறையல்ல. *(குறுக்கீடுகள்)* இது முறையல்ல. *(குறுக்கீடுகள்)* நேரடியாகப் பேசுவது முறையல்ல. *(குறுக்கீடுகள்)* மாண்புமிகு அமைச்சரைப் பார்த்து நேரடியாகப் பேசுவது முறையல்ல. *(குறுக்கீடுகள்)* இதெல்லாம் முறையல்ல. *(குறுக்கீடுகள்)* இப்படிப் பேசுவது முறையல்ல. உங்கள் இடத்திற்குச் செல்லுங்கள். *(குறுக்கீடுகள்)* அவைத் தலைவரை இப்படி முற்றுகையிடுவது முறையல்ல. *(குறுக்கீடுகள்)* அவைத் தலைவரை இப்படி முற்றுகையிடுவது முறையில்லை. *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேட்டதில் என்ன தவறு இருக்கிறது? *(குறுக்கீடு)* ஐந்து முறை முதலமைச்சராக இருந்தவர் விவரங்கள் தெரியாமல் எப்படிக் கேட்டார்? விவரம் தெரிந்து கேட்டாரா அல்லது தெரியாமல் கேட்டாரா என்று நான் கேட்டதில் என்ன தவறு இருக்கிறது? *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் எல்லோரும் இருக்கைக்குப் போங்கள். *(குறுக்கீடுகள்)* நீங்கள் எல்லோரும் இருக்கைக்குப் போங்கள். *(குறுக்கீடுகள்)* இருக்கைக்குப் போங்கள். *(குறுக்கீடுகள்)* அதையெல்லாம் சொல்ல முடியாது. *(குறுக்கீடுகள்)* நீங்கள் இருக்கைக்குப் போங்கள் *(குறுக்கீடுகள்)* நீங்கள் உங்கள் இடத்திற்குப் போங்கள். *(குறுக்கீடுகள்)* உங்கள் இடத்திற்குப் போங்கள். *(குறுக்கீடுகள்)* இப்படி நீங்கள் என்னிடம் வந்து முற்றுகையிடுவது முறையல்ல. *(குறுக்கீடுகள்)* தலைவரை நீங்கள் அவையை நடத்த விடாமல், எல்லோரும் முற்றுகையிடுவது முறையல்ல. *(குறுக்கீடுகள்)* நீங்கள் எல்லோரும் முதலில் உங்களுடைய இருக்கைக்குப் போங்கள். *(குறுக்கீடுகள்)* முதலில் நீங்கள் எல்லோரும் உங்களுடைய இடத்திற்குப் போங்கள். *(குறுக்கீடுகள்)* இல்லை. *(குறுக்கீடுகள்)* இல்லை, அவைத் தலைவரை முற்றுகையிடுவது முறையல்ல. *(குறுக்கீடுகள்)* அவைத் தலைவரை நீங்கள் முற்றுகையிட்டு அவையை நடத்த விடாமல் செய்வது என்பது முறையல்ல. *(கூச்சல்-குழப்பம்)* இது முறையில்லை. *(குறுக்கீடுகள்)* இது முறையில்லை. *(குறுக்கீடுகள்)* உங்கள் இடத்திற்குச் செல்லுங்கள்.

*(குறுக்கீடுகள்)* நீங்கள் எல்லோரும் உங்கள் இடத்திற்குச் செல்லுங்கள். *(கூச்சல்-குழப்பம்)* பலமுறை நான் உங்கள் எல்லோரையும் எச்சரித்தும், அவையை நடத்தவிடாமல், அவைத் தலைவரை முற்றுகையிட்டு, அவை நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவிக்கின்ற காரணத்தினால், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த உறுப்பினர்களை அவையிலிருந்து வெளியேற்றும்படி காவலர்களுக்கு உத்தரவிடுகிறேன். *(குறுக்கீடுகள்)* அவர்களை அவையிலிருந்து வெளியேற்றும்படி காவலர்களுக்கு நான் உத்தரவிடுகிறேன். *(குறுக்கீடுகள்)* அவர்களை அவையிலிருந்து வெளியேற்றும்படி உத்தரவிடுகிறேன். *(குறுக்கீடுகள்)* அவைத் தலைவரை முற்றுகையிட்டு, அவையை நடத்தவிடாமல் செய்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்களை அவையிலிருந்து வெளியேற்றும்படி காவலர்களுக்கு நான் உத்தரவிடுகிறேன். *(குறுக்கீடுகள்)* அவர்களை வெளியேற்றுங்கள். *(குறுக்கீடுகள்)* அவர்களை வெளியேற்றுங்கள், வெளியேற்றுங்கள். *(குறுக்கீடுகள்)* காவலர்களோடு நீங்கள் சண்டை போடக்கூடாது. *(குறுக்கீடுகள்)* அவைக் காவலர்களுக்கு நீங்கள் இடையூறு செய்ய வேண்டாம். *(குறுக்கீடுகள்)* அவைக் காவலர்கள் அவர்களை வெளியேற்றும்படி உத்தரவிடுகிறேன்.

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் பேரவைக் காவலர்களால் அவையிலிருந்து வெளியேற்றப்பெற்றனர்.)*

பிற்பகல் *1–15*

அவைக் காவலர்கள் அவர்களை வெளியேற்றும்படி உத்தரவிடுகிறேன். *(குறுக்கீடு)* மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். சிவசங்கர், இன்னும் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும், ஜாக்கிரதை. *(குறுக்கீடு)* இல்லை, எச்சரிக்கிறேன். கடுமையாக எச்சரிக்கிறேன். கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும். அவைக் காவலர்கள் அவர்களை அவையிலிருந்து வெளியேற்றும்படி உத்தரவிடுகிறேன். இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த உறுப்பினர்களுக்கு பல முறை வாய்ப்புக் கொடுத்தும், அந்த வாய்ப்பை அவர்கள் தவறாகப் பயன்படுத்துகிற அதேநேரத்திலே, அவையை நடத்த விடாமல் பேரவைத் தலைவரை முற்றுகையிட்டு, குந்தகம் விளைவித்த காரணத்தினாலே இன்றைக்கு நான் அவர்களை வெளியேற்ற வேண்டிய சூழ்நிலைக்கு ஆளாகியிருக்கிறேன். இதுபோன்று திட்டமிட்டு வந்து அவையை





நடத்த விடாமல் செய்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த உறுப்பினர்களை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். எச்சரிக்கிறேன். *(குறுக்கீடு)* இல்லை, நேற்றைக்கு மக்கள் பிரச்சினையைப் பேச வேண்டுமென்று சொன்னார்கள். இன்றைக்கு மக்கள் பிரச்சினையைப் பற்றி விவாதிக்கிறபோது அவையை நடத்த விடாமல் குந்தகம் விளைவிப்பது, வேண்டுமென்றே திட்டமிட்டு இந்த அவையை நடத்த விடாமல் செய்கிற பணி என்பதனை நான் மீண்டும் ஒரு முறை தெரிவித்து, திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களை எச்சரித்து, அவர்களைக் காவலர்கள் வெளியேற்றும்படி உத்தரவிடுகிறேன்.

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் லாபியில் கோஷமிட்டுக் கொண்டே சென்றனர்.)*

லாபியில் சத்தம் போடாமல், அவர்களைக் காவலர்கள் வெளியேற்றும்படி உத்தரவிடுகிறேன். மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மின்சாரக் கொள்முதல் சம்பந்தமாக சொன்ன குற்றச்சாட்டுகளுக்கும், ஏதாவது பதில் இருந்தால் சொல்லுங்கள், அது சம்பந்தமாகச் சொல்லுங்கள், எத்தனை விளக்கமாக இருந்தாலும், சந்தேகமாக இருந்தாலும் கேளுங்கள், விளக்கமாகச் சொல்கிறேன் என்று சொன்னேன். *(குறுக்கீடுகள்)* ஆனால், அதைச் சொல்வதற்கு. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** லாபியில் யாரும் கோஷம் போடக்கூடாது.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆனால், அதைச் சொல்வதற்கு அங்கே அவர்களின் மடியில் கனமோ, வழியில் பயமோ என்னவோ தெரியவில்லை. ஆனால், மின்சாரக் கொள்முதல் சம்பந்தமாக நான் சொன்ன விவரங்களில் சந்தேகம் இருந்தால் நீங்கள் கேளுங்கள், பதில் சொல்கிறேன் என்று, *(குறுக்கீடு)* ஒரே ஒரு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன். அவர்கள் பிரச்சினையை வேறு பக்கமாகத் திசை திருப்பி, பதில் சொல்ல வழி இல்லாததால், அவர்களால் இந்தக் குற்றச்சாட்டுகளுக்குப் பதில் எதுவும் சொல்ல

[திரு. நத்தம் ஆர். விசுவநாதன்] [2014 டிசம்பர் 5

முடியாததால், வேறு பிரச்சினையை எழுப்பி வெளியே செல்கிறார்கள். அப்படியும் திரும்பத் திரும்ப பேசுங்கள், நாங்கள் வாய்ப்புத் தருகிறோம் என்று சொல்லியும், வாய்ப்புகள் கொடுத்தும், அதை ஏற்க மறுத்து இங்கே வெளியேற்றக்கூடிய சூழ்நிலை நடந்துள்ளது. உள்ளபடியே மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் சொன்னதுபோல உண்மையிலேயே அவர்கள் இருக்க வேண்டும், இதற்குரிய பதிலை அவர்களிடமிருந்து வாங்க வேண்டும் என்று நினைத்தோம். அதனால் அவர்களை இருக்க வைப்பதற்காகத்தான் எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டோம். ஆனால், அவர்களே இருக்க மாட்டேன் என்று ஓடுகிறார்கள். *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுரைக்குப் பிறகு அவர்களுக்கு வாய்ப்புத் தருகிறேன் என்று பலமுறை சொல்லியும், கொடுத்த வாய்ப்பை அவர்கள் முறையாகப் பயன்படுத்தாமல், மக்களுடைய பிரச்சினைகளைப் பற்றிப் பேசாமல் வேறு பிரச்சினைகளைப் பேசி திசை திருப்புவதற்காகவே இன்றைக்குத் திட்டமிட்டு வந்து, அவர்கள் அவையிலே நடந்துகொண்ட விதம் மிக வன்மையாகக் கண்டிக்கத்தக்கது. அவர்களை நான் மிகவும் வன்மையாகக் கண்டிக்கிறேன். மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மின்சாரக் கொள்முதல் சம்பந்தப்பட்ட விவரங்களைத் தெரிவிக்க இந்த வாய்ப்பினை வழங்கிய மக்களின் முதல்வர் இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், இந்த வாய்ப்பினை வழங்கிய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்து, எங்களுடைய கவனத்தை ஈர்த்து, நாங்கள் உங்களுக்குத் தேவையான விளக்கங்களைக் கொடுப்பதற்கு வாய்ப்பினை நல்கிய அந்தக் கவன ஈர்ப்பு தீர்மானத்தைக் கொடுத்த மாண்புமிகு உறுப்பினர்களுக்கும், கருத்துகளைச் சொன்னவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்து, வாய்ப்பிற்கு நன்றி கூறி முடிக்கின்றேன். நன்றி. *(மேசையைத் தட்டும் ஒலி)*

*பிற்பகல் 1–20*



2014 டிசம்பர் 5] [பேரவைத் தலைவர்]

## (ஆ) தமிழ்நாட்டில் தொழில் தொடங்க உகந்த சூழ்நிலையை உருவாக்குதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தமிழகத்தில் தொழில் துவங்கும் முதலீட்டாளர்களுக்கு சாதகமான சூழ்நிலைகளை மேம்படுத்துதல் குறித்து தே.மு.தி.க. கட்சியைச் சார்ந்த திரு. ர.ம. பாபு முருகவேல், இந்திய கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்) கட்சியைச் சார்ந்த திரு. அ. சவுந்தரராசன், இந்திய கம்யூனிஸ்டு கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் எம். ஆறுமுகம், சு. குணசேகரன், கே. உலகநாதன், வெ. பொன்னுப்பாண்டி, பி.எல். சுந்தரம், டி. இராமச்சந்திரன், கு. லிங்கமுத்து ஆகியோர் சட்டமன்றப் பேரவை விதி *56*–ன்கீழும், பாட்டாளி மக்கள் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார், மனித நேய மக்கள் கட்சியைச் சேர்ந்த முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, திரு. அ. அஸ்லம் பாஷா, புதிய தமிழகம் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி ஆகியோர் சட்டமன்றப் பேரவை விதி *55*–ன்கீழும் அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். இதனை சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்கிறேன். இதுகுறித்து அறிவிப்புக் கொடுத்தவர்கள் கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் சுருக்கமாக மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வரலாம். முதலிலே தே.மு.தி.க. கட்சியைச் சேர்ந்த திரு. ர.ம. பாபு முருகவேல் அவர்கள்.

**திரு. ர.ம. பாபு முருகவேல்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆட்சி தொடங்கும்போது, வேலைவாய்ப்பு அலுவலகத்திலே பதிவு செய்து வேலையில்லாமல் இருந்த வேலையில்லா பட்டதாரிகளுடைய எண்ணிக்கை *58* இலட்சம் ஆக இருந்தது. ஆனால், இந்த மூன்றரை ஆண்டுகளிலே அது *62* இலட்சத்திற்கும் மேற்பட்ட எண்ணிக்கையிலே இருந்துகொண்டிருக்கின்றது. இதற்குக் காரணம், தமிழகத்திலே புதிய தொழில்கள் தொடங்கப்படாத ஒரு சூழ்நிலை நிலவிக்கொண்டிருக்கிறது. ஏற்கெனவே, இங்கே செயல்பட்டுக்கொண்டிருக்கக்கூடிய பெரிய நிறுவனங்கள், எடுத்துக்காட்டாக நோக்கியா போன்ற நிறுவனங்கள் இப்போது மூடப்பட்டு, பல ஆயிரக்கணக்கான இளைஞர்களுக்கு வேலையில்லாத ஒரு சூழ்நிலை தமிழகத்திலே நிலவிக்கொண்டிருக்கிறது. அதற்குத் தொழில் துறை நிறுவனங்கள் கூறுகின்ற காரணம், தமிழகத்திலே இப்போது தொழில் செய்ய முடியாத ஒரு சூழ்நிலை நிலவிக்கொண்டிருக்கின்றது; குறிப்பாக மின்சாரக் கட்டணம் அதிகமாக இருக்கின்றது; எனவே, எங்களால் இங்கே தொழில்களை

நல்லமுறையிலே செய்ய முடியவில்லை என்கின்ற ஒரு சூழ்நிலை இங்கே நிலவிக்கொண்டிருக்கிறது. அதனால் புதிய தொழிற்சாலைகள் தமிழகத்திலே வருவதற்குண்டான வாய்ப்புகள் இல்லை. கடந்த 15 ஆண்டுகளாக. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ர.ம. பாபு முருகவேல், நீங்கள் என்ன அறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்களோ அதைச் சொல்லுங்கள். நீங்கள் விவாதத்திற்கு உள்ளே போகாதீர்கள். (குறுக்கீடுகள்) திரு. எல். வெங்கடேசன், உட்கார்ந்துகொண்டு பேசாதீர்கள். இதெல்லாம் முறையல்ல. உங்களுக்குப் பலமுறை சொல்லியும், நீங்கள் விதிகளின் படியே நடக்கமாட்டேன் என்கிறீர்கள். (குறுக்கீடுகள்) உட்கார்ந்துகொண்டு பேசாதீர்கள். (குறுக்கீடுகள்) மன்றத்திற்கு வந்து இவ்வளவு நாட்கள் ஆகிவிட்டன. (குறுக்கீடுகள்) நீங்கள் பேரவைக்கு வந்து இவ்வளவு நாட்கள் ஆகியும் விதிகளின்படி நடக்கத் தெரியவில்லை. உட்கார்ந்துகொண்டே பேசுகின்றீர்கள். இது முறையல்ல. திரு. ர.ம. பாபு முருகவேல், கொடுத்த அறிவிப்பை மட்டும் பேசுங்கள்.

**திரு. ர.ம. பாபு முருகவேல்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 15 ஆண்டுகளாக தமிழகத்திலே தொழிற்சாலைகள் பெருகிக்கொண்டிருந்த சூழ்நிலையிலே, இப்போது பெரிய தொழிற்சாலைகளும், வெளிநாட்டு முதலீடுகளும் குறைந்து கொண்டேயிருக்கின்றன. தமிழகத்திலே தொழில் தொடங்க இயலாதவர்கள் இப்போது கர்நாடகத்திலும், ஆந்திராவிலும் தொழில் தொடங்கக்கூடிய ஒரு சூழ்நிலை நிலவிக்கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் அதையெல்லாம் அறிவிப்பில் கொடுக்கவில்லை. விவாதத்திற்கு உள்ளே போகாதீர்கள். நீங்கள் அறிவிப்பில் கொடுத்ததைக் கவனத்தில் ஈர்த்து அமருங்கள். (குறுக்கீடுகள்) நான் சொல்லியும், நீங்கள் திரும்பத் திரும்ப வேறு எதையோ பேசிக்கொண்டு போனால் என்ன அர்த்தம்? இது Demand–ன்மீதான discussion இல்லை. தகவல் கோரி இருப்பதுதான். நீங்கள் கொடுத்துள்ள அறிவிப்பில் 'தமிழகம் தொழில் துறையில் பின்னோக்கிச் சென்றுகொண்டிருக்கிறதோ என்று எண்ணும் வகையில் தமிழகத்திலுள்ள தொழிற்சாலைகள் பிற மாநிலங்களுக்குச் செல்கின்ற அவல நிலை' என்றெல்லாம் கொடுத்திருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) இது முறையல்ல. நீங்கள் முறையோடு பேசுங்கள். அரசினுடைய கவனத்தை ஈர்த்து உட்காருங்கள்.





**திரு. ர.ம. பாபு முருகவேல்:** என்ன கவனத்தை ஈர்ப்பார்கள்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேசிவிட்டு உட்காருங்கள்.

**திரு. ர.ம. பாபு முருகவேல்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுடைய கோரிக்கையை ஏற்று அமைச்சரின் கவனத்தை ஈர்த்து அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

***திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் திருப்பெரும்புதூரில் சமீபத்தில் ஏற்பட்ட 25 ஆயிரம் பேருக்கான வேலை இழப்பு என்பது ஒரு நல்ல அறிகுறியை நமக்குத் தரவில்லை. அதேபோல, தமிழகத்தினுடைய பல மாவட்டங்களிலே, திருப்பூர் போன்ற இடங்களிலே, மற்ற இடங்களிலே இருக்கக்கூடிய ஜவுளித் தொழில்கள், ஆயத்த ஆடைத் தொழில்கள் வேறு மாநிலங்களுக்குப் போகின்றன. வேறு மாநிலங்களிலிருந்து இங்கே வந்து இதைவிட அதிக சலுகை இருக்கின்றது என்ற பெயரில் அல்லது வேறு பெயர்களில் அழைப்பு விடுகின்றார்கள். மற்ற மாநில முதலமைச்சர்களே வந்து அழைப்பு விட்டுக்கொண்டு இருக்கின்றார்கள். பக்கத்து மாநிலமான ஆந்திரத்திலே இருந்தும் அதுபோன்ற அழைப்புகள் வந்துகொண்டிருக்கின்றன. Ford போன்ற பெரிய கம்பெனிகள் தங்களுடைய விரிவாக்கத்தை குஜராத்திலே செய்கின்றார்கள். ஹூண்டாய் போன்ற கம்பெனி தன்னுடைய விரிவாக்கத்தை வேறு மாநிலத்தில் செய்யலாம் என்று யோசிக்கின்றார்கள்.

அப்படி 10 ஆண்டு, 15 ஆண்டு தமிழக அரசின் சலுகையை அனுபவித்த பிறகு விரிவுபடுத்த வேண்டிய நேரத்தில் வேறு இடத்திற்குப் போகின்ற ஒரு நிலைமையும் இருக்கிறது. இங்கிருந்து வங்காள தேசத்தின் டாக்காவிற்குக் கூட நம்முடைய ஜவுளித் தொழில்கள் போகின்ற நிலைமையும் இருக்கின்றது. ஆகவே, அவர்களுக்கெல்லாம் ஊக்கம் கொடுக்கின்ற வகையிலே தடையற்ற மின்சாரம் கொடுப்பதற்கு முதலிலே நாம் ஏற்பாடு செய்ய வேண்டியிருக்கிறது. அதேபோல, அவர்கள் உரிமம் பெறுவதற்கும், மற்றவற்றைத் தாமதம் இல்லாமல் பெறுவதற்கும் ஒற்றைச் சாளர முறை இருக்கிறது என்று சொல்கின்றோம். அதற்குப் பிறகும் தொழில் முதலீட்டாளர்கள், மற்றவர்கள் நிறைய தாமதம் ஆகிறது

என்று எங்களைப் போன்றவர்களிடம் சொல்கின்றார்கள். அதனுடைய உண்மை நிலை என்ன என்று அறிய விரும்புகிறேன்.

*பிற்பகல் 1–25*

அதுபோன்ற விஷயங்களில் எல்லாம் அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுப்பதன் மூலமாகத்தான் இங்கு இருக்கக்கூடிய முதலீட்டாளர்களை இங்கேயே நாம் தக்க வைக்க முடியும். வெளியிலிருந்து முதலீட்டாளர்களை ஈர்க்க முடியும். குறிப்பாக, மின்சாரம் தடையில்லாமல் கிடைப்பதை உறுதிப்படுத்த வேண்டும். பன்னாட்டு நிறுவனத்திற்குத் தடையற்ற மின்சாரம், உள்நாட்டு நிறுவனங்களுக்கு மின்சாரம் இல்லை என்பது போன்ற அந்த நிலைமைகள் உள்நாட்டில் இருக்கக்கூடிய நம்முடைய சிறு தொழிலதிபர்களைக் கடுமையாகப் பாதிக்கிறது. ஆகவே, அவர்கள் வேறு மாநிலத்திற்குப் போனால் என்ன என்று யோசிக்கிறார்கள். சாயப் பட்டறை போன்ற இதர பல பிரச்சினைகளும் இருக்கின்றன.

அதேமாதிரி, டி.வி.எஸ். நிறுவனம் போன்ற பெரிய நிறுவனங்கள் நம்முடைய தமிழகத்தினுடைய தனி நிறுவனமாக இருந்தவை, வேறு இடங்களுக்கு நிறைய தொழிற்சாலைகளைக் கொண்டு செல்கின்றன. சீனா போன்ற இடங்களுக்கு கொண்டு போவது மட்டுமல்ல இதர மாநிலங்களுக்கும் கொண்டு செல்கிறார்கள். அப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது. ஆகவே, நமது மாநிலத்தில் இருக்கிற தொழில்களை இங்கேயே தக்க வைக்க, நிலைக்க வைக்க, கூடுதலாக தொழில்களை உருவாக்க உரிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டு அமைச்சரின் கவனத்தை ஈர்த்து அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன் அவர்கள்.

**திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாட்டினுடைய பொருளாதார வளர்ச்சியை உருவாக்குவதிலும், வேலைவாய்ப்பை உருவாக்குவதிலும் தொழில் துறை முக்கிய பங்கு வகிக்கிறது. சமீபகாலமாக மத்திய அரசினுடைய தொழிற்சாலை ஒன்றுகூட தமிழகத்திலே தொடங்கப்படவில்லை. ஏற்கெனவே, தமிழகத்தில் தொடங்கப்பட்ட நோக்கியா உள்ளிட்ட பல்வேறு தொழிற்சாலைகள் இன்றைக்கு





மூடப்பட்டிருக்கின்றன. அதிலே தொழில் புரிந்த பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் இன்றைக்கு வேலையில்லாமல் தவிக்கிறார்கள். குறிப்பாக, இன்றைக்குத் தமிழகத்திலே தொழிற்சாலை தொடங்குவதற்கான தடையில்லாச் சான்றிதழ் பெறுவதிலே கால தாமதம் ஏற்படுகிறது. அதேபோல, தொழில் துவங்க வேண்டுமென்றால் அதற்கு நிலம் ஒதுக்கீடு செய்வதிலே கால தாமதம் ஏற்படுகிறது என பல்வேறு பிரச்சினைகள் முதலீட்டாளர்களால் இன்றைக்குச் சொல்லப்படுகின்றன. அதன்காரணமாக, இன்றைக்கு வேறு மாநிலங்களுக்குத் தொழில் முனைவோர்கள் சென்று கொண்டிருக்கிறார்கள். ஆகவே, தமிழக அரசு தொழில் முதலீட்டாளர்களை முதலீடு செய்வதற்கான சூழ்நிலையைத் தமிழகத்திலே உருவாக்க வேண்டுமென்று கேட்டு அமைச்சரின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார் அவர்கள்.

**திரு. அ. கணேஷ்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் தொழில் வளர்ச்சி படிப்படியாகக் குறைந்து வரும் சூழ்நிலையில், அதுவும் 2012–2013 ஆம் ஆண்டுகளில் தொழில் வளர்ச்சி குறைந்திருக்கக்கூடிய சூழ்நிலையில், அதிலும் குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், பக்கத்திலே இருக்கக்கூடிய அண்டை மாநில முதல்வர்கள் நேரடியாக தமிழகத்திற்கு வந்து, தமிழகத்து முதலீட்டாளர்களைத் தங்கள் மாநிலத்திற்கு தொழில் தொடங்க அழைப்பு விடுக்கும் ஒரு சூழ்நிலை இருக்கிறது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், கர்நாடக மாநிலத்தினுடைய முதலமைச்சர் நேரடியாக கோயம்புத்தூருக்கு வந்து அழைப்பு விடுத்தது, மத்தியப் பிரதேசத்தினுடைய முதலமைச்சர் நேரடியாக வந்து அழைப்பு விடுத்தது, குஜராத்தினுடைய குழு இங்கே வந்து அழைப்பு விடுத்தது, ஆந்திரப் பிரதேசத்திலிருந்து குழு வந்து அழைப்பு விடுத்தது ஆகிய இதுபோன்ற செயல்கள் எல்லாம் தமிழகத்தில் தொழில் தொடங்க முயல்வோர்களை வெளி மாநிலத்திற்கு ஈர்க்கின்ற வகையிலும், சலுகைகள் அதிகமாக வழங்கப்படுகின்ற சூழ்நிலையும் நிலவிக்கொண்டிருக்கிறது. குறிப்பாக, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு ஏற்படுகின்ற இந்த மின் பற்றாக்குறை ஒரு முக்கிய காரணமாகக் கருதப்படுகிறது. எனவே, தமிழகத்தில்

தொழில்முனைவோர்களை ஈர்க்கும்வகையில், அடுத்த ஆண்டு சென்னை நந்தம்பாக்கம் டிரேட் சென்டரில் தொழில்முனைவோர் கூட்டமைப்பு மாநாடு நடைபெறுவதாக உள்ள இந்தச் சூழ்நிலையில், தமிழக அரசு தமிழ்நாடு மாநிலத்திற்கான தொழிலை ஈர்க்கும்வகையில், ஏதேனும் திட்டம் வைத்திருக்கிறதா? குழு அமைத்து வேறு மாநிலத்தில் முதலீடு செய்பவர்களைத் தமிழகத்திற்கு ஈர்க்கும்வகையில் அவர்களுக்கு சலுகைகளை வழங்க அரசு திட்டம் வைத்திருக்கிறதா என்பதையும் அறிய விரும்புகிறேன் என்று கூறி, அமைச்சரின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த பல வருடங்களுக்கு முன்பு வரையிலும் இந்திய நாட்டிலேயே தமிழ்நாடு தொழில் வளத்தில் ஒரு முன்னிலை மாநிலமாக பல வருடங்கள் விளங்கி வந்தது. தொழில் வளம் என்று பார்க்கின்றபோது, வேலைவாய்ப்பிற்காக ஆண்டுதோறும் படித்து வரக்கூடிய பல இலட்சக்கணக்கான இளைஞர்களுடைய வாழ்வாதாரத்திற்கு அடித்தளமாக விளங்கக்கூடியது இந்தத் தொழில். எனவே, பல்கலைக்கழகங்களில், கல்லூரிகளில் படித்து வரக்கூடிய மாணவர்களுக்கு வேலைவாய்ப்பைக் கொடுக்க வேண்டுமென்று சொன்னாலே, ஆண்டுதோறும் புதிய, புதிய தொழில்களை இங்கே துவக்கினால்தான் அவர்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கித் தர முடியும். ஆனால், அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலைக்கு மாறாக, இங்கு இருக்கக்கூடிய தொழில்களே வேறு வெளி மாநிலங்களுக்குப் போகக்கூடிய அல்லது வெளி மாநிலத்தைச் சேர்ந்த, அண்டை மாநிலத்தைச் சேர்ந்த அரசினுடைய முக்கியமான பிரதிநிதிகளே இங்கே வந்து, மத்திய பிரதேசத்திலே வந்து தொழில் தொடங்குங்கள், ஆந்திராவில் வந்து தொழில் தொடங்குங்கள், கர்நாடகாவில் வந்து தொழில் தொடங்குங்கள் என்று கேட்கக்கூடிய நிலை உருவாகி இருக்கிறது. ஏன்? அதேபோன்று நம். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி, விரிவாகப் போகாதீர்கள். அமைச்சரின் கவனத்தை ஈர்த்து உட்காருங்கள்.

பிற்பகல் 1–30





**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** அதேபோன்று நம்முடைய மாநிலத்தின் சார்பாகவும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் பிற மாநிலங்களுக்குச் சென்று தமிழகத்திலே தொழில் தொடங்குவதற்குண்டான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளிலே ஏன் ஈடுபடக்கூடாது? ஏனென்று சொன்னால், இப்போது இந்தியப் பிரதமர் திரு. மோடி அவர்கள் அமெரிக்காவிற்குச் செல்கிறார், ஆஸ்திரேலியாவிற்குச் செல்கிறார். மேலும், பல்வேறு நாடுகளுக்குச் சென்று "Make in India" என்ற அடிப்படையில், இந்தியாவிலே தொழில் தொடங்குவதற்கு அவர்களிடம் அழைப்புகள் விடுத்துவருகிறார். அப்படி இந்தியாவுக்கு வெளிநாட்டு நிறுவனங்கள் வருகின்றபோது, அவற்றை தமிழகத்திலே தொழில் தொடங்குவதற்குண்டான அடித்தளத்தை அமைத்துக் கொடுக்க வேண்டிய கடமை நம்முடைய தமிழ்நாடு அரசுக்கு இருக்கிறது. அந்த வகையிலே, இப்போதே, வெளிநாட்டு நிறுவனங்கள் இந்தியாவுக்கு வருகின்றபோது, அவை தமிழ்நாட்டை முதல் மாநிலமாக தேர்ந்தெடுக்கக்கூடிய அளவிற்குத் தமிழகத்தை மாற்றிக் காட்ட வேண்டிய பொறுப்பு இந்த அரசுக்கு இருக்கிறது. எனவே, அந்தக் கடமையை இந்த அரசு செய்ய வேண்டுமென்று, புதிய தமிழகம் கட்சியின் சார்பாகக் கேட்டு, இந்த நேரத்திலே மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் மனதில் நீங்காது இடம் பெற்று, தமிழக மக்கள் அனைவராலும் 'அம்மா', 'அம்மா' என்று தினந்தோறும் அழைக்கப்படுகின்ற (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் இதய தெய்வம் மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். தினந்தோறும் நல திட்டங்கள்; பல இளைஞர்கள், இளம் பெண்களுக்கு எதிர்காலமாக விளங்கக்கூடிய மாண்புமிகு அம்மா அவர்கள் சட்டமன்றத்திலேகூட, சட்டமன்ற கட்சித் தலைவருக்குக் கட்டுப்படாத உறுப்பினர்களுக்கிடையில், இராணுவக் கட்டுப்பாட்டுடன் இயக்கத்தை வழிநடத்துகின்ற (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் இயக்கத்தின் இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களுடைய விசுவாசமிக்கத் தொண்டனாக, இந்தக் கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்கு விளக்கமளிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

[திரு. பி. தங்கமணி] [2014 டிசம்பர் 5

முதலிலே, இங்கே பேசிய தே.மு.தி.க. உறுப்பினர் அவர்கள் தமிழகத்திலே இருந்து வேறு மாநிலங்களுக்குத் தொழிற்சாலைகள் சென்றுவிட்டன என்று சொன்னார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக நான் கேட்டுக்கொள்கின்றேன், ஒரு தொழிற்சாலை, எந்தத் தொழிற்சாலை எந்த மாநிலத்திற்கு சென்றது என்பதை முதலில் அவர்கள் சொல்ல வேண்டும். ஏனென்றுச் சொன்னால் திரு. எல். வெங்கடேசன் அவர்களும் அமர்ந்துகொண்டே இதே கருத்தைச் சொன்னார்கள். ஒன்று, எந்த மாநிலத்திற்கு, எந்தத் தொழிற்சாலை சென்றிருக்கிறது என்பதை முதலில் அவர்கள் சொல்ல வேண்டும். இரண்டாவது, நோக்கியாவை பற்றி சொன்னார்கள். உண்மை. அதற்கு என்ன காரணம் என்பதை கடந்த முறை இந்த சட்டமன்றத்திலே நான் விளக்கமாகப் பதில் கொடுத்திருக்கின்றேன். நோக்கியா நிறுவனத்தைக் கொண்டு வந்தது, பல்லாயிரக்கணக்கான பெண்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கியது எங்கள் இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) 4–6–2005 அன்று நோக்கியா கம்பெனி வெளிநாடுகளிலிருந்து இந்தியாவிலே முதலீடு செய்ய வேண்டும் என்று சொன்னவுடன், அனைத்து மாநிலங்களையும் சுற்றிப் பார்த்துவிட்டு, மாண்புமிகு அம்மா அவர்கள் ஆளுகின்ற இந்த மாநிலத்திலேதான், இந்தத் தொழிலை தொடங்க வேண்டுமென்று, அன்றையதினம் புரிந்துணர்வு ஒப்பந்தம் போடப்பட்டு, நல்ல நிலையிலே வந்து கொண்டிருந்தது. மரியாதைக்குரிய அண்ணன் திரு. அ. சவுந்தரராசன் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். கிட்டத்தட்ட 8,000 பேருக்கு நேரடியாகவும், மறைமுகமாக 20,000 பேருக்கும் வேலை கிடைத்தது. ஆதலால், அதில் மாற்றுக் கருத்து இல்லை. நான் இன்றையதினம் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் இருப்பார்கள் என்று நினைத்தேன். மாண்புமிகு அண்ணன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களுக்குப் பதில் சொல்ல முடியாமல், இன்னும் இதிலே இருக்கின்ற பல்வேறு விஷயங்களில் அவர்கள் பாதிக்கப்பட இருக்கின்ற காரணத்தினால், நான் அதனைச் சொல்ல வேண்டுமென்று நினைத்தேன். அவர்கள் வெளியேற்றப்பட்டு விட்டார்கள். இருந்தாலும், 2012 ஆம் ஆண்டு வரை அந்த நோக்கியா கம்பெனி கிட்டத்தட்ட உலக அளவிலேயே அதிக உற்பத்தி, அதாவது தினந்தோறும் 6 இலட்சம் கைபேசிகளைத் தயாரிக்கின்ற, உற்பத்தி நிறுவனமாக இருந்தது. 2012 ஆம்



2014 டிசம்பர் 5] [திரு. பி. தங்கமணி]

ஆண்டுதான் முதன்முதலாக மத்திய அரசிலே இருந்த திராவிட முன்னேற்றக் கழகமும், காங்கிரஸும் Retrospective Act என்ற ஒரு Act, அதாவது முன் தேதியிட்ட ஒரு சட்டத்தைக் கொண்டு வந்து, 2,080 கோடி ரூபாய் Income Tax கட்ட வேண்டுமென்று அவர்களுக்கு நோட்டீஸ் அனுப்புகின்றார்கள். அதை எதிர்த்து நீதிமன்றத்திற்குத் சென்றார்கள். மரியாதைக்குரிய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியினர்கூட, ‘எங்களையும் வழக்கிலே சேர்த்துக்கொள்ள வேண்டும்’ என்று அவர்களும் டெல்லி உயர் நீதிமன்றத்திலே வழக்குகள் தொடர்ந்தார்கள். அந்த வழக்குகள் தள்ளுபடியானது. அவர்கள், ‘மேல்முறையீட்டை, நீங்கள் அலுவலகத்திலேயே பார்த்துக்கொள்ளுங்கள்’ என்று சொல்லிவிட்டார்கள். இதிலே, அங்கம்பெற்ற திராவிட முன்னேற்றக் கழகம் இன்றையதினம் அந்த நோக்கியா தொழிற்சாலைக்காகப் போராட்டம் நடத்துகிறது என்று சொன்னால், அவர்களே பூட்டிவிட்டு, அந்தத் தொழிற்சாலை வெளிமாநிலத்திற்குச் செல்ல வேண்டும், இந்த மாநிலத்தை விட்டு—இந்தியாவைவிட்டே செல்ல வேண்டும் என்பதற்கு சட்டம் கொண்டுவந்தபோது, அவர்களே ஒரு எதிர்ப்பும் தெரிவிக்காமல் இருந்தார்கள். இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்கள் அந்தத் தொழிற்சாலையைக் கொண்டுவந்தார்கள். அதிலே 60 சதவிகிதம் இளம் பெண்கள் வேலை செய்கின்றனர் என்ற ஒரு மனப்பான்மைகூட இல்லாமல், அந்தத் தொழிற்சாலையை மூடுவதற்கு முழுமுதற்காரணம் திராவிட முன்னேற்றக் கழகமும், காங்கிரஸும்தான் என்பதை இந்த நேரத்தில் நான் பகிரங்கமாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பிற்பகல் 1–35

எந்த விதத்திலே மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியிலே இந்தத் தொழிற்சாலை சென்றது? மரியாதைக்குரிய உறுப்பினர் திரு. எல். வெங்கடேசன் அவர்களும், திரு. ர.ம. பாபு முருகவேல் அவர்களும் இதற்குப் பதில் சொல்ல வேண்டும். எங்களிடத்திலே தவறு ஏதாவது இருக்கின்றதா? இல்லை, மாண்புமிகு அம்மா அவர்களிடத்திலே தவறு இருக்கின்றதா? மத்திய அரசிலே இருந்தவர்கள், இங்கே தமிழகத்திலே இருக்கின்ற தொழிற்சாலைகளுக்கு எதிர்ப்பாக ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். மத்திய அரசிலே அங்கம் வகித்துக் கொண்டிருந்த திராவிட முன்னேற்றக் கழகம் அந்தச் சட்டத்தை எதிர்த்து,

[திரு. பி. தங்கமணி] [2014 டிசம்பர் 5

ஏனென்று கேட்கவில்லை. ஆனால், இன்றையதினம் தொழிற்சாலை மூடப்படுகின்ற நேரத்தில், அரசியல் செய்வதற்காக இப்படி ஒரு போராட்டத்தை அறிவித்துள்ளார்கள். ஏதோ எங்களால்தான் அந்தத் தொழிற்சாலை சென்றதைப் போல ஒரு தோற்றத்தை அதன்மூலம் உருவாக்கி இருக்கின்றார்கள். ஆனால், மக்கள் ஏமாறமாட்டார்கள் என்பதை நான் மீண்டும் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். வெளி மாநிலத்திற்கு தொழிற்சாலை சென்றுவிட்டது என்று உங்கள் தலைவர்கூட சொல்லிக் கொண்டிருக்கின்றார். எந்த மாநிலத்திற்கு எந்தத் தொழிற்சாலை சென்றது? இப்பொழுது பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. ர.ம. பாபு முருகவேல் அவர்களும், மற்றவர்களும் சொன்னார்கள். (குறுக்கீடு) நான் சொல்வதைக் கேளுங்கள். கேட்டுவிட்டுச் சொல்லுங்கள்.

கோவை மாநகரில் கர்நாடக முதல்வர் அவர்கள் தொழில்முனைவோர்கள் கூட்டத்தை நடத்தினார்கள். நான் இல்லை என்று சொல்லவில்லை. 12 ஆயிரம் கோடி ரூபாய் அளவுக்கு முதலீடு செய்வதாக செய்தித் தாள்களில் எல்லாம் செய்தி வந்தது. நான் ஒன்றே ஒன்றை மட்டும் கேட்கின்றேன். 12 ஆயிரம் கோடி ரூபாய் முதலீடு செய்கின்றவர்கள் ஏதோ தவறான தொழில் செய்கின்றார்களா, ஏன் நான்தான் இந்த இடத்தில் இந்த கம்பெனியை ஆரம்பிக்கின்றோம் என்று யாராவது ஒருவராவது தன்னுடைய பெயரைச் சொல்லியிருக்கின்றார்களா? இந்தத் தொழிற்சாலையை நான் கர்நாடகத்திலே சென்று ஆரம்பிக்கிறேன் என்று சொல்லியிருக்கின்றார்களா? 12 ஆயிரம் கோடி ரூபாய் முதலீடு செய்கின்றவர்கள் தவறான தொழில் செய்கின்றார்களா? உண்மையைச் சொல்ல வேண்டியதுதானே. நான் அங்கே செல்கிறேன் என்று சொல்ல வேண்டியதுதானே. அன்றையதினமே அங்கே இருக்கின்ற C.I.I. என்று சொல்லக்கூடிய அமைப்பைச் சேர்ந்தவர்களும் பேட்டி கொடுத்தார்கள். கொடிசியாவினரும் பேட்டி கொடுத்தார்கள். நாங்கள் யாரும் கர்நாடகம் செல்ல மாட்டோம். தமிழகத்திலேயே மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசிலேயே போதிய வசதிகள் இருக்கின்றன; (மேசையைத் தட்டும் ஒலி) அப்படி இருக்கின்றபோது நாங்கள் எதற்காக வெளி மாநிலங்களுக்குச் செல்ல வேண்டும் என்று அப்பொழுதே செய்தித் தாள்களிலே வந்ததே. ஏன் அதெல்லாம் உங்கள் கண்களுக்குத் தெரியவில்லையா?



2014 டிசம்பர் 5] [திரு. பி. தங்கமணி]

12 ஆயிரம் கோடி ரூபாய் முதலீடு போகிறது என்று சொல்வது மட்டும் உங்களுடைய கண்களுக்குத் தெரிகின்றது. அங்கே இருக்கின்ற தொழிலதிபர்கள் சொன்னது எல்லாம் உங்கள் கண்களுக்குத் தெரியவில்லை, மறைத்துவிட்டீர்கள். அதை அரசியலுக்காக நீங்கள் சொல்கின்றீர்கள். ஒன்றை மட்டும் நான் சொல்கின்றேன். இப்பொழுது பேசியவர்கள் எல்லோரும் தமிழகத்திலே ஏதோ தொழில் நலிவடைந்துவிட்டது; தொழிற்சாலைகள் எல்லாம் வெளியே சென்றுவிட்டன என்று சொல்கிறீர்கள், பட்டியல் இருக்கின்றது, நான் ஒவ்வொன்றாகப் படிக்க இருக்கின்றேன்.

இன்றளவும் தமிழகத்தைச் சிறந்த மாநிலமாக ஜப்பானை சேர்ந்தவர்கள் தேர்ந்தெடுத்து இருக்கின்றார்கள். தொழில் முதலீட்டுக்குத் தகுந்த மாநிலம் தமிழ்நாடு, (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசுதான் என்று சொல்லி இருக்கின்றார்கள், அந்தப் பட்டியலை நான் படிக்க இருக்கின்றேன். இன்று தொழிற்சாலையைப் பற்றி பேசுகின்றீர்களே, தமிழகம் என்று சொன்னால், இங்கு பெரிய கம்பெனிகள் வந்தன என்று சொன்னால், அது இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களால் மட்டும்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

மரியாதைக்குரிய அண்ணன், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் பேசியபோதுகூட, 'ஐந்து முறை முதலமைச்சராக இருந்தவருக்குத் தெரியவில்லையா?' என்று கேட்டார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள், 1991–1996 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வருவதற்கு முன்னால், முதலமைச்சராக இருந்தவருக்கு இப்படி ஒரு தொழிற்சாலையைக் கொண்டு வரவேண்டும் என்ற எண்ணம் இல்லை. ஒரு தொழிற்சாலையைக் கொண்டு வந்து வேலைவாய்ப்பை உருவாக்க வேண்டும் என்ற எண்ணம் இல்லை. ஆனால், முதன்முதலாக மாண்புமிகு அம்மா அவர்கள் முதல்வராக ஆனதற்குப் பின்னால், 1996 ஆம் ஆண்டு அமெரிக்காவினுடைய பெரிய நிறுவனமான Ford Company தொடங்கப்பட்டு, இன்றையதினம் அந்த நிறுவனம் பெரிய அளவிற்கு வளர்ச்சி அடைந்திருக்கிறது. அந்த நிறுவனம் தமிழகத்தில் ஆரம்பிக்கப்பட்ட பிறகுதான், மற்ற நிறுவனங்கள் எல்லாம் இங்கே தொடங்கப்பட்டன. (மேசையைத் தட்டும் ஒலி) Ford Company–ஐப் பற்றிச் சொல்லும்போது, வெளி மாநிலங்களுக்குச் சென்றுவிட்டது என்று அண்ணன் சவுந்தரராசன் அவர்கள் சொன்னார்கள். அதை

[திரு. பி. தங்கமணி] [2014 டிசம்பர் 5

நான் பின்னர் சொல்கின்றேன். எந்தக் காரணத்திற்காகச் சென்றார்கள் என்று அவர்கள் எல்லாம் கடிதம் கொடுத்து இருக்கின்றார்கள். அதில் எங்கள் மேல் தவறு இல்லை. அதுவும் திராவிட முன்னேற்றக் கழகம் என்று சொல்ல நான் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதற்குப் பின்னால் அதைப் பார்த்து வந்த ஹுண்டாய் கம்பெனி முதன் முதலாக தமிழகத்திலே கால் வைத்தார்கள். அன்றையதினம் 22–2–1996 அன்று புரிந்துணர்வு ஒப்பந்தம் போடுவதாக இருந்தது. ஆனால், தேர்தல் அறிவிக்கப்பட்ட காரணத்தினால், தேர்தல் கமிஷன் அனுமதி கொடுக்கவில்லை. அனுமதி கொடுக்காத காரணத்தினால் அன்றையதினம் அந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் போடவில்லை. அது பல பத்திரிகைகளிலே வந்திருக்கின்றது. 22–3–1996 ஆம் ஆண்டு Business Line பத்திரிகையிலேகூட அந்தச் செய்தி வந்திருக்கின்றது. இது எல்லாம் யாருடைய கண்ணுக்கும் தெரியவில்லை. இதை யார் கொண்டு வந்தார்கள்? இவ்வளவு பெரிய தொழிற்சாலையை அம்மா அவர்கள் உருவாக்கி இருக்கின்றார்கள் என்பது உங்களுக்குத் தெரியவில்லை. ஏதோ பத்திரிகையிலே ஒரு செய்தி வந்துவிட்டது என்றவுடன் உடனடியாக வெளி மாநிலத்திற்குச் சென்றது, தமிழகத்தில் தொழிலே இல்லை என்று சொல்கின்றீர்களே, எந்த அடிப்படையில் சொல்கின்றீர்கள்? (குறுக்கீடு) உட்கார்ந்து பேசாதீர்கள். நேரடியாகக் கேட்டுச் சொல்லுங்கள். நான் பதில் சொல்கிறேன். பதில் சொல்வதற்குத் தயாராக இருக்கிறேன். என்ன கேள்வி வேண்டுமானாலும் கேளுங்கள் நான் பதில் சொல்வதற்குத் தயாராக இருக்கிறேன். (குறுக்கீடு) நான் பேசுகிறேன். பேசிவிட்டுச் சொல்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசி முடிக்கட்டும்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** நான் சொல்கிறேன். உட்காருங்கள். எங்கே என்று சொல்கிறேன். உட்காருங்கள். (குறுக்கீடு) அது தொழில் வளர்ச்சியில் இல்லை. உட்காருங்கள். (குறுக்கீடு)

**திரு. வி.சி. சந்திரகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் வளர்ச்சியிலே தமிழகம் பின்தங்கியிருக்கிறது.



2014 டிசம்பர் 5]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. சந்திரகுமார், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசி முடித்த பிறகு பேசுங்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** தொழில் வளர்ச்சியில் இல்லை. (குறுக்கீடு) உட்காருங்கள் நான் சொல்கிறேன். நான் சொல்கிற வரைக்கும் கேளுங்கள். (குறுக்கீடு) ஏன் கோபப்படுகிறீர்கள்? உங்கள் கருத்தில் உண்மை இல்லாததனால் கோபப்படுகிறீர்கள். உண்மை இருந்தால் இவ்வளவு கோபப்படமாட்டீர்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.சி. சந்திரகுமார், அமைச்சரைப் பார்த்துப் பேசக்கூடாது. என்னைப் பார்த்துத்தான் பேச வேண்டும். (குறுக்கீடு) இல்லை, என்னைப் பார்த்துத்தான் பேச வேண்டும். நான்தான் மாண்புமிகு அமைச்சர் பேசி முடித்தவுடன் வாய்ப்புத் தருகிறேன் என்று சொல்லியிருக்கிறேனே? (குறுக்கீடு) மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது இடையூறு செய்ய வேண்டாம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசி முடித்தவுடன் வாய்ப்புக் கேளுங்கள், வாய்ப்புத் தருகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கடைசியாகப் பதில் சொல்வார். அப்போது நான் வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 1–40

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** நான் பேசிய பிறகு உங்கள் கேள்வியைக் கேளுங்கள், நான் பதில் சொல்கிறேன். இந்தியாவிலேயே முதன்முதலாக–திரு. ர.ம. பாபு முருகவேல் அவர்கள்தான் சொன்னார்கள், மரியாதைக்குரிய அண்ணன் திரு. அ. சவுந்தரராசன் அவர்களும் சொன்னார்கள்; அனுமதி கொடுப்பதிலே சிறிது கால தாமதம் ஆகின்றது, ஆகையால் தொழிலில் முதலீடு செய்ய வருகின்றவர்கள் எல்லாம் சிறிது சங்கடப்படுகிறார்கள் என்றார்கள்—மாண்புமிகு அண்ணன் சவுந்தரராசன் அவர்களுக்கு நன்றாகத் தெரியும், உங்களுக்குத் தெரிய வாய்ப்பில்லை. இந்தியாவிலேயே முதன்முதலாக, 1992 ஆம் ஆண்டுதான் ஒற்றைச் சாளர முறை, அதாவது Guidance Bureau என்கிற முறையை உருவாக்கி இந்தியாவிற்கே வழிகாட்டியாக விளங்கியவர் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதன்வாயிலாக, ஒற்றைச் சாளர

முறையில் அத்துணை அனுமதிகளும் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. யாராவது ஒருவர் அங்கே சென்றுவிட்டார் என்று சொன்னால், அனுமதிகளைப் பெற்றுவிட்டுத்தான் வெளியே வருகின்ற அளவிற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் அனுமதியை வழங்கியிருக்கின்றார்கள். ஆக, எந்த அடிப்படையிலே சொல்லிக்கொண்டிருக்கிறீர்கள்? (குறுக்கீடு) இதைத்தான் நான் சொல்லிக் கொண்டிருக்கிறேன். உங்களுக்குச் சந்தேகம் வருகின்றபோது, நான் பேசிய பிறகு கேளுங்கள். கர்நாடகாவைப் பொறுத்தவரையில், 12 ஆயிரம் கோடி ரூபாய் என்று சொன்னார்கள். நான் ஏற்கெனவே சொன்னதைப்போல யாரும் பெயர் சொல்லவில்லை. ஒரு பெண் தொழிலதிபர் என்று ஒரேயொரு செய்தித்தாளில்மட்டும் சொல்லியிருந்தார்கள். ஆயிரம் கோடி ரூபாய் முதலீடு செய்யப்போகிறார் என்று சொல்லியிருந்தார்கள். திருப்பூரில் இருந்து 2 ஆயிரம் கோடி ரூபாய் என்றார்கள். ஏன், அவர் பெயரைப் போடுவதற்குத் தயங்க வேண்டும்—பத்திரிகையாளர்களாக இருந்தால் என்ன, இங்கே பேசியவர்களுக்கும் தயக்கம் என்ன? தொழில் தொடங்குகின்றார்கள், அவருடைய பணம், அவருடைய முதலீடு, பெயரைச் சொல்வதற்கு என்ன தயக்கம்? அதைத்தான் நான் திரும்பத் திரும்பக் கேட்கின்றேன். ஒரு தொழிற்சாலை வர வேண்டுமென்று சொன்னால், ஒரு மாநிலத்தில் தொழிற்சாலைகள் அதிகமாக இருக்க வேண்டுமென்று சொன்னால், முதலில் சாலை வசதிகள் சிறப்பாக இருக்க வேண்டும். கோயம்புத்தூரிலிருந்து சாம்ராஜ் நகர் செல்ல வேண்டுமென்று சொன்னால், மலைப் பகுதியாக இருக்கிறது. அந்த மலையிலே ஒரு விபத்து ஏற்பட்டால் ஒரு நாள் முழுவதும் அந்தப் பகுதிக்குச் செல்ல முடியாது. சமீபத்தில்கூட நீங்கள் பார்த்திருப்பீர்கள், ஒரு லாரி கவிழ்ந்ததனால், 14 மணி நேரம் போக்குவரத்தே நின்று விட்டது, கர்நாடக அளவிலே. அப்படியிருக்கின்றபோது யார் அங்கே தொழில் செய்யச் செல்வார்கள்? சாம்ராஜ் நகரிலே எங்கே இடம் இருக்கிறது?

மரியாதைக்குரிய உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள்; தென் இந்தியாவை எடுத்துக்கொண்டால், தமிழகத்திலேதான் இந்தளவு மின்சாரம் இருக்கிறது. கர்நாடகாவைப் பார்த்தீர்களென்றால், தினந்தோறும் 4 மணி நேரம், 6 மணி நேரம்தான் மின்சாரம் இருக்கிறது. அங்கே எப்படி 24 மணி நேரம் தடையில்லா மின்சாரம் கொடுப்பார்கள்? எப்படி அங்கே தொழில் தொடங்குவார்கள்? அதைத்தான் இங்கே தொழில் அதிபர்கள் சொன்னார்கள். இதைவிட வேறு சிறந்த மாநிலம் எங்குமில்லை, நாங்கள் அங்கே செல்ல மாட்டோம் என்று. கிராமத்திலே ஒரு பழமொழி சொல்வார்கள். ‘அரசனை நம்பி புருஷனை கைவிட்டாள்’ என்று. கர்நாடக முதல்வர் கோவைக்கு வந்து 12 ஆயிரம் கோடி ரூபாய் முதலீட்டை நான் கொண்டு போகிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால், அவர்களிடம் MoU போட்ட Hero Motor Cycle நிறுவனம் இன்றையதினம் கர்நாடகாவிலிருந்து ஆந்திராவிற்குச் சென்றுவிட்டது என்பதுதான் உண்மையேயொழிய தமிழகத்திலிருந்து ஒரு தொழிற்சாலைகூட அங்கு செல்லவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.





மத்தியப் பிரதேச முதல்வர் வந்ததாகச் சொன்னீர்கள். அவரும் வந்தார். அவர் தொழிலதிபர்கள் கூட்டத்தில் பேசும்போது, என்ன சொல்லியிருக்கிறார் என்றால், மத்தியப் பிரதேசத்திற்கு தொழில் தொடங்க வாருங்கள் என்று அழைத்து, அதற்குப் பின்னால் சொல்லியிருக்கிறார் “தமிழக மக்கள் கடின உழைப்புக்குப் பெயர் பெற்றவர்கள். அதனால்தான், தேசிய அளவில் தமிழகம் முக்கியத்துவம் பெறுவதற்குக் காரணமாக இருக்கிறது” என்றார். அப்படியென்றால் அவரே ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்துவிட்டார். தமிழகம்தான் தொழில் தொடங்குவதற்குச் சிறந்த மாநிலம், மாண்புமிகு அம்மா அவர்கள் அரசு ஆண்டுக்கொண்டிருக்கின்ற மாநிலம்தான் சிறந்த மாநிலம் என்பதை மத்தியப் பிரதேச முதல்வரே சொல்லியிருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) இதைவிட வேறு என்ன சான்று வேண்டும்? தொழில் தொடங்க வாருங்கள் என்று சொல்கின்றவர், தமிழகத்தில் கடுமையான உழைப்பாளிகள் இருக்கின்றனர், அதனால்தான் தேசிய அளவிலே தமிழகம் முக்கியத்துவம் வாய்ந்திருக்கிறது என்று சொன்னார் என்றால், தமிழகம் எந்தளவில் தொழிலிலே முன்னணி மாநிலமாக இருக்கிறது என்பதைத் தயவுசெய்து நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். எல்லோரும் பத்திரிகையைக் காண்பித்துதான் பேசிகொண்டிருக்கிறீர்கள். கடந்த 15 நாட்களுக்கு முன்பாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசுக்கு டில்லியில் இந்தியா டுடே பத்திரிகையின் வாயிலாக 8 விருதுகள் வழங்கினார்கள். மொத்த விருதுகள் 24, அதில் மாண்புமிகு அம்மா அவர்கள் பெற்ற விருது 8, மூன்றிலே ஒரு பங்கு விருதுகளைப் பெற்றிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதில் ஒரு

[திரு. பி. தங்கமணி] [2014 டிசம்பர் 5

முக்கியமான விருது என்று சொன்னால், வளர்ந்து வருகின்ற நகரத்தில் தொழில் தொடங்குவதற்கு சிறந்த நகரம் கோயம்புத்தூர் என்று சொல்லியிருக்கிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்று சொன்னால், எதிர்க்கட்சியான நீங்கள் அதற்குப் பதில் சொல்லுங்களேன். எப்படி அவர்கள் தேர்ந்தெடுத்திருப்பார்கள். இந்தியா முழுவதிலும் 50 நகரங்களைத் தேர்ந்தெடுத்து அதில் வளர்ந்து வருகின்ற நகரத்திலே கோயம்புத்தூர் நகரம்தான் தொழில் தொடங்குவதற்குச் சிறந்த நகரம் என்று இந்திய அளவிலே விருது கொடுத்திருக்கிறார்கள் என்று சொன்னால், அது ஏன் உங்களுக்கெல்லாம் தெரியவில்லை.

பிற்பகல் 1–45

ஏதோ செய்தித் தாள்களில் வருவதைப் பார்த்துவிட்டு மத்தியப் பிரதேச முதல்வர் வந்துவிட்டார், கர்நாடக முதல்வர் வந்துவிட்டார் என்றுதானே சொல்லிக்கொண்டிருக்கின்றீர்கள்? நான் திரும்பத் திரும்ப கேட்கின்றேன், ஒரு தொழிற்சாலையாவது சென்றதா? அதேபோல, குஜராத்திலிருந்து நிதி அமைச்சர் வருகின்ற ஜனவரி 13 ஆம் தேதி அன்று உலக முதலீட்டாளர்கள் மாநாடு நடைபெறுகிறது, இங்கே வாருங்கள் என்று அழைத்தார்கள் என்று சொன்னார்கள். அதை முழுமையாக நீங்கள் படித்தீர்கள் என்றால் அது நன்றாகத் தெரியும். அந்த நிதி அமைச்சர் என்ன சொல்லியிருக்கின்றார் என்று சொன்னால், நான் ஒவ்வொரு மாநிலமாகச் சென்றுகொண்டிருக்கின்றேன், குஜராத்திலே வருகின்ற 13 ஆம் தேதி உலக முதலீட்டாளர்கள் மாநாடு நடைபெற இருக்கின்றது, அதிலே நீங்கள் வந்து கலந்துகொண்டு இந்தியாவிலே எந்த மாநிலத்தில் வேண்டுமானாலும் சென்று தொழில் தொடங்குவதற்கு அந்தத் தொழிலதிபரை அழைத்துச் செல்லுங்கள் என்று சொன்னாரே தவிர தமிழகத்திலிருந்து வந்து தொழில் தொடங்குங்கள் என்று அவர் எங்கேயும் சொல்லவில்லை என்பதை இங்கே இருக்கின்ற மாமன்ற உறுப்பினர்கள் புரிந்துகொள்ள வேண்டும். அந்த அளவிற்குத் தமிழகம் சிறந்து விளங்குகின்ற காரணத்தினால்தான் மற்ற மாநிலங்களுக்கெல்லாம் யாரும் செல்லவில்லை. தமிழகத்திற்கு வருகின்றார்கள் என்று சொன்னால் இங்கே தொழில் தொடங்க வருபவர்களும் சரி, முதலீடு செய்பவர்களும் சரி, சரியாக செய்துகொண்டிருக்கின்றார்கள். வளர்ந்து வந்த மாநிலமாகத் தமிழகம் இருக்கின்றது. ஆகையால் இங்கேயிருந்து தொழில் அதிபர்களை அழைத்தால்தான் நமது



2014 டிசம்பர் 5] [திரு. பி. தங்கமணி]

மாநிலத்திற்கு யாராவது வருவார்கள் என்று வளர்ந்த மாநிலம் என்பதை அவர்களே ஒத்துக்கொண்டிருக்கின்றார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்த ஒரு கட்சியினர் தற்போது வெளியேற்றப்பட்டு விட்டனர். வெளி மாநிலங்களுக்குத் தொழிற்சாலைகள் சென்றுவிட்டது என்று அவர்கள் சொல்கின்றார்கள். 2010 ஆம் ஆண்டு சென்னையிலே மெட்ரோ ரயில் திட்டம். அன்று மைனாரிட்டி தி.மு.க. ஆட்சிதான் ஆட்சியில் இருந்தது. இந்த மெட்ரோ ரயிலுக்குத் தேவையான கோச் தொழிற்சாலையை ஆந்திராவிலே போட்டிருக்கின்றார்கள். ஆட்சி மைனாரிட்டி தி.மு.க.–வின் ஆட்சி. இன்றையதினம் அவர்கள் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கின்றார்கள். இவர்கள் தற்போது தொழிற்சாலைகள் வெளி மாநிலத்திற்குச் சென்றுவிட்டன, அதைப் பற்றி விவாதிக்க வேண்டும் என்று சொல்கின்றார்கள். ஆனால் அவர்களுடைய ஆட்சியிலே சென்னையிலே ஓடுகின்ற மெட்ரோ ரயிலுக்கு கோச் பேக்டரி ஆந்திராவிற்குச் செல்கின்றது என்று சொன்னால்–இவர்கள் எப்படி ஏமாற்றிக் கொண்டிருக்கின்றார்கள், எப்படி மக்களைத் திசை திருப்பிக்கொண்டிருக்கின்றார்கள் என்பதை நீங்கள் பார்க்க வேண்டும். அவர்கள் ஆட்சியில் வெளி மாநிலத்திற்குச் சென்றதை, ஏதோ அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் வெளியே சென்றதைப் போல ஒரு மாயத் தோற்றத்தை உருவாக்கிக்கொண்டிருக்கின்றார்கள். உள்ளபடியாக அவர்களுடைய காலத்தில்தான் இங்கிருந்து வேறு மாநிலத்திற்குச் சென்றது என்பதை, எப்படி காவேரியை கர்நாடகாவிற்குத் தாரை வார்த்துக்கொடுத்தார்களோ அதைப்போன்று இந்தத் தொழிற்சாலைகளையும் எப்படியாவது தாரைவார்த்துக் கொடுத்துவிட்டோம் என்று சொன்னால் அவர்களுடைய தொழில் அங்கே சிறப்பாக வளர வேண்டும் என்பதற்காக அவர்கள் போட்டி போட்டுக்கொண்டு இதைப்போன்று சொல்லிக்கொண்டிருக்கின்றார்கள். அதேபோல், கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் ஒவ்வொரு கூட்டத்திலும் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் சொல்கின்றார்கள். எங்கள் ஆட்சிக் காலத்தில் 66 ஆயிரம் கோடி ரூபாய்க்கு முதலீடு வந்தது என்று சொல்லிக்கொண்டிருக்கின்றார்கள். அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் வந்த முதலீடு என்று சொன்னார்கள். அவர்கள் இங்கே இருப்பார்கள் என்று நினைத்தேன். அவர்கள் இல்லாவிட்டாலும்

சொல்கிறேன். அவர்களது ஆட்சிக் காலத்தில் 42,868 கோடி ரூபாய்க்குப் புரிந்துணர்வு ஒப்பந்தம் போட்டார்கள். ஆனால் 15,593 கோடி ரூபாய்க்கான கையெழுத்து போட்டதோடு சரி, அதன் பின்னர் அவர்கள் வரவே இல்லை. அதிலேகூட 4,000 கோடி ரூபாய்க்கு இரண்டாவது ஹூண்டாய் கம்பெனி முதலீடு செய்வதாக ஒரு ஒப்பந்தம் போட்டிருக்கின்றார்கள். அது எப்படி என்று சொன்னால், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல 2005 ஆம் ஆண்டு மார்ச் மாதம் மாண்புமிகு அம்மா அவர்கள் விரிவாக்கத்திற்காக அவர்களோடு பேச்சுவார்த்தை நடத்தி அதற்கு உண்டான நிலத்தையெல்லாம் ஒதுக்கிக் கொண்டிருந்தார்கள். அதற்கு பின்னால் தேர்தல் வந்தது. தேர்தலுக்குப் பின்னால் அவர்களுடைய ஆட்சி வந்த காரணத்தினால் புரிந்துணர்வு ஒப்பந்தம் போடுகின்றார்கள். புரிந்துணர்வு ஒப்பந்தம் எப்போது போடுகின்றார்கள் என்று சொன்னால் 22–1–2008 ஆம் ஆண்டு 4,000 கோடி ரூபாய்க்கு ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் போடுகின்றார்கள். 2–2–2008–ல் பத்தே நாட்களில் அந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் போட்டதற்குப் பின்னால் அவ்வளவு பெரிய ஆலையைக் கட்டிவிட்டு 10 தினங்களில் போய் அவர்கள் திறக்கின்றார்கள். அரசாணை வெளியிடுகின்றபோது அதைத் தெரிந்து வெளியிட்டார்களா அல்லது தெரியாமல் வெளியிட்டார்களா என்பது தெரியவில்லை. இவர்கள் அந்த வரிச் சலுகையைப் பெறுவது 1–6–2006 முதல் என்று அந்த அரசாணையிலே வெளியிட்டிருக்கின்றார்கள். நன்றாக நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். 2008 ஆம் ஆண்டு புரிந்துணர்வு ஒப்பந்தம் போடுகின்றார்கள். ஆனால், அரசாணை வெளியிடுகின்றபோது 1–6–2006–லிருந்து அவர்கள் அந்த வரிச் சலுகையைப் பெறுவதற்குத் தகுதியானவர்கள் என்று ஒரு அரசாணையை வெளியிடுகின்றார்கள்.

பிற்பகல் 1–50

நீங்களே சொல்லுங்கள் அப்பொழுது, யாருடைய ஆட்சியிலே வந்தது என்று. அதுமட்டுமல்லாமல் அவர்களே அரசாணையில் சொல்கின்றார்கள். Phase II proposal was under consideration of the Government since March 2005. Refer page No 2, clause 'A' of Government Order என்று அவர்களுடைய அரசாணையிலே இருக்கின்றது. மார்ச் 2005 ஆம் ஆண்டு யாருடைய ஆட்சி? மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சி. 42 ஆயிரம் கோடி ரூபாயிலே அவர்கள்





இந்த ரூபாய் 4 ஆயிரம் கோடியையும் சேர்த்து சொல்கின்றார்கள். அம்மா அவர்கள் கொண்டு வந்த திட்டம். ஒவ்வொரு பெரிய பெரிய தொழிற்சாலையும் அம்மா அவர்கள் கொண்டு வந்த திட்டம். இந்த நேரம் அவர்கள் இருந்திருந்தால் அதற்குப் பதில் சொல்ல வேண்டியிருக்கும். ஆனால், 2008 ஆம் ஆண்டு பத்தே நாட்களில் அவர்கள் அந்த ஆலையைத் திறக்கின்ற அளவிற்குப் புரிந்துணர்வு ஒப்பந்தம் போட்டு, நாங்கள் கொண்டு வந்தோம் என்று சொல்கின்றார்கள்.

மரியாதைக்குரிய திரு. வி.சி. சந்திரகுமார் அவர்கள் இப்பொழுது எப்படி வளர்ச்சி விகிதம் குறைந்தது என்று கேட்டார்கள். அதற்கு நான் ஒன்றைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏதோ அவர்களுடைய ஆட்சியிலே பாலாறும், தேனாறும் ஓடியது என்று சொல்லிக் கொண்டார்கள். நீங்களும் அவர்களோடு சேர்ந்து போராடினீர்கள். ஒன்றே ஒன்றை மட்டும் சொல்கின்றேன். G.S.D.P. என்று சொல்லக்கூடிய அளவிலே வளர்ச்சி விகிதம் 2005–2006 ஆம் ஆண்டு மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் 13.96%. அதே அவர்களுடைய ஆட்சியில் 2007–2008, 2008–2009 ஆம் ஆண்டுகளிலெல்லாம் 6%, 5% என்று மாறிவிட்டது. விவசாயத்திலே எடுத்துக் கொண்டோம் என்று சொன்னால் 2008 ஆம் ஆண்டு மைனசிலே சென்றுவிட்டது. Industries–ஐ எடுத்துக் கொண்டோம் என்று சொன்னால் அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே மைனஸ் 1.78% ஆகிவிட்டது. Manufacturing–உற்பத்தித் துறையை எடுத்துக் கொண்டோம் என்று சொன்னால் 2008 ஆம் ஆண்டு மைனஸ் 1.31%. இது பொருளாதார மந்த நிலையின் காரணமாக வருகின்றது. ஏதோ இதனால் தொழிற்சாலைகளெல்லாம் போய்விட்டன, வளர்ச்சி விகிதம் குறைந்துவிட்ட காரணத்தினால் இங்கிருந்த தொழிற்சாலைகளையெல்லாம் பூட்டிவிட்டார்கள் என்று அர்த்தம் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புரிந்துகொள்வதற்காக நான் இதைச் சொல்கின்றேன். இதிலே ஒவ்வொரு முதலீட்டைப் பற்றியும் பின்னால் நான் சொல்ல இருக்கின்றேன்.

ஜப்பானை பற்றிச் சொன்னேன். அந்தத் தூதர் பேசுகின்றார். இந்தியாவில் ஜப்பானியத் தொழில் நிறுவனங்களால் முதலீடு செய்வதற்கு மிகச் சிறந்த மாநிலங்களில் ஒன்றாகத் தமிழ்நாடு திகழ்வதாக ஜப்பானிய துணைத் தூதர் திரு. மசோனினி நாகோனா அவர்கள் தெரிவித்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதுகுறித்த

[திரு. பி. தங்கமணி] [2014 டிசம்பர் 5

செய்தி 23–12–2013 ஆம் நாளிட்ட "இந்து" நாளிதழில் வந்திருக்கின்றது. அதிக அளவில் திறமையான, மனித ஆற்றல், availability of skilled labour மற்றும் அனைத்து வசதிகள் மட்டுமல்லாமல், அவர் சொல்லிய இன்னொரு வார்த்தையை தயவு செய்து அனைத்து உறுப்பினர்களும் நன்றாகப் புரிந்துகொள்ள வேண்டும். நட்புடன் முதலீட்டாளர்களை வரவேற்கும் இணக்கமான அரசு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு என்பதை அந்தத் தூதர் தெரிவித்திருக்கின்றார். (மேசையைத் தட்டும் ஒலி)

ஜப்பானிய நிறுவனங்கள் உள்கட்டமைப்புத் தொழில்களில் அதிக முதலீட்டை தமிழகத்திற்கு அளிக்க வேண்டுமென்று நினைத்துக் கொண்டிருக்கின்றன. அதனால்தான் அவர் சொல்கின்றார். தமிழகம்தான் ஜப்பானிய முதலீட்டிற்கே உகந்த மாநிலமாக விரும்பப்படுவதால் ஜப்பானிய பேரரசரும், அரசியும் தமிழ்நாட்டிற்கு வருகை புரிந்தார்கள் என்று கூறியிருக்கின்றார். இதை நாங்கள் சொல்லவில்லை, ஜப்பானியத் தூதர் சொல்லியிருக்கின்றார்.

இந்தியாவிலே மொத்தம் 2,542 ஜப்பானியக் கம்பெனிகள் இருக்கின்றன. அதிலே முதலிடத்தில் இருப்பது மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசான தமிழ்நாட்டில் 523 கம்பெனிகள். (மேசையைத் தட்டும் ஒலி) இங்கே குஜராத்தைப் பற்றி பேசினீர்கள். குஜராத்தில் இருப்பது வெறும் 84 கம்பெனிகள். மகாராஷ்டிராவிலே இருப்பது 397 கம்பெனிகள். ஹரியானாவில் இருப்பது 325 கம்பெனிகள். ஆந்திராவில் இருப்பது 229 கம்பெனிகள். டெல்லியிலே இருப்பது 175 கம்பெனிகள். 2,542 கம்பெனிகளில் 5–ல் ஒரு பங்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசான தமிழகத்திலே இருக்கிறது என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) இங்கே இருக்கின்ற மாமன்ற உறுப்பினர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

தமிழகம் தொழில் வளர்ச்சியில் பின்தங்கிவிட்டது என்று ஒவ்வொருவரும் சொல்லி வருகின்றீர்கள். சரியான விவரம் தெரியாதவர்கள்தான் இதைச் சொல்ல வேண்டும். ஏனென்று சொன்னால் மாநிலங்களின் ஆண்டு வளர்ச்சி விகிதம் என்பது விவசாயம், தொழில், சுரங்கங்கள், கட்டுமான வளர்ச்சி, சேவைகளின் வளர்ச்சி ஆகியவற்றை மொத்தக் குறியீடாக வைத்துதான் அதைக் குறிப்பார்கள். குறிப்பாக கடந்த முறை



2014 டிசம்பர் 5] [திரு. பி. தங்கமணி]

பேசுகின்றபோது பீகார் மாநிலத்திலும் வளர்ச்சி விகிதம் அதிகமாகியிருக்கிறது என்று சொன்னார்கள். நேரமாகிவிட்ட காரணத்தினால் ஒரே ஒரு உதாரணத்தைச் சொல்லிவிடுகின்றேன்.

வளர்ந்த மாநிலத்தில், ஒரு உதாரணத்திற்கு சொல்ல வேண்டுமென்று சொன்னால், திரு. வி.சி. சந்திரகுமார் அவர்கள் ஈரோடு பகுதியைச் சேர்ந்தவர். அங்கே விசைத்தறி அதிகம் நிறைந்த பகுதி. அந்த விசைத்தறி அதிகம் நிறைந்த பகுதியிலே ஒரு தறிக் கூடத்திலே 20 தறிகள் போட்டிருப்பார்கள். அடுத்த ஆண்டு 2 தறிகள்தான் அவர்களால் அதிகப்படுத்த முடியும். 10 தறிகள் போட்டிருக்கின்றவர் 20 தறிகள் போட்டார் என்று சொன்னால், அந்த 2 பேருடைய வளர்ச்சி விகிதங்களையும் பார்க்கின்றபோது, 10 தறிகள் போட்டவருடைய வளர்ச்சி விகிதம்தான் அதிகமாகியிருக்கும். 2 தறிகள் போட்டவருடைய வளர்ச்சி விகிதம் அதிகமாகக் காட்டாது என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். இதுதான் வளர்ச்சி விகிதம் என்பதை முதலிலே புரிந்துகொள்ளுங்கள்.

பிற்பகல் 1–55

2012–2013 ஆம் ஆண்டில் இந்த வளர்ச்சி விகிதம் குறைந்தது ஏன் என்பதை இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தெளிவாகச் சொல்லியிருந்தார்கள். அன்றையதினம் கடுமையான வறட்சி. கர்நாடகத்திலிருந்து நமக்கு வர வேண்டிய தண்ணீர் வரவில்லை. அதனால் விவசாயம் பாதிக்கப்பட்ட காரணத்தால், ஒட்டுமொத்தத்தில் நம்முடைய வளர்ச்சி விகிதம் குறைவாக இருந்தது. ஆனால் அதற்குப் பின்னால், 2013–2014 ஆம் ஆண்டில் இந்தியாவினுடைய வளர்ச்சி விகிதத்தை நீங்கள் நன்றாகப் பார்க்க வேண்டும், அது 4.74% ஆக இருந்தது. ஆனால், தமிழகத்தின் வளர்ச்சி விகிதம் 7.29% ஆக இருக்கிறது என்று சொன்னால் (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவிலேயே உயர்ந்து நிற்பது மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடக்கும் தமிழகம்தான் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

2012–2013 ஆம் ஆண்டு மாநிலத்தினுடைய மொத்த உற்பத்தி– மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. சந்திரகுமார் கேட்டதற்காகச் சொல்கிறேன். மறுபடியும், மறுபடியும், மீண்டும், மீண்டும் திரும்பக் கேட்கக்கூடாது என்பதற்காகச் சொல்கிறேன். 2013 ஆம் ஆண்டில்

இந்திய மாநிலங்களில் மகாராஷ்டிராவிற்கு அடுத்தபடியாக தமிழகம் திகழ்கிறது. மகாராஷ்டிராவில் மொத்த மாநில உற்பத்தி ரூ.8,43,565 கோடி ஆகும். தமிழகத்தின் மொத்த மாநில உற்பத்தி ரூ.4,51,313 கோடி ஆகும். தமிழகத்தைப்போல இரண்டு மடங்காக மகாராஷ்டிரா மொத்த மாநில உற்பத்தி உள்ளது என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். ஆக, தமிழகம் எந்த விதத்திலும் குறைவு இல்லை என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்து, 2013–2014 ஆம் ஆண்டில் அது ரூ.4,78,975 கோடியாக உயர்ந்துள்ளது என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும் ஒரு புள்ளிவிவரத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன். தொழில் வளர்ச்சி குறித்த மற்றும் ஒரு குறியீடு தொழிற்சாலைகள் உற்பத்தி வளர்ச்சி விகிதம் ஆகும். இந்தப் புள்ளிவிவரப்படி 2013–2014 ஆம் ஆண்டில் தொழில் உற்பத்தி, அதாவது manufacturing sector வளர்ச்சி விகிதம் 3.53% ஆக உள்ளது. ஆனால், இதே வளர்ச்சி இந்தியாவைப் பொறுத்தவரை (–) 0.71% ஆக இருக்கிறது என்பதை இந்த மாமன்றம் புரிந்துகொள்ள வேண்டும். இந்தியப் பொருளாதாரக் கண்காணிப்பு மையம், C.M.I.E. புள்ளிவிவரப்படி, கடந்த மைனாரிட்டி தி.மு.க. அரசால் 2011 ஆம் ஆண்டில், ஈர்க்கப்பட்ட மொத்த முதலீடு ரூ.7,38,652.78 கோடி. ஆனால் செப்டம்பர் 2014–ல் ஈர்க்கப்பட்ட மொத்த முதலீடு ரூ.9,97,034.98 கோடி. (மேசையைத் தட்டும் ஒலி) அதாவது 2011 முதல் 2014 வரை கூடுதலாக ரூ.2,58,382 கோடி முதலீடு ஈர்க்கப்பட்டுள்ளது என்பதை இதன் வாயிலாக நான் தெரிவித்துக்கொள்கிறேன். இதுமட்டுமல்லாமல் 2011 டிசம்பர் வரையுள்ள காலக் கட்டத்தில் தொழில் செய்வதற்குக் கருதப்பட்ட மொத்த முதலீடு 9.76%. ஆனால், இன்றையதினம் 17.23% என்று மத்தியப் புள்ளியல் துறை அறிவித்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவிலுள்ள 17,474 திட்டங்களில் தமிழகத்தில் மட்டும் 1,538 திட்டங்கள் சிறப்பாகச் செயலாற்றிக் கொண்டிருப்பதாக C.M.I.E. report சொல்கிறது. மைய அரசினுடைய வணிக மற்றும் தொழில் அமைச்சகத்தைச் சேர்ந்த தொழில் துறை உருவாக்கத் துறையின் D.I.P.P. புள்ளிவிவரப்படி 2011 வரை தமிழகத்தில் ஈர்க்கப்பட்டுள்ள மொத்த முதலீடு ரூ.3,33,010 கோடி. இதே மைய அரசின் புள்ளிவிவரப்படி 2014 ஆம் ஆண்டு ரூ.4,50,174 கோடி, அதாவது தொழில்முனைவோர் அறிவிக்கை, Industrial entrepreneurs memorandum மற்றும் Letter of Intent மூலம் அறிவிக்கப்பட்ட கூடுதல்





முதலீட்டுத் தொகை ரூ.1,17,164 கோடி ஆகும். இந்திய அரசின் வணிக மற்றும் தொழில் அமைச்சகத்தைச் சேர்ந்த கொள்கை உருவாக்கத் துறையால் வெளியிடப்பட்ட அந்நிய நேரடி முதலீடு குறித்த Foreign Direct Investment Statistics கடந்த மூன்று ஆண்டுகளில் தமிழகம் ஈர்த்த அந்நிய முதலீடு ரூ.44,402 கோடி ஆகும். இவ்வாறே மாநிலத்தில் தொழிற்சாலைகளின் எண்ணிக்கையைப் பொறுத்தவரை 2014 ஆம் ஆண்டில் 42,000 தொழிற்சாலைகள் இருந்தன. 2013 ஆம் ஆண்டில் 40,354 இருந்தன என்று சொன்னால் வருடத்திற்கு வருடம் தொழிற்சாலைகள் அதிகமாகிக் கொண்டிருக்கின்றன. இதை ஆதாரத்தோடு சொல்கிறேன். யார் கேட்டாலும் அதற்கு ஆதாரத்துடன் சொல்வதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம்.

அதுபோல, வேலைவாய்ப்பு. மரியாதைக்குரிய அண்ணன் மாண்புமிகு உறுப்பினர், திரு. அ. சவுந்தரராசன் அவர்கள் கேட்டதற்காகச் சொல்கிறேன். 2011 ஆம் ஆண்டு மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் 84 இலட்சத்து 21 ஆயிரம் பேர் வேலைவாய்ப்பில் இருந்தவர்கள். இந்த வருடம் இன்னும் கணக்கு வரவில்லை. 31–12–2013 வரை 1 கோடியே 60 இலட்சமாக உயர்ந்திருக்கிறது என்று சொன்னால், இங்கே வேலைவாய்ப்பு அதிகமாகி இருக்கின்றது, மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியிலேதானே? ஆக வருடத்திற்கு வருடம் தொழிலாளர்களுடைய எண்ணிக்கை அதிகமாகி இருக்கின்றபோது, வேலைவாய்ப்பு உருவாகிறது என்றுதானே அர்த்தம்? இது மத்திய அரசினுடைய புள்ளிவிவரம். ஏதோ நாங்கள் சொல்வதாக நீங்கள் நினைத்துக்கொள்ளக் கூடாது.

பிற்பகல் 2–00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில், 2010–2011 ஆம் ஆண்டு நாட்டினுடைய ஏற்றுமதி 11.5 சதவிகிதம் ஆகும். ஆனால், இன்றையதினம் 2013–2014 ஆம் ஆண்டு நாட்டின் ஏற்றுமதி 35.9 மில்லியன் டாலராக உயர்ந்திருக்கிறது என்று சொன்னால், (மேசையைத் தட்டும் ஒலி) இது மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசுக்குக் கிடைத்த சாதனை, அம்மா அவர்களுடைய உழைப்புக்குக் கிடைத்த வெற்றி என்பதை இந்த

[திரு. பி. தங்கமணி] [2014 டிசம்பர் 5

நேரத்தில் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். மரியாதைக்குரிய திரு. ர.ம. பாபு முருகவேல் அவர்கள் பேசுகின்றபோது இந்த மூன்றாண்டுகளில் எந்தத் தொழிற்சாலையும் இல்லை, எந்தவொரு புரிந்துணர்வு ஒப்பந்தமும் போடவில்லை என்று சொன்னார்கள். அவர் செய்தித்தாள்களைப் பார்க்கின்றாரா, பார்க்கவில்லையா, இல்லை அரசியலுக்காகப் பேசுகின்றாரா என்பது எங்களுக்குத் தெரியவில்லை. 33 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மாண்புமிகு அம்மா அவர்களால் போடப்பட்டு, 31,706 கோடி ரூபாய் அளவிற்கு முதலீடு செய்வதற்குக் கையெழுத்தாகி, (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைய அளவிலே கிட்டத்தட்ட 14,305 கோடி ரூபாய் முதலீடு செய்யப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் ஐந்தாண்டு காலத்தில் 13,000 கோடி ரூபாய். ஆனால், மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற இந்த மூன்றாண்டு காலத்தில் 14,305 கோடி ரூபாய் முதலீடு செய்திருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) கிட்டத்தட்ட 14,000 பேருக்கு நேரடியாக வேலைவாய்ப்பு கிடைத்திருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அது போக, புரிந்துணர்வு ஒப்பந்தம் இல்லாமல் Guidance Bureau வாயிலாக நேரடியாக அனுமதியைப் பெற்று, அதன் வாயிலாக 28,000 கோடி ரூபாய் அளவிற்கு ஒப்பந்தம் போடப்பட்டிருக்கின்றது. ஆக, எந்தவிதத்திலும் தமிழகம் மற்ற மாநிலங்களைக் காட்டிலும் பின்தங்கவில்லை என்பதை இந்த மாமன்றத்தில் அனைத்து உறுப்பினர்களுக்கும் நான் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்லாமல், இங்கே திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் தொழிற்சாலையைப் பற்றி பேசிக் கொண்டிருக்கின்றார்கள். அவர்கள் எத்தனை முறை ஆட்சியிலே இருந்தார்கள். இங்கே இருக்கின்ற மரியாதைக்குரிய அண்ணன் திரு. அ. சவுந்தரராசன் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். நோக்கியா கம்பெனியைப்பற்றி என்னிடம் கேட்கின்றபோது, அவர்கள் இரண்டு பேருக்குள்ளதான் போட்டியே நடந்து கொண்டிருந்தது. ஆனால், தென் தமிழகத்தைப் பொறுத்தவரை, அவர்கள் நினைத்ததுண்டா? அந்தத் துறையை அவர்தானே வைத்திருந்தார். மாண்புமிகு அம்மா அவர்கள் தென் தமிழகத்திலே இருப்பவர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்க வேண்டுமென்பதற்காக 9 மாவட்டங்களைத் தேர்ந்தெடுத்து, சிறப்புச்



2014 டிசம்பர் 5] [திரு. பி. தங்கமணி]

சலுகைகளை அறிவித்து, அங்கே தொழில் தொடங்குவதற்கு இன்னும் அதிக சலுகைகளை நாங்கள் அளிக்கின்றோம் என்று சொல்லி—அந்த விவரங்களைச் சொல்வதற்குக் கால தாமதமாகிவிடும் என்கின்ற காரணத்தினால், சுருக்கமாகச் சொல்லிவிடுகின்றேன். அத்தனை சலுகைகளை அறிவித்திருக்கின்றார்கள். ஆக, தொலைநோக்குப் பார்வையோடு மாண்புமிகு அம்மா அவர்கள் அனைத்து மாவட்டங்களும் சிறந்து விளங்க வேண்டும்; அனைத்து மாவட்டங்களிலும் தொழிற்சாலைகள் வர வேண்டுமென்பதற்காக, அந்த 9 மாவட்டங்களைத் தேர்ந்தெடுத்து, அங்கு தொழிற்சாலைகளைத் தொடங்குவதற்கு அதிக சலுகைகளை வழங்கியிருக்கின்றார்கள். சாயப் பட்டறை ஆரம்பிப்பதிலே பல்வேறு பிரச்சினைகள் ஏற்படுகின்றன என்று மரியாதைக்குரிய அண்ணன் அவர்கள் சொன்னார்கள். தருமபுரியிலே சிப்காட்டைப் பார்த்தார்கள், கிடப்பிலே போட்டுவிட்டார்கள் என்று மரியாதைக்குரிய திரு. ப. டில்லி பாபு அவர்கள்கூட நேற்றையதினம் சொன்னார்கள். ஏற்கெனவே தருமபுரியிலே ஒரு இடம் பார்த்தோம். அவர்தான் போராடி அந்த இடம் வேண்டாமென்று சொல்லிவிட்டார். இப்போது வேறு இடம் பார்த்துக் கொண்டிருக்கின்றோம். அவருக்கே நன்றாகத் தெரியும். எந்த இடத்தைப் பார்த்தாலும் உடனடியாக ஒரு போராட்டத்தை அறிவித்துவிடுகின்றார்கள். நாங்கள் என்ன செய்ய முடியும்? இடத்தை எடுத்து அந்தத் தொழிற்சாலைகளுக்குக் கொடுக்க வேண்டும். 2005 ஆம் ஆண்டு கடலூரில் சாயப் பட்டறை ஆரம்பிக்க இடம் ஒதுக்கப்பட்டது. ஆனால், இப்போது அந்த இடத்தில் தொழிற்சாலை தொடங்கக்கூடாது என்று ஒரு போராட்டத்தைச் செய்து கொண்டிருக்கின்றார்கள். எங்கே சென்றாலும் போராட்டம் என்று சொன்னால், எப்படி தொழிற்சாலை துவங்க முடியும்? தொழிற்சாலை துவங்குவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசிலே கஷ்டம் இல்லை. உங்களைப் போன்றவர்களெல்லாம் ஒத்துழைத்தால் மட்டும்தான் தொழிற்சாலைகள் அங்கே வருவதற்கு ஒரு வாய்ப்பு உருவாகும். அதை நீங்கள் உருவாக்கித் தர வேண்டுமென்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்கிறேன்.

பொதுத் துறை நிறுவனங்களிலே எந்த முதலீடும் இல்லையென்று சொன்னார்கள். தமிழ்நாடு செய்தித் தாள் நிறுவனம். நேற்றையதினம் அவர்கள் பேசுகின்றபோது 110 விதியைப்பற்றி கேட்டார்கள். ஸ்ரீரங்கத்தில் 1,500 கோடி ரூபாய்

நிதியை ஒதுக்கி, வருகின்ற 2015 ஆம் ஆண்டு டிசம்பர் அன்று இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களுடைய கரங்களால் அந்த ஆலை திறக்கப்படவிருக்கின்றது என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) சொல்லியதைச் செய்கின்ற ஆட்சி மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சி. இதுவரை இருந்தவர்கள் யாரும் அந்தப் பொதுத் துறை நிறுவனம் வாயிலாக ஒரு தொழிற்சாலையை ஏன் ஆரம்பிப்பதற்கு முன்வரவில்லை. மாண்புமிகு அம்மா அவர்கள் நினைத்தார்கள். உடனடியாக அந்த ஆலைக்கு அடிக்கல் நாட்டினார்கள். 2015 ஆம் ஆண்டு திறக்கப்படுவதற்காக வேகமாக வேலை நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. டிசம்பர் மாதம் அந்த ஆலை திறக்கப்பட இருக்கின்றது.

பிற்பகல் 2–05

மரியாதைக்குரிய டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள் வெளியே சென்றுவிட்டார்கள். அவர் 110 விதி எது, நிதிநிலை அறிக்கை எது என்றுகூடத் தெரியாமல் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுக்கின்றார். நேற்றையதினம் சிமெண்ட்டை பற்றி பேசினார். அது 110 விதியிலே இல்லை. அது நிதிநிலை அறிக்கையிலே இருக்கின்றது. அதுகூட அவருக்குத் தெரியாமல், கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துவிடுகின்றார். சரியாகப் படித்துவிட்டு, கேள்வி கேட்கின்றபோது சரியாகக் கேட்டால் எங்களுக்கும் பதில் சொல்வதற்குச் சரியாக இருக்கும். இருந்தாலும், திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் ஆலையைப்பற்றிச் சொல்கின்றார்கள். மத்திய அரசிலே அவர்கள் அங்கம் வகித்தபோது, அந்த சிமெண்ட் ஆலைக்கு நிலக்கரி ஒதுக்கீடு 1 இலட்சத்து 30 ஆயிரம் டன்னாக இருந்தது. அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் அதை 65,000 டன்னாக குறைத்துவிட்டார்கள். எப்படி தொழிற்சாலை இயங்கும்? இவர்களுக்கு தொழிற்சாலையைப் பற்றிப் பேசுவதற்கு என்ன அருகதை இருக்கிறது? தகுதி இருக்கிறது? எங்கே போய் அரசாங்கம் வாங்க முடியும்? தனியாராக இருந்தால் வேறெங்காவது வாங்கிக்கொள்ளலாம். நாம் சிங்கனேரி என்ற அந்த நிலக்கரிச் சுரங்கத்திலிருந்துதான் வாங்கவேண்டும். ஆனால், ஒதுக்கீட்டைக் குறைத்துவிட்டார்கள். ஒதுக்கீட்டைக் குறைக்கின்றபோது சிமெண்ட் உற்பத்தியும் குறைந்துவிடுகின்றது. குறைத்தது அவர்கள். குற்றம் சொல்வது எங்களை. தயவுசெய்து இதைப் புரிந்துகொள்ள





வேண்டுமென்று கேட்டு, அதேபோல, பத்திரிகை நண்பர்களுக்கும் நான் ஒரு வேண்டுகோளாக வைப்பது, ஒரு சிறிய யூனிட் 100 கோடி ரூபாய்க்கு வெளிமாநிலத்திற்குச் செல்கிறது என்று சொன்னால், பெரிய செய்தியாகப் போடுகின்றீர்கள். நான்கு நாட்களுக்கு முன்பாக எம்.ஆர்.எஸ். நிறுவனம் 4,500 கோடி ரூபாய் தமிழகத்திலே முதலீடு செய்யப்போகிறார்கள் என்ற செய்தி அன்றைய செய்தித்தாளிலே வந்திருந்தது. அது ஒரு பக்கம், முழுமையாகப் படித்தால்தான் தமிழகத்தில் தொடங்குகின்றார்கள் என்ற செய்தியே தெரியும். எனவே, தமிழகத்தில் இத்தனை தொழிற்சாலைகளை மாண்புமிகு அம்மா அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். இத்தனை பேருக்கு வேலைவாய்ப்பை உருவாக்கியிருக்கின்றார்கள். இத்தனை திட்டங்களைக் கொண்டு வந்திருக்கின்றார்கள். ஆதலால் இங்கேயிருக்கின்ற தொழிற்சாலைகள் எங்கேயும் செல்லவில்லை. நீங்கள் தமிழகத்தைச் சேர்ந்தவர்கள். தமிழகத்தில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய தலைமையிலிருக்கின்ற அரசு முழுமையாகத் தொழிலாளர்களுக்கும், முதலாளிகளுக்கும் ஆதரவாக இருக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்காக நீங்கள் தயவுசெய்து ஆதரவு தர வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கின்றேன்.

குஜராத்தைப் பற்றி, அந்த Ford Company பற்றிச் சொன்னீர்கள். கடிதம் கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் expansion-க்கு குஜராத் போனதற்கு ஒரு காரணத்தையும் கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் குஜராத் போனதற்கு நாங்கள் காரணமில்லை. மாண்புமிகு அம்மா அவர்கள் மூன்றாவது முறையாகப் பதவியேற்றது 16–5–2011 ஆம் தேதி. அவர்கள் 23–6–2011 அன்று அம்மாவைச் சந்தித்து ஒரு கடிதத்தைக் கொடுக்கிறார்கள். நாங்கள் ஏற்கெனவே குஜராத் செல்வதற்கு காரணம் வாகன வாடகை அதிகமாகச் செலவாகிவிடுகிறது. இங்கே அந்தக் குறிப்பிட்ட சலுகை கிடைத்ததற்குப் பின்னால் புதிய தொழிற்சாலை தொடங்குவதாக இருந்தால், அதிக சலுகையில் கிடைக்கின்றது. தமிழகத்தைப் போல, உங்கள் தலைமையிலிருக்கின்ற ஆட்சியைப் போல ஒரு சிறந்த மாநிலம் இல்லை, (மேசையைத் தட்டும் ஒலி) நாங்கள் எந்தக் காரணத்தைக் கொண்டும் தமிழகத்தைவிட்டுப் போக மாட்டோம். எங்களுடைய வியாபார நோக்கத்திற்காகச் சென்றோம். அதுவும், கடந்த திராவிட முன்னேற்றக் கழக காலத்திலேயே போவதாக முடிவு செய்துவிட்டு, 23–6–2011 அன்று அம்மா அவர்களை நேரடியாகச் சந்தித்து நன்றியைத் தெரிவித்து கடிதம் கொடுத்து

[திரு. பி. தங்கமணி] [2014 டிசம்பர் 5

விட்டுச் சென்றிருக்கிறார்கள். அதேபோல் Daimler அவர்களும் நன்றியைச் சொல்லி ஒரு கடிதம் கொடுத்துவிட்டுச் சென்றிருக்கிறார்கள். எங்களுக்கு இதுபோன்று ஒரு சிறப்பான ஆட்சி, இதுபோன்ற ஒரு தலைமை, சட்டத்தினுடைய ஆட்சி என்றெல்லாம் அவர்கள் எழுதியிருக்கின்றார்கள். தமிழகத்தைத் தவிர, இப்படி வேறெங்கும் இல்லையென்று சொல்லியிருக்கிறார்கள் என்று சொன்னால், இதைவிட வேறென்ன உதாரணம் வேண்டும். தயவுசெய்து, நீங்கள் புரிந்துகொள்ள வேண்டுமென்று சொல்லி, மாண்புமிகு அம்மா அவர்களுடைய தொலைநோக்குப் பார்வையான 2023–ஐ நிச்சயமாக வரவிருக்கின்ற தொழில் முதலீட்டாளர்கள் மாநாட்டில் நிறைவேற்றிக் காட்டுவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல மற்ற மாநிலங்களைக் காட்டிலும் தொழில் முதலீட்டாளர்கள் மாநாடு தமிழகத்தில்தான் சிறப்பாக நடந்தது. அதிக முதலீடுகளைக் கொண்டு வந்தது (மேசையைத் தட்டும் ஒலி) என்ற பெருமையை மாண்புமிகு அம்மா அவர்கள் உருவாக்கிக் காட்டுவார்கள் என்பதைச் சொல்லி அதற்கேற்றாற்போல் தொழில் கொள்கை 2014 மாண்புமிகு அம்மா அவர்கள் கொடுத்திருக்கிறார்கள்.

அதேபோல Automobile Policy இதுவரை எங்குமில்லை, அதையும் கொடுத்திருக்கிறார்கள். Bio–Tech Policy கொடுத்திருக்கிறார்கள். ஆக, இங்கிருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்களுடைய கவனத்திற்கு நாங்கள் சொல்வதெல்லாம், வெளியே மக்கள் மத்தியிலே பீதியைக் கிளப்பாதீர்கள். அரசியல் செய்வதற்காக நீங்கள் எதை வேண்டுமானாலும் பேசுங்கள். நான் இவ்வளவு சொல்லியிருக்கின்றேன். ஒரு தொழிற்சாலை இந்த மாநிலத்திற்குச் சென்றது என்று சொன்னால், நான் அதற்கு விளக்கம் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நீங்கள் அத்தனை பேரும் தமிழகத்தைச் சேர்ந்தவர்கள். இந்தப் பகுதியில் தொழிற்சாலையைத் தொடங்க வேண்டுமென்பதற்காக, இந்தப் பகுதியிலிருக்கின்ற நீங்கள் அனைவரும் ஆதரவாக இருக்க வேண்டும் என்று கேட்டு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய நல்லாட்சியிலேதான் தமிழகத்தில் சிறந்த தொழில் முதலீடுகள் வந்துகொண்டிருக்கின்றன (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை உங்களுக்கு விளக்கத்துடன் கொடுத்து, இந்த விளக்கம் கொடுப்பதற்கு அனுமதி வழங்கிய எங்கள் இதய தெய்வம், நாங்கள் தினந்தோறும் வணங்குகின்ற மக்கள் முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் நன்றியைச் சொல்லி விடைபெறுகின்றேன். நன்றி.



2014 டிசம்பர் 5]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் முதல்வர், எங்கள் குலதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன், நம்முடைய மூத்த உறுப்பினர் மாண்புமிகு அண்ணன் திரு. சவுந்தரராசன் அவர்கள் ஜவுளிப் பூங்கா நலிவடைந்துள்ளது என்ற ஒரு கருத்தை இங்கே சொன்னார்கள். அதற்கு நான் உரிய முறையிலே பதிலளிக்கக் கடமைப்பட்டுள்ளேன். புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக முதலமைச்சராக வந்தவுடனேதான் காஞ்சிபுரத்தில் பேரறிஞர் அண்ணா அவர்கள் நூற்றாண்டு விழா நடந்தது. அந்த ஆண்டை முன்னிட்டு தொழில் முதலீட்டாளர்கள் வந்தவுடனேயே 75 ஏக்கர் நிலத்தை ஒதுக்கீடு செய்து, அவர்கள் வங்கிக் கடன் வாங்குவதற்கும், உதவியாக இருந்து பட்டுத்தொழில் பூங்காவின் பணிகள் இன்றைக்கு நடந்து வருகின்றன.

பிற்பகல் 2–10

அதேபோல, பாகலூரில் S.S.S. ஜவுளிப் பூங்கா. புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலேதான், இப்போதுதான் நிலம் கையகப்படுத்தப்பட்டு, தமிழக அரசின் 9 சதவீதம் முதலீடும் அங்கே அவர்களுக்கு உதவியாக இருக்கின்றது.

அதேபோல, பல்லவாடாவில் தொழில்நுட்ப ஜவுளிப் பூங்கா அமைப்பதற்காக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு உதவியாக இருக்கின்றது. நேரம் வரும்பொழுது உங்களுக்கு விரிவாகச் சொல்கின்றேன்.

அதைப்போல, திருப்பூரிலே தனியார் ஜவுளித் தொழிலில் ஈடுபட்டவர்களுக்குக் கழிவுநீரை வெளியேற்றுவதில் பிரச்சினை வந்தபொழுது, தாயுள்ளத்தோடு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முன் நின்று 20 பொது சுத்திகரிப்பு நிலையங்களுக்கு மைய மற்றும் மாநில அரசுகள் ஒதுக்கீடு செய்த மானியத் தொகையிலே முதல் ஆளாக 200 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்து (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு அந்தக் கழிவுநீர் Zero Degree Discharge என்ற வகையில் அந்தத் தொழில் செய்வோருக்கு உதவிகரமாக இருந்தவர், இன்றும் இருக்கக்கூடியவர்

[திருமதி எஸ். கோகுல இந்திரா] 2014 டிசம்பர் 5

மக்கள் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பது உங்கள் அனைவருக்கும் நன்றாகத் தெரியும். காலத்தின் அருமை கருதி, நான் இன்றைக்கு விரிவாகச் சொல்ல விரும்பவில்லை.

அதைப்போல, அந்த 20 பொது சுத்திகரிப்பு நிலையங்களுக்குப் புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி பூஜ்ய நிலையை எட்டும் பணிக்கு, ரூ.200 கோடி தொகையினை வட்டியில்லாக் கடனாக வழங்கி, அரசு மானியமும் வழங்கி, அரசாணை நிலை எண் 142, கைத்தறி, கைத்திறன் துணிநூல் மற்றும் கதர் துறை, நாள் 12–11–2011–ன் மூலமாக ஆணையிட்டு, அந்த ஜவுளித் தொழில் நலிவடையாமல் தனியாருக்கும் உதவியாக இருந்தவர், இருக்கக்கூடியவர் மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், மாண்புமிகு அமைச்சர் பேசிக் கொண்டிருக்கிறார் அல்லவா?

**மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா:** அதைப்போல, கடலூரிலே பா.ம.க.–வைச் சேர்ந்த அன்பு சகோதரர் அ. கணேஷ்குமார், தம்பி, நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும். ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா SIPCOT–லே அதாவது, South India Mills Association-SIMA–அவர்கள் கொண்டுவரக்கூடிய அந்தத் தொழிற்சாலைக்கு முடிவடையக்கூடிய அந்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன. கழிவுநீர், சுத்திகரிக்கப்பட்ட தண்ணீர் Marine Discharge, அனைத்து இடங்களிலும் அவர்கள் N.O.C. பெற்று, பூங்கா அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. அதன் மூலமாக பல்வேறு நெசவாளர்களுக்கு வேலைவாய்ப்பும், வளர்ச்சியும் இருக்கக்கூடிய நேரத்திலே உங்களுடைய தலைவர் இரண்டு தினங்களுக்கு முன்பாக 'மக்களைத் திரட்டி போராட்டம் நடத்துவேன்' என்று சொல்கின்றார். இதுபோன்ற வளர்ச்சிப் பணிகளுக்கெல்லாம் தடையாக இருந்துவிட்டு, இன்றைக்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியிலே ஜவுளிப் பூங்காவும், பணிகளும், வளர்ச்சியும் குறைவாக இருக்கின்றதென்று அண்ணன் சொன்னதற்காக நான் இந்தப் பதிலைச் சொல்கின்றேன். எனக்குப் பேசுவதற்கு வாய்ப்புக் கொடுத்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றியை சொல்லிக்கொள்கின்றேன். (குறுக்கீடுகள்)



2014 டிசம்பர் 5]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Point of order ஒன்றும் இல்லை, உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை, சிறப்புக் கவன ஈர்ப்பில் Point of order ஒன்றும் இல்லை, உட்காருங்கள். (குறுக்கீடு) அனுமதியில்லை, உட்காருங்கள். அடுத்த அலுவலுக்குச் செல்ல வேண்டும். (குறுக்கீடு) இல்லை, உட்காருங்கள்.

## (இ) சென்னை, கனமழையால் சேதமடைந்த சாலைகளைச் சீரமைத்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சென்னையில் அண்மையில் பெய்த கனமழையால் சேதமடைந்த சாலைகளைச் சீரமைக்க வேண்டியது குறித்து தே.மு.தி.க.–வைச் சேர்ந்த திரு. வி.சி. சந்திரகுமார், திரு. சி.எச். சேகர் ஆகியோர் பேரவை விதி 55–ன்கீழும், இந்தியக் கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்) கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. அ. சவுந்தரராசன், திரு. க. பாலகிருஷ்ணன், திரு. கே. தங்கவேல், திரு. ஏ. லாசர், திரு. இரா. அண்ணாதுரை, திரு. க. பீம்ராவ், திரு. ஆர். ராமமூர்த்தி, திரு. வீ.பி. நாகைமாலி ஆகியோரும், இந்திய கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்த திரு. எம். ஆறுமுகம், திரு. சு. குணசேகரன், திரு. கே. உலகநாதன், திரு. வெ. பொன்னுப்பாண்டி, திரு. பி.எல். சுந்தரம், திரு. டி. இராமச்சந்திரன், திரு. கு. லிங்கமுத்து ஆகியோர் பேரவை விதி 56–ன்கீழும், பாட்டாளி மக்கள் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார், புதிய தமிழகம் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி மற்றும் மனித நேய மக்கள் கட்சியைச் சேர்ந்த முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா மற்றும் திரு. அ. அஸ்லம் பாஷா ஆகியோர் சட்டமன்றப் பேரவை விதி 55–ன்கீழும் அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். இதனை சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்கிறேன். இதுகுறித்து அறிவிப்புக் கொடுத்தவர்கள் கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் சுருக்கமாக மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வரலாம். முதலில் தே.மு.தி.க. கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.எச். சேகர் அவர்கள்.

[2014 டிசம்பர் 5

பிற்பகல் 2–15

**திரு. சி.எச். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமீபத்தில் பெய்த மழையால் சென்னை மற்றும் தமிழகத்தின் பல பகுதிகளில் உள்ள சாலைகள் மிகவும் மோசமாக, குண்டும் குழியுமாக மாறி, பொதுமக்களின் போக்குவரத்திற்கு மிகவும் அபாயகரமாக உள்ளது. **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிறபோது ஒப்பந்ததாரர்கள் குறித்துப் பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**திரு. சி.எச். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் அவையில் குற்றச்சாட்டு சொல்கிறபோது ஆதாரமில்லாமல் சொல்லக்கூடாது. (குறுக்கீடுகள்) இல்லை, ஆதாரம் இல்லாமல் குற்றச்சாட்டு சொல்லக்கூடாது. எனவே, அதெல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் அரசின் கவனத்தை மட்டும் ஈர்த்து அமருங்கள். அதிகாரிகள் குறித்து பேசியது எல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்) அதிகாரிகள் குறித்தெல்லாம் பேசக்கூடாது. என்னுடைய அனுமதியில்லாமல் நீங்கள் அதிகாரிகள் குறித்து பேசக்கூடாது. (குறுக்கீடுகள்) அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் அ. சவுந்தரராசன் அவர்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் உங்களுக்கு நான் வாய்ப்புக் கொடுத்தேன், நீங்கள் அதைத் தவறாகப் பயன்படுத்திக் கொண்டீர்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் அரசின் கவனத்தை மட்டும் ஈர்த்து அமருங்கள். (குறுக்கீடுகள்) அமைச்சரின் கவனத்தை மட்டும் ஈர்த்து பேசுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் பேசி முடியுங்கள்.

**திரு. சி.எச். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆகையால், **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரும்பத் திரும்ப அதையே பேசுகிறீர்கள்.

**திரு. சி.எச். சேகர்:** அமைச்சரின் கவனத்தை ஈர்த்து அமர்கின்றேன்.

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2014 டிசம்பர் 5]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையில் ஒரு மழைக்கே தாங்காத நிலையில் பல சாலைகள் இருப்பது வேதனைக்குரியதாக இருக்கிறது. மேலும், போடப்படுகின்ற சாலைகளிலே மழைத் தண்ணீர் வழிந்தோடுகின்ற விதத்திலே மட்டம் சரியாக அமைகின்ற விதத்திலே சாலைகள் போடப்படாததும், உரிய தரத்தில் சாலைகள் போடப்படாததும், மழை பெய்கின்றபோது தண்ணீர் சாலையில் தேங்கி நிற்பதும் சாலைகள் வேகமாக பழுதடைய காரணமாகின்றன. மேலும், அதில் வாகனங்கள் போகிறபோது மிகவும் மோசமாகப் பாதிக்கப்படுகின்றன. சாலைகளைத் தரத்தோடும், தண்ணீர் வழிந்தோடும் மட்டங்களிலும் போடுவதை மேற்பார்வை செய்வதிலும் மிகப்பெரிய குளறுபடிகள் இருக்கின்றன.

மின்சாரம், குடிநீர் மற்றும் வேறு பல கேபிள்கள் பதிக்கக்கூடியவர்களுக்கிடையே எந்தவித co–ordination–ம் கிடையாது. ஒரு முறை இவர்கள் கேபிள் பதிக்கிறார்கள்; தோண்டிய சாலையைச் சரியாக மூடாமல் போகிறார்கள். மூடிய பிறகு இன்னொருவர் சாலையைத் தோண்டி கேபிள் பதிக்கிறார். இவ்வாறு ஒருவர் மாறி, இன்னொருவர் சாலையைத் தோண்டுவதும், மூடுவதுமாக மாறி, மாறி நடந்து கொண்டிருக்கிறது. இதுகுறித்து பலமுறை எடுத்துச் சொன்ன பிறகும்கூட, ஒழுங்காகப் போடப்பட்ட சாலைகளைக்கூட, இப்படி கேபிள் பதிக்க தோண்டப்படும் குழியுடன், மழையும் சேர்ந்து பெய்யும்போது இந்தச் சாலைகள் மிகவும் மோசமாகின்றன.

அடுத்து, கான்கிரீட் சாலைகள் முறையாகப் போடப்படவில்லை என்ற நிலைமை இருக்கிறது. அந்த கான்கிரீட் சாலைகள் பழுதடைந்த பின்னர் அதைச் சீரமையுங்கள் என்று சொன்னாலும் இந்தச் சாலைகளை 10 ஆண்டுகள், 15 ஆண்டுகள் கழித்துத்தான் சீர் செய்ய முடியும் என்று மாநகராட்சியின் அதிகாரிகள் சொல்கிறார்கள். ஆகவே, கான்கிரீட் சாலைகளைத் தவிர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தார்ச் சாலைகள் போடுவதால் நிலத்தடி நீர் மட்டம் உயரும். அதேபோல, பழுது பார்ப்பதற்கும் ஏதுவாக இருக்கும். இந்தமாதிரி கான்கிரீட் சாலைகள் போடப்படும் இடங்களிலேயும் இப்படி மின்சார கேபிள் மற்றும் இதர பணிகளுக்காக சாலை தோண்டப்படுகிறது.

[2014 டிசம்பர் 5

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் அமைச்சரின் கவனத்தை ஈர்த்து அமருங்கள். நீங்கள் விவாதத்தில் பேசுவதைப்போல பேசுகிறீர்கள்.*

**திரு. அ. சவுந்தரராசன்:** *தார்ச் சாலைகள் பாதிக்கப்படுகிறபோது அந்தச் சாலைகளைச் சீர் செய்ய முடியும். ஆனால், கான்கிரீட் சாலைகளில் உள்ள பள்ளம் போன்றவற்றைச் சீர்படுத்த முடியவில்லை. இவையெல்லாம் சேர்ந்து மழைக் காலங்களிலே மிகக் கடுமையான பாதிப்பை சென்னை நகர மக்களுக்கு உண்டாக்கி வருகின்றன. ஆகவே, இந்தச் சாலைகளைச் சீர்படுத்த வேண்டி அமைச்சரின் கவனத்தை ஈர்த்து அமர்கின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.*

**திரு. எம். ஆறுமுகம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமீபத்தில் பெய்த தென்மேற்குப் பருவ மழை மற்றும் வடகிழக்குப் பருவ மழை, அதைத் தொடர்ந்து ஏற்பட்ட புயலினால் சென்னை மாநகராட்சி உட்பட, பல்வேறு நகராட்சிகள், பேரூராட்சிகளில் உள்ள சாலைகள் பழுதடைந்துள்ளன. இவற்றைப் பராமரிக்க அரசு நடவடிக்கை எடுத்து வந்தாலும்கூட, இன்னும் சில வேலைகளைத் துரிதமாகச் செய்ய வேண்டும்.*

*வால்பாறை சட்டமன்றத் தொகுதியில் உள்ள மலைப் பகுதிகளான வன்னிமேடு எஸ்டேட், சங்கிலி ரோடு, ஹைபாரஸ்ட் எஸ்டேட், அனலி எஸ்டேட் போன்ற பகுதிகள் தனியாருக்குச் சொந்தமான எஸ்டேட்டுகளாக இருந்தாலும்கூட, நம்முடைய அரசும், மரியாதைக்குரிய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும் தனியார் எஸ்டேட்டுக்குச் சொந்தமான இடமாக இருந்தாலும்கூட அதில் தலையிட்டு, அந்த இடங்களில் பஸ் போக்குவரத்து செல்வதற்கும், மக்கள் பயன்படுத்துவதற்குமான நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறார்கள். ஆனால், அங்கு சாலைகள் போடப்படாத காரணத்தினாலே போக்குவரத்து நெருக்கடிக்கும், சிக்கலுக்கும் உள்ளாகின்ற காரணத்தால் துரிதமான நடவடிக்கை எடுத்து அந்தச் சாலைகளை அமைத்து, மக்களின் பயன்பாட்டிற்குக் கொண்டுவர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்த்து அமர்கின்றேன்.*



2014 டிசம்பர் 5]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார் அவர்கள்.*

*பிற்பகல் 2–20*

**திரு. அ. கணேஷ்குமார்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் சமீபத்தில் பெய்த மழையின் காரணத்தினால், பல சாலைகள் சேதமடைந்துள்ளன. இதில் பல சாலைகள் புதிதாக சீரமைக்கப்பட்ட சாலைகளாகும். ஒரு சாலை போடப்படும்போது அதற்கான குறைந்தபட்ச உத்தரவாதத்தை* (Minimum guarantee) *அந்தச் சாலையை அமைக்கும் ஒப்பந்ததாரர்கள் உறுதி செய்ய வேண்டும் என்பது விதி. மேலும், ஒப்பந்ததாரர்களே, அந்தச் சாலைகளின் பராமரிப்புப் பணிகளை ஐந்து ஆண்டுகள் செய்ய வேண்டும் என்பதும் விதி. ** சாலைகள் போடும்போது, சரியான வடிகால்கள் அமைக்கப்படாத காரணத்தினால், சாலைகள் மிக விரைவில் சேதமடைந்துவிடும் சூழ்நிலையும் இருந்து கொண்டிருக்கின்றன. சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரையில், நல்ல சாலைகளில் திடீரென குழிகளும், பள்ளங்களும் ஏற்படுகின்ற காரணத்தால், அதிகளவில் விபத்துக்கள் ஏற்படுகின்ற சூழ்நிலைகளும் இருக்கின்றன. அதிலும் குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், சென்னை மாநகராட்சிப் பகுதிகளில், இரண்டு கட்டங்களாக, சிறிதளவு மழை பெய்ததற்கே, பெரும்பாலான சாலைகள் குண்டும், குழியுமாக காணப்படுகின்றன. ***

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார், ஏற்கெனவே இவையெல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டுள்ளன. திரும்பவும் அதுகுறித்தே பேசிக் கொண்டிருக்கிறீர்கள். (குறுக்கீடு) ஆதாரமில்லாமல் எதுவும் பேசக்கூடாது.*

**திரு. அ. கணேஷ்குமார்:** ****

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார், நீங்கள் ஆதாரமில்லாமல் எதுவும் பேசக் கூடாது. (குறுக்கீடு)*

---

***மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

**திரு. அ. கணேஷ்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் குற்றச்சாட்டு சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார் அவர்கள் ஆதாரமில்லாமல் பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார், நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார், நீங்கள் செஞ்சி தொகுதி குறித்து பேசாமல், நீங்கள் வேறு எங்கெங்கோ போகிறீர்களே, உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்களைப் பேச அழைத்துவிட்டேன், நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, நீங்கள் பேசுங்கள்.

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய தலைநகரமான சென்னை மாநகரம், புது டில்லி, மும்பை, கொல்கத்தா போன்ற நகரங்களுக்கு அடுத்ததாக இந்தியாவின் மிக முக்கியமான நகரங்களில் ஒன்றாக விளங்குகின்றது. ஆனால், சமீபத்தில் பெய்த மழையின் காரணமாக, சென்னையின் பல்வேறு பகுதிகளிலுள்ள சாலைகள் மிக மோசமான வகையில் பாதிக்கப்பட்டன. அதனால், சென்னைக்குப் பெருமை சேர்க்கக்கூடிய சாலைகள், சென்னைக்கு சிறுமை சேர்த்தன. அந்த அளவுக்கு சாலைகள் மிக மோசமான நிலையில் இருந்தன. எதிர்காலத்தில் இதனைத் தவிர்க்க வேண்டிய வகையில் உரிய முறையில் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி, அரசின் கவனத்தை ஈர்த்து அமைகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.





**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரத்தில், ஒரு மழைக்குக்கூட தாக்குபிடிக்க முடியாத அளவிற்குப் போடக்கூடிய சாலைகள் விளங்குவது பல ஆண்டு காலமாகத் தொடர்கதையாக இருக்கின்றது. சென்னை மாநகரம், தமிழகத்தின் தலைநகரம் மட்டுமல்ல; பல்வேறு நாடுகளிலிருந்து தொழில்கள், கல்வி ஆகியவற்றிற்காக மக்கள் வந்து கொண்டிருக்கிற ஒரு பகுதியாக சென்னை விளங்குகின்றது. இது, உலக அளவில் பிரசித்தி பெற்ற ஒரு நகரம். எனவே, இங்கே சாலை வசதிகள் வலுவுடையதாகவும், சிறப்பாகவும் இருந்தால்தான் சென்னை நகரத்தில் ஒட்டுமொத்தமான வளர்ச்சி ஏற்படும். இது சென்னைக்கு மட்டுமல்ல, தமிழகத்திற்கே ஒட்டுமொத்தமான வளர்ச்சியை சேர்க்கும். எனவே, எதிர்காலத்தில் சாலைகள் போடப்படும்போது, சாலைகளின் தரம் குறித்து 3 ஆண்டு காலம், 5 ஆண்டு காலம் என உத்தரவாதம் வாங்க வேண்டும். சாலைகளின் தரம் குறைந்துவிட்டால், ஒப்பந்ததாரர்கள்மீது உரிய அபராதம் விதிக்க வேண்டிய அளவுக்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். எனவே, தற்போது பழுதுபட்டுள்ள சாலைகளைச் சீரமைப்பது குறித்து புதிய தமிழகம் கட்சியின் சார்பாக அமைச்சரின் கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்து கோடி உலகத் தமிழினமும் கரம் கூப்பி வணங்குகின்ற புண்ணிய வேதமே! அன்னைத் தமிழ்நாடு தவமிருந்து பெற்றெடுத்த தலைமகளே! (மேசையைத் தட்டும் ஒலி) 12,524 கிராம ஊராட்சிகளுக்குத் தன்னிறைவு தரும் ‘தாய் திட்டம்’ தந்து, இந்தியப் பேரரசுக்கு வழிகாட்டும் அன்னையே! (மேசையைத் தட்டும் ஒலி) 12 மாநகராட்சிகளையும், 124 நகராட்சிகளையும், 528 பேரூராட்சிகளையும், ஆக மொத்தமாய் 664 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளைக் கொண்ட நாட்டின் தலையாய மாநிலமாம் தமிழகத்தை நகர்மயமாதலில் முதல் மாநிலம் என்னும் புரட்சிக்கு வித்திட்ட தாயே! (மேசையைத் தட்டும் ஒலி) தமிழினத்துப்

பெருமைகளை கண் இமையாய் காக்கின்ற எங்கள் குல சாமியே! தமிழக மக்களை என்றும் ஆட்சி செய்யும் மக்களின் முதல்வர், இதய தெய்வம், புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களின் திருவடிகளை வணங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா அவர்கள் வீற்றிருக்கும் திசை நோக்கி தலை வணங்கி, இந்தச் சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானத்தின்மீதான விளக்கத்தைக் கூறுகிறேன்.

பிற்பகல் 2–25

சமீபத்திலே இந்தியா–டுடே நிறுவனம், இந்தியாவிலுள்ள அனைத்து மாநிலங்களிலும் கட்டமைப்பு மேம்பாடு மற்றும் மக்களுக்கான திட்டங்களுக்காக, இந்தியாவிலுள்ள மாநிலங்களுக்கு 24 விருதுகளை வழங்கியது. தமிழகத்திலே மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள் தந்த திட்டங்களுக்காக, (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக மக்களுக்கு அம்மா அவர்கள் ஆற்றிய நற்பணிகளுக்காக சென்னை மாநகராட்சி உட்பட சென்னைக்கு 3 விருதுகளும், கோவை மாவட்டத்திற்கு 5 விருதுகளும் வழங்கியது. அதற்குக் காரணமாக இருந்த புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தந்த திட்டங்களுக்காக (மேசையைத் தட்டும் ஒலி) சென்னை மாநகராட்சி, சென்னை மக்கள், குறிப்பாக கோவை மாவட்ட மக்களின் சார்பாக நெஞ்சார்ந்த, மனமார்ந்த நன்றி மலர்களை அம்மா அவர்களின் பொற்பாதங்களில் காணிக்கையாக்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தே.மு.தி.க. உறுப்பினர், அதேபோல மூத்த உறுப்பினர் மாண்புமிகு திரு. அ. சவுந்தரராசன் மற்றும் மாண்புமிகு திரு. எம். ஆறுமுகம் உட்பட இங்கே பேசிய பல உறுப்பினர்கள் பல கருத்துகளைத் தெரிவித்தார்கள். கடந்த ஆட்சிக் காலங்களிலே, சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் மழை பெய்தால் நீர் வடிவதற்கு எவ்வளவு காலம் ஆகும் என்று உங்களுக்குத் தெரியும். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்றாம் முறையாக ஆட்சிப் பொறுப்பேற்ற பின்னால், உடனுக்குடன் நீர் வடிப்பு நவீன இயந்திரங்கள் மூலமாக இன்றைக்கு நீர் வடிக்கப்பட்டு வருகின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) முன்பெல்லாம் மழை பெய்தால் சாலைகளில் 10 நாட்கள், ஒரு மாதம் வரை தண்ணீர் தேங்கி நிற்கும். ஆனால், சமீபத்தில் பெய்த மழையின்போது, சென்னை மாநகராட்சியில் நான் உட்பட, மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் மற்றும் மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆகிய நாங்களெல்லாம் மழை பெய்துகொண்டிருக்கும்போதே, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலின் பேரிலே, புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு நேரடியாகச் சென்று போர்க்கால நடவடிக்கையாக, நிவாரண நடவடிக்கையை மேற்கொண்டது. அதையெல்லாம் நீங்களும் பார்த்திருப்பீர்கள். அது மட்டுமல்லாமல், பேசும்போது குற்றச்சாட்டாக பல கருத்துகளைச் சொன்னீர்கள். அதற்கு நான் விளக்கம் சொல்கிறேன்.





சென்னை மாநகரிலுள்ள 387.38 கிலோ மீட்டர் நீளம் உள்ள 471 பேருந்து தடச் சாலைகள் சென்னை மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகின்றன. மேலும் 75 பேருந்து தடச் சாலைகள் நெடுஞ்சாலைத் துறையின்மூலம் பராமரிக்கப்பட்டு வருகின்றன. வடகிழக்குப் பருவ மழையின் காரணமாக 155 சாலைகளில், 552 இடங்களிலே, 1,63,387 சதுர மீட்டர் பரப்பளவில் சேதம் ஏற்பட்டன.

மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழிகாட்டுதலின்படி மழையால் சேதமடைந்த சாலைகள் போர்க்கால அடிப்படையில் 16.37 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சீரமைக்கப்பட்டு வருகின்றன.

சேதமடைந்த சாலைகளில் குறிப்பாக இங்குதான் தே.மு.தி.க. உறுப்பினர் திரு. சி.எச். சேகர், இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் ஆகியோர் இதனைக் கவனிக்க வேண்டும்—சேதமடைந்த சாலைகளில் 2010–2011 ஆம் ஆண்டு மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியிலே புதுப்பிக்கப்பட்ட/ போடப்பட்ட சாலைகளின் எண்ணிக்கை 133 ஆகும். தற்போது சீரமைக்கப்பட்ட சாலைகள் போக 90 சதவிகிதத்திற்கும் மேல் தி.மு.க. ஆட்சிக் காலத்தில் போடப்பட்ட சாலைகள்தான் இன்றைக்கு முழுமையாகச் சேதமடைந்துள்ளன.

பிற்பகல் 2–30

அதுமட்டுமில்லாமல், ஒப்பந்ததாரர்களுடைய பராமரிப்புப் பணிக் காலம் தி.மு.க. ஆட்சியிலே ஓராண்டாகக் குறைக்கப்பட்டது. நீங்கள் எல்லாம் ஒப்பந்ததாரர்களைப் பற்றிச் சொன்னீர்கள். தி.மு.க. ஆட்சிக் காலத்திலே ஒப்பந்ததாரர்களின் பராமரிப்புப் பணிக் காலம் ஓராண்டு என்று கொண்டு வரப்பட்டது. கடந்த

மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் போடப்பட்ட சாலைகள்தான் தற்போது சேதமடைந்துள்ளன. சென்னை மாநகராட்சியால் சேதமடைந்த சாலைகளில் ஒட்டுப் பணி–patch work உடனடியாக அனைத்துப் பகுதிகளிலும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலின்படி, அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு சாலைகளை அமைக்கும் ஒப்பந்ததாரர்களின் பராமரிப்புக் காலம் ஓராண்டு என்றிருந்ததை 3 ஆண்டு காலம் என்று மாற்றி ஒரு சட்டத்தைக் கொண்டுவந்தார்கள். மேலும், சென்னை மாநகராட்சியிலே நடைபெறும் அனைத்துச் சாலைப் பணிகளும் தரக் கட்டுப்பாடு சோதனை செய்யப்பட்ட பின்னரே ஒப்பந்ததாரர்களுக்குப் பணப் பட்டுவாடா செய்யப்படுகிறது. இதன் காரணமாக, தற்போது அமைக்கப்படும் சாலைகளின் தரம் உறுதி செய்யப்படுவதால் சாலைகளின் சேதாரம் மிகக் குறைந்த அளவிலேயே உள்ளது. இச்சாலைகளில் 77 பகுதிகளில் ஏற்பட்ட சேதாரங்கள் ஒப்பந்ததாரர்களின் பராமரிப்புக் காலத்தில் உள்ளதால், அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் போடப்பட்ட சாலைகள் அவர்களுடைய பணத்திலேயே சீரமைக்கப்பட்டுள்ளன என்பதைப் பெருமையோடு நான் இந்த அவையிலே தெரிவித்துக்கொள்கிறேன்.

இதுதவிர, சென்னை மாநகரில் உள்ள 32,882 உட்புறச் சாலைகளில், பருவ மழையின் காரணமாக 747 சாலைகளில் 2,582 இடங்களில் சேதம் ஏற்பட்டன. இவற்றில் ஒப்பந்ததாரர்களின் பராமரிப்புக் காலத்தில் உள்ள 31 சாலைகள் அவர்களைக் கொண்டே சீரமைக்கும் பணி மாண்புமிகு அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலின்படி விரைந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மீதமுள்ள 716 சாலைகளும் சேதமடைந்துள்ளன. இவை மைனாரிட்டி தி.மு.க. ஆட்சிக் காலத்திலே போடப்பட்ட சாலைகள்தான். இன்றைக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலின்பேரில், சென்னை மாநகராட்சிமூலம் 3.54 கோடி ரூபாய் செலவில் இவை சீரமைக்கப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு உறுப்பினர்கள், சென்னை மாநகராட்சியில் உள்ள சாலைகளில் மழையினால் மிகப் பெரிய சேதம் ஏற்பட்டதாக நிறைய சொல்லியிருந்தீர்கள். சென்னை மாநகராட்சியில் உள்ள சாலைகளில் 2 சதவீத சாலைகள் மட்டுமே பருவ மழையால்





சேதமடைந்துள்ளன. புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலின் பேரில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு உடனடியாக அவற்றையும் சீரமைக்க நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி, சென்னைக் குடிநீர் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தின் பல்வேறு நிதி ஆதாரங்களின்மூலம் 119 ஜெட்ராடிங் இயந்திரங்கள், 190 தூர் வாரும் இயந்திரங்கள், 28 ஜெட்ராடிங் மற்றும் உறிஞ்சும் இயந்திரங்கள் மற்றும் 43 அதிவேக கழிவுநீர் உறிஞ்சும் இயந்திரங்கள் வாங்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளதால், கழிவுநீர் அமைப்புகளைச் சுத்தம் செய்யும் பணிகள் தொய்வின்றி தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றன. இதனால் கழிவுநீர் சாலைகளின் மேற்பரப்பில் தேங்கும் நிலை இப்பொழுது அறவே தவிர்க்கப்பட்டுள்ளது. இன்றைக்கு சாலைகள் கழிவுநீரால் சேதமடைவது முற்றிலுமாகத் தவிர்க்கப்பட்டு வருகிறது. மேலும், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இவ்வாண்டில் 1,194 கிலோ மீட்டர் நீளமுடைய மழைநீர் வடிகால்கள் 7.20 கோடி ரூபாய் செலவில் தூர் வாரப்பட்டுள்ளன.

பிற்பகல் 2–35

மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலின்படி, 100–க்கும் மேற்பட்ட பம்புசெட்டுகள் மற்றும் Super Sucker வாகனங்கள்மூலம் தேங்கியிருந்த மழைநீர் உடனுக்குடன் அகற்றப்பட்டது. கடந்த மைனாரிட்டி தி.மு.க.–வின் ஐந்தாண்டு கால ஆட்சிக் காலத்தில் சென்னை மாநகராட்சியிலே 8,354 உட்புறச் சாலைகள் 429 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டன. ஆனால், மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மூன்றரை ஆண்டு பொற்கால ஆட்சிக் காலத்தில் மட்டும் சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டத்தின்கீழ்–CMCDM 4,676 சாலைகள் 1,066 கோடி ரூபாயில் திட்டமிடப்பட்டு, (மேசையைத் தட்டும் ஒலி) 3,705 சாலைகள் 811.98 கோடி ரூபாய் செலவில் முடிக்கப்பட்டுள்ளன என்பதைப் பெருமையுடன் இந்த அவையிலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், மாண்புமிகு அம்மா அவர்களின் மூன்றரை ஆண்டுக் கால ஆட்சியிலே, மூலதன நிதியிலிருந்து 12,985 சாலைகள், 1,488 கோடி

[திரு. எஸ்.பி. வேலுமணி] [2014 டிசம்பர் 5

ரூபாயில் புதுப்பிக்கத் திட்டமிடப்பட்டு, 9,943 சாலைகள் 901.04 கோடி ரூபாயில் முடிக்கப்பட்டுள்ளன என்பதைப் பெருமையுடன் இந்த அவையில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மீதமுள்ள சாலைகள் 2 மாதங்களில் புதுப்பிக்கப்பட உள்ளன.

மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி, சென்னை மாநகரில் புதுப்பிக்கப்பட வேண்டிய பேருந்து தட சாலைகள் மற்றும் அனைத்துத் தார் சாலைகளும், போர்க்கால அடிப்படையில் புதுப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

சென்னை மாநகராட்சி நீங்கலாக உள்ள பகுதிகள்; நம்முடைய வால்பாறை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் மற்றும் திரு. அ. கணேஷ்குமார் அவர்கள் குறிப்பிட்ட அந்தப் பகுதிகள்; அவர் கொடுத்திருந்த கவன ஈர்ப்பு அறிவிப்பில் இரண்டு கிராமங்களைப் பற்றிக் குறிப்பிட்டிருந்தார். வால்பாறையைப் பொறுத்தவரையில், அவை தனியாருக்குச் சொந்தமான சாலைகள். அதற்காக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் நடவடிக்கை எடுக்கப்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவரால் அதற்கான கருத்துரு வழங்கப்பட்டிருக்கிறது. கூடிய விரைவிலே அதற்காக கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டு, அந்தச் சாலைகள் சரிசெய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னை நீங்கலாக உள்ள 11 மாநகராட்சிகள் மற்றும் 124 நகராட்சிகளில் பராமரிக்கப்படும் 23,350 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகளில் சமீபத்தில் பெய்த பருவ மழையினால், மாநகராட்சிகளில் 257.57 கிலோ மீட்டர் சாலைகளும், நகராட்சிகளில் 214.64 கிலோ மீட்டர் சாலைகளும் சேதமடைந்தன. அவற்றில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி, 20.162 கிலோ மீட்டர் சாலைகளின் சீரமைப்புப் பணிகளுக்கு, 4 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன. மீதமுள்ள சாலைகளில் மிகவும் மோசமாகப் பழுதடைந்த சாலைகள், அந்தந்த உள்ளாட்சிகளின் பொது நிதியிலிருந்து சீரமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



2014 டிசம்பர் 5] [திரு. எஸ்.பி. வேலுமணி]

கடந்த மைனாரிட்டி தி.மு.க.–வின் ஐந்தாண்டுக் கால ஆட்சியில், பேரூராட்சிப் பகுதிகளில் போடப்பட்ட சாலைகளில், பழுதடைந்த 40 சாலைகளைச் சீரமைக்க, மக்களின் முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்களால் 33.87 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆனால், மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மூன்றரை ஆண்டுக் கால ஆட்சியிலே, பேரூராட்சிப் பகுதிகளில் போடப்பட்ட சாலைகள் எதுவும் சேதமடையவில்லை. அனைத்துச் சாலைகளும் நல்ல தரமாக இருக்கின்றன.

வடகிழக்கு பருவ மழை காரணமாக, திண்டுக்கல், திருநெல்வேலி, கன்னியாகுமரி, ஈரோடு மாவட்டங்கள் உட்பட தமிழகத்தில் அனைத்துப் பகுதிகளிலும் உள்ள ஊரகச் சாலைகளில், 6,295 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகள் சேதமடைந்தன. மாண்புமிகு மக்களின் முதல்வர் அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி, சேதமடைந்த சாலைகளைத் தற்காலிக மேம்பாடு செய்திட 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, போர்க்கால அடிப்படையில் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், ஊரக, உள்ளாட்சி நிதி ஆதாரங்களிலிருந்தும் உடனடி சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ள தக்க அறிவுரை மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

அதுமட்டுமல்லாமல், இன்றைக்கு அனைத்துப் பகுதிகளிலும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலின்படி, துறை அதிகாரிகள் உடனுக்குடன் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள, போர்க்கால அடிப்படையில் சிறப்பான முறையிலே மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்ட அனைத்துப் பணிகளும் நடைபெற்று முடிந்தன; சில பணிகள் நடைபெற்று வருகின்றன. விடுபட்ட பணிகள் கண்டிப்பாக உடனடியாக முடிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

## 5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) தமிழ்நாடு உள்ளாட்சி நிதித் தணிக்கைச் சட்டமுன்வடிவு, 2014

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி நிதித் தணிக்கைச் சட்டமுன்வடிவு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*“2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி நிதித் தணிக்கைச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்”*

*எனக் கோருகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

*ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)*

*மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)*

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)*

*மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*

### (ஆ) அண்ணாமலைப் பல்கலைக்கழகத் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2014

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2014 ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக்கழகத் (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*





***மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*“2014 ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக்கழகத் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்”*

*எனக் கோருகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

*ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)*

*மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)*

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)*

*மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*

*பிற்பகல் 2–40*

## 6. அறிவிப்பு

### தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2014 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (திருத்தச்) சட்டமுன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.*

# 5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

—தொடர்ச்சி

## (இ) தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2014

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு மக்களின் முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.





## (ஈ) தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டமுன்வடிவு, 2014

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டமுன்வடிவு, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

[2014 டிசம்பர் 5

## 7. அரசினர் தனித் தீர்மானங்கள்

### (அ) இலங்கையில் தூக்கு தண்டனை விதிக்கப்பட்ட ஐந்து மீனவர்களை விடுவிக்க உதவிய மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுக்கும், தமிழக அரசுக்கும், பாரதப் பிரதமருக்கும் பாராட்டு தெரிவித்தல் மற்றும் சிறையிலுள்ள மீனவர்களை விடுவிக்கவும், கச்சத் தீவைத் திரும்பப் பெறவும் நடவடிக்கை எடுக்க மத்திய அரசைக் கோருதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் தனித் தீர்மானம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உழவருக்கும், புலவருக்கும், உழைக்கும் தொழிலாளருக்கும், மாணவருக்கும், மீனவருக்கும், மாண்புடைய மகளிருக்கும், ஏழையருக்கும், எளியவருக்கும், ஏதுமில்லா வறியவருக்கும் கனவிருக்கும் ஆசைகளை நனவாக்கி, வாழ்வின் இருள் அகற்றி ஒளியேற்றும் தெய்வத் திருவிளக்கு, தெய்வீகக் குலவிளக்கு, (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு மக்களின் முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களுக்கு எனது முதல் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் 1,076 கிலோ மீட்டர் நீளமுள்ள கடற்கரையினைக் கொண்டுள்ளது. இங்குள்ள 608 கடல் மீனவக் கிராமங்களில் சுமார் 9.24 இலட்சம் மீனவ மக்கள் உள்ளனர். 5,268 மீன்பிடி விசைப் படகுகளும், 31,172 பாரம்பரிய கலன்களும் மீன்பிடிப்பில் ஈடுபட்டுள்ளன. தமிழகத்தில் கடல் மீன் உற்பத்தி 4.32 இலட்சம் டன் ஆகும். தமிழ்நாட்டிலிருந்து 3,331.78 கோடி ரூபாய் மதிப்புள்ள கடல் பொருட்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

மீன்பிடித் தொழில் என்பது மிகவும் பழைமை வாய்ந்த தொழிலாகும். தங்கள் உயிரைப் பணயம் வைத்து கடலில் மீன் பிடிக்கும் மீனவர்கள் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்வதோடு, மதிப்பு மிகுந்த அந்நியச் செலாவணியை ஈட்டித் தருவதில் முக்கியப் பங்கு வகிக்கிறார்கள்.



2014 டிசம்பர் 5] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

தமிழக மீனவர்கள் நலனில் அளவில்லா அக்கறை செலுத்தி வருபவர் மக்களின் முதல்வர், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில், மீனவர் நலனுக்காக பல்வேறு முன்னோடித் திட்டங்களைச் சிறப்புடன் செயல்படுத்தி, மீனவக் குடும்பங்களைக் காத்து நிற்கும் கருணைக் கடல் மாதா எங்கள் அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 2–45

கடந்த 2011 ஆம் ஆண்டு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்ட அன்றே மீன்பிடித் தடைக்காலத்தில் மீனவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த 1,000 ரூபாய் உதவித் தொகையை 2,000 ரூபாய் என இரட்டிப்பாக்கி (மேசையைத் தட்டும் ஒலி) உத்தரவிட்டதன்மூலம் மீனவர்பால் தனக்குள்ள மாறா அன்பை வெளிப்படுத்தினார்கள். மீன்பிடி குறைந்த காலங்களில் மீனவக் குடும்பங்களுக்கு சிறப்பு நிவாரண உதவித் தொகையாக 4,000 ரூபாய் வழங்கும் ஒரு புதிய திட்டத்தை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் செயல்படுத்தினார்கள். கடல் மீனவர்களுக்கான நிவாரணத் திட்டத்தின்கீழ் 2,700 ரூபாய் உதவித் தொகை மீன்பிடி குறைவாக உள்ள காலங்களில் வழங்கப்படுகிறது. கடல் மீனவ மகளிருக்கு மீன்பிடி குறைவாக உள்ள காலங்களில் 2,700 ரூபாய் உதவித் தொகை வழங்கப்படுகிறது. இந்த நிவாரணத் திட்டங்களுக்காக ஆண்டொன்றுக்கு 166 கோடி ரூபாயை தமிழக அரசு வழங்கி வருகின்றது. மீனவர்களுக்காக குழுக் காப்பீட்டுத் திட்டத்தில் 50 விழுக்காடு சந்தா தொகையை தமிழ்நாடு அரசு செலுத்துகிறது.

பாரம்பரிய மீன்பிடிக் கலன்களை இயந்திரமயமாக்கும் வகையில் நாட்டுப் படகுகளில் இயந்திரங்கள் வாங்கிப் பொருத்துவதற்கு 50 விழுக்காடு மானியம் வழங்கப்படுகிறது. மீன்பிடி விசைப் படகுகள் மற்றும் இயந்திரமயமாக்கப்பட்ட நாட்டுப் படகுகளில் பயன்படுத்தப்படும் டீசலுக்கு விற்பனை வரி அறவே விலக்களிக்கப்பட்டுள்ளது. நாட்டுப் படகுகளுக்கு முற்றிலும் விற்பனை வரி விலக்களிக்கப்பட்ட மானிய விலையிலான மண்ணெண்ணெய் லிட்டர் ஒன்றுக்கு 25 ரூபாய் வீதம் மாதமொன்றுக்கு 250 லிட்டர் வழங்கப்படுகிறது.

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2014 டிசம்பர் 5

இந்தியாவிலேயே வேறு எங்கும் இல்லாத வகையில், தொலைதூர கடல் பகுதியில் மீன் பிடிக்க ஏதுவாக புதிய சூரை மீன் படகு கட்டுவதற்காக ஆகும் உத்தேச செலவான 60 இலட்சம் ரூபாயில் 50 விழுக்காடு அதாவது, அதிகபட்சமாக 30 இலட்சம் ரூபாய் மானியம் வழங்கும் ஒரு உன்னதமான திட்டத்தைக் கொண்டு வந்தவர் இதய தெய்வம் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

நாகப்பட்டினம் மாவட்டத்தில் மீன் வளப் பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றது.

மீனவக் குடும்பங்களைச் சார்ந்த இளைஞர்களின் திறன் மேம்பாட்டிற்காக கடல் சார் கல்வி பயிலும் மீனவ மாணாக்கர் ஒவ்வொருவருக்கும் 50,000 ரூபாய் உதவித் தொகை வழங்கப்படுகிறது.

தமிழ்நாட்டில் தற்போது 5,268 மீன்பிடி விசைப் படகுகளில், பெரும்பாலான விசைப் படகுகளில் தகவல் தொடர்பு சாதனங்கள் எதுவும் இல்லாததால், இந்த விசைப் படகுகளுக்கு மானிய விலையில் VHF ரேடியோ கருவிகள் வழங்கும் ஒரு திட்டத்தை புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்தார்கள். இதன்படி 20,000 ரூபாய் விலையுள்ள VHF கருவிகளுக்கு 75 விழுக்காடு மானியம் வழங்கப்படுகிறது. இதன் காரணமாக இடர் நேரும் காலங்களில் கரையில் இருக்கும் அரசு அலுவலர்களையும், குடும்பத்தினரையும் தொடர்புகொள்ள இயலும். மேலும், ஹைதராபாத்தில் உள்ள கடல் தகவல் பணிக்கான இந்திய தேசிய மையத்திலிருந்து பெறப்படும் தகவல்களை மீனவர்களுக்கு அனுப்ப இது பயன்படுகிறது. எனவே, மீனவர்கள் மீன்கள் நிறைந்த பகுதிகளுக்குள் சென்று மீன் பிடிக்க இத்திட்டம் உதவுகிறது.

பிற்பகல் 2–50

இதைப்போன்று தொலைதூரத்தில் ஆழ்கடல் பகுதியில் ஒரு மாதத்திற்கும் மேலாக தங்கி மீன்பிடித் தொழிலை மேற்கொள்ளும் படகுகளுக்குத் தேவைப்படும் 2,50,000 ரூபாய் மதிப்புள்ள HF ரேடியோ கருவிகளுக்கு 75 விழுக்காடு மானியம் வழங்கும் திட்டமும் செயல்படுத்தப்படுகிறது.

மீனவர்கள் பிடித்து வரும் மீன்களின் தரத்தினைப் பாதுகாத்து, அவற்றின் மதிப்பினைக் கூட்டி மீனவர் வாழ்க்கைத் தரத்தினை



2014 டிசம்பர் 5] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

உயர்த்திட தேவையான உட்கட்டமைப்பு வசதிகளான மீன்பிடித் துறைமுகங்கள், மீன்பிடி இறங்குதளங்கள், மீன் பதனிடும் பூங்காக்கள் அமைத்தல் மற்றும் ஆற்று முகத்துவாரங்களை ஆழப்படுத்துதல் போன்ற பணிகள் 508 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இதில் சிலவற்றை இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

கடலூர் மாவட்டத்தில் சாமியார்பேட்டை, எம்.ஜி.ஆர். திட்டு, நாகப்பட்டினம் மாவட்டத்தில் செருதூர், புதுக்கோட்டை மாவட்டத்தில் முத்துக்கூடா, இராமநாதபுரம் மாவட்டத்தில் தேவிப்பட்டினம், ரோச்மா நகர், தூத்துக்குடி மாவட்டத்தில் தருவைக்குளம், திரேஸ்புரம், கன்னியாகுமரி மாவட்டத்தில் இனயம்புத்தன்துறை, சைமன் காலனி, குரும்பணை ஆகிய 11 இடங்களில் சுகாதாரமான முறையில் மீன்களைக் கையாளுவதற்கு ஏற்றவாறு ஏலக் கூடம், வலை பின்னும் கூடம், மீன் உலர்தளம், உட்புற சாலை வசதி, தெரு விளக்கு வசதி, தண்ணீர் வசதி, கழிவுநீர் வடிகால் வசதி மற்றும் அலுவலகக் கட்டடம் ஆகிய வசதிகளுடன் கூடிய மீன் இறங்குதளங்கள் 63 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டு வருகின்றன. கடலூர் மாவட்டம், முடசலோடையில் உள்ள மீன் இறங்குதளம் 7 கோடியே 78 இலட்சம் ரூபாய் செலவில் விரிவாக்கப்பட்டு வருகிறது. கன்னியாகுமரி மாவட்டம், குளச்சலில் 87 கோடியே 75 இலட்சம் ரூபாய் செலவில் மீன்பிடித் துறைமுகம் அமைக்கப்பட்டு வருகிறது. காசிமேடு மீன்பிடித் துறைமுகம் 75 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் சிறைப் பிடிக்கப்படும்போதெல்லாம் அவர்களை மீட்க இடைவிடாத நடவடிக்கைகளை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மேற்கொண்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) 2011 ஆம் ஆண்டு மாண்புமிகு அம்மா அவர்களது தலைமையிலான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு பொறுப்பேற்றது முதல் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு 57 கடிதங்கள் எழுதப்பட்டுள்ளன.

ஈரான் நாட்டுச் சிறையில் வாடிக் கொண்டிருந்த 16 தமிழக மீனவர்களை மீட்க நடவடிக்கை எடுத்து தமிழகம் திரும்பிய அவர்களுக்குப் புதுவாழ்வு ஏற்படுத்த தலா 2 இலட்சம் ரூபாயை புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள் வழங்கினார்கள்.

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2014 டிசம்பர் 5

*(மேசையைத் தட்டும் ஒலி) ஒடிசா மாநிலத்தில் புயலில் சிக்கித் தவித்த 18 தமிழக மீனவர்களைப் பத்திரமாக மீட்டு அவர்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கினார்கள். சவுதி அரேபியாவிற்கு வேலைக்குச் சென்று சிறையில் அடைக்கப்பட்டுள்ள 22 மீனவர்களை மீட்டெடுக்க மத்திய அரசைத் தமிழக அரசு தொடர்ந்து வற்புறுத்தி வருகிறது.*

*இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரத்தைச் சேர்ந்த திருவாளர்கள் எமர்சன், அகஸ்டஸ், வில்சன், பிரசாத், லேங்க்லெட் ஆகிய ஐந்து மீனவர்கள் கடந்த 28–11–2011 அன்று மீன்பிடி விசைப் படகில் இராமேஸ்வரம் மீன்பிடி தளத்திலிருந்து புறப்பட்டு தங்களது பாரம்பரிய மீன்பிடிப் பகுதியில் மீன் பிடித்துக் கொண்டிருந்தபோது அங்கு வந்த இலங்கைக் கடற்படையினர் அவர்களைக் கைது செய்தனர். அவர்கள்மீது யாழ்ப்பாணம் மாகாணம், மல்லாகம் நீதிமன்றத்தில் போதைப் பொருள் கடத்துதல் குற்றத்திற்கான பிரிவின்கீழ் உள்நோக்கத்துடன் புனையப்பட்ட வழக்கு ஒன்றை இலங்கை அரசு தொடர்ந்தது. இந்த வழக்கு புனையப்பட்ட வழக்கு என்பதால், கைது செய்யப்பட்ட ஐந்து அப்பாவி மீனவர்களை உடனடியாக விடுவிக்கத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அப்போதைய பாரதப் பிரதமர் அவர்களுக்குக் கடிதம் எழுதியதோடு, இந்த ஐந்து மீனவர்களையும் விடுவிக்க மீனவர்கள் சார்பில் நீதிமன்றத்தில் வழக்காடுவதற்கு இலங்கையைச் சார்ந்த வழக்கறிஞர் ஒருவரை நியமித்திடவும், அவர்களை விடுவிப்பதற்குத் தேவையான அனைத்து முயற்சிகளை மேற்கொள்ளவும் இராமேஸ்வரத்திலுள்ள நிரபராதி மீனவர்களின் விடுதலைக்கான கூட்டமைப்பு மூலம் நடவடிக்கை எடுத்திட 2 இலட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கி 14–12–2011 அன்று ஆணையிட்டார்கள்.*

*பிற்பகல் 2–55*

*தமிழக அரசின் நிதியுதவியுடன் ஐந்து மீனவர்களை ஜாமீனில் விடுவிக்க 21–3–2012 அன்று யாழ்ப்பாணம் மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுவின்மீது 11–6–2012 அன்று வழங்கப்பட்ட தீர்ப்பில் மீனவர்களுக்கு ஜாமீன் மறுக்கப்பட்டு, அவர்கள் மீண்டும் சிறையில் அடைக்கப்பட்டனர்.*

*மீன்பிடித் தொழிலை நம்பி வாழும் இம்மீனவர்களின் குடும்பங்கள், வருமானம் ஈட்டித் தரும் தங்கள் குடும்பத் தலைவர்கள் சிறையில் உள்ள நிலையில், அன்றாட குடும்பச் செலவிற்கு வருமானமின்றித் துன்பப்படுவதால், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், குடும்பம் ஒன்றிற்கு அவர்கள் கைது செய்யப்பட்ட நாளிலிருந்து முன்தேதியிட்டு மாதந்தோறும் 7,500/– ரூபாய் வழங்கிட (மேசையைத் தட்டும் ஒலி) 6–8–2012 அன்று ஆணையிட்டார்கள். புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின் அடிப்படையில் மேற்படி ஐந்து மீனவர்களின் குடும்பங்களுக்குத் தலா 2,72,000/– ரூபாய் வீதம் மொத்தம் 13,60,000/– ரூபாய் உதவித் தொகையாக அவர்களுக்கு தமிழகம் திரும்பிய நாளான 20–11–2014 வரை முழுமையாக வழங்கப்பட்டுள்ளது.*



2014 டிசம்பர் 5] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

*புனையப்பட்ட வழக்கில் சிக்கி அல்லலுறும் ஐந்து மீனவர்களின் குடும்பங்களுக்கு உதவித் தொகை தொடர்ந்து வழங்கப்பட்டு வந்த போதிலும், இக்குடும்பங்களின் பொருளாதார நிலையைக் கருணையுடன் பரிசீலித்து, ஐந்து மீனவர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து நிவாரண உதவித் தொகையாக தலா ரூபாய் இரண்டு இலட்சம் வீதம், மொத்தம் பத்து இலட்சம் ரூபாய்க்கான காசோலைகளை (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஐந்து மீனவர்களின் குடும்பத்தினருக்கும் 13–12–2012 அன்று வழங்கினார்கள். தாயகம் திரும்பிய இந்த மீனவர்களின் புதுவாழ்வுக்காக தலா 3 இலட்சம் ரூபாய் வீதம் 15 இலட்சம் ரூபாய் 20–11–2014 அன்று வழங்கப்பட்டது.*

*இந்த ஐந்து மீனவர்களை மீட்டெடுக்கும் உறுதியுடன் பல்வேறு ராஜாங்க மற்றும் சட்டரீதியான தொடர் நடவடிக்கைகளைப் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள் மேற்கொண்டார்கள். இந்த வழக்கினைத் தொய்வின்றி நடத்திடும் பொருட்டு, கூடுதல் நிதியாக மூன்று இலட்சம் ரூபாய் வழங்கிட 8–2–2013 அன்று புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டார்கள்.*

*அதாவது, வழக்குச் செலவிற்காக மட்டும் மொத்தம் 5 இலட்சம் ரூபாய் மற்றும் குடும்ப நிதியுதவியாக ஒவ்வொரு குடும்பத்திற்கும் தலா 4 இலட்சத்து 77 ஆயிரம் ரூபாய் என மொத்தம் 28 இலட்சத்து 85 ஆயிரம் ரூபாய் தமிழக அரசால் வழங்கப்பட்டுள்ளது. மேல்முறையீட்டுக்காக வழங்கப்பட்ட 20*

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2014 டிசம்பர் 5

இலட்சம் ரூபாயும் சேர்த்து மொத்தம் வழங்கப்பட்ட தொகை 48 இலட்சத்து 85 ஆயிரம் ரூபாய் ஆகும். (மேசையைத் தட்டும் ஒலி)

ஐந்து மீனவர்களின் கைதுக்குப் பின்னர் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு, மீனவர்கள் கைது மற்றும் தாக்குதல் தொடர்பாக எழுதியுள்ள 9 கடிதங்களில், புனையப்பட்ட வழக்கில் கைது செய்யப்பட்டு, இலங்கை சிறைகளில் அடைக்கப்பட்டு அல்லலுறும் மீனவர்களின் நிலையையும், அவர்களின்றி வாடும் அவர்களது குடும்பங்களின் பரிதாப நிலையினையும் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களின் நேரடி கவனத்திற்குக் கொண்டுசென்று, ஏதுமறியா அப்பாவி மீனவர்களை உடனடியாக விடுவித்து, அவர்களது குடும்பங்களுடன் ஒன்று சேர்ந்திட உயர்மட்ட தூதரக ரீதியிலான நடவடிக்கைகளை மேற்கொள்ள வலியுறுத்தினார்கள்.

இலங்கை—தமிழக மீனவர்களுக்கிடையேயான இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தை கொழும்பில் 12—5—2014 அன்று நடைபெற்றபோது, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின் அடிப்படையில் தமிழகம் சார்பில் இலங்கை—தமிழ்நாடு மீனவர் பேச்சுவார்த்தையில் கலந்துகொண்ட மீனவப் பிரதிநிதிகள் குழு மற்றும் அரசு அலுவலர்கள், இலங்கையின் வெளிக்கடை சிறையில் வாடும் மேற்படி ஐந்து மீனவர்களை நேரில் சந்தித்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அம்மீனவர்களை விடுவிப்பதற்காக மேற்கொள்ளும் அனைத்து தொடர் நடவடிக்கைகளையும் எடுத்துக் கூறி, அவர்களுக்கு ஆறுதல் கூறினார்கள்.

பிற்பகல் 3—00

போதைப் பொருள் கடத்தியதாக புனையப்பட்ட வழக்கில் 5 அப்பாவி தமிழக மீனவர்களுக்கு மரண தண்டனை விதித்து கொழும்பு உயர் நீதிமன்றம் 30—10—2014 அன்று தீர்ப்பு வழங்கியது. இது தொடர்பாக 5 அப்பாவித் தமிழக மீனவர்களின் உயிரினைக் காக்கவும், அவர்கள் விரைவில் விடுவிக்கப்பட்டு தமிழகம் திரும்ப உரிய நடவடிக்கையினை மேற்கொள்ளவும் மத்திய அரசினைத் தமிழக அரசு கேட்டுக்கொண்டது. மேலும், மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் வரையறுக்கப்பட்ட காலத்திற்குள் உரிய



2014 டிசம்பர் 5] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

மேல்முறையீடு செய்திட இலங்கையிலுள்ள இந்திய தூதரகத்தினைப் பணிக்கவும் மத்திய அரசை தமிழக அரசு கேட்டுக்கொண்டது. இதன் விளைவாக இலங்கை உயர் நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தீர்ப்புக்கு எதிராக இலங்கையின் மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் இவ்வழக்கினை நடத்திட கொழும்புவிலுள்ள இந்திய தூதரகம் வழக்கறிஞர்களைக் கொண்ட குழுவினை இறுதி செய்தது. இந்திய தூதரகம் கேட்டுக்கொண்டதற்கிணங்க வழக்குச் செலவுக்காக 20 இலட்சம் ரூபாயைத் தமிழக அரசு வழங்கியது. (மேசையைத் தட்டும் ஒலி)

5 அப்பாவி தமிழக மீனவர்களுக்கு இலங்கை நீதிமன்றம் தூக்கு தண்டனை விதித்தது தமிழகத்தில் மிகப் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியது. தமிழகத்தில் உள்ள அனைத்துக் கட்சியினரும், ஒட்டுமொத்த தமிழக மக்களும் அவர்களுக்காக குரல் கொடுத்து மத்திய அரசு விரைந்து செயல்பட்டு, இந்த அப்பாவி மீனவர்களுக்கு விடுதலை பெற்றுத்தர வேண்டும் எனக் கோரினர். அதன்படி பாரதப் பிரதமர் அவர்களும், மத்திய அரசும் இதில் தலையிட்டு இலங்கை அரசால் அப்பாவி மீனவர்கள் 5 பேரும் 19—11—2014 அன்று விடுவிக்கப்பட்டு 20—11—2014 அன்று தாயகம் திரும்பினர்.

தாயகம் திரும்பிய மீனவர்களை மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் திருமதி பா. வளர்மதி அவர்கள், மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் திரு. கே.ஏ. ஜெயபால், மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். சுந்தரராஜ் ஆகியோர் அவர்களை விமான நிலையத்திற்கே சென்று வரவேற்றனர். அப்போது, இந்த 5 மீனவர்கள் தங்கள் வாழ்க்கையைப் புதிதாகத் தொடங்குவதற்கு ஏதுவாக, ஒவ்வொருவருக்கும் 3 இலட்சம் ரூபாய்க்கான காசோலையைத் தமிழக அரசின் சார்பாக வழங்கினர். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்களும் மீனவர்களுடன் தங்கச்சிமடம் சென்று மீனவர்களின் உற்றார், உறவினர் மற்றும் கிராம மக்களின் மகிழ்ச்சியில் பங்குகொண்டனர்.

தமிழக மீனவர்களின் பிரச்சினைகளுக்கு முக்கிய காரணம் கச்சத் தீவு இலங்கைக்கு தாரைவார்க்கப்பட்டதுதான். எனவே, கச்சத் தீவை தாரைவார்த்த ஒப்பந்தங்கள் செல்லத்தக்கதல்ல என்று

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2014 டிசம்பர் 5

அறிவிக்கக் கோரி மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்துள்ளார்கள். தமிழக அரசின் வருவாய்த் துறையும் இவ்வழக்கில் தன்னை இணைத்துக்கொண்டுள்ளது. பாரம்பரிய மீன்பிடிப் பகுதிகளில் தமிழக மீனவர்கள் மீன் பிடிக்க இயலாமல் போனது கச்சத் தீவு ஒப்பந்தத்தினால்தான். தமிழக மீனவர்கள் கடல் எல்லையைத் தாண்டி விட்டார்கள் என சிறைப் பிடிக்கப்படுவதும், மீனவர்கள்மீது பொய் வழக்குப் போடுவதும், பாரம்பரிய மீன்பிடி உரிமையை இழந்த காரணத்தால்தான். எனவேதான், புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களும், அவர்கள் வழியில் செயல்படும் தமிழக அரசும், கச்சச் தீவு மீட்கப்பட வேண்டும், பாரம்பரிய மீன்பிடி இடங்களில் தமிழக மீனவர்களின் மீன்பிடி உரிமையை மீட்டுத்தர வேண்டும் என மத்திய அரசை தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

இலங்கை அரசால் தூக்கு தண்டனை விதிக்கப்பட்ட 5 மீனவர்கள் மீட்கப்பட்டதற்கு மகிழ்ச்சியைத் தெரிவித்தும், இலங்கை சிறையில் இன்னமும் வாடிக் கொண்டிருக்கும் தமிழக மீனவர்கள் விடுவிக்கப்பட வேண்டும் என்றும், இலங்கை அரசால் பறிமுதல் செய்யப்பட்டு இன்னமும் திரும்ப வழங்கப்படாமல் உள்ள மீன்பிடிப் படகுகளை விடுவிக்கவும், கச்சத் தீவினை மீட்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் மத்திய அரசை வலியுறுத்தும் தீர்மானத்தை முன்மொழிகிறேன். இதனை ஒருமனதாக நிறைவேற்றித் தரும்படி கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**தீர்மானம்**

"இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரத்தைச் சேர்ந்த திருவாளர்கள் எமர்சன், அகஸ்டஸ், வில்சன், பிரசாத், லேங்க்லெட் ஆகிய 5 மீனவர்கள், கடந்த 28–11–2011 அன்று, மீன்பிடி விசைப் படகில், இராமேஸ்வரம் மீன்பிடி தளத்திலிருந்து புறப்பட்டுச் சென்று, தங்களது பாரம்பரிய மீன்பிடிப் பகுதிகளில் மீன் பிடித்துக்கொண்டிருந்தபோது இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

பிற்பகல் 3–05

இந்த ஐந்து மீனவர்கள் போதைப் பொருள் கடத்தியதாக புனையப்பட்ட வழக்கு ஒன்றை அவர்கள்மீது இலங்கை அரசு



2014 டிசம்பர் 5] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

தொடர்ந்தது. இலங்கை அரசால் புனையப்பட்ட வழக்குகளிலிருந்து அவர்கள் விடுதலை பெறுவதற்கு, இராமேஸ்வரத்திலுள்ள 'நிரபராதி மீனவர்களின் விடுதலைக்கான கூட்டமைப்பு' மூலம் சட்ட நடவடிக்கை மேற்கொள்ள, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டது. இந்த 5 மீனவர்களின் குடும்பங்களுக்கு மாதந்தோறும் உதவித் தொகையாக தலா 7,500 ரூபாய் வழங்கப்பட்டது.

போதைப் பொருள் கடத்தியதாகப் புனையப்பட்ட வழக்கில் 30–10–2014 அன்று கொழும்பு உயர் நீதிமன்றம் இந்த 5 அப்பாவி மீனவர்களுக்கும் மரண தண்டனை வழங்கியது. இந்தத் தீர்ப்புக்கு எதிராக வரையறுக்கப்பட்ட காலத்திற்குள் இலங்கையின் மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்திட உரிய நடவடிக்கைகள் எடுக்கவும், இராஜ்ஜிய நடவடிக்கைகள்மூலம் அவர்கள் விடுதலை செய்யப்பட நடவடிக்கை எடுக்கவும் மத்திய அரசை தமிழக அரசு கேட்டுக்கொண்டது. தமிழகத்தில் உள்ள அனைத்துக் கட்சிகளும், ஒட்டுமொத்தத் தமிழகமே இந்தக் கோரிக்கையை வைத்தன. மத்திய அரசு மேற்கொண்ட இராஜ்ஜிய நடவடிக்கைகள் காரணமாக இந்த 5 மீனவர்கள் 19–11–2014 அன்று விடுவிக்கப்பட்டு, 20–11–2014 அன்று தாயகம் திரும்பினார்கள்.

மீனவர்களின் வழக்குச் செலவுக்காகவும் அவர்கள் சிறையில் இருந்தபோது அவர்களின் குடும்பத்தினரின் வாழ்வாதாரத்திற்காகவும் மீனவர்கள் இந்தியா திரும்பியதும் புது வாழ்வு தொடங்குவதற்கு எனவும், மொத்தம் 63 இலட்சத்து 85 ஆயிரம் ரூபாய் வழங்கிய மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், தமிழக அரசுக்கும் இந்தப் பேரவை பாராட்டுதலையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

தூக்கு தண்டனை விதிக்கப்பட்ட 5 மீனவர்கள் விடுவிக்கப்பட நடவடிக்கை எடுத்த மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கும், மத்திய அரசுக்கும் தனது பாராட்டையும், நன்றியையும் இந்த மாமன்றம் தெரிவித்துக்கொள்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

கடல் எல்லையைக் கடந்ததாகக் குற்றம் சாட்டப்பட்டு, இலங்கை சிறையில் வாடிக் கொண்டிருக்கும் 38 மீனவர்கள் உடன் விடுவிக்கப்பட தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2014 டிசம்பர் 5

என மத்திய அரசை இந்த மாமன்றம் கேட்டுக்கொள்கிறது. இதுவன்றி, இலங்கை அரசால் கைப்பற்றப்பட்டு அவர்கள் வசம் உள்ள 79 மீன்பிடிப் படகுகளை விடுவித்திட தேவையான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொள்ள வேண்டும் என இந்த மாமன்றம் வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் தொடர்ந்து சிறைப் பிடிக்கப்படுவதற்கு முக்கிய காரணம் கச்சத் தீவு இலங்கைக்குத் தாரை வார்க்கப்பட்டதுதான். தமிழக மீனவர்கள் எவ்வித இன்னலுமின்றி தங்களுடைய வாழ்வாதாரத்தை மேற்கொள்ள ஏதுவாக கச்சத் தீவைத் திரும்பப் பெறவும், பாரம்பரிய மீன்பிடிப் பகுதிகளில் மீன் பிடிக்கும் உரிமையை இலங்கை அரசு தடுக்காமல் இருப்பதற்கும், தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மத்திய அரசு எடுக்க வேண்டுமென இந்த மாமன்றம் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது.” *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.

**முனைவர் செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகளாவிய தொழில், வெகு மக்கள் தொழில் ஒன்று உண்டு என்றால் அது நிச்சயம் மீன்பிடித் தொழிலாகத்தான் இருக்க முடியும். மனித சமூகம் தோன்றிய காலத்திலிருந்து இதுநாள் வரையிலும் மிகப் பெரும்பான்மை மக்களால், மிகப் பெரும்பான்மை தொழிலாளர்களால் உலகத்திலே இருந்துகொண்டிருக்கிற தொழில் மீன்பிடித் தொழில். உலக மக்களின் 200 கோடி மக்களின் அன்றாட உணவாக இருந்துகொண்டிருக்கிற மீனை மட்டுமல்லாமல், இயற்கை தந்திருக்கிற எத்தனையோ கொடைகளை மனித சமூகத்திற்கு வழங்கிக்கொண்டிருக்கிற கடல் அன்னையின் குழந்தைகளாக இருக்கக்கூடிய மீனவ சமுதாயத்தின் வாழ்க்கையோ புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ‘முடிந்தால் முடியும் தொடர்ந்தால் தொடரும்’ என்று பாடியதைப்போல அன்றாடம் போராடுகிற ஒரு வாழ்க்கையாகவே இருந்துகொண்டிருப்பது வேதனைக்குரியது. ‘தரைமேல் பிறக்க வைத்தான் எங்களை தண்ணீரில் பிழைக்க வைத்தான்’ என்ற அந்த வரிகள் இருக்கிறதே, வரிகள் ஒவ்வொருநாளும் மீனவ சமூகத்தை கண்ணீர் விட வைக்கக்கூடிய



2014 டிசம்பர் 5] [திரு. செ.கு. தமிழரசன்]

வரிகள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், முதலமைச்சராக இருந்த காலத்திலும் சரி, எதிர்க்கட்சியில் இருந்த காலத்திலும் சரி, தேர்தல் காலங்களிலும் சரி எந்தச் சந்தர்ப்பத்திலும் மீனவ மக்களுக்கு ஒரு வழிகாட்டியாய், அவர்களுடைய கலங்கரை விளக்கமாய், வாழ்க்கைக்கான ஒரு அச்சாணியாய் எல்லா நிலைகளிலும் இருந்துகொண்டிருக்கிறார்கள் என்பதை ஒவ்வொரு தருணத்திலும் வெளிப்படுத்தியிருக்கிறார்கள்.

*பிற்பகல் 3–10*

கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன்பு இராமேஸ்வரம் பகுதியிலே இருக்கிற மீனவர்கள், கடலோடிகளாக, தங்கள் தொழில் கருதி, மீன் பிடிக்கப் போனபோது, எல்லை மீறி வந்தார்கள் என்று குற்றம் சாட்டப்பட்டு, அவர்கள் கடத்தல்காரர்கள் என்கிற இன்னொரு கொடுமையான குற்றச்சாட்டுக்கும் உள்ளாகி, மரண தண்டனை பெற்று, மூன்று ஆண்டுக் காலமாக அந்நிய நாடான, பக்கத்து நாடான இலங்கையிலே வாடி வதங்கினார்கள் அப்போது அவர்களுக்கு வழக்கு நடத்துவதற்கு உரிய ஏற்பாடு, அதற்கான செலவுத் தொகை, ஒவ்வொரு மாதமும் அவர்களின் குடும்பங்கள் வாழ்வதற்கான ஊக்கத் தொகை என்கிற வகையிலே 65 இலட்சம் ரூபாயை ஒரு தாயைப்போல, அந்த மீனவச் சமுதாயத்தின் தாயாக, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் மீனவச் சமூகத்தின் நண்பன் என்றால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மீனவச் சமூகத்தின் தாய் *(மேசையைத் தட்டும் ஒலி)* என்று சொல்கிற வகையிலே, அவர்கள் உவந்தளித்த, உதவிகளெல்லாம் இருக்கிறதே, அவையெல்லாம், மீனவச் சமூகத்து உறுப்பினர் மட்டுமல்ல, மனித நேயமிக்க ஒவ்வொருவரும் நினைத்துப் பாராட்டுகிற வகையிலே உள்ளன.

நோய்நாடி நோய்முதல் நாடி தீர்க்கிற ஒரு கை தேர்ந்த மருத்துவரைப் போல, இந்த நோயைத் தீர்ப்பதற்கு, கச்சத் தீவை மீட்டெடுப்பதுதான் மிகச் சிறந்த வழியாக இருக்க முடியும். கச்சத் தீவை மீட்டெடுக்காதவரை ஒவ்வொருநாளும் இது தொடர்கதையாகவே, மீனவச் சமூகத்திற்கு, எல்லையோர மீனவச் சமுதாயத்திற்கு இருந்துகொண்டிருக்கும் என்கிற எண்ணத்தின் அடிப்படையிலே, கச்சத் தீவை மீட்டெடுப்பதற்கு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தனி ஒரு மனிதராக உச்ச நீதிமன்றம் வரையிலும் போய், வழக்கு தொடர்ந்தார்கள்.

[முனைவர் செ.கு. தமிழரசன்] [2014 டிசம்பர் 5

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

அந்த வழக்கிலே அவர்கள் ஒரு மிகப் பெரிய நிர்பந்தத்தை உருவாக்கி, இன்றைக்கு கச்சத் தீவு மீட்டெடுக்கப்படக்கூடிய அளவிற்கான ஒரு பரிசீலனையை, தாக்கத்தை மத்திய அரசிலே உருவாக்கியிருக்கிறார்கள் என்று சொன்னால், அதற்கும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் காரணம். அவர்கள் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோதும், முதலமைச்சராக இருந்தபோதும், அவர்கள் அரசியல் தலைமையேற்ற அந்தக் காலம் தொட்டே, இதைத் தொடர்ந்த ஒரு கோரிக்கைப் போராட்டமாக நடத்தி வந்திருக்கிறார்கள் என்பதை நாம் அறிவோம், அந்த வகையிலேதான், இந்தச் சட்டமன்றப் பேரவை அவர்களைப் பாராட்டுகிறது. அந்தப் பாராட்டு முழுக்க, முழுக்க புரட்சித் தலைவி அம்மா அவர்களையே சாரும். முழுக்க, முழுக்க அவர்கள் ஒருவர் மட்டுமே போராடினார்கள், தகுதியானவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்கிற வகையிலே அமைந்திருக்கிறது அந்தப் பாராட்டு.

இந்தப் பெரும் பொறுப்பு மத்திய அரசுக்கு இருக்கிறது. மத்திய அரசுதான் இதற்கான முனைப்புகளை எடுத்திட வேண்டும். மத்திய அரசினுடைய பொறுப்பை அது தட்டிக் கழித்துவிட முடியாது. ஆகவே, மத்திய அரசை வலியுறுத்துகிற வகையிலே இந்தத் தீர்மானம் அமைந்திருக்கிறது என்கிறபோது, இந்தத் தீர்மானத்தை நான் வழிமொழிந்திடக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

காவேரிப் பிரச்சினை குறித்தும், காவேரிப் பகுதியிலே கர்நாடகத்திலே மேகதாது என்கிற பகுதியிலே, புதிதாகக் கட்டப்படுகிற அந்த அணை குறித்தும், அதைப் போலவே, கேரளத்திலே. . . (குறுக்கீடு) இங்கே வைக்கப்பட்ட தீர்மானம் ஒன்றாகவே வைக்கப்பட்டிருப்பதனாலே, இனி அடுத்தும் வாய்ப்புக் கிடைக்கும் என்றால், அப்போது அதுகுறித்து பேசுகிற வகையிலே, இந்தத் தீர்மானத்தை நான் வழிமொழிந்து அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. தனியரசு அவர்கள்.

**திரு. உ. தனியரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இலட்சக்கணக்கான மீனவக் குடும்பங்களினுடைய அன்புத் தாயாய் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்றாவது



2014 டிசம்பர் 5] [திரு. உ. தனியரசு]

முறையாக தமிழகத்தில் ஆட்சி பொறுப்பிற்கு வந்த நிமிடம் முதல், யாராலும் ஒரு மீனவனுடைய உயிரைக்கூட பறிக்க முடியாத அளவிற்கு மீனவனுடைய உரிமையை, மீனவர்களுடைய உடைமையை, மீன்பிடி உரிமையைப் பாதுகாப்பதில் 100 விழுக்காடு உறுதியாக இருந்து போராடி வருகிறார்கள். புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய தொடர் முயற்சியால் (மேசையைத் தட்டும் ஒலி) அந்தப் பாதுகாப்பு அரண் இன்னமும் மீனவர்களுடைய வாழ்க்கையை, குடும்பங்களைக் காக்கிறது. இந்த ஐந்து மீனவர்களை தூக்கு தண்டனையிலிருந்து மீட்டெடுத்த பெருமை நம்முடைய தமிழகத்தினுடைய மக்கள் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு மட்டும்தான் சாரும். (மேசையைத் தட்டும் ஒலி) ஏற்கெனவே தமிழகத்திலே சாந்தன், முருகன், பேரறிவாளன் ஆகிய அந்த மூன்று தமிழ் இளைஞர்களை தூக்குக் கயிற்றிலிருந்து. மீட்டெடுப்பதற்கு தமிழ்நாடு சட்டமன்றத்திலே தீர்மானம் கொண்டு வந்து, மூன்று தமிழ் இளைஞர்களின் உயிரைப் பாதுகாத்த ஒரே தலைவி புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான்.

*பிற்பகல் 3–15*

அதேபோன்றுதான் இந்த 5 தமிழக மீனவர்களின் உயிரையும் மீட்டு எடுத்திருக்கிறார். அவர்களை மீட்டெடுத்ததோடு மட்டுமல்லாமல், அவர்கள் சிறைபட்டிருந்த காலத்திலே அந்த ஏழை மீனவக் குடும்பங்களுக்கு, ஆதரவற்றிருந்த அந்த மீனவக் குடும்பங்களுக்கு மாதம் ஒன்றுக்கு 7,500 ரூபாய் உதவித் தொகை தந்து, அவர்கள் வழக்குச் செலவுகளுக்காக 20 இலட்சம் ரூபாயை உடனே தந்துதவினார்கள், இன்னமும் அவர்கள் விடுவிக்கப்பட்டவுடன், விமான நிலையத்தில் வரவேற்று, உபசரித்து மனமகிழ்வோடு அவர்களுக்கு ஆறுதலைத் தந்தார்கள் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள். அப்பொழுதே அந்தக் குடும்பங்களுக்கு மீண்டும் 3 இலட்சம் ரூபாய் உதவித் தொகையைத் தந்து, அவர்களுடைய குடியிருப்புப் பகுதிகளுக்கு, வீடுகளிலே கொண்டுபோய் பத்திரமாக ஒப்படைத்த ஒரே அரசு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு. அதற்காக நாம் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நன்றி சொல்கிற வகையிலே இந்தத் தீர்மானத்தையும், அதுபோன்று பல்வேறு

[திரு. உ. தனியரசு] [2014 டிசம்பர் 5

காலகட்டங்களிலே பாரதப் பிரதமருக்கு நம்முடைய தமிழ்நாடு அரசு கடிதம் எழுதினாலும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு எழுதிய இந்தக் கடிதத்திற்கு உரிய அளவிலே அழுத்தத்திற்கு, வலியுறுத்துதலுக்கு மாண்புமிகு பாரதப் பிரதமருக்கும் இந்தத் தீர்மானத்திலே நாம் நன்றி பாராட்டியிருக்கிறோம். அந்தவகையில் மத்திய அரசைப் பாராட்டியிருப்பதையும் வரவேற்கிறேன். இப்பொழுதும் இலங்கை சிறையில் வாடிக் கொண்டிருக்கிற, 38 மீனவர்களையும் விடுவிக்கக் கோரியிருக்கிற இந்தத் தீர்மானம் தேவையான நடவடிக்கைகள் எடுக்க மத்திய அரசை வலியுறுத்துகிறது. ஏழையெளிய உழைக்கின்ற மீனவ சமுதாயத்தினுடைய ஒரே கருவியாக இருக்கிற 79 மீன்பிடிப் படகுகளை மாதக் கணக்கிலே, ஆண்டுக் கணக்கிலே கரையோரங்களிலே சிறை பிடிக்கப்பட்டிருக்கிற படகுகளை விடுவிப்பதற்கும், ஒட்டுமொத்த மீனவர்களுடைய வாழ்வாதாரத்திற்கும் நிரந்தரமாக அவர்களுடைய உயிரை, உடைமையை, மீன்பிடி உரிமையைப் பாதுகாப்பதற்கும் ஒரே தீர்வு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், வலிமையாக வலியுறுத்துகிற கச்சத் தீவை மீட்பது ஒன்றுதான். அதை நிறைவேற்றுவதற்கும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சட்டமன்றத்திலே தீர்மானம் கொண்டு வந்தார்கள். நாளை நாடாளுமன்றத்திலே கச்சத் தீவை மீட்டெடுக்கிற வலிமையைப் பெறுவார். ஆட்சியைப் பெறுவார். கச்சத் தீவை மீட்க நாம் மத்திய அரசை வலியுறுத்தி இருக்கிற மிக வலிமையான, அவசியமான இந்தத் தீர்மானத்தை நான் மகிழ்வோடு வரவேற்று, ஆதரித்து வழிமொழிகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.

***திரு. பி.வி. கதிரவன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இராமேஸ்வரம் அருகில் உள்ள தங்கச்சிமடத்தைச் சேர்ந்த 5 மீனவர்கள்மீது இலங்கை அரசால் போதைப் பொருள் கடத்தியதாக 28–11–2011 ஆம் தேதியிலிருந்து வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, இலங்கை நீதிமன்றத்திலே விசாரணை நடத்தப்பட்டு, 30–10–2014 ஆம் தேதி அவர்களுக்கு மரண



2014 டிசம்பர் 5] [திரு. பி.வி. கதிரவன்]

தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது. தமிழக அரசு, அந்த 5 மீனவர்களை மீட்டுத் தருவதில் மேற்கொண்ட முயற்சிகள் அனைத்தும் உண்மையிலேயே பாராட்டத்தக்கவை. அதுமட்டுமல்லாமல், அந்த 5 மீனவர் குடும்பங்களுக்கும், ஒவ்வொரு மாதமும் 7,500 ரூபாய், அந்தக் குடும்பச் செலவிற்காக 2 இலட்சம் ரூபாய், பல உதவிகளைச் செய்து தமிழக அரசு அவர்களை மீட்பதற்கு மத்திய அரசிடம் வலியுறுத்தியிருக்கிறது. மத்திய அரசும் அதற்கு முயற்சிகள் மேற்கொண்டது. அவர்களை வெளியிலே கொண்டுவந்து, தமிழகத்திலே மீண்டும் அவர்கள் வாழ்வுக்காக இதுவரை தமிழக அரசு 63 இலட்சத்து 85 ஆயிரம் ரூபாய் வரை செலவு செய்திருப்பது பாராட்டக்கூடியது. அதிலே மத்திய அரசு தலையிட்டு இந்த மீனவர்களைக் காப்பாற்றியிக்கிறது. அவர்களுக்கும் நாம் பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்வதில் பெருமைதான்.

பிற்பகல் 3–20

அதேபோன்று இன்னும் 38 மீனவர்கள் இலங்கை சிறையிலே இருக்கிறார்கள். 79 மீன்பிடிப் படகுகளும், வலைகளும் இலங்கை அரசிடம் இருக்கின்றன. மத்திய அரசு தலையிட்டு அவற்றையும் பெற்றுத் தர வேண்டும். அதுமட்டுமல்ல, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பொதுச் செயலாளர், மாண்புமிகு மக்களின் முதல்வர் அவர்கள், கச்சத் தீவை மீட்க வேண்டும் என்று உச்ச நீதிமன்றத்திலே வழக்கு தொடர்ந்தார்கள். அதற்குப் பின்னால் 3–வது முறையாக தமிழகத்திலே முதல்வராக இருந்த பின்பு, கச்சத் தீவை மீண்டும் இந்தியாவுக்கு என்பதல்ல, அதைத் தமிழகத்திற்குப் பெற்றுத் தர வேண்டும் என்று வழக்கு தொடர்ந்தார்கள். அந்த வழக்கிலேகூட, மத்திய அரசு எப்படி இலங்கை அரசுடன் பேசி அந்த ஐந்து மீனவர்களும் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யாமல் அவர்கள் விடுதலை செய்யப்பட்டார்களோ, அதேபோன்று மத்திய அரசு இதிலே தலையிட்டு, இலங்கை அரசிடம் பேசி மீண்டும் கச்சத் தீவை தமிழகத்திற்கு, இந்தியாவிற்குப் பெற்றுத் தர வேண்டுமென்று கேட்டு. இன்றையதினம் கொண்டு வந்திருக்கிற தீர்மானத்தை அகில இந்திய பார்வர்டு பிளாக் இயக்கம் அதை வழிமொழிந்து வாழ்த்துக்களோடு நிறைவு செய்கிறது.

[2014 டிசம்பர் 5

**(ஆ) காவேரி மேலாண்மை வாரியம், காவேரி நீர் முறைப்படுத்தும் குழு அமைப்பதோடு மேகதாதுவில் கர்நாடக அரசும், பாம்பாற்றில் கேரள அரசும் அணை கட்ட அனுமதி வழங்கக் கூடாதென மத்திய அரசை வலியுறுத்துதல்**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *அரசினர் தீர்மானம். அடுத்த தீர்மானத்தையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்மொழிவார்கள். இரண்டு தீர்மானங்களின்மீதும் மற்ற உறுப்பினர்கள் சேர்த்தே பேசலாம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஒ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காவேரி போல் பெருமை படைத்த மாண்புமிகு மக்கள் முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தமிழக மக்களுக்கு, காவேரி போல் நலம் சேர்த்து, காவேரி போல் வளம் சேர்த்து, காவேரி போல் புகழ் சேர்க்கும் மக்கள் தலைவர் ஆவார்கள்.*

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,*

*"உழவரோதை மத கோதை*
*உடைநீரோதை தண்பதங்கொள்*
*விழவரோதை சிறந்தார்ப்ப*
*நடந்தாய் வாழி காவேரி"*

*என இளங்கோவடிகளால் எடுத்துரைக்கப்பட்ட பல்வேறு ஓசைகளுடன் காவேரி நதி பொங்கிப் பாய்ந்து, டெல்டா மாவட்டங்களை வளமாக்குவதுடன் விவசாயிகளின் வாழ்வாதாரமாகவும் விளங்குகிறது.*

*தமிழ்நாட்டின் ஜீவாதார உரிமைப் பிரச்சினையாக விளங்குவது காவேரி நதிநீர்ப் பிரச்சினை. சென்னை மாகாணத்திற்கும், மைசூர் சமஸ்தானத்திற்கும் இடையே 1892 மற்றும் 1924 ஆம் ஆண்டைய ஒப்பந்தங்கள் காவேரி நதிநீரில் தமிழ்நாட்டிற்கு உள்ள உரிமையைத் தெள்ளத்தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன.*

*1924 ஆம் ஆண்டைய ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ள நிபந்தனைகளைப் பின்பற்றாமல், 1960–களின் பின்பகுதியிலும், 1970–களின் தொடக்கத்திலும் மத்திய அரசின் ஒப்புதல்*



2014 டிசம்பர் 5] [திரு. ஒ. பன்னீர்செல்வம்]

*இல்லாமலும் காவேரி நதியில் உரிமை உள்ள மாநிலங்களைச் கலந்தாலோசிக்காமலும், தன்னிச்சையாக பல்வேறு அணைகளை கர்நாடக அரசு கட்ட உத்தேசித்தது. ஆண்டுக்காண்டு விவசாய நிலங்களின் பரப்பினையும் கர்நாடக அரசு அதிகரித்துக்கொண்டே சென்றது.*

*இதனையடுத்து, 1956 ஆம் ஆண்டைய மாநிலங்களுக்கு இடையேயான நதிநீர்த் தாவா சட்டத்தின்படி, நடுவர் மன்றம் ஒன்று உருவாக்கப்பட வேண்டுமென்று 1986 ஆம் ஆண்டு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். தலைமையிலான தமிழ்நாடு அரசு, மத்திய அரசினைக் கேட்டுக்கொண்டது. இந்தக் கடிதத்தின்மீது மத்திய அரசு எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.*

*இந்தச் சூழ்நிலையில், தமிழ்நாடு காவேரி நீர்ப் பாசன விளைபொருட்கள் விவசாயிகள் நல உரிமைப் பாதுகாப்பு சங்கத்தினால் தொடுக்கப்பட்ட வழக்கில், தமிழ்நாடு அரசு தன்னை இணைத்துக் கொண்டது. இவ்வழக்கினை விசாரித்த உச்ச நீதிமன்றம், காவேரிப் பிரச்சினைக்கு தீர்வு காண நடுவர் மன்றத்தை ஏற்படுத்துமாறு 1990 ஆம் ஆண்டு ஓர் உத்தரவினைப் பிறப்பித்தது. உச்ச நீதிமன்றத்தின் இந்த உத்தரவினைத் தொடர்ந்து, 1986 ஆம் ஆண்டு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் ஆட்சிக் காலத்தில் தமிழக அரசால் அனுப்பப்பட்ட கடிதத்திற்கு உயிரூட்டப்பட்டு, மத்திய அரசால் அறிவிக்கை செய்யப்பட்டு, காவேரி நடுவர் மன்றத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டது. இதனையடுத்து, காவேரி நடுவர் மன்றம் 25–6–1991 அன்று ஓர் இடைக்கால ஆணையைப் பிறப்பித்தது. இந்த ஆணையில், மேட்டூர் அணைக்கு 205 டி.எம்.சி. அடி நீர் கிடைப்பதை உறுதி செய்யும்வகையில் கர்நாடகா தனது நீர்த்தேக்கங்களிலிருந்து தண்ணீரைத் திறந்துவிட வேண்டும் என்றும், மாதாந்திர மற்றும் வாராந்திர அடிப்படையில் நீர் விடுவிக்கப்பட வேண்டும் என்றும்; இந்த இடைக்கால ஆணை இறுதித் தீர்ப்பு அளிக்கும் வரையில் நடைமுறையில் இருக்கும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.*

*தமிழ்நாடு இவ்வாணையை ஏற்றுக்கொண்டது. எனினும், கர்நாடக அரசு, இந்த இடைக்கால ஆணையை எதிர்த்து அவசரச் சட்டம் இயற்றியபோது, மேதகு குடியரசுத் தலைவர் அவர்கள், கர்நாடகத்தின் அவசரச் சட்டம், அரசமைப்பின்படி*

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2014 டிசம்பர் 5

செல்லத்தக்கதா எனவும், நடுவர் மன்ற இடைக்கால ஆணையினை சட்டப்படி மத்திய அரசிதழில் வெளியிடலாமா என்றும் உச்ச நீதிமன்றத்தின் கருத்தினைக் கோரினார்.

*பிற்பகல் 3–25*

இதனை விசாரித்த உச்ச நீதிமன்றம், காவேரி நடுவர் மன்றம் பிறப்பித்த இடைக்கால ஆணை செல்லும் என்றும், அது மத்திய அரசிதழில் வெளியிடப்பட வேண்டும் என்றும், கர்நாடக அரசு இயற்றிய சட்டம் செல்லாது என்றும் 22–11–1991 அன்று மத்திய அரசிற்குக் கருத்துரை வழங்கியது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களது உறுதியான நடவடிக்கையின் காரணமாக அதனைத் தொடர்ந்து, 10–12–1991 அன்று காவேரி நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணை மத்திய அரசிதழில் வெளியிடப்பட்டது.

இந்த ஆணையைச் செயல்படுத்துவதற்காக ஓர் அமைப்பை உடனடியாக ஏற்படுத்துவதற்கு மத்திய அரசுக்கு ஆணை பிறப்பிக்கும்படி உச்ச நீதிமன்றத்தில், 1992–ல் ஒரு சிவில் வழக்கு இதய தெய்வம் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணைப்படி, தமிழக அரசால் தாக்கல் செய்யப்பட்டது. காவேரி நதிநீர் ஆணையம் மற்றும் அதற்கு உதவுவதற்காக காவேரி கண்காணிப்புக் குழு என்ற அமைப்புகள் 11–8–1998 அன்று மத்திய அரசால் ஏற்படுத்தப்பட்டது. இந்த ஆணையம், 15 ஆண்டுகளில், 7 முறை கூடிய போதிலும் மாதாந்திரவாரியாக குறிப்பிடப்பட்ட நீர் தமிழ்நாட்டிற்கு விடுவிப்பதை உறுதி செய்யவில்லை.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

காவேரி நடுவர் மன்றம் 16 ஆண்டுகள் இவ்வழக்கு தொடர்பாக சம்பந்தப்பட்ட மாநிலங்களின் வாத, பிரதிவாதங்கள் கேட்டறிந்தும், ஆவணங்கள், புள்ளிவிவரங்கள் போன்றவற்றை நன்கு ஆராய்ந்தும், 1956 ஆம் ஆண்டைய பன்மாநில நதிநீர்த் தாவா சட்டத்தின் பிரிவு 5(2)–ன்படி இறுதி ஆணையை 5–2–2007 அன்று பிறப்பித்தது.

இந்த ஆணையில், காவேரி உண்மை நிலை அறியும் குழுவின் அறிக்கையைச் சார்ந்து காவேரியின் மொத்த நீர்வளம் 50 விழுக்காடு நம்பகத்தன்மை அடிப்படையில், 740 டி.எம்.சி. அடி நீர் என்பதன்பேரில், மாநிலங்களுக்கு ஒதுக்கீடு செய்துள்ளது. இதில் தமிழ்நாட்டிற்கு 419 டி.எம்.சி. அடி நீரும், கர்நாடகாவிற்கு 270 டி.எம்.சி. அடி நீரும், கேரளாவிற்கு 30 டி.எம்.சி. அடி நீரும், புதுச்சேரிக்கு 7 டி.எம்.சி. அடி நீரும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் தவிர்க்க முடியாத உபரி நீர் 4 டி.எம்.சி. அடி நீர், சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்காக 10 டி.எம்.சி. அடி நீர் என மொத்தம் 740 டி.எம்.சி. அடி நீர் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. இந்த இறுதி ஆணையை செவ்வனே செயல்படுத்துவதற்கு ஏதுவாக, காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகியவற்றை அமைக்கவும் பரிந்துரை செய்தது.



2014 டிசம்பர் 5] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

கர்நாடக, கேரள மாநிலங்கள் நடுவர் மன்ற இறுதி ஆணையை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் ஏப்ரல் 2007–ல் சிறப்பு மேல் முறையீட்டு மனுக்களைத் தாக்கல் செய்தன. தமிழ்நாடு அரசும் நடுவர் மன்ற இறுதி ஆணையின்மீது ஒரு சில பகுதிகளை மேல் ஆய்வு செய்யக் கோரி 2007 ஆம் ஆண்டு மே மாதம் ஒரு சிறப்பு மேல் முறையீட்டு மனுவைத் தாக்கல் செய்தது. இந்த மனுக்களை உச்ச நீதிமன்றம் 7–5–2007 அன்று ஏற்றுக்கொண்டது. இந்த மனுக்கள் இன்னமும் உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளன.

கடந்த 2011 ஆம் ஆண்டு, இதய தெய்வம் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள், தமிழ்நாட்டின் முதலமைச்சராக ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் 14–6–2011 அன்று பாரதப் பிரதமர் அவர்களை புது டில்லியில் நேரில் சந்தித்து, “காவேரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பினை மத்திய அரசிதழில் வெளியிட வேண்டும் என்றும், இந்த ஆணையை செவ்வனே செயல்படுத்த காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகியவற்றை அமைக்க வேண்டும்” என்றும் வலியுறுத்தினார்கள். மேலும், புரட்சித் தலைவி அம்மா அவர்கள், காவேரி நடுவர் மன்றத்தின் இறுதி ஆணையை மத்திய அரசின் அரசிதழில் வெளியிட வேண்டும் என்றும் காவேரி மேலாண்மை வாரியத்தை அமைக்க வேண்டும் என்றும் கோரி, பாரதப் பிரதமர் அவர்களை 17–10–2011, 20–12–2012, 22–12–2012, 22–2–2013, 11–3–2013, 17–5–2013, 2–9–2013, 3–9–2013 மற்றும் 13–6–2014 ஆகிய நாளிட்ட கடிதங்கள் வாயிலாகக் கேட்டுக்கொண்டார்கள்.

*பிற்பகல் 3–30*

புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள் மேற்கொண்ட தொடர் நடவடிக்கைகளினாலும், உச்ச நீதிமன்றத்தின் தலையீட்டாலும், நடுவர் மன்றத்தினுடைய இறுதி ஆணை

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2014 டிசம்பர் 5

*19–2–2013 அன்று மத்திய அரசின் அரசிதழில் வெளியிடப்பட்டது. இதனால், முதற்கட்டமாக காவேரி பிரச்சினையில் தமிழ்நாட்டின் உரிமை நிலைநாட்டப்பட்டதோடு அல்லாமல், காவேரி நதியினால் பாசனப் பயன்பெறும் விவசாயப் பெருங்குடி மக்களினுடைய வாழ்வாதாரம் மேம்பட வழிவகை செய்யப்பட்டது.*

*எனவேதான், நீதியின் துணை கொண்டு, நியாயத்தை வென்று, சட்டத்தின் துணை கொண்டு, சரித்திரம் படைத்து, காவேரி நடுவர் மன்றத்தின் இறுதி ஆணையை மத்திய அரசிதழில் வெளியிடச் செய்து, வரலாற்றுச் சாதனை படைத்த (மேசையைத் தட்டும் ஒலி) மக்களின் முதல்வர் இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நன்றி தெரிவிக்கும்வகையில் தஞ்சை தரணியிலே மாபெரும் விழாவினை 9–3–2013 அன்று விவசாய சங்கங்கள் அனைத்தும் ஒன்றுகூடி நடத்தின. அந்த மகத்தான விழாவில் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை “பொன்னியின் செல்வி” என்று புகழ்ந்து பாராட்டி சிறப்பித்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)*

*மத்திய அரசு, காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழுவை அமைக்காததால் இவற்றை உடனடியாக அமைக்கும்படி மத்திய அரசுக்கு ஆணையிடக் கோரி, இடைக்கால மனு ஒன்றை 18–3–2013 அன்று உச்ச நீதிமன்றத்தில் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களது ஆணையின்படி தமிழ்நாடு அரசு தாக்கல் செய்தது. இம்மனுவினை 10–5–2013 அன்று விசாரித்த உச்ச நீதிமன்றம், காவேரி மேலாண்மை வாரியம் அமைக்கப்படும்வரையில், 19–2–2013 அன்று மத்திய அரசிதழில் வெளியிடப்பட்ட நடுவர் மன்றத்தின் இறுதி ஆணையை செயல்படுத்த ஒரு தற்காலிக ஏற்பாடாக* Pro tem measure *மத்திய நீர் ஆதார அமைச்சகச் செயலாளரின் தலைமையில், மாநில தலைமைச் செயலாளர்களை உறுப்பினர்களாகக் கொண்டு, காவேரி மேற்பார்வைக் குழு–*Supervisory Committee *ஒன்றை அமைக்க ஆணையிட்டது. இந்த ஆணையின்படி, மத்திய நீர் ஆதாரத் துறை செயலாளர் அவர்களை தலைவராகக் கொண்டும், தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா மற்றும் புதுச்சேரி மாநிலங்களின் தலைமைச் செயலாளர்கள் மற்றும் மத்திய நீர்வளக் குழுவின் தலைவர் ஆகியவர்களை உறுப்பினர்களாகக் கொண்டும் ஒரு மேற்பார்வைக் குழுவினை மத்திய அரசு அமைத்தது. இவ்வமைப்பு ஓர் இடைக்கால ஏற்பாடு மட்டுமே என்பதால், ஒரு நிரந்தர ஏற்பாடாக,*



2014 டிசம்பர் 5] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

*காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகியவற்றை உடனடியாக மத்திய அரசு அமைக்க உத்தரவு வழங்க வேண்டி, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களது ஆணையின்படி, உச்ச நீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு ஓர் இடைக்கால மனுவினை அதாவது* I.A.No.*7/2013–ஐ, 11–11–2013 அன்று தாக்கல் செய்தது. உச்ச நீதிமன்றம் இந்த இடைக்கால மனுவினை சிவில் மேல்முறையீட்டு வழக்குகளுடன் சேர்த்து விசாரிக்கலாம் என்று உத்தரவிட்டது.*

*காவேரி நடுவர் மன்றத்தின் 5–2–2007 ஆம் நாளிட்ட இறுதி ஆணை, மத்திய அரசின் அரசிதழில் 19–2–2013 அன்று வெளியிட்ட பின்னர் அவ்வாணையில் குறிப்பிடப்பட்டுள்ள காவேரி மேலாண்மை வாரியத்தை அமைக்க வேண்டுமென்று மத்திய அரசை புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வந்தபோதிலும், இவை அமைக்கப்படாத காரணத்தாலும், உச்ச நீதிமன்ற ஆணைப்படி ஏற்படுத்தப்பட்ட தற்காலிக ஏற்பாடான மேற்பார்வைக் குழு–*Pro tem Supervisory Committee *திறம்பட செயல்படாத காரணத்தினாலும், காவேரி மேலாண்மை வாரியத்தை உடனடியாக அமைக்க வேண்டும் என 3–6–2014 அன்று பாரதப் பிரதமர் அவர்களை நேரில் சந்தித்தபோது விரிவாக எடுத்துரைத்து, வலியுறுத்தி கோரிக்கை மனுவை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அளித்தார்கள்.*

*கர்நாடக முதலமைச்சர், பாரதப் பிரதமருக்கு 10–6–2014 அன்று அளித்த கோரிக்கை மனுவில், காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழுவை அமைக்கக் கூடாது என கோரிக்கை விடுத்தார். அடுத்து, 1956 ஆம் ஆண்டைய பன்மாநில நதிநீர் தாவா சட்டத்தின்படி, நடுவர் மன்ற இறுதி ஆணை மத்திய அரசிதழில் வெளியிடப்பட்ட பின் அது உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பாணைக்கு ஒப்பாகும் என்பதால், மேற்படி அமைப்புகளை உடனடியாக அமைக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியும், கர்நாடக அரசு தெரிவித்துள்ள கருத்துகளுக்கு எவ்வித முகாந்திரமும் இல்லை என்பதால் அவை நிராகரிக்கப்பட வேண்டுமென்றும் தெரிவித்து, இவ்விரு அமைப்புகளையும் உடன் அமைக்கும்படி மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களை 13–6–2014 அன்று மீண்டும் கேட்டுக்கொண்டார்கள்.*

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2014 டிசம்பர் 5

பிற்பகல் 3–35

இதற்கிடையில் கர்நாடக அரசு மேகதாது என்னுமிடத்தில் புதிய அணைகளைக் கட்டப் போவதாக செய்திகள் பத்திரிகைகளில் வெளிவந்தன. கர்நாடக அரசு ஏற்கெனவே தன்னிச்சையாக சிவசமுத்திரம் மற்றும் மேகதாது நீர் மின் திட்டங்களைச் செயல்படுத்தப்போவதாக அறிய வந்தபோது, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 30–3–2012 அன்று இம்மாமன்றத்தில் இதே பிரச்சினை குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் கொண்டுவந்த சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்குப் பதிலளித்து ஆற்றிய உரையில், கர்நாடக அரசு காவேரி ஆற்றின் குறுக்கே மேகதாது என்ற இடத்தில் தமிழ்நாட்டின் இசைவு பெறாமல் புதிய அணையைக் கட்ட இயலாது என்றும், அவ்வாறு கர்நாடக அரசு முயற்சிக்குமேயானால் தமிழகம் அதனை எந்தச் சூழ்நிலையிலும் அனுமதிக்காது என்றும் அறிவித்ததைப் பேரவை உறுப்பினர்களுக்கு நான் நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

காவேரிப் படுகையில் கர்நாடகத்தின் கிருஷ்ணராஜசாகர் நீர்த்தேக்கத்திற்கும், தமிழ்நாட்டின் மேட்டூர் நீர்த்தேக்கத்திற்கும் இடையில் உள்ள ஆற்றுப் பகுதியில் நீர்மின் நீர்த்தேக்கங்கள் அமைக்க ஏதுவாக நிலமட்ட சரிவு அமைந்துள்ளது. இதனைப் பயன்படுத்த தமிழ்நாடு ஒகேனக்கல் நீர்மின் திட்டமும், கர்நாடகம் மேகதாது நீர்மின் திட்டமும் செயல்படுத்த திட்டங்கள் பல ஆண்டுகளுக்கு முன்பே தயாரிக்கப்பட்ட போதிலும், பன் மாநில நதிநீர் தாவா நிலுவையில் இருந்ததால், இத்திட்டங்களைச் செயல்படுத்த முடியவில்லை.

மத்திய அரசு, 1998 ஆம் ஆண்டு ஒரு ஒட்டுமொத்த திட்டத்தை இரு மாநிலங்களின் பரிசீலனைக்கு அனுப்பியது. இதன்படி நான்கு நீர்மின் திட்டங்கள், கர்நாடகத்தில் சிவசமுத்திரம் மற்றும் மேகதாது திட்டங்கள், அதற்குக்கீழ் தமிழ்நாட்டில் இராசிமணல் மற்றும் ஒகேனக்கல் திட்டங்கள் ஆகியவற்றை தேசிய நீர்மின் கழகத்தின் மூலம் சுமார் 1,150 மெகா வாட் மின் உற்பத்தி செய்யும் வகையில் செயல்படுத்தலாம் என்று மத்திய அரசு உத்தேசித்தது. மேற்கூறிய



2014 டிசம்பர் 5] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

மின் திட்டங்கள் தேசிய நீர்மின் கழகம் கட்டி முடித்து செயல்படுத்தவும், பராமரிக்கவும் வகை செய்யப்பட்டது.

கர்நாடகமும், தமிழக அரசும் இதனை ஏற்றுக்கொண்டதன் அடிப்படையில், ஒரு வரைவு புரிந்துணர்வு ஒப்பந்தமும் தயாரிக்கப்பட்டது. இதனிடையே, கர்நாடக அரசு, நடுவர் மன்றத்தில் ஒரு தாக்கீது மூலம் இத்திட்டங்களுக்கான கள ஆய்வுப் பணிகளை தேசிய நீர்மின் கழகம் மேற்கொள்ள தங்கள் அரசு ஒப்புதல் அளித்துள்ளது என்று கர்நாடக அரசு தெரிவித்தது. தமிழக அரசும் இத்திட்டங்களை ஒட்டுமொத்தமாக தேசிய நீர்மின் கழகம் நிறைவேற்ற ஒப்புதல் அளித்தது. தேசிய நீர்மின் கழகம் இத்திட்டங்களைச் செயல்படுத்துவதற்கான வரைவு ஒப்பந்தம் ஒன்றைத் தயாரித்து, இரு மாநிலங்களுக்கும் அனுப்பியது. இதில் சில மாற்றங்களுடன், முக்கியமாக இந்த ஒப்பந்தம் நிரந்தரமானது என்றும் நான்கு நீர்மின் திட்டங்களை இரண்டு கட்டமாக, அதாவது கர்நாடகப் பகுதியிலே இருக்கின்ற சிவசமுத்திரம் மற்றும் தமிழகம் பகுதியில் இருக்கின்ற ஒகேனக்கல் திட்டங்கள் முதல் கட்டமாகவும், மேகதாது, இராசிமணல் திட்டங்கள் இரண்டாவது கட்டமாகவும் செயல்படுத்தலாம் என்று கூறி, தமிழக அரசு வரைவு ஒப்பந்தத்திற்கு 2004 ஜூலைத் திங்களில் இசைவு தெரிவித்தது.

காவேரி நடுவர் மன்றம், 1956 ஆம் ஆண்டைய பன்மாநில நதிநீர் தாவா சட்டம் 5(2) பிரிவின்படி, 5–2–2007 அன்று அளித்த தனது இறுதி ஆணையில் இந்த நீர்மின் திட்டங்களைக் கருத்தில்கொண்டு கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டுள்ளது:

“(XII) மாநிலங்களின் பொது எல்லையில் கர்நாடக அரசும், தமிழ்நாடு அரசும் சில நீர் மின் திட்டங்களை அமைக்க தேசிய நீர்மின் கழகத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகக் கூறியுள்ளன. இந்நிலையில் மேற்கூறிய திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு, நீர்த்தேக்கங்களில் நீர் தேக்க ஆரம்பித்தவுடன், கீழ் மாநில பாசன உரிமை பாதிக்காத வகையில் மாதாந்திர அடிப்படையிலும் நடுவர் மன்றம் கூறியுள்ள அளவுபடியும் நீர் வெளியேற்ற விதிமுறைகள் அமைக்க வேண்டும்.” என்று கூறியிருந்தது.

நடுவர் மன்ற இறுதி ஆணை வந்தவுடன், கர்நாடக அரசு சட்டப் பிரிவு 5 (3)–ன்படி ஒரு மனுவை நடுவர் மன்றத்தில் தாக்கல் செய்தது. இதன்படி கர்நாடகத்தில் அமையும் இரு நீர்

மின் திட்டங்கள் (சிவசமுத்திரம் மற்றும் மேகதாது) அதன் எல்லைப் பகுதிகளில் அமைந்துள்ளன என்றும், இந்த நீர் மின் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டால்தான் நடுவர் மன்றத்தின் ஆணையின்படி தமிழ்நாட்டிற்கு மாதாந்திர அடிப்படையில் குறிப்பிட்டுள்ள நீர் அளவை வழங்குவது சாத்தியமாகும். எனவே தேசிய நீர் மின் கழகத்துடன் நடத்திவரும் பேச்சுவார்த்தைகள் கர்நாடகத்திற்கு இசைவாக அமையவில்லை என்றால், மேகதாது நீர் மின் திட்டத்தை கர்நாடகமே தன்னிச்சையாகச் செயல்படுத்தலாம் என்று விளக்கம் அளிக்க வேண்டும் என்று கோரியுள்ளது. இம்மனு நடுவர் மன்றத்தில் நிலுவையில் உள்ளது.

இந்நிலையில், கர்நாடக அரசு, சிவசமுத்திரம் ஆற்றுப்போக்கு நீர் மின் திட்டம் மற்றும் மேகதாது நீர் மின் திட்டத்தைத் தன்னிச்சையாகச் செயல்படுத்த முயற்சிகள் மேற்கொள்வதாக நாளேடுகளில் செய்திகள் வந்தன. இதன் அடிப்படையில், கர்நாடகம் தன்னிச்சையாக இந்த இரு மின் திட்டங்களையும் எடுத்துக்கொள்ளக்கூடாது என்றும், அப்பகுதியில் அமையும் நான்கு நீர்மின் திட்டங்களும், தேசிய நீர்மின் திட்டக் கழகம் போன்ற ஒரு நடுநிலையான துறையினால்தான் செயல்படுத்தப்பட வேண்டும் என்றும் கூறி, தமிழ்நாடு உச்ச நீதிமன்றத்தில் ஒரு மனுவைத் (I.A.) தாக்கல் செய்தது. கர்நாடகம் மீண்டும் சிவசமுத்திரம் ஆற்றுப்போக்கு நீர்மின் திட்டத்தை உடனடியாகச் செயல்படுத்த முயற்சிப்பதாக செய்திகள் வந்ததின்பேரில், மற்றொரு மனுவையும் (Additional Affidavit) உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசு தாக்கல் செய்துள்ளது. இம்மனுக்கள் உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளன.

பிற்பகல் 3–40

மாநில அரசுகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ள மேல்முறையீட்டு மனுக்கள் உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள நிலையில், கர்நாடக அரசு, காவேரி நீரவாரி நிகமம் என்ற அமைப்பின் வாயிலாக மேகதாது நீர்மின் திட்டம் மற்றும் வேறு பல திட்டங்களை எடுத்துக்கொள்வதாக பத்திரிகையில் செய்தி வந்ததையடுத்து, இத்திட்டங்களை தமிழக அரசின் முன் அனுமதியின்றி எடுத்துக்கொள்ள வேண்டாமென கர்நாடகத்திற்கு அறிவுரை வழங்கவும், காவேரி மேலாண்மை வாரியம் நிரந்தரமாக அமைக்கப்பட்டு செயல்படும்வரை கர்நாடகத்தின் எந்தத்





திட்டத்திற்கும் அனுமதி வழங்குவதை நிறுத்தி வைக்கும்படி மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வன அமைச்சகத்திற்கு அறிவுரை வழங்கவும் கோரி, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அன்றைய பாரதப் பிரதமர் அவர்களை 2–9–2013 மற்றும் 3–9–2013 அன்று வலியுறுத்திக் கேட்டுக்கொண்டார்கள். இதைத் தொடர்ந்து, கர்நாடக தலைமைச் செயலாளர் அவர்களுக்கும், மத்திய நீர் வளத் துறை செயலாளர் அவர்களுக்கும் முறையே 6–9–2013 மற்றும் 17–9–2013 அன்று கடிதங்கள் அனுப்பப்பட்டன.

மத்திய நீர் வள அமைச்சகம் 7–10–2013 அன்று அனுப்பிய பதில் கடிதத்தில், சிவசமுத்திரம் மற்றும் மேகதாது திட்டங்களுக்கான விரிவான திட்ட அறிக்கை ஏதும் தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒப்புதல் கோரி மத்திய நீர் வளக் குழுமத்திற்கு கர்நாடக அரசிடமிருந்து வரப் பெறவில்லை எனவும், காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகியவற்றை அமைக்க, மத்திய சட்டம் மற்றும் நீதித் துறையின் ஆலோசனையுடன் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தது. மீண்டும், 9–10–2013 அன்று இத்திட்டங்களின் விரிவான அறிக்கைகளை வழங்கவும், மேல்முறையீட்டு மனுக்களில் தீர்வு காணும்வரை இத்திட்டங்களை மேற்கொள்ளாதிருக்கும்படி கர்நாடகத்திற்கு அறிவுரை வழங்கக் கோரி மத்திய அரசுக்குக் கடிதம் அனுப்பப்பட்டது.

காவேரி நதியானது ஒரு பன்மாநில நதி என்பதால், கீழ்ப்படுகை மாநிலமான தமிழ்நாட்டின் இசைவு பெறாமலும், மத்திய அரசின் ஒப்புதல் பெறாமலும் கர்நாடக அரசு எந்தப் புதிய திட்டத்தையும் மேற்கொள்ள இயலாது.

கர்நாடக அரசு ஹேமாவதி மற்றும் கிருஷ்ணராஜசாகர் அணைகளிலிருந்து கிடைக்கக்கூடிய உபரி நீரை குடிநீர் வழங்கலுக்காக உபயோகப்படுத்தப் போவதாகத் தெரிய வந்தவுடன், புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள் தமிழ்நாட்டின் இசைவில்லாமல் கர்நாடக அரசு எந்த ஒரு திட்டத்தையும் செயல்படுத்தக்கூடாது எனவும், மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வன அமைச்சகம் கர்நாடகாவின் எந்த ஒரு திட்டத்திற்கும் காவேரி மேலாண்மை வாரியம் அமைக்கப்படும் வரையில் அனுமதி அளிக்கக்கூடாது எனவும் 2–9–2013 ஆம் நாளிட்ட கடிதத்தின் வாயிலாக பாரதப் பிரதமர் அவர்களைக் கேட்டுக்கொண்டார்கள்.

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2014 டிசம்பர் 5

கர்நாடக அரசு காவேரி நீரவாரி நிகமம் என்ற அமைப்பின் வாயிலாக அர்காவதி நதியை புனரமைத்தல் மற்றும் ஹேமாவதி கால்வாய்களை நவீனப்படுத்துதல் போன்றவற்றிற்காக ஒரு விரிவான திட்ட அறிக்கையைத் தயாரிக்கும்பொருட்டு விருப்பம் கோரும் அறிவிப்பை (Expression of Interest) கோரியுள்ள விவரம் பத்திரிகைகளில் வெளிவந்தபோது, புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள் 3–9–2013 அன்று பாரதப் பிரதமர் அவர்களுக்கு அனுப்பிய கடிதத்தில் கர்நாடகாவின் இத்தகைய செயலை காவேரி மேலாண்மை வாரியம் அமைக்கும் வரையில் நிறுத்தி வைக்குமாறும், ஏற்கெனவே கோரப்பட்டுள்ள அறிவிப்பை நிறுத்தி வைக்குமாறும் மற்றும் வேறு எந்த ஒரு திட்டத்திற்கும் இத்தகைய அறிவிப்பைக் கோராமல் இருக்குமாறும் கர்நாடக அரசிற்கு அறிவுறுத்துமாறு கேட்டுக்கொண்டார்கள். மேலும், இந்தத் திட்டங்களைத் தவிர, கர்நாடக அரசு, காவேரி நீரவாரி நிகமம் என்ற அமைப்பின் மூலமாக, பல நவீனமயமாக்கும் திட்டங்கள் மற்றும் இறைவைத் திட்டங்களை (Lift Irrigation works), அதாவது குளங்களை நிரப்பி, குடிநீர்த் தேவைக்குப் பயன்படுத்தும் வகையில் திட்டங்களை எடுத்துக்கொள்வதாக பத்திரிகையில் செய்தி வந்ததை அடுத்து, இத்திட்டங்களின் முழு விவரங்களை வழங்கவும், காவேரி பற்றிய வழக்குகள் முடிவடைந்து காவேரி மேலாண்மை வாரியம் அமைக்கும்வரை இத்திட்டங்கள் பற்றிய ஒப்பந்தப்புள்ளி அறிக்கைகளை (Tender Notices) நிறுத்தி வைக்க அறிவுரை வழங்கும்படி 17–3–2014 அன்று மத்திய அரசிற்குக் கடிதம் அனுப்பப்பட்டது. அதேபோன்று கர்நாடக அரசிற்கும் கடிதம் அனுப்பப்பட்டது.

இக்கடிதங்களுக்குப் பதில் வராததால், புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களது ஆணைப்படி, காவேரி மேலாண்மை வாரியம் அமைக்கும் வரையிலும் தமிழகத்தின் அனுமதியில்லாமலும் இத்திட்டங்களை கர்நாடகம் மேற்கொள்ள தடை விதிக்கக் கோரியும், மேல்முறையீட்டு மனுக்களில் தீர்வு ஏற்பட்டு காவேரி மேலாண்மை வாரியம் அமைக்கும் வரையிலும் தற்போதைய நிலை கடைப்பிடிக்க வேண்டுமென கர்நாடக அரசுக்கு உத்தரவு வழங்கவும் கோரி ஒரு மனுவை உச்ச நீதிமன்றத்தில் 11–4–2014 அன்று தமிழக அரசு தாக்கல் செய்துள்ளது.



2014 டிசம்பர் 5] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

பிற்பகல் 3–45

நிலைமை இவ்வாறு இருக்கும்பொழுது, கர்நாடக அரசு, நீர் மின் திட்டங்கள் பற்றி ஏதும் தெரிவிக்காமல் குடிநீர்த் திட்டம் என்ற போர்வையில், மேகதாது என்னுமிடத்தில் புதிதாக இரண்டு அணைகள் கட்ட உள்ளதாகவும், இதற்கென, தொழில்நுட்ப சாத்திய அறிக்கை தயார் செய்வதற்காக "விருப்பம் கோரும் அறிவிப்பை (Expression of Interest)" கோரியுள்ளது எனவும் செய்திகள் வந்ததையடுத்து, மாண்புமிகு பிரதமர் அவர்கள் இப்பிரச்சினையில் தலையிட்டு கர்நாடக அரசின் இத்தகைய நடவடிக்கையை நிறுத்தி வைக்கவும் மற்றும் எந்த ஒரு பாசன, நீர் மின், நீரேற்றுப் பாசனத் திட்டங்கள் மற்றும் குடிநீர் வழங்கல் என்ற போர்வையின் அடிப்படையில் எந்தவொரு திட்டத்தையும் கர்நாடக அரசு தமிழ்நாட்டின் இசைவு பெறாமல் எடுத்துக்கொள்ளக்கூடாது என்று கர்நாடக அரசிற்கு அறிவுரை வழங்குமாறும், 12–11–2014 அன்று பாரதப் பிரதமர் அவர்களுக்குக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. மேலும், தமிழ்நாட்டின் இசைவு பெறாமல் கர்நாடக அரசின் எந்த ஒரு திட்டத்திற்கும் மத்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வனங்கள் அமைச்சகம் மற்றும் நீர் ஆதார அமைச்சகம், ஒப்புதல் அளிக்கக்கூடாது என அவ்வமைச்சகங்களுக்கு அறிவுறுத்தும்படி அக்கடிதத்தில் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

கர்நாடக அரசு இவ்வாறு புதிய அணைகள் கட்டுவது தொடர்பாகக் கோரியுள்ள தொழில்நுட்ப ஆய்விற்கான "விருப்பம் கோரும் அறிவிப்பை (Expression of Interest)" நிறுத்திவைத்தும், அதன்மீது மேல் நடவடிக்கை ஏதும் தொடரக்கூடாது எனவும் மற்றும் குடிநீர் வழங்கல் திட்டம் என்பதன்பேரில் பாசன, நீர் மின் மற்றும் ஏனைய திட்டங்களைக் கர்நாடக அரசு தமிழ்நாட்டின் இசைவு பெறாமல் செயல்படுத்தக்கூடாது என அவ்வரசிற்கு 12–11–2014 அன்று கடிதம் அனுப்பப்பட்டது.

மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனங்கள் அமைச்சகம் மற்றும் மத்திய நீர் ஆதார அமைச்சகம் கர்நாடகாவின் திட்டங்களுக்கு தமிழ்நாட்டின் இசைவு பெறாமல் அனுமதி வழங்கக்கூடாது எனக் கேட்டுக்கொண்டு 13–11–2014 அன்று மத்திய நீர் ஆதார அமைச்சகத்திற்குக் கடிதம் ஒன்று அனுப்பப்பட்டுள்ளது.

கர்நாடக அரசு இரண்டு அணைகள் கட்டக் கோரியுள்ள தொழில்நுட்ப ஆய்விற்கான விருப்பம் கோரும் அறிவிப்பை (Expression of Interest) திரும்பப் பெற வேண்டுமெனவும், கர்நாடகா–

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2014 டிசம்பர் 5

காவேரி படுகைப் பகுதிகளில் காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணையில் குறிப்பிட்டுள்ள திட்டங்களுக்கு மாறாக இவ்விரு அணைகளைக் கட்டும் பணிகளையோ அல்லது வேறு எந்த புதிய திட்டங்களையோ கர்நாடக அரசு மேற்கொள்ளக்கூடாது எனவும்; காவேரி மேலாண்மை வாரியம் அமைக்கப்படும் வரையிலும் மற்றும் உச்ச நீதிமன்றத்தில் உள்ள வழக்குகள் முடிவுக்கு வரும்வரையிலும் தற்போதைய நிலையே தொடர வேண்டும் என்றும் ஆணை வழங்குமாறு உச்ச நீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு 18–11–2014 அன்று இடைக்கால மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளது.

கர்நாடக அரசு, அதன் 18–11–2014 ஆம் நாளிட்ட கடிதத்தில், ஏற்கெனவே நிலுவையில் உள்ள இடைக்கால மனுவில் உச்ச நீதிமன்றத்திற்குத் தெரிவிக்காமல் இந்தத் திட்டத்தை நிறைவேற்றப் போவதில்லை என்று தெரிவித்துள்ளது.

கர்நாடக அரசின் செயலைப் போன்றே, கேரள அரசும் காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணையை மீறும்வகையில் பல்வேறு அணைகள் கட்டும் திட்டங்களைச் செயல்படுத்தப்போவதாக பத்திரிகைகளில் செய்திகள் அவ்வப்போது வெளிவந்தன. அவற்றில் அண்மையில், கேரள அரசு, பாம்பாற்றின் குறுக்கே, பட்டிசேரி என்ற இடத்தில் 2 டி.எம்.சி. அடி கொள்ளளவு உள்ள ஓர் அணையைக் கட்டுவதற்கு பணிகள் துவக்கியுள்ளதாகவும், இதற்கு, கேரள முதலமைச்சர், 3–11–2014 அன்று காணொலி காட்சி வழியாக அடிக்கல் நாட்டியுள்ளதாகவும், 6–11–2014 அன்று பத்திரிகைகளில் செய்திகள் வந்தவுடன், பாரதப் பிரதமருக்கு 8–11–2014 அன்று கேரளாவின் இத்தகைய திட்டம் காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணையை மீறும் செயலாகும் என்றும், எந்தவொரு புதிய திட்டமும் காவேரி மேலாண்மை வாரியத்தின் ஒப்புதலுடனும், தமிழ்நாட்டின் முன்இசைவும் பெற்ற பின்னரே செயல்படுத்தப்பட வேண்டும். எனவே, பாரதப் பிரதமர் அவர்கள் இப்பிரச்சினையில் தலையிட்டு பாம்பாற்றின் குறுக்கே பட்டிசேரி எனும் இடத்தில் அணை கட்டும் பணிகளை கேரள அரசு மேற்கொள்ளக்கூடாது எனவும், மற்றும் வேறு எந்தத் திட்டத்தையும் எடுத்துச் செயல்படுத்தக்கூடாது எனவும், கேரள அரசுக்கு அறிவுறுத்தும்படி கடிதம் ஒன்றை நான் அனுப்பியுள்ளேன். மேலும், இக்கடிதத்தில், கேரள அரசு, பாம்பாறு உப படுகையில் கட்ட உத்தேசித்துள்ள அணைகள் பற்றிய அனைத்து விவரங்களைத் தமிழகத்திற்கு அளிக்க வேண்டும் எனவும், மற்றும் காவேரி மேலாண்மை



2014 டிசம்பர் 5] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

வாரியம் ஏற்படுத்தப்பட்டபின் தமிழ்நாட்டின் இசைவு பெற்ற பின்னரே இத்தகைய திட்டங்களைக் கேரள அரசு மேற்கொள்ள வேண்டும் என அறிவுரை வழங்குமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

*பிற்பகல் 3–50*

இதேபோன்று, கேரள அரசுக்கு 8–11–2014 அன்றும், மத்திய நீர் ஆதாரத் துறை அமைச்சகத்திற்கு 13–11–2014 அன்றும் கடிதங்கள் அனுப்பப்பட்டன.

கேரள அரசு மற்றும் மத்திய அரசிடமிருந்து பதில் வராத நிலையில், பாம்பாற்றின் குறுக்கே கேரள அரசு பட்டிசேரியில் அணை கட்டும் பணிகளை நிறுத்தி வைக்குமாறும், காவேரி மேலாண்மை வாரியம் அமைக்கப்படும் வரையிலும் மற்றும் உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள சிவில் வழக்குகள் முடிவுக்கு வரும் வரையிலும் தற்போதைய நிலையே தொடர வேண்டும் என கேரள அரசிற்கு உத்தரவிடுமாறும் கோரி, உச்ச நீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு இடைக்கால மனு ஒன்றை 28–11–2014 அன்று தாக்கல் செய்துள்ளது.

இந்தச் சூழ்நிலையில், காவேரி நடுவர் மன்றத்தின் 5–2–2007 ஆம் நாளிட்ட இறுதி ஆணை, புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களின் தீவிர முயற்சிகளாலும், உச்ச நீதிமன்றத்தின் தலையீட்டாலும் மத்திய அரசு அதன் அரசிதழில் 19–2–2013 அன்று இந்த இறுதி ஆணையை வெளியிட்டபோதிலும், அவ்வாணையை செவ்வனே செயல்படுத்த ஒரு நிரந்தர ஏற்பாடாக காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகிய அமைப்புகளை இன்னமும் ஏற்படுத்தவில்லை. எனவே, காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகிய அமைப்புகளை உடன் ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் எனவும்; மேலும், கர்நாடகா மற்றும் கேரளா அரசுகள் எந்த ஒரு திட்டத்தையும் காவேரி மேலாண்மை வாரியம் அமைக்கப்படும் வரையிலும் தமிழ்நாட்டின் இசைவினைப் பெறாமலும் மேற்கொள்ளக்கூடாது எனவும் மற்றும் கர்நாடகா, கேரளா அரசுகளின் எத்தகைய திட்டங்களுக்கும் மத்திய நீர் ஆதார அமைச்சகம் தொழில்நுட்ப ரீதியான அனுமதி வழங்கக்கூடாது எனவும்; மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனங்கள் அமைச்சகம்

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2014 டிசம்பர் 5

அத்தகைய திட்டங்களுக்கு தமிழ்நாட்டைக் கலந்தாலோசிக்காமல் அனுமதி வழங்கக்கூடாது எனவும் வலியுறுத்தும் பின்வரும் தீர்மானத்தை இந்த மாமன்றத்தில் முன்மொழிகிறேன். இதனை நிறைவேற்றித் தரும்படி மாண்புமிகு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**தீர்மானம்**

*"காவேரி நடுவர் மன்றத்தின் 5–2–2007 ஆம் நாளிட்ட இறுதி ஆணை, புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களின் பெரும் முயற்சியால் 19–2–2013 அன்று மத்திய அரசிதழில் வெளியிடப்பட்ட போதிலும், காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகிய அமைப்புகள் இதுவரை அமைக்கப்படவில்லை. எனவே, காவேரியில் தமிழகத்திற்கு உரிய நீர் இந்த இறுதி ஆணையில் குறிப்பிட்டுள்ளபடி, மாதாந்திர வாரியாக பெறுவதற்கு ஏதுவாக, காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகியவற்றை உடனடியாக மத்திய அரசு அமைக்க வேண்டும் என்றும்; காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணைக்கு முரணான வகையில் கர்நாடக அரசு மேகதாதுவில் இரண்டு புதிய அணைகள் கட்ட முயற்சிப்பதையும், குடிநீர் வழங்கல் என்ற போர்வையில் காவேரி நீரவாரி நிகமம் வாயிலாக மேற்கொண்டுள்ள திட்டங்களையும், தடுத்து நிறுத்தத் தேவையான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொள்ள வேண்டும் என்றும்; காவேரி மேலாண்மை வாரியம் செயலாக்கத்திற்கு வரும் வரையிலும் மற்றும் தமிழ்நாட்டின் அனுமதியின்றியும் மேகதாதுவில் அணைகள் கட்டும் திட்டம் போன்ற எந்த ஒரு திட்டத்தையும் கர்நாடகம் செயல்படுத்த முனையக்கூடாது என்று கர்நாடக அரசுக்கு உரிய அறிவுரைகளை மத்திய அரசு வழங்க வேண்டும் என்றும்; பாம்பாற்றின் குறுக்கே பட்டிசேரி என்னுமிடத்தில் புதிய அணை கட்டும் எந்தப் பணியையும் கேரள அரசு மேற்கொள்ளக் கூடாது எனவும்; காவேரி மேலாண்மை வாரியம் செயலாக்கத்திற்கு வரும் வரையிலும் மற்றும் தமிழ்நாட்டின் அனுமதியின்றியும் எந்த ஒரு திட்டத்தையும் கேரளா செயல்படுத்த முனையக்கூடாது என்றும், கேரள அரசுக்கு உரிய அறிவுரைகளை மத்திய அரசு வழங்க வேண்டும் என்றும்; கர்நாடக, கேரள அரசுகளின் எத்தகைய திட்டங்களுக்கும் மத்திய நீர் ஆதார அமைச்சகம் தொழில்நுட்ப ரீதியான அனுமதி வழங்கக்கூடாது என்றும்; மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனங்கள் அமைச்சகம் அத்தகைய திட்டங்களுக்கு தமிழ்நாட்டைக் கலந்தாலோசிக்காமல் அனுமதி வழங்கக்கூடாது என்றும் மத்திய அரசை இந்த மாமன்றம் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது."* *(மேசையைத் தட்டும் ஒலி)*



2014 டிசம்பர் 5] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேரத்தின் அருமை கருதி இனிமேல் பேசும் உறுப்பினர்கள் இரண்டு தீர்மானங்களின் மீதும் சேர்த்தே பேசலாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நாராயணன் அவர்கள்.

*பிற்பகல் 3–55*

**திரு. ஆ. நாராயணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டு முன்மொழியப்பட்ட அரசினர் தனித் தீர்மானங்களை அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் சார்பாக வழிமொழிகிறேன்.

இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரத்தைச் சேர்ந்த ஐந்து மீனவர்கள் கடந்த 28–11–2011 அன்று மீன் பிடிக்கச் சென்றபோது, இராமேஸ்வரம் மீன் பிடித் தளத்திலிருந்து புறப்பட்டுச் சென்று, தங்களது பாரம்பரிய மீன் பிடிப் பகுதியில் மீன் பிடித்துக் கொண்டிருக்கும்போது, இலங்கைக் கடற்படை அவர்களைக் கைது செய்தது. இலங்கை அரசால் புனையப்பட்ட வழக்குகளிலிருந்து அவர்கள் விடுதலை பெறுவதற்காக சட்ட நடவடிக்கை மேற்கொள்ள மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டது. இந்த ஐந்து மீனவர்களின் குடும்பத்திற்கும் மாதந்தோறும் உதவித் தொகையாக ரூ.7,500 வழங்கப்பட்டது.

30–10–2014 அன்று கொழும்பு உயர் நீதிமன்றம் இந்த ஐந்து அப்பாவி மீனவர்களுக்கும் மரண தண்டனை வழங்கியது. இலங்கை நீதிமன்றத்தில் அவர்களின் விடுதலைக்காக மேல்முறையீடு செய்திட உரிய நடவடிக்கைகள் எடுக்கவும், இராஜ்ஜிய நடவடிக்கைகள்மூலம் அவர்களை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்க புரட்சித் தலைவி அம்மா அவர்களும், தமிழக அரசும் இந்தக் கோரிக்கையை மத்திய அரசுக்கு வைத்தனர். மத்திய அரசு மேற்கொண்ட இராஜ்ஜிய நடவடிக்கைகள் காரணமாக,

இந்த ஐந்து மீனவர்களும் 19–11–2014 அன்று விடுவிக்கப்பட்டு, 20–11–2014 அன்று தாயகம் திரும்பினார்கள். ஐந்து மீனவர்களின் வழக்கு செலவிற்காகவும், அவர்கள் சிறையில் இருந்தபோது அவர்கள் குடும்பத்தினரின் வாழ்வாதாரத்திற்காகவும், அந்த மீனவர்கள் இந்தியா திரும்பிய பின்னர் புதுவாழ்வு தொடங்குவதற்காகவும் மொத்தம் ரூ.63,85,000 ரூபாய் வழங்கிய புரட்சித் தலைவி அம்மா அவர்களை அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி மனமார வரவேற்கின்றது.

அதுமட்டுமல்லாமல், இலங்கை சிறையில் வாடிக் கொண்டிருக்கும் 38 மீனவர்கள் உடன் விடுவிக்கப்படவேண்டும் என்றும், அதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும் மத்திய அரசை இந்தச் சபை கேட்டுக்கொண்டிருக்கிறது. மேலும், 79 மீன் பிடிப் படகுகளை விடுவித்திட தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று மத்திய அரசை வலியுறுத்தும் தீர்மானம் இங்கே முன்மொழியப்பட்டிருக்கிறது. தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் தொடர்ந்து சிறைப்பிடிக்கப்படுவதற்கு முக்கிய காரணம் கச்சத் தீவு இலங்கைக்குத் தாரை வார்க்கப்பட்டது. தமிழக மீனவர்கள் எவ்வித இன்னலுமின்றி தங்களது வாழ்வாதாரத்தை மேற்கொள்ள ஏதுவாக கச்சத் தீவைத் திரும்பப் பெற வேண்டுமென்று இங்கே தீர்மானம் முன்மொழியப்பட்டிருக்கிறது. அதனை வரவேற்கின்றோம்.

அதேபோல, இனிவரும் காலங்களிலே எந்தவித இடையூறுமின்றி தமிழக மீனவர்கள் மீன்பிடித் தொழில் செய்வதற்கு இம்மன்றத்தின்மூலம் வலியுறுத்துவதை நாங்கள் ஆதரிக்கின்றோம்.

தீர்மானம் இரண்டில், காவேரி நடுவர் மன்றம் 5–2–2007 ஆம் நாளிட்ட இறுதி ஆணையில், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எடுத்த பெருமுயற்சியால், 19–2–2013 அன்று மத்திய அரசிதழில் வெளியிடப்பட்டபோதிலும், காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் ஒழுங்குமுறைப்படுத்தும் குழுவை உடனடியாக அமைக்க வேண்டும். காவேரியில் தமிழகத்திற்கு உரிய நீர் இந்த இறுதி ஆணையில் குறிப்பிட்டபடி, மாதாந்திர வாரியாகப் பெறுவதற்கு ஏதுவாக காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் ஒழுங்குமுறைப்படுத்தும் குழு இதுவரை





அமைக்கப்படவில்லை. அதை அமைக்க வேண்டுமென்றும், காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணைக்கு முரணானவகையில், கர்நாடக அரசு மேகதாதுவில் இரண்டு புதிய அணைகள் கட்ட முயற்சிப்பதையும், குடிநீர் வழங்கல் என்ற போர்வையில் காவேரி ஆற்றில் மேற்கொண்ட திட்டங்களைத் தடுத்து நிறுத்தத் தேவையான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொள்ள வேண்டுமென்றும், காவேரி மேலாண்மை வாரியம் செயலாக்கத்திற்கு வரும் வரையிலும் தமிழ்நாட்டின் அனுமதியின்றி மேகதாதுவில் அணைகள் கட்டும் திட்டம் போன்ற எந்த ஒரு திட்டத்தையும் கர்நாடகம் செயல்படுத்த முனையக்கூடாது என்று கர்நாடக அரசுக்கு உரிய அறிவுரைகளை மத்திய அரசு வழங்க வேண்டும்.

ஏற்கெனவே 192 டி.எம்.சி. அடி தண்ணீர் தர வேண்டிய சூழ்நிலையில், அதையே சரிவரத் தராத சூழ்நிலையில், மேலும் இரண்டு அணைகள் காவேரியில் கட்டி, அதன்மூலம் 48 டி.எம்.சி. அடி தண்ணீர் தேக்குவதற்கு கர்நாடக அரசு ஏற்பாடு செய்கின்றது என்பதை அறிகின்றோம். இந்தச் செயல் நமது விவசாயப் பெருமக்களைப் பாதிக்கும் என்பதில் எந்தவித ஐயமும் இல்லை. எனவே, மத்திய அரசு இந்த முயற்சியைத் தடுக்க வேண்டுமென்று கூறி, இந்தத் தீர்மானத்தை வரவேற்று இந்த அரிய வாய்ப்பை வழங்கிய எங்கள் சமத்துவ மக்கள் கட்சியின் தலைவருக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் நன்றியைக் கூறி அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.

**முனைவர் செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவேரி நதி நீர் மேலாண்மை வாரியம், காவேரி நதி நீரைப் பெற முறையிடுகின்ற, பங்கிடுகின்ற அந்தக் குழு இரண்டையும் உடனடியாக மத்திய அரசு அமைத்திட வேண்டும். காவேரி நதிநீர்ப் பிரச்சினைக்கு விரைந்த தீர்வு காண வேண்டும் என்பதை வலியுறுத்தி இந்த அவையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் முன்மொழியப்பட்டுள்ள அரசினர் தீர்மானத்தை நான் மகிழ்ச்சியோடு வரவேற்று வழிமொழியக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

*பிற்பகல் 4—00*

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தனது உரையில் குறிப்பிட்டதைப்போன்று, சிலப்பதிகாரம் படைத்த இளங்கோவடிகள், காவேரி நதியின் வெள்ளோட்டத்தைப் பார்த்து, வியந்து பாராட்டி, "நடந்தாய், வாழி காவேரி" என்று எழுதினார். இன்றைக்கு, இளங்கோவடிகள் இருந்திருந்தால், "காலுடைந்தாய், அய்யோ காவேரி" என்று கண்ணீர்விட்டு கதறியிருப்பார். அப்படிப்பட்ட நிலையில்தான் காவேரி இருக்கிறது. கர்நாடகம், தனது எல்லை மீறிய வகையில், தனக்கு இருக்கிற அதிகார வரம்புகளையெல்லாம் மீறி செயல்படுகின்ற வகையில் மேகதாது பகுதியில் அணை கட்டுவதற்குரிய நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. மேலும், காவேரி வரத்து நதிநீர்ப் பகுதியின் சில இடங்களில் சில பகுதிகளில் அணை கட்டுவதற்குரிய முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறது.

அதேபோன்று, கேரள அரசு, பாம்பாற்றின் குறுக்கே பட்டிசேரி பகுதியில் அணை கட்டுகிறார்கள். இந்த முயற்சிகளையெல்லாம் தடுத்து நிறுத்த வேண்டிய பெரும் கடமையும் பொறுப்பும் யாருக்கு இருக்கிறதென்றால், மத்திய அரசுக்குத்தான் இருக்கிறது.

காவேரி நதிநீர் தாவா என்பது 70 ஆண்டு காலத் தாவா. இந்த 70 ஆண்டு கால வழக்கில் தமிழகம் மிகக் கடுமையாக முயற்சித்திருக்கிறது. எப்படியெனில், எப்பொழுதெல்லாம் போற்றுதலுக்குரிய மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக்கு வருகிறார்களோ, அப்பொழுதெல்லாம் வழக்கு விரைந்து பயணப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்குப் பிறகு அது முடங்கிப்போகும். மீண்டும், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக்கு வரும்போது, நெருங்கி வருகின்ற, வெற்றியை ஈட்டுகின்ற தருணம் அமையும். மீண்டும் அது முடங்கிப் போகிற நிலைமை வரும். ஆகவேதான், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எதிர்க்கட்சியாக இருந்தபோதும்கூட, அவர்கள் அனைந்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகக் கட்சியின் சார்பாக உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்து, தங்களுடைய கடுமையான போராட்ட உணர்வை வெளிப்படுத்தினார்கள்.

புரட்சித் தலைவி அம்மா அவர்கள், காவேரி நதிநீர்ப் பிரச்சினைக்காக எழுதிய கடிதங்கள் இருக்கிறதே ஏராளம், ஏராளம்.





அந்தக் கடிதங்கள், காவேரியின் நீண்ட வரலாற்றை கண்ணீர் வரலாறாக மாற்றுகின்ற வகையிலும், தமிழகத்தின் உரிமையை நிலைநாட்டுவதற்காக அவர் எடுத்த முயற்சிகளுக்கு சாட்சிகளாகவும் அமைந்துள்ளன. தமிழ் மக்களுடைய இழந்த உரிமைகளைப் பெறுவதற்கு, நிலைநாட்டுவதற்கு, பாரம்பரியப் பெருமைகளை நிலைநாட்டுவதற்கு, வெல்வதற்கு, போற்றுதலுக்குரிய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எடுத்த நடவடிக்கைள் தொடர் நடவடிக்கைகளாக அமைந்திருக்கின்றன. அந்த நடவடிக்கைகளின் தொடர்ச்சியாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இன்று அரசினர் தீர்மானத்தை முன்மொழிந்திருக்கிறார்கள். இந்தத் தருணத்தில் பாலாறு பற்றி நான் குறிப்பிட விரும்புகிறேன். பாலாற்றின் படுகைகளில் ஆந்திர மாநிலம் தன்னிச்சையாக அணை கட்ட முயற்சித்திருக்கிறது. பாலாறு, பாழாறாகப் போய்க்கொண்டிருக்கிறது. ஆலமரங்கள் நிறைந்த ஆற்காடாகவும், வேல மரங்கள் நிறைந்த வேற்காடாகவும், தமிழகத்தின் நெற்களஞ்சியம் தஞ்சை என்றால், இரண்டாவது நெற்களஞ்சியம் வேலூர் மாவட்டம் என்பது மாறி, இன்றைக்கு வெயிலூராக, வறண்ட மாவட்டமாக மாறிக் கொண்டிருக்கிறது. எனவே, அதுகுறித்தும் அரசின் கவனத்தை ஈர்த்து, இந்தத் தீர்மானத்தை வழிமொழிந்து அமைகிறேன். நன்றி, வணக்கம்.

*பிற்பகல் 4—05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. தனியரசு அவர்கள்.

**திரு. உ. தனியரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டினுடைய ஆற்று நீர் உரிமையில் பெரும் வரலாற்றுச் சாதனையைப் படைத்து, கோடிக்கணக்கான தமிழ்நாட்டு விவசாயிகளுடைய நெஞ்சங்களிலெல்லாம் நிறைந்து இருக்கிற, தமிழகத்தினுடைய ஒட்டுமொத்த தமிழ்ச் சமூகத்தினுடைய, உலகளாவிய தமிழ்ச் சமூகத்தினுடைய பேராதரவை, அன்பைப் பெற்று, மாசற்று, மக்களுக்காக அயராது தொண்டாற்றிய புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அயராத கடும் முயற்சியால் காவேரி நடுவர் மன்றத் தீர்ப்பின் இறுதி ஆணை 19—2—2013 அன்று மத்திய அரசிதழில் வெளியிடப்பட்டது. ஆனாலும், இன்று வரை காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகியவற்றை மத்திய அரசு அமைக்கவில்லை; அதற்கான நடவடிக்கையும் இல்லை. இனியும்

[திரு. உ. தனியரசு] [2014 டிசம்பர் 5

தாமதிக்காமல், மத்திய அரசு உடனடியாக காவேரி மேலாண்மை வாரியத்தை அமைத்திட வேண்டும் என்ற இன்றைய தீர்மானத்தையும், தமிழ்நாட்டின் அனுமதியில்லாமல் மேகதாது அணையைக் கட்டும் கர்நாடக அரசின் திட்டத்தைக் கைவிட கர்நாடக அரசுக்கு மத்திய அரசு உரிய அறிவுரைகளை வழங்கிட வேண்டும் எனவும், பாம்பாற்றின் குறுக்கே பட்டிசேரி என்னும் இடத்திலே புதிய அணையைக் கட்டி, கேரளா தொடர்ந்து நம்மை வஞ்சிக்கின்ற இந்த நிலை தொடரக்கூடாது என்பதற்காகவும், தமிழ்நாட்டின் அனுமதியின்றி இதுபோன்ற நீர்ப்பாசனத் திட்டங்களைச் செயல்படுத்தக்கூடாது என கேரளா அரசிற்கு மத்திய அரசு உரிய அறிவுரைகளை வழங்கிட வேண்டுமெனவும், கர்நாடக–கேரள அரசினுடைய இத்தகைய நீர்த்தடுப்புத் திட்டங்களுக்கு மத்திய நீர் ஆதார அமைச்சகம், மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனங்கள் அமைச்சகம், தமிழ்நாட்டைக் கலந்தாலோசிக்காமல், தமிழக அரசின் அனுமதியில்லாமல், இசைவில்லாமல் மத்திய அரசாங்கம் அனுமதி தரக்கூடாது என்கின்ற இந்தத் தீர்மானம் முன்மொழியப்பட்டுள்ளது. ஏற்கெனவே, காலமெல்லாம், ஆயிரமாயிரம் ஆண்டுகளாய் தமிழ்ச் சமூகம் அனுபவித்துவந்த நீராதார உரிமையை, இடையில் ஆட்சிக்கு வந்த ஒரு சிலரால் தமிழ்நாட்டு மக்களினுடைய நீராதார உரிமை பறிக்கப்பட்டிருந்த நிலையை மாற்றிட, கடைசியாக, இந்தியத் திருநாட்டின் உச்ச நீதிமன்றத்தினுடைய கதவையும் தட்டி, ஒட்டுமொத்த தமிழ்ச் சமூகத்தினுடைய ஜீவாதார, வாழ்வாதாரப் பிரச்சினைக்காக அயராது, தொடர்ந்து போராடி, ஆற்றுநீர் உரிமையை, தமிழர்களுடைய வரலாற்றைப் பாதுகாத்த ஒப்பற்ற முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசினுடைய இந்தத் தீர்மானத்தை நான் மனமார, வரவேற்று, ஆதரித்து வழிமொழிகிறேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.

**திரு. பி.வி. கதிரவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள், காவேரி நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பிற்கு முரணாக, கர்நாடக அரசு மேகதாது என்ற பகுதியில் புதிய அணையைக் கட்ட முயற்சிப்பதற்கும், அதேபோன்று கேரள மாநிலத்திலே பாம்பாற்றின் குறுக்கே பட்டிசேரி என்ற இடத்தில் புதிய அணையைக் கட்டும்



2014 டிசம்பர் 5] [திரு. பி.வி. கதிரவன்]

முயற்சியினை மேற்கொள்கின்ற நிகழ்வுகளில், இந்த நேரத்தில், மாண்புமிகு தமிழக முதல்வர் இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்திருப்பது உண்மையிலேயே பாராட்டுதற்குரியது. ஏனென்றால், இந்தச் செய்தி அனைத்துப் பகுதிகளுக்கும் சென்றவுடன், டெல்டா பகுதிகளிலிருக்கின்ற விவசாயிகள் இங்கே அதற்கான ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்கள் நடத்த அவர்களுடைய உரிமைகளைப் பாதுகாக்கின்ற முறையில் செயல்படுவதைக் கருத்திற்கொண்டு மாண்புமிகு முதல்வர் அவர்கள், இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள். மாண்புமிகு மக்களின் முதல்வர், காவேரி நடுவர் மன்றத் தீர்ப்பு 5–2–2007–ல் வந்தாலும்கூட, அதன் இறுதி ஆணையை மத்திய அரசு அரசிதழில் வெளியிடுவதற்காகப் போராடி, கடந்த 19–2–2013–ல் பிரசுரிக்கச் செய்த பெருமை மாண்புமிகு மக்களின் முதல்வருக்கு உண்டு, அதைத் தொடர்ந்து செய்தும் வருகிறார்கள். அதைத் தொடர்ந்து மக்களின் முதல்வர் அவர்களுடைய வழிகாட்டுதலின்பேரில், மாண்புமிகு தமிழக முதல்வர் இந்தத் தீர்மானத்தை முன்மொழிந்திருப்பது பாராட்டுதற்குரியது. அதனால் மத்திய அரசு இதிலே தலையிட்டு, கர்நாடக–கேரள அரசுக்குத் தகுந்த அறிவுரைகளைக் கூறி, அது மட்டுமல்லாது, தமிழகத்தைப் பாதுகாக்கின்ற வகையில் செயல்பட வேண்டுமென்று கொண்டுவந்திருக்கிற இந்தத் தீர்மானத்தை அகில இந்திய பார்வர்டு ப்ளாக் கட்சியின் சார்பாக வழிமொழிந்து வரவேற்று அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போதைப் பொருள் கடத்தியதாக புனையப்பட்ட வழக்கில் தூக்கு தண்டனை விதிக்கப்பட்ட ஐந்து மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுத்த மத்திய, மாநில அரசுகளுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். கடல் எல்லையைக் கடந்ததாகக் குற்றம் சாட்டப்பட்டு, இலங்கை சிறையில் வாடிக்கொண்டிருக்கின்ற 38 மீனவர்களை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என வலியுறுத்தியும், அதேபோல, ஏற்கெனவே இலங்கை அரசால் கைப்பற்றப்பட்டு, அவர்கள் வசம் இருக்கக்கூடிய 79 மீன்பிடிப் படகுகளை உடனடியாக விடுவித்திட வேண்டுமென வலியுறுத்தியும், நிரந்தரமாகத் தமிழக மீனவர்களுடைய

பிரச்சினைகளுக்குத் தீர்வு காண கச்சத் தீவை மீட்டெடுப்பது ஒன்றே வழி என்ற அடிப்படையில் கச்சத் தீவை இலங்கையிலிருந்து மீட்டெடுக்க வேண்டுமென வலியுறுத்தியும் கொண்டுவரப்பட்டிருக்கும் அரசின் தீர்மானத்தைப் புதிய தமிழகம் கட்சியின் சார்பாக நான் வரவேற்கிறேன். அதே நேரத்தில், கச்சத் தீவை மீட்டெடுக்கக்கூடிய விஷயத்தில், நாம் தொடர் நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்ற கருத்தையும் நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.

அதேபோன்று, ஏறக்குறைய 4, 5 வருடங்களுக்கு முன்பு காவேரி நடுவர் மன்றத் தீர்ப்பு கொடுத்த பின்பும்கூட, இன்னும் காவேரி மேலாண்மை வாரியம் அமைக்காததாலும், அதேபோல காவேரி நடுவர் மன்றத்தினுடைய தீர்ப்புகளுக்கு முரணாக கர்நாடக அரசு, கர்நாடகத்தில் மேகதாது என்ற இடத்தில் அணை கட்டுவதாலும் தமிழகத்திற்கு ஏற்படக்கூடிய பாதிப்புகளைத் தடுத்து நிறுத்த வேண்டிய பொறுப்பு; அதேபோன்று உடுமலைப்பேட்டைக்கு அருகே இருக்கக்கூடிய பழையூர் என்ற இடத்தில் பாம்பாற்றின் குறுக்கே கேரள அரசு அணை கட்டுவதால் அமராவதி அணைக்கு வரக்கூடிய 8 டி.எம்.சி. அடி தண்ணீரின் அளவு குறைந்து அந்தப் பகுதி விவசாயிகளுக்குப் பெரிய பாதிப்பு ஏற்படும் என்ற காரணத்தினாலும், அந்த அணையைக் கட்டுவதற்கும் அனுமதி அளிக்கக்கூடாது என்று இந்த அரசு கொண்டு வந்திருக்கக்கூடிய தீர்மானங்களைப் புதிய தமிழகம் கட்சியின் சார்பாக வரவேற்கிறேன். பாம்பாற்றின் குறுக்கேயும், மேகதாது என்ற இடத்திலும் அணை கட்டுவதற்கு அந்த இரண்டு மாநில அரசுகளுக்கும் மத்திய அரசு எந்தவிதத்திலும் அனுமதி அளித்துவிடக் கூடாது என்ற கருத்தை வலியுறுத்தி அமர்கிறேன்.

பிற்பகல் 4–10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் தொகுதி, தங்கச்சிமடத்தைச் சேர்ந்த எமர்சன், வில்சன், அகஸ்டஸ், பிரசாத் மற்றும் லேங்க்லெட் என்ற 5 மீனவர்கள், புனையப்பட்ட வழக்கிலே தூக்குமேடை ஏறக்கூடிய ஒரு பயங்கரமான தீர்ப்பை சிங்கள இனவாத இலங்கை அரசு விதித்தது. அதைத் தொடர்ந்து இன்று மாண்புமிகு



முதலமைச்சர் அவர்கள் முன்மொழிந்திருக்கின்ற தனித் தீர்மானத்திலே, தமிழக அரசு இந்த 5 மீனவர்களை மீட்பதற்காக கடந்த காலங்களிலே என்னென்ன நடவடிக்கைகளைச் சட்ட ரீதியாக எடுத்திருக்கின்றது அந்தக் குடும்பங்களுக்கு எப்படியெல்லாம் உதவியிருக்கின்றது என்பதைப் பற்றி விரிவாகச் சொன்னார்கள்.

தமிழகத்திலே இருக்கக்கூடிய அனைத்து அரசியல் கட்சிகளும், பல்வேறு இயக்கங்களும் இதற்காகக் குரல் கொடுத்ததைப் பற்றியும் தன்னுடைய தீர்மானத்திலே பதிவு செய்திருக்கின்றார்கள். மத்திய அரசு எடுத்த இராஜ்ஜிய நடவடிக்கைகளைப் பற்றியும் அவர்கள் பதிவு செய்திருக்கின்றார்கள். இது ஒரு நியாயமான தீர்மானம். தமிழக அரசும், தமிழகத்திலே இருக்கக்கூடிய அத்தனை பேரும் ஒருமித்த கருத்தை வலியுறுத்தி இந்த விடுதலையைப் பெற்றிருக்கின்றோம்; மத்திய அரசையும் பாராட்டியிருக்கின்றோம். ஆனால், இங்கே ஒன்றைத் தெளிவாகப் பதிவு செய்ய விரும்புகின்றேன். வழக்கமாக இலங்கையினால் கைது செய்யப்படக்கூடிய மீனவர்கள் விடுவிக்கப்படும்போது, அவர்கள் மண்டபத்தில் இருக்கக்கூடிய படகுத் துறைக்குக் கொண்டுவரப்படுவார்கள் அல்லது நாகப்பட்டினத்திற்கு வந்திருக்கின்றார்கள். சில முறை தூத்துக்குடிக்கு வந்திருக்கின்றார்கள். சில முறை காரைக்காலுக்குக்கூட வந்திருக்கின்றார்கள். ஆனால், கொழும்பிலிருந்து தங்கச்சிமடத்திற்கு சுருக்கமான வழி கொழும்பு–டெல்லி, டெல்லி–சென்னை, சென்னை–இராமநாதபுரம் என்ற அந்த நிலையை ஏன் மத்திய அரசினர் எடுத்தார்கள் என்றால்— நான் மிகத் தெளிவாகக் குற்றம் சாட்டுகின்றேன். நாங்கள் மட்டும்தான் இதைச் சாதித்தோம் என்பதைக் காட்டும்விதமாக, தமிழக மக்களை ஏமாற்றுவதற்காக இப்படிப்பட்ட ஒரு நாடகத்தை அவர்கள் நடத்தியிருக்கிறார்கள்.

திருச்சியிலே அவர்கள் வந்து இறங்குவார்கள் என்று அறிவித்து, நான் திருச்சி விமான நிலையத்தில் அந்த மீனவக் குடும்பத்தினருடன் இருந்தபோது 8–40 மணி விமானத்தில் அவர்கள் வருவதாக அறிவிக்கப்பட்டது. அதற்குப் பிறகு 12–30 மணி விமானத்தில் வருவதாக அறிவிக்கப்படுகிறது. நான் அந்தக் குடும்பத்தினரோடு இருக்கும்பொழுது டெல்லியிலிருந்து ஒரு தொலைபேசி அழைப்பு வருகிறது. தொலைபேசியின்

மறுமுனையிலே பேசியவர் டெல்லியில் இருக்கக்கூடிய ஒரு உயரதிகாரி என்று அந்தக் குடும்பத்தினர் சொன்னார்கள். தமிழக அதிகாரிகள் சொன்னதைக் கேட்டு, உங்களை யார் திருச்சிக்கு வரச் சொன்னார்கள்? இவர்கள் எல்லாம் டெல்லிக்கு வரப்போகிறார்கள் என்று அவர்கள் சொன்னதை நான் இங்கு பதிவு செய்ய விரும்புகின்றேன்.

உண்மையிலேயே இது தமிழக அரசாங்கம் எடுத்த முன்முயற்சியின் காரணமாக, (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக மக்கள் ஒட்டுமொத்தமாகக் காட்டிய எதிர்ப்புகளின் காரணமாக விளைந்தது 5 மீனவர்களுக்குத் தூக்கு தண்டனை வழங்கப்பட்ட 29 ஆம் தேதியன்று இராமேஸ்வரம் தீவிலே மீனவ மக்கள் ஒருமித்து நடத்திய போராட்டம், அந்த மீனவ மக்களின் உணர்வுகளைப் புரிந்துகொண்டு தமிழக அரசு நடவடிக்கை எடுத்தது. இது பற்றி நான் ஏற்கெனவே சட்டமன்றத்திலே பேசியிருக்கின்றேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்குப் பதில் சொல்லியிருக்கிறார்கள். இது தொடர்பாக தமிழக அரசு பல முறை மத்திய அரசுக்குக் கடிதமும் எழுதியிருக்கின்றது. ஆனால், இப்படிப்பட்ட தமிழக மக்களுடைய போராட்ட குணத்தின் காரணமாகத்தான் இந்த விடுதலை சாத்தியமாகியது.

பிற்பகல் 4–15

இந்தத் தீர்மானம் தொடர்பாக இன்னொன்றையும் நான் இங்கே பதிவு செய்ய விரும்புகின்றேன். 79 படகுகள் இலங்கை வசம் இருக்கின்றன; அதேபோன்று, 38 மீனவர்கள் இன்னும் இலங்கையின் வசம் இருக்கிறார்கள் என்றும், அவர்களை விடுவிப்பதற்கு மத்திய அரசு முயற்சி செய்ய வேண்டுமென்றும் இந்தத் தீர்மானம் வலியுறுத்துகிறது. இந்தப் படகுகளைப் பொறுத்தவரையில், எப்பொழுதெல்லாம் மத்தியிலே பா.ஜ.க. தலைமையில் மத்திய அரசு இருந்திருக்கின்றதோ, அப்பொழுதெல்லாம் தமிழக மீனவர்களுடைய படகு ஒன்றுகூட மீட்கப்படவில்லை. சென்ற முறை திரு. வாஜ்பாய் அவர்கள் தலைமையில் தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு இருந்தபோது, தமிழக மீனவர்களுடைய நூற்றுக்கும் மேற்பட்ட படகுகள் இலங்கையினால் அரசுடைமையாக்கப்பட்டு, இறுதிவரையில் அந்தப் படகுகள் மீட்கப்படவில்லை. அதற்குப் பிறகு சுனாமி





நிதியிலிருந்து அவர்களுக்கு இந்த ஆட்சி வந்ததற்குப் பிறகு, நிவாரணத் தொகை வழங்கப்பட்டது என்பதையும் நான் இங்கே நினைவுகூரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று, பா.ஜ.க. ஆட்சி வந்ததற்குப் பிறகு, ஒருவர் சொல்கின்றார்; அவர் மத்தியிலே ஆட்சி செய்யக்கூடிய பா.ஜ.க. அரசாங்கத்தினுடைய மிகப் பெரிய சித்தாந்தக் குழுவினுடைய தலைவராம். அவர் சொல்கின்றார்; தமிழக மீனவர்களுடைய படகுகளெல்லாம் மிகப் பெரிய கோடீஸ்வரர்களுடைய படகுகள்; ஒன்றும் மீட்கப்படாது என்று அவர் சொல்லக்கூடிய அளவிற்கு, மத்திய அரசாங்கத்தினுடைய சிந்தனையை அது வெளிப்படுத்துகிறது.

அதே நேரத்தில், திரு. மோடி அவர்களுடைய ஆட்சி டெல்லியிலே ஏற்பட்டபொழுது, பகை நாடு என்று அழைக்கப்படக்கூடிய பாகிஸ்தான்வசம் 151 மீனவர்கள் இருந்தார்கள்; 57 படகுகள் இருந்தன. திரு. மோடி அவர்கள் பிரதமராகப் பதவியேற்கும்பொழுது, நவாஸ் ஷெரீப் சிறப்பு விருந்தினராக அழைக்கப்பட்டார். ‘எங்கள் வசம் இருக்கக்கூடிய இந்திய மீனவர்களையும், படகுகளையும் விடுவிப்பேன்’ என்று அவர் சொன்னார். அந்த மீனவர்கள் 151 பேர்களும் விடுவிக்கப்பட்டார்கள்; 57 படகுகளும் 22 ஜூலை 2014 அன்று விடுவிக்கப்பட்டன. திரு. மோடி அவர்கள் இந்தியாவினுடைய பிரதமராகப் பொறுப்பேற்றபோது, இலங்கைவசம் தங்கச்சிமடத்தைச் சார்ந்த ஐந்து மீனவர்கள் மட்டும்தான் இருந்தார்கள்; படகுகள் அப்போது எதுவுமேயில்லை. இந்த ஐந்து மீனவர்களும் தூக்கு தண்டனை பெற்று, விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது மகிழ்ச்சிக்குரிய விஷயம். ஆனால், திரு. நரேந்திர மோடி அவர்களுடைய தலைமையிலே பா.ஜ.க. ஆட்சி வந்த பிறகு கைப்பற்றப்பட்ட ஒரு படகைக்கூட இதுவரை மீட்க முடியாத, செயல்திறன் மிகுந்த அரசு மத்தியிலே இருக்கின்றது என்பதையும் நான் இங்கே பதிவு செய்ய விரும்புகின்றேன். எனவே, இந்தத் தீர்மானத்தை மனித நேய மக்கள் கட்சியின் சார்பாக மனமார வரவேற்கிறேன்.

அதேபோல, மேகதாது என்ற இடத்தில் கர்நாடக அரசு அணை கட்டும் முயற்சியில் ஈடுபடுவதைத் தடுத்து நிறுத்தக் கோரியும், பாம்பாற்றிலே அணை கட்டக்கூடிய கேரள அரசுக்குத் தகுந்த அறிவுறுத்தலை வழங்குவதோடு, இத்திட்டங்களுக்கு தமிழ்நாட்டைக்

[முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா] [2014 டிசம்பர் 5

கலந்தாலோசிக்காமல் மத்திய அரசு எந்தவித அனுமதியும் வழங்கக்கூடாது என்று வலியுறுத்தியும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் முன்மொழியப்பட்ட தீர்மானத்தை மனித நேய மக்கள் கட்சியின் சார்பாக வரவேற்று, அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார் அவர்கள்.

**திரு. அ. கணேஷ்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக மீனவர்களின் உரிமைகளையும், உடைமைகளையும் பாதுகாக்க தமிழக அரசு எடுத்துவரும் அனைத்து நடவடிக்கைகளையும் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக வரவேற்கின்றேன். தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் தாக்கப்படுவது என்பது தொடர் நிகழ்வாகவே பல ஆண்டுகளாக நடைபெற்று வருகிறது. இந்தச் சூழ்நிலையில் ஐந்து தமிழக மீனவர்கள்மீது இலங்கை அரசால் கஞ்சா கடத்தியதாகப் பொய் வழக்கு புனையப்பட்டு, அந்த வழக்கில் அவர்களுக்குத் தூக்கு தண்டனை விதிக்கப்பட்டதாகத் தீர்ப்பு வெளிவந்த சூழ்நிலையில், ஒட்டுமொத்த தமிழக மக்களும், அனைத்துத் தமிழக அரசியல் கட்சிகளும் வைத்த கோரிக்கையினை ஏற்று, அவர்களின் உயிரைக் காத்ததற்கும், அவர்களை விடுதலை செய்வதற்கும் மத்திய, மாநில அரசுகள் மேற்கொண்ட அனைத்து முயற்சிகளையும் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக வரவேற்கின்றேன்.

அதேசமயத்தில், இன்னும் மீட்கப்படாத நிலையில் கிட்டத்தட்ட *79* படகுகள் உள்ளன; *38* மீனவர்கள் உள்ளனர். இதன் காரணமாக அவர்களைச் சார்ந்து தொழில் நடத்திக் கொண்டிருக்கக்கூடிய ஆயிரத்திற்கும் மேற்பட்டோர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய சூழ்நிலையில், அந்தப் படகுகளை மீட்பதற்கு அனைத்து இராஜாங்க ரீதியிலான நடவடிக்கைகளையும் மத்திய அரசு மேற்கொள்வதற்கு வழிவகை செய்யும் இந்தத் தீர்மானத்தை பாட்டாளி மக்கள் கட்சி வரவேற்கிறது.

அதேசமயம், இன்றைக்குத் தமிழகத்தின் உரிமையான, ஜீவாதார நதியான காவேரி ஆற்றின் குறுக்கே மேகதாது என்ற இடத்தில் கர்நாடக அரசு இரண்டு தடுப்பணைகளைக் கட்ட மேற்கொள்ளவிருக்கும் முயற்சியைத் தடுத்து நிறுத்தவும், காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு



2014 டிசம்பர் 5] [திரு. அ. கணேஷ்குமார்]

அமைக்கப்படாத சூழ்நிலையில், அவற்றை உடனடியாக மத்திய அரசு அமைக்க வேண்டும் என்று வலியுறுத்தியும் இந்தத் தீர்மானம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்லாமல், கர்நாடக அரசின் இந்தச் செயல் இறுதிக் கட்டத் தீர்ப்புக்கு எதிரான செயலாகும்; காவேரி ஆற்றின் குறுக்கே எந்தவிதமான திட்டத்தைத் தொடங்க வேண்டுமானாலும், திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டுமானாலும், கடைமடைப் பகுதியாக உள்ள கடைமடை மாநிலங்களின் ஒப்புதல் இல்லாமல் அந்தத் திட்டங்களை நிறைவேற்றக் கூடாது என்ற விதி இருந்தபொழுதும், அண்டை மாநிலங்களான கர்நாடக மாநிலமாக இருந்தாலும் சரி, கேரள மாநிலமாக இருந்தாலும் சரி, தமிழகத்தை ஜீவாதார பிரச்சினையில் தள்ளுவதற்கும், டெல்டா மாவட்டங்களை பாலைவனமாக மாற்றும் சூழ்நிலையில் நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற இந்தத் தருணத்தில், அதைத் தடுத்து நிறுத்துவதற்கு தமிழக அரசு இன்றைக்குக் கொண்டு வந்திருக்கக்கூடிய இந்தத் தீர்மானத்தை வரவேற்கும் அதே சமயத்தில், மாநில உரிமைகள் எதுவாக இருந்தாலும் அந்த மாநில உரிமைகளை மீட்டெடுப்பதற்காக இதுவரை தமிழக அரசு கிட்டத்தட்ட *150*–க்கும் மேற்பட்ட கடிதங்களின் மூலமாக மத்திய அரசை வலியுறுத்தியிருக்கக்கூடிய சூழ்நிலையில், தமிழகத்தின்மீது மத்திய அரசு இன்னும் பாராமுகமாகச் செயல்பட்டுக் கொண்டிருப்பதையும் இந்த அவையின்மூலமாக ஓர் எதிர்ப்பைப் பதிவு செய்ய வேண்டும் என்ற நோக்கத்தில் பதிவு செய்கிறேன்.

பிற்பகல் *4–20*

அதுமட்டுமல்லாமல், மேலும் தமிழகத்தில் உள்ள அனைத்து அரசியல் கட்சிகளும் இந்த மாநில உரிமைகள் சம்பந்தப்பட்ட பிரச்சினையில் ஒருமித்த குரலில்தான் இருக்கிறோம் என்பதை பிரதமருக்கும், மத்திய அரசுக்கும் எடுத்துரைக்கின்றவகையில் அனைத்துக் கட்சி கூட்டத்தைக் கூட்டி, அனைத்துக் கட்சித் தலைவர்களின் குழுவை அமைத்து, நேரடியாக பிரதமரிடம் கண்டனத்தைத் தெரிவிக்க வேண்டுமென்று பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாகக் கேட்டுக்கொண்டு, இந்த இரண்டு தீர்மானங்களையும் வரவேற்று அமர்கிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. கலை அரசு அவர்கள்.

[2014 டிசம்பர் 5

**திரு. ம. கலை அரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் கொண்டு வந்த இரண்டு தீர்மானங்களையும் வழிமொழிந்து வரவேற்கின்றேன், வாழ்த்துகின்றேன். மாண்புமிகு இதய தெய்வம் மக்கள் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய சிந்தனைத் திறத்தால், சிறந்த நுண்ணறிவால், தொலைநோக்குப் பார்வையால், தனக்கே உரிய அரசியல் சாதுரியத்தைப் பயன்படுத்தி, 5 அப்பாவி மீனவர்களுக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனையை இரத்து செய்தது ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க செய்தியாகும் என்பதைப் பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, கடந்த 30, 35 ஆண்டு கால அரசியல் வரலாற்றைக் கூர்ந்து கவனிக்கின்ற அரசியல் நோக்கர்களுக்கு நன்றாகத் தெரியும்; மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நாடாளுமன்றத்தில் 2–5–1984–ல் ‘The linking of the Ganga and Cauvery will prove beneficial to the whole country in several ways’ என்று தனக்கே உரிய பாணியில் ஆணித்தரமாகக் கூறினார்கள். தேசிய நதிகளையெல்லாம் இணைக்க வேண்டும். அப்பொழுதுதான் இந்தியாவிலே இருக்கக்கூடிய தண்ணீர்ப் பிரச்சினை தீரும், நமக்குள் ஒரு சகோதரத்துவம் உருவாகும் என்று, இன்றல்ல, நேற்றல்ல; ஏறக்குறைய 30 ஆண்டுகளுக்கு முன்னரே நம்முடைய இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணித்தரமாக எடுத்துரைத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அம்மா அவர்கள் 17–7–1993 முதல் 21–7–1993 வரையில் 5 நாட்கள் உண்ணாவிரதம் இருந்தார்கள். உண்ணாவிரதம் என்றால் அதுதான் உண்ணாவிரதம். ஏதோ ஒப்புக்கு இருக்கின்ற உண்ணாவிரதம் அல்ல. (மேசையைத் தட்டும் ஒலி) பச்சைத் தண்ணீர்கூட குடிக்காமல், பல தலைவர்கள் வற்புறுத்தியும் கேட்காமல், முழுமையாக உண்ணாவிரதம் இருந்து, காவேரி நதி நீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக உண்ணாவிரதம் இருந்த ஒரே தலைவி, உத்தமத் தலைவி புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இந்த நேரத்தில் நான் பதிவு செய்ய விரும்புகின்றேன்.

அம்மா அவர்கள் பொதுவாக சாதாரண, சாமானிய, ஏழை மக்களுக்காகப் பாடுபடுபவர்கள். பிறந்த குழந்தை முதல் வயது



2014 டிசம்பர் 5] [திரு. ம. கலை அரசு]

முதிர்ந்தவர்கள் வரை உள்ளவர்களுக்காகப் பல்வேறு திட்டங்களைச் சிறப்பாகத் தீட்டி, இன்றைக்குத் தமிழ்நாட்டு மக்கள் மனதில் நீங்கா இடம் பெற்றிருக்கக்கூடிய ஒரே தலைவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

காவேரிப் பிரச்சினைக்காக பல்வேறு நிலைகளில், அதாவது, பாரதப் பிரதமரிடத்திலே முறையிடுதல், நாடாளுமன்ற உறுப்பினர்களை அழைத்துச் சென்று பிரதமரைச் சந்தித்தல், நீர் வளத் துறை அமைச்சரைச் சந்தித்து, பல்வேறு நிலைகளில் தனக்கே உரிய பாணியில் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு பல வழிகளில் முனைந்திருக்கிறார்கள். அந்த வகையில் கடைசியாக காவேரி நடுவர் மன்றத் தீர்ப்பை மத்திய அரசிதழில் வெளியிடுவதற்காக அவர் எடுத்துக்கொண்ட முயற்சிகளை இந்த நாடே நன்கு அறியும். நாட்டு மக்களும் அறிவார்கள். அதற்காக பல்வேறு பாராட்டுகளைத் தெரிவித்திருக்கிறார்கள். விவசாயிகளுடைய உற்ற தோழனாக விளங்குபவர்தான் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அதற்குக் குந்தகம் ஏற்படுகின்ற வகையில், அவருடைய முயற்சியை வீணடிக்க வேண்டும் என்று விரும்புகின்ற சிலர் கர்நாடகாவில் அணை கட்டுகின்ற அந்த முயற்சியை அம்மா அவர்கள் முறியடிப்பார்கள், அவருடைய முயற்சி வெற்றி பெறும் என்பதைச் சொல்லி, இந்தத் தீர்மானத்தை முழுமையாக வரவேற்கின்றேன், வணக்கம்.

பிற்பகல் 4–25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக மீனவர்கள் தவறுதலாக எல்லை தாண்டுகிறார்கள் என்பது ஏதோ ஒரு தீவிரவாத செயல் போல எண்ணி கைது செய்யப்படுவது தவிர்க்கப்பட வேண்டும். இதற்கு நிரந்தரத் தீர்வு காண ஒப்பந்தங்கள் உருவாக்கப்பட வேண்டும். அவர்களுடைய படகுகள் இலங்கை அரசால் பறிமுதல் செய்யப்பட்டு, தற்போது விடுவிக்கப்படாமல் உள்ளன. மத்தியில் காங்கிரஸ் ஆட்சி புரிந்த காலத்தில் கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்களையும், அவர்களுடைய படகுகளையும் விடுவிக்க இராஜ்ஜிய ரீதியிலான நடவடிக்கைகளை எடுத்திருந்தாலும், தமிழக அரசின் முயற்சியையும் தமிழ்நாட்டிலுள்ள அனைத்துக் கட்சிகளின்

குரலையும் கேட்டுதான் மத்திய அரசு அந்த இராஜ்ஜிய ரீதியிலான நடவடிக்கைகளை எடுத்து, மீட்டு வந்தது என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. ஆனால், தற்போது பிடிபட்ட மீனவர்களின் விடுதலையும், மீன்பிடிப் படகுகளையும் விடுவிப்பது என்பது கேள்விக் குறியாக உள்ளது.

மத்தியில் தற்போது ஆட்சியில் உள்ள கட்சியின் ஒரு நபர் கட்டளையிட்டால்தான் இலங்கை அரசு படகுகளை விடுவிக்கும் என்பது போன்ற ஒரு பிம்பம் உருவாக்கப்படுகிறது. எனவே, அனைத்துக் கட்சிகளின் குரலாக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் இம்மாமன்றத்தின் தீர்மானத்தின்மூலம் மத்திய அரசை வலியுறுத்தி, 38 மீனவர்களை விடுவிக்கவும். 79 மீன்பிடிப் படகுகளை விடுவிக்கவும் கொண்டு வந்த தீர்மானத்தை தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் சார்பாகவும், தமிழக சட்டமன்ற காங்கிரஸ் கட்சியின் சார்பாகவும் ஆதரிக்கிறேன். தமிழக மீனவர்கள் விடுதலை என்பது மத்தியில் ஆளும் தற்போதுள்ள அரசாங்கம்தான் சாதித்திருப்பது போன்று ஓர் உருவகத்தை உருவாக்கி வருகிறார்கள். அது தமிழ்நாட்டிலிருந்து யாரும் கோரிக்கை வைக்காமலேயே எந்த முயற்சியும் எடுக்காமலேயே இங்கிருந்து நிதிகள் பலவும் வழங்கப்பட்டிருக்கிறது. அதையெல்லாம் அங்கீகாரப்படுத்தாமல், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா சொன்னதுபோல் அவர்களை வேக, வேகமாக பிளைட்டில் கொண்டு சென்று டெல்லியில் அங்கு அமைச்சர்களுடன் பேசுவதுபோல் பத்திரிகைகளில் பெரிய போட்டோக்களைப் போட்டு, இந்தியா முழுவதும் தமிழக மீனவர்களின் காவலர்களைப்போல ஒரு பிம்பத்தை உருவாக்கி வருகிறது மத்தியில் இருக்கக்கூடிய தற்பொழுதுள்ள அரசாங்கம். காங்கிரஸ் ஆட்சிக்காலத்தில் இதுபோன்ற ஒரு செயல்கூட நாங்கள் செய்தது இல்லை. நாங்கள் இதுபோல, தமிழக மீனவர்களையும் இராஜ்ஜிய ரீதியாக மத்திய அரசின் தலையீடு இல்லாமல் மீட்கப்பட முடியாது என்பது எல்லோருக்கும் தெரியும். அதனால்தான் இன்றைக்கு நீங்கள் எல்லாம் மத்திய அரசுக்கு நன்றி கூறியிருக்கிறீர்கள். அதேபோல், இராஜ்ஜிய ரீதியாக எடுத்த நடவடிக்கைகள் காரணமாக தமிழக மீனவர்களை, படகுகளை மீட்டது காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலும் அதே நடைமுறையில்தான், அதில் மாற்றம் இருக்க வாய்ப்பில்லை. ஆனால், தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய அரசாங்கத்தையும், தமிழ்நாடு சட்டமன்றத்தையும், தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய



அனைத்துக் கட்சிகளின் குரலையும் காங்கிரஸ் கட்சி மதித்தது என்பதை நீங்கள் இங்கு எண்ணிப் பார்க்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். இருந்தாலும், நீங்கள் இன்றைக்கு மத்திய அரசுக்கு நன்றி எல்லாம் சொல்லியிருக்கிறீர்கள். அதை நான் வரவேற்கிறேன், அதில் தவறில்லை. இருந்தாலும்கூட காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் நாங்கள் எவ்வாறு தமிழ்நாட்டிற்கும், தமிழக அரசிற்கும் ஒரு மரியாதை அளித்தோம் என்பதைப் பார்க்க வேண்டும். ஆனால், இன்றைக்கு இருக்கக்கூடிய அரசாங்கம் எந்த மாதிரி நடந்து கொண்டிருக்கிறது என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய அரசாங்கம் செயல்படவில்லை என்பது போன்ற ஒரு பிம்பத்தை உருவாக்குவது தவறு. ஒரு தனி நபர் இருந்துகொண்டு, நான் சொன்னால்தான் படகுகளை விடுவிப்பார் ராஜபக்சே என்றெல்லாம் கூறிக்கொண்டிருக்கிறார். அது ஒரு தவறான கூற்று. அதை நாம் கண்டிக்க வேண்டும். இந்த ஒட்டுமொத்த தீர்மானம் என்பது ஒரு தீர்வாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். இதுபோன்ற ஒரு தனி நபர் வந்து படகுகளை மீட்பது என்பது சாத்தியமில்லை. ஆகையால், அதுபோன்ற பிம்பங்களை உருவாக்கும் முயற்ச்சிக்கு தமிழ்நாடு சட்டமன்றம் கொண்டு வந்த இந்தத் தீர்மானம் ஒரு சரியான பதிலடியாக இருக்கும் என்பது எனது தாழ்மையான கருத்து. எனவே, இந்தத் தீர்மானத்தை முழு மனதுடன் எங்கள் கட்சியின் சார்பாக ஆதரிப்பதுடன், காவேரி நடுவர் மன்றம் அளித்த தீர்ப்பின் அடிப்படையிலும், உச்ச நீதிமன்றத்தின் வழிகாட்டுதலின் அடிப்படையிலும் காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகியவற்றை கர்நாடகம், கேரளம் அணைகள் கட்டும் முயற்சியைத் தடுத்து நிறுத்த முடியும். எனவே, வழங்கப்பட்ட அனைத்துத் தீர்ப்புகளையும் பரிசீலிக்கும்போது எந்தவொரு கட்டமைப்புகளோ, எந்த மாற்றங்களோ சர்ச்சைக்குரிய பகுதிகளில் யாராலும் உருவாக்கப்பட வேண்டுமானால், உரிய ஒப்புதல்கள் இல்லாமல் மேற்கொள்ள முடியாது என்ற சட்ட ரீதியிலான அணுகுமுறைகளைப் பின்பற்றி, மத்திய அரசை வலியுறுத்துவதுடன் தேசிய நீர் மின் திட்டக் கழகம்மூலம் திட்டங்களை விரைந்து நிறைவேற்றவும், அண்டை மாநிலங்களுடன் நல்லுறவை வலுப்படுத்த பேச்சுவார்த்தையின்மூலமும் உரிய நடவடிக்கைகளைத் தொடர்ந்து தமிழக அரசு மேற்கொள்ள வேண்டுமென்ற கோரிக்கையையும் முன்வைத்தும் இந்தத்

[திருமதி. எஸ். விஜயதரணி] [2014 டிசம்பர் 5

தீர்மானத்தை தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி மற்றும் தமிழ்நாடு சட்டமன்ற காங்கிரஸ் கட்சி சார்பாகவும் ஆதரித்து, அமைகிறேன்.

*பிற்பகல் 4–30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக முதல்வரின் சார்பில் கொண்டு வந்திருக்கிற இரண்டு தீர்மானங்களை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் வரவேற்கிறோம். முழுமையாக ஆதரிக்கிறோம். முதலாவது தீர்மானமாக நமது தமிழக மீனவர்கள் அடிக்கடி இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்படுவதும், வழக்குகள் பதிவு செய்யப்படுவதும், அவர்களுடைய படகுகளை இலங்கையிலே வைத்துக் கொண்டு திரும்பக் கொடுக்காமல் இருப்பதும் என்ற அடிப்படையில் தொடர் நடவடிக்கைகள் வந்து கொண்டிருக்கிற நிலையில், 28–11–2011 ஆம் தேதி 5 மீனவர்களை போதைப் பொருள் கடத்தினார்கள் என்ற அடிப்படையில் அவர்களைக் கைது செய்து, அவர்கள்மீது 3 ஆண்டுகள் வழக்கு நடத்தி, அவர்களுக்கு மரண தண்டனையை விதித்தார்கள். கைது செய்யப்பட்ட நாளிலிருந்து அந்த வழக்கை நடத்துவதோடு மட்டுமல்லாமல், மீனவர்களின் குடும்பங்களை வாழ வைப்பதற்காக அவர்களுடைய வாழ்வாதாரத்தைப் பாதுகாப்பதற்காக, தாயுள்ளத்தோடு நமது தமிழக அரசு 7,500 ரூபாயை ஒவ்வொரு குடும்பத்திற்கும் வழங்கி மொத்த வழக்குகளை நடத்துவதற்குமாகச் சேர்த்து 63 இலட்சத்து 85 ஆயிரம் ரூபாய் கொடுத்திருப்பதை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் பாராட்டுகிறேன்.

‘உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதுஆம் நட்பு.’

அதைப்போல, கஷ்டம் வரக்கூடிய நேரத்தில் தாயுள்ளத்தோடு 5 குடும்பங்களையும் பாதுகாத்த தமிழக அரசுக்கு நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனாலும், மரண தண்டனை அறிவிக்கப்பட்டவுடன் இராமேஸ்வரம் பகுதியில் இருக்கக்கூடிய மீனவர்கள் கட்சி, ஜாதி, மதம் என்ற உணர்வுகளுக்கு அப்பாற்பட்டு, சுனாமி எழுந்ததைப்போல ஒன்றுபட்டு ஒரு மகத்தான போராட்டத்தை நடத்திக் காட்டினார்கள். இரயில்கள் எல்லாம்



2014 டிசம்பர் 5] [திரு. சு. குணசேகரன்]

நிறுத்தப்பட்டன. அங்கு எந்தவிதமான போக்குவரத்தும் இல்லாமல், சுனாமி வந்தால் எப்படி ஒரு பகுதியே ஸ்தம்பிக்குமோ, அதைப்போல அந்த மக்கள் ஓர் எழுச்சிகரமான ஒன்றுபட்ட உணர்வுபூர்வமாக நடத்திய போராட்டம் என்பது மத்திய அரசாங்கத்தையே ஆட்டியிருக்கிறது என்பதால்தான் மத்திய அரசு இந்த நடவடிக்கையில் தன்னுடைய கவனத்தைச் செலுத்தியதற்கான முதல் படியாக நான் கருதுகிறேன். அந்த அடிப்படையில் இந்தத் தீர்மானத்தில் அனைத்து வகையான போராட்டங்களையும் உள்ளடக்கி இந்தத் தீர்மானம் வந்திருப்பதையும் நான் வரவேற்கிறேன். எனக்கு முன்னால் இங்கே மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள் கூறியதுபோல, மத்திய அரசுக்கு நாம் நன்றி தெரிவிப்பது என்பது தமிழர்களுடைய நாகரிகத்தையும், பண்பாட்டையும் காட்டுகிறது. ஆனால், மத்திய அரசு தமிழக மீனவர்கள் இப்படிப்பட்ட இக்கட்டான நிலையில் சிக்குகிறபோது அவர்களைக் காப்பாற்ற வேண்டிய அரசியல் கடமை இருக்கிறது. அதைச் செய்வதாக நாம் எடுத்துக்கொண்டாலும் இன்றைக்கு மத்தியிலே இருக்கக்கூடிய பாரதிய ஜனதா கட்சி ஓர் உள்நோக்கத்தோடு இந்தப் பிரச்சினையை அணுகுகிறது என்பதையும் நாம் பார்க்க வேண்டும். குறிப்பாக, அவர் சுட்டிக்காட்டியதுபோல, விடுதலை செய்யப்பட்டதற்குப் பின்னால் அவர்கள் நடத்திய நாடகம், இன்னும் சொல்லப்போனால் தமிழக அரசுக்கு, தமிழக அமைச்சர்களுக்குக்கூட தெரியாமல் அவர்களை இராமேஸ்வரத்திற்குக் கொண்டு செல்வதற்காக அவர்கள் எடுத்த நடவடிக்கை என்பது உண்மையிலேயே இந்திய அரசியல் ஜனநாயகத்தில் மத்திய, மாநில உறவுகளையே கேலிக்கூத்தாக மாற்றுகிற ஒரு சூழலை உருவாக்கியது. விடுவிக்கப்பட்டவர்களை டெல்லிக்கு அழைத்துச் சென்றால்கூட, அழைத்துச் சென்றதற்குப் பின்னால் எப்போது வருகிறார்கள், எங்கு வருகிறார்கள் என்று முறையாக தமிழக அரசுக்குத் தெரிவித்து, ஒரு நாகரிகமான அரசியலை நடத்தியிருக்கலாம்.

*பிற்பகல் 4–35*

ஆனால், ஏதோ 5 மீனவர்களை அவர்களாக விடுவித்ததைப்போல ஒரு தோற்றத்தை உருவாக்கி, அதன் மூலமாக தமிழகத்திலே வேரூன்றுவதற்காக அவர்கள் நடத்துகின்ற அரசியல் நாடகம்தான் இது என்பதை தமிழ்நாட்டு மக்கள்

புரிந்திருக்கிறார்கள். இதிலே மோடி அரசு மட்டுமல்ல, சுப்பிரமணிய சுவாமி என்கிற ஒரு சகுனி, அந்த ஆட்சிக்கு வினையாக இருந்து இன்றைக்கு ஆட்டிப்படைத்துக் கொண்டிருக்கிறார். அவர் தமிழக மீனவர்களின் பல்வேறு பிரச்சினைகளைப் பற்றி முதலிலே சொல்லும்போதுகூட ராஜபக்சேவினுடைய நண்பர்—எனவே, ராஜபக்சேவிடம் சொல்லிவிட்டேன்; மீனவர்களைக் கைது செய்ய வேண்டும். கடும் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்; படகுகளை விடுவிக்கக் கூடாது என்று சொல்லிவிட்டேன் என்று பகிரங்கமாகவே அறிவித்தார். அந்த அடிப்படையிலேதான் இன்றைக்கு 79 படகுகள் விடுவிக்கப்படாமல் வைக்கப்பட்டிருக்கின்றன என்பதையும் நாம் புரிந்துகொள்ள வேண்டும். எனவே, சுப்பிரமணிய சுவாமி சகுனியாக வகுத்திருக்கிற இந்த வியூகத்தில், நேர்மையாக இருக்கக்கூடிய தமிழ்நாட்டு மக்கள் அதற்கு இடம் கொடுக்காமல் அந்த ஆட்சி, அதனுடைய சூழ்ச்சி வலையிலேயே வீழும் என்பதற்கு அடையாளம்தான் சுப்பிரமணிய சுவாமியினுடைய இந்த நாடகம். எனவே, அந்த அடிப்படையில் இன்றைக்கு மீனவர்களுடைய பிரச்சினையைப் பொறுத்த அளவிலே, 2003 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் திரு. வாஜ்பாய் பிரதமராக இருந்த நேரத்தில், இலங்கையிலே ரணில் விக்கிரமசிங்கே பிரதமராக இருந்தார். இந்த இரண்டு பேருக்கும் இடையிலே ஏற்பட்ட ஒப்பந்தம்தான் தமிழக மீனவர்கள் எல்லை தாண்டி வந்தால் அல்லது இலங்கையின் மீனவர்கள் எல்லை தாண்டி வந்தால், அவர்களைக் கைது செய்து அந்தந்த நாட்டு கிரிமினல் சட்டத்தின் அடிப்படையில் தண்டிக்க வேண்டும் என்ற ஒப்பந்தத்தை அமல் செய்தார்கள். 2003–க்கு முன்னால் வரை தமிழக மீனவர்கள் எல்லை தாண்டினார்கள் என்று கைது செய்யப்பட்டாலும், உடனடியாக விடுவிக்கப்பட்டார்கள். அங்கே ஒரு F.I.R. போடப்படும், விடுவிக்கப்பட்டு விடுவார்கள். ஆனால் கைது செய்வது, சிறையில் அடைப்பது போன்ற நடவடிக்கைகள் என்பது பாரதிய ஜனதா கட்சியின் வாஜ்பாய் ஆட்சிக் காலத்தில், ரணில் விக்கிரமசிங்கே இலங்கைப் பிரதமராக இருந்த நேரத்தில், இரு நாடுகளுக்கும் இடையில் போடப்பட்ட அந்த ஒப்பந்தம்தான் இன்றைக்கும் கிரிமினல் வழக்கின் அடிப்படையில் அங்கே நமது மீனவர்கள்மீது அந்த நாட்டு சட்டத்தின்படி F.I.R. போடப்பட்டு, சிறையில் அடைப்பதற்கு வாய்ப்பாக அமைந்திருக்கிறது. எனவே, தமிழக அரசு அந்த ஒப்பந்தத்தை இரத்து செய்வதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்.





அதேபோல, தனுஷ்கோடியினுடைய கீழைப் பகுதியிலிருந்து நாகப்பட்டினம், கோடியக்கரை வரை இருக்கக்கூடிய மன்னார், பாக் ஜலசந்தி பகுதியை மீன் பிடிக்கக்கூடிய மண்டலமாக உடனடியாக அறிவிக்க வேண்டும். அந்த அடிப்படையில்தான் இராமேஸ்வரம் மீனவர்கள் மட்டுமல்ல, பொதுவாக இரு நாட்டு மீனவர்களும் அவர்களுடைய பாரம்பரிய வழக்கப்படி மீன் பிடிக்கிற உரிமையை நிலைநாட்டுவதற்கான வாய்ப்பாக அமையும். அந்த அடிப்படையில் பாக் ஜலசந்தி பகுதியில் எல்லையை வகுப்பது என்பது மிகப் பெரிய சிரமமாக இருக்கிறது. தனுஷ்கோடி பகுதிக்கும், தலைமன்னாருக்கும் 12 கடல் மைல்கள் இருக்கின்றன. அதிகபட்சமாக 27 கடல் மைல்கள் கோடியக்கரைக்கும் இலங்கைக்கும் இருக்கின்றது. எனவே, எல்லை என்பது ஒரு சீராக இல்லாத நிலையில், எல்லையை வகுப்பது என்பது, எல்லையைத் தாண்டுகிறார்கள் என்பதுகூட இன்றைக்கு மிகப் பெரிய இயற்கையான சிக்கல் இருக்கிற ஒரு நிலையில், அந்தப் பகுதியை மீன்பிடி மண்டலமாக மாற்ற வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொண்டு மீனவர்கள் மீன் பிடிப்பதற்கான அனைத்துப் பாதுகாப்பையும் வழங்க வேண்டும். ஒவ்வொரு நாட்டினுடைய கடத்தல் போன்ற பல்வேறு பாதுகாப்புக் காரணங்கள் இருந்தால் அதற்கான நடவடிக்கையை அந்த நாட்டினுடைய கடல் எல்லைக்குள்ளாகவே செய்துகொள்ள வேண்டும் என்பதையும் இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே கேட்டு இதை நாங்கள் வரவேற்கிறோம்.

அந்த அடிப்படையில் தமிழக அரசு முன்வைத்திருக்கிற இந்தத் தீர்மானத்தை வரவேற்று, கச்சத் தீவுப் பிரச்சினையில்கூட கடந்த காங்கிரஸ் கட்சி அரசு, அவர்களால் போடப்பட்ட அந்த வழக்கிலே, அவர்களால் போடப்பட்ட Affidavit–ல் ஒரு தவறான கருத்தை முன்வைத்திருக்கிறார்கள். கடந்த காங்கிரஸ் கட்சி அரசாக இருந்தாலும் சரி அல்லது இன்றைக்கு இருக்கக்கூடிய பாரதிய ஜனதா கட்சி அரசாக இருந்தாலும் சரி, கச்சத் தீவுப் பிரச்சினையில் ஓர் உறுதியான நிலையை மேற்கொள்ளவில்லை. கச்சத் தீவு நமக்குத் திரும்ப கிடைக்கிற வரை, மீனவர்களுடைய பிரச்சினை என்பது தீர்க்கப்படாத ஒரு பிரச்சினையாக, அது மழை விட்டாலும் தூவானம் தொடர்வதைப் போல தமிழ்நாட்டு மீனவர்கள் மீண்டும், மீண்டும் கைது செய்யப்படுவதற்கும், தாக்கப்படுவதற்கும் ஒரு வாய்ப்பாக அமைந்துவிடும். எனவே, கச்சத் தீவில் பழைய காங்கிரஸ் அரசாக இருந்தாலும் சரி,

[திரு. சு. குணசேகரன்] [2014 டிசம்பர் 5

இன்றைக்கு இருக்கிற பாரதிய ஜனதா அரசாக இருந்தாலும் சரி, தமிழ்நாட்டு மக்களுடைய உணர்வை, தமிழக அரசு போட்டிருக்கிற வழக்கை ஆதரித்து, அதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும். அதைப்போல, இப்போது நமது பாரம்பரிய மீன்பிடி உரிமையையும் நிலைநாட்டுவதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 4–40*

இன்றைக்கு காவேரி நதியில் மேகதாதுவில் இரண்டு அணைகளை கட்டுவதற்கு கர்நாடக அரசு முயற்சிகளை மேற்கொண்டு இருப்பதோடு மட்டுமல்ல, இன்னும் பல இடங்களில் தடுப்பணைகளைக் கட்டுவதற்கான முயற்சிகளையும் மேற்கொண்டிருக்கிறது. அதைப் பற்றிய ஒரு விரிவான முன்னுரையை நமது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் இங்கே விரிவாக வாசித்தார்கள். காவேரியினுடைய பிரச்சினை ஆதியிலிருந்து இதுவரை தொடர்ந்திருக்கின்ற பல்வேறு பிரச்சினைகள் பற்றியும், தமிழக அரசு எடுத்திருக்கின்ற நடவடிக்கைகளையெல்லாம் சுட்டிக்காட்டினார்கள். அதை நான் பாராட்டுகிறேன்; வரவேற்கிறேன்.

ஆனால், அதேநேரத்தில் 1956 ஆம் ஆண்டு, பல மாநிலங்களுக்கிடையே ஏற்பட்ட நதி நீர் ஒப்பந்தத்தின் அடிப்படையில், அந்த ஒப்பந்தத்திலே மாநிலங்களுக்கு இடையே நதி நீர்ப் பிரச்சினை ஏற்பட்டால் நடுவர் மன்றம் அமைக்கலாம் என்ற ஷரத்து இருக்கிறது. அந்த ஷரத்தைத்தான் இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியினுடைய நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த திரு. காத்தமுத்து அவர்கள் முதன்முதலிலே நாடாளுமன்றத்திலே அவர் கருத்தாக வெளியிட்டு, நடுவர் மன்றம் அமைக்க வேண்டுமென்று சொன்னார். அதற்குப் பின்னர் அதை வலியுறுத்தி இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் 1990 ஆம் ஆண்டில் 110 கிலோ மீட்டர் தூரம் மனித சங்கிலிப் போராட்டம் நடத்தப்பட்டது. அதைத் தொடர்ந்து பல்வேறு போராட்டங்கள் நடத்தப்பட்டன. 1990 ஆம் ஆண்டு திரு. வி.பி. சிங் பிரதமராக இருந்த நேரத்தில்கூட உச்ச நீதிமன்றத் தீர்ப்பு வந்ததற்குப் பின்னால் அந்தத் தீர்ப்பைச் செயல்படுத்துவதற்கு நாடாளுமன்றத்திலே ஒரு வாக்கெடுப்பு நடந்த நேரத்தில் தமிழகத்தினுடைய அன்றைய நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த இந்திய கம்யூனிஸ்டு கட்சியினுடைய நாகை நாடாளுமன்றத் தொகுதி உறுப்பினர்



2014 டிசம்பர் 5] [திரு. சு. குணசேகரன்]

திரு. செல்வராஜ் அவர்கள் மட்டும்தான் நடுவர் மன்றம் அமைக்க வேண்டுமென்ற அந்தத் தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களித்தார். இப்படி இந்திய கம்யூனிஸ்டு கட்சியும், அங்கு இருக்கக்கூடிய விவசாய அமைப்புகளும் தொடர்ந்து ஒரு சரியான வழி காட்டுதலை அந்தக் காவேரி டெல்டா பிரச்சினையில் எடுத்திருக்கிறார்கள்.

அதற்கு அரசு என்ற அடிப்படையில் நமது மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அவர்கள் உள்ளிட்ட இந்த அரசும் ஒரு சரியான நடவடிக்கையை மேற்கொண்டு இந்தத் தீர்ப்புகளைப் பெற்றதோடு மட்டுமல்லாமல் அரசிதழிலும் வெளியிடச் செய்திருக்கிறோம். ஆனாலும் கர்நாடக அரசைப் பொறுத்தவரையில் காவேரி மேலாண்மை வாரியத்தை அமைக்காத காரணத்தால், நமக்கு மாதா மாதம் வழங்க வேண்டிய தண்ணீரைக்கூட இப்போதுத் தர மறுக்கிறார்கள். அங்கிருக்கக்கூடிய உபரி நீரைத் தருகின்றார்களே தவிர, மாதா மாதம் வழங்க வேண்டிய தண்ணீரைத் தருவதற்கு மிகப் பெரிய போராட்டங்களை நடத்த வேண்டிய நிலையில் இருந்து கொண்டிருக்கிறோம். பல தடைகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த நிலையில்தான் இப்போது வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சுவதைப் போல மீண்டும் காவேரி உப நதிகளிலும் காவேரி நதியிலும் நீர் மின் நிலையங்களை அமைக்கிறோம் என்ற அடிப்படையில் மேகதாதுவிலே 2 அணைகளைக் கட்டுவதற்கான முயற்சிகளை எடுத்திருக்கிறார்கள். நடுவர் மன்றம் அமைப்பதற்கு முன்னாலேயே 1988 ஆம் ஆண்டு மேகதாதுவில் நீர் மின் நிலையம் அமைக்கிறோம் என்ற அடிப்படையில் ஓர் அனுமதியைப் பெற்றிருக்கிறார்கள். அந்த அனுமதியை வைத்துக்கொண்டு கட்டுவோம் என்ற அடிப்படையில் அவர்களுடைய நடவடிக்கை இருக்கிறது. ஆனாலும் நடுவர் மன்றம் அமைத்து உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்ததற்குப் பின்னால், சீராய்வு மனுக்களெல்லாம் அங்கே போடப்பட்டு நிலுவையில் இருக்கின்ற இந்த நேரத்தில், அந்தப் பழைய அனுமதி செல்லாது என்பதையும் நாம் எச்சரிக்கை உணர்வோடு பார்க்க வேண்டும். அந்த அடிப்படையில் அந்த நீர் மின் நிலையங்களை மட்டுமல்ல எதிர்காலத்தில் இப்படிப்பட்ட தடுப்பணைகள் கட்டுவதை நாம் தடை செய்ய வேண்டும்.

[திரு. சு. குணசேகரன்] [2014 டிசம்பர் 5

அதைப்போல, கேரளாவும் அதனுடைய பங்கிற்கு இப்போது ஒரு தடுப்பணையைக் கட்டுவதற்கான முயற்சியை மேற்கொண்டிருக்கிறது. இப்படி 1956 ஆம் ஆண்டு பன் மாநில நதி நீர் ஒப்பந்தத்திற்கு விரோதமாக ஒரு மாநில அரசினுடைய உரிமையைப் பறிக்கின்ற விதமாக அதனுடைய அனுமதியைப் பெறாமல் இப்போது இப்படிப்பட்ட நடவடிக்கை எடுப்பது என்பது இந்திய நாட்டிற்கு உள்ளேயே நடக்கின்ற பிரச்சினையா என்ற சந்தேகம்கூட எழக்கூடிய ஒரு நிலை உருவாகியிருக்கிறது. எனவே, அந்த அடிப்படையில் மத்திய அரசு இதிலே ஒரு தெளிவான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இப்போது நாம் இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றிக்கொண்டிருக்கின்ற இந்த நேரத்தில் நேற்றைக்குக்கூட இந்திய கம்யூனிஸ்டு கட்சி, தமிழ்நாடு விவசாயிகள் சங்கம், அதைப்போல மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி, அதனுடைய விவசாய சங்க அமைப்புகள் எல்லாம் முன் முயற்சி எடுத்து 500 மையங்களுக்கு மேலாக இரயில் மறியல், சாலை மறியல் போராட்டங்களை நடத்தி, பல இலட்சக்கணக்கான மக்கள் அந்தப் போராட்டங்களில் கலந்துகொண்டார்கள். எனவே இது காவேரி டெல்டா பகுதிகளில் இருக்கக்கூடிய அனைத்துப் பகுதி மக்களுடைய மிகப் பெரிய உணர்வாக இருக்கிறது ஆனால் இதை மதிக்காத, மத்தியிலே இருக்கக்கூடிய பாரதிய ஜனதா கட்சியைச் சேர்ந்த கர்நாடக அமைச்சர் திரு. ஆனந்தகுமார் அவர்கள், இப்போது நாங்கள் எல்லோரும் ஒன்றுபட்டு எப்படியாவது இந்த அணைகளைக் கட்டி முடிப்போம் என்று சவால் விட்டிருக்கிறார். இதையும் நமது தமிழக அரசு எச்சரிக்கை உணர்வோடு பார்க்க வேண்டும் மத்தியிலே காங்கிரஸ் கட்சி அரசாக இருந்தாலும், பாரதிய ஜனதா கட்சி அரசாக இருந்தாலும் காவேரிப் பிரச்சினையாக இருந்தாலும் சரி அல்லது தமிழக மீனவர்கள் பிரச்சினையாக இருந்தாலும் சரி, அதில் தமிழ்நாட்டிற்கு விரோதமான கொள்கை உடையவர்களாக அவர்கள் இருக்கிறார்கள். அதில் நாம் எச்சரிக்கை உணர்வோடு இருந்து உச்ச நீதிமன்றத்தினுடைய துணையோடு மீண்டும் இந்த அணைகள் கட்டுவதைத் தடுப்பதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டும். அதற்கு நமது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் இன்றைக்கு சரியான நேரத்தில் இந்த இரண்டு சரியான தீர்மானங்களை முன்மொழிந்திருக்கிறார்கள். இதை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் பாராட்டி, நான் வாழ்த்தி அமைகின்றேன். நன்றி, வணக்கம்.



2014 டிசம்பர் 5]

*பிற்பகல் 4–45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.

***திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கை அரசு கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக தமிழக மீனவர்கள், எல்லை தாண்டி, தங்கள் எல்லைக்குள்ளே நுழைந்தார்கள் என்ற குற்றச்சாட்டைச் சொல்லி, பல ஆயிரக்கணக்கான பேர்களைக் கைது செய்து, சில நூறு பேர்களை சுட்டுக் கொன்று, பல பேரை ஆயுதங்களால் கொலை செய்து கடலிலே வீசி எறிந்திருக்கிறார்கள். பல நூறு கோடி ரூபாய் பெருமானமுள்ள படகுகளையெல்லாம் பறிமுதல் செய்து அவர்கள் கட்டுப்பாட்டிலே வைத்திருக்கிறார்கள், ஏராளமான பேரை படுகாயப்படுத்தியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட கொடுமை தொடர் வரலாற்றின் ஒரு பகுதியாகத்தான் 5 மீனவர்கள்மீது போதைப்பொருள் கடத்தியதாக ஒரு பொய் வழக்கைப் போட்டு, அவர்களுக்குக் கடந்த 30–10–2014 அன்று தூக்கு தண்டனை வழங்கப்பட்டது. இதுசம்பந்தமாக, மாண்புமிகு முதல்வர் அவர்கள் முன்மொழிந்திருக்கிற தீர்மானத்தை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அந்த மீனவர்கள் அல்லலுக்கு ஆளாக்கப்பட்டபோது, அவர்களுடைய குடும்பப் பாதுகாப்பிற்கு, அவர்களின் வழக்கை நடத்துவதற்கு, அந்த மீனவர்களை விடுதலை செய்வதற்கு தமிழக அரசு தன்னுடைய பங்கினை ஆற்றியிருக்கிறது. இன்னும் சொல்லப்போனால், அந்த இலங்கை நீதிமன்றத்தின் தீர்ப்பு வந்தபோது, இராமேஸ்வரமே ஏதோ சுனாமி வந்தது போல கொதித்தெழுகிற நிலைமை ஏற்பட்டது. தமிழகத்தில் இருக்கிற அனைத்து அரசியல் கட்சிகளும் ஒன்றுபட்டு போராடி, பல கட்ட நடவடிக்கைகளுக்குப் பிறகு இலங்கை அரசு அந்த மீனவர்களைத் தூக்கு தண்டனையிலிருந்து விடுவித்து, பொது மன்னிப்பு அளித்து அவர்களை விடுதலை செய்திருக்கிறது. ஒரு நாகரிக அடிப்படையில் மத்திய அரசுக்கு இன்றைக்கு நன்றி தெரிவிக்கிற தீர்மானத்தை இங்கே மாண்புமிகு முதல்வர் அவர்கள் முன்மொழிந்துள்ளார்கள். ஆனால், நான் இங்கே பதிவு செய்ய விரும்புவது என்னவென்றுசொன்னால், மனித நேய மக்கள் கட்சியினுடைய சட்டமன்ற உறுப்பினர் அன்பிற்குரிய மாண்புமிகு ஜவாஹிருல்லா அவர்கள் குறிப்பிட்டதைப்போல, இந்தப் பிரச்சினையிலே, மத்திய

அரசினுடைய செயல்பாடு எப்படி இருந்தது என்பதை நாம் ஆழ்ந்து சிந்திக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். விடுதலை செய்த பிறகு அவர்கள் டெல்லிக்கு அழைத்துச் செல்லப்படுகிறார்கள். வெளிநாடு சுற்றுப் பயணத்திலே கடந்த ஒரு வாரமாக இருந்த பாரதப் பிரதமர் அவர்கள் அன்றைக்குத்தான் டெல்லி திரும்பியிருக்கிறார்கள். அவர் டெல்லி திரும்புகிற நேரம் பார்த்து, அவர்களை விடுதலை செய்ய வைத்து, அங்கே அழைத்துச் செல்கிறார்கள். பிறகு, நேரடியாக அங்கேயிருந்து தமிழகத்திற்கு அனுப்பி வைக்கப்படுகிறார்கள். எதற்காக டெல்லிக்கு அழைத்துச் சென்றார்கள் என்பதற்கான சரியான விளக்கத்தை மத்திய அரசால் கொடுக்க முடியவில்லை. சொல்லப்போனால், பாரதப் பிரதமர் அவர்கள் டெல்லிக்கு வருகிற நேரத்தில் அவர்களை விடுதலை செய்து அவர்களை அங்கே சந்திக்க வைப்பதற்காக, அவர்களுடைய விடுதலையைக்கூட சில நாட்கள் தாமதப்படுத்தினார்களோ என்ற ஐயம் தமிழகத்திலே இருக்கிற மீனவர்கள் மத்தியிலே இருக்கிறது என்பதை இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன்.

எனவே, இப்படிப்பட்ட ஒரு மலிவான அரசியல் வியாபாரத்தில் மத்திய அரசு, அதுவும் தமிழக மீனவர்களுடைய உயிர் பிரச்சினையிலே ஈடுபடுவது ஒரு நேர்மையான செயல் அல்ல என்பதை இங்கே நான் குறிப்பிட்டுக்காட்ட விரும்புகிறேன். இப்படிப்பட்ட இந்தச் சூழ்நிலையில், இன்றைக்கு அவர்கள் விடுதலை செய்யப்பட்டிருக்கிற நிலைமை தமிழகத்திலே இருக்கிற அனைவருக்கும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது. எனவே, அந்தத் தீர்மானத்தில் சுட்டிக்காட்டியதைப்போல, நம்முடைய ஒன்றுபட்ட குரல், தமிழக மீனவர்கள் மட்டுமல்லாமல், அனைத்து சமூகத்தைச் சார்ந்திருக்கிற அரசியல் கட்சிகள் அனைத்தும் இணைந்து போராடியதன் பலனாக அந்த விடுதலை இன்றைக்குக் கிடைத்திருக்கிறது. அதேபோல, இன்றைக்கு நம்முடைய மீனவர்கள் அதற்குப் பிறகும் தொல்லைகளுக்கு ஆளாக்கப்படுகிறார்கள். எப்போதெல்லாம் அவர்கள் மீன் பிடிக்கச் செல்கிறார்களோ கைது செய்யப்படுவது, தாக்கப்படுவது என்பது தொடர் கதையாக இருக்கிறது.

எனவே, இன்றைக்கு நிலைமை என்னவென்று சொன்னால், தென் மாவட்டங்களில் இருக்கிற மீனவர்கள் கடலுக்குச் செல்வதற்கே அஞ்சுகிற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. உயிருக்குப்





பாதுகாப்பற்ற நிலைமை ஏற்படுகிறது. மீனவர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு கச்சத் தீவை மீட்க வேண்டும் என்ற கருத்து ஒரு பக்கம் இருந்தாலும், இன்னொரு பக்கம் நாங்கள் வற்புறுத்த விரும்புவது, இரண்டு நாடுகளிலே இருக்கக்கூடிய மீனவர்கள் மத்தியிலே பேச்சுவார்த்தை நடத்தி, ஓர் உடன்பாடு காணுவதன் மூலமாகவே அந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும் என்றும் ஏற்கெனவே நம்முடைய தமிழக அரசும் இந்த நிலையை எடுத்திருக்கிறது. இரண்டு நாட்டு மீனவர்களும் அங்கே சந்தித்து, இரண்டு கட்ட பேச்சுவார்த்தைகளை நடத்தியிருக்கிறார்கள். அன்றைக்கு அவ்வளவு தூரம் ஒரு மலிவான அரசியல் நாடகத்தை நடத்திய மத்திய அரசு, இந்தப் பேச்சுவார்த்தையை நடத்தி, தமிழக மீனவர்களுடைய நிரந்தரமான தொழில் பாதுகாப்புக்கு நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 4–50*

அதைப்போல, தீர்மானத்தின் கடைசியிலே சுட்டிக்காட்டியிருப்பதைப்போல, சிறையிலே இருக்கிற 38 மீனவர்களையும், 79 படகுகளையும் விடுவிக்கிற நடவடிக்கையினை மத்திய அரசு எடுப்பதற்கு வற்புறுத்துகிற அந்தத் தீர்மானத்தை இந்த நேரத்திலே, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே முழுமையாக நாங்கள் ஆதரிக்கிறோம்.

அதேசமயம், நான் இந்த நேரத்தில் தமிழக அரசுக்கு இன்னொரு வேண்டுகோளையும் வைக்கிறேன். அதை நீங்கள் கருணை அடிப்படையிலே, அருள்கூர்ந்து பரிசீலிக்க வேண்டும். கடந்த 30–10–2014 அன்று தூக்கு தண்டனை குறித்த அந்தச் செய்தி வந்தபோது ஏற்பட்ட கொந்தளிப்பிலே ஒருசில சம்பவங்கள் நடந்ததைக் காரணம் காட்டி, இரயில்வே போலீஸார்மூலம் சில வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. அருள்கூர்ந்து அந்த மீனவர்களின்மீது போடப்பட்டிருக்கிற வழக்குகளை வாபஸ் பெற வேண்டுமென்றும் இந்த நேரத்திலே கேட்டுக்கொண்டு, அந்தத் தீர்மானத்தை முழுமையாக நாங்கள் வரவேற்கிறோம்.

அடுத்து, காவேரி நடுவர் மன்றத் தீர்ப்பு. காவேரி பிரச்சினை தொடர்பாக மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் முன்மொழிந்திருக்கிற தீர்மானத்தையும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே நான் வரவேற்கிறேன், ஆதரிக்கிறேன்.

[திரு. க. பாலகிருஷ்ணன்] [2014 டிசம்பர் 5

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அந்தத் தீர்மானத்தை முன்மொழிகிறபோது, கிட்டத்தட்ட, வரலாற்று ரீதியாக அதிலே ஏற்பட்டிருக்கிற, எல்லாவிதமான பிரச்சினைகளையும், வரிசை அடிப்படையிலே, அனைத்தையும் தொகுத்து, ஓர் ஆவணமாக இங்கே அளித்திருக்கிறார்கள். அதில் இருக்கிற எல்லா பிரச்சினைகளும் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. எனவே, அந்தப் பின்னணியிலே அந்தத் தீர்மானத்தை நாங்கள் ஏற்றுக்கொண்டு ஆதரிக்கிறோம்.

நேற்றைக்குக்கூட, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள் குறிப்பிட்டதைபோல, பல்வேறு அரசியல் கட்சிகளும், அனைத்து விவசாய அமைப்புகளும் சேர்ந்து ஒரு வலுமிக்க போராட்டத்தை டெல்டா மாவட்டங்களில் நடத்தியிருக்கின்றனர். இன்றைக்கு ஒரு கொந்தளிப்பான சூழ்நிலை அங்கே ஏற்பட்டிருக்கிறது. அடுத்து, காவேரி நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பு. ஏறக்குறைய 16, 17 ஆண்டுகளுக்கு மேலாக வாதாடி, போராடி அந்தத் தீர்ப்பைப் பெற்ற பிறகும்கூட, அதனுடைய பலனை நாம் இன்னமும் முழுமையாக அனுபவிக்க முடியாமல் இருக்கிறோம். இதற்கு அடிப்படையான காரணம் என்னவென்று சொன்னால், இன்றைக்கு இருக்கிற பி.ஜே.பி. அரசானாலும் சரி, அன்றைக்கு இருந்த காங்கிரஸ் அரசானாலும் சரி, அவர்கள் காவேரி பிரச்சினையிலே, தமிழகம் சம்பந்தப்பட்ட பிரச்சினையிலே, ஒரு நாணயத்தினுடைய இரண்டு பக்கங்களைப்போலத்தான் செயல்பட்டிருக்கிறார்களே தவிர, அதாவது நம்முடைய உரிமையைத் தட்டிப் பறிப்பதிலே அல்லது நம்முடைய உரிமையை நிறைவேற்றுவதிலே அவர்கள் சாதகமான நிலை எடுக்கவில்லை என்பதை கடந்தகால வரலாறு தெரிவிக்கிறது.

19–2–2013 அன்று காவேரி நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பு மத்திய அரசிதழிலே வெளியிட்ட பிறகும்கூட, இன்னும் காவேரி மேலாண்மை வாரியம் அமைக்கப்படவில்லை. நீர் ஒழுங்குப்படுத்துகிற, முறைப்படுத்துகிற அந்தக் குழு அமைக்கப்படவில்லை. இதையெல்லாம் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டுதான், கர்நாடக அரசு, எப்படியாவது குறுக்குசால் ஓட்டி, இந்த நடுவர் மன்றத் தீர்ப்பைக் கிடப்பிலே போட்டுவிட வேண்டுமென்று முயற்சித்துக்கொண்டிருக்கிறது. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிக்கையிலே குறிப்பிட்டதைப்போல, 4 நீர் மின் திட்டங்களுக்கு மத்திய



2014 டிசம்பர் 5] [திரு. க. பாலகிருஷ்ணன்]

அரசினுடைய நீர் மின் வாரியம் ஒப்புதல் அளித்திருக்கிறது. ஆனால், அந்த நான்கையும் ஏக காலத்தில் தமிழக அரசு, கர்நாடக அரசு இரண்டும் ஒத்தக் கருத்தோடு நிறைவேற்ற வேண்டுமென்கிற அடிப்படையிலேதான் அது சொல்லப்பட்டிருக்கிறதே தவிர, கர்நாடக அரசு தானெடுத்த முடிவாக அதை நிறைவேற்றுவதற்கு, நடுவர் மன்றத் தீர்ப்பிலேயும் இடமில்லை, ஏற்கெனவே இதற்கு ஒப்புதல் வழங்கியிருக்கக்கூடிய மத்திய அரசினுடைய நீர்மின் வாரியத்தினுடைய ஒப்புதலிலேயும் அந்த அனுமதி இல்லை. ஆகவே, இன்றைக்கு அங்கே நீர் மின் நிலையத்தைக் கட்டுவது என்று ஒரு பக்கம் சொல்லிக்கொண்டு, இன்னொரு பக்கம் குடிநீர்ப் பிரச்சினை என்கிற பிரச்சினையைக் கிளப்புகிறார்கள். நடுவர் மன்றத் தீர்ப்பினுடைய ஆவணத்தைப் படிக்கிறபோது, தமிழ்நாட்டினுடைய நீர் தேவை என்ன, கர்நாடகத்தினுடைய நீர் தேவை என்ன என்பதற்காக, நம்முடைய கோரிக்கைகளைப் பரிசீலித்தார்கள், கர்நாடக அரசாங்கத்தினுடைய கோரிக்கைகளைப் பரிசீலித்தார்கள். பாசனத்திற்கு எவ்வளவு தண்ணீர், குடிநீருக்கு எவ்வளவு தண்ணீர், தொழில் பாதுகாப்புக்கு எவ்வளவு தண்ணீர் தேவை என்பதையெல்லாம் கணக்கிட்டுத்தான், இருக்கிற தண்ணீரைப் பகிர்கிறபோது, பாசனத்திற்கு இவ்வளவு தண்ணீர் என்கிற அடிப்படையிலேயும், தொழிற்சாலைகளுக்கு இவ்வளவு தண்ணீர் என்கிற அடிப்படையிலேயும், குடிநீருக்கு என்று கர்நாடகத்திற்கு 1.85 டி.எம்.சி. அடி தண்ணீர், தமிழ்நாட்டிற்கு 2.73 டி.எம்.சி. அடி தண்ணீர் என்பதையெல்லாம் சேர்த்துதான், அந்த நடுவர் மன்ற இறுதி ஆணையிலே அவர்கள் பட்டியலை வெளியிட்டிருக்கிறார்கள். எனவே, ஏற்கெனவே குடி தண்ணீருக்கான கோரிக்கை வைக்கப்பட்டு, அதையும் பரிசீலித்து நடுவர் மன்றம் இறுதியாகச் சொல்லி முடித்த பிறகு, இப்போது நாங்கள் குடிநீருக்காகத் தனி அணை கட்டுகிறோம் என்று சொல்வது முழுக்க, முழுக்க நியாயமற்றது. நடுவர் மன்றத் தீர்ப்பைச் செல்லாததாக்குகிற அனைத்து முயற்சிகளிலும் இன்றைக்கு கர்நாடகம் முயற்சி எடுப்பது என்பது நியாயமானது அல்ல என்பதை நாம் சுட்டிக்காட்டியிருக்கிறோம். எனவே, இந்த நேரத்தில் அவர்களுடைய நோக்கம் என்னவென்று சொன்னால், ஏதாவது காரணம் காட்டி இந்த இறுதித் தீர்ப்பை நிறுத்தி வைப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டு இருக்கிறார்கள்.

*பிற்பகல் 4–55*

அதேபோல, காவேரி நடுவர் மன்றத் தீர்ப்பினுடைய எல்லைக்குள்ளே வருகிற பாம்பாற்றிலேயும் பட்டிசேரி என்கிற இடத்திலே ஒரு சிறிய நீர்த்தேக்கத்தினைக் கட்டுவதற்கு கேரள அரசு முயற்சித்துக் கொண்டிருக்கிறது. எனவே, கேரள அரசு முயற்சித்துக்கொண்டிருக்கிற பாம்பாற்றின் குறுக்கே அணை கட்டுகிற அந்தத் திட்டமானாலும், கர்நாடக அரசு மேகதாது என்கிற இடத்திலே இரண்டு நீர்த்தேக்கங்கள் மற்றும் தடுப்பு அணைகள் கட்டுகிற அந்த முயற்சியானாலும், அவற்றைத் தடுக்க வேண்டும் என்று வலியுறுத்துகிற அந்தத் தீர்மானத்தை நாங்கள் ஆதரிக்கிறோம். இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்புவதனால் மட்டுமே மத்திய அரசு தமிழகத்திற்கு சாதகமான முடிவு எடுத்துவிடமாட்டார்கள் என்பதுதான் கடந்த கால அனுபவம். அதிலே பி.ஜே.பி. அரசுக்கும், காங்கிரஸ் அரசுக்கும் பெரிய வித்தியாசம் இல்லை. எனவே, இந்தச் சட்டமன்றப் பேரவையில் நாம் வலியுறுத்திக் கேட்டுக்கொள்ள விரும்புவது, தமிழகத்தினுடைய உரிமையைப் பெற்றுத் தருவதிலே மத்திய அரசு உறுதியான நிலையை எடுக்கவில்லை என்று சொன்னால், நாங்கள் அடுத்தக் கட்ட நடவடிக்கைக்குப் போவோம் என்பதை வலியுறுத்துகிற வகையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய தலைமையிலே அனைத்துக் கட்சித் தூதுக் குழு டெல்லிக்குச் சென்று, பாரதப் பிரதமரை வற்புறுத்துகிற ஒரு முதல் கட்ட நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டு, இந்த இரண்டு தீர்மானங்களையும் ஆதரித்து விடைபெற்று அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. சந்திரகுமார் அவர்கள்.

**திரு. வி.சி. சந்திரகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற, இலங்கை சிறையிலே வாடிக் கொண்டிருக்கும் 38 மீனவர்களை விடுவிக்கப்படத் தேவையான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்கின்ற கோரிக்கைக்கும், அங்கே பிடிபட்டிருக்கின்ற 79 மீன்பிடிப் படகுகளை விடுவிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மத்திய அரசு எடுக்க வேண்டும் என்றும், இலங்கைக்குத் தாரை வார்க்கப்பட்ட கச்சத் தீவை மீண்டும் மீட்கப்பட வேண்டும் என்றும், 5 தமிழக மீனவர்களை விடுதலை செய்வதற்கு மாநில அரசு எடுத்த நடவடிக்கைகள் குறித்தும்,



அதேநேரத்திலே அதற்கு ஒத்துழைப்பைக் கொடுத்த பாரதப் பிரதமர் மாண்புமிகு நரேந்திர மோடி அவர்களுக்கும், மத்திய அரசுக்கும் பாராட்டையும், நன்றியையும் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொண்டு, முன்மொழியப்பட்டிருக்கின்ற இந்தத் தீர்மானத்தை தேசிய முற்போக்கு திராவிட கழகத்தின் சார்பிலே நாங்கள் மனதார வரவேற்கின்றோம்.

அதேபோல, காவேரி நடுவர் மன்றத்தினுடைய தீர்ப்பை ஏற்று, காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகியவற்றை உடனடியாக மத்திய அரசு அமைக்க வேண்டும் என்கின்ற இந்தத் தீர்மானத்தையும், பாம்பாற்றின் குறுக்கே கேரள அரசு கட்டுகின்ற அணைத் திட்டத்தை மத்திய அரசு அனுமதிக்கக்கூடாது என்று சொல்லியிருக்கின்ற இந்தத் தீர்மானத்தையும் தேசிய முற்போக்கு திராவிட கழகத்தின் சார்பிலே நாங்கள் வரவேற்கின்றோம்.

அதேநேரத்திலே, தமிழக மீனவர்கள் போதைப் பொருள் வழக்கிலே கைது செய்யப்பட்டிருந்த நேரத்திலே, தமிழகத்திலே இருக்கின்ற ஒட்டுமொத்த அரசியல் கட்சிகளும், மீனவர் அமைப்புகளும், அரசியல் சாரா அமைப்புகளும், கடுமையாக தங்களுடைய எதிர்ப்பை வெளிப்படுத்தியதன் விளைவே இலங்கையிலே இருக்கின்ற ராஜபக்சே அரசு பணிந்து அவர்களை அனுப்பியிருக்கிறது என்பதுதான் எங்களுடைய கருத்தாக இருக்கிறது. அதேநேரத்திலே, சிறைப்பிடிக்கப்பட்டிருக்கின்ற மீனவர்களுடைய படகுகள் தொடர்பாக, இன்று ஒவ்வொரு பிரச்சினையையும் பார்க்கின்றபொழுது, 2009 ஆம் ஆண்டு வரையிலும் தமிழினத்தினுடைய தலைவராக விளங்கிக்கொண்டிருந்த மாவீரன் பிரபாகரன் வாழ்ந்த காலம் வரையிலும் இலங்கை அரசாக இருக்கட்டும், இலங்கை இராணுவமாக இருக்கட்டும் நம்முடைய மீனவர்களைத் தொட்டுப் பார்க்கக்கூட அவர்களாலே அந்த நேரத்திலே முடியவில்லை. அதன் பிறகு, இந்த 5 ஆண்டு காலத்திலேதான் இவ்வளவு பிரச்சினைகள் அதிகரித்துக்கொண்டே வந்திருக்கின்றன. அதேபோல, இந்தப் பிரச்சினைகளுக்கு எல்லாம் நிரந்தரத் தீர்வு காண வேண்டும் என்று சொன்னால், கச்சத் தீவை மீட்க வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. பல முறை இந்தச் சட்டமன்றத்திலே நாம் தீர்மானங்களை நிறைவேற்றி அனுப்பியிருந்தும் அதிலே இன்னும் உறுதியான நிலைப்பாட்டை

மத்திய அரசு எடுக்கவில்லை என்பது தெள்ளத் தெளிவாகத் தெரிகிறது. எனவே, மாநில அரசு கச்சத் தீவை மீட்பதற்கு மத்திய அரசை வலியுறுத்துகின்ற அந்த நடவடிக்கைக்கு தேசிய முற்போக்கு திராவிட கழகம் மட்டுமல்ல, தமிழகத்திலுள்ள ஒட்டுமொத்த மக்களும் இந்த அரசுக்குத் துணையாக இருப்பார்கள் என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன்.

பிற்பகல் *5–00*

அதேபோல, அனைத்துக் கட்சி கூட்டத்தைக் கூட்டி, அது காவேரி பிரச்சினையாக இருக்கட்டும் அல்லது மீனவர் பிரச்சினையாக இருக்கட்டும், அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகளையும் அழைத்துச் செல்ல வேண்டும். ஏன் என்று சொன்னால், கேரளாவில் ஒரு பிரச்சினை என்று சொன்னால், அந்த மாநில முதலமைச்சர் அனைத்துக் கட்சிகளையும் அழைத்துக்கொண்டு டில்லிக்குச் செல்கிறார். அதேபோல, கர்நாடகத்தில் ஒரு பிரச்சினை என்றால் கர்நாடக முதலமைச்சர் அனைத்துக் கட்சிகளையும் அழைத்துக்கொண்டு டில்லி செல்கிறார். அப்படி எல்லோரும் சென்றால்தான் அந்தக் காரியம் நடக்குமா என்றுகூட உங்கள் மனதில் தோன்றலாம். நாங்கள் சொல்வது என்னவென்றால், அப்படி அனைத்துக் கட்சிகளையும் அழைத்துக் கொண்டு போகின்றபோது, அங்கே இருக்கின்றவர்கள் நம்மைப் பார்க்கும் பார்வை வித்தியாசப்படும். ஏதோ, ஒரு கட்சி அல்லது ஆளுகின்ற கட்சி மட்டுமே வந்தது என்பதையும்மீறி, தமிழ்நாட்டின் ஒட்டுமொத்த கட்சிகளும் ஒன்றுசேர்ந்து வந்திருக்கின்றன என்கிற ஓர் எண்ணம் மத்தியில் ஆட்சியில் இருப்பவர்களுக்கு ஏற்படும் என்பதையும் இந்த நேரத்தில் என்னுடைய கருத்தாகப் பதிவு செய்துகொள்ள விரும்புகிறேன்.

அதேபோல், காவேரி நடுவர் மன்றத்தின் ஆணை அரசிதழில் வெளியிட்ட பிறகுகூட, அதனுடைய முழுப் பயன் நமக்குக் கிடைக்கவில்லை. அதற்குக் காரணம், காவேரி மேலாண்மை வாரியத்தையும் நீர் முறைப்படுத்தும் குழுவையும் அமைக்காததுதான் என்பது எங்களுடைய கருத்து. அதன்காரணமாகத்தான் இன்றைக்கு கர்நாடகா மேகதாதுவில் இரண்டு அணைகள் கட்ட முயற்சிக்கிறது. அந்த இரண்டு அணைகள் கட்ட முயற்சிப்பதன் காரணமாக இன்றைக்கு டெல்டா மாவட்டங்களில் கொந்தளிப்பான சூழ்நிலை உருவாகியிருக்கிறது.





நேற்றுகூட பார்த்தீர்கள் என்று சொன்னால், திராவிட முன்னேற்றக் கழகம், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி, இந்திய கம்யூனிஸ்டு கட்சி, தேசிய முற்போக்கு திராவிட கழகம் மற்றும் பிற கட்சிகள் எல்லாம் ஒன்றுசேர்ந்து அங்கே இருக்கின்ற பல இடங்களில் போராட்டங்கள் நடத்தியிருக்கின்றன. எங்களுடைய, மயிலாடுதுறை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. ஆர். அருள்செல்வன் அவர்கள் தலைமையில்கூட கடந்த *29* ஆம் தேதி இரயில் மறியல் போராட்டத்தில் கிட்டத்தட்ட ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் கலந்துகொண்டு கைதானார்கள். இது எதற்காக என்று சொன்னால், ஒரு கட்சி என்கிற அடிப்படையில் இல்லாமல், டெல்டா பகுதியில் வாழுகின்ற ஒட்டுமொத்த விவசாயிகளும் இந்தப் பிரச்சினையை இன்றைக்குக் கையில் எடுத்துக்கொண்டு போராடிக்கொண்டிருப்பதால்தான் இந்தப் போராட்டத்திற்கு மிகப் பெரிய வெற்றி கிடைத்திருக்கிறது என்பதை மனதிலேகொண்டு, அரசு இதற்கான நடவடிக்கையைத் துரிதபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கேரளாவில் பாம்பாற்றின் குறுக்கே கட்டப்படுகின்ற அந்த அணையையும், கர்நாடக அரசு கட்டுகின்ற அந்த அணையையும் தடுத்து நிறுத்த மத்திய அரசை வலியுறுத்த வேண்டுமென கேட்டு அமர்கிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கடல் நீர் அள்ள, அள்ளக் குறையாததைப் போல, மீனவர்களின் வாழ்வு எப்போதும் வளமாக வளரும், நிறைவாக இருக்கும் என்று மாண்புமிகு அம்மா அவர்கள் மீனவர்கள் முன்னேற்றம் அடைய நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். மீனவ மக்களை கரைமேல் சிரிக்க வைத்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள். அவர்களின் கண்ணீரைத் துடைத்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள்.

சதி செய்து காவேரியைத் தடுத்தபோதும், மதி கொண்டு தடை உடைத்து, காவேரியை தமிழ் மண்ணிலே ஜதி செய்ய, இன்னொரு விதி செய்ய, செயல் வீரமிக்கவர் மாண்புமிகு அம்மா அவர்கள். குடகுவிட்டு குதித்து வரும் காவேரியை அடகு வைத்த தவற்றை தன் அறிவால் சரி செய்து, மதியால் புது விதி செய்து, தலைக் காவேரியை தமிழகம் அழைத்து வந்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள். பிறந்தோர் அனைவரும் சிறந்தோர் ஆவதில்லை. சிறந்தோர் அனைவரும் மக்கள் மனங்களில் நிறைந்தோர்

ஆவதில்லை. நிறைந்தோர் எவருமே மனித நெஞ்சங்களில் நிரந்தரம் ஆவதில்லை. பிறந்து, சிறந்து, நிறைந்து, நிரந்தரமாய் செந்தமிழர் இதயமெல்லாம் சிம்மாசனமிட்டு அமர்ந்திருக்கும் எங்கள் அம்மாவுக்கு ஒருபோதும் எவரும் நிகராவதில்லை. *(மேசையைத் தட்டும் ஒலி)*

இன்றைக்குக் கொண்டுவரப்பட்டுள்ள சிறப்பான தீர்மானங்களை வரவேற்று மாண்புமிகு உறுப்பினர்களின் கருத்துகளோடு என்னுடைய கருத்துகளையும் இணைத்துக்கொள்கிறேன்.

'மீனவர் பிரச்சினை' குறித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

'காவேரி பிரச்சினை' குறித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

*பிற்பகல் 5–05*

## 8. அரசினர் தீர்மானம்

### விதி 32–ஐத் தளர்த்துதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *8–12–2014* அன்று வினாக்கள்–விடைகள் நேரத்தை ஒத்திவைப்பது குறித்த தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.





***மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்–விடைகள் என்று உள்ள சட்டப் பேரவை விதி 32-ஐ *8-12-2014* திங்கட்கிழமை அன்று தளர்த்தி அந்நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

*8–12–2014* அன்று வினாக்கள்–விடைகள் நேரம் இல்லை.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் திங்கட்கிழமை *(8–12–2014)* காலை *10–00* மணிக்குக் கூடும். வணக்கம்.

*பின்னர், பேரவை பிற்பகல் 5–05 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.*

## 9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

*7. 2013–2014* ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் நாற்பத்து மூன்றாவது ஆண்டறிக்கை. [*1956* ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் *(மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ* பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] *(தமிழ், ஆங்கிலம்)*

*8. 2012–2013* ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் முப்பத்து ஐந்தாவது ஆண்டறிக்கை. [*1956–ஆம்* ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் *(மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ* பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] *(தமிழ், ஆங்கிலம்)*

*9. 2013–2014 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் நாற்பதாவது ஆண்டறிக்கை.* [*1956–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.*] *(தமிழ், ஆங்கிலம்)*

## (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

*3. 2014–2015 ஆம் ஆண்டின் "கூடுதல் செலவுக்கான" மானியக் கோரிக்கைகளின் அறிவிப்பு. (தமிழ், ஆங்கிலம்)*

*4. 2014–2015 ஆம் ஆண்டின் கூடுதல் செலவுக்கான மானியக் கோரிக்கைகளும், விரிவான துணை மதிப்பீடுகளும். (தமிழ், ஆங்கிலம்)*

*5. 2014–2015 ஆம் ஆண்டின் இரண்டாவது துணை மதிப்பீடுகள் குறித்து மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை. (தமிழ், ஆங்கிலம்)*

*6. உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் பட்டியல். (பத்தாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)*

*7. உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் பட்டியல். (பதினொன்றாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)*

*8. உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் பட்டியல். (பன்னிரண்டாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)*

*9. உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் பட்டியல். (பதின்மூன்றாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)*

*****